# தாய்வீடு

THAIVEEDU | NOVEMBER | 2024          தாய்வீடு | நவம்பர் | 2024




**‘எனக்குத் திசைகளைப் பற்றிக் கவலையில்லை, தேடல்களைப் பற்றியதுதான் என் கவலை’**
**- ஆர். பாலகிருஷ்ணன்**

**நேர்காணல்:**
**எஸ். சத்தியதேவன்**
**அருண்மொழிவர்மன்**

**16 நாள் செயல்வாதம்: எதைப்பற்றியது ?**
**- சிவா மாலதி**

**துனிசியா:**
**அரபு வசந்தம் முதல் அழகிய நரகம் வரை**
**- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ**

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Selling
Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir. 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானங்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
சர்வேசன்,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,

**மொன்றியால்:**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## தக்கதொரு தலைமை வேண்டும்!

இலங்கையின் 17-ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் இம்மாதம் நடைபெறவுள்ளது. நடந்துமுடிந்த அரச தலைவர் தேர்தலைப் போலவே, இம்முறையும் தேர்தல் முடிவு எவ்வாறாக இருக்கும் என்பதும், யார் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைப்பார்கள் என்பதும் வெள்ளிடை மலைபோற் தெளிவாகவே தெரிகிறது. இருந்தபோதிலும், தேர்தல் முடிவுகள் ஆர்வத்தோடு எதிர்நோக்கப்படுகின்றன. அதற்கான காரணம், இந்தத் தேர்தலும், தேர்தல் முடிவுகளும், முடிவுகளின் அடிப்படையில் அமையப்போகும் புதிய நாடாளு மன்றமும் இலங்கை மக்களுக்கான புத்துயிர்ப்புள்ளதும், நம்பிக்கையூட்டுவதுமான ஓர் எதிர்காலத்துக்கான மடைதிறப்பாக அமையும் என்ற நம்பிக்கையே!

இதேபோன்றதொரு நம்பிக்கையே அரச தலைவர் தேர்தலின்போதும் நிலவியது. தென்னிலங்கையின் பெரும்பான்மைச் சிங்கள மக்களைப் பொறுத்த வரையில், இந்த நம்பிக்கை நியாயமானதாகவே தோன்று கிறது. ஆனால், இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் வாழும் தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில், எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கை கொள்வதற்கான ஆதாரங்கள் அருகி வருவதையே காணமுடிகிறது.

அரச தலைவர் தேர்தலின் போதான தமிழ் அரசியல் தரப்புகளின் நகர்வுகள், தமிழர்களின் ஒருமித்த பலத்தைப் பிரகடனப்படுத்துவதற்கு மாறாக, பிளவுகளையே வெளிச்சம்போட்டுக் காட்டின. வடக்கிலும் கிழக்கிலுமான வாக்கு வீதங்களை நோக்கினால், தமிழ் மக்களின் வாக்குகள் பல்வேறு தரப்பினரிடை யேயும் இலக்கற்றுப் பிரிந்து கிடந்ததையே காணமுடியும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், இதையும் விஞ்சும் ஓர் அவலமே நிகழப்போகிறது என்பது துலக்க மாகத் தெரிகிறது. வடக்கிலும் கிழக்கிலும் தேர்தல் களத்தில் குதித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை எள்ளிநகையாடத்தக்கது. எனினும், இந்த எண்ணிக்கை உணர்த்தும் விடயமே நகையுணர்வைச் சோக உணர்வாக மாற்றுகிறது. அந்த விடயம், தமிழர்களின் அரசியற் குரல் முன்னொரு காலத்திலும் இல்லா தவாறு சிதைந்து சிதறியுள்ளது என்பதே.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற இருக்கைகள் ஏழிலிருந்து ஆறாகக் குறைக்கப்பட் டுள்ள நிலையில், இந்த ஆறு இருக்கைகளுக்காக 396 பேர் போட்டியிடுகிறார்கள். வன்னி மாவட்டத்தின் ஆறே இருக்கைகளுக்காக 423 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்து இருக்கைகளுக்காக 392 பேரும், திருகோணமலை மாவட்டத்தின் நான்கு இருக்கைகளுக்காக 217 பேரும், அம்பாறை மாவட்டத்தின் ஏழு இருக்கைகளுக்காக 640 பேரும் போட்டியிடுகிறார்கள்.

இந்நிலையிலே, இந்தத் தேர்தலிலே யார் வெற்றி பெற்றாலும், அவர்கள் தமிழரின் பிரதிநிதிகள் என்றோ, தமிழர் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கப்போகிறார்கள் என்றோ நாம் புளகாங்கிதம் அடையமுடியாது. போட்டியிடுபவர்களும் சரி, வெற்றி பெறுபவர்களும் சரி, அவர்கள் எல்லோருமே தத்தமது தனிப்பட்ட நலன்கள் கருதியே போட்டியிடுகிறார்கள் என்றும், தமது வெற்றியால் தமக்கும் தம்மைச் சார்ந்தவர்க ளுக்கும் மட்டுமே நன்மை பயக்கப்போகிறார்கள் என்றும் உறுதியாக நம்பலாம்.

இவர்கள் ஒவ்வொருவரினதும் பின்னணியில், புலம்பெயர் தமிழர்களின் பணபலமும் உணர்வூக்கமும் சில உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளும் செயற்படுகின்றன என்பதே கசப்பான உண்மை. தேர்தல் முடிவும், அதன் பயனாக அமையப்போகும் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளும் மக்களின் அன்றாட வாழ்க்கை மீது ஏற்படுத்தப்போகும் பாதிப்புகளை அனுபவிக்கும் அசௌகரியம் புலம்பெயர் தமிழர்களுக்கு இல்லை. எனவே, அவர்கள் தங்கள் மனக்கோட்டைகளில் வீற்றிருந்துகொண்டு, தங்கள் தற்பெருமையையும் தார்மீக மேன்மைநிலையெனத் தாம் கருதும் கருத்தியலையும் இலங்கையிலே அன்றாட வாழ்வாதாரத் துக்காகப் போராடும் மக்கள் மீது திணிக்க இந்த வேட்பாளர்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்து கிறார்கள். ஊரவரென்றும் உற்றவரென்றும் உறவினரென்றும் உணர்வொத்தவரென்றும் அவரவரை அடை யாளங்கண்டு, புலம்பெயர் தமிழர்கள் தமது பதிலாளிகளாகத் தேர்தல் களத்திலே நிறுத்தியுள்ளார்கள் அல்லது வேட்பாளராக நிற்பதற்கான ஏது நிலையைத் தமது பணபலத்தால் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இங்கேதான் இலங்கைவாழ் தமிழ் மக்கள் விழித்துக்கொள்ளவேண்டும். தாயகம் துறந்தவர்களின் தாயகப் பற்று என்பது, நினைவுக் கிளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. நடைமுறைச் சாத்தியங்களைக் கருத்தில் கொள்ளாதது. கருத்தியல் நிலையிலே இயங்குவது. இந்நிலையிலே, நடைமுறைச் சாத்தியங்க ளையும் களநிலவரங்களையும் கருத்திற்கொண்டு, இனநலன் சார்ந்து முடிவெடுக்கவல்ல ஒரு தலைமை-யைத் தமது சார்பாகத் தெரிவு செய்வதும், அத்தகையதொரு தலைமை தம்மிடையே இல்லையென்று உணருமிடத்து, அந்த இடைவெளியை நிரப்பத் தக்கதொரு தலைமையை உருவாக்குவதும் தாயகத்தில் வாழ்கின்ற இன்றைய தமிழ் வாக்காளர்கள் முன்னுள்ள - அவர்களின்முன் மட்டுமேயுள்ள தலையாய பணி.

# இம்மாதத் தாய்வீட்டில்...


**தக்கதொரு தலைமை வேண்டும்!** 3

**துனீசியா:**
**அரபு வசந்தம் முதல் அழகிய நரகம் வரை** 5
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**ஓ அமெரிக்கா** 9
- ரதன்

**சர்வதேச மாற்று ஊடகம் 'அல்-ஜசீரா':**
**தோற்றம், வளர்ச்சி, வகிபாகம் ...** 15
- ரூபன் சிவராஜா

**செகராசசேகரம்**
**சர்ப்ப சாஸ்திரம்** 20
- பால. சிவகடாட்சம்

**மன அழுத்தங்களை**
**கண்டு பிடிக்கும் செயலி** 22
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**நிலா நிலா ஓடி வா...!** 24
- குரு அரவிந்தன்

**வாகனத் திருட்டும் காப்புறுதியில் தாக்கமும்** 26
- செந்தூரன் புனிதவேல்

**குளிர்காலத்தில் வீட்டின் ஈரப்பதன்** 28
- வேலா சுப்ரமணியம்

**இரு சக்கரங்கள்** 31
- குமார் புனிதவேல்

**மீன் சரிதை...** 33
- வேதநாயகம் தபேந்திரன்

**சிறுவர் உரிமைகளைச் சீரழிக்காதே!** 36
- சி. நற்குணலிங்கம்

**இலக்கியத் தோட்டத்தின்**
**இயல் விருது விருது 2023** 38

**கொம்புமுறி சடங்காற்றுகை** 43
- ரதிகலா புவனேந்திரன்

**பழைய பாடல் போல புதிய பாடல் இல்லை...** 46
- ஓவியர் ஜீவா

**இன அழிப்பும்**
**சர்வதேசத் திரைப்பட விழாக்களும்** 49
- ரதன்

**குழந்தை ம. சண்முகலிங்கத்தின்**
**தான் விரும்பாத்தியாகி**
**மொழிபெயர்ப்பு நாடகங்கள் ஆறு** 53
- நா. நவராஜ்

**பரதம்: 'தீதும் நன்றும்'**
**பார்வை | நடனம் |**
**கருவுரு | படைப்புருவாக்கம்** 57
- ரூபன் சிவராஜா

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 50:**
**அரசியல் சுவாலைக்குள் ஒரு நந்தவனம்** 61
- மு. நித்தியானந்தன்

**இலக்கியத்துக்கான நோபல் பரிசு**
**பெற்ற முதல் ஆசியப்**
**பெண் எழுத்தாளர் ஹன் காங்** 65
- அன்னலட்சுமி இராஜதுரை

**பாலியல் வன்புணர்வும்**
**பாலியல் துஷ்பிரயோகங்களும்** 68
- த. சிவபாலு

**16 நாள் செயல்வாதம்:**
**எதைப்பற்றியது?** 71
- சிவா மாலதி

**குழந்தைக் கவிஞர் அம்பி** 73
- வே. விவேகானந்தன்

**மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி**
**நாகபூஷணியின் 'நெற்றிக்கண்'** 76
- மல்லியப்புசந்தி திலகர்

**'கொலுஷா'**
**பிறமொழிச் சிறுகதைகள்:** 78
- நவஜோதி ஜோகரட்னம்

**என் புழுதி ரசம்**
**வாசுதேவன் கவிதைகள்** 80
- ஜிஃப்ரி ஹாசன்

**மனிதன் மாறிவிட்டான்** 82
- நெல்லை ஜெயசிங்

**வாசிப்புக்கான பிரவேச உரையும்** 85
- அகமட் பிஸ்தாமி

**பெருஞ்செல்வம் + பேரறிவு + இரத்தம்** 87
- கருணாகரன்

**அலைபற்றிய உண்மையையும்**
**கரைபற்றிய மிகைப்படுத்தலையும்**
**பேசும் கதை** 91
- தானா விஷ்ணு

**ஒரு நூலின் உருவாக்கம்:**
**ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்** 95
- என். செல்வராஜா

**பயங்கரவாதப் பிரிவினைவாதம்!**
**மகிந்த காலம் (2005 - 2010)** 99
தமிழில் - என்.சரவணன்

**'எனக்குத் திசைகளைப் பற்றிக்**
**கவலையில்லை. தேடல்களைப்**
**பற்றியதுதான் என் கவலை'** 116
- ஆர். பாலகிருஷ்ணன்
நேர்காணல் : எஸ். சத்தியதேவன்,
அருண்மொழிவர்மன்

**கனடாவில் முதலாவது உலகத்**
**தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு** 134
- குரு அரவிந்தன்

**எந்தக் கடிவாளத்தினாலும்**
**அடக்க முடியாத நம் எண்ணங்கள்** 138
- அ. லெட்சுமணன்

**பேராசிரியர் செல்வா கனகநாயகத்தின்**
**பார்வையில்**
**'சிதைவுகள்' நாவல்** 143
- மைதிலி தயாநிதி

**தமிழ்முரசு நாளிதழ்க்**
**கவிதைகளில் மகளிர்** 147
- கோட்டி திருமுருகானந்தம்

**மார்க்சியமும்**
**சமூக விஞ்ஞான முறையியலும் - II** 157
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

**மச்சகேஸ்வரம்** 160
- த. ஜீவராஜ்

**இனப்படுகொலையின் அரசியல்**
**இலங்கை யின் இறுதிப்போரும்**
**காக்கும் கடப்பாடும்** 162
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**வண்ணதாசன் கதைகளுக்குக்**
**கீழ் எழுதிய குறிப்புகள்** 167
- சு. வேணுகோபால்

**ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் – 5** 174
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**குருக்கள் ஸ்வாமியான**
**குள்ளச்சாமி** 177
- கிருங்கை சேதுபதி

**கம்பனின் கருவூலம் திறந்து...** 181
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா
பகுதி 31

**தங்கப் பல்** 185
- சஞ்சயன்

**வாழ்வுரிமை** 188
- மா. சித்திவினாயகம்

**இன்னிசைப் பறவை** 192
- ஹன்ஸ் கிறிஸ்ரியன் அன்டர்சன்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

**தெளிவத்தையில்...**
**தெளிவத்தை ஜோசப் நினைவேந்தல்** 198
- கனிஷ்கர்




### முகப்பு:

இலங்கை போலவே துனீசியாவிலும் கடந்த மாதம் ஜனாதி பதித் தேர்தல் நடைபெற்றது. இலங்கையின் நிகழ்வுகள் 'புதிய திருப்பம்', 'புரட்சிகர மாற்றம்' என்று சொல்லப்படுவது போலவே 2010-ல் துனீசியாவில் மக்கள் எழுச்சியைத் தொடர்ந்து நிகழ்வுகளும் அவ்வாறே பார்க்கப்பட்டன. ஒரு தசாப்தகாலத்திற்கு பிறகு இன்று துனீசியா எங்கே நிற்கிறது. ஏன் அங்கே நிற்கிறது, என்ன நடந்தது போன்வற்றைப் பின் னோக்கிப் பார்ப்பது முக்கியமானது. குறிப்பாக இலங்கை யில் புரட்சிகர மாற்றம் நடைபெறுகிறது என்று எல்லோரும் சிலாகிக்கும் இத்தருணத்தில் துனீசியாவின் கதையைப் பார்ப் பது பயனுள்ளது.

ஒரு தசாப்தத்திற்குப் பிறகு, துனீசியாவிலும் அதற்கு அப்பா லும் உள்ள பலர் இன்னும் விடை தெரியா வினாவொன்றைச் சிந்தித்தபடியே உள்ளார்கள்: துனீசியாவில் நடந்தது ஓர் உண்மையான புரட்சியா, அல்லது ஒரு திடீர் எழுச்சியா, அல் லது 'வெளிநாட்டு சதியா'?. இன்னொரு வகையில் அதே ஆண்டு எகிப்தில் நடந்த நிகழ்வுகளை சமீர் அமீன் குறிப்பிட் டது போல 'ஒரு எழுச்சியை விடவும் கூடவாகவும், ஒரு புரட் சியை விடக் குறைவாகவும்' இருந்ததா ?

அரபு வசந்தம் நடந்த நாடுகளில் 'துனீசியா மட்டும் விதிவி லக்கு' என்று ஏன் அழைக்கப்படுகிறது ? லிபியா, எகிப்து, பஹ்ரைன், ஏமன் மற்றும் சிரியாவில் தோல்வியடைந்த புரட்சி களுடன் ஒப்பிடுகையில், இந்த 'துனீசிய விதிவிலக்கு'க்குப் பின்னால் உள்ள உண்மை என்ன ? புரட்சியின் வெற்றி மற் றும் ஜனநாயக மாற்றம் பற்றி எமக்குச் சொல்லப்பட்டுள் ளவை உண்மைதானா ? இந்தக் கேள்விகளை நாம் ஆராய் வதற்கு நாம் அரபு வசந்தத்திற்குத் திரும்ப வேண்டும்.

### துனீசியா தொடக்கி வைத்த அரபு வசந்தம்:

2011-ன் அரபுலகக் கிளர்ச்சிகள் பலருக்கு வியப்பூட்டின், சில ருக்கு அதிர்வூட்டின. இது பொதுவாக அரபு வசந்தம் என அழைக்கப்பட்டது. இதன் தொடக்கப் புள்ளி துனீசியா. 2010-இன் பிற்பகுதியில் துனீசியாவில் தொடங்கிய அரசுக்கெதி ரான கிளர்ச்சிகளிற்கு இளைஞர்களின் வேலையின்மையும் பிராந்திய ஓரங்கட்டுதலும் முக்கிய காரணங்களாகும். தலை-நகரின் மையப் பகுதியில் தெரு வியாபாரி மொஹமட் பௌசிசி சுயமாக தீக்குளித்ததோடு மக்கள் போராட்டங்கள் காட்டுத்தீ போல பற்றிக் கொண்டன. இக்காலப்பகுதியில், இளைஞர்களின் வேலையின்மை விகிதம் 35-ஐ எட்டியது. இவை ஜனாதிபதி பென் அலி தோல்வியுற்ற நவதாராளவா தப் பொருளாதாரக் கொள்கையின் பிரதிபலிப்புகளே. அவ ரது பொருளாதாரக் கொள்கையானது தனியார் துறையில் பணிபுரிய தகுதிபெற்ற பல்கலைக்கழக பட்டதாரிகளின் எண் ணிக்கையை அதிகரிப்பது, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப் பது, மற்றும் 1995-ல் கையெழுத்திடப்பட்ட ஐரோப்பிய ஒன்றி யத்துடனான ஒப்பந்தம் ஆகியவற்றை நம்பியிருந்தது. வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்க, அந்த ஒப்பந்தம் ஆடையுற்பத்தித் துறையை அழித்து, கிட்டத்தட்ட அரை மில் லியன் தொழிலாளர்களை வேலையில்லாமல் ஆக்கியது. இவ்வளவு நெருக்கடியின் போதும், அரசு முன்னாள் காலனித் துவவாதிகளான பிரான்ஸின் நலன்களைப் பேணுவதில் உறு தியாயிருந்தது.

1987-ல் ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் அதிகாரத்தை அடைந்த பென் அலி தன் முக்கிய அரசியல் எதிரிகளான என்னஹ்டா இயக்கத்தை ஒழிப்பதில் கவனம் செலுத்தினார். மிகக் குறு கிய காலத்தில் அவர் சர்வாதிகாரியானார். 'அபிவிருத்தி' என்ற பெயரில் சாலைகள் அமைத்தல், நீர் மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்தல் என்பன நிகழ்ந்தன. இதை அரசு ஊடகங்கள் 'சாதனைகள்' என்று பிரச்சாரம் செய்தாலும், இவை இரண்டு விடயங்களைச் செய்தன. முதலாவது அத்தி யாவசியத் துறைகள் அனைத்தையும் தனியார் மயமாக்கின. இரண்டாவது, இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏராள மான கடன் பெறப்பட்டது. இக்காலத்தில் ஊழல் அதிகரித் தது. பென் அலியின் குடும்பத்தினரே ஆட்சியின் அனைத்துத் துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தினர். 2000-களின் நடுப் பகுதியில் பல்கலைக்கழக பட்டதாரிகளிடையே வேலை யின்மை விகிதம் அதிகரித்ததால், நடுத்தர வர்க்கத்தின் பெரும்பகுதியினர் மத்தியில் நம்பகத்தன்மையை இழந்தது ஆட்சி.

தீக்குளிப்பைத் தொடந்து நாடு முழுவதும் நிகழ்ந்த போராட்டங்களுக்கு இளைஞர்களே தலைமை தாங்கினர். பள்ளிக் கல்விக்கான அணுகலை இழந்த இளைஞர்கள், சிறிய மற்றும் மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட வேலை சந்தையில் இருந்து விலக்கப்பட்டவர்களே இதில் முதன்மைப் பாத்திரம் வகித்தனர். பல்தேசிய நிறுவனங்களுக்கு தங்கள் நிலங்களை இழந்த விவசாயிகள், பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட கிராமப்புறத்தினர், இப்போராட்டங்கள் நாடு முழுவதிலும் நடைபெறுவதை உறுதிப்படுத்தினர். போராட்டங்கள் உக்கிரமடைந்த நிலையில் சர்வாதிகாரி பென் அலி, நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்ததும் நாடு திரும்பும் நோக்குடன் குடும்பத்துடன் சவூதி அரேபியாவுக்குத் தப்பிச் சென்றார்.

ஆட்சியில் ஏற்பட்ட வெற்றிடமானது ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நலன்களுக்கு மிகப்பாரிய நெருக்கடியை உருவாக்கியது. ஐரோப்பிய சந்தையுடன் பின்னிப்பிணைந்த துனீசியாவின் முதலாளித்துவ வர்க்கம் தமது நலன்களுக்கான



உத்தரவாதத்தை உறுதிசெய்ய, அவசரமாக ஸ்திரத்தன்மை தேவைப்பட்டது. இந்த வர்க்கம் 1956-ல் சுதந்திரம் அடைந்தது முதல் ஒவ்வொரு மட்டத்திலும் பிரெஞ்சு காலனித்துவத்துடன் அரசியல் ரீதியாக இணைக்கப்பட்டதாகவே இருந்தது. 1970-களின் முற்பகுதியில், கைவிடப்பட்ட சோசலிச கூட்டுறவுச் சோதனையைத் தொடர்ந்து, பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவதை செயற்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஹெடி அமரா நூயிராவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாராளமயக் கொள்கைகளால் பயனடைந்த இந்த வர்க்கம், பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்துடனான வர்த்தக ஒப்பந்தத்தால் மேலும் பயனடைந்தது.

துனீசியாவின் தாராளமயமாக்கலானது, உள்நாட்டு உற்பத்தி, விவசாயம் மற்றும் கனரகத் தொழில் போன்ற உற்பத்தித் துறைகளிலிருந்து தன்னைத் தூர விலக்கிக் கொண்டது. துனீசிய முதலாளிகள் விரைவான இலாபம் ஈட்டும், குறைந்த தொழில்நுட்ப திறன், குறைந்த விலை தொழிலாளர் துறைகளுக்கு மாற்றினர். அவர்கள் சுற்றுலா, தகவல் தொடர்பு, வங்கிகள், வணிக இடங்கள் மற்றும் எண்ணெய் வயல் சேவைகள் மூலம் சேவைத் துறையுடனும், கார் இறக்குமதி போன்ற ஆடம்பரப் பொருட்களுக்கான சில விநியோகத் துறைகளுடனும் தங்கள் பரிவர்த்தனைகளை அதிகரித்தனர். அரசால் ஊக்குவிக்கப்பட்டு, இந்த முதலாளிகளில் சிலர் மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்வதில், குறிப்பாக பேரீச்சம்பழங்கள், ஒலிவ் எண்ணெய் மற்றும் சிட்ரஸ் பழங்கள் போன்ற விவசாய ஏற்றுமதிகள் செய்வதில் நிபுணத்துவம் பெற்றனர். இந்த முறையினால் பல தசாப்தங்களாக, நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்தது. இவை ஏற்படுத்திய நீண்டகாலப் பொருளாதாரச் சீர்கேட்டின் விளைவால் மக்கள் கிளர்ச்சி வெடித்தது.

துனீசிய மக்களின் போராட்டம் பென் அலியை அகற்றியதோடு நிற்கவில்லை. மாறாக மக்கள் சார்பான கட்டமைப்பு மாற்றத்தைக் கோரி நின்றது. இந்நிலையில் அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளின் பொருளாதார நலன்கள் கேள்விக்குள்ளாகின. குளத்தில் இறங்கிய மேற்குலக நாடுகள், 'ஜனநாயக மாற்றத்தின்' தேவையையும் 'அரசியல் ஸ்திரத்தன்மையின்' அவசியத்தையும் கோரி நின்றன. இதன் வழிப்பட்டு உருவான இடைக்கால அரசாங்கம் உலக வங்கியின் முன்னாள் மூத்த ஆலோசகரான நவதாராளவாத முஸ்-தபா கமெல் நப்லியை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நியமித்தது. ஆரம்பத்திலிருந்தே, பென் அலியின் மோசமான கடன்களைத் தணிக்கை செய்ய வேண்டும், அவற்றைச் செலுத்த மறுக்க வேண்டும் என்ற இடதுசாரிகளின் கோரிக்கைகளை நப்லி தடுத்தார். மே 2011-ல் பிரான்சில் நடைபெற்ற மாநாட்டின் போது, பெரிய ஏகாதிபத்திய சக்திகள் 'அரபு வசந்த' நாடுகளின் (துனீசியா, எகிப்து, யேமன், முதலியன) தற்காலிக அரசாங்கங்களுக்கு கடன்களை வழங்குவதன் மூலம் கட்டுப்படுத்த முயன்றன. இக்காலப்பகுதியில் மொராக்கோ, ஜோர்டான் போன்ற நாடுகளிலும், சமூக மற்றும் அரசியல் அமைதியின்மையைக் காணத் தொடங்கிய பிற துணை ஆட்சிகளுக்கும் அவர்கள் இவ்வாறு உறுதியளிக்க முயன்றனர். உலக நிதி நிறுவனங்களால் முன்மொழியப்பட்ட 'சீர்திருத்த' செய்முறைகளில் இந்த நாடுகள் கடைப்பிடித்த சிக்கன நடவடிக்கைகள் மற்றும் கடன்கள் ஆகியவையே இன்று நாம் காணும் எதிர்மறையான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இரண்டு தசாப்தகால ஆட்சியின் அடக்குமுறைக்குப் பிறகு, 23 ஒக்ரோபர் 2011 அன்று நடந்த தேர்தலில், என்னஹ்டா இயக்கம் வெற்றி பெற்றது. சந்தேகத்திற்கு இடமின்றி, கத்தாரின் நிதியுதவி மற்றும் துருக்கியின் அரசியல் ஆதரவு இரண்டும் அதன் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தன. இந்த இயக்கம் எளிதில் பரவும் மதவாதக் கதையாடல்களால் பயனடைந்தது. அதன் தேர்தல் வெற்றிக்குப் பிறகு என்னஹ்டா குடியரசுக் கட்சிக்கான காங்கிரஸ், தொழிலாளர் மற்றும் சுதந்திரத்திற்கான ஜனநாயக மன்றம் ஆகியவற்றுடன் இணைந்து மூன்று கட்சிகளின் கூட்டணி ஆட்சி செய்தது. இவ்வாட்சி டிசம்பர் 2014 வரை தொடர்ந்தது. இவ்வாட்சிக்காலத்தில் ஆபத்தான புதிய சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆட்சியானது அதே பழைய நவதாராளவாதத் தெரிவுகளைத் தொடர்ந்து ஏகாதிபத்திய சக்திகள் மற்றும் அவர்களின் சர்வதேச நிதி நிறுவனங்களின் கட்டளைகளைப் பின்பற்றியது. வெளிநாட்டுக் கடன்களைப் பெறுதல், சிக்கன நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல், பொதுத்துறை நிறுவனங்க

ளைத் தனியார்மயமாக்குதல் போன்ற கொள்கைகளை அது தொடர்ந்தது. இதனால் அரசுக்கான மக்கள் எதிர்ப்புத் தொடர்ந்த வண்ணமே இருந்தது.

இவ்வாறான நெருக்கடியான சூழலிலேயே 2019-ல் ஜனாதிபதித் தேர்தல் நிகழ்ந்தது. அரசியலமைப்புச் சட்ட நிபுணரான பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவானார். இது ஆச்சரியமான திருப்பம். துனீசியர்கள் கிளர்ச்சிகளின் பின்னரான ஆட்சிகளின் மீதான விரக்தியின் விளைவால் 'சுத்தமான மீட்பரை' தேடினர். ஏற்கனவே இருந்த அரசியற் குழாமுக்குள் இல்லாத ஓர் அந்நியர் அரசியலுக்கு வருவதை அவர்கள் விரும்பினர்.

## சர்வாதிகாரியின் கைகளில்:

ஜனாதிபதியாகத் தெரிவான கைஸ் சையத் மீது மக்கள் அபரிமிதமான நம்பிக்கை கொண்டிருந்தனர். புதியவர், அரசியற்கறை படியாதவர், படித்தவர் போன்ற பிம்பங்கள் அவருக்கான ஆதரவாக அமைந்தன. ஆனால் அடுத்த 5 ஆண்டுகளில் நிகழ்ந்தவை முக்கியமானவை. அவர் பாராளுமன்றத்தை இடைநிறுத்தி ஆணையின் மூலம் ஆட்சி செய்ய அனுமதிக்கும் புதிய அரசியலமைப்பு மீதான வாக்கெடுப்பை நடத்தி, அவ்வாணையைப் பெற்றார். சயீதின் ஆட்சி சர்ச்சைக்குரியதாக உள்ளது. அது சர்வாதிகாரத்துக்கு மீண்டும் சரிவது, அரபு வசந்தத்தை பின்பற்ற துனீசியர்கள் எதிர்பார்த்திருந்த பன்மைத்துவ ஜனநாயகத்திற்கு எதிராகப் பயணித்துள்ளது. ஆயினும்கூட, சையத்தின் ஆதரவாளர்கள் பொருளாதார ரீதியில் சீரழிந்த ஒரு நாட்டைச் சீர்ப்படுத்த 'வலுவான ஆட்சியாளர்' தேவை என்று வாதிடுகிறார்கள்.

மல்லிகைப் புரட்சி என்று அழைக்கப்பட்ட துனீசிய எழுச்சியானது, இறுதியில் வலுவான பொருளாதாரத்தையும் ஊழலற்ற அரசாங்கத்தையும் வழங்கத் தவறிவிட்டது. ஊழல் குறிகாட்டிகளில் துனீசியா முன்னிலையில் உள்ளது. துனீசிய சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியையும் பாதிக்கும் ஒரு பிரச்சினையாக ஊழல் உள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு தடையாக உள்ளது. பல துனீசியர்கள் கடந்த தசாப்தத்தில் பரவலாக விரக்தியை வெளிப்படுத்தியுள்ளனர். இது அதிக வேலையின்மை மற்றும் உயர்ந்து வரும் பொதுக் கடனை நிவர்த்தி செய்வதற்கான சிக்கன நடவடிக்கைகள் ஆகியவற்றால் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். 2021-ல் இருந்து சயீதின் ஆதரவு குறைந்துள்ளது. அதிக பணவீக்கம் காரணமாக வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது மற்றும் இளைஞர்களின் வேலையின்மை விகிதம் அதிகரித்து வருகிறது. இந்தப் பின்னணியிலேயே கடந்த மாதம் ஜனாதிபதித் தேர்தல்கள் நடந்தன.

ஒக்ரோபர் 6-ம் திகதி வாக்குப்பதிவு முடிந்த சிறிது நேரத்திலேயே, சையத் மீண்டும் வெற்றி பெற்று, 90%-க்கும் அதிகமான வாக்குகளுடன் இரண்டாவது முறையாக பதவியேற்றார். அவரது வெற்றி பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. சையத்தின் நெருங்கிய போட்டியாளரான அயாச்சி ஜம்மெல் 7% வாக்குகளைப் பெற்றார். அவர் வாக்கெடுப்புக்கு ஐந்து நாட்களுக்கு முன்பு ஆவணங்களை பொய்யாக்கியதாகக் கூறி 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். தேர்தலில் சையத்தின் முக்கிய எதிரிகளும், எதிர்ப்பாளர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர் அல்லது வாக்களிக்க இயலாதவாறு தடுக்கப்பட்டனர். இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 27%-ஆனவர்கள் மட்டுமே வாக்களித்ததாக துனீசியாவின் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது, இது 2019-ல் பதிவான 55%-ல் இருந்து குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாகும்.

## அழகிய நரகம்:

உத்தியோகபூர்வ தேசிய புள்ளியியல் நிறுவனத்தின் தரவுகளின்படி, துனீசியாவின் வேலையின்மை விகிதம் இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 20%-ஐ எட்டியது. இது ஆழ்ந்த விரக்தியின் உணர்வை பிரதிபலிக்கிறது, குறிப்பாக வேலையின்மையின் சுமையைத் தாங்க இயலாத இளைஞர்கள் புலம்பெயர்வையே தீர்வாகக் கருதுகிறார்கள். அது சட்டபூர்வமானதோ சட்டவிரோதமானதோ என்பது பற்றிய கவலையற்று தமது வாழ்வாதாரத்திற்காக வேறு நாடுகளுக்குச் செல்வதே ஒரே வழி என்று நம்புகிறார்கள். சமீபத்திய கருத்துக்கணிப்பு ஒன்றின்படி, 46% துனீசியர்கள் இடம்பெயர்வதைப் பற்றி சிந்திக்கிறார்கள், அவர்களில் 71%-மானோர் 18 முதல் 29 வயதுக்குட்பட்டவர்கள்.

பல துனீசியர்களுக்கு, தேர்தல்கள் இனி அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான ஒரு அர்த்தமுள்ள வழியை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. குறிப்பாக சயீதின் ஜனாதிபதி பதவிக்காலம் முழுவதும் நீடித்த கடுமையான பொருளாதார நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு, வாக்குப்பதிவு மிகவும் அரிதாகிவிட்டது. 2022 அரசியலமைப்பு வாக்கெடுப்பின் போது, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 30.5% வாக்காளர்கள் மட்டுமே பங்குபற்றியிருந்தனர், அதேயாண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வாக்குப்பதிவு 11.3% ஆகக் குறைந்தது. 2023-ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் இரண்டாவது சுற்றில் 12.44%-ஆன வாக்குகள் மட்டுமே பதிவாகியிருந்தன.

துனீசியாவும் அதன் மக்களும் அனுபவித்து வரும் பிரச்சினைகளுக்கான தீர்வு கொடுங்கோல் ஆட்சியின் மூலம் எட்டப்படாது, அதோடு சமரசம் செய்துகொள்வதாலோ, சமாளிப்பதாலோ, அதன் 'தேர்தல் சூழ்ச்சியில்' பங்கேற்பதாலோ கூட, ஆட்சிக்கு எதிராகப் போராட முடியாது என்பது இப்போது நிரூபணமாகியுள்ளது. முற்போக்கு இயக்கங்கள் ஒன்றுபடவும், துனீசிய மக்களை அணுகவும், அவர்களை மீண்டும் ஒருங்கிணைத்து, அணி திரட்டவும் உரிய வகையில் பங்காற்ற வேண்டும். 2011-ல் சர்வாதிகாரம் தூக்கியெறியப்பட்டதில் இருந்து, துனீசியாவை ஆட்சி செய்த அடுத்தடுத்த ஆட்சிகளால் நிராகரிக்கப்பட்ட 'வேலை', 'சுதந்திரம்' மற்றும் 'கண்ணியம்' ஆகியவற்றைப் பெறுவதற்காகவும், மக்கள் தங்கள் கனவை நனவாக்கவும், மக்கள் போராட வேண்டியுள்ளது.

துனீசியர்களைப் பொறுத்தவரை அவர்கள் 2011-ல் ஒரு அழகிய எதிர்காலத்தைக் கனவு கண்டனர். அதற்காகப் போராடினர். ஆனால், அவர்களுக்கு அழகிய நரகமே பரிசளிக்கப்பட்டுள்ளது என்பதுதான் கசப்பான உண்மை. துனீசியாவில் 17

டிசம்பர் 2010 அன்று உள் பகுதிகளில் உள்ள விளிம்பு நிலை மக்களாலும், வறிய கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்க ளாலும் தொடங்கப்பட்ட மக்கள் எழுச்சி ஒரு புரட்சியாக மாற வில்லை. இது மக்கள் கோரிக்கைகளை வெளிப்படுத்தும் முழக்கங்களுடன் ஆரம்பித்து, அரசியல் சமாதானப்படுத்தல் களுடன் முடிந்தது. எதிர்ப்புரட்சிகர சக்திகள், போராட்டக் களத்தில் இருந்து போராட்டக்காரர்களைக் கலைக்க முடிந்த நாளிலிருந்து ஒரு எழுச்சியை மடைமாற்றும் செயலை, அதில் இணைந்திருந்த தாராளவாத ஜனநாயக துண்டுகள் வெற்றிக ரமாகச் செய்தன. அது இன்று ஒரு நரகத்தை துனீசியர்களுக் குக் கொடுத்திருக்கிறது.


## முடிப்பு:

எதிர்ப்புகள் பொதுசன அதிருப்தியை வெளிப்படுத்துவன. அவை தம்மளவிற் புரட்சியின் வித்துக்களாகா. எதிர்ப்பு என் பது சனநாயக உரிமைகளின் வலியுறுத்தல் என்பதாலும், புரட்சிகரப் போராட்டங்கள் சாராம்சத்தில் சனநாயகத்துக் கான போராட்டங்களே என்பதாலும், அவற்றின் சமூகப் பெறு மதி முக்கியமானது. அதே வேளை, எதிர்ப்புகள் யாவுமே சாராம்சத்தில் முற்போக்கானவையுமல்ல. அதைவிட, ஃபாசி ஸவாதிகள் உட்படப், பிற்போக்காளர்களும் வெகுசன அதி ருப்தியைத் தமக்கு வாய்ப்பாக்கியுள்ளனர். அரசியற் பொரு ளாதார நெருக்கடிக் காலங்களில் பிற்போக்கிற்கும் ஃபாசி ஸத்திற்கும் உதவும் விதத்தில் வெகுசன அதிருப்தி உற்பத்தி யாகியுமுள்ளது. 20-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஃபாசிஸ வாதிகள் அதைச் செய்துள்ளனர். இதை நாம் மனதிலிருத்த வேண்டும்.

துனீசியா அனுபவம் சொல்கிற செய்தி யாதெனில், துனீசியா வில் தொற்றிய ஒரு தீப்பொறி துனீசியாவைக் கடந்து வெகு தொலைவுகட்கும் பரவி ஒரு காட்டுத் தீ போல் ஒளிர்ந்தது. அரபு உலகின் ஒவ்வொரு சர்வாதிகாரியையும் குலை நடுங்க வைக்கும் அளவுக்கு அதன் உக்கிரம் இருந்தது. மக்களால் வெறுக்கப்படுகின்ற ஒரு சர்வாதிகாரி போனதோடு, துனீசியா வின் போராட்டம் ஓய்ந்தது. ஆனால் மக்கள் ஓயக் கூடாது. மக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். புரட்சியின் எதிரிகள் புரட்சிக்குள்ளேயும் இருக்கலாம். வெற்றி பெற்ற புரட்சிக்குள்ளேயும் உருவாகலாம். துடைப்பம் படாத இடத் தில் தூசு சேர்ந்துகொண்டே இருக்கும். எனவே வீட்டை ஒழுங் காகக் கூட்டித் துப்புரவாக வைப்பது தொடர்ச்சியான ஒரு பணி. துனீசிய மக்கள் துடைப்பத்தைக் கையிலெடுத்திருந்தா லும் எல்லாக் குப்பையையும் இன்னமும் துடைத்தெறிய இய லவில்லை. போராட்ட உணர்வும் இமை சோராத விழிப்பும் என்றென்றைக்கும் தேவையானவை. இது இலங்கைக்கும் பொருந்தும்.



meenilankco@thaiveedu.com






அமெரிக்க தேர்தல் நடைபெற இன்னமும் சில நாட்களே உள்ளன. கருத்துக் கணிப்புகள் கமலா ஹரிஸ், டொனால்ட் ரம்ப் ஆகிய இரு பிரதான வேட்பாளர்களுக்கும் சமநிலையில் உள்ளதாக தெரிவிக்கின்றன. இம்முறையும் புதிய அமெரிக்க ஜனாதிபதியை ஊசலாடும் (swing) மாநிலங்களே தீர்மானிக் கப்போகின்றன.

ஒவ்வொரு மாநிலத்துக்கும் குறிப்பிட்ட வாக்குகள் வழங்கப் பட்டுள்ளன. மாநிலத்தில் அதிகளவு வாக்குகள் பெறும் வேட் பாளர் அந்த வாக்குகளைப் பெறுவார். உதாரணத்துக்கு ரெக் ஸாஸ் மாநிலத்து 40 எலக்ரல் வாக்குகள் வழங்கப்பட்டுள் ளன. ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கமலா ஹரிஸ், குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ரம்ப்பை விட ஒரு வாக்கு அதிக மாகப் பெற்றாலும், கமலா ஹரிஸ் 40 எலக்ரல் வாக்குகளை யும் பெற்று விடுவார். ஆனால், இரு மாநிலங்கள் வித்தியாச மாக எலக்ரல் வாக்குகளை வேட்பாளர்களுக்கு வழங்குகின் றார்கள். Nebraska மாநிலத்துக்கு ஐந்து எலக்ரல் வாக்குகள் உள்ளன. மாநிலத்தில் அதிகளவு வாக்குகளைப் பெறும் வேட்பாளர் இரண்டு வாக்குகளைப் பெறுவார். இந்த மாநிலத் தில் மூன்று காங்கிரஸ் தொகுதிகள் உள்ளன. இத்தொகுதிக ளில் யார் அதிகளவு வாக்குகளைப் பெறுகின்றார்களோ, அவர்களுக்கு அத்தொகுதி வாக்குகள் கிடைக்கும். இதே போன்று மற்றொரு மாநிலமான Maine-உம் உள்ளது. இம்மா நிலத்துக்கு நான்கு எலக்ரல் வாக்குகள் உள்ளன. இரண்டு அதிகளவு வாக்குகளைப் பெறும் வேட்பாளருக்கு கிடைக் கும். மிகுதி இரண்டும், இரண்டு காங்கிரஸ் தொகுதிகளில் அதிகளவு பெறும் வேட்பாளருக்கு கிடைக்கும். Nebraska-இல் 2020-ம் ஆண்டு தேர்தலின்போது டொனால்ட் ரம்ப் 58.2 வீத வாக்குகளைப் பெற்றார். இவர் அங்குள்ள காங்கிரஸ் தொகுதிகளிலும் அதிகளவு வாக்குகளைப் பெற்று ஐந்து எலக்ரல் வாக்குகளையும் பெற்றுக்கொண்டார். இந்த மாநிலம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து குடியரசுக் கட்சியே வெற்றி பெற்று வருகின்றது. 2020-ம் ஆண்டு Maine-இல் பைடன் 53.1 வீத வாக்குகளைப் பெற்றிருந்தார். டொனால்ட் ரம்ப் பெற்ற வாக்குகள் வீதம் 44. ஆனால், காங்கிரஸ் தொகுதி 2-ல் டொனால்ட் ரம்ப் அதிகளவு வாக்குகளைப் பெற்றிருந்தமை யால், பைடனுக்கு 2 மற்றும் காங்கிரஸ் தொகுதி 1 என மொத் தம் மூன்று எலக்ரல் வாக்குகள் கிடைத்தன. டொனால்ட் ரம்ப்க்கு காங்கிரஸ் தொகுதி இரண்டின் வெற்றியால் ஒரு எலக்ரல் வாக்கு கிடைத்தது. கடந்த பல தேர்தல்களில் ஜன நாயகக் கட்சிக்கு மூன்றும், குடியரசுக் கட்சி ஒரு எலக்ரல் வாக்கும் இங்கு பெற்றுக்கொண்டு வருகின்றனர்.

இவ்விரு மாநில எலக்ரல் வாக்குமுறை இரு பிரதான வேட்பா ளர்களுக்கும் 269 எலக்ரல் வாக்குகள் கிடைக்கும் சந்தர்ப்பங் களும் அமையலாம். அவ்வாறு அமையப் பெறின் House of Representatives வாக்களித்து யார் ஜனாதிபதி என முடிவு செய்வார்கள். இப்பொழுது சபையில் குடியரசுக் கட்சிக்கு ஆதிக்கம் அதிகம். எனவே அவ்வாறு 269-269 என முடிந் தால், டொனால்ட் ரம்ப் வெற்றி பெறுவது உறுதி.

ஜனாதிபதி தேர்தல் நடைபெறும்போது காங்கிரசின் தேர்த லும் நடைபெறுகின்றது. 435 House of Representatives-க் கும், 34 செனட் உறுப்பினர்களுக்குமான தேர்தல் நவம்பர் ஐந்தாம் திகதி நடைபெறுகின்றது. தேர்தலின் பின்பாக காங் கிரசில் எந்த கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று ஆதிக்கம் செலுத்துகின்றது என்பது முக்கியம். இல்லையேல் ஜனாதி பதி சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு விட்டுக் கொடுப் புக்களைச் செய்யவேண்டிய நிலை ஏற்படும். ஜனாதி பதித் தேர்தல் ஆதரவு சில சமயங்களில் காங்கிரஸ் வேட்பாளர்க ளையும் பாதிக்கும்.

டொனால்ட் ரம்ப், கமலா ஹரிசை விட வேறு மூன்று வேட்பா ளர்களும் சுயேச்சையாகப் போட்டியிடுகின்றார்கள். ஒப மாவை நேரடியாக மிகவும் கடுமையாக விமர்சித்த தத்துவவி யல் பேராசிரியர் Cornel West, வைத்தியர் Jill Stein ஏற்க னவே 2012, 2016-ல் போட்டியிட்டவர். 2016-ல் ஹிலரி கிளின்-டன் Wisconsin மாநிலத்தில் தோற்றமைக்கு Jill Stein கார ணம் என ஜனநாயகக் கட்சியினர் கருத்து தெரிவித்துள்ளனர். Wisconsin ஒரு ஊசலாடும் மாநிலம். அங்கு ஹிலரி கிளின் டன் 46.45 வீத வாக்குகளைப் பெற்றிருந்தார். டொனால்ட் ரம்ப்க்கு 47.22 வீத வாக்குகள். Jill Stein 1.04 வீத வாக்குகள். ஜனநாயகக் கட்சி வாக்குகளே 1.04 வீத வாக்குகள். சராசரி யாக சுமார் ஐந்து வீத வாக்குகளைச் சுயேட்சை வேட்பாளர் கள் பெற்றுக்கொள்கின்றார்கள். இது சில மாநிலங்களில் பிர தான வேட்பாளர்களுக்குச் சிக்கல்களாகவே அமைந்துள் ளன. Chase Oliver இவர் Libertarian கட்சி சார்பில் போட்டி யிடுகின்றார். இவர்களைவிட வேறு 17 வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்து பின்னர் போட்டியிலிருந்து விலகிவிட்ட னர்.

தேர்தல் நெருங்க நெருங்க வேட்பாளர்கள் வாக்கு வங்கிகளைக் கைப்பற்றிக் கொள்ள மிகக் கடுமையாக முயற்சிக்கின்றனர். கடந்த சில வருடங்களாக அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்களில் தனியார் கூட்டுத்தாபனங்களின் நிதி மிகப் பெரும் பங்கு வகிக்கின்றது. டொனால்ட் ரம்ப்க்கு நேரடியான ஆதரவை வழங்கும் கோடீஸ்வரர், ரெஸ்லா, எகஸ் நிறுவன அதிபர் Elon Musk. பேச்சு சுதந்திரத்துக்கும் துப்பாக்கி சுதந்திரத்துக்கும் ஆதரவு தெரிவித்து, மனு கொடுப்பவர்களில் ஒருவருக்கு ஒவ்வொரு நாளும் ஒரு மில்லியன் டொலரை தேர்தல்



நாளன்று வரை வழங்குவேன் என உறுதியளித்துள்ளார். Elon Musk says he will give away $1m (£766,000) a day until 5 November to a person who will be selected at random from those who sign a petition pledging support to free speech and gun rights. வாக்களர்களுக்கு பணம் கொடுப்பது சட்ட விரோதமானது. Elon Musk-இன் குறி டொனால்ட் ரம்ப்பின் வெற்றி.

ஜனநாயகக் கட்சி தேர்தலுக்கு வேலை செய்பவர்களுக்கு 4.9 மில்லியனை வேதனமாக ஆவணி மாதம் மட்டும் வழங்குகியுள்ளது. மொத்தம் 1200 பேர் வேலை செய்கின்றனர். அதே போல் குடியரசுக் கட்சிக்காகவும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வேலை செய்கின்றனர்.

ரம்ப்பின் சொத்துக்களை Forbes பட்டியலிட்டுள்ளது. Trump Media Group – $2.2 billion, U.S Golf Courses $356 Million, Mar-a-Lago $342 million, 1290 Avenue of the Americos $208 million, Trump National Doral Miami $197 million, 6 East 57th Street $128 Million, Florida Homes(4) $85 Million, Trump Tower Penthouse $50 million, Trump Parc $27 million, Europen Golf Properties $100 Million, Trump International Hotel & Tower $77 million. இவற்றை விட வேறு சில சொத்துக்களும் உண்டு.

## டொனாலட் ரம்ப்பிற்கு நிதி வழங்கிய முக்கிய செல்வந்தர்கள்:

Tim Mellon அமெரிக்காவின் ஐம்பது செல்வந்தர்களுள் ஒருவர். இவர் வழங்கிய நிதி 125 மில்லியன் டொலர்கள்.

Elon Musk ரெஸ்லா மற்றும் எக்ஸ் சமூக வலைத்தள தலைவர். இவர் ரம்பின் குடியரசுக் கட்சிக்கு 180 மில்லியன் டொலர்



களை வழங்கியுள்ளார். இவர் இதுவரை காலமும் அரசியல் பக்கம் தலை வைத்துப் படுக்காதவர், இம்முறை தனது நிறுவன வளர்ச்சிக்கான காரணங்களுக்காக நிதி வழங்கியுள்ளார். ரம்ப், எலன் மஸ்க்கின் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வார். உதவி ஜனாதிபதி வேட்பாளராக ஜே.டி. வன்சை தேர்வு செய்வதற்கு எலன் மஸ்க்கே காரணம் என்கிறார்கள். சி.என்.என், எலன் சுமார் 75 மில்லியன் டொலர்களை மேலதிகமாக வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேலிய - அமெரிக்க பிரஜையான Miriam Adelson ஒரு வைத்தியர் ஆவார். இவரது இரண்டாவது கணவர் Sheldon Adelson இறந்த பின்னர் Las Vegas Sands நிறுவனத்தின் தலைவராய் உள்ளார். இவர் நூறு மில்லியன் டொலர்கள் வரை நிதி வழங்கியுள்ளார்.

Dick and Liz Uihlein - Uline நிறுவனத்தின் தலைவர்கள் 220 மில்லியன் வழங்கியதாக சி.என்.என் தெரிவித்துள்ளது.

Linda McMahon Titan Sports, Inc. (later World Wrestling Entertainment, Inc.) நிறுவனத்தின் தலைவராகவிருந்துள்ளார். ரம்ப்பின் நீண்ட கால நண்பர். ரம்பின் ஆட்சிக் காலத்தில் Administrator of the Small Business Administration ஆக பதவி வகித்துள்ளார்.

## கமலா ஹரிசுக்கு நிதி வழங்கிய முக்கிய செல்வந்தர்கள்:

Reid Hoffman - co-founder of LinkedIn

George and Alex Soros- Soros Fund Management ஆரம்பஸ்தர்கள். ஜோர்ஜ் ஹங்கேரியில் பிறந்த யூதர். பின்னர் அமெரிக்காவிற்கு புலம் பெயர்ந்தார். இவர் லொஸ் ஏஞ்சல்ஸ் பத்திரிகையிலும் பணியாற்றியுள்ளார்.

Mike Bloomberg முன்னாள் நியூயோக் நகர மேயர். Bloomberg L.P. நிறுவனத் தலைவர். பிரபல்ய புளும்பேர்க் சஞ்சிகை மற்றும் ஊடக நிறுவனத்தின் தலைவர். உலகின் 13-வது மிகப் பெரிய செல்வந்தர் (based on Forbes)

Dustin Moskovitz – Co founder Facebook

Jeffrey Katzenberg வோலட் டிஸ்னி நிறுவனத்தின் முன்னாள் தலைவர். இவர் மூலம் ஹொலிவூட் பிரபலங்கள் பலர் கமலா ஹரிசுக்கு நிதி வழங்கியுள்ளார்கள்.

இன்று அமெரிக்க மக்கள் முன்னுள்ள பிரச்சினைகளாக சில வற்றைக் குறிப்பிடலாம்.

- பொருளாதாரம் - பணவீக்கம், அதிக வரி, வணிக முயற்சிகள் தொடரமுடியாமை, வேலையில்லாமை, உறையுள் இன்மை, அதிகரித்துச் செல்லும் உறைவிட வாடகைகள், சமூக கொடுப்பனவுகள் பெறமுடியாமை.
- சுற்றுச் சூழல் மாசுபடுவதனால் ஏற்படும் இயற்கை அழிவுகள், மீள்தகு எரிசக்தி மீதான அக்கறையின்மை.
- அதிகரித்து வரும் குற்றச் செயல்கள், அதிகரித்து வரும் துப்பாக்கிப் பாவனை, பெருந் திரளான கொலைகள்.
- நகர்காவலர்களின் நிறவாதச் செயல்கள்.
- கருக்கலைப்புக்கான சுதந்திரமின்மை.
- போதை மருந்துப் பாவனை, விற்பனை.
- அமெரிக்கர்களுக்கான உரிமைகள்
- மருத்துவச் செலவு அதிகரிப்பு, இலவச மருத்துவ சேவையின்மையால் அவதிப்படும் மக்கள், அதிகரித்து வரும் மருந்து விலை.
- அமெரிக்காவிற்குள் வரும் சட்டவிரோத குடிவரவாளர்கள்.
- பல வருடங்களாக குடிவரவாளர்களாக வாழ்பவர்களின் குடியுரிமையின்மை.
- வெளிநாட்டு யுத்தங்கள் - ரஷ்யா-உக்ரேன், பாலஸ்தீனம்-இஸ்ரேல், - ஈரான், தென் சீனக் கடலில் அமெரிக்காவின் ஆதிக்கம் குறைந்து செல்லுதல்.
- உலகமயமாதலின் எதிர்வினை.
- சீனாவுடனான வணிகத்தில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள்.
- பிறிக்ஸ் அமைப்பால் ஏற்படப்போகும் அமெரிக்க டொலரின் பெறுமதி மாற்றம்

போன்ற பல பிரச்சினைகளை அமெரிக்கர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

உதாரணத்துக்கு மிக முக்கிய பிரச்சினையான பொருளாதார வளர்ச்சி, பணவீக்கம் பற்றி இரு வேட்பாளர்களிடமும் எந்த தெளிவான திட்டங்களுமில்லை. கொரோனாவுக்குப் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்த நிலையால் பைடனின் அரசாட்சியில் பண வீக்கமானது ஒன்பது வீதத்துக்கு மேலாக அதிகரித்துக் காணப்படுகிறது. மளிகைப் பொருட்களின் விலை அதிகரிப்பை குறைக்க, கமலா ஹரிஸ் 'மளிகைப் பொருட்கள் விற்பனை நிறுவனங்களின் திட்டமிட்ட விலை அதிகரிப்பிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கூறியுள்ளார். 'மத்தியதர வர்க்கத்தினருக்கு வரிக் குறைப்பை ஏற்படுத்துவேன்' என்றும் கூறியிருக்கின்றார். இவை மட்டும் மளிகைப் பொருட்களின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்தாது.

டொனால்ட் ரம்ப் 'சீனாவிற்கான சுங்க வரியை அறுபது வீதமாக அதிகரிப்பேன்' எனக் கூறியுள்ளார். சீனாவிற்கு மட்டுமல்ல கனடா உட்பட பல நாடுகளுக்கும் இந்த சுங்கவரி அதிகரிப்பு உண்டு எனவும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். பொருளாதார ஆய்வாளர்கள் ரம்ப்பின் திட்டங்கள் பணவீக்கத்தை குறைக்காது என்றும் தெரிவித்துள்ளனர். தற்போதைய அமெரிக்காவின் பணவீக்கம் 2.4 வீதம். அமெரிக்க மத்திய வங்கி (Federal Reserve System- (Fed)) தலைவர் Jay Powell, கமலா ஹரிசுக்கு சார்பாக வட்டி வீதத்தைக் குறைப்பதாக ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார். பொதுவாகவே பணவீக்கம் குறையும்பொழுது வட்டி வீதத்தை குறைப்பது வழமை. ஆனால் அமெரிக்காவைப் பொறுத்தவரை Bond உட்பட்ட வேறு பல விடயங்களையும் மத்திய வங்கிகள் கவனத்தில் எடுக்கும். ஆனால் ரம்ப்பைப் பொறுத்தவரை தனக்குச் சாதகமற்ற விடயங்கள் சகலதையும் விமர்சிப்பார்.

அண்மையில் வோல் ஸ்ரீட் ஜேர்னலுக்கு வழங்கிய செவ்வியில் கனடா-மெக்சிக்கோ-அமெரிக்கா சுதந்திர வர்த்தக வலயம் அமெரிக்காவிற்கு சாதகமற்றது எனக் கருத்து தெரிவித்துள்ளார். அதுமட்டுமல்ல Trans-Pacific Partnership (TPP)-ஐயும் விமர்சித்துள்ளார். 'they would've eaten us alive, the Asian countries in TPP'. ரம்ப்பிடம் எந்தவித முறையான திட்டமுமில்லை. இவருக்கு தேர்தல் நிதி வழங்கிவரும் பெரும் நிறுவனங்களே அமெரிக்காவின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும். இது கமலா ஹரிசுக்கும் பொருந்தும்.

அமெரிக்காவின் அதிகரித்து வரும் கடன் பற்றி இரு வேட்பாளர்களும் மௌனம் காக்கின்றனர். இரண்டாம் உலகப் போரின் பின்னர் 2027-ல் தேசிய உற்பத்திக்கும் மொத்த கடனுக்குமான வீதம் 122.4 ஆக அதிகரிக்கும் என Non-Partisan Congressional Budget Office அறிக்கை வெளியிட்டுள்ளது. 1946-ல் இது 106.1 வீதமாக இருந்தது. வரி வருமானத்தை அதிகரிப்பதன் மூலமே கடன் சுமையைக் குறைக்க முடியும். எனவே வரிக் குறைப்பு வாக்குறுதிகள் சாத்தியமற்றவை.

வெளிநாட்டுக் கொள்கைகளில் கமலா ஹரிசுக்கும், ரம்ப்பிற்குமிடையிலான இடைவெளி புட்டின். புட்டினின் நண்பன் டொனால்ட் ரம்ப். ரம்ப்பின் கடந்த ஆட்சியின்போது உக்கிரென் அதிபர் ஆயுத உதவி குறித்து அமெரிக்காவிடம் கேட்ட போது, ரம்ப், பைடனின் வணிக முயற்சிகள்பற்றி விசாரிப்பதாக உறுதியளித்தால் ஆயுதங்கள் தரப்படும் எனக் கூறியுள்ளார்.

ரம்ப் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் உக்கிரேன் போர் நிறுத்தப் படும் என்றார். உக்கிரெனுக்கான அமெரிக்க உதவி நிறுத்தப் பட்டால், உக்கிரெயின் தொடர்ந்து போரிட முடியாத நிலை ஏற்படும். ரம்ப் வோல்ஸ் ஸ்ரீட் ஜேர்னலுக்கு வழங்கிய செவ்வி யில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் 'Vladimir, If you go after Ukraine, I am going to hit you so hard... We're friends. I




don't want to do it, but I have no choice.' இதே போன்ற கருத்தைத்தான் சீனா மீதும் தெரிவித்துள்ளார். சீனா தைவா னுக்குள் சென்றால் சுங்க வரியை 150-200 வீதமாக அதிகரிப் பேன் என்று அதே செவ்வியில் கூறியுள்ளார். பைடனின் வெளிநாட்டுக் கொள்கையை ஒத்த கொள்கையையே கமலா ஹரிஸ் கடைப்பிடிப்பார். மிச்சிக்கன் உட்பட்ட ஊசலாடும் மாநிலங்களில் கமலா முஸ்லீம் மக்களின் வாக்குகளைப் பெற இஸ்ரேலுக்கு எதிரான கருத்துகளை கூறலாம். ஆனால், ஹமாசின் தலைவர் Yahya Sinwar கொல்லப்பட்டபோது, இனிமேல் சமாதான பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் எனக் கருத்து தெரிவித்துள்ளார். அடிப்படையில் கமலா ஹரிசுக் கும், டொனால்ட் ரம்ப்க்கும் பாலஸ்தீன மக்கள் மீதான அக் கறை எதுவுமில்லை. அவர்கள் இருவரும் தொடர்ந்து இஸ் ரேல் நலன்களையே கவனத்திலெடுப்பார்கள். மிச்சிக்கனில் வாழும் சுமார் ஐம்பதாயிரம் அரபு மக்கள் வாக்குகள் ஜனாதி பதித் தேர்தல் முடிவுகளையே மாற்றும். அதே போல் பென்-சல்வேனியாவில் வாழும் அரபு மக்கள் வாக்குகளுக்கும் வலு அதிகம். முஸ்லீம் மக்கள் வாக்களிக்காமல் விட்டால் அல் லது தேர்தலை புறக்கணித்தால் அது ரம்ப்க்கு சாதகமாகவே அமையும்.

வேட்பாளர்களின் நோக்கம் காசாவிலோ, லெபானிலோ மர ணிக்கும் சிறுவர்கள், மக்கள் பற்றியதல்ல. வாக்குகள் பற்றி யது. மிக விரைவில் பாலஸ்தீனம் உலக வரைபடத்திலிருந்து நீக்கப்படும். அதற்கு அமெரிக்காவின் இரு கட்சிகளுமே பிர தான காரணம் என விவாதிக்கப்படுகிறது.

புதிய குடிவரவாளர்கள் குறிப்பாக தெற்கு எல்லையினூடாக அமெரிக்காவினுள் வரும் அகதிகள் பற்றி டொனால்ட் ரம்ப் மிகக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித் துள்ளார். மெக்சிக்கோ மற்றும் மத்திய, தென் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களே தெற்கு எல்லையினூடாக அமெ ரிக்காவினுள் வருகின்றனர். கலிபோர்னியா மாநில உணவகங் கள் பல இவ்வாறு வரும் அகதிகள் பலரை மிகக் குறைந்த வேதனம் கொடுத்து வேலையில் அமர்த்துகின்றனர். ஆனால் டொனால்ட் ரம்ப் இவர்கள் நாய்களை உண்பவர்கள், குற்றவா ளிகளே இங்கு வருகின்றார்கள், Why are we having all these people from shithole countries come here எனக் கூறி யுள்ளார். 2019-ம் ஆண்டு இவர் காங்கிரஸ் உறுப்பினர்க ளான Alexandria Ocasio-Curtez, Ayanna Pressley, Rashida Talib, Ilhan Omar ஆகிய நான்கு பேரை உங்கள் நாட்டிற்கு செல்லுங்கள் என்று கூறியிருந்தார். இவர்களில் முதல் மூவ ரும் அமெரிக்காவில் பிறந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக் கது. ரம்ப் வெள்ளை இன மக்களின் வாக்குகளை தனதாக்கு வதற்கு நிறவாதத்தை கக்கிவருகின்றார். மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் ஏற்படும் உள்நாட்டு யுத்தங்க ளுக்கும், குழப்பநிலைக்கும் அமெரிக்காவே பிரதான கார ணம்.

டொனால்ட் ரம்ப் 'I will run the biggest deportation force this country has ever seen.' சுமார் 12 மில்லியன் மக்கள் அமெ ரிக்காவில் உரிய குடிவரவு பத்திரங்களின்றி வாழ்கின்றனர். இவர்களை நான் பதவிக்கு வந்தவுடன் வெளியேற்றுவேன் எனக் கூறியுள்ளார். இது உடனடியாக சாத்தியமற்றது எனி னும், தேர்தல் வாக்குறுதி. வாக்குறுதிகளுக்கும் வழமைக்கும் மிகப் பெரிய இடைவெளியுண்டு.

கமலா ஹரிஸ் ரம்ப்பின் வார்த்தை பிரயோகங்களைத் தனக்கு சாதகமாக்கி பிரச்சாரம் செய்கின்றார். ஆனால், அமெரிக்க தெற்கு எல்லையில் குவியும் அகதிகள் என்றுமே மனிதாபிமான முறையில் நடத்தப்படவில்லை என்ற குற்றச் சாட்டு கமலா ஹரிஸ் மீதும் வைக்கப்பட்டுள்ளது.

டொனால்ட் ரம்ப் தான் பதவிக்கு வந்தால் அமெரிக்கா இறக் குமதி செய்யும் பொருட்களுக்கு பத்து வீத சுங்க வரியை விதிப்பேன் எனக் கூறியுள்ளார். அதே போல் சீனாவிற்கு அறு பது வீத சுங்க வரி எனத் தெரிவித்துள்ளார். பொருளியல் அறி ஞர் Michael Pettis ரம்ப்பின் கருத்தை வரவேற்கின்றார். மைக்கல் பெட்டிஸ் பீக்கிங் பல்கலைக்கழகத்தில் நிதியியல் பேராசிரியராக கடமையாற்றுகின்றார். இருபது வருடங்களா கச் சீனாவில் வாழ்ந்து வருகின்றார். இவரது கருத்தின்படி, சுங்க வரி (tariff) அதிகரிப்பு அமெரிக்காவிற்கு சாதகமாகவே அமையும். இரு கட்சிகளும் சீனாவிற்கு எதிராகச் சுங்கவரி அதிகரிப்பையே ஆயுதமாகப் பாவிக்கின்றனர். சுங்க வரி அதிகரிப்பு உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும். ஆனால் தொழிலாளர்கள் வேதனம் அமெரிக்காவில் அதிகமாக உள் ளமையினால் பொருட்களின் விலை அதிகமாகும். அதற்குப் புதிய தொழில்நுட்பம் உதவி செய்யும். அதனால் வேலை யின்மை அதிகரிக்கும். ஒட்டு மொத்தத்தில் ரம்பின் கருத்து உலகமயமாதலைத் திரும்பப் பெறுதலாகும். அமெரிக்க கடனை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமாயின் இறக்கும

தியை குறைக்க வேண்டும். இதற்கு நவ-தாராளவாத முதலாளிகள் ஒத்துக்கொள்ள வேண்டும். அவர்களின் நிதியிலேயே ரம்பின் தேர்தல் பிரச்சாரம் நடைபெறுகின்றது.

ரம்ப் முன்வைக்கும் பொருளதார மற்றும் வெளியுறவுக் கொள்கைகளை பற்றிய கருத்து - எதிர் கருத்து விவாதங்களை பெரும்பாலான ஊடகங்கள் தவிர்த்துள்ளன. ஒரு செய்தியாகவும், ரம்ப்க்கு எதிரான விமர்சனமாகவும் மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளன. அண்மைக் காலங்களாக ஊடகங்கள் முக்கிய பிரச்சினைகளான பொருளாதாரம், குடிவரவாளர்கள் போன்ற பிரச்சினைகள் பற்றிய வேட்பாளர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், வேட்பாளர்களின் தனிப்பட்ட கருத்துக்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஊசலாடும் மாநிலங்கள் பென்சலவேனியா, ஜோர்ஜியா, நோர்த் கரோலினா, மிச்சிக்கன், அரிசோனா, விஸ்கொன்சின், நிவேடா ஆகியவற்றின் நிலவரங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

இது வரையில் நான்கு முன்னால் ஜனாதிபதிகள் ஒருமுறை தோல்வியுற்றபின் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டுள்ளார்கள் (ஒரு தடவை ஜனாதிபதியாக இருந்து, பின்னர் தோல்வி கண்டு, மீண்டும் தேர்தலில் போட்டியிடுவது) Van Buren (1841), Fillmore (1853), Roosevelt (1909), Cleveland (1889) ஆகிய நால்வரே அவர்கள். இதில் முதல் மூவரும் மீண்டும் தோல்வி கண்டுள்ளார்கள். Cleveland மட்டுமே வெற்றி பெற்றுள்ளார். அந்த வரிசையில், ரம்ப்ம் இதில் வெற்றி பெற்றவராக சேர்க்கப்படுவாரா ?

எம்.ஜி.ஆர் பாணியில் மக்டொனால்ட்டில் உருளைக் கிழங்கு பொரியலை விற்பனை செய்துள்ளார் டொனாலட் ரம்ப். Feasterville-Trevose, Pennsylvania-இல் உள்ள மக்டொனாலட் உணவகத்துக்குச் சென்ற டொனால்ட் ரம்ப். வாகனத்தின் ஊடாக வருபவர்களுக்கு உணவு விநியோகிக்கும் பகுதிக்குச் சென்று உணவு விநியோகித்தார். டொனால்ட் ரம்ப் தனது வாக்கு வங்கியை அதிகரிக்க ஆபிரிக்க அமெரிக்கர்கள் மீதும் கவனம் செலுத்தி வருகின்றார். பிந்திய ஊடகச் செய்திகளின்படி ஆபிரிக்க அமெரிக்கர்கள் மத்தியில் ரம்ப்பின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. ஒரு புறத்தில் குடிவரவாளர்களைப் பற்றிய வெறுப்புகளை உமிழ்ந்து வாக்குகளைப் பெறுகின்றார். மறுபுறத்தில் நான் உங்கள் தோழன் பாணியில் ஆபிரிக்க அமெரிக்கர்களை அணுகுகின்றார்.

பொதுவாக கருத்துக் கணிப்புக்களை விட ரம்ப்பின் வாக்குகள் அதிகமாகவேயிருக்கும். ரம்ப்பின் தேர்தல் அணுகுமுறையும், அமெரிக்க மக்களின் மனோநிலையும் ஒத்துள்ளதால் வெற்றிக்கு அருகே டொனால்ட் ரம்ப் உள்ளார் என்பது உண்மை.

கமலா ஹரிசைப் பொறுத்தவரை அவர் ஒரு திடீர் வேட்பாளர். ஏற்கனவே பைடனின் அணுகுமுறையை 43 வீத அமெரிக்கர்கள் மட்டுமே ஆதரித்தார்கள். இதற்கு முன்னர் உதவி ஜனாதிபதியாகவிருந்து போட்டியிட்டவர்களில் (Humphrey, Nixion, Gore, Bush) இவருக்கே மக்கள் ஆதரவு குறைவாகவுள்ளது. கோர் போட்டியிட்டபோது கிளின்டனுக்கு மக்கள் செல்வாக்கு அறுபது வீதமாகவிருந்தது. கமலா ஹரிஸ் மக்கள் செல்வாக்கை அதிகரிக்க வேண்டிய தேவை அவசியமாக உள்ளது. டொனால்ட் ரம்ப்பைப் போன்ற வேட்பாளரை இலகுவாக வெற்றிகொள்ள முடியாது. டொனால்ட் ரம்ப் பொய்யை மெய்யாக மாற்றக்கூடியவர். எச்செயலையும் தனக்கு சாதகமாக்கக் கூடியவர்.

Fox tv-க்கு கமலா ஹரிஸ் அளித்த செவ்வியில் தான் பைடனின் அரசு போல் செயற்படமாட்டேன், எனது வழி தனி வழி எனவும் கூறிப்பார்த்துள்ளார். செல்வாக்கு அதிகரிப்பு என்பது கடினமாகவேயுள்ளது. குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் லிஸ் செனியை (Liz Chenny) தனது பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்துகின்றார். ஆனாலும் கமலா ஹரிஸ் தனது கொள்கைகளை வாக்குகளாக மாற்ற முடியாமல் திண்டாடுகின்றார். பைடனின் நிழலாக இவர் பார்க்கப்படுகின்றார். பைடனின் அரசு செய்த தவறுகள், செய்ய முடியாமல் போனவற்றிற்கும் இவர் பலிக்கடாவாகியுள்ளார். உதவி ஜனாதிபதியாகவிருந்த போது தான் ஜனாதிபதி வேட்பாளராக மாறுவேன் எனத் தெரிந்திருந்தால் அதற்கேற்ப இவர் மாறியிருப்பார் அல்லது மாற்றப்பட்டிருப்பார். ஆனால், டொனால்ட் ரம்ப் 2020-லேயே தான் மீண்டும் போட்டியிடுவேன் என உறுதியாக இருந்தமையினால் அவரது திட்டமிடல் ஆபத்தாக மாறியுள்ளது. அவர் தனக்கு எதிரான வழக்குகளைச் சந்தித்தும் வருகிறார், தொடர்ந்தும் ஜனநாயகக் கட்சியினர் தன்னைப் பலிக்கடாவாக்கியுள்ளார்கள் என்ற கருத்தை தெரிவித்தும் வருகிறார். 2020-ம் ஆண்டுத் தேர்தலில் ஜனநாயகக் கட்சியினர் தனது வெற்றியைப் பறித்துக் கொண்டார்கள் என்றே இன்று வரை கூறிவருகின்றார். மைக் பென்ஸ் ரம்ப் தோல்வியடைந்துள்ளார், பைடனிடம் அமெரிக்காவைக் கையளியுங்கள் என வெளிப்படையாகவே ரம்ப்பிடம் கூறியுள்ளார். ஆனால் கமலா ஹரிஸ் பைடனின் உடல் நிலையைப் பற்றி வெளிப்படையாக எதுவும் கூறவில்லை. இது போன்ற விடயங்கள் கமலா ஹரிஸ் மீதான நம்பிக்கைத்தன்மைக்கு எதிராகவே பார்க்கப்படுகின்றன.

கமலா ஹரிஸ் ஒரு பெண் வேட்பாளர். அவரது நிறம் வெள்ளையல்ல. அவரது பெற்றோர் இந்திய-ஆபிரிக்க அமெரிக்கர். இம்மூன்றும் இவருக்கு எதிராகவே இத்தேர்தலில் உள்ளது. அண்மைக் காலங்களில் ஒபமாவைத் தொடர்ந்து ரிசி சுனாக் போன்றோரின் வருகை மேற்கு நாடுகளில் உள்ள வெள்ளை இனத்தவருக்கு பிடிக்கவில்லை என்பது நிதர்சனமான உண்மை. ஜேர்மனியில் தோன்றியுள்ள ஏ.டி.எப் ரம்ப்பின் பாணியில் குடிவரவாளர்களை வெளியேற்றுவேன் எனக் கூறித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. ரம்ப்பின் குடிவரவாளர்களுக்கு எதிரான பிரச்சாரத்தின் ஒரு குறி கமலா ஹரிசு மாகும். கமலா ஹரிசின் பெற்றோர் குடிவரவாளர்கள்.

### கருத்துக் கணிப்பு முடிவுகள் சில:

கீழேயுள்ளவை சில கருத்துக் கணிப்பு முடிவுகள். கருத்துக் கணிப்புகளுக்கு மாறாகவே டொனால்ட் ரம்ப் செயற்படுவார். கருத்துக் கணிப்புகளில் வாக்களித்தவர்கள், தேர்தலில் வாக்களிக்காமல் போகலாம். எனவே, கருத்துக் கணிப்புகள் ஒரு மாதிரியேயாகும். பல தடவைகள் கருத்துக் கணிப்புகளுக்கு

எதிரானதாகவே முடிவுகள் வெளிவந்துள்ளன.

கமலா ஹரிஸ் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரச்சாரம் செய்தாலும் மக்கள் மத்தியில் அவரால் ஒரு அதிரலையை ஏற்படுத்த முடியவில்லை. ஏன் டொனால்ட் ரம்ப் ஜனாதிபதியாவதற்கு தகுதியற்றவர் என்பதனை வெளிப்படுத்த முடியவில்லை. அதே சமயம் தனது தகுதிகளையும், தன்னால் ஒரு சிறந்த ஜனாதிபதியாக இருக்க முடியும் என்பதனையும் கூட முறையாக அவர் பதிவு செய்யவில்லை. இங்கு, தேர்தல் என்பது ஒரு வியாபாரம். வேட்பாளர்கள் தங்களை முறையாக விற்பனை செய்தால் வாக்குகள் கிடைக்கும். டொனால்ட் ரம்ப்பைப் பொறுத்தவரை அவர் இயல்பாகவே ஒரு சிறந்த வியாபாரி. தேர்தலும் சரி, நாடும் சரி அவருக்கு ஒரு வியாபாரமே.

புதிய ஜனாதிபதியின்முன் பல சவால்கள் காத்திருக்கின்றன. நடைபெற்றுக்கொண்டிருக்கும் போர்கள் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாகவே அமைகின்றன. ரஷ்யா - உக்ரேன், பாலஸ்தீனியம்-ஹமாஸ்-ஹிஸ்புல்லா-ஈரான்-கூதிகள்-இஸ்ரேல், புதிதாக தோன்றியுள்ள சூடான் பிரச்சினைகள் என பல்வேறு பிரச்சினைகளுக்கு அமெரிக்கா முகங்கொடுத்து வருகின்றது. தென் சீனக் கடலில் அமெரிக்க ஆதிக்கத்துக்கு சவால்விடும் சீனா, சீனா-பிலிப்பைன்ஸ் சிக்கல்கள், சீன-யப்பான் சிக்கல்கள், வெனிசூலாவின் இடதுசாரி ஆட்சியாளர், இவற்றைவிட சீனாவினால் அமெரிக்காவிற்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள், நேட்டோவின் சமநிலையின்மை, அமெரிக்காவின் பொருளாதாரத் தேக்கம், வட்டி வீதத்தை குறைக்க அமெரிக்க மத்திய வங்கி முன் உள்ள நெருக்கடிகள், அமெரிக்காவினுள் தெற்கு எல்லையினூடாக உள்ளே வரும் குடிவரவாளர்கள் போன்ற பல சிக்கல்களுள், புதிதாக தோன்றி வளர்ந்து வரும் பிறிக்ஸ் அமைப்பினால் அமெரிக்க டொலருக்கு ஏற்படும் மதிப்பிறக்கம் போன்ற பல சவால்களுடன் புதிய உலக முதன்மை வல்லரசுகளாக மாற்றம் பெறும் ரஷ்யா, சீனா போன்ற பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் தேர்வு பெறும் ஜனாதிபதியுள்ளார். அவ்வகையில் டொனால்ட் ரம்ப்பும், கமலா ஹரிஸும் அமெரிக்காவை மீண்டும் உயரத்துக்கு கொண்டு செல்வார்கள் என்பது ஐயமேயாகும். டொனால்ட் ரம்ப் பதவிக்கு வந்தால் மேற்கு நாடுகளுக்கும் அமெரிக்காவிற்குமிடையில் ஒரு இடைவெளி ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ளது. நேட்டோவின் எதிர்காலமும் கேள்விக்குறியாகலாம். ஆயினும் அமெரிக்க மக்கள் அவரையே அதிகம் விரும்புகின்றார்கள்.

வழமையாக தேர்தல் திகதி நெருங்கும் போது முக்கிய பத்திரிகைகள் தங்களது வேட்பாளர் தெரிவை பதிவு செய்வார்கள். ஆனால், வோசிங்ரன் போஸ்ட் மற்றும் லொஸ் ஏஞ்சல் ரைம்ஸ் ஆகிய பத்திரிகைகள் இம் முறை தங்களது விருப்பு வேட்பாளர்களை பதிவு செய்யவில்லை. வோசிங்டன் போஸ்ட் பத்திரிகை நிறுவனம் Jeff Bezos-க்குரியது. வோசிங்டன் போஸ்ட் பத்திரிகையை Jeff Bezos வாங்கியிருந்தார். வோசிங்டன் போஸ்ட் ஆசிரியர் குழு கமலா ஹரிசை தங்களது விருப்பு வேட்பாளராக பதிவு செய்ய விரும்பியிருந்தார்கள். ஆனால், உலகின் இரண்டாவது மிகப் பெரிய செல்வந்தரும், அமேசன் நிறுவனத்தை ஆரம்பித்தவருமான Jeff Bezos எவரையும் விருப்பு வேட்பாளராக பதிவு செய்ய வேண்டாம் என கட்டளையிட்டார். இதனைத் தொடர்ந்து இரண்டு லட்சம் டிஜிட்டல் சந்தாக்கரர்கள் சந்தாவை நிறுத்திவிட்டார்கள். ஆனால் ஏற்கனவே போஸ்ட் 'A Second Trump term might injure the democratic experiment beyond recovery' என ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தது. போஸ்ட் முதலாளியின் நடவடிக்கையை எதிர்த்து போஸ்ட்ன் இரண்டு பத்தி எழுத்தாளர்கள் தங்களது வேலையிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்கள். போஸ்ட் முதலாளியின் முடிவுக்கான காரணம் டொனால்ட் ரம்ப் பதவிக்கு வந்தால் Jeff Bezos-இன் வணிக முயற்சிகளுக்கு தடையாகவிருப்பார் என்பதாகும். இவர் முன்னர் அமேசனின் தலைவராக இருந்தபோது அரச ஒப்பந்தம் ஒன்றை ரம்ப்ன் அரசு ரத்துச் செய்தது.

போஸ்ட்டைப் போன்று லொஸ் ஏஞ்சல் ரைம்ஸ் பத்திரிகையும் தனது விருப்பு வேட்பாளரை பதிவு செய்யவில்லை. லொஸ் ஏஞ்சல் ரைம்ஸ்ம் ஒரு செல்வந்தருக்கு சொந்தமான நிறுவனம். Patrick Soon-Shiong ரைம்ஸ் நிறுவன அதிபர். இவர் தென் ஆபிரிக்காவில் பிறந்த இரட்டைக் குடியுரிமை கொண்டுள்ள அமெரிக்கர். லொஸ் ஏஞ்சல் ரைம்ஸ்ம் கமலா ஹரிசை விருப்பு வேட்பாளராக அறிவிக்க முற்பட்ட போதே நிறுவன அதிபர் தடுத்துள்ளார். இதனையடுத்து ஆசிரிய தலையங்க ஆசிரியர் (The editorials editor ) Mariel Garza தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். 'I am resigning because I want to make it clear that I am not OK with us being silent', 'In dangerous times, honest people need to stand up. This is how I'm standing up' எனத் தெரிவித்துள்ளார்.

இவ்விரண்டு பத்திரிகை நிறுவன அதிபர்களின் நடவடிக்கை ஊடகங்களின் சுதந்திரத்தை கேள்விக்குள்ளாக்குகின்றது. மிகப் பெரும் நிறுவனங்களே இத்தேர்தலை நேரடியாக கட்டுப்படுத்துகின்றன. தீர்மானங்களை மேற்கொள்கின்றன என்பதனை வெளிப்படுத்துகின்றது. Elon Musk, டொனால்ட் ரம்ப்க்கு நேரடியாகவே பிரச்சாரம் செய்கின்றார். இவர் கமலா ஹரிசை குறிவைத்து சொல்லியுள்ளவை இது 'Nobody even bothers to try to kill Kamala', Mr. Musk said on Saturday night at a town-hall-style event in Lancaster, Pa., to scattered laughter. 'It's pointless. Why ? They'll just get another puppet'.

இத்தேர்தலில் யார் வெற்றி பெறப்போகின்றார்கள் என்பது முக்கியமல்ல. யார் வெற்றி பெற்றாலும் மிகப் பெரிய நிறுவனங்களே ஆட்சியாளர்கள்.

குடியரசா ? ஜனநாயகமா ?

கார்ல் மார்க்ஸ் கல்லறையிலிருந்து எழுந்து நிற்கின்றார்.

https://www.cnn.com/2024/10/16/politics/fundraising-takeaways-elon-musk-billionaires-trump/index.html



rathan@thaiveedu.com

# சர்வதேச மாற்று ஊடகம் 'அல் ஜசீரா' : தோற்றம், வளர்ச்சி, வகிபாகம்
## ஊடகம் மீதான இஸ்ரேலின் தடையை முன் வைத்து ஒரு நோக்கு!

– ரூபன் சிவராஜா

**உலகளாவிய மாற்று ஊடகமான அல்–ஜசீராவின் அடைவு என்பது அபாரமானது. சர்வதேச ஊடகவியலுக்கு அது பெரும் பங்களிப்பினைச் செய்துள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. அதன் பங்களிப்பு என்பது ஊடகங்களின் பார்வை – வெளிப்படுத்தற் கோணம் மற்றும் முன்னோக்குகள் குறித்த புதியதும் வலுவானதுமான விழிப்புணர்வு. சர்வதேச நிகழ்வுகளின் போக்கு, தீர்மானங்கள், விளைவுகள் ஒற்றைப்பரிமாணம் கொண்டவை அல்ல. பல்பரிமாணம் கொண்டவை என்பதையும் தன் ஊடகப் பங்களிப்பின் ஊடாக அல்–ஜசீரா மெய்ப்பித்து வருகின்றது.**

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் (ரமெல்லா) அல்-ஜசீரா ஊடக மையத்தினை இஸ்ரேல் படைகள் முற்றுகையிட்ட சம்பவம் செப்ரெம்பர் இறுதியில் (22.09.24) இடம்பெற்றுள்ளது. கனரக ஆயுதங்கள், முகமூடிகள் சகிதம் இஸ்ரேல் படைகள் ஊடக அலுவலகத்திற்குள் பிரவேசித்துள்ளன. அல்-ஜசீரா ஊடக மையத்தின் வாசற்கதவைக் குண்டு வைத்துத் தகர்த்து உள்நுழைந்து, பத்து நிமிட அவகாசம் மட்டுமே கொடுத்து அலுவலகத்தினை மூடுமாறு உத்தரவிடப்பட்டு, அங்கிருந்து ஊடகப் பணியாளர்கள் வெளியேற்றப்பட்டனர். அனைத்து ஊடகக் கருவிகள், ஒளிப்பட, காணொளி, செய்மதிக் கருவிகள் உட்பட ஆவணங்களையும் பறிமுதல் செய்துள்ளனர். ஆவணங்களையும் அழித்துவிட்டிருக்கக்கூடும் என அந்நிறுவனம் அச்சம் வெளியிட்டிருந்து.

அல்-ஜசீரா மீதான இஸ்ரேலின் அத்துமீறலை முன்வைத்து உலகளாவிய மாற்று ஊடகமாக அல்-ஜசீராவின் தோற்றம், வளர்ச்சி, சமகால வகிபாகம் குறித்த அம்சங்களில் இக்கட்டுரை பார்வையைச் செலுத்துகின்றது. உலகளாவிய மாற்று ஊடகமாக அல்-ஜசீராவின் அடைவு, சர்வதேச ஊடகவியலுக்கு அதன் பங்களிப்பு, குரலற்றவர்களினதும் மேற்கின் மைய ஊடகங்கள் சொல்ல மறக்கின்ற, மறுக்கின்ற நிகழ்வுகளைப் பேசுகின்ற அதன் ஊடகநெறி குறித்தும் இக்கட்டுரை கவனம் செலுத்துகின்றது.

### சர்வதேச மாற்றுக் குரல்:

அமெரிக்க, ஐரோப்பிய ஊடக மேலாதிக்கங்கள் மட்டுமல்ல, இஸ்ரேல் மற்றும் அரபு நாடுகளின் சர்வாதிகார ஆட்சிபீடங்களும் அல்-ஜசீராவையும் உலகளாவிய மாற்றுக் குரல் என்ற அதன் வகிபாகத்தையும் வளர்ச்சியையும் கண்டு அஞ்சுகின்றன. குரலற்றவர்களின் குரல், செய்தி ஆய்வுகள், செய்தியின் மறுபக்கம் எனவாக, குறிப்பாகப் பலஸ்தீன மக்கள் சார்ந்து உண்மைக்கு நெருக்கமான செய்திகள், தகவல்கள், ஒளிப்படங்கள், காணொளி ஆவணங்களை அல்-ஜசீராதான் அதிகம் வெளியிட்டு வந்துள்ளது.

ஊடகங்கள் மீதான, குறிப்பாக அல்-ஜசீரா மீதான இஸ்ரேல் அரசாங்கம் மற்றும் படைகளின் இத்தகைய நடவடிக்கைகள் புதியவை அல்ல. இந்த நடவடிக்கை எதிர்பாராத ஆச்சரியமுமல்லை. இந்த ஆண்டு (2024) மே மாதம் இஸ்ரேலுக்குள் அல்-ஜசீரா இயங்கக்கூடாது, அங்கிருந்து செய்திகளை வெளியிடக்கூடாது, ஒலி-ஒளிபரப்புகளை மேற்கொள்ளக்கூடாது என இஸ்ரேல் தடைவிதித்திருந்தது. 45 நாட்களுக்கான தற்காலிக தடையாக அது கொண்டுவரப்பட்டது. ஆனால் அது புதுப்பிக்கப்பட்டுத் தற்போது இஸ்ரேலுக்குள் இருந்தவாறு அல்-ஜசீரா ஊடகவியலாளர்கள் செயற்பட முடியாதபடி தடை நீடிக்கப்பட்டுள்ளது. தடையுத்தரவு தெல் அவிவ் (Tel Aviv) நீதிமன்றம் ஒன்றினாற் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

### இஸ்ரேலின் அவதூறும் தடையும்:

அல்-ஜசீரா ஊடகம் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகளினது ஊதுகுழல் எனவும் தாம் எதிரியின் ஊடகங்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுப்போம் எனவும் இஸ்ரேலின் ஊடக அமைச்சர் ஷ்லோமோ கர்ஹி (Shlomo Karhi) தெரிவித்திருந்தார். தடையுத்தரவிற்கு எதிரான உச்சநீதிமன்ற மேன்முறையீட்டில் தாம் ஒருபோதும் வன்முறையையோ பயங்கரவாதத்தையோ தூண்டவில்லை என்றும் இத்தடையுத்தரவு நியாயமற்றது எனவும் அல்-ஜசீரா தெரிவித்திருந்தது.

அல்-ஜசீரா தொலைக்காட்சிச் சேவையின் உபகரணங்களைப் பறிமுதல் செய்வதற்கான அரசாங்க உத்தரவினைத் தகவல் தொடர்பு அமைச்சர் ஷ்லோமோ கர்ஹி இஸ்ரேலிய ஊடகங்களுக்கு (மே 2024) தெரிவித்திருந்தார். ஒளிப்பட-காணொளிக் கருவிகள், படத்தொகுப்பு உபகரணங்கள், ஒலிவாங்கிகள், கணினிகள், வயர்லெஸ் உபகரணங்கள்,




தொலைபேசிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. அல்-ஜசீரா மட்டுமல்ல, காசா பகுதியில் இஸ்ரேலின் போர் தொடர்பாக 'தேசிய பாதுகாப்புக்கு' அச்சுறுத்தலாக கருதப்பட்டால், வெளிநாட்டு ஒளிபரப்புகளை தற்காலிகமாக மூடுதவற்கு அனுமதி வழங்கும் சட்டமும் இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஊடகங்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிராக இந்தவகையில் திட்டமிட்டுத் தாக்குவதென்பது உண்மையை குழிதோண்டிப் புதைப்பதையும் வெளியுலகத்திற்கு உண்மைகள் சென்றடைவதைத் தடுப்பதையும் இலக்காகக்கொண்ட செயல் என்கிறார் அல்-ஜசீராவுக்கான மேற்குக்கரைப் பொறுப்பாளர் வாலிட் அல்-உமாரி (Walid Al-Omari).

சர்வதேச ஊடகவியலாளர்கள் காசாவிலிருந்து சுதந்திரமாகச் செய்திகளை வெளியிட இஸ்ரேலியப் படைகள் அனுமதிப்பதில்லை. கடந்த ஆண்டு (2023) ஒக்ரோபர் காசா மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் போர் தொடங்கியதிலிருந்து இற்றைவரையான ஓராண்டுக்குள் மட்டும் 173 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அல்-ஜசீராவின் ஊடகவியலாளர்களிற் பலரும் இதுவரை இஸ்ரேலியப் படைகளாற் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் 20 ஆண்டுகாலப் போரின்போது கிட்டத்தட்ட இதன் மூன்றில் ஒரு எண்ணிக்கையிலான (63) ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர்.

## சாட்சியங்களை அழித்தல்:

காசா மக்கள் மீது இஸ்ரேல் கண்மூடித்தனமாக நடத்திவரும் இன அழிப்புப் போரினைத் தமது நேரடிப் பிரசன்னம் மூலம், அதாவது காசாவில் தங்கியிருந்தவாறு வெளியுலகத்துக்கு அறியச்செய்தும் ஆவணப்படுத்தியும் வரும் வெகுசில ஊடகங்களில் அல்-ஜசீரா முதன்மையானது.

சாட்சியங்கள் இல்லாமல் இன அழிப்பினைத் தொடர்வது என்ற இஸ்ரேலின் இலக்கிற்கு அல்-ஜசீரா மிகப்பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. அவ்வூடகம் மீதான இஸ்ரேலின் தொடர் முடக்க முனைப்புகளுக்கான காரணியும் இதுவே. உலக ஊடக அமைப்புகள் பத்திரிகைச் சுதந்திரம் மீதான மோசமான தாக்குதல் என இஸ்ரேலின் இச்செயலை வன்மையாகக் கண்டித்துள்ளன. அல்-ஜசீராவுக்கு மட்டுமல்ல, பொதுவாகவே இஸ்ரேல் அரச இயந்திரம் ஊடகங்களின் வகிபாகத்தை துளிகூட மதிப்பதில்லை என்பதற்கான பல உதாரணங்களில் இதுவும் ஒன்று. ஊடகக் குரல்வளையை நெரிப்பதென்பது பலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் இன அழிப்பின் நீண்டகாலக் கொள்கைத் திட்டத்தின் ஓர் அங்கம்.

## ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் திட்டமிட்ட இலக்கு:

அல்-ஜசீராவின் ஊடகரான இஸ்மாயில் அல்-கோவுல் மற்றும் சமெர் அபுடக்கா ஆகியோர் கொல்லப்பட்டனர். அதன் அரபு நிருபரான இஸ்மாயில் அபு உமர் பெப்ரவரி மாதம் இஸ்ரேலிய தாக்குதலில் படுகாயமடைந்தார். அல்-ஜசீரா ஊடகவியலாளர்களுக்கு எதிரான இஸ்ரேலியப் படைகளின் தாக்குதல் 2023-ல் தொடங்கப்பட்ட காஸா மீதான போருக்கு முன்னரே பல தடவைகள் நடந்துள்ளன. 2022-ஆம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையின் ஜெனின் (Jenin) பிரதேசத்திலிருந்து செய்தியாளராகச் செயற்பட்ட மூத்த ஊடகர் சிறீன் அபு அக்லே விமானத் தாக்குதலிற் கொல்லப்பட்டார்.

2021-ல் காசாவில் அல்-ஜசீரா உள்ளிட்ட சர்வதேச ஊடக அலுவலகங்கள் இயங்கி வந்த கட்டடம் இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் தரைமட்டமாக்கப்பட்டது. 11 மாடிக்கட்டடம் இடிந்து விழுந்து தரைமட்டமாகிய காட்சியின் நேரலைக் காணொளி அக்காலப்பகுதியில் அல்-ஜசீராவினால் வெளியிடப்பட்டிருந்தது. காசாவிலிருந்த தொலைத்தொடர்புக் கோபுரத்தைக் இஸ்ரேல் குண்டுவீசித் தாக்கியது.

## அல்–ஜசீரா
## தோற்றமும் வளர்ச்சியும் வகிபாகமும்:

அல்-ஜசீரா 1996-ம் ஆண்டு நிறுவப்பட்ட ஓர் ஊடகக் குழுமம். இது கட்டார் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஊடகக் கூட்டுத்தாபனம். மேற்குலக ஊடகங்கள் மற்றும் அவற்றின் ஊடக மேலாதிக்கத்திற்குப் போட்டியான ஒரேயொரு உலகளாவிய மாற்று ஊடகமாகவும் கணிக்கப்படுகின்றது. மேற்கின் மைய ஊடகங்கள் சொல்ல மறக்கின்ற, சொல்லாமல் மறைக்கின்ற உலக நிகழ்வுகளைப் பேசத் தொடங்கியது. பலவீனமான குழுக்கள் பேசுவதற்குரிய களமாகவும் சர்வதேச ரீதியில் எதிர்ப்பின்-குரலாகவும் இயங்குவதை ஊடக நெறியாகக் கொண்டுள்ளது. செய்திக் களங்களில் பரந்தளவிலான நேரடிப் பிரசன்னம், உள்ளூர் ஊடகவியலாளர்களைப் பரந்தளவிற் கொண்டிருத்தல், மாற்று செய்தி ஆதார வலைப்பின்னல்களைக் கொண்டிருத்தல், அரேபியச் சகோதர தொலைக்காட்சிச் சேவைகளுடன் நல்லுறவும் ஒத்துழைப்பும் என்பன அதன் தனித்துவ அம்சங்கள்.

11 செப்ரெம்பர் (2001) தாக்குதல்களுக்குப் பின், அல்கைடா தலைவர் ஒசாமா பின்லாடனின் உரைக் காணொளியை அல்-ஜசீரா ஒளிபரப்பியபோது, அதுவே அதனைச் சர்வதேச அளவில் பிரபலப்படுத்திய முதல் நிகழ்வு. மேற்கின் மைய ஊடகங்களுக்கு மாறாக, அல்-ஜசீரா பயங்கரவாதத்திற்கு எதிரான போரைப் பொதுமக்களின் பார்வையிற் பிரதிபலித்தது. அமெரிக்காவின் எதிரிகள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளக் களம் கொடுத்தது. அமெரிக்கா தலைமையிலான கூட்டணியின் இராணுவ மற்றும் மூலோபாயத் தோல்விகளையும் அம்பலப்படுத்தியது.

2008-2009 காலப்பகுதியில் காசா போரின் செய்திகளை வெளிக்கொணர்வதில் ஓர் ஊடகமாக அல்-ஜசீரா பெரும் முன்னேற்றம் கண்டது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அரபு வசந்தத்தின் முதல் கட்டத்தின் போது பரந்த மக்கள் அணிதிரட்டலுக்கான ஒரு முக்கிய தளமாக மாறியது. அதாவது 2010-2011-ல் எழுச்சிபெற்ற ‘அரபு வசந்தம்’ மக்கள் போராட்டங்களை ஆதரித்து வெளிக்கொணர்வதில் அல்-ஜசீரா முதன்மைப் பங்குவகித்தது. அரபு வசந்தம் என்பது 2010-2011 காலப்பகுதியில் வட-ஆபிரிக்காவின் பல நாடுகளிலும் பின்னர் மத்திய கிழக்கிலும் நிகழ்ந்த மக்கள் எழுச்சிகளுக்கான ஒரு கூட்டுச்சொல். மேலும் இது பல நாடுகளில் அரசியல் மாற்றங்களுக்கு வழிவகுத்தது. பல நாடுகளின் ஆட்சி பீடங்களைக் கவிழ்த்து ஆட்சிமாற்றங்களுக்கு வழிகோலியது. துனிசியா, எகிப்து மற்றும் லிபியாவில் ஆட்சி மாற்றம், ஜெமனில் அரச தலைவர் மாற்றம் ஆகியவை அடங்கும்.

பெப்ரவரி 2022-ல் தொடங்கி இன்றுவரை தொடர்ந்துகொண்டிருக்கும் ரஷ்ய - உக்ரைன் போர் சார்ந்தும் நிகழ்வுகளை ஆழமாகவும், ஊடகம்சார் நடுநிலைக் கண்ணோட்டத்திலும் அல்-ஜசீரா வெளிப்படுத்திவருகின்றது.

## சர்வாதிகார ஆட்சிபீடங்கள் அச்சம்:

அரபு உலகின் சர்வாதிகார ஆட்சிபீடங்களை அல்-ஜசீராவின் வெளிக்கொணரல்கள் அச்சுறுத்தின. ஒரு தொலைக்காட்சி நிறுவனமாக அல்-ஜசீராவின் சுயாதீனப் போக்கும் வளர்ச்சியும் தேசிய ஊடகங்களை முழுமையாகக் கட்டுப்படுத்தும் போக்கினைக் கடைப்பிடிக்கின்ற பல அரபு நாடுகளைச் சீற்றம்கொள்ள வைத்தது. 2017-ம் ஆண்டு, சவூதி அரேபியா, ஜோர்டான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைன் உட்பட நாடுகள் அல்-ஜசீரா நிலையத்தை மூடுமாறு கோரின. வணிகத் தடை, புறக்கணிப்புகள் மூலம் கட்டாருக்கு எதிரான தண்டனை நடவடிக்கைகளையும் அமுல்ப்படுத்தின. கெய்-ரோவில் உள்ள அல்-ஜசீராவின் அலுவலகத்தை பல ஆண்டுகளுக்கு முன்பே எகிப்த்து மூடியது.

அரபு நாடுகள் மட்டும் அல்-ஜசீராவின் ஒளிபரப்புகளுக்கு எதிராகச் சீற்றமுற்று எதிர்வினையாற்றவில்லை. இஸ்ரேல் 2017-ம் ஆண்டு முதல் அல்-ஜசீராவின் செயற்பாடுகளை நிறுத்துமாறு பலமுறை அச்சுறுத்தியுள்ளது. 2024 ஏப்ரல் மாதம் இஸ்ரேலில் அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் தொலைக்காட்சி நிலையத்தைத் தடைசெய்வதற்கான தீர்மானம் நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. சர்வதேசத்தின் வலுவான எதிர்ப்புகளுக்கு மத்தியில் அத்தீர்மானம் மே மாதத்திலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டது.

## கண்டனம்:

‘மனித உரிமைகள் மற்றும் தகவல்களை அணுகுவதற்கான அடிப்படை உரிமையை மீறும் குற்றச் செயல்’ எனத் தமக்கெதிரான இஸ்ரேலின் தடை உத்தரவினை அல்-ஜசீரா கண்டித்திருந்தது. ‘பத்திரிகைச் சுதந்திரத்தினைத் தொடர்ந்து ஒடுக்கும் இஸ்ரேலின் முனைப்புகள், காசா மீதான அதன் நடவடிக்கைகளை மறைக்கும் முயற்சி என்பதோடு சர்வதேச மற்றும் மனிதாபிமான சட்டத்திற்கு முரணானது’ என்றும் 2024 மே மாதம் ஓர் அறிக்கையில் அல்-ஜசீரா சுட்டிக்காட்டியிருந்தது. ஊடகவியலாளர்களை நேரடியாகக் குறிவைத்துத் திட்டமிட்டு அவர்களைக் கொல்வது, கைதுசெய்வது, அச்சுறுத்துவது போன்ற இஸ்ரேலின் தொடர்செயல்கள் அல்-ஜசீராவை அதன் உண்மைகளை வெளிக்கொணரும் அர்ப்பணிப்பிலிருந்து தடுக்காது எனவும் அந்த அறிக்கையிற் குறிப்பிடப்பட்டிருந்தது.

## அல்–ஜசீரா விரிவாக்கம்:

மத்திய கிழக்கு முரண்பாட்டுத் தரப்புகளின் பல்வேறு அச்சுறுத்தல்கள் வணிகப் புறக்கணிப்புகளுக்கு மத்தியிலும் கட்டார் அரசாங்கம் வளைந்துகொடுக்க மறுத்து, அல்-ஜசீராவைப் பாதுகாத்து வந்துள்ளது. 1996-ல் ஆரம்பிக்கப்பட்டபோது அறியப்படாத ஒரு அரபுச் செய்தித் தொலைக்காட்சிச் சேவை என்ற நிலையிலிருந்து, ஒரு வலுவான சர்வதேச ஊடகச் சக்தியாக உருவெடுத்து நிற்கின்றது. தொடங்கப்பட்ட பத்தாண்டுகளிலிருந்து (2006) ஆங்கில ஒளிபரப்புச் சேவையையும் தொடங்கியது. விளையாட்டு, சிறுவர் நிகழ்ச்சிகள், ஆவணப் படங்கள், அரசியல் விவாதக்கள நேரடி ஒளிபரப்புகள் எனப் பல்வேறு இணைச் சேவைகளையும் முன்னெடுக்கின்றது.

இறுதிக் காலங்களிற் பிராந்திய ஊடகச் சந்தையை நோக்கிய செய்திச் சேவைகளையும் தொடங்கியுள்ளது. 2013-இலி

ருந்து ‘அல்-ஜசீரா அமெரிக்கா’ அதில் ஒன்று. வட அமெரிக்க ஊடகப் பரப்பிற்கான ஆங்கிலச் சேவை அது. 2011-இலிருந்து ‘அல்-ஜசீரா பல்கன்’ எனும் பெயரில் சேர்பிய, குறூவாற்சிய மற்றும் போஸ்னிய மொழிகளிலான சேவையையும் தொடங்கியுள்ளது.

1990-களில் அரபு செய்மதிச் செய்திச் சேவைகள் நிறுவப்படுவதற்கு முன்னர், அரச தொலைக்காட்சி மற்றும் வானொலிச் சேவைகள் தீவிரமான தணிக்கைகளுக்கு உட்பட்டன. அரபு தேசங்களில் உள்நாட்டு அதிகாரிகளையும் உயரடுக்கினரையும் விமர்சித்த முதல் அரபு மொழி செய்திச் சேவை அல்-ஜசீரா ஆகும். அல்-ஜசீரா குறித்து ஆய்வாளர்கள் மத்தியில் விமர்சனங்கள் இருப்பினும், அது ஒரு சர்வதேச செய்தி மொழியை அறிமுகப்படுத்தியிருக்கின்றது என்பதில் பரவலான உடன்பாடு நிலவுகின்றது. நேரடி ஒளிபரப்புகள், விமர்சனபூர்வமான நேர்காணல்கள், கூர்மைமிகு விவாதங்கள் மூலம் அத்தகைய புதிய சர்வதேச செய்திமொழியை அல்-ஜசீரா உருவாக்கியிருக்கின்றது என்பது ஆய்வாளர்களின் கணிப்பு. மேலும் அது அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியான பேசாப்பொருட்களைச் சவாலுக்கு உட்படுத்தியும் வருகின்றது.

## அல்–ஜசீரா மீதான விமர்சனங்களும் மதிப்பீடுகளும்:

சில விமர்சகர்கள், அரசுகள், அதன் போட்டி ஊடகங்கள் அதனை ஒரு பரபரப்பான, ஜனரஞ்சக மற்றும் சிறுபத்திரிகைத்தனமானது என விளித்துமுள்ளன. சமரசத்திற்குப் பதிலாக மோதலை விரும்புவதாகவும், மிதவாதக் குரல்களைவிட தீவிரவாதக் குரல்களை அதிகம் கருத்துகளை வழங்க அழைப்பதாகவும் மேற்சொன்ன தரப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

அல்-ஜசீரா செய்தி வழங்கல் ஒரு தனித்துவத்தினைக் கொண்டியங்குகின்றது. முக்கிய செய்திகளுக்கு முதன்மையிடம் கொடுக்கின்றது. மாற்றுக் கோணத்தை முன்வைக்கின்றது. தார்மீக நெறிமுறை மற்றும் அரசியல் எல்லைகளை விரிவுபடுத்துகிறது. பரந்த அளவிற் பல்வேறு எதிர்க்குரல்களுக்கும் அழைப்பு விடுத்துவருகிறது.

இஸ்ரேல்-பலஸ்தீன முரண்பாடு, அமெரிக்காவின் ஆப்கானிஸ்தான் மீதான போர், 2003-ல் இடம்பெற்ற வளைகுடாப் போர் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்கத் தலைமையிலான போர் ஆகியவற்றில் அரபுநிலைப்பட்ட கோணத்திற்கும் பார்வைக்கும் அல்-ஜசீரா முக்கியத்துவம் கொடுப்பதான பார்வையை ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். மேற்சொன்ன முரண்பாடுகள் பற்றிய அதன் வெளிப்படுத்துகை அரபு மக்களின் கோபம் மற்றும் விரக்திகளை நுணுக்கமாகப் பிரதிபலித்தது. இப்புறநிலையே மத்திய கிழக்கு மற்றும் வட-ஆபிரிக்காவில் அல்-ஜசீராவை முதன்மைச் செய்திச் சேவை நிறுவனமாக உயர்த்தியது.

## கட்டார் அரசாங்கத்தின் ஊடகம்:

அல்-ஜசீரா ஊடகச் சேவைக்கு கட்டார் அரசாங்கமே நிதியளிக்கின்றது. எனவே அது நிதிசார்ந்தும் அரசியல் சார்ந்தும் அந்நாட்டின் அரச குடும்பத்தைச் சார்ந்திருக்கிறது. ஊடகக் குழுமத்திற்கு அரச குடும்பம் உரித்துடையதாக இருக்கின்ற புறநிலை ஊடக சுயாதீனத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கக்கூடியது. அரசியல் சீர்திருத்தங்கள் குறித்துப் பல வாக்குறுதிகளைக் கட்டார் வழங்கிய போதும், தொடர்ந்தும் முற்றிலும் முடியாட்சியையே கொண்டிருக்கின்றது. அங்கு உண்மையான கருத்துச் சுதந்திரம் இல்லை என்பது யதார்த்தம். அந்த யதார்த்தத்தின் அடிப்படையில் அல்-ஜசீராவையும் கட்டாரின் வெளியுறவுக் கொள்கையின் பின்னணியில் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

கட்டார் நாட்டின் பரப்பளவு:11,571 சதுர கிமி. அதன் மக்கட் தொகை: 2,7 மில்லியன். இந்தச் சிறிய வளைகுடா நாடு தன்னைச் சர்வதேச வரைபடத்தில் வலுவாக முன்வைப்பதற்கான மூலோபாயங்களில் ஒன்றாகவும் அல்-ஜசீராவைக் கைக்கொள்கின்றது என்ற பார்வையும் நிலவுகின்றது. இதன் பொருள் அல்-ஜசீரா ஒரு பிரச்சார ஊடகம் என்பதல்ல. நீண்ட கால அடிப்படையில் அதன் ஊடகநெறி சுயாதீனமாகப் பேணப்பட்டால் மட்டுமே அதன் வகிபாகம் உலகளாவிய மாற்று ஊடகம் என்ற நிலையைத் தக்கவைக்க உதவும். அதேவேளை சொந்த நாட்டில் நிலவும் அரசியல், சமூக ரீதியான நெருக்கடி நிலைமைகள் குறித்து அல்-ஜசீரா மௌனம் சாதித்து வருவதான விமர்சனங்களும் அதன்மேல் உள்ளன. பொருளாதார ரீதியில் கட்டார் ஒரு பிராந்திய சக்தியாக மாறி வருகின்ற யதார்த்தத்தில் அல்-ஜசீராவின் இந்த மௌனம் ஊடகத்தின் சுயாதீன இயங்குநிலை பேணல் தொடர்பான சவால்களை இன்னும் அதிகரிக்கும்.

## சர்வதேச ஊடகவியலுக்கான பங்களிப்பு:

உலகளாவிய மாற்று ஊடகமாக அல்-ஜசீராவின் அடைவு என்பது அபாரமானது. சர்வதேச ஊடகவியலுக்கு அது பெரும் பங்களிப்பினைச் செய்துள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. அதன் பங்களிப்பு என்பது ஊடகங்களின் பார்வை-வெளிப்படுத்தற் கோணம் மற்றும் முன்னோக்குகள் குறித்த புதியதும் வலுவானதுமான விழிப்புணர்வு. சர்வதேச நிகழ்வுகளின் போக்கு, தீர்மானங்கள், விளைவுகள் ஒற்றைப் பரிமாணம் கொண்டவை அல்ல, பல்பரிமாணம் கொண்டவை என்பதையும் தன் ஊடகப் பங்களிப்பின் ஊடாக அல்-ஜசீரா மெய்ப்பித்து வருகின்றது.

## சர்வதேச அறிக்கைகள்:

சர்வதேச ஊடகவியலாளர்கள் பலர் திட்டமிட்ட முறையில் இலக்குவைக்கப்பட்டு இஸ்ரேலியப் படைகளாற் கொல்லப்பட்டமை குறித்து AFP-செய்தி நிறுவனம், சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty), மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகியன விசாரணை அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. கடந்த ஆண்டின் இறுதியில் இந்த அறிக்கைகள் வெளிவந்திருந்தன. போர் வலயங்களில் உள்ள பொதுமக்களுடன் சமமான நிலையில் ஊடகவியலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்களின் பணி காரணமாக அவர்கள் போர் இடம்பெறும் பகுதிகளுக்கு அருகிற் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டாலும் அவர்களுக்கு போரில் ஈடுபடும் தரப்புகள் உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும். இது சர்வதேச சட்டத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது கொள்கையாகும். ஜெனீவாத் தீர்மானத்திலும் முக்கியமாக இடம்பிடித்துள்ள சட்டவிதி இது என்பதும் குறிப்பிடத்தக்கது.
முரண்பாட்டுச் சூழல்களிலிருந்து செய்தி வழங்கும் ஊடகச் சுதந்திரம் குறித்துத் தான் மிகவும் அக்கறை கொண்டுள்ளதாகக் கூறும் ‘சர்வதேச ஊடகவியலாளர் - International Repeorter’ எனும் நோர்வேஜிய ஊடக அமைப்பின் தலைவ

ரான வில்ட் ஸ்கொர்ப்பன் வீக்கான் (Vilde Skorpen Wikan) சர்வதேச நிறுவனங்களின் அறிக்கைகளைத் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். ரொய்ட்டர்ஸ் (Reuters), AFP, மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகியவை அந்த விசாரணைகளின் பின்னணியில் இருப்பதால், அவற்றைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் குரல் கொடுத்திருந்தார்.

**வீக்கிலீக்ஸ் நிறுவனரின் கோரிக்கை:**

வீக்கிலீக்ஸ் நிறுவனர் அசாஞ் கடந்த ஒக்ரோபர் 1-ஆம் திகதி பிரான்ஸ்சின் Strasbourg நகரில் அமைந்துள்ள மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய மையத்தில் (Council of Europe) உரையாற்றியுள்ளதோடு கலந்துரையாடலிலும் பங்கேற்றுள்ளார். இந்த ஆண்டு (2024) ஜூன் மாதம், அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பிரித்தானியச் சிறையிலிருந்து விடுதலையாகி அவுஸ்திரேலியவிற்குப் பயணமான பின்னர் அவர் கலந்து கொண்ட முதலாவது பொதுவெளிச் சந்திப்பு இது. அவருக்கெதிரான வழக்கில் குற்றத்தை ஒப்புக் கொள்ளவைத்து அவரோடு ஒப்பந்தம் செய்திருந்தது அமெரிக்கா. அங்கு உரையாற்றும்போது தனக்கு நீதி மறுக்கப்பட்டமை குறித்துக் கூறிய அவர், காசா மற்றும் உக்ரைனில் ஊடகவியலாளர்கள் மீதான கொலைகளுக்குரிய தண்டனைகள் வழங்கப்படாமை குறித்த கவலையையும் பதிவு செய்துள்ளார்.

‘எனது விடுதலை நீதி நிலைநாட்டப்பட்டதன் விளைவாக நிகழவில்லை என்பதை நான் தெளிவாகச் சொல்ல வேண்டும். என் ஊடகப் பணியில் என்னைக் குற்றவாளியாக ஒப்புக் கொண்டே பல வருடச் சிறையிலிருந்து நான் விடுதலையானேன். ஒரு மூலச் சான்றாதாரத்திலிருந்து தகவல்களைத் தேடியதையும், அந்தத் தகவலை மக்களுக்குத் தெரிவித்ததையும் நான் குற்றமாக ஒப்புக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டேன். எனக்கான நீதி மறுக்கப்பட்டுள்ளது.’ என்றார்.

மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவோ அல்லது தகவல் அறியும் சட்டத்தின் மீது கோரிக்கை வைக்கவோ முடியாது என்று அமெரிக்க அரசாங்கம் தன்னுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தில் வலியுறுத்தியுள்ளமை குறித்தும் பகிர்ந்துகொண்டிருக்கின்றார். ஐரோப்பாவில் பத்திரிக்கையாளர்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராகக் குரல்கொடுக்குமாறும், தனக்கு நேர்ந்த நீதிமறுப்பு மீண்டும் வேறெவருக்கும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டுமென்றும் ஐரோப்பிய மையத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் சபை மற்றும் அதனை ஒத்த அமைப்புகளுக்கு அசாஞ் கோரிக்கையும் விடுத்துள்ளார்.

rooban.s@thaiveedu.com





# செகராசசேகரம்
# சர்ப்ப சாஸ்திரம்

2

– பாலு. சிவகடாட்சம்



***மீளும் பிராமணன் றனக்குச் செந்தீ தெய்வம்
வேந்தனுக்கு இந்திரனாகு மிகச் செட்டிக்கும்
சூளுதவும் வாயுபக வானே தெய்வஞ்
சூத்திரர்க்கு வருணனவன் றுணையாந் தெய்வம்
வாளேலிறுத் தகரியினி வேதன்றந்தம் மகரியில்
மால் காளாத்திரி வாய்த்த பல்லில்
ஆளவரு மீசனி யமதூதி பல்லினணி
இமையத் தோ ரிறைவனாங் கிடந்தே*** 12

பிராமணசாதிப் பாம்புக்கு அக்கினியே தெய்வம். அரசகுலப் பாம்புக்கு இந்திரன் தெய்வம். வணிகப் பாம்புக்கு வாயு பக வான் தெய்வம். சூத்திரப்பாம்புக்கு வருணனே காவல் தெய் வம். நான்கு வகையான நச்சுப்பற்களுள் தகரி என்னும் பல் லில் பிரமன் நிற்பான். மகரி என்னும் பல்லில் திருமாலும் காளாத்திரி என்னும் பல்லில் ஈசனும் யமதூதி என்னும் பல் லில் இந்திரனும் இருப்பர்.

***இடக்கண்ணில் இந்திரன் இருப்பரேனில் சேரமற்ற
வேத வலக்கண் ணிருப்ப ளீசன் றேவி
கிடத்திய மேற் தானத்திற் கந்தன் சேர்வான்
கீழ்த் தானத்தினில் வள்ளி கெணித்தே சேர்வள்
திடத்துடனாக் கைங்கரத் தோனிடது பாகச்
செவியதனில் பிரமாணி வலச் செவிக்கே
மடக்கு வயிரவனிற்குங் கடிக்கும் போதினின்
மங்கை மோகினி கடித்தால் வயிரவன்னே*** 13

பாம்பின் இடது கண்ணில் இந்திரனும் வலக்கண்ணில் ஈச னின் தேவி பார்வதியும் இருப்பர். மேற்பாகத்தில் கந்தனும் கீழ்ப்பாகத்தில் வள்ளியும் சேர்ந்திருப்பர். வலிமையுள்ள பாம் பின் நாக்கில் விநாயகரும் இடது பாகச் செவியில் பிரமாணி யும் வலது செவியில் வயிரவனும் நிற்பர். பாம்பு கடிக்கும் போது மோகினியும் கடித்தபின்னர் வைரவனும் நிற்பர். (பிர-மாணி- சப்தமாதர்களுள் ஒருத்தி)

***வன்மையிலொன்றாம் பக்க மாறாம் பக்கம்
வளர் பதினொன்றாம் பக்க மிவைகள்தன்னில்
இன்னலுறு ஞாயறு சேர் மகமுங்கூடில்
இதில் மரண மிரண்டு பக்க மேழாம் பக்கந்
தென்னிறை பன்னிரு பக்க மிவையில் வந்த
திங்கள் புதனோடு மிருகசீரிஷந்தான்
புன்மலி சாமூன்றேட்டுப் பன்மூன்றுக்கே
பூரட்டாதியுங் கூடிற் பொல்லாச் சாவே*** 14

பிரதமை சஷ்டி மற்றும் பூர்வபக்க ஏகாதசி திதிகளில் ஞாயிற் றுக்கிழமையும் மகநட்சத்திரமும் சேர்ந்துவரும் நாட்களில் பாம்பு கடித்தால் மரணம் நிச்சயம். வளர்பிறையாயினும் தேய்பிறையாயினும் சப்தமியிலும் வளர்பிறைத் துவாதசி திதி யிலும் திங்கள் அல்லது புதன்கிழமையுடன் மிருகசீரிட நட்சத் திரமும் சேர்ந்துவரும் நாளில் பாம்பு கடித்தால் சாவு நிச்சயம். தேய்பிறைத் திருதியை அட்டமி திரயோதசி திதிகளும் பூரட் டாதி நட்சத்திரமும் கூடும் வேளையில் பாம்பு கடித்தாலும் கொடிய மரணம் நிகழும்.

***சாவாகும் பதினஞ்சாம் பக்கம் தன்னிற்
சனியுடனே ரேவதி நாட் தானும் கூடிற்
றேவான நாலாறெட் ஒன்பான் பன்னால்
எனும்பக்கந் தனிற்செவ்வாய் சனியும் எய்தில்
மூவாறு கார்த்திகை நாட் பரணி சோதி
மூலமொடு பூரட்டாதியுமே முன்னா
டேவாத வச்சுவதி விசாக மீசன்
சென்ம மகம் ஆயில்யம் சித்திரைக்கே*** 15

பௌர்ணமி அல்லது அமாவாசை திதிகளில் சனிக்கிழமையும் ரேவதி நட்சத்திரமும் கூடும் நாளில் அல்லது சதுர்த்தி சஷ்டி அட்டமி நவமி சதுர்த்தசி என்னும் திதிகளில் செவ்வாய் அல்லது சனிக்கிழமை வரும் நாளிலும் திருதியை சஷ்டி திதிகளில் கார்த்திகை பரணி சுவாதி மூலம் பூரட்டாதி அஸ்வினி விசாகம் திருவாதிரை மகம் ஆயில்யம் சித்திரை மற்றும்

*சித்திரமாந் திருவோணத்துடனே யென்னோர்*
*செப்பு முரோகிணி கூடிற் செத்தாரென்க*
*பத்தியுடன் பிறந்த நாட் பத்தாநாளும்*
*பத்தொன்பா நாளும் இருபத்து மூன்றாய*
*மெய்த்திரு பத்தைஞ்சு பதினெட்டா நாளில்*
*மீளாது சங்கிரம முதலாய் நாலும்*
*இத்தலத்திற் குளிகனுடன் எட்டாம் பக்கம்*
*இயம்பு திங்கட் கிழமையினில் எட்டுஞ்சாவே* 16

திருவோணம் ரோகிணி ஆகிய நாட்கள் கூடும் வேளையில் பாம்பால் கடியுண்டவர் செத்தவரேயாவர். பிறந்த நாள் அதற்குப் பத்தாவது நாள் பத்தொன்பதாம் நாள் இருபத்துமூன்றாம் இருபத்தஞ்சாம் பதினெட்டாம் நாட்களில் பாம்பு கடித்தால் விடம் மீளாது. மாதப் பிறப்பு நாள் முதலாக நாலும் குளிகனுடன் அட்டமியும் திங்கட்கிழமையும் சேரும் நாட்களில் பாம்பு கடித்தால் மரணம் நிகழும்.

*எட்டினுடன் பன்னிரண்டாம் பக்கம் ஆறாம்*
*எண்பக்கம் விஷயோகம் என்ற நாளில்*
*ஆட்டுபிணி யாளனொடு நாளும் உடல்மெலி*
*வானைக் கடித்தால் உடனே சாவாம்*
*மட்டாநாற் சந்தியில் நீரோடுங் கங்கைவான் கரையில்*
*மலைப் பொதும்பில் வரமாந் தேவர்*
*கிட்டியுறை யாலயத்திற் சுடலை மீதிற்*
*கிளரு நந்தாவனத்தி லராக்கிளர் கூடிடத்தே* 17

அட்டமி துவாதசி சஷ்டி திதிகளில் விஷயோகம் வரும் நாளில் பாம்பானது தீராத நோயினால் அவதிப்படுபவனையும் ஒவ்வொரு நாளும் உடல் மெலிந்து வருபவனையும் கடித்தால் அம்மனிதனுக்கு உடனே மரணம் நிகழும். நாற்சந்தி, நீரோடும் ஆற்றங்கரை, மலைப் பொந்து, தேவர் இருக்கும் ஆலயம், சுடலை, நந்தவனம் மற்றும் பாம்புகள் கூடும் இடம்

*கூட்டரிய கொடிதான பூமிதனிற் கோளரவு*
*கடித்திடிகிற் சொல்லு நன்மை*
*காட்டமுத கலையதனிற் கடித்தான் மீளுங்*
*கருது விஷகலை யதனிற் கடித்தான் மீளா*
*தாட்டமுத கலையும் விஷகலையும் நேரா*
*யறிதல் பெருவிரல் புறந்தாள் கெண்டை*
*நீட்டுதாள் துடை கொப்பூள் விலாவே மார்பு*
*நெற்றி கையடி கழுத்து நிரை பல்லாமே* 18

துப்பரவு செய்யமுடியத நிலம் ஆகிய இடங்களில் கொடிய பாம்பு கடித்திட்டால் அமுதகலையில் கடித்தால் விஷத்தை மீட்டு கடியுண்டவரை காப்பாற்றிவிடலாம். ஆயினும் விஷகலையில் கடித்தால் மீட்பது கடினம். அமுதகலையா விஷகலையா என்பதைக் கண்டறிய வேண்டுமானால் பெருவிரல் புறங்கால் கெண்டைக்கால் முழந்தாள் தொடை தொப்பூள் விலா மார்பு நெற்றி, மணிக்கட்டு, கழுத்து பல்வரிசை

*பல்லாரும் அதரங்கள் நெற்றி உச்சி*
*பதினஞ்சாம் தானத்தி லொன்றாம் பக்கம்*
*புல்லாரெண் பதினஞ்சாம் பக்கமட்டும்*
*புருடர்வலக் காலிற் பெருவிரரற்கே போது*
*மில்லான வமுதகலை யுச்சிதன்னில் இடக்காலில்*
*விரல் அமுதமெழின் மாதர்க்கே*
*யல்லாரு மபரபக்கத் திறங்குமிந்த*
*அமுதநின்ற நிலைகேளில் விடமதாமே* 19

பற்களை மூடிய உதடுகள் நெற்றி உச்சி என்னும் பதினைந்து இடங்களில் பிரதமை தொடக்கம் பௌர்ணமி அல்லது அமாவாசை வரை ஆண்களுக்கு வலக்கால் பெருவிரலில் இருந்து உச்சிவரையிலும் பெண்களுக்கு இடக்கால் விரலில் இருந்து உச்சிவரையிலும் அமுதகலை நிற்கும். இனி அபரபக்கத்தில் இறங்கும் விடகலை பற்றிக் கேட்பீராயின்.

*ஆகமுதல் விடகலையே பிற்பக்கத்துக்*
*அப்படியே இறங்குவது புருடர்க்குத்தான்*
*வாகினுடன் இடப்பக்கம் பெண்களுக்கு*
*வலப்பாகத் தினிலேறும் மற்றைப்பக்கம்*
*வேகமுடன் அப்படியே மாறிக்கொள்க*
*விடிந்து பதினைந்து நாளிகைகைண்மீதே*
*தோகை நல்லாய் கடித்த அராச் சூத்திரன்*
*தான்என்றால் பற்றிவிடமேறுந் துணிவுபெற்றே* 20

அபரபக்கத்தில் ஆண்களுக்கு விடகலை இடப்பாகத்தில் இறங்கும். பெண்களுக்கு வலதுபாகத்தில் இறங்கும். பெண்களுக்கு இடப்பாகத்தில் ஏறும். ஆண்களுக்கு வலப்பாகத்தில் ஏறும். விடிந்து பதினைந்து நாளிகைக்குள் (6 மணித்தியாலங்களுக்குள்) கடித்த பாம்பு சூத்திரசாதி யென்றால் விடம் வேகமாக ஏறும்.


*பெற்ற பதினைந்துக்குப் பின்றுடங்கிப்*
*பெரும்பொழுது படுமளவும் பெறக் கடித்தால்*
*அற்றை விட மாங்கிஷத்தை பற்றி யேறும்*
*ஆனகுலம் செட்டியதாம் அத்தமித்தே*
*நற்ற பதினைந்துக்குட் கடித்த பாம்பு*
*நராதிபதியா மென்பு பற்றி நஞ்சமேறு*
*முற்ற பதினைந்தளவும் கடித்த பாம்பு*
*முன்னூலோன் விடமேறும் மூளையுற்றே* 21

விடிந்து பதினைந்து நாழிகைக்குப் பின்னர் (பகல் பன்னிரண்டு மணிக்குப்பின்) தொடங்கி பொழுதுபடும் அளவுக்கிடையில் வைசியப்பாம்பு கடித்தால் விடமானது சதையைப் பற்றி ஏறும். அரசகுலப்பாம்பாகில் சூரியன் அத்தமித்து பதினைந்து நாழிகைக்குள் கடித்தால் விடமானது எலும்பைப் பற்றி ஏறும். இதன்பின்னர் (நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குப் பின்னர்) பதினைந்து நாழிகைக்குள் பிராமணசாதி பாம்பு கடித்தால் விடம் மூளையை நோக்கி ஏறும். (ஒரு நாழிகை ஸ்ரீ 24 நிமிடங்கள்)

(தொடரும்...)



Sivakadadcham@thaiveedu.com




மன அழுத்தம் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்ப்பது மிகவும் அத்தியாவசியமான ஓர் விடயம் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. அந்த வகையில் ஒருவர் மன அழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை கண்டறிவது அவ்வளவு எளிதான விடயமல்ல. அதிநவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளின் வளர்ச்சியின் ஊடாக இவ்வாறான சிக்கல் மிகுந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்பட முடியும் என ஆய்வாளர்கள் நிரூபித்துக் காண்பிக்கத் தொடங்கியுள்ளனர். உலகின் பல்வேறு நாடுகளிலும் பள்ளிக்கூடங்கள், சந்தைகள், மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் திடீரென துப்பாக்கிச்சூடு, கத்தி குத்து, வாகனங்களை பொதுமக்களுடன் மோதச் செய்தல் எனப் பல்வேறு கொடூரமான சம்பவங்கள் அரங்கேறி, பல உயிர்கள் காவுகொள்ளப்படுவதனையும், பலர் நிரந்தர இயங்கமுடியாநிலை தொடர்பிலான துரதிஸ்டவசமான செய்திகளை நாம் அடிக்கடி கடந்து செல்ல நேரிடுகின்றது. இவ்வாறான சம்பவங்களின் பின்னணியில், அநேகமான சந்தர்ப்பங்களில் உளவியல் பிரச்சினைகள், மன அழுத்தங்கள் போன்ற ஏதுக்கள் காணப்படுவதனை மறுதலித்துவிட முடியாது.

குறிப்பிட்ட நேரத்தில் மன அழுத்தத்தின் வெளிப்படாக எடுக்கப்படும் தீர்மானங்கள், தனக்கும் சமூகத்திற்கும் பாரிய கேடுகளை விளைவித்து விடக்கூடும் என்பதனால், இந்த உள அழுத்தம் சார்பான கணிப்புகளை முன்கூட்டியே மேற்கொண்டு தீர்வுகளை வழங்க முடியுமாயின், எதிர்காலத்தில் அது மனித சமூகத்திற்கே பெரும் உதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில், நாம் நாளாந்தம் பயன்படுத்தும் திறன்பேசிகளைக் கொண்டு, மன அழுத்த நிலைமைகளை துல்லியமாக கண்டறிந்துக்கொள்ளக் கூடிய ஒரு தொழில்நுட்பம் பற்றிய பார்வையாக, இந்த பத்தி அமைகின்றது.

மன அழுத்தம் அல்லது உளவியல் பாதிப்புகளை மதிப்பீடு செய்யக்கூடிய முகபாவனைகள் மற்றும் தலை அசைவுகளைக் கண்டறிய வடிவமைக்கப்பட்ட இரண்டு புதிய செயற்கை நுண்ணறிவு திறன்பேசி செயலிகள் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் நியூஜேர்சியில் அமைந்துள்ள ஸ்டீவன்ஸ் தொழில்நுட்ப ஆய்வு பல்கலைக்கழகத்தின் (Stevens Institute of Technology-Hoboken, New Jersey) பேராசிரியர் சாங் வொன் பே (Sang Won Bae) என்ற ஆய்வாளர் இந்த புதிய கண்டு பிடிப்பினை அறிமுகம் செய்துள்ளார். பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் முகபாவனைகள் மற்றும் தலை அசைவுகள் ஊடாக அவர்களின் மனநிலை குறித்து தகவல்களை வெளியிடக்கூடிய வகையில் இந்த செயலிகள் இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உலக அளவில் சுமார் 300 மில்லியன் மக்கள், அதாவது உலக மக்கள் தொகையில் சுமார் 4% வீதமானவர்கள், ஏதோவொரு மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும், அதனைக் கண்டறிவது சவாலானது. குறிப்பாக பாதிக்கப்பட்ட நபர்கள் தங்கள் எதிர்மறை உணர்வுகளை நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது மருத்துவ நிபுணர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு தயக்கம் காட்டும் நிலையை அவதானிக்க முடிகின்றது. இதனால் ஒருவர் உளப் பாதிப்புகளினால் உழல்வதனை துல்லியமாக கண்டறிவது மிகுந்த சவால் மிக்க ஒரு விடயமாகவே கருதப்படுகின்றது.

இப்போது ஸ்டீவன்ஸ் பல்கலைக்கழத்தின் பேராசிரியர் சாங் வொன் பே, பல்வேறு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களைக் கொண்டு இயங்கக்கூடிய திறன்பேசி செயலிகள் மற்றும் அமைப்புகள் குறித்த ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றார்.

இந்த செயலிகளைக் கொண்டு நாம் அல்லது ஏனையவர்கள் மன அழுத்தங்களை எதிர்நோக்குவதாக எச்சரிக்கக்கூடிய வகையிலான தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதற்கு பேராசிரியர் வொன் பே ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றார். மன அழுத்தம் அல்லது மன உளைச்சல் நிலைமையானது மிகப் பெரிய சவால் எனவும், அந்த அழுத்தங்களிலிருந்து மக்களை மீட்பதற்கு உதவும் முனைப்புகளில் ஈடுபட்டுள்ளதாகவும் பேராசிரியர் வொன் பே தெரிவிக்கின்றார். இன்றைய உலகில் அதிக எண்ணிக்கையிலான மக்கள், நாளாந்தம் திறன்பேசிகளை பயன்படுத்துவதால், செயலிகளை உருவாக்கி அதன் ஊடாக மக்களின் உளவியல் சார் அழுத்தங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண எடுக்கும் முனைப்பு வெற்றியளிக்கக்கூடிய சாத்தியங்கள் அதிகமாகும் என ஆய்வாளர்கள் சுட்டிக்கட்டுகின்றனர். கண்களின் 'ஸ்னாப் ஷாட்' படங்கள், மனநிலையை வெளிப்படுத்துகின்றன.

ஸ்டீவன்ஸ் பல்கலைக்கழகத்தின் கலாநிதி பட்டக் கற்கையை முன்னெடுக்கும் மாணவரான ராகுல் இஸ்லாமுடன் இணைந்து பேராசிரியர் வொன் பே, பீபல் சென்ஸ் (Pupil Sense) எனப்படும் செயலியை உருவாக்கியுள்ளார். இது திறன்பேசி பயன்படுத்தும் பயனர்களின் புகைப்படங்களையும், அளவீடுகளையும் தொடர்ந்து எடுத்துச் சேமித்துக் கொள்கின்றது. பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. கடந்த மூன்று தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட கடந்த கால ஆராய்ச்சிகளில், மாணவர்களின் அனிச்சை செயல்களும், துலங்கல்களும் மன அழுத்தம் குறித்த மதிப்பீடுகளை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது என

பேராசிரியர் வொன் பே தெரிவிக்கின்றார். இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட தன்னார்வ அடிப்படையில் முன்வந்த மாண வர்கள் தங்கள் திறன்பேசிகளைத் திறக்கும்போது அல்லது சில சமூக ஊடகங்கள் மற்றும் பிற செயலிகளை அணுகும் போது எடுக்கப்பட்ட 10-வினாடி 'பர்ஸ்ட் - திமர்' புகைப்பட ஸ்ட்ரீம்களில் இருந்து, கண்களின் கருவிழிகளின் விட்டம் மற் றும் அதனை சுற்றியுள்ள தசைகளை சுருக்கங்கள் என்பன வற்றை ஒப்பீடு செய்து துல்லியமான மதிப்பீடுகளை மேற் கொள்கின்றது. ஆரம்ப சோதனை ஒன்றில், நான்கு வார காலப்பகுதியில் 25 தன்னார்வலர்களைக் கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. அந்த தன்னார்வலர்களின் திறன்பேசி களில் உட்பொதிக்கப்பட்ட கணினி - பட தரவு சேகரிக்கப்பட்டு, சுமார் 16,000 தொடர்புகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

'சாதாரண' நிலை மற்றும் 'அசாதாரண'மான நிலை என்பன வற்றை வேறுபடுத்துவதற்கு செயற்கை நுண்ணறிவிற்கு கற் பித்துக் கொடுத்த பின்னர், பேராசிரியர் வொன் பே மற்றும் இஸ்லாம் ஆகியோர் புகைப்படத் தரவைச் செயலாக்கி, தன் னார்வலர்களின் சுய-அறிக்கை மனநிலையுடன் ஒப்பீடு செய் துள்ளனர். Pupil Sense செயலியானது சிறந்த மறு செய்கை செயலியாக கருதப்படுகின்றது. இது தேர்ந்தெடுக்கப்பட்ட, உயர்தர தரவுப் புள்ளிகளை மட்டுமே பயன்படுத்துகிறது. மக் கள் மனச்சோர்வடைந்ததைக் கண்டு பிடிக்கும் நேரங்களில் 76 வீதமான ஊகங்கள் துல்லியமானவை என நிரூபிக்கப்பட் டுள்ளது. மன அழுத்தத்தை கண்டறிவதற்காக தற்போது உருவாக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்ட AWARE எனப்படும் செயலியை விடவும் இது சிறந்தது என ஆய்வாளர்கள் தெரி விக்கின்றனர்.

ஆய்வு நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட கார ணத்தினால், இப்போது இந்த தொழில்நுட்பத்தை தாங்கள் தொடர்ந்து மேம்படுத்தி உருவாக்கி வருவதாக பேராசிரியர் தெரிவிக்கின்றார். கடந்த காலங்களில் அதிகளவான குடிப்ப ழக்கம் மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டைக் கணிக்க, திறன்பேசி அடிப்படையிலான செயலிகளை பேராசிரியர் வொன் பே உருவாக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த செயலி முதன்முதலில் இந்த ஆண்டு வசந்த காலத் தின் பிற்பகுதியில் ஜப்பானில் நடைபெற்ற செயல்பாடு மற் றும் நடத்தை கணினி மயமாக்கல் பற்றிய சர்வதேச மாநாட் டில் (International Conference on Activity and Behavior Computing) அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த செயலி இப்போது கிட்ஹப் (GitHub) இயங்குதளத்தில் ஓபன் சோர்ஸ் செயலியாக கிடைக்கிறது.

முகபாவனைகளும் மனச்சோர்வின் வகையை குறிக்கின்றது. பேராசிரியர் வொன் பே, இஸ்லாம் ஆகிய இருவரும் FacePsy எனப்படும் இரண்டாவது செயலியை உருவாக்கி வருகின்ற னர், இது நமது மனநிலையைப் பற்றிய நுண்ணறிவுக்காக முகபாவனைகளை சக்திவாய்ந்த முறையில் அலசி ஆராய் கின்றது என்றால் மிகைப்படப் போவதில்லை. மனச்சோர்வு என்பது முகத் தசை அசைவுகள் மற்றும் தலை, சைகைகள் போன்ற சொற்கள் அல்லாத சமிக்ஞைகளால் வகைப்படுத் தப்படுகிறது என்று பேராசிரியர் வொன் பே சுட்டிக்காட்டுகி றார். FacePsy ஆனது, திறன்பேசியின் பின்னணியில் இயங்கு கிறது, திறன்பேசியை திறக்கும்போதோ அல்லது பொதுவா கப் பயன்படுத்தப்படும் செயலிகள் திறக்கப்படும்போதோ முக 'ஸ்னாப்ஷாட்'களை எடுக்கிறது. முக்கியமாக, இது பகுப் பாய்விற்குப் பிறகு உடனடியாக முகப் படங்களை நீக்குகி றது, பயனர்களின் தனியுரிமையைப் பாதுகாக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆய்வினை ஆரம்பிக்கும் போது சுய-அறிக்கை மனச்சோர்வு டன் எந்த முக சைகைகள் அல்லது கண் அசைவுகள் ஒத்தி ருக்கும் என்று எங்களுக்குத் தெரியாது, என்று பேராசிரியர் விளக்குகிறார். 'அவற்றில் சில எதிர்பார்க்கப்பட்டவை எனவும் மேலும் சில ஆச்சரியப்படுத்தும் வகையிலானவை எனவும் தெரிவிக்கின்றார். உதாரணமாக, ஆரம்ப பரீட்சார்த்த ஆய் வின் போது ஒருவர் அதிகரித்த புன்னகையுடன் இருக்கின்றார் என்றால் அது அவர் மகிழ்ச்சியுடன் இருக்கின்றார் என அர்த் தப்படாது எனவும் மாறாக மனச்சோர்வடைந்த மனநிலை மற் றும் பாதிப்பின் சாத்தியமான அறிகுறிகளாக இருக்கக் கூடும் எனவும் விபரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு புன்னகைப்பது நிலைமையை சமாளிக்கும் பொறிமுறையாக இருக்கலாம், உதாரணமாக, மக்கள் உண்மையில் மனச்சோர்வடையும் போது தங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு 'துணிச்சலான முகத்தை வெளிக்காட்டிக்கொள்கின்றனர்' என்று பேராசிரியர் கூறுகிறார். அல்லது அது ஆய்வின் ஒரு குறைபாடாகவும் இருக்கலாம் எனவும், இந்த விடயம் மேலும் ஆய்விற்கு உட்ப டுத்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஆரம்ப தரவுகளில் வெளிப்படுத்தப்பட்ட மனச்சோர்வின் மற்ற வெளிப்படையான சமிக்ஞைகள் காலை வேளையில் குறைவான முக அசைவுகள் மற்றும் சில குறிப்பிட்ட கண் மற் றும் தலை-இயக்க முறைகள் ஆகியவை அடங்கும். உதார ணமாக, காலையில் கொட்டாவி விடுதல், தலையின் அசைவு கள் பக்கவாட்டாக காணப்படுதல் அதிகரித்த மனச்சோர்வு அறிகுறிகளுடன் வலுவாக இணைக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகின்றது. சுவாரஸ்யமாக, காலையிலும் மாலையிலும் கண்கள் அதிகமாகத் திறந்திருப்பதைக் கண்டறிவது சாத்தி யமான மனச்சோர்வுடன் தொடர்புடையது என குறிப்பிடப்படு கின்றது. எச்சரிக்கை அல்லது மகிழ்ச்சியின் வெளிப்புற வெளிப்பாடுகள் சில நேரங்களில் மனச்சோர்வு உணர்வு களை மறைக்கக்கூடும். மனச்சோர்வைக் கண்டறிய செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் பிற செயலிகளுக்கு ஒரு சாத னம் அல்லது பல சாதனங்களை பயன்படுத்துவதன் மூலம் கூடுதல் துல்லியமான தகவல்களை திரட்டிக்கொள்ள முடியும் என நம்புவதாக பேராசிரியர் வொங் பே குறிப்பிடுகின்றார்.

இந்த FacePsy பரீட்சார்த்த ஆய்வு ஒரு சிறிய, மலிவான, பயன்படுத்த எளிதான கண்டறியும் கருவியை நோக்கிய ஒரு சிறந்த முதல் படி என நினைப்பதாக பேராசிரியர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ஒருவருக்கு மன அழுத்தம் தொடர்பில் கண்டறிந்து கொள்வதற்கும் அதற்கான தீர்வுகளை எட்டுவ தற்கான வழிமுறைகளின் அவசியம் முன்னொருபோதும் இல் லாத அளவிற்கு தற்பொழுது சமூகத்தில் அதிகரித்துள்ள நிலையில், இவ்வாறான செயலிகளின் எளிமையான பயன் பாடு ஒட்டு மொத்த மனித குலத்திற்கே நன்மையாக அமை யக்கூடும் என்பது உறுதி.



jeyaseelan.s@thaiveedu.com




நிலா, நிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா என்று குழந்தைகளுக்கு உணவூட்டும் போது தாய்மார் பாடிய பாடல் உங்களுக்கு நினைவிருக்கலாம். 'நிலா எப்படி ஓடி வரும்' என்று, கொஞ்சம் வளர்ந்ததும் தாய்மாரைக் கேலி செய்தவர்களும் உண்டு. தாய்மாரின் குரல் கேட்டோ அல்லது குழந்தைகளை ஏமாற்றக் கூடாது என்பதாலோ என்னவோ உண்மையாகவே நிலா ஒன்று பூமியை நோக்கி ஓடி வந்து கொண்டிருக்கிறது என்றால் நம்புவீர்களா?

அறிவியல் சார்ந்து இப்போது உலகில் நடப்பதைப் பார்த்தால், எங்கள் பூமிக்கு இரண்டாவது சந்திரன் ஒன்று புதிதாக வந்து கொண்டிருப்பதாக விண்வெளி ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். இரண்டாவது சந்திரனா? இது சாத்தியமா? என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் தொழில்நுட்ப வசதிகளின் முன்னேற்றம் காரணமாக ஆய்வாளர்கள் சொல்வதை நாங்கள் நம்பித்தான் ஆகவேண்டிய நிலையில் இருக்கின்றோம். இதுபோல முன்பும், பல காலமாய் இப்படி எல்லாம் நடந்திருந்தாலும், அதை தெரிந்து கொள்ளக்கூடிய, அதற்கேற்ற வசதிகள் எங்களிடம் அப்போது இருக்கவில்லை.

அமெரிக்க வானியல் சங்கத்தின் சமீபத்திய ஆய்வில் சிறுகோள் ஒன்று ஈர்ப்பு விசையால் பூமியின் பாதையை நோக்கி வருவதாகவும், குறுகிய காலத்திற்கு புவியின் ஈர்ப்பு விசையில் இருக்கும் என்றும் குறிப்பிட்டிருந்தது. புதிதாக வரும் இந்தச் சந்திரன் மிகவும் சின்னதாக இருப்பதால் பூமியில் இருந்து எங்கள் கண்களால் நேரடியாகப் பார்க்க முடியாது. சக்தி வாய்ந்த தொலைநோக்கியின் உதவியுடன்தான் இந்தக் குட்டி நிலாவை பார்க்க முடியும் என்று சொல்கிறார்கள். பழைய சந்திரன் போல, இந்தப் புதிய சந்திரனால் பூமியில் கடலலைகள் கொந்தளிப்பது போன்ற ஏதாவது மாற்றங்கள் ஏற்படுமோ என்று நீங்கள் பயப்பட வேண்டாம், காரணம் தற்காலிகமாக இரண்டு மாதம் தங்கிவிட்டு, 2024 நவம்பர் மாதம் பூமியின் எல்லைக்குள் இருந்து இந்த இரண்டாவது சந்திரன் வெளியேறிவிடுமாம்.

முதலில் இந்த இரண்டாவது சந்திரனைப் பற்றிப் பார்ப்போம். இந்த சந்திரன் சென்ற செப்ரெம்பர் மாதம் 28-ம் திகதி பூமியின் எல்லைக்குள் பிரவேசித்திருந்தது. இரண்டு மாதங்கள் இங்கே தங்கிவிட்டு மீண்டும் நவம்பர் மாதம் 25-ம் திகதி பூமியின் எல்லையில் இருந்து வெளியேறிவிடும். சென்ற ஓகஸ்ட் மாதம் 7-ம் திகதிதான் பூமியை நோக்கி இந்தச் சந்திரன் வருவதை, தென்னாபிரிக்காவில் உள்ள சதர்லாண்ட் ஆய்வு நிலையத்தால் கண்டுபிடிக்கப்பட்டது. 36 அடி விட்டத்தைக் கொண்ட இந்தச் சந்திரன் சிறுகோள் பட்டியைச் சேர்ந்தது என்று ஆய்வாளர்கள் அடையாளம் கண்டதால், 2024 பிரி-5 என்று இதற்குப் பெயர் சூட்டி இருக்கிறார்கள். இது செப்ரெம்பர் 29-ம் திகதி பூமியைச் சுற்றி வரத் தொடங்கி, நவம்பர் 25-ஆம் திகதி பூமியை விட்டு வெளியேறி, அதன் பிறப்பிடமான அர்ஜுனா சிறுகோள் பெல்ட்டிற்குத் (Arjuna asteroid belt) திரும்பும் என்றும், மீண்டும் 2051-ம் ஆண்டு திரும்பவும் வரலாம் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

எங்கள் பூமியின் நிரந்தர சந்திரன் சுமார் 4 பில்லியன் ஆண்டுகளாக பூமியின் கவர்ச்சிக்குள் ஒட்டிக்கொண்டு எங்களோடு சுற்றிக் கொண்டு இருக்கின்றது. சந்திரன் என்றால் அது 'கிரகங்களைச் சுற்றிவரும் இயற்கையாக உருவாக்கப்பட்ட பொருள்' என்று நாசா ஆய்வாளர்கள் விளக்கம் கொடுத்திருக்கின்றனர். இவை அளவு, வடிவம், அமைப்பு போன்றவற்றில் வேறுபடுவது மட்டுமல்ல, ஆரம்பகால சூரிய மண்டலத்தில் தூசி மற்றும் வாயு வட்டுகளால் உருவாக்கப்பட்டுக் கிரகங்களைச் சுற்றி வருவதாய் இருக்க வேண்டும். லத்தீன் மொழியில் லூனா என்று அழைக்கப்பட்ட சந்திரன் ஆங்கிலத்தில் 'மூன்' என்று அழைக்கப்படலாயிற்று. அறிவியல் சார்ந்த விபரங்கள் தெரியாத நாட்களில் எம்மவர்கள் ஒரு அழகிய பெண்ணாகச் சந்திரனை வர்ணித்து இருப்பதைக் கவிதைகளிலும், ஜோதிடப் பதிவுகளிலும் காணமுடிந்தது. இன்று சந்திரனைப் பற்றி ஓரளவு விபரமாக எங்களால் அறிந்து கொள்ள முடிந்தாலும், சந்திரனைப் பற்றிய பல கேள்விகளுக்கு அறிவியல் சார்ந்த சரியான விளக்கம் இன்னும் கிடைக்கவில்லை.

பூமியின் ஒரே இயற்கைக் கோளாகச் சந்திரன்தான் இருக்கின்றது. இது பூமிக்கு அருகே சுமார் 238,900 மைல் தூரத்தில் சுற்றி வருவதால், வானத்தில் மிகப் பெரிதாகத் தெரிகின்றது. பூமியும் சந்திரனும் சூரியனைச் சுற்றி அதன் சுற்றுப் பாதையில் ஒரே நேரத்தில் நகர்வதால்தான், சந்திரனின் ஒரு பக்கத்தை மட்டுமே பூமியில் இருந்து எங்களால் பார்க்க முடிகின்றது. பூமியோடு இயற்கைச் சந்திரனை ஒப்பிடும் போது, பூமியின் விட்டம் 12,742 கிலோ மீட்டராகவும், சந்திரனின் விட்டம் 3,475 கிலோ மீட்டராகவும் இருப்பதால் சந்திரன் பூமியின்

27 வீதமான அளவாக இருக்கின்றது. சூரியக் குடும்பத்தில் இது ஐந்தாவது பெரிய சந்திரனாக இருக்கின்றது.

சந்திரனின் மேற்பரப்பு ஈர்ப்பு பூமியின் ஆறில் ஒரு பங்காக வும், செவ்வாய்க் கிரகத்தின் ஈர்ப்பு விசையில் பாதியாகவும் இருக்கிறது. ஆனால் விண்கலங்களின் சமீபத்திய ஆய்வின் படி சந்திரனின் ஈர்ப்பு புலம் ஒரே சீராக இல்லை என்பதும், ஈர்ப்பு முரண்பாடுகள் இருப்பதும் தெரிய வந்திருக்கின்றது.

இதுவரை விண்வெளி ஆய்வுகளில் கண்டறிந்ததன்படி, சூரி யக் குடும்பத்து கிரகங்களை எடுத்துப் பார்த்தால் பூமிக்கு ஒரேயொரு நிலா இருக்கின்றது. செவ்வாய்க் கிரகத்திற்கு இரண்டு நிலா இருக்கின்றது. ஆனால் வெள்ளிக் கிரகத் திற்கோ அல்லது புதன் கிரகத்திற்கோ நிலாக்கள் இல்லை. சூரிய மண்டலத்தின் வெளிப்புறக் கிரகங்களான வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியன பல நிலவுகளைக் கொண்டிருக்கின்றன. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நிலவுக ளின் எண்ணிக்கைப்படி வியாழன் -95, சனி -146, யுரேனஸ் -27, நெப்டியூன் -14, புளூட்டோ -5 என்று கணக்கிட்டிருக்கிறார் கள். இதில் சனிக் கிரகத்தின் என்செலடஸ் மற்றும் டைட்டன் என்ற இரண்டு சந்திரன்களும் மேற்பரப்பில் பெருங்கடல்க ளைக் கொண்டுள்ளன.

சூரிய மண்டலத்தில் உள்ள சந்திரன்களில் மிகப் பெரிய சந்தி ரன் வியாழன் கிரகத்தின் கனிமீட்டாகும். இந்தக் கனிமீட் சந்தி ரன் புதன் கிரகத்தைவிடப் பெரியது. கனிமீட் போலவே வியா ழன் கிரகத்தின் இன்னும் மூன்று சந்திரன்கள் (Io, Europa, Ganymede, and Callisto.) வியாழன் கிரகத்தின் எதிர் திசை யாக, இடமிருந்து வலமாகச் சுற்றுகின்றன. கனிமீட் சந்திரன் சூரியக் குடும்பத்தில் ஒன்பதாவது பெரிய உருவமாக இருக் கின்றது. சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியவற்றின் சில நிலவு கள் அந்தக் கிரகங்களில் இருந்து வெகு தொலைவில் சுற்றி வருவதை விண்வெளி ஆய்வுகள் மூலம் அவதானிக்க முடி கின்றது.

சூரிய மண்டலத்தின் முதலாவது பெரிய சந்திரன் வியாழன் கிரகத்தின் கனிமீட்டாகவும் (Ganymede - 5268 கி.மீ) இரண் டாவது பெரிய சந்திரன் சனிக்கிரகத்தின் டைட்டனாகவும் (Titan - 5151 கி.மீ) இருக்கின்றன. மூன்றாம் நாலாம் இடத்தை வியாழன் கிரகத்தின் காலிஸ்டோ (Callisto - 4816 கி.மீ) மற் றும் லோ (Lo - 3636கி.மீ) சந்திரன்கள் பெற்றுக்கொள்கின் றன. ஐந்தாவது இடத்தை எங்கள் பூமியின் சந்திரன் (3474 கி.மீ) பெற்றுக்கொள்கின்றது. ஆறாவது இடத்தை வியாழன் கிரகத்தின் ஈரோபா சந்திரனும் (Europa - 3121 கி.மீ) ஏழாவது இடத்தை நெப்டியூன் கிரகத்தின் ட்ரைட்ரொன் சந்திரனும் (TriTon - 2706 கி.மீ) எட்டாவது இடத்தை யுரேனஸ் கிரகத்தின் டைட்டானியா சந்திரனும் (Titania - 1577 கி.மீ) ஒன்பதாவது இடத்தை சனிக் கிரகத்தின் ரியா சந்திரனும் (Rhea - 1529 கி.மீ) பத்தாவது இடத்தை யுரேனஸ் கிரகத்தின் ஒபிரோன் சந் திரனும் (Oberon - 1522 கி.மீ) பிடித்திருக்கின்றன. நெப்டியூ னின் சந்திரன் ட்ரைட்ரொன் (Triton) புளூட்டோவைப் போல பெரியது மற்றும் நெப்டியூனின் சுழற்சி திசையுடன் ஒப்பிடும் போது இது பின்னோக்கிச் சுற்றுகிறது. இதுவும் புதன் கிரகத் தைவிடப் பெரியது.

தமிழர்கள் ஒன்பது கிரகங்கள் இருப்பதாகத் தொன்று தொட்டு குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நவக்கிரகங்கள் என்று அழைத்தார்கள். சூரியன் (கதிரவன்), சந்திரன் (சோமன்), செவ்வாய் (நிலமகன்), புதன் (அறிவன்), குரு-வியாழன் (சீலன்), சுக்கிரன்-வெள்ளி (கங்கன்), சனி (காரி), ராகு (கருநாகன்), கேது (செந்நாகன்) என்று நவக்கிரகங்கள் அழைக்கப்படுகின்றன. இதைவிட நாட்காட்டியிலும், ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று சூரிய குடும்பத்தைச் சேர்ந்த கண்ணுக்குத் தெரியக்கூடிய கிரகங்களின் பெயர்களையே சூட்டியிருந்தார்கள்.

1930-ம் அண்டில் புளூட்டோ ஒரு கிரகமாகக் கண்டறியப்பட் டது. இதற்கு 5 சந்திரன்கள் இருக்கின்றன. ஆனால், சர்வதேச வானியல் ஒன்றியத்தின் 24 ஆகஸ்ட் 2006-ம் ஆண்டு, 'கிரகம்' என்ற வரையறை மூலம் தற்போது புளூட்டோ கிரகம் நீக்கப் பட்டு, அதைக் சிறு கிரகமாகக் கணக்கிட்டு இருக்கிறார்கள். இதன் காரணமாக ஒன்பது கிரகங்கள் இப்போது எட்டாக மாறியிருக்கின்றன. இதுவரை நாங்கள் ஒன்பதாவது கிரகம் என்று நம்பிக் கொண்டிருந்த புளூட்டோவை அறிவியல் கார ணங்களைக் காட்டி, அது கிரகமல்ல என்று சுட்டிக் காட்டியி ருக்கிறார்கள். வானியல் ஒன்றியத்தின் வரையறைப்படி, 'ஒரு கிரகம் சூரியனைச் சுற்றி வரும் ஒரு வானப் பொருளாக இருக்க வேண்டும் என்றும், கிட்டத்தட்ட உருண்டை போன்ற வட்ட வடிவத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், மேலும் அதன் சுற்றுப்பாதை சுற்றுப்புறத்தை குப்பைகளிலிருந்து அகற்றியுள்ளதாக இருக்க வேண்டும்' என்றும் வரையறை செய்திருக்கின்றது. இந்த வரையறைக்குள் அகப்படாதபடி யால் புளூட்டோவைக் சிறு கிரகமாக அறிவித்திருக்கிறார்கள். கிரகத்திற்கான இவர்கள் குறிப்பிடும் இந்த வரையறை விளக் கமாக இல்லை என்பதால், சில ஆய்வாளர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

பூமிக்கு அருகே உள்ள செவ்வாய் கிரகத்திற்கு இரண்டு நில வுகள் உண்டு. இந்த நிலவுகளுக்கு போபோஸ் மற்றும் டீமோஸ் என்றும் பெயர் சூட்டியிருக்கிறார்கள். இவை இரண் டும் ஏறக்குறைய வட்ட சுற்றுப்பாதைகளைக் கொண்டிருக் கின்றன. செவ்வாயில் மனிதர் குடியேறினால் இந்த இரண்டு சந்திரன்களின் பெயர்களும் பிரபலமாகிவிடும். ஆகவே நினைவில் வைத்திருங்கள். ஆய்வுகளின்படி போபோஸ் நிலவு மெதுவாக செவ்வாய்க் கிரகத்தை நோக்கி நெருங்கி வருவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இது இப்படியே தொடர்ந்தால், சுமார் 50 மில்லியன் ஆண்டுகளில் செவ் வாய்க் கிரகத்தோடு இந்த நிலா மோதக்கூடும். அப்படி மோதல் இடம்பெறாவிட்டால், அதற்கு முன்பே செவ்வாய்க் கிரகத்தின் ஈர்ப்பு சக்தி போபோஸை உடைத்து, செவ்வாய் கிரகத்தைச் சுற்றி ஒரு மெல்லிய வளையத்தை உருவாக்க லாம் என தற்போதைய ஆய்வாளர்கள் நம்புகின்றனர். இயற் கையின் நிகழ்வுகளில் மாற்றங்கள் திடீரென ஏற்படலாம், இனி வருங்காலங்களில் என்னென்ன நடக்குமோ யாரறிவார் ?

**உசாத்துணை:**

- https://www.space.com/earth-will-capture-second-moon
- https://www.earth.com/news/its-official-earth-now-has-two-moons



kuruaravindan@thaiveedu.com




கனடாவில் வாகனத் திருட்டு நடந்தால் பல்லாயிரம் டொலருக்கும் மேலான இழப்பீட்டுத் தொகையை காப்புறுதி நிறுவனம் வாடிக்கையாளருக்குச் செலுத்த நேரிடுகிறது. ஒன்ரா-றியோ மாகாணத்தில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதனால் உங்கள் வாகனம் களவு போவதை எப்படி தவிர்க்கலாம் என்று இங்கு கவனிப்போம்.

உலகில் வாகனம் கண்டுபிடிக்கப்பட்ட காலம் முதற்கொண்டு வாகனத் திருட்டு இருந்து வருகிறது. பலவகையான சாவிகள் பூட்டுகள் எனக் கண்டுபிடிக்கப்பட்ட போதும், வாகனத் திருட்டு குறைவதாய் காணவில்லை.

ஐந்து வருடங்களுக்கு முன் ஒன்ராறியோ, கியூபெக், அல்பேட்டா மற்றும் அட்லான்டிக் மாகாணங்களில் காப்புறுதி அமைப்புகள் கூட்டாக வாகனக் களவுகளுக்கு $400 மில்லியனைச் செலவிட்டு உள்ளது. ஆனால், 2022-ல் இத்தொகை $1.2 பில்லியனாக உயர்ந்து உள்ளது என்பதுடன், கனடிய காப்புறுதிக் கூட்டு அமைப்பின் கருத்துப்படி, அத்தொகை 2023-ல் மேலும் அதிகரித்துள்ளது.

களவு கூடக்கூட காப்புறுதிக் கேட்பனவும் கூடிக்கொண்டே செல்வதால், காப்புறுதி அமைப்பு எதிர்காலத்தையிட்டு கவலைகொள்வது இயல்பு. கடந்த காலங்களில் காப்புறுதியில் ஒருபோதும் கேட்பனவு செய்யாதவர்களுக்கும் கட்டணம் கூடுகிறது. அதேவேளை, குறிப்பிட்ட இடங்களில் களவு இடம்பெறும் பொழுது, அக்களவுகளைக் குறைப்பதற்கு உரிய சில வழிகளையும் ஆய்வறிஞர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

## கனடாவில் வாகனத் திருட்டு அதிகரிப்பதற்கான காரணம் என்ன?

மகிழ்ச்சிக்காக, பொழுதுபோக்கிற்காக வாகனத்தை எடுப்பதற்கும், திருடுவதற்கும் எளிதான கரணிகள் இருப்பதாக காப்புறுதி வலலுநர்கள் தெரிவிக்கிறார்கள். திட்டமிட்டு திருடர்கள் செய்யும் திருட்டு இதில் பெருமளவு பங்கு வகிப்பதுடன், அவர்கள் மதிநுட்பமாகச் செய்வதனால் பில்லியன் டொலருக்கு மேல் களவுகள் செய்கிறார்கள்.

காப்புறுதி அமைப்புகளில் துப்புத்துலக்கும் அமைப்பின் உபதலைவராக பிரயன் கஸ்ட் (Bryan Gast) உள்ளார். இவ்வமைப்பு தேசிய ரீதியாக கனடிய காப்புறுதி அமைப்பில் இடம் பெறும் மோசடிகளை கண்டுபிடிக்கும் இலாபநோக்கற்ற அமைப்பாகும். அவருடைய கணிப்பின்படி பெருமளவு களவுகள் மின் அலைகளைக் குறுக்கிட்டு பெறுவதால் ஏற்படுகின்றன. தொலைவிலிருந்தபடி மின்னியல் கருவிகளால் கதவுகளைத் திறக்கும் வாய்ப்புகள் உள்ளமையால் களவுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

திருடர்கள் வாகனத்துக்குள் வந்தவுடன், Steering அடியில் மின்கருவியை மாற்றி வாகனத்தைச் செலுத்துவார்கள். பின், வாகனத்தை விற்பார்கள், அல்லது பிற நாட்டிற்கு ஏற்றுமதி செய்வார்கள். குறிப்பாக கிழக்கு மாகாண கடல் வழியாக மேற்கு ஆபிரிக்காவிற்கு அல்லது மத்திய கிழக்கிற்கு அனுப்பி வைப்பார்கள். அவ்விடங்களில் கண்டுபிடிபட்ட ஆயிரக்கணக்கான வாகனங்கள் கனடாவிற்கு திருப்பி அனுப்புவதற்கு ஆயத்தமாக உள்ளன என்கிறார்.

திருடப்படும் வாகனங்கள் இன்னுமொரு விதத்திலும் பாவிக்கப்படுகின்றன. 'vin' எனப்படும் வாகனத்தை அடையாளப்படுத்தும் எண்ணைத் திருடி, அதனைத் தான் திருடிய வாகனத்தில் பதித்து, அதனைப் பாவிப்பதாகும். இன்னும் ஒரு திட்டத்தை திருடர்கள் பாவிப்பதும் உண்டு. வாகனத்தை பாகம் பாகமாக்கி விற்பது.

மேலும் இரு காரணங்களையும் இங்கு குறிப்பிடுவார்கள். முதலாவதாக குற்றத்தடுப்பு உபகாரணங்களுக்கான உத்தரவு 2007-வது ஆண்டிற்கு பின் அப்படியே இருக்க விஞ்ஞானம் வளர்ச்சி வளர்ந்து கொண்டு செல்கிறது. இரண்டாவது காரணி புதுக் வாகனங்களின் விலை அதிகரித்து செல்கிறது. 2023 யூன் மாதம் சராசரிக் காரொன்றின் விலை அண்ணளவான கணிப்புப்படி $66,000 ஆகும்.

## கனடாவில் மிக அதிகமாக களவு போகும் கார்கள்:

கனடாவில் பெரும் விலைகூடிய கார்கள் அதிகளவில் களவு போவதில்லை. அவைகள் இடத்துக்கிடம் வேறுபடும். உதாரணத்திற்கு அல்பேட்டா மாகாணத்தில் பிக்-அப் டிரக்குகள் அதிகமாக களவு போகின்றன. ஒரு கணிப்பின்படி கனடாவில்



மிக அதிகமாகக் களவுபோன வாகனம் கொன்டா சிஆர்-வி (Honda CR-V) ஆகும். மற்றும் போட் எப்-150 (Ford F-150) கொன்டா சிவிக் (Hond Cvic), ரோயோட்டா கைலான்டர் (Toyato Highlander) ஆகிய வாகனங்களும் களவு போகின் றன. லெக்சஸ் ஆர் எகஸ் (Lexaus RX) காரும் இப்பட்டிய லில் அடங்கும்.

இந்த வாகனங்களுக்கு உங்களுக்கு உரிமை இல்லாவிடினும் உங்களுக்கு வாகன களவுகளால் தாக்கம் ஏற்படும் என்பதை மறக்க வேண்டாம். ஒரு சிலர் ஏற்படுத்தும் கேட்பனவுத் தொகை எல்லோருக்கும் பகிரப்படும். இதன் அடிபடையில் தான் காப்புறுதிக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

### வாகன உரிமையாளரும் வாகனத் திருட்டும்:

குறிப்பாக, ஒன்ராறியோ மாகாண வாகன உரிமையாளருக்கு வாகனக் களவுகள் எப்படி பாதிக்கின்றது என இனிக் கவனிப் போம்.

கனடிய காப்புறுதி அமைப்புகள் Clear (Candian Loss Experience Atomobile Rating) என்னும் திட்டத்தால் கட்டணங் களை நிறுவுகிறார்கள். இவர்களது தரவுகளைக் கொண்டே காப்புறுதி அமைப்புகள் கட்டணங்களை நிர்ணயிக்கின்றன.

2022-ம் ஆண்டில் ஒன்ராறியோ சாரதிகள் $125 முதல் $140 வரை வருடமொன்றிற்கு காப்புறுதிக் கட்டணமாகக் கட்டுகின் றனர். பரந்துபட்ட களவுகளுக்கான செலவுகளை ஈடு செய்வ தற்கு இந்த தொகையானது போதாது. 2023-ல் இத்தொகை இதனைவிடக் கூடி இருக்கும்.

### எவ்வளவு கூடியுள்ளது?

2022-ல் இருந்து 2023-ல் பத்து விகிதத்தால் அதிகரித்துள் ளது. காப்புறுதி அமைப்புகள் கட்டணத்தை அதிகரிக்கும் வேளையில் அவர்கள் எப்படி தங்கள் வாடிக்கையாளருக்கு உதவலாம் என விழிப்புடனே இருக்கிறார்கள். அவர்கள் வாடிக்கையாளர்களின் செலவைக் குறைப்பதுடன், அரசாங் கத்திற்கு அனுசரணையாகச் செய்யக்கூடிய செயற்பாடுக ளைச் செய்யவும் முயல்கிறார்கள்.

### வாகனக் களவுகளைத் தவிர்ப்பதெப்படி?

வாகனக் களவுகளைத் தவிர்ப்பதற்கு நீங்கள் செய்யக்கூடிய முதல் செயற்பாடு என்னவென்றால், களவு தடுப்புக் கருவி யைப் பூட்டுவது. அதிலும் மிகவும் பழமையானதும் பரீட்சய மானதுமான Steering whell lock-ஐ பூட்டுவது மிகவும் சிறப் பானதாகும். இது களவெடுப்பவர் பார்க்கும்போதே களவெ டுப்பதைத் தவிர்க்கச் செய்யும். அதேவேளை Pedal Lock-உம் தவிர்க்க உதவும்.

வாகனத்தை ஓட்டாமல் செய்வதுடன், கள்வர் எங்கு கொண்டு செல்கிறார் என்பதனையும் இக்கருவி காவலருக்கு அறிவித் துவிடும். ஆதலால் இது பயனுடையதாகும். இது இருந்தால் களவு போனாலும் மீளப்பெற முடியுமாதலால் இழப்பைத் தவிர்க்கலாம் அல்லவா?

பலரும் பெரிய வீட்டை கராஜுடன் கஷ்டப்பட்டு வாங்கி, தங் கள் வாகனத்தை ஓடு பாதையில் நிறுத்தி வைக்கிறார்கள். இது கள்வரை இயலுமானால் களவெடு என்பது போல் இருக் கிறது. தயவு செய்து வாகனங்களை அதன் தரிப்பறையில் வைத்து பூட்டி வையுங்கள்.

களவுகள் தொடர்ந்த வண்ணம் இருக்கத்தான் போகின்றது. நாங்கள் தான் கவனமாக எங்களை காத்துக்கொள்ள வேண் டும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் பொற்கொல்லன் சிலம்பைக் களவெடுத்தான் எனக் கண்ணகி கதை கூறுகிறது.

உலகில் வாகனம் கண்டுபிடிக்கப்பட்ட காலம் முதற்கொண்டு களவு இடம்பெறுகின்றது. எனவே, கவனமாக இருப்போம்.



senthuran.p@thaiveedu.com




பொதுவாகக் கூறுவதானால் குளிர்காலத்தில் பெரும்பாலான வீடுகள் Furnace மூலம் வெப்பமாக்கப்படுகின்றன. உண்மையில் வீட்டிற்குள் இருக்கக்கூடிய காற்று முழுவதையும் வெப்பமாக்குவது தான் Furnace-இன் தொழிற்பாடாக இருக்கின்றது. இதனால் வீட்டில் இருக்கவேண்டிய ஈரப்பதன் குறைவடைந்து பல பக்க விளைவுகள் ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறது. அதாவது உஷ்ணமான காற்றுச் சூழல் காரணமாக தோல் வரட்சி (Dry Skin), தொண்டை அரிப்பு போன்ற சுவாசம் சம்பந்தமான நோய்களும் வரலாம். அத்துடன் வீட்டில் உள்ள மரத் தளபாடங்களில் சுருக்கம் ஏற்படுவதால் வெடிக்கவோ அல்லது வளையவோ அல்லது உடைந்து போகவோ வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக நிலம் மரத்தினால் (Hardwood) ஆக்கப்பட்டதாக இருந்தால் அதில் பெரிய வெடிப்புகளும் உடைப்புகளும் வராதவாறு தடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

இதனை நிவர்த்தி செய்வதற்கு Humidifiers பாவிப்பது வழக்கம். ஆனால் எல்லோருக்கும் எல்லா வீடுகளுக்கும் Humidifier அவசியம் இல்லை. ஆனால் இது பற்றிய தெளிவின்மை காரணமாக பலர் பலவித அசௌகரியங்களுக்கு உள்ளாவதைக் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. ஒரு வித தரத்தை (status) உயர்த்துவதற்காகச் சிலர் இவற்றைப் போடுவது போலவும் தோன்றுகின்றது. பக்கத்து வீட்டில் போட்டிருக்கிறார்கள் நாங்களும் போட வேண்டும் என்ற மனப்பான்மை மிகத் தவறானது.

வீட்டின் தன்மை எமது பழக்க வழக்கங்கள் உள்ளக வெளிப்புற காரணங்கள் பல வீட்டில் இருக்கக் கூடிய ஈரப்பதனின் அளவைத் தீர்மானிக்கின்றது. புதிய வீடாக இருந்தால் இயற்கையாகவே சில வருடங்களுக்கு அதிகளவு ஈரப்பதன் வீட்டில் இருக்க வாய்ப்பு இருக்கிறது. அதிகமாக உள்ள ஈரப்பதனை அகற்றச் சிலர் dehumidifier பாவிப்பதைப் புதிய சில வீடுகளில் பார்க்க முடியும். அத்துடன் பல மணித்தியாலச் சமையல் வீட்டிற்குள் நீராவி மூலம் அதிகளவு ஈரப்பதனை உருவாக்குகின்றது. ஆனால் பாவனை மிகக் குறைந்த பலருடைய சமையலறைகள் இதற்கு விதி விலக்கு. பல மணிநேரம் வெந்நீரில் குளிப்பதில் உள்ள சுகம் மறுபுறத்தில் வீட்டிற்குள் அதிகளவு ஈரப்பதனையும் உருவாக்குகின்றது. கூட்டுக் குடும்பங்களாகப் பலர் வீட்டில் வசிக்கும் சந்தர்ப்பத்தில் இயற்கையாகவே ஈரப்பதன் அதிகரிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

எனவே Humidifier போட முன் நன்றாக ஆலோசித்து அலசி ஆராய்ந்த பின்னர் போடுவது தான் நல்லது. அல்லது பாம்புக்குப் பயந்து பாழுங்கிணற்றில் விழுந்த கதையாகத் தான் முடியும். நான் இங்கு கூற அல்லது உணர்த்த முற்படுவது என்னவென்றால் Humidifier ஆல் ஒரு சில நன்மை ஏற்பட்டாலும் அதனைச் சரிவரப் பாவிக்காவிட்டால் அல்லது பேணாது விட்டால் அதனால் ஏற்படக் கூடிய தீமைகள் தான் அதிகம்.

### குளிர் காலத்திற்குரிய முக்கிய குறிப்பு:




உங்கள் வீடுகளில் ஈரப்பதனின் அளவு 35%-க்கு குறைவாக இருப்பதை அவதானித்து இருக்கலாம். அல்லது எதிர்வரும் குறுகிய காலப்பகுதியில் அத்தகைய நிலை ஏற்படலாம். தவறியவர்கள் ஒரு தரம் Hygrometer ன் துணைகொண்டு பரிசீலித்து பாருங்கள். வீட்டை வெப்பமாக வைத்திருப்பதற்காக வெப்பமாக்கி தொடர்ச்சியாக இயங்குவதும் வெப்பமான காற்று மீண்டும் மீண்டும் சுழற்சி முறையில் பரப்பப்படுவதுமே இதற்குக் காரணமாகும்.

வீட்டில் இருக்கவேண்டிய ஈரப்பதனின் அளவு 30%-க்கு குறையும் பட்சத்தில் வீட்டில் பாரிய அளவிலான பாதிப்புகள் எற்பட வாய்ப்பு உள்ளது. தளத்திற்கு போடப்பட்டுள்ள hardwood-இல் சுருக்கங்கள் ஏற்பட்டு இடைவெளிகள் அதிகரிப்பது மட்

டுமல்லாது அவற்றில் வெடிப்புகளும் ஏற்படும். அது மட்டு மன்றி வீட்டில் உள்ள தளபாடங்கள், குசினி அலுமாரிகள்,



base board, drywall, இதர பொருத்துக்கள் என்பவற்றிலும் வெடிப்புக்கள் ஏற்படும். சுவாசம், தோல் சம்பந்தமான வியாதிகள் எற்படவும் வாய்ப்பு உள்ளது. எனவே ஈரப்பதனை உயர்த்த நடவடிக்கை எடுப்பது மிக முக்கியமாகும்.

Central humidifier இல்லாதிருந்தால் அதனைப் பொருத்துவதும், இருந்தும் அதனை On பண்ண மறந்தவர்கள் சரி பார்த்துக் கொள்வதும் மிக அவசியமாகும். குளிர் காலத்தில் (summer-இல் அல்ல) வீட்டிற்குள் துணி காயப்போடுவது கூட நன்மை தரக்கூடியது.

நாம் வீட்டை அழகுபடுத்துவதற்கு பல ஆயிரம் டொலர்களைச் செலவிடுவோம். ஆனால் மிக அவசியமான உஷ்ணத்தை அறியக்கூடிய வெப்பமானி, ஈரப்பதனை அறியக்கூடிய கருவி இவற்றை வாங்கிச் சுவரில் போட்டுவிட அழகு கெட்டுவிடும் என்று நினைக்கிறோமோ என்னவோ ? இதனை அறிந்துதான் இவற்றை மிக அழகான வடிவமைப்பிலும் சந்தைப் படுத்துகிறார்கள். Humidity-ஐ அளக்கும் கருவி Hygrometer என்று அழைக்கப்படும். இதன் விலை ஏறக் குறைய $ 5 டொலரில் இருந்து ஆரம்பிக்கிறது. எமது வசதிக்கேற்றவாறு Canadian Tire, Home Depot போன்ற இடங்களில் இவற்றை வாங்கிக் கொள்ளலாம். ஒவ்வொருவரது வீட்டிலும் இதனை வைத்துக் கொள்வது மிக நன்மை பயக்கும்.

வீட்டில் பேணப்பட வேண்டிய ஈரப்பதன் அளவு என்ன ? என்ற கேள்வி பலருக்கும் ஏற்படலாம். 35% தொடக்கம் 50% வரை இதமானது (Comfort Zone) என்று கூறுவார்கள். இதற்குள் வேறு பல புற நிலைகளையும் கருத்தில் கொண்டு உங்கள் வீட்டிற்கு சரியான அளவு என்ன என்பதை தீர்மானித்து விட முடியும்.

## Humidifier:

முன்னர் குறிப்பிட்டபடி உங்கள் வீட்டின் ஈரப்பதன் அளவு 35%-க்குள் இருப்பதாக நீங்கள் அறிந்தால் அதேவேளை அதிக வரட்சியான காற்றின் காரணத்தால் பல அசௌகரியங்கள் இருப்பதை உணர்ந்தால் ஒரு Humidifier போடுவதற்கான ஒழுங்குகளைச் செய்யலாம்.

Central Humidifier போடும்போது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்பவியலாளரின் (Certified Technician) துணையை நாட வேண்டி இருக்கும். Central Humidifier Furnace ன் மேற்பகுதியில் பொருத்தப்படுவதால் தகுதி வாய்ந்த தொழில்நுட்பம் தெரிந்தவர் செய்வதுதான் பாதுகாப்பானதாகும்.

அடிப்படையாக 3 வகையான Humidifiers பாவனையில் உள்ளன.

## Spray Humidifiers:

இந்த வகையானவை, FURNACE-இல் இருந்து வரும் சூடான காற்றுப் பகுதியில் தண்ணீரை தூவுதல் மூலம் (SPRAY) ஈரப்பதனை அதிகரிக்க உதவுகிறது. செலவு குறைந்ததாக இருந்தாலும் இந்த வகையானவை குறைந்தளவு ஈரப்பதனையே தரக்கூடியவை.

## Drum Humidifiers:

இந்த வகையானவை, சுழற்சி முறையில் நீரை உறிஞ்சிக் கொள்ளும் தன்மை வாய்ந்த DRUM PAD நீரை உறிஞ்சி வைத்திருக்க, FURNACE-ல் இருந்து வரும் சூடாக்கப்பட்ட காற்று இதன் ஊடாகச் செலுத்தப்படுவதன் மூலம் ஈரப்பதனை அதிகரிக்க உதவுகிறது.

## Flow Through Humidifiers:

இந்த வகையானவை, தண்ணீர் வடிகட்டியூடாகத் தெளிக்கப்பட இதனூடாகச் செலுத்தப்படும் காற்று ஈரப்பதனையும் எடுத்து வீடு முழுவதற்கும் பரப்புகிறது. சக்தி வாய்ந்ததும் காலநிலை சூழ்நிலைக்கேற்றவாறு ஈரப்பதன் அளவை நுணுக்கமாக கட்டுப்படுத்தக்கூடியதுமான தன்மைதனைக் கொண்டது இந்த வகை. பெரும்பாலும் இத்தகைய HUMIDIFIERS தான் பலராலும் பயன்படுத்தப்படுகின்றது.

மேற் கூறப்பட்ட 3 வகையான Humidifiers க்கும் Furnaceக்கும் மேற்பகுதியில் அதாவது வெப்பக் காற்று வெளிவரும் அல்லது குளிர் காற்று உள்வரும் பகுதியில் வழங்கப்படும் தண்ணீரைக் கட்டுப்படுத்துவதற்கு 'Plenum' பொருத்தப்பட்டிருக்கும். சிறிய குழாய் மூலம் இதற்கு தண்ணீர் வழங்கப்படுவதையும், மேலதிக நீர் குழாய் மூலம் வெளியேற்றப்படுவதையும், இயங்க வைக்க Furnace ல் இருந்து சிறிதளவு மின்சாரம் எடுக்கப்படுவதையும் அவதானிக்க முடியும்.

Humidifiers-ஐக் கட்டுப்படுத்துவதற்கு Humidistat (Themostat controller) பொருத்தப்பட்டிருக்கும். இது Humidifier-க்கு அண்மையில் உள்ள Duct பகுதியிலோ அல்லது வேறு அறையிலோ பொருத்தப்பட்டிருக்கலாம். சில வீடுகளில்




Themostat-க்குப் பக்கத்திலேயே இதுவும் பொருத்தப்பட்டிருக்கும்.

இக்கட்டுரையில் உள்ள மாதிரிப் படங்களைச் சற்றுக் கூர்ந்து அவதானித்தால் சம்பந்தப்பட்ட கூறுகள் பொருத்தப்பட்டிருக்கும் விதம், அவற்றின் தொழிற்பாடு என்பவற்றை மிக இலகுவாகப் புரிந்துகொள்ளலாம்.

எனது அனுபவத்தில் 75%-க்கு மேலான வீட்டு உரிமையாளர்களுக்கு Humidistat-ஐக் கையாளும் விதமும், Humidifier-இன் தொழிற்பாடும் தெரியாமல் இருப்பது கவலைக்குரியது.

Humidistat-ஐ ஒரு குறிப்பிட்ட அளவில் (40% அல்லது 45%) விட்டால் வீட்டில் உள்ள காற்று மண்டலத்தில் அந்த அளவு, குறைய விடாது பார்த்துக்கொள்ள வேண்டியதுதான் இதன் வேலையாகும். ஆனால் நான் முன்னர் குறிப்பிட்டது போல புறக்காரணிகளால் வீட்டின் மேல் தளத்தில் ஈரப்பதன் அளவு திடீரென கூடிக் குறையும்போது, அடித்தளத்தில் இருக்கும் இக்கருவி மிகத் துல்லியமாக தேவைக்கேற்றவாறு Humidifier ன் இயக்கத்தைக் கட்டுப்படுத்தாது. இந்த இடத்தில் நாங்களாக இதனை நிறுத்தவோ அல்லது கட்டுப்படுத்தவோ வேண்டி இருக்கும். வெளியில் உள்ள உஸ்ண நிலைக்கேற்றவாறும் நாம் Humidistat-ஐக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். உதாரணமாக வெளியில் குளிர் கூடும் போது நாம் Humidistat-இன் அளவை குறைக்க வேண்டும். கீழ்வரும் அட்டவணை அதனை விளக்குகின்றது.

| Out door Temperature | Suggested Setting |
|---|---|
| Celcius | % RH |
| -28 | 15% |
| -20 | 20% |
| -18 | 25% |
| -12 | 30% |
| -7 | 35% |
| -1 | 40% |

வெளியில் கடும் குளிர் ஏற்படும்போது Humidifier-ஐ நன்றாக குறைத்துவிடுவது அல்லது நிறுத்திவிடுவது நல்லது. ‘கடல் நீராவியாகி மேலே சென்று குளிர்காற்று படும் பட்சத்தில் மீண்டும் மழையாக பெய்கிறது’ என்று சிறிய வகுப்பில் படித்தது பலருக்கும் நினைவிருக்கலாம். எங்கள் வீடுகளிலும் இப்படி ஒரு நிகழ்வு ஏற்படுவதால்தான் யன்னல் கண்ணாடிகளில் ஏற்படும் குளிர் காரணமாக உட்பகுதியில் தண்ணீர் படிவு ஏற்படுகின்றது. அது சிறிது சிறிதாக அதிகரித்து பனிக்கட்டியாக யன்னல் நிலைகளில் உறையத் தொடங்கி அவற்றை உக்க வைத்துவிடும். சில வீடுகளில் யன்னல் கண்ணாடி முழுவதும் புகையடித்தது போல் நீராவி படிந்திருக்கும். தகுந்த முறையில் Humidifiier-ஐ கட்டுப்படுத்தாது விட்டால் அதனால் ஏற்படும் நன்மையை விட தீமையே அதிகமாகி காலப்போக்கில் பாரிய திருத்தச் செலவுகளை சந்திக்க வேண்டிவரும்.



velasubramaniam@thaiveedu.com






# இரு சக்கரங்கள்

- குமார் புனிதவேல்

வளமைபோல் காலை பத்து மணிக்கு சுந்தரம் தனது பலசரக்குக் கடையைத் திறந்தார். காலை வேளையில் அவருக்கு வியாபாரம் பெரிதாக இருக்காது. ஓரிருவர் அவசர தேவைக்கு வந்தால் தான் உண்டு. அதற்காக அவர் பிந்திவர முடியாது அல்லவா. அவர் கடை இருந்த பகுதியில் பல்லின மக்களும் குடியிருந்தார்கள். ஓரளவு கணிசமான தொகை இலங்கையரும், இந்திய பாகிஸ்தானியர்களும் இருந்ததால் வியாபாரம் சிறப்பாகவே நடந்தது. வளமைபோல் அன்றும் ஓய்வு நேரத்தை போக்குவதற்கு, தனது கடையில் இருந்த இலவச தமிழ் பத்திரிகை ஒன்றை எடுத்து வாசித்துக்கொண்டிருக்கும் வேளையில், ஒருவர் கடைக்குள் வந்தார். 55, 60 வயதிருக்கும். வரும்போதே வணக்கம் சொல்லிக்கொண்டு வந்தவர், கடையில் உள்ள பொருட்களைக் கையில் எடுத்து பார்த்த வண்ணம் கடையைச் சுற்றி வந்தார்.

இதற்கு சில மாதங்களுக்கு முன்பு அவரை, அவரது மனைவியுடன் கடையில் கண்ட ஞாபகம் சுந்தரத்துக்கு. கலகலப்பாக கதைத்தவர், அமைதியாக இருந்தார். உங்களுக்கு ஏதும் தேவையா? நான் எடுத்துத் தருகிறேன்' என்றார் சுந்தரம். 'இல்லை, ஒரு உதவி ...' என்றார் தயக்கத்துடன். 'பணம் இல்லை என்றால் பரவாயில்லை, எடுத்துச் செல்லுங்கள்' என்று சுந்தரம் சொல்லவும், அவசரமாக அவர் பதில் சொன்னார், 'இல்லை இல்லை, அப்படி ஒன்றுமில்லை. என்னிடம் தேவைக்கு அதிகமாய் பணம் இருக்கிறது. ஆனால்...'

'என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் என்னால் இயன்றதைத் தருகிறேன்' என்றார். பதிலுக்கு அவர் 'தம்பி எனது மனைவி சென்ற மாதம் இறந்து போனார்' என்றார்.

'எனது அனுதாபங்கள் ஐயா, ஏதாவது வருத்தம் வந்ததா?' என்று தயவாகக் கேட்டார்.

'நல்ல சுகமாகத்தான் இருந்தவர். உண்மையில் என்னைவிட அவதான் கூடிய ஆரோக்கியமாய் இருந்தவர். இந்த கொரோனா என்னும் கொடுமை, முதலில் அது இருமலாகவும், பின் சளியாகவும் மாற, மூச்சு அடைத்து போய்விட்டா மகராசி' என்றார் கண் கலங்கியபடி. 'எப்ப நடந்தது இது? எனக்கு தெரியாதே' என்று கவலையுடன் சொன்னார் சுந்தரம்.

'அவபோய் இன்றுடன் இருபத்தெட்டு நாளாகிறது...' குரல் தளதளத்தது.

'இப்ப நான் எப்படி உதவி செய்ய வேண்டும்?'

'எங்கள் வீட்டு வேலை எல்லாம் அவதான் பார்த்துக் கொள்ளுவா. வெளிவேலை, வேலைக்குப் போய் வருவது என்று நான் இருந்து விட்டேன். எனக்கு கோப்பி போடுவதைவிட சமையல் பற்றி ஒன்றும் தெரியாது. இப்ப, கடைசி ஒரு மாதத்திற்கு மேலாக மக்டொனால்ட்டும் ஓட்ஸ்சும் தான் கதி என்று இருக்கிறேன். அப்படி இல்லாதவேளை 'ரேக் அவுட்' என சாப்பாடு வாங்கி சாப்பிடுகிறேன். வீட்டுச் சமையல் இல்லாமலே நானும் செத்துவிடுவேனோ தெரியாது. அதுதான்... உங்களுக்குச் சமையல் வேலை தெரிந்த யாரையாவது தெரியுமா? எனக்கு கொஞ்சம் சமைத்து தர ஏற்பாடுசெய்ய முடியுமா?



அதற்கான காசை முன்பே தந்து வைக்கிறேன்' என்றார். அவரைப் பார்க்கப் பரிதாபகரமாய் இருந்தது. 'நாளை காலை வாருங்கள், வரும் வாடிக்கையாளர்களிடம், தெரிந்தவரிடம் கேட்டுப் பார்க்கிறேன்' என்றார் சுந்தரம்.

அன்று மதியமே தன் கடைக்கு வந்த ஒரு வாடிக்கையாளர்

மூலமாக அவருக்கு உணவு கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார் சுந்தரம். அடுத்த நாள் அவரது நண்பர் சந்துரு கடைக்கு வந்தபோது, நடந்ததை அவனுக்குச் சொன்னார். அதற்கு சந்துரு சொன்ன பதில் சுந்தரத்திற்கு ஆச்சரியத்தையும் அச்சத்தையும் கொடுத்தது. அவர் சொன்னார் 'இது ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் தான்' என்றார். 'என்னடா சொல்கிறாய்?'.

'எடேய், கனடாவில இன்டைக்கு எத்தனையோ வீடுகளில் பெண்களுக்கு டிரைவர்தான், கணவன். பெண்கள் வீட்டு விடயங்களுக்கும் ஆண்கள் வெளிவேலைகளுக்கும் என்று வாழ்கிறார்கள். இலங்கை போன்ற நாடுகளிலேயே இன்று இது செல்லுபடியாகாது. ஆனால் இஞ்ச நடைமுறையில் இருக்குது. என்று நீட்டி முழக்கினான். 'நீ என்ன சொல்கிறாய், அப்ப முன்னையோர் வாழ்ந்த விதம் பிழையா?' என்று கேட்டார்.

'மச்சான், எங்கட சண்முகத்தைப் பார். அவனுடைய மனைவியும் கார் ஓட்டுவாள். லைசன்ஸ் வைத்திருக்கிறாள். ஆனால், அவள் ஒருபோதும் கார் ஒட்டுவதில்லை. கேட்டால் அவர் ஓட்டுகிறார் தானே என்பாள்'. 'அதில் என்னடா தவறு. தேவை வரும்போது பார்த்துக் கொள்ளலாம் தானே?'.

மச்சி, அவன் ஒரு வருத்தக்காரன். ஒரு நாளைக்கு ஏதாவது தூரப் பயணத்தில அவனுக்கு மாரடைப்பு, அது இதுவெண்டு வந்தால் என்ன செய்வது? 911-ஐ அழைத்து விட்டு காத்திருக்க வேண்டியது தான். வருத்தக்காரனை வாகனத்தில் வைத்துக்கொண்டு காரோட்டாமல் இருக்கத்தான் முடியுமா?

சந்துரு கடையிலிருந்து போனபின் சுந்தரம் ஆழ்ந்து யோசித்தார். தனது மனைவி சாந்தியும் லைசன்ஸ் வைத்திருந்தாள், ஆனால் ஒரு நாளும் காரோட்டுவதில்லை. அது மட்டுமல்ல, அவளுடைய வங்கி அட்டையைக்கூட அவள் ஒருபோதும் பாவிப்பதுமில்லை, சுந்தரமும் அதற்கான எந்தவித ஊக்கமும் கொடுக்கவில்லை. தேவையுமில்லை. வரியானாலும் வட்டியானாலும் எல்லாம் சுந்தரமே செய்து வந்தார்.

ஒரு முடிவுக்கு வந்தார்.

அடுத்த முறை, இருவருமாக வெளிக்கிடும் போது சாந்தியை வாகனத்தைச் செலுத்தச் சொன்ன போது அவள் மறுத்து 'ஏன் இப்ப உங்களுக்கு என்ன நடந்தது, நீங்கள் ஒட்டுங்கோவன்' என்றாள். 'உமக்கு லைசன்ஸ் இருக்குத்தானே? நெடுகவும் கார் ஓட்டி அலுப்பாய் இருக்கு. நான் பக்கத்தில் இருக்கிறன் தானே, யோசிக்காமல் ஒட்டும்' என்றார். சாந்தியும் பல தடங்கல்களுக்குப் பின், ஒரு மாதிரி மெதுவாகச் சுந்தரத்தின் வழிநடத்தலில் காரைச் செலுத்தினாள். அன்று அவர்கள் வாழ்க்கையில் அது ஒரு திருப்பு முனை.

வாகனம் ஓட்டுதல் மட்டுமல்ல. ஒவ்வொரு விடயத்திலும் இணைந்தே பயணியுங்கள். கணவனும் மனைவியும் வண்டியின் இரு சக்கரங்கள். இணைந்தே ஓடட்டும்.



kumar.punithavel@thaiveedu.com





# மீன் சரிதை...

- வேதநாயகம் தபேந்திரன்

நான் ஒரு சிறுகதைப் பிரியன். முப்பது வருடங்களுக்கு முன் நான் வாசித்த சிறுகதை ஒன்றில் மீன் நாறும். ஆனால், மீன் வாங்கும் எனது காசு நாறாது... என ஒரு வசனம் வந்தது.

அதனை அப்பிளை பண்ணும் ஆசையில் மீன் சந்தை ஒன்றில் வயது மூத்த பெண் வியாபாரியிடம் மீனினுடைய விலையைக் கேட்டுவிட்டு இதனைக் கூறினேன்.

அவ்வளவு தான். அந்த அம்மா தூ... மழை கொட்டி விட்டார்.

நான், 'நைசாகக்' கழன்று வந்து விட்டேன்.

நாலு பக்கமும் கடல் சூழ்ந்த எமது நாட்டில் எமது உணவில் மீன் ஒரு தவிர்க்க முடியாத பாகம். சிறுதொகையில் மச்ச போசணி இல்லாதவர்களும் உண்டு.

எனது சிறுவயதில் குருநகர், பாசையூர் கடற்கரைக்கு காலையில் சென்று, வலையிலிருந்து மீன் தெரிவதைப் பார்ப்பேன். எனது பாடசாலை நண்பர்களின் தந்தையர்கள் கடற்றொழில் செய்பவர்கள். எனது சகவகுப்பு மாணவர்களாகிய அவர்கள் தந்தை மாருக்கு உதவியாக மீன் தெரிவார்கள். நானும் பொழுது 'பம்பலாக' மீன் தெரிந்து உதவி செய்வேன். அப்போது அவர்கள் வேலைக்குக் கூலி போல மீன்களைத் தந்து விடுவார்கள். குட்டுறு எனும் ஒரு வகை மீனைக் கேட்டு வாங்குவேன். அதனை நெருப்புத் தணலில் சுட்டு உண்ணும்போது அதற்குத் தனிச் சுவையிருக்கும்.

எனது ஆரம்பப் பாடசாலை நண்பர்களது வீடுகளுக்கு மங்கல நிகழ்வுகளுக்குச் சென்றால் இறைச்சிக் கறி சாப்பிட மாட்டேன். மீன் கறி தான் சாப்பிடுவேன். கடலில் பிடிபடும் அரிதான இனமுள்ள சுவையுள்ள மீன்கள் கறியாக அங்கிருக்கும்.

இது என்ன மீன் எனக் கேட்டால் அதன் பெயரைச் சொல்லுவார்கள். இது சிறிதளவு தான் பிடிபடும். நாம் இவற்றைச் சந்தையில் விற்பதில்லை. வீட்டுக் கறித் தேவைக்கு எடுத்துக் கொள்வோம் என்றார்கள்.

நான் கூடுதலாகக் களங்கட்டி மீன் வாங்குவதையே விரும்புவேன். கொழும்புத்துறை மீன் சந்தையில் வரும் மீன்கள் இந்த வகையே. மீன் துண்டு சட்டியில் முடிந்து விட்டாலும் அதன் குழம்பு ருசி தனித்துவமானது.

காலை 8 மணிக்குக் கொழும்புத்துறை, துறைமுகச் சந்தியில் இயங்கும் மீன் சந்தைக்குப் போனால், காலை ஒன்பதரை மணி வரையில் எவரும் களங்கட்டி மீன்களை வாங்கலாம். பெரிதாக அலையடிக்காத பரவைக் கடல் பிரதேசங்களில் களங்கட்டி எனும் கூட்டை அமைப்பார்கள். அதனுள் ஓடிச் சென்று உள்ளிட்ட மீன்கள் வெளியே வர வழி தெரியாமல் நிற்கும். பகுத்தறிவு அவைக்கு இல்லையாம்? அதனால் அக்கூட்டினுள் நின்று ஓடிக் கொண்டிருக்கும். அதிகாலையில் இடுப்பில் பறிக் கூட்டுடன் செல்லும் மீனவர் அவற்றை ஒவ்வொன்றாகப் பிடித்து வருவார். அவர்கள் கரைக்கு வரும்போது அவற்றில் பெரும்பாலானவை உயிரிழந்து போய் இருக்கும். சில துடித்துக் கொண்டிருக்கும். வலை ஏதும் படாமல், செதில் தேயாமல் உள்ள இந்த களங்கட்டி மீன்கள், நீண்ட நேரம் பழுதுபடாமல் இருக்கும். இவை உடன் மீன்கள். ஆதலால், சுவையில் உச்சத்திலிருக்கும். ஏனைய சந்தை மீன்களைவிட இவற்றுக்கு விலை சற்று அதிகம்.

எமது பிரதேசங்களில் உடன் மீன்களைத்தான் விரும்புவார்கள். ஐஸ் போட்ட மீன்களை அதிகம் விரும்ப மாட்டார்கள். சந்தையில் விற்க முடியாத மீன்களைத்தான், அது நாறும் கட்டத்தில் ஐஸ் போடுவார்கள் என்ற நினைப்பு மனதில் இருப்பதால் எம்மவர் ஐஸ் மீன்களை முற்காலத்தில் விரும்புவது குறைவு. ஆனால், பிற்காலத்தில் கடலில் மீனைப் பிடித்த உடனேயே ஐஸ் போடுவதனால், ஐஸ் தொடர்பான தவறான எண்ணம் பரவலாக நீங்கிவிட்டது.

மீன்களில் எனக்குப் பிடித்த முதல் வரிசைக் கதாநாயக மீன்களாக கிளாக்கன், விளை, ஓரா, ஒட்டி, ஊலா, சீலா, எறியால், கலவாய், முரல் போன்றவற்றைக் கூறலாம்.

எறியாலும், கலவாயும் மிகுந்த வழுவழுப்புத் தன்மை உள்ளவை. அதனால் சந்தையில் காசு கொடுத்தே வெட்டி விடல் வேண்டும். கிளாக்கன் மீன்களில் முதல்தர ருசியான மீன்களை காரைநகருக்கு முன்னாக உள்ள பொன்னாலைக் கடற்கரையில் தான் வாங்கலாம். களங்கட்டி மீன்கள் அவை.

ஓரா, ஒட்டி ஆகியவற்றில் பெரிய மீன்கள் தான் சுவையானது. சிறிய மீன்களில் ஒருவகைச் சேற்று மணம் அடிக்கும்.

ஊலா மிகவும் சுவையான ஒரு மீன். ஊலாவிற்கும் சீலாவுக் கும் வித்தியாசம் கண்டு பிடிப்பது வாலை வைத்துத்தான். மற் றும்படி தோற்றத்தில் ஒன்றானது.

ஊலா மீனின் வால் கறுப்பாக இருக்கும். சீலா மீனின் வால் மஞ்சள் நிறத்தில் இருக்கும். ஊலாவின் சுவைக்கு 100 மாக்ஸ் போட்டால் சீலாவின் சுவைக்கு 90 மாக்ஸ் போடலாம்.

பல வியாபாரிகள் சீலாவை ஊலா எனச் சொல்லி விற்பத னைக் கண்டுள்ளேன்.

செங்கண்ணி எனும் ஒரு மீன் உண்டு. சுவை குறைந்தது. அத னால், விலையும் மலிவு. சாப்பாட்டுக் கடைக்காரர்கள்



அதனை வாங்கிச் சுவையூட்டிப் பொரித்து விட்டு சோற்றுக்கு மீன் கறியாக வைக்கும் போது கமகமவென இருக்கும்.

என்ன இருந்தாலும் இந்தச் சாப்பாட்டுக் கடை வைத்திருக் கும் வியாபாரிகளின் திறமையைப் போற்ற வேண்டும். சுவை குறைவென நாம் கழித்து விடும் மீன்களை குறைந்த விலைக்கு வாங்கி அதற்குச் சுவையூட்டி விற்றுவிடுவார்கள்.

அதிக மீன்களைக் குறைந்த விலைக்கு வாங்க நானொரு உத்தியைக் கையாள்வேன். காலை 8 மணிக்குச் சந்தையில் மீன்கூறும் இடத்திற்குச் செல்வேன். என்னைப் போல வீட்டுத் தேவைக்கு மீன் வாங்க விரும்பும் எனக்கு அறிமுகமான அல் லது அறிமுகம் இல்லாதவர்களை ஏலத்தில் வரும் ஒரு கூறை வாங்கிப் பங்கு போடுவோமா எனக் கேட்பேன்.

ஆம், எங்களுக்கும் விருப்பம். இன்னென்ன மீன்கள் வரும் கூறுகளைப் பாருங்கள் என்பார்கள்.

அத்தகைய மீன்கள் வரும்போது, மீன் வியாபாரிகளின் கேள் விக்குப் போட்டியாக நான் கேட்கத் தொடங்கி விடுவேன். வியாபாரிகள் ஒரு அளவுக்கு மேல், தமக்குத் தோதுப்பட தென விலகி விடுவார்கள். கூறி எடுத்த மீனைப் பங்கு பிரித் தால் சந்தையில் சில்லறைக்கு விற்கும் பகுதியின் விலையின் அரைவாசி தான் வரும்.

விளை மீன், சுவையில் ஒரு வகைத் தனித்துவமானது. கடல் நீரில் வாழும் சிறிய அளவிலான மீன்களில் நெத்திலி மீனின் சுவை அலாதியானது. நெத்தலி மீன்களில் பால் சொதி வைக் கும் போது கமகமவென ஒரு அற்புதமான வாசம் வரும். சுவைதரும். நெத்திலி மீனில் ஃபேட்டி அமிலம், வைட்டமின் ஈ, செலினியம் போன்ற சருமத்திற்கு தேவையான அனைத்து சத் துக்களும் நிறைந்துள்ளது. சரும பிரச்சினையை தவிர்ப்ப தற்கு சாப்பிடும் உணவுகளில் அதிகமாக நெத்திலி மீனை சேர்த்துக்கொண்டால் சருமம் சார்ந்த எந்த வித பிரச்சினைக ளும் வராது, அத்தோடு, சருமம் பொலிவுடன் காட்சியளிக்கும் நெத்தலி, சூடை, கீரி போன்ற மீன்களைப் பொரித்து உண் ணும் போது சாப்பாட்டின் தரத்தைக் கூட்டும். சூடை, கீரி போன்ற மீன்களை தொடர்ந்து பொரித்துச் சாப்பிட்டால் கிரந் திக் குணம் காட்டிக் கால்களில் அவிச்சல் வரும். வெப்ப வல யக் கடல்களில் வாளை மீனும் கொய் மீனும் பிடிபடும். இம் மீன்கள் மிகவும் சுவையானவை. குறிப்பாக, வளை மீன்களில் 'செள்' என்று சொல்லப்படுகிற செதில்கள் கிடையாது. மாறாக, பசை போன்ற ஒருவித மாவு மாதிரியான படிவம் இதன் உடல் முழுவதும் காணப்படும். இவற்றில் முள்கள் அதிகம் இருப்பதால் அதனை விலக்கிச் சதையை மட்டும் உண்பதற்கு நேரம் எடுக்கும்.

இறால், நண்டு, கணவாய், சுறா போன்றவை எமக்குச் சுவை தந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால், தற்போது வெளிநாடு களுக்கு ஏற்றுமதியாவதாலும் பெரிய நட்சத்திர ஹோட்டல்க ளுக்குச் செல்வதாலும் மலிவு விலையில் எமக்குக் கிடைப்ப தில்லை. நண்டு பௌர்ணமி நெருங்கும் நாள்களில் வாங்கக் கூடாது. சதை வைக்காது. அமாவாசை நெருங்கும் நாள்களிற் தான் சதை வைக்கும். அப்போது தான் சுவையாக இருக்கு மென்ற பழக்கமும் உண்டு. அது உண்மையும் கூட.

சுறாவில் பால் சுறா, குரக்கன் சுறா என இருவகை உண்டு. பால் சுறா மிகவும் சுவையானது. தாய்ப் பால் சுரப்பு குறை வாக உள்ள பெண்கள், பால்சுறா கருவாட்டை அதிகமாக விழும்பி உண்பார்கள். 1990 போருக்கு முந்திய காலத்தில் மயிலிட்டிச் சுறாவின் சுவை பிரபலமானது. சிறிய சுறாவை அவித்து அதன் சதையை எடுத்து வறை செய்து சாப்பிட்டால் அற்புதமான சுவையாக இருக்கும். அது போலத் திருக்கை யையும் அவித்த பின்பாக, இலைக்கறி சேர்த்து வறை செய்து சாப்பிட்டால் அதன் லெவல் வேறு வகை. திருக்கைக் கறியும் அற்புதமான ஒரு சுவையானது.

அலை அடிக்காத பரவைக் கடலில் மட்டி பிடித்து, அதனை அவித்து, அதன் சிப்பி பிளந்து வர அதன் சதையை எடுத்து கறி வைத்து உண்ணும் வழக்கம் இருக்கிறது. அற்புதமான சுவையான ஓர் உணவு.

வெள்ளி, செவ்வாயென்ன எந்த விரதமாக இருந்தாலும் எமக்கு மீன் இருந்தால்த்தான் மதியம் சோறு வயிற்றுக்குள் இறங்குமென பிடிவாதம் பிடிக்கும் ஒரு கூட்டம் இருந்தது. தற் போதும் இரகசியமாக இருக்கின்றது.

இதற்காகவும் தூய்மை கருதியும் மச்சத்துக்கு ஒரு குசினி சைவத்துக்கு ஒரு குசினியென வீடுகளில் வைத்திருக்கும்

மரபு முன்னாளில் பிரபலமானது. இன்றும் இக்குசினிகள் யாழ்ப்பாணத்தில் காணப்படுகிறது.

ஒரு காலத்தில் இரவு நேரத்தில், கடலில் சூழ் எனும் தீப் பந்தத்தைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் வழக்கம் இருந்தது. ஒருவர் இடுப்பளவுக்குக் குறைந்த நீரில், அரையில் பனை ஓலையால் இழைத்த கூடையை கட்டியிருப்பார். அதற்கு சொந்தை என்று பெயர். அதன் அடிப்பக்கம் அகன்றும் வாய்ப்பக்கம் ஒடுங்கியும் இருக்கும். கையிலுள்ள தீப்பந்தத்தை வைத்தபடி கடலில் உலாவுவார். மீன்கள் அந்த வெளிச்சத்தைக் கண்டு தண்ணீரின் மேல் பகுதியை நோக்கி வரும். அப்போது பச்சைப் பனை மட்டையால் தண்ணீரை நோக்கிப் பலமாக அடிக்க மீன்கள் மயங்கும். மயங்கிய நிலையில் மீன்கள் மிதக்க அம்மீன்களை அப்படியே அள்ளிக் கூடையில் இடுவார்கள். இந்தச் சூழ் மீன்களை வாங்குவதற்கென வாடிக்கையாளர் கூட்டமொன்று காத்திருக்கும். இந்த மீன்களது சுவை அதிகம். தற்போது இது தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையாகிவிட்டது.

திரளி, சூவாப்பாரா, பாரை, கருங்கண்ணிப்பாரை, துள்ளுமண்டை, செவ்விளை, என மீன்களின் வகைகளும் அதற்கேற்ப சுவைகளும் மாறுபட்டவை. அவற்றையும் அதன் சுவைகளையும் சொல்லப் போனால் பட்டியல் நீளமானவை.

மீன்களுக்கும் எமது உணவுப் பழக்க வழக்கத்துக்குமான நெருக்கம் மிக நீண்ட வரலாற்றை உடையது. அதன் கதைகள், கிளைக் கதைகள் ஏராளம். 1983 யூலை 25 இனவழிப்புக்கு முந்திய காலத்தில் தமிழர் தாயகப்பகுதி எங்கும் கடற்றொழில் ஓகோவென இருந்தது.

மண் சுவர் வைத்த ஓலைக் கொட்டில் குசினியில் சமைத்து, பூனை தின்னாத வகையில் உறிகட்டி மீனை வைத்த கதைகள் பழங்கதைகளாகவே போய்விட்டன.

பிறிட்ஜ் எனும் குளிர்சாதனப் பெட்டி தெரியாத காலத்தில் மீன்களை அவித்து உறியில் மண் சட்டியால் மூடி வைத்தல், அவித்த மீனை நல்லெண்ணை விட்டுப் பொரித்து மூன்றாம் நாளும் பாதுகாத்து வைத்துச் சமைத்து உண்ணல் என்ற இனிய பண்பாட்டு அம்சங்கள் காலாவதியாகிப் போன காலமாகிவிட்டன.

தீயல் கறி எனச் சுவையான ஓர் உணவு தயாரிக்கும் பழக்கமும் யாழ்ப்பாணத்தில் இருந்தது. ஆனால், மட்டக்களப்பில் இன்றும் தீயல் கறி உள்ளது என்பது மனதுக்கு நிம்மதி.

மீன் சரிதையைச் சொல்லப் புறப்பட்டால் அதன் நீளம் மிக மிக அதிகம்.

தாய் மண்ணைப் பிரிந்து பிற மாகாணங்களில் இருப்பவர்களும், பிற நாடுகளில் இருப்போரும் தமது உணவில் சுவையான பாகத்தை வகித்த மீன்களின் கதைகளை, கதைகதையாகக் கூறுவார்கள்.



thabendran.v@thaiveedu.com



# சிறுவர் உரிமைகளைச் சீரழிக்காதே!

– சி. நற்குணலிங்கம்



1989-இன் வயது வந்தவர்கள் திருத்தச்சட்டத்தின்படி சிறுவர்கள் என்போர் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் என ஐக்கிய நாடுகள் சபை வரையறுக்கின்றது. சிறுவர்கள் மென்மையானவர்கள் என்றவகையில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக அதிகம் பேசப்படுகின்றது. சிறுவர் உரிமை தொடர்பாகச் சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் பல சமவாயங்களும் சட்ட ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. எதிர்கால உலகம் இன்றைய சிறுவர்களில் தங்கியுள்ளதால் ஒவ்வொருவரும் சிறுவர்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பது தெளிவாகின்றது. சிறுவர்கள் தம் உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய சிறப்பான நிலை நிலவினாலேயே எதிர்கால உலகு அமைதியாகவும் சுபீட்சமாகவும் காட்சியளிக்கும். சிறுவர்கள் சமூகச் சக்கரத்தில் மிகவும் முக்கியத்துவம் மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களைப் புறந்தள்ளும் சமூகங்களோ நாடோ எதிர் காலத்தில் பாரிய பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்படும் என்பதனை மறுப்பதற்கில்லை. இந்நிலையில் சிறுவர்களின் உரிமைகளை உரியவாறு உறுதிப்படுத்துவதே அபிவிருத்திக்கு வலுச்சேர்க்கும் ஆகையால் சிறுவர்களின் உரிமைகள் குறித்துக் கவனம் செலுத்தவேண்டியது அனைவரதும் பொறுப்பாகும். உலகளாவியரீதியில் சிறுவர்களை மகிழ்விக்கும் நோக்கிலும் அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலும் அவர்களுக்கென்று ஒரு தினம் கொண்டாடப்படுகின்றது. ஆனால் தத்தமது உரிமைகள் மீறப்படுவதைக்கூட அறியாதவர்களாகவே பெரும்பாலான சிறுவர்கள் இருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

உலகில் வாழுகின்ற மக்களில் 1/3 பங்கினர் சிறுவர்களாவர். எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் இருக்கும் சிறுவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படுகின்றனர். மேலும் 12 மில்லியனுக்கு அதிகமான சிறுவர்கள் பல்வேறு காரணங்களினால் நிர்க்கதியாகி உள்ளனர். இலங்கையில் 92% ஆனோர் கல்வி அறிவு பெற்றவர்களாகக் குறிப்பிடப்படுகின்ற போதிலும் சிறுவர்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுதல் ஆரோக்கியமானதன்று. பாதிப்பிற்குள்ளாகும் பிள்ளைகள் தவறான பாதையில் சென்று பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதனாலேயே சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென ஒரு தினத்தைப் பிரகடனப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டது. அத்தினமே நவம்பர் 20-ம் திகதியாகும்.

19-ம் நூற்றாண்டில் இருந்தே சர்வதேசரீதியாக சிறுவர்கள் தொடர்பான கரிசனை இருந்து வந்துள்ளது. சர்வதேசரீதியாக 1924-ம் ஆண்டு ஜெனீவா சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டபோதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதன் பின்னர் 1948-ம் ஆண்டு ஐ.நா. சபையினால் உருவாக்கப்பட்ட அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் சிறுவர் உரிமைகள் தொடர்பாகக் கூறப்பட்டபோதிலும் போதிய அளவு சாதகமான விளைவுகளை ஏற்படுத்தாத நிலையில் 1959-ல் ஐ.நா. பொதுச்சபையினால் சிறுவர் நலனைப் பாதுகாக்கும் 10 அம்சங்களை உள்ளடக்கிய சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டது. இப் பிரகடனமும் 1924-ம் ஆண்டு பிரகடனத்தைப் போன்றே சட்டவலுவற்றதாகக் காணப்பட்டது.

1989-ம் ஆண்டு ஐ.நா. சபையால் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் உருவாக்கப்பட்டது. இது 1990-ல் நடைமுறைக்கு வந்தது. இச் சமவாயத்தை இலங்கை 1991 யூலை 12-ல் ஏற்று அங்கீகரித்துள்ளது. ஐ.நா. சபையின் சிறுவர் உரிமைகள் பிரகடனத்தில் 54 உறுப்புரைகள் காணப்படுகின்றன. இவற்றில் 2-ம் உறுப்புரை தொடக்கம் 42-வது வரையான 41 உறுப்புரைகள் சிறுவர் உரிமைகளை நேரடியாக வலியுறுத்துகின்றன. சிறுவர் உரிமை தொடர்பான சர்வதேச சமவாயமானது சிறுவர்களின் பல்வேறு உரிமைகளையும் சுட்டிக்காட்டுகின்றது.

உறுப்புரை இரண்டு, பாகுபாடு காட்டாமை: இன, மத, மொழி, சாதி, பால், வர்க்க, நிற வேறுபாடுகள் காட்டாமல் அனைத்து சிறுவர்களும் தம் உரிமைகளை அனுபவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என இந்த உறுப்புரை கூறுகின்றது. உறுப்புரை 9 பெற்றோரைப் பிரிதல் தொடர்பானதாகும். இம்சை, புறக்கணிப்பு ஏதாவது ஏற்பட்டாலே பிரிந்து வாழ நேரிடும். தாய் அல்லது தந்தையிடம் இருந்து பிரிந்தாலும் அவர்களுடன் உறவினை ஏற்படுத்த முடியும். ஏனைய சந்தர்ப்பங்களிலும் பெற்றோருடன் வாழும் உரிமை சிறுவர்களுக்கு உண்டு. உறுப்புரை 13-ல் கருத்துச் சுதந்திரம் பற்றிக் கூறப்படுகிறது. பிறரின் உரிமைகளை மீறாவகையில் தமது எண்ணங்களைத் தங்குதடையின்றி வெளியிடவும் தகவல்களைப் பெறவும் தன் கருத்தை அல்லது தகவலைத் தெரியப்படுத்தவும் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமை உண்டு. உறுப்புரை 14-ல் சிந்தனை, மனச்சாட்சி, மத சுதந்திரம் பற்றிய விடயங்கள் உள்ளன. பெற்றோரின் முறையான வழிநடத்தலுக்கும் தேசிய சட்டத்திற்கும் அமைய இச் சுதந்திரங்களை வெளிப்படுத்த ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமை உண்டு. உறுப்புரை 15 கூடும் சுதந்திரம் பற்றியதாகும். பிறரின் உரி

மைகளை மீறாத வகையில் பிறருடன் சேர்வதற்கும் சங்கங் களை அமைக்கவும் அல்லது அவற்றில் அங்கம் பெறவும் சிறுவர்க்கு உரிமை உண்டு.

உறுப்புரை 24-ல் சுகாதாரமும் சுகாதார சேவைகளும் குறித்த விடயங்கள் உள்ளன. மிக உயர்ந்த தராதரமுடைய சுகாதாரத்தையும் பராமரிப்பையும் பெறும் உரிமை பிள்ளைக ளுக்கு உண்டு. உறுப்புரிமை 28-ல் கல்வி பயிலும் உரிமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. உறுப்புரிமை 30-ல் தமது சொந்த கலாசாரத்தை அனுபவிக்கவும் தமது சொந்த மதம், மொழி ஆகியவற்றைப் பயிலவும் சிறுவருக்கு உரிமை உண்டு என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. உறுப்புரை 32-ல் பொருளாதார ரீதியான சுரண்டலில் இருந்தும் கல்வி, ஆரோக்கியம், உடல், உளம் மற்றும் அற ஒழுக்கம் என்பவற் றைப் பாதிக்கக்கூடியதும் ஆபத்தானதுமான வேலைகளிலி ருந்தும் பாதுகாப்பைப் பெறும் உரிமை பற்றிக் குறிப்பிடப்பட் டுள்ளது. உறுப்புரை 34-ல் விபசாரம் மற்றும் பாலியல் நடவ டிக்கைகளில் ஈடுபடுத்தல் என்பவைகளிலிருந்து பாதுகாப் பைப் பெறும் உரிமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. உறுப்புரை 37-ல் சித்திரவதை, துன்பம், தண்டம், சட்டவிரோதக் கைது அல்லது சுதந்திரத்தை மறுத்தல் ஆகியவற்றுக்கு ஆளாக்கப் படலாகாது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.


சர்வதேச தொழில் தாபனத்தின் சமவாயங்கள் கூறுவதாவது, சிறுவர்களை வேலைக்கு அமர்த்தலை இல்லாதாக்குவதற் காக ஆக்கப்பட்ட முக்கிய சமவாயம், 1973-ம் ஆண்டு 138-ம் இலக்க ஆகக் குறைந்த வயது பற்றிய சமவாயமாகும். இதனை இலங்கை 2000-ம் ஆண்டு ஏற்று அங்கீகரித்துள் ளது. ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையும் சிறுவர் களின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்புகின்றது. குறிப்பாகப் போரில் சிறுவர்களை ஈடுபடுத்தல், கடத்தல், கொலை செய் தல், பாலியல் துஷ்பிரயோகம் போன்றவற்றைத் தடுப்பதற்கா கச் சிறுவர் உரிமை மீறல்களில் ஈடுபடும் நாடுகளின் மீது விமர்சனங்களையும், விசாரணைகளையும், தடைகளையும் மேற்கொண்டு வருகின்றது. 2001-ம் ஆண்டின் 10-ம் இலக்க சர்வதேச சிறுவர் கடத்தல் சம்பந்தமான குடியியல் சமவாயம் சிறுவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு எதிராகப் போராடி வரு கின்றது.

உலகளாவிய ரீதியில் அணுகும்போது சிறுவர் உரிமைக ளைப் பாதுகாக்கவென்று ஐ.நா. சபை பல்வேறான வேலைத் திட்டங்களை உலக அளவில் முன்னெடுத்து வருகின்றமை யாவரும் அறிந்ததே. UNICEF, SAVE THE CHILDREN, GIO-BAL CHILDREN, CHILDREN INTERNATIONAL போன்ற சர்வ தேச நிறுவனங்கள் சிறுவர்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வருகின்றன. உலகில் சிறுவர்களைப் பாதுகாப்ப தற்காகச் சட்ட ஏற்பாடுகள் பல காணப்பட்டபோதிலும் சிறு வர் உரிமைகள் மீறப்படுவது தொடர்ந்துகொண்டே உள்ளது. சர்வதேச சிறுவர் நிதியம், சர்வதேச நிறுவனங்கள் முதலா னவை யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப் படும் சிறுவர்களுக்குப் பல்வேறு வகையான உதவிகளை வழங்குவதோடு கடத்தல், பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகுபவர்களுக்குச் சட்ட ஆலோசனை மற்றும் உதவி களை வழங்குகின்றது.

உலகைக் காப்பதற்கு தயாராகும், பாதுகாவலராக இருக்கும் சிறுவர்கள் வாழும் சூழல் அவர்களின் எதிர்கால வாழ்க்கை யில் தாக்கம் செலுத்துகிறது. அதற்கமைய உலகளாவியரீதி யில் ஏற்படுகின்ற யுத்தங்கள், உள்நாட்டுப் பிரச்சினைகள் என்பன அதிகளவில் நேரடியாகச் சிறுவர்களையே பாதிக் கின்றது. சிறுவர்களை உடல்ரீதியாக, உணர்வுரீதியாகப் பாதிப்படையச் செய்தல், பாலியல் துஸ்பிரயோகம், புறக்க ணித்தல், வர்த்தகம் அல்லது வேறு விடயங்களுக்காக அவர் களைச் சுரண்டல் போன்றவற்றின் மூலம் அவர்களின் ஆரோக்கியம், உயிர் வாழ்தல், வளர்ச்சி மற்றும் கௌரவம் போன்றவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்தல் ஆகிய சிறுவர் பாதுகாப்பு மீறல்கள் பல்வேறு வடிவங்களில் இன்றும் அரங் கேற்றப்படுகின்றன. சிறுவர் துஸ்பிரயோகமானது இன்றைய உலகம் எதிர்நோக்கும் மிக முக்கிய சமூகப் பிரச்சினைக ளுள் ஒன்றாக முன்னிற்கிறது. வளர்ச்சி யடைந்த நாடுகள், வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் என உலக நாடுகள் முழுவ திலும் காணப்படும் பிரச்சினையாக இது உள்ளது. உலகளா விய அளவில் 1.7 பில்லியன் அளவிலான சிறுவர்கள் துஸ்பிர யோகங்களை எதிர்கொள்கின்றனர்.

உடல், உள உணர்ச்சி மற்றும் புறக்கணிப்புரீதியிலான சிறு வர் துஸ்பிரயோகத்திற்கு சமூகங்களின் பொறுப்பற்ற தன்மை மற்றும் நம்பிக்கைகள், கட்டமைப்புக்கள், குடும்பப் பொருளா தாரச் சிக்கல்கள், பெற்றோரின் பராமரிப்பு போதாமை, சுகா தாரம் தொடர்பான இடர்பாடுகள், கல்வியில் தெளிவின்மை, போதைப்பொருள் பிரச்சினை, கோபம் மற்றும் வெறுப்பு, தாழ்வு மனப்பான்மை சார்ந்த உளவியல் பிறழ்வுகள் மற்றும் யதார்த்தமற்ற எதிர்பார்ப்புகள், தவறான வழிகாட்டல்கள், ஆகியவை மூலம் சிறுவர்களது முன்னேற்றத்தில் தடைகள் அதிகரிக்கின்றன. இவ்வாறாயின் சிறுவர் உரிமைகள் எங்கே செல்கின்றது? சிறுவர்களுக்கு இல்லையா முழுப்பாது காப்பு? இதனைத் தடுப்பதற்கு மக்கள் விழிப்புணர்ச்சி பெறு வதுடன் இதனைத் தத்தமது பொறுப்புணர்ந்து செயற்படுதல் வேண்டும். சிறுவர் உரிமைகள், அதன் சட்ட முறைகள் அவற் றைக் கையாளும் நெறிகள் போன்றவற்றைச் சமுதாயத்தின் ஒவ்வொரு தனிநபரும் அறிந்திருத்தல் கட்டாயமாகும். அத்து டன் சிறுவர் உரிமைகள் எல்லோராலும் மதிக்கப்பட வேண் டும். சிறுவர்கள் தம் உரிமைகளைச் சம்பாதிக்க வேண்டிய தில்லை. அவர்கள் இந்த உரிமைகளை கொண்டிருக்க வேண்டும் என்று சட்டம் கூறுகின்றது.

சிறுவர்கள் நடைப்பிணமாக வாழும் நிலைமை ஏற்படுகின் றது. எனவே பிஞ்சுகளைச் சிதைக்காது நாட்டிற்குப் பொருத் தப்பாடு உடையவர்களாக, விழுமியங்களைப் பின்பற்றுபவர் களாகச் செதுக்குவதே அவசியமான ஒன்றாகும் என்பதனை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். சிறுவர் உலகம் என்பது வாழ்நாளில் மிகவும் சிறப்பான ஒரு பகுதியாகும். இந்த உலகத்தில் சிறுவர்கள் சுதந்திரமாகச் செயற்பட இடம ளித்தல் வேண்டும். அவர்களின் இயல்பான திறமைகள் மழுங் கடிக்கப்படக்கூடாது. அவர்களது உரிமைகளை வேரறுத்து அவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கும் நிகழ்வுகள் நடை பெறக் கூடாது. எனவே எல்லோரும் ஒன்றுபட்டு சிறுவர் உரி மைகளைப் பாதுகாப்போமாக. சிறுவர் உலகம் சிறுவர்களுக்கே.



natkunalingam@thaiveedu.com

# இலக்கியத் தோட்டத்தின்
# இயல் விருது விழா 2023

**ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்ற இலக்கிய தோட்டம் அமைப்பின் 'இயல் விருது விழா 2023' இவ்வாண்டும் ஒக்ரோபர் 20–ஆம் நாள் ரொறண்றோவில் நடைபெற்றது. இதில் பல்வேறு துறைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுமைகள் பலருக்கும் விருதுகள் வழங்கிச் சிறப்புகள் செய்யப்பட்டன. இந்நிகழ்வில் பல்வேறு அறிஞர்களும் சான்றோரும் கலந்து சிறப்பித்து இருந்தனர். விருது பெற்றோர் பற்றிய தகவல்களைக் கீழே காணலாம்**



இயல் விருது
**ஆர். பாலகிருஷ்ணன்**
Lifetime Achievement Award
Recipient: R. Balakrishnan

**சி**ந்துவெளி ஆய்வாளராகிய திரு ஆர். பாலகிருஷ்ணன். இந்திய ஆட்சிப்பணி அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 'தமிழ் ஒரு மாநிலத்தின் மொழியல்ல. அது ஒரு நாகரிகத்தின் மொழி' என்றும் 'சங்க இலக்கியம் இந்தியத் துணைக் கண்டத்திற்கான இலக்கியம் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வரும் இவர், திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் 1958-இல் பிறந்தார். முதுகலை தமிழ் இலக்கியமும் இதழியல் பட்டயமும் பெற்று பத்திரிகையாளராகப் பணியைத் தொடங்கினார். பின்னர், இந்தியக் குடிமைப்பணித் தேர்வுகளை தமிழிலேயே முதன் முதலில் எழுதி வென்று 1984-ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணியில் ஓடிசா மாநிலத்தின் பணித்தொகுதியில் இணைந்தார். தற்போது இவர் சென்னையிலிருக்கும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் ஓர் அங்கமான சிந்துவெளி ஆய்வு மையத்தின் மதிப்புறு ஆலோசகராகவும் செயற்பட்டு வருகிறார்.

'நான் ஒரு தமிழ் மாணவன், அதுவே எனது அடையாளம்' என்று கூறும் பாலகிருஷ்ணன் தனது வாழ்நாள் முழுக்க இடையறாது பழந்தமிழ் இலக்கியம். சிந்துவெளிப் பண்பாடு ஆகியவற்றிற்கான ஆய்வுகளில் ஈடுபட்டு வருபவர். சிந்துவெளிப் பண்பாடு மற்றும் தமிழ்த் தொன்மங்களின் தோற்றுவாய் குறித்த புரிதல்களுக்கு இடப்பெயராய்வுகள் வலிமை தரும் என்பதைச் சான்றுடன் நிறுவியுள்ளார். இந்தியாவை 'உருக்குப் பானை' என்று சொல்வதற்குப் பதிலாக இந்தியத் துணை கண்டத்தின் பன்மியத்தை ஆழமாக வலியுறுத்தும் 'இந்தியா ஒரு மழைக்காடு' (Rain forest) என்கிற கருத்தாக்கத்தைத் தொடர்ந்து பொதுவெளியில் பேசியும் எழுதியும் வருகிறார்.

இந்தியவியல், மானிடவியல், தொல்லியல், இடப்பெயராய்வு ஆகியவை இவரது முனைப்புக் களங்களாகும். சிந்துவெளிப் பண்பாடு செழித்த 'கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை' ஆய்வுலகின் கவனத்திற்கு இவர்தான் முதன் முதலாகக் கொண்டுவந்தார். 'சிந்துவெளி நகரங்களின் மேல் மேற்கு கீழ் கிழக்கு வடிவமைப்பும் அதன் திராவிட அடித்தளமும்' என்கிற தலைப்பிலான இவரது ஆய்வு பரவலாகக் கவனம் பெற்ற ஒன்றாகும். சிந்துவெளிப் பண்பாட்டிற்கான திராவிட அடித்தளத்தைப் பண்பாட்டு ஆய்வுகளின் பின்புலத்தினை நிறுவியவர் பாலகிருஷ்ணன். இவரது சிந்துவெளி ஆய்வுகளுக்காகப் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் 2017-இல் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கியது.

'திராவிட மொழியியலையும், சிந்துவெளிப் புவியியலையும் பிணைத்து ஒரு புதிய கருதுகோளை இவர் படைத்துள்ளார். அதன் மூலம் சிந்து நகர மக்கள் திராவிட மொழிகளையே பேசியிருக்கவேண்டும் என்ற வரலாற்று உண்மையை அறிவியல் அடிப்படையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் மீண்டும் நிறுவியுள்ளார்' என்று கூறுகிறார் சிந்துவெளி ஆய்வாளரான ஐராவதம் மகாதேவன்.

சிந்துவெளி நாகரிகம் பற்றி முதன்முதலாக 1924 செப்ரெம்பர் 20-இல்தான் லண்டனில் வெளியான ஓர் இதழில் அன்றைய இந்தியத் தொல்லியல் கழகத் தலைமை இயக்குநர் சேர் ஜான் மார்ஷல் அறிவித்தார். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு சிந்துவெளி நாகரிகத்துக்கும் பண்டைய தமிழகத்திற்கும் உள்ள உறவு குறித்த பாலகிருஷ்ணன் எழுதிய 'Journey of a Civilization: Indus to Vaigai' என்கிற நூல் வெளியானபோது, அது சிந்துவெளி ஆய்வுலகில் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. பின்னர் வெளியான அதன் தமிழ்ப் பதிப்பான 'ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை' என்ற நூல் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. தனது முப்பது ஆண்டிற்கும் மேலான ஆராய்ச்சியில் உருவான இந்த நூலை மக்கள் பதிப்பாகக் கொண்டுவர தமிழ்நாடு அரசிற்கு அனுப்பியுள்ளார்.

திருக்குறள், சங்க இலக்கியம் ஆகிய இரண்டையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதை தனது வாழ்நாள் பணியாகச் செய்து வருகிறார் பாலகிருஷ்ணன். அவரின் அனைத்து உரைகளிலும் எழுத்துகளிலும் இவ்விரண்டின் தாக்கம் அதிகமாக இருக்கும். திருக்குறளைப் 'பொதுமறை' என்பதே பொருத்தம் என வாதிடும் இவர், திருக்குறளின் அக உலகை இன்றைய தலைமுறையினருக்கு ஏற்ற வகையில் நாட்டுக்குறள் (2016) என்ற பெயரில் ஒலிப்பேழையாகவும் நாட்டுப்புறப் பாடல்களாகவும் வெளியிட்டுள்ளார். பன்மாயக் கள்வன் (2018), இப்படி ஒரு தீயா? (2023) ஆகிய இரு நூல்களும் சமகாலத்திற்கேற்ற இவரது குறள் தழுவிய காதல் கவிதைகளின் தொகுப்புகளாகும். மேலும் அன்புள்ள அம்மா (1991) சிறகுக்குள் வானம் (2012) ஆகிய கவிதை நூல்களை எழுதியுள்ளார். தனது வாழ்கை அனுபவங்களை இரண்டாம் சுற்று (2018), குன்றென நிமிர்ந்து நில் (2018) தமிழ் நெடுஞ்-சாலை (2022) ஆகிய நூல்களின் வழியே பகிர்ந்துள்ளார்.

சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம் (2016). Journey of a Civilization: Indus to Vaigai (2019), கடவுள் ஆயினும் ஆக (2021), அணி நடை எருமை (2022), ஓர் ஏர் உழவன் (2022), ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை (தமிழ்ப் பதிப்பு) (2023) ஆகியவை இவரது ஆராய்ச்சி நூல்களாகும். இத்துடன் பல்வேறு முக்கியமான ஆய்விதழ்களில் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

'சிந்துவெளி விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றே என்று கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து வலியுறுத்திவரும் இந்தியவியல், திராவிடவியல், சிந்துவெளி ஆய்வாளரான ஆர். பாலகிருஷ்ணன் அவர்களைப் பாராட்டி கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் அவருக்கு 2023-ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனையாளருக்கான இயல் விருதை வழங்கியது.



## றஷ்மி

### புனைவுப் பரிசு
### சற்றே பெரிய கதைகளின் புத்தகம்
### Fiction Award A.M. Rashmy

**ஓ**வியமும் சித்தரிப்பும் கவிதையும் சிறுகதையில் ஒன்றுகூடும் அற்புதத்தைத் தமிழில் நிகழ்த்தும் அரிய கலைஞனான றஷ்மி 'சற்றே பெரிய கதைகளின் புத்தகம்' என்கிற நூலுக் காக 2023-ஆம் ஆண்டுக்கான புனைவு விருதைப் பெற்றுள்ளார். கிழக்குக் கரையோரம் அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவர் றஷ்மி. 1990-களில் இலங்கையிலிருந்து வெளியான 'சரிநிகர்' வார இதழில் ஓவியராகவும் வடிவமைப்பாளராகவும் பணியாற்றியவர்.

கவிதைகள், சிறுகதைகள், ஓவியங்கள் போன்றவற்றைச் தன் சிறப்பு துறைகளாகக்கொண்ட றஷ்மி இலண்டனுக்குப் புலம் பெயர்ந்த பிற்பாடு அங்குள்ள நோர்தாம்ப்ரன் பல்கலைக்கழகத்தில் (University of Northampton) ஓவியத் துறையிலும் வரைகலையிலும் இளமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்றார். தமிழின் முக்கியமான பல பதிப்பகங்களின் நூற்றுக் கணக்கான நூல்களுக்கு அட்டைப்படம் தீட்டியிருக்கிறார். எழுத்தாளர்கள், கலைஞர்கள் நூற்றுக்கணக்கானோரின் உருவப்படங்களை றஷ்மி புதிய பாணியில் வரைந்திருக்கிறார்.

காவுகொள்ளப்பட்ட வாழ்வு முதலாய கவிதைகள், ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு, ஈதேனின் பாம்புகள், 'ஈ' தனது பெயரை மறந்து போனது, அடைவுகாலத்தின் பாடல்கள் ஆகியன இவரது கவிதைத் தொகுதிகள். றஷ்மியின் முதலாவது சிறுகதைத் தொகுதி. 'சற்றே பெரிய கதைகளின் புத்தகம்' (2023)-இல் காலச்சுவடு வெளியீடாக வந்துள்ளது.





## ப. விக்னேஸ்வரன்

### அல்புனைவுப் பரிசு
### நினைவு நல்லது
### Non–fiction Award P. Wikneswaran

தன் வரலாற்றையும் சமூக வரலாற்றையும் இணைத்திருக்கும் 'நினைவு நல்லது' நூலுக்காக அல்புனைவு விருது பெறும் ப. விக்னேஸ்வரன் தமிழ் ஒலி, ஒளி ஊடகராக ஐம்பது வருடங்களை நிறைவு செய்தவர். யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் கல்வித்தராதர உயர்தரத்தில் இரண்டாம் ஆண்டு மாணவனாக இருந்தபோது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தயாரிப்பு உதவியாளராகப் பணிக்குச் சேர்ந்து அதே ஆண்டு பகுதி நேர அறிவிப்பாளர் தெரிவிலும் தேர்வு செய்யப்பட்டார். 1976-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வர்த்தக சேவையின் தயாரிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று 1978 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவையின் பிரதான நாடகத் தயாரிப்பாளராகப் பொறுப்பேற்றுத் தயாரித்த நாடகங்கள் மக்கள் மத்தியில் அவரை ஒரு முக்கிய வானொலி நாடகத் தயாரிப்பாளராக அடையாளம் காட்டின.

1982-ஆம் ஆண்டு முதல்முதலாக இலங்கையில் தேசிய தொலைக்காட்சி சேவை 'ரூபவாஹினி' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதலாவது தொகுதிப் பணியாளர்களில் ஒருவராக நிறைவேற்றுத் தயாரிப்பாளர் என்ற பணியில் இணைந்த இவர் 1984-ஆம் ஆண்டு ரூபவாஹினித் தொலைக்காட்சி சேவையில் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதலாவது தலைவராகவும் பொறுப்பேற்றார். 1991-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் கனடாவுக்குக் குடிபெயர்ந்து தமிழ் விஷன், ரொரன்ரோவின் முதலாவது பல்கலாசாரப் பண்பலை வானொலிச் சேவையான சீ.எம்.ஆர் ஆகியவற்றில் முக்கியமான பாத்திரங்களை வகித்தார்.

'தேடகம்', 'மனவெளி' போன்ற அமைப்புகளுக்காகப் பல நாடகங்களை நெறிப்படுத்திய இவர் நோர்வேயின் புகழ் பெற்ற நாடகாசிரியரான ஹென்றிக் இப்சனின் A Doll's House நாடகத்தை மொழிபெயர்த்துக் கனடாவில் மேடையேற்றி பெரும் வரவேற்பைப் பெற்றதோடு தமிழ் நாடக வரலாற்றிலேயே மிகச் சிறப்பான இடத்தைப் பெற்ற நாடகம் என்ற புகழையும் பெற்றார்.

## பார்வதி கந்தசாமி


### இலக்கியம் மற்றும் சமூகப்பணி சாதனை விருது
### Special Recognition Award
### Recipient: Parvathy Kanthasamy

2023-ஆம் ஆண்டுக்கான இலக்கியம் மற்றும் சமூகப்பணி சாதனை விருதைப் பெற்ற பார்வதி கந்தசாமி, வன்னியின் குமுளமுனையில் தங்கராசா சின்னப்பிள்ளை இணையரின் பிள்ளையாகப் பிறந்த இவர், ஆரம்பக் கல்வியை குமுளமுனை பாடசாலையில் படித்து, உயர் வகுப்புக் கல்வியை வித்தியானந்தா கல்லூரியில் பயின்று, பின்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் சிங்கள - தமிழ் மாணவர்களுக்குள் அதிக பெறுபேறு பெற்று புலமைப் பரிசிலையும், அவுஸ்திரேலியாவில் மொனாஸ் பல்கலைக்கழகத்து புலமைப் பரிசிலையும் வென்று 1981-இல் மொழியியல் கலாநிதியானார்.

வித்தியாலங்காரா, யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகி, பின்னர் Senior Fulbright Fellowship பெற்று அமெரிக்காவிலுள்ள Stanford பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறை ஆய்வுநிலை அறிஞராகத் தமிழ் மொழியை கற்பிக்கும் வாய்ப்பை பெற்றார். ரொறன்ரோ யோர்க் பல்கலைக்கழகத்தில் அகதிகள் கற்கை நெறியில் புலமை பெற்றார். தொடர்ந்து ரொறன்ரோ பல்கலைக்கழகத்திலும், யோர்க் பல்கலைக்கழகத்திலும் தமிழர் புலம்பெயர் ஆய்வு, மற்றும் தமிழ் மொழி பாடங்களைக் கற்பித்தார்.

நாம் பேசும் ஆங்கிலம், முதியோர்களுக்கு எதிரான வன்முறை, ஆகிய நூல்களையும் சீனோர் நிறுவனத்தில் பணிபுரிந்த பெண் தொழிலாளிகளின் வாழ்க்கையை ஆய்வு செய்த எல்ஸெ ஜோன்பேர்க்கினுடைய A Special Cast நூலின் மொழிபெயர்ப்பான 'இன்னொரு ஜாதி'யையும் வெளியிட்டார்.

'வசந்தம்' என்ற நிறுவனத்தை கட்டியெழுப்பி, குடிபோதைக்கும் மனநோய்க்கும் இலக்கானவர்களுக்கும், ஆதரவற்ற முதியோருக்கும் சேவைகள் வழங்குவதோடு Fred Victor நிறுவனத்தின் முழுநேர ஆலோசகராகவும் பணிபுரிகின்றார்





## இளவாலை விஜயேந்திரன்
### கவிதைப் பரிசு
### எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது?
### Poetry Award Ilavalai Wijayendran

இவருடைய 'எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது?' நூலுக்கு, 2023-ஆம் ஆண்டுக்கான கவிதை விருதை பெறுகின்ற இளவாலை விஜயேந்திரன் தியாகராஜா, 1961 ஆவணியில் இலங்கையின் மலையக நகரான நுவரெலியாவில் பிறந்தவர்.

விஜயேந்திரனின் சிறுகதைகள், கவிதைகள் நாளிதழ்களிலும் சஞ்சிகைகளிலும் வானொலியிலும் அவர் மகாஜனக் கல்லூரியில் கற்கும்போது வெளிவரத் தொடங்கிவிட்டன.

உயர்கல்வியை இலங்கை விவசாயக் கல்லூரியில் நிறைவு செய்தபின், வடயேமன் நாட்டிற் சில ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் யாழ்ப்பாணம் 'ஈழமுரசு' நாளிதழில் நெருக்கடி மிக்க காலப் பகுதியான 1986-1987-இல் உதவி ஆசிரியராக பணிபுரிந்தார்.

'புதுசு' (இலங்கை, 1980-1987), 'சுவடுகள்' (நோர்வே, 1988-1998) கனடாவில் வெளிவந்த 'முற்றம்' போன்ற இதழ்களின் ஆசிரியர்களில் ஒருவராகவும் பங்களித்த இவரது 'நிறமற்றுப் போன கனவுகள், இவருடைய முழுக் கவிதைகளது தொகுப்பான 'எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது?' ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

## ஜெதீஷ்குமார் கேசவன்
### மொழியாக்கத்துக்கான பரிசு
### A Journey Through Words Translation Award
### Jegadeesh Kumar Kesavan

2023-ஆம் ஆண்டுக்கான மொழியாக்கப் பரிசை, எழுத்தாளர் பவா செல்லதுரையின் 'சொல்வழிப்பயணம்' என்ற அல்புனைவு நூலை A Journey Through Words என்ற பெயரில் மொழியாக்கம் செய்தமைக்காகப் பெற்ற ஜெகதீஷ்குமார் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதுவதோடு தமிழிலிருந்து ஆங்கிலத்தில் இலக்கியப் புனைவுகள், அல்புனைவுகள் ஆகியவற்றை மொழிபெயர்த்தும் வருகிறார்.

மூல ஆசிரியரின் குரல் தெளிவாக வெளிப்படும் வண்ணமும், அதே நேரம் ஆங்கிலத்தில் மட்டுமே வாசிக்க முடிந்த வாசகர்களின் வாசிப்பின்பம் தடைப்படாத விதமாக சரளமாகவும், மொழிச் செறிவோடும் மொழியாக்கத்தைச் செய்துள்ள இவரது மொழிபெயர்ப்பு தமிழ் நிலத்தின் பண்பாட்டுக் கூறுகளை பல்வேறு நாகரிகங்களுக்குப் பரிமாறுவதற்கும், தமிழ் வாழ்வு மற்றும் கலாசாரம் குறித்த புரிதலை மேம்படுத்தவும் பங்காற்றுகின்றது.

எழுத்தாளர் ஜெயமோகனின் மொழிபெயர்ப்பான A Fine Thread and Other Stories, தமிழ் மொழியில் அமைந்த 'பொற்குகை ரகசியம்' ஆகியன இவ்வாண்டு வெளியாகின.

■ ■ ■

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*
***E-mail: info@thaiveedu.com Fax: 1-416-849-0594 Tel: 1-416-857-6406***

# வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
# VASANTHAM TAMIL WELLNESS CENTRE
## PRESENTS...

**சமூக உளவளம் பேணும் தொடர் - 83**
**Psychosocial Educational Series - 83**

VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE

**04 November 2024 (Monday)**
**Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am**
**Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)**

**Zoom ID: 918 584 6813**
**No Password**
**Dial by Phone: 647 374 4685**
**647 558 0588**



**Prof. Joseph Chandrakanthan**
**University of Toronto**
Board of Director of Vasantham

## வைத்தியசாலைகளில் ஊசலாடும் உயிர்களும் உறவுகளின் அந்தரிப்பும்

## Last Breath of Loved ones in Hospitals Relatives Struggle to Make Decisions



**Join us via zoom: CLICK HERE or go to link below in the email**
**Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!**



**Hosted by**
**Dr. Parvathy Kanthasamy**
**CONTACT US: 416-847-4172**

VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA


# கொம்புமுறி சடங்காற்றுகை

- ரதிகலா புவனேந்திரன்



தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளுள் கொம்புமுறி விளையாட்டும் காணப்படுகின்றது. இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கே உரித்தான, காலங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பாரம்பரிய சடங்காக இக்கொம்புமுறிச் சடங்காற்றுகை காணப்படுகின்றது. மட்டக்களப்பிலே சித்தாண்டி, வந்தாறுமூலை, ஈரக்குளம், களுதாவளை போன்ற இடங்களில் ஆற்றுகை செய்யப்படுகின்றது. இக்கொம்புமுறி சடங்காற்றுகையானது கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்புடைய விளையாட்டாகக் காணப்படுகின்றது.


கோவலனுடைய மனைவியே கண்ணகி ஆவாள். கோவலன்



தன்னுடைய மனைவியான கண்ணகியின் சிலம்பு ஒன்றினை விற்று வருவதற்காக மதுரைக்குச் செல்கின்றான். அதே காலப்பகுதியில் பாண்டிய மன்னனின் அரண்மனையிலிருந்து சிலம்பொன்று காணாமற் போனது. கோவலன்தான் சிலம்பு திருடியுள்ளான் எனக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் வீரர்களிடம் கோவலனைக் கொலை செய்யுமாறு கட்டளையிடுகின்றான். வீரர்களும் கோவலனைக் கொலை செய்கின்றார்கள். தனது கணவனான கோவலன் கொலை செய்யப்பட்டதைக் கேள்வியுற்று கோபத்துடன் தனது இன்னுமொரு சிலம்புடன் மதுரைக்குச் சென்று தனது கணவன் கள்வன் இல்லையென்பதை நிரூபித்து, மதுரை நகரையும் கோபத்துடன் எரிக்கின்றாள். அக்கோபத்துடனேயே தனது ஆய்ச்சியர் குலம் செல்கின்றாள். கண்ணகியின் கோபத்தை தணிப்பதற்கு வெண்ணெய், தயிர் முதலியவற்றைக் கொடுத்தனர். ஆனால் கண்ணகியின் கோபம் தணியவில்லை. இதனால் சேர நாட்டு இளைஞர்கள் வடபுறமிருந்தோர் 'வடசேரி' என்றும் தென்புறம் இருந்தோர் 'தென்சேரி' என்றும் இரு வாரங்களாகப் பிரிந்து இரு மஞ்சள் கொம்புகளை ஒன்றோடொன்று கொழுவி இழுத்து கோவலன் அதை முறித்துக் கண்ணகிக்கு வெற்றி காட்டி மகிழ்வித்ததாகக் கூறி ஆரவாரித்ததாகவும், இதனை அவர்கள் காதல் கலந்த விளையாட்டு விழாவாகவும் செய்தனர். இதைக்கண்ட கண்ணகி கோபம் தணிந்து மகிழ்ச்சி அடைந்ததாகவும் வரலாறு கூறுகின்றது. இவ்வாறு கண்ணகியை மகிழ்வூட்டும் நோக்கிலேயே கொம்புமுறி விளையாட்டானது மக்கள் மத்தியில் தோற்றம் பெற்றுள்ளது எனலாம்.

மழைவளம் குன்றி நோய்கள் பரவுகின்றபோது இத்தகைய கொம்புமுறி ஆற்றுகையை நிகழ்த்தினால் கண்ணகி அம்மன் மனம் குளிர்ந்து மழை பெய்யும் என்பது இவர்களின் நம்பிக்கை ஆகும். கொம்பு விளையாட்டின்போது கோவலனின் கட்சி வடசேரி எனவும், கண்ணகியின் கட்சி தென்சேரி எனவும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படும். பொதுவாக தந்தை வழியில் வருவதே கொம்புக்குரிய கட்சியாகும். குறிப்பாக ஒருவருடைய தந்தை வடசேரி என்றால் அவருடைய மகன் மற்றும் மகள் வடசேரியைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

கொம்புமுறியின் நிகழ்த்துகை முறையைப் பற்றிப் பார்ப்போமானால் கொம்புமுறி விளையாட்டின் ஆரம்ப நிகழ்வாக 'போர்த்தேங்காய் அடித்தல்' இடம்பெறும். முதல் தினத்தில் எதிர் எதிராக நிற்கும் இரு சேரியினதும் இரு பிரதிநிதிகள் தங்கள் கைகளினால் வலுவான சிரட்டையுடைய சிறு தேங்காய்களை உருட்டி அனுப்புவதன் மூலம் ஒவ்வொன்றாய் உடைப்பார்கள். எக்கட்சியினர் கூடிய எண்ணிக்கையான தேங்காய்களை உடைக்கிறார்களோ, அவர்களே வெற்றி அடைந்தவர்



களாவர். இதுவே 'போர்த்தேங்காய் அடித்தல்' எனப்படும்.

விளையாட்டின் முதற் பகுதியாக கொழுகொம்பை முறிப்பர். முதலில் முறிக்கப்படும் கொழுகொம்பு விளையாட்டுக் கொம்பு எனப்படும். முதல் நாளில் அம்மனின் கட்சிக்கு வெற்றி கொடுப்பதற்காக கோவலன் கட்சி விட்டுக் கொடுத் தல் மரபாகும். இவ்விளையாட்டுக் கொம்பு முறித்த பின்னர் தினமும் முறையே தட்டுக் கொம்பு, கூடாரக் கொம்பு, ஏடகக் கொம்பு, தண்ணீர் கொம்பு போன்ற கொம்பு முறிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

போர்த் தேங்காய் உடைத்தல் ஆரம்பிப்பதற்கு முன்னர் வட சேரியினரும் தென்சேரியினரும் இணைந்து வட்டமாக ஆடு கின்ற நிகழ்வே பள்ளுக்கு வளைதல் ஆகும்.

கொம்புமுறி விளையாட்டில் வெற்றிபெற்ற சேரியர் வெற்றிக்க ளிப்பில் வசந்தன் ஆடல் நிகழ்த்துகையைச் செய்வர். இவ்வி ளையாட்டுடன் தொடர்புடைய பல செய்திகளையும் வசந்தன் பாடல்களினூடாக அறியக் கூடியதாக உள்ளது. வசந்தன் ஆடல் கண்ணகி வழிபாட்டின் ஓர் அங்கமாக கொம்புமுறி விளையாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

கொம்புமுறி விளையாட்டில் வெற்றி பெற்ற சேரியினர் தோல் வியுற்ற சேரியினரைப் பார்த்து கேலி செய்யும் விதத்தில் இயற்றிப் பாடும் பாடல்களை 'வாரக்கட்டுப் பாடல்' என அழைப்பதுண்டு. இப்பாடலானது கொம்புமுறி விளையாட் டில் வெற்றி பெற்ற சேரியினர் கொம்பினை ஊர்வலமாகக் கொண்டு செல்லுகின்றபோது பாடப்படுகின்ற பாடலாகும். ஓசைநயமிக்க இப்பாடல்கள் கண்ணகி அம்மன் வரலாற்றுக் கதையினைக் கொண்டமைந்ததாகவும் உள்ளது.

கொம்புமுறி நிகழ்த்துகைக்கு அவசியமான பொருட்களில் கொம்பு முக்கிய இடம் வகிக்கின்றது. இக்கொம்புக்கு கரை யாக்கன், விடத்தல், விளிணை, கோணியப்பூறி ஆகிய மரங் கள் பயன்படுத்தப்படுகின்றன. இம்மரங்கள் வைரமானதாக வேருடன் இணைந்த மரமே கொம்பாகவும் பயன்படுத்தப்படு கின்றது. கொம்புகளில் தலைப்பகுதி வேராகவும், கழுத்து மார்புப் பகுதிகள் பெரும்பாலும் மரமாகவும் காணப்படும். கொம்பின் மேல் பகுதியை தலை என்றும், முடக்குப் பகு தியை கழுத்தென்றும் அதற்குக் கீழான பகுதியை கடைக் கால் என்றும் குறிப்பிடுவர். இக்கொம்புகளில் வடசேரிக் கொம்பு சற்று விரிகோண நிலையிலும், தென்சேரிக் கொம்பு செங்கோண நிலையிலும் இருப்பது பொதுவான நியதியாகும். இக்கொம்பு பல வகைகளில் உள்ளது. கொழுகொம்பு, கொம் புத்தட்டுக் கொம்பு, கூடாரக் கொம்பு, ஏடகக் கொம்பு, தண் ணீர்க் கொம்பு என்பனவாகும்.

கொழுகொம்பு 'பாவட்டம்' மரத்திலிருந்து எடுக்கப்படுகின் றது. இது சிறியளவில் காணப்படும். மஞ்சள் பூசப்பட்ட கொம் புகளே கொம்பு முறித்தலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

கொம்புக்கு இரண்டு பக்கங்களிலும் வரிந்துக் கட்டப்படும் தடியே பில்லித்தடி ஆகும். இது அண்ணளவான அடி நீளத்தி லேயே காணப்படும். பில்லித்தடியானது கொம்பின் நீளத் தோடு பொருந்தக் கூடியதாக இருக்கும். பில்லித் தடியைக் கொம்பிலே வைத்து வரியும்போது மந்திர உச்சாடனங்கள் செய்வர். பில்லித்தடிக்கு கரையாக்கன், முதிரை, விளிணை போன்ற மரங்களைப் பயன்படுத்துவர். பில்லி கட்டிய கொம் புகளே கொம்பு முறித்தலுக்கு உகந்த கொம்பாகும். இப்பில் லித் தடியானது ஆபத்து ஏற்படாமல் இருக்கப் பயன்படுத்து வர்.

அரிப்புக் கயிறு மிகச் சிறியளவில் காணப்படும். இது வடக்க யிற்றுடன் இணைக்கப்படும். இதன் மற்றைய நுனிப்பகுதி செவ்வாய்க் குற்றியுடன் இணைக்கப்படும். இரு சேரியாரும் சம அளவிலான அரிப்புக் கயிற்றினையே பயன்படுத்துவர். கொம்பு முறித்தலுக்கு இரண்டு அரிப்புக் கயிறுகளே பயன்ப டுத்தப்படுகின்றது.

வடக்கயிறு மிக நீளமாகக் காணப்படும். இரு சேரியினரும் சம அளவிலேயே வடத்தினைப் பயன்படுத்துவர். இக்கயிற்றின் ஒரு பக்கம் கொம்பிலே கட்டப்பட்டு இருக்க மற்றைய பக்கத் தினை கொம்பு முறிப்பவர்கள் பிடித்து இழுப்பர். ஆரம்ப காலத்தில் காட்டிலிருந்து பெறப்பட்ட கொடிகளையே வடக்க யிறாகப் பயன்படுத்தினர். தற்காலத்தில் நைலோன் கயிறே வடக்கயிறாகப் பயன்படுத்தப்படுகின்றது.

அச்சுலக்கையினை 'அடை' என்று அழைப்பர். இது 4 அடி நீளம் கொண்டதாகக் காணப்படும். இது பில்லியுடன் இணைத்துக் கட்டப்படும். கருங்காலி, முதிரை போன்ற மரங்க ளிலிருந்து இருசேரியினரும் இதனைப் பயன்படுத்துவர்.

தென்சேரியினர் தமது கொம்பினை முறிப்பதற்காக அரிப்புக் கயிற்றினை கட்டுவதற்காக செவ்வாய்க் குற்றியினைப் பயன் படுத்துவர். இதற்கு தென்னங் குற்றியையே பயன்படுத்துவர். இதனை நிலத்தில் அசையாதவாறு நடுவர்.

## கொம்புமுறி விளையாட்டின் முக்கியத்துவம்:

இவ்விளையாட்டானது சமூக ஒருங்கிணைப்பு, மகிழ்வளிப்பு, நம்பிக்கை, வெற்றி தோல்வியை சமமாக மதிக்கின்ற பண்பு, பண்பாடுசார் அம்சம், தலைமைத்துவப்பண்பு போன்ற தன் மைகளை மக்கள் மனத்தில் வளர்க்க உதவுகின்றது. கொம்பு முறி விளையாட்டு ஆரம்பித்து அவ்விளையாட்டு நிறைவடை கின்ற காலப்பகுதிக்குள் அனைத்து மக்களும் அதில் பங்கெ டுப்பர். கொம்புமுறி விளையாட்டானது மகிழ்வூட்டலைப் பிர தான நோக்கமாகக் கொண்டும் காணப்படுகின்றது.

கொம்புமுறி விளையாட்டினை நிகழ்த்துபவர்கள் தங்கள் தலைமைத்துவப் பண்பினை சிறப்பாக வளர்த்துக் கொள்ள இவ்விளையாட்டு வழிசமைத்துக் கொடுக்கிறது. இவ்விளை யாட்டின் முடிவில் வெற்றி தோல்விகளை சமமாக மதிக்கின்ற பண்பும் உருவாகின்றது.

வைகாசி தொடக்கம் புரட்டாதி வரையான காலப்பகுதியில் நெற்செய்கை மூலம் அதிகளவான வருவாய்களை பெறக்கூடி யதாகவும், விவசாயத்திற்குத் தேவையான மழை வளம் வேண்டியும், மழை இல்லாத வறட்சியான காலங்களில் மக்க ளுக்கு அம்மை நோய், சின்னம்மை நோய், கண்நோய், கொப் பளிப்பான், கூகைக்கட்டு போன்ற நோய்கள் பரவுகின்ற போது அப்பிணிகளைத் தீர்த்து வைக்க அம்மனை வேண்டி கொம்பு நேர்ந்து வைப்பது மக்களின் நம்பிக்கை சார்ந்த வழக்கமாகவும் உள்ளது.

பண்பாட்டு அம்சங்களில் ஒன்றாக விளங்குகின்ற கொம்பு முறி விளையாட்டு கூட்டு மனங்களிலிருந்து உருவாக்கப்பட்ட கூட்டுச் செயற்பாடாகும். இதுவொரு சமூகம்சார் கலை நிகழ் வாக விளங்குகின்ற போதும் கொம்புமுறியில் பெண்களின் பங்குபற்றுதலானது ஆரம்பகாலங்களில் மிகக் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் இன்றைய காலகட்டங்களில் பெண்க ளின் பங்களிப்பு ஏதோவொரு முறையில் உள்ளது.

கொம்புமுறியின் மிக முக்கியமான விடயங்களையும் அதன் நிகழ்த்துகை செயற்பாடுகளையும் ஆண்களே நிகழ்த்தினர். அவை கொம்பினை பெற்றுவர காட்டிற்குச் செல்லுதல், கொம்பு பத்ததி படித்தல், கொம்பிற்கு உருக்கொத்தல், ஏட கம் அமைத்தல், கொம்பு முறித்தல் என அனைத்து நிகழ்வுக ளும் ஆண்களின் பங்குபற்றுதல்களோடு இடம்பெற்று வந் தது.

தற்காலங்களில் பெண்களின் பங்குபற்றுதலானது அதிகமா கவே காணப்படுகின்றது. கொம்புமுறி விளையாட்டு ஆரம் பிக்கும் போது பெண்கள் வீடுகளைத் தூய்மையாக வைத் தல், மச்ச உணவுகளைச் சமைப்பதைத் தவிர்த்தல், கறிக்கு மஞ்சள் இடுவதைத் தவிர்த்தல் போன்ற செயற்பாடுகளை சடங்கு முடியும் வரையும் கட்டுப்பாடுகளுடன் கவனமாக செயற்படுத்தி வருகின்றனர். அத்தோடு ஏடகங்கள் அலங்க ரிக்கின்ற போது உதவி புரிதல், கொம்பிற்கு மஞ்சள் பூசுவ தற்காக மஞ்சள் அரைத்துக் கொடுத்தல், வசைப்பாடல்கள் பாடுதல், ஏடகங்கள் ஊரைச் சுற்றி வருகின்றபோது தங்களது சேரியினைப் பிரதிபலிக்கும் வகையில் ஏடகத்துடன் ஊர்வ லம் செல்லுதல், குரவையிடுதல், ஏடகம் வீதியால் வருகின்ற வேளையில் ஒவ்வொருவரும் தத்தமது வீட்டின் வாயிலின் முன் நிறைகுடம் வைத்து வழிபடல் மற்றும் ஏடகம் வளைத்து வளைத்து இளைப்பாறும் இடங்களில் ஏடகத்துடன் வருபவர் களுக்கு உணவுகளை வழங்கி உபசரித்தல் போன்ற செயற் பாடுகளிலும் தமது பங்களிப்பினை வழங்குகின்றனர்.

ஏடகம் வளையும் போது, கொம்பு சுத்தும் போது, கொம்பு இணைக்கும் போது பெண்கள் குரவை பாடுவார்கள். ஆரம்ப காலங்களில் பெண்கள் குரவை பாடும் மரபே பிரதானமாகக் காணப்பட்டது. ஆனால், இன்று இந்நிலை மருவி ஆண்கள் குரவை பாடும் வழமையே காணப்படுகின்றது.

இருப்பினும் சில அத்தியாவசியமான நிகழ்வுகளில் பெண்க ளுக்கு பங்குபற்றும் உரிமை கொடுக்கப்படவில்லை. ஊர்சுற் றுக் காவியங்கள் படிப்பதற்கும், வாத்தியங்கள் வாசிப்பதற் கும், கொம்பினைத் தூக்குவதற்கும், கொம்பு முறித்து விளை யாடுகின்ற வேளையில் வடத்தினைப் பிடித்து இழுப்பதற்கும் பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை.

பெண்கள் உடல் ரீதியாகப் பலவீனமானவர்கள் எனக் கருதப் படுவதாலும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் மறுக்கப்படுகின்றது. அத்துடன் பெண்களுக்குத் தீட்டு ஏற்படும் காலங்களில் உண ரப்படுகின்ற வாசனைகளின் காரணமாகவும் பெண்கள் மஞ் சள் போன்ற வாசனைப் பொருட்களைக் கொண்டு தம்மை அழகுபடுத்துவதனாலும், கன்னித் தெய்வங்கள் பெண்களில் சார்வது கூடுதலாக இருக்கக் கூடும் என்னும் நம்பிக்கை காலாதி காலமாக மக்களிடம் காணப்படுகின்றது. கொம்புக்கு உருக்கொடுத்து எழுப்புகின்ற வேளையிலும், கொம்புப் பத் ததி படிக்கும் போதும் மந்திரங்களின் பயன்பாடு அதிகமா கவே காணப்படுவதனால் கன்னித் தெய்வங்கள் இலகுவா கவே பெண்களில் சார்ந்து விடக்கூடும். இதனால் பெண்க ளுக்கு 'பார்வை படுதல்' மற்றும் நோய்களுக்கு ஆளாகக் கூடிய நிலை ஏற்படும் என்ற நம்பிக்கை இருப்பதனால் பெண் கள் இவ்வாறான விடயங்களில் பங்குபற்றுவது தவிர்க்கப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.

சடங்குகள் ஒரு சமூகத்தை வலுப்படுத்தும், ஒன்று சேர்க்கும் ஓர் ஊடகமாகவும் செயற்படுகின்றது என்றால் அது மிகையா காது. மகிழ்வூட்டலுடன் கூடிய சமூக ஒன்றிணைவில் சிறுவர் கள், பெரியவர்கள் என அனைவரும் ஊர் கூடி இணைந்து இச்சடங்கை மேற்கொள்கின்றனர். இன்றைய காலகட்டங்களில் இச்சடங்காற்றுகையானது மிகவும் முக்கியமான தொன்றாகக் காணப்படுகின்றது.



rathikala@thaiveedu.com

# பழைய பாடல் போல புதிய பாடல் இல்லை

– ஓவியர் ஜீவா



பழைய புகழ் பெற்ற பாடல்களைப் புதிய படங்களில் பின்னணியில் பயன்படுத்துவது சமீப காலங்களில் பரவலாகி இருக்கிறது. சசிகுமார் இயக்கிய 'சுப்ரமணியபுரம்' படத்தில் கல்லுக்குள் ஈரம் படத்தில் இடம் பெற்ற 'சிறு பொன்மணி அசையும்'



என்ற பாடல் வெகு பொருத்தமாக நுழைக்கப்பட்டிருந்தது. சமீபத்தில் வெளியான மலையாளத் திரைப்படமான 'மஞ்சும்மல் பாய்ஸ்' பெரும்பாலும் கொடைக்கானல் குணா குகையில் நடைபெறுவது போல வரும். குகையில் விழுந்துவிட்ட ஒருவனை நண்பர்கள் அனைவரும் இணைந்து காப்பாற்றும் அந்த உச்சக்கட்ட காட்சியில், இதே குகையில் படமாக்கப்பட்ட குணா பாடலான 'கண்மணி அன்போடு காதலன்' பாடல் பின்னணியில் ஒலித்தபோது அரங்கமே ஆர்ப்பரித்தது. இத்தமிழ்ப் பாடலுக்காகவே இந்த மலையாளப்படம் பெரும் வெற்றியடைந்தது என்பது ஒரு வியப்பான விடயம். மிகப் புதிய படம் 'லப்பர் பந்து', இதில் நாயகன் ஒரு விஜயகாந்த் ரசிகன். பெரும்பாலான காட்சிகளில் பொன்மனச் செல்வன் படத்திலிருந்து 'நீ பொட்டு வெச்ச தங்கக்குடம்' பின்னணியில் ஒலித்து ரசிகர்களின் ஆரவாரத்தைப் பெற்றது. மூன்றுமே இளையராஜா இசையமைத்த பாடல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல நவீன வரவான ரீல்ஸ் பதிவுகளில் திரைப்பட பாடல்கள் பயன்படுத்துவதுண்டு. மக்களைப் பெற்ற மகராசி என்ற பழம்பெரும் திரைப்படத்தில் வந்த 'மணப்பாறை மாடு கட்டி' என்ற பாடலிலும், பசும்பொன் படத்தில் வந்த 'தாமரை பூவுக்கும் தண்ணிக்கும்' பாடலிலும் சில வரிகளை எடுத்துக் கொண்டு ஆயிரக்கணக்கான பேர் தனித்தனியாக நடனம் ஆடி ரீல்ஸ் வெளியிட்டனர்.

திரைப்படப் பாடல்களுக்கு எப்படி இப்படி ஒரு மாயத்தன்மை கிடைத்தது. ஆண்டுகள் பல ஆயிருந்தும் மக்களை எப்படி இன்னும் வசீகரிக்கின்றன, என்று யோசிக்கும்போது மனம் பின்னணி இசையுடன் பறக்கத் தொடங்குகிறது. திரைப்படப் பாடல் கள் குறித்து சிந்திக்க தோன்றுகிறது, அயல் நாட்டு திரைப்படங்களில் பாடல்கள் மிக அரிது. 'சவுண்ட் ஆப் மியூசிக்', 'கிரீஸ்', 'ப்ளூஸ் பிரதர்ஸ்', 'சாட்டர்டே நைட் பீவர்' போன்ற திரைப்படங்களில் பாடல் காட்சிகள் இருக்கும். ஆனால் அவை மியூஸிகல்ஸ் என்ற வகையில் மட்டும் சேர்த்திருக்கும். மற்ற நாட்டு திரைப்படங்களில் யாரும் காதல் டூயட் அல்லது சோகப் பாடல்கள் பாடுவதில்லை. அப்படி அவை இடம் பெறுவது மியூசிக்கல் திரைப்படங்களில் மட்டுமே. உலகின் முதல் பேசும் படமான 'தி ஜாஸ் சிங்கர்' பாடல்களால் நிறைந்திருந்தது. இந்தியாவில் திரைப்படங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே இசைச் சித்திரங்களாகத்தான் இன்று வரை இருக்கின்றன. 65 பாடல்கள் ஒலித்த திரைப்படங்கள் எல்லாம் இருந்திருக்கின்றன. இதற்கு கார

ணம், ஆரம்பத்தில் புராணப்படங்களே தயாரிக்கப்பட்டு வந்தன. நாடகங்களாக அரங்கேற்றம் செய்யப்பட்டவை வெள்ளித்திரைக்கு மாற்றம் செய்யப்பட்டபோது மேடையில் இசைக்கப்பட்ட பாடல்களும் கூடவே திரைக்கு வந்தன. பாடத் தெரிந்த நடிகர்களுக்கே வாய்ப்பு வந்தது. தியாகராஜ பாகவதர், ஹொன்னப்பபாகவதர், பி.யு. சின்னப்பா, ஜி.என். பாலசுப்ரமணியம், எம்.எஸ். சுப்புலட்சுமி, டி.ஆர். மகாலிங்கம், கே.பி. சுந்தராம்பாள் என்று பாடகர்கள் நட்சத்திரங்கள் ஆனார்கள். ஹிந்தியில் பருவா, நூர்ஜஹான், சைகல், சுரைய்யா போன்றவர்கள் இதே வகையினர். பின்னர் பின்னணி பாடகர்கள் தோன்றி பெரும் மாற்றத்தை கொண்டு வந்தனர். முழுக்க முழுக்க மியூசிக்கல்களாக மாறிப்போன திரையில் யாராவது பாடல்கள் இல்லாத படங்கள் எடுக்க முற்பட்ட போது அவை தனிக் கவனம் பெற்றன. 'அந்த நாள்' ஒரு உதாரணம். அவை விதிகளை உடைத்த படைப்புகள் என்று பெயர் பெற்றன. இத்தனைக்கும் 'அந்த நாளி'ன் இயக்குநர் எஸ். பாலச்சந்தர் ஒரு இசை மேதை. மாபெரும் வீணை விற்பன்னர். அதே போல தன் படங்களுக்கு தானே பின்னணி இசை அமைத்த சத்யஜித் ராய் போன்ற புதிய அலை இயக்குநர்கள் பெரும்பாலும் பாடல்களைத் தவிர்த்தனர்.

கணினி நுட்பங்களுக்கு முந்தைய திரைப்படப் பாடல்கள், எத்தனை பேரின் கூட்டு முயற்சி என்பதை நினைத்துப் பார்க்கும் போது வியப்பாக இருக்கிறது. சூழலுக்கேற்ற பாடல் காட்சியை நிர்ணயிக்கும் இயக்குநர், பாடலுக்கு மெட்டையும் வாத்தியங்களையும் பாடகர்களையும் முடிவு செய்யும் இசையமைப்பாளர், வாத்தியக் குழு, பாடலுக்கேற்ற அரங்க அமைப்பாளர்கள், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, படத் தொகுப்பு, நடிப்பு என்று திரைப்படங்களின் அத்தனை துறைகளும் ஒரே ஈடுபாட்டில் இயங்கிய போது திரைப்படப் பாடல்கள் மிளிர்ந்தன. ஒரு சிறு தவறு நேர்ந்தாலும் மீண்டும் பாடகர்களையும் இசைக்கலைஞர்களையும் ஒருங்கிணைத்து பாடல் பதிவுகள் நடைபெற்ற காலம். அக்காலத் திரைப்படங்கள் தந்த இனிமையான பாடல்கள்தான் எத்தனை. பாடல்களுக்கு மெட்டும், மெட்டுக்கு பாடல்களும் என்று விதவிதமாக திறமை காட்டிய மேதைகள் வாழ்ந்த காலம் அது. மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் ராமமூர்த்தி, மெட்டுக்குப் பாடல் எழுத வைத்து இசைப்பார்கள். கே.வி. மகாதேவனோ பாடலுக்கு மெட்டு அமைப்பார். இந்த மேதைகள் இசைத்த பாடல்கள் அத்தனையும் சாகாவரம் பெற்றவை. பெரும் பொழுதுபோக்குச் சாதனமாக விளங்கிய திரைப்படங்களும் அவற்றின் பாடல்களும் ரசிகப்பெருமக்களை பெரிதும் மகிழ்வித்தன. பக்தி, பாசம், சோகம், காதல், தத்துவம் போன்ற பல உணர்ச்சிகள் பாடல்களாகப் பெருக்கெடுத்தன. அவை மக்கள் வாழ்வியலின் பகுதிகளாக ஊடுருவின.

பெரும் கவிஞர்கள் படத்தின் திரைக்கதைக்கேற்ற அற்புத வரிகளைத் தீட்டினார்கள். பாரதிதாசன் தொடங்கி பாபநாசம் சிவன், கண்ணதாசன், கு.மா. பாலசுப்ரமணியம், உடுமலை நாராயணா கவி, கா.மு ஷெரீப், பட்டுக்கோட்டையார், மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ், ஆத்மநாதன், ஆலங்குடி சோமு, வாலி போன்ற கவிஞர்கள் கோலோச்சிய காலங்கள். இசை மேதைகள் ஜி. ராமநாதன், நாகேஸ்வரராவ், சி. ராமச்சந்திரா, டி.ஆர். பாப்பா, சுதர்சனம், எஸ்.எம். சுப்பையா நாயுடு, கே.வி. மகாதேவன், விஸ்வநாதன்-ராமமூர்த்தி, வேதா, ஏ.எம். ராஜா இசையமைத்த அற்புத கானங்கள் நிறைந்து வழிந்த காலம். சிதம்பரம் ஜெயராமன், டி.எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஏ.எம். ராஜா, திருச்சி லோகநாதன், பி.பி. ஸ்ரீனிவாஸ், ஏ.எல். ராகவன், சந்திரபாபு, சுசீலா, ஈஸ்வரி, ஜானகி, ஜமுனா ராணி, ஜிக்கி என்று எத்தனையோ கலைஞர்கள் இந்தக் காலகட்டத்தை அழகு செய்திருக்கிறார்கள் என்று நம் அனைவருக்கும் தெரியும்.

பல நினைவுகளைக் கிளறி இளமைச்சோலைக்குள் நம்மை இழுத்துச் செல்லும் மாயம் இங்கே நிகழ்கிறது. ஒவ்வொரு



பாடலும் காட்சிரூபமாக நினைவுத்திரையில் விரிகின்றன. 'பார்த்திபன் கனவு' படத்தின் 'இதய வானில் உதய நிலவே' பாடலை எடுத்துக்கொள்வோம். வெள்ளையும் சாம்பல் நிறமும் கருப்பும் கலந்த ஒளிப்பதிவுக் கலவையில் ஜெமினி கணேசன், வைஜயந்திமாலா ஆகியோரின் அழகிய 'க்ளோஸ் அப்' முகங்களும், ராஜா, சுசீலாவின் தேன் தோய்ந்த குரல்களும், வேதாவின் சொந்த மெட்டமைப்பில் ஜாலம் செய்யும் என்பதை மறுக்க முடியுமா? முக்கிய நடிகர்களுக்கேற்ற பாடல்கள் இயற்றப்பட்டன. அவற்றுக்கென ஒரு பாணியும் குரல்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன. எம்.ஜி.ஆர் என்றால்

வீரம், எழுச்சி போன்ற அடையாளங்களாக அமைந்த பாடல்கள் பல. 'அச்சம் என்பது மடமையடா', 'நான் ஆணையிட்டால்', 'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்' போன்ற பாடல்களைக் கேட்டாலே நெஞ்சம் விம்மிப்புடைக்கும். சிவாஜிக்கோ சோகம், தத்துவம் போன்ற ரசங்கள் சொந்தமாகிப் போயின. ஒரே படத்தில் 'ஆண்டவன் படைச்சான்' என்று பாடலுக்கு நடித்தாலும், அதிலும் 'படைத்தானே' என்று சோக ரசமும் பிழிய வாய்ப்பிருந்தது. என் அபிமானப்பாடலான 'ஆறு மனமே ஆறு' தொடங்கி, 'போனால் போகட்டும் போடா', 'சட்டி சுட்டதடா' எல்லாம் கவியரசனின் பேனா முனை தெறித்த தத்



துவ விசாரங்கள். அதுவும், 'எறும்புத்தோலை உரித்துப் பார்க்க யானை வந்ததடா - நான் இதயத்தோலை உரித்துப் பார்க்க ஞானம் வந்ததடா' எல்லாம் எப்பேர்ப்பட்ட பெரும் தத்துவங்களின் எளிய சாரங்கள்.

பின்னணிப்பாடகர்கள் என்ற 'ஒரு இனம்' தோன்றி திரைப்படங்களுக்கு தனி மெருகேற்றினார்கள். அப்போது திரைப்படங்கள் மேலும் மெருகேறின. சிவாஜி, எம்ஜிஆர், ஜெமினி போன்ற நடிகர்கள் சொந்தக்குரலில் பாடாமல் இரவல் குரல்களில் பாடி நடிப்புக்கு மேலும் மெருகேற்றினர். கே.ஆர். ராம-சாமி போன்ற சொந்தக்குரல் நடிகர்களுக்கு மவுசு குறைந்தது. நடிப்பு என்ற வகையில் அவர்கள் தனிப்பெயர் பெற்றிருக்கவில்லை. சிதம்பரம் ஜெயராமனின் குரல் தனித்துவம் வாய்ந்தது. எந்த நடிகரின் உண்மையான குரலுக்கும் இவரது குரலுக்கும் எந்த ஒற்றுமையும் இருக்காது. ஆனாலும் அவரது குரலுக்கு ரசிகர்கள் பெரும் அளவில் இருந்தனர். அவர் பாடல்களும் பெரும் புகழ் பெற்றன. சிவாஜி, எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆர் போன்றவர்களுக்கு நிறைய பாடியிருக்கிறார். ஆனாலும், சம்பூர்ண ராமாயணம் படத்தில் ராவணனாக நடித்த டி.கே. பகவதிக்கு இவரது குரலும் பாவமும் மிகவும் பொருந்தியதாக கருதுகிறேன். அதே போலத்தான் திருச்சி லோகநா-தன், சீர்காழி கோவிந்தராஜன் குரல்களும் எந்த நடிகரின் உண்மையான குரலுக்கும் ஒத்துப்போகாவிட்டாலும் சாகாவரம் பொருந்திய பாடல்களை இவர்கள் பாடியிருக் கிறார்கள். சி.எஸ். கிருஷ்ணன் தங்கவேலுவுக்கும், ஏ.எம். ராஜா, பி.பி சீனிவாஸ் இருவரும் ஜெமினி கணேசனுக்கும், ஏ.எல். ராகவன் நாகேஷுக்கும் அச்சு அசலாக பொருந்தினார்கள்.

டி.எம். சௌந்தரராஜனின் வருகை பெரும் மாற்றத்தை கொண்டு வந்தது. ஆரம்பத்தில் சிவாஜி, தனக்கு டி.எம்.எஸ் பாட ஒப்புக்கொள்ளவில்லையாம். சிதம்பரம் ஜெயராமன் தான் தனக்கு பொருத்தமான பின்னணிப் பாடகர் என்று நம்பினார். தூக்குத்தூக்கியில் டி.எம்.எஸ் பாடிய அத்தனை பாடல்களும் ஹிட் அடிக்க, சிவாஜியின் குரலாக மாறினார். எம்ஜிஆருக்கும் இவரைப்போல வேறு எந்தக் குரலும் பொருத்தமாக அமையவில்லை என்பதும் உண்மை. ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், அசோகன் போன்றவர்களுக்கும் இவரே கச்சிதம். மிக சிரத்தையெடுத்து ஒரு நடிகரைப்போலவே பாவங்களுடன் இவர் பாடினார். தெய்வ மகன் படத்தில் அண்ணன் சிவாஜிக்குப் பாடிய 'தெய்வமே தெய் வமே' பாடலையும் தம்பி சிவாஜிக்கு பாடிய 'காதல் மலர் கூட்டம் ஒன்று' பாடலையும் கேட்டால் எவ்வளவு வித்தியாசப்படுத்தியிருக்கிறார் என்பது தெரியும். 'அந்த நாள் ஞாபகம்', 'யார் அந்த நிலவு' பாடல்களை கேட்டால், பாடியது இவரா, சிவாஜியேதானா என்பது போல அவ்வளவு நயமும் பாவங்களும் நிறைந்து வழியும். எம்ஜிஆருக்கு சந்திரோதயம் படத்தில் பாடிய 'காசிக்கு போகும் சந்நியாசி', பெரிய இடத்துப் பெண் படத்தில் பாடிய 'கட்டோடு குழலாட ஆட', நம் நாடு படத்தில் 'நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான் நான்' பாடல்களை கேட்டுப்பார்த்தால் எவ்வளவு பொருத்தம், எவ்வளவு சிரத்தை என்று புரியும். பின்னர் தொடர்ந்து வந்த ஜேசுதாஸ், எஸ்.பி. பாலசுப்ரமணியம் போன்ற அற்புதப் பாடகர்கள் இந்த திலகங்களுக்கு பாடினாலும் அவர்களுடைய ரசிகர்களுக்கு அபிமான பாடகர் டி.எம்.எஸ் தான்.

பழைய திரைப்பாடல்கள் மக்களின் வாழ்க்கை, சம்பவங்கள், உறவுகள், காதல், ஏமாற்றம், சோகம் என்று பல உணர்ச்சிப் பாடல்களைக் கேட்கும்போது அவை மனத்தைக் கிளறி விடும் சக்தியைப் பெற்றிருந்தன. வார்த்தைகளின் தெளிவு, பொருள் அனைத்தும் பாமரர்களையும் சென்றடைந்தன. சகோதர பாசம், சுற்றத்தாரின் துரோகம் என்ற அனைத்துப் பாடல்களும் கேட்பவர் மனதை அலைக்கழித்தன. சகோதரர்களால் வஞ்சிக்கப்பட்டவன் 'அம்மம்மா தம்பி என்று நம்பி', பாடலை கேட்டவுடன் அழுதுவிடுவான் என்று சொன்னால் மிகையில்லை. பின்னர் கணினி யுகம் வந்த பிறகு... பாடல்களும் ஒரு இயந்திரத்தன்மையை அடைந்தன. இசையின் இனிமை இரைச்சலாக மாறி, வார்த்தைகளை துவம்சம் செய்தன. வாழ்க்கை தத்துவங்களை எளிய சொற்களில் சொன்ன கண்ணதாசன் போன்றவர்களின் மறைவு ஏற்படுத்திய வெற்றிடத்தை அடுத்த தலைமுறை கவிஞர்கள் நிரப்பவில்லையா என்றால்..., உண்மைதான் என்று பதில் சொல்லத் தோன்றுகிறது. மெல்லிசை மன்னர்கள் இசையமைத்த 'உன்னை ஒன்று கேட்பேன்' பாடலை பல ஆண்டுகள் கழித்து தாய்க்கு ஒரு தாலாட்டு படத்துக்காக இளையராஜா இசையமைத்திருந்தார். அதில் 'பழைய பாடல் போல புதிய பாடல் இல்லை' என்று ஒரு வரியை நுழைத்திருப்பார்கள். எவ்வளவு பொருத்தம்.



jeeva@thaiveedu.com




2024 பெப்ரவரி 15-25 வரை நடைபெற்ற 74-வது பேர்லின் சர்வதேச திரைப்பட விழாவிலும் மத்திய கிழக்கு யுத்தம், உக்ரேன்-ரஷ்ய யுத்தம் போன்றவை சர்ச்சையை ஏற்படுத்தின. விழாவில் வேலை பார்க்கும் 28 பேர் காசாவில் நடைபெறும் பிரச்சினையை இவ்வருடவிழா விவாதத்துக்குட்படுத்தவில்லை எனக் கண்டித்து கடிதம் ஒன்றை விழா அமைப்பினருக்கு அனுப்பியிருந்தனர். இரண்டு இயக்குநர்கள் தங்கள் படங்களை இறுதி நேரத்தில் விழாவில் திரையிட அனுமதிக்கவில்லை. ஏழு நடுவர்கள் மத்தியில் இடம்பெற்ற பல்வேறு அரசியல் விவாதங்கள், கருத்து மோதல்களை நிகழ்த்தியுள்ளன. AfD (Alternative For Germany) கட்சியை விழா ஆரம்ப நிகழ்வுக்கு அழைத்திருந்தமையை பலர் கண்டித்தனர். பின்னர் விழா அமைப்பினர் அவர்களுக்கு கொடுத்த அழைப்பை மீளப் பெற்றுக்கொண்டனர். AfD கட்சி மற்றும் அவர்களது உறுப்பினர்கள் அடிப்படை ஜனநாயக மதிப்புக்களுக்கு மாறான கருத்துக்களை கொண்டுள்ளார்கள் என விழா அமைப்பினர் தெரிவித்தனர். (The AfD and many of its members and representatives hold views that are deeply contrary to the fundamental values of democracy.) AfD-க்கு அனுப்பிய கடிதத்தில் இவ்வாறும் சுட்டிக்காட்டியிருந்தனர்: They officially call for a 'German dominant culture instead of multiculturalism.' It says on your website. 'Multi-culture is non-culture.' Catalan film maker and jury member Albert Serra-வின் புட்டின் ஆதரவுக் குரலும் ஊடகங்களால் கேள்விக்குட்படுத்தப்பட்டது. இவர் பேர்லின் திரைப்பட விழா நடுவர்களுள் ஒருவராவார். திரைப்பட விழாவில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டோர் பாலஸ்தீனியத்துக்கு ஆதரவுக் குரல்களை வெளிப்படுத்தினர். உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்தினர். John Greyson, Suneil Sanzgiri, Ayo Tsalithaba ஆகியோர் தங்களது படங்களை பேர்லின் விழாவில் திரையிட அனுமதிக்கவில்லை. ஜேர்மன் அரசின் பாலஸ்தீன ஆதரவிற்கு எதிரான நடவடிக்கையைக் கண்டித்தே படங்களை மீளப் பெற்றுக்கொண்டனர். இத்திரைப்பட விழாவில் இரு பாலஸ்தீனிய சமூக அரசியல் போராளிகள், இரு இஸ்ரேலிய சமூக அரசியல் போராளிகள் இணைந்து இயக்கிய No Other Land திரைப்படம் திரையிடப்பட்டு சிறந்த விவரணத் திரைப்பட விருதையும் (Panorama Audience Award for Best Documentary Film and Berlinale Documentary Film Award) பெற்றது. இப்படம் மேற்கு கரையில் நடைபெறும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை மையப்படுத்தியது. இப்படம் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவிலும் திரையிடப்பட்டது.

பேர்லின் சர்வதேச திரைப்பட விழாவில் அரசியல் வாதப்பிரதிவாதங்கள் என்பது இது முதல் தடவையல்ல. முன்னரும் பல தடவைகள் அரசியல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. 1995-இல் நடைபெற்ற விழா மேற்கு நாடுகள்-சோவியத் யுத்தம் பற்றிய படங்களை திரையிட்டிருந்தது. முதல் அலை ஐரோப்பிய திரைப்பட விழாக்கள் (கான், பேர்லின், வெனிஸ், சன் செபஸ்ரியன் போன்றவை) அரசியல் அலைக்கு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்தே வந்துள்ளன. 2023-ம் வருட பேர்லின் சர்வதேச திரைப்பட விழாவின் (Berlinale) ஆரம்ப நிகழ்வில் உக்ரேன் அதிபர் செலன்ஸ்கி தொலைக்காட்சி மூலம் தோன்றி உரையாற்றினார். Sean Penn, Aaron Kaufman ஆகியோர் இயக்கிய Super Power விவரணத் திரைப்படமும் இவ்விழாவில் திரையிடப்பட்டது. இப்படம் உக்ரேன்-ரஷ்ய போரின் ஆரம்ப நாட்களை மையமாகக் கொண்டது. இதில் செலன்ஸ்கியுடனான உரையாடல்களும் இடம்பெறுகின்றன. சீன்பென் அனைவராலும் அறியப்பட்ட சிறந்த நடிகர். இவர் ஏற்கனவே அமெரிக்காவின் ஈராக் மீதான ஆக்கிரமிப்பை கண்டித்திருந்தார். இவர் கியூபாவிற்கும் பயணித்துள்ளார். இவர் உக்ரேன் மீதான ரஷ்யப் போரை இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் 'Ukraine's fight for democracy is our fight too.' 2023-ஆம் ஆண்டு பேர்லின் சர்வதேச திரைப்பட விழா ஈரானின் தற்போதைய அரசையும் கண்டித்தது. விழாவில் பேசிய பிரென்ச்-ஈரானிய நடிகை Farahani 'For breaking this wall, we need all of you,' 'This wall is a wall of oppression. This regime lies and executes; this regime puts innocent people in prison. The prisons of Iran are full of innocent people.' எனக் கூறினார்.

### உலகின் சிறந்த திரைப்பட விழா:

பேர்லின் திரைப்பட விழா உலகின் சிறந்த ஐந்து திரைப்பட விழாக்களுள் ஒன்றாகும்.

பொதுவாகவே திரைப்பட விழாக்களில் அரசியல் சர்ச்ஜை என்பது இயல்பானது. 1932-ல் முதலாவது சர்வதேச திரைப்பட விழா வெனிஸில் ஆரம்பிக்கப்பட்டது. லெனின், 'எம்மிடம் உள்ள முக்கியமான கலை, சினிமா' எனக் குறிப்பிட்டார். சோவியத் யூனியன் உலகிற்கு பல நல்ல இயக்குநர்களை கொடுத்துள்ளது. Sergei Eisenstein, Vsevolod Pudovkin, Dziga Vertov, Alexander Dovzhenko போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். லெனினால் ஆரம்பிக்கப்பட்ட சோவியத் சினி

மாவை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த ஸ்ராலின் விரும்பினார். இவரது கட்டளையில் மொஸ்கோ சர்வதேச திரைப்பட விழா 1935-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1959-ன் பின்னர் இவ்விழா இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட்டது. 1963-ல் இத்தாலிய இயக்குநர் பெலினியின் 8½-க்கு சிறந்த திரைப்பட விருது கொடுக்கப்பட்ட போது சர்ச்ஜைகள் எழுந்தன. சோவியத் சார்பு படம், சார்பு நாடுகளிலிருந்து திரையிடப்பட்ட படத்துக்கு விருது கொடுக்கப்பட வேண்டும் என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சோவியத் திரைப்படங்கள் மேற்கு நாடுகளின் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டது வெகு குறைவு. அதேபோல் சோவியத் சார்பு நாடுகளும் தங்களது திரைப்பட விழாக்களில் மேற்கு நாடுகளின் திரைப்படங்களைத் தவிர்த்தன. ஆனால் கலைரீதியான படங்கள் திரையிடப்பட்டன. இரு பக்கமும் மூன்றாம் உலக நாடுகளின் திரைப் படங்கள் திரையிடப்பட்டன. ஆரம்பத்தில் உதவிக் குறிப்புகள் அல்லது தலைப்புகளின்றி பல படங்கள் திரையிடப்பட்டன. தொழில்நுட்ப வளர்ச்சி இன்று உதவிக் குறிப்புகள் இன்றி படங்கள் திரையிடப்படுவதில்லை என்றளவிற்கு மாற்றம் பெற உதவியுள்ளது.

திரைப்பட விழாக்கள் அரசின் நிதி உதவியுடனேயே நடத்தப் படுகின்றன. இதனால் இவை சுயமாக இயங்குமா என்ற கேள்வி உள்ளது. சமூகவியலிருந்து மானுடவியல் வரையிலான கருத்தாக்கங்களைக் கொண்ட படங்களை இவ்விழாக்களில் திரையிடப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப் பட்டாலும் இது சாத்தியப்பட்டுள்ளதா ? திரைப்பட விழாக்கள் கருத்தியலுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதல்ல. ஒரு திரைப்பட விழாவிற்கு பல்வேறு தொழில் முறைகள் உள் ளன. சுயாதீன திரைப்படக் கலைஞர்கள் அவர்களது படங்களுக்கு ஊடாக அறிமுகப்படுத்தப்படுகின்றனர். பின்னர் அவர்களது படங்கள் திரைப்பட முகவர்களால் வாங்கப்படுகின்றன. திரைப்படக் கலைஞர்கள் சந்திக்கும் ஒரு சங்கமம் அங்கு நடைபெறுகின்றது. ஒரு தொடரமைவு - Net work உருவாக்கப்படுகின்றது. உள்நாட்டு திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கும் காரணமாகவுள்ளது. உள்ளக, வெளியக அமைவுகளையும் சிக்கல்களையும் தாங்கியே விழா நடைபெறுகின்றது. பெரிய திரைப்பட விழாக்களில் சுமார் 250-300 வரையிலான திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. பெரும்பாலான படங்கள் இரண்டு தடவைகள் திரையிடப்படுகின்றன. உள்ளக நுகர்வோர் அதிகளவு வரும் பட்சத்திலேயே அரங்குகள் ஆகக் குறைந்தது 75 வீதமாவது நிறைந்து காணப்படும். கான், வெனிஸ், பேர்லின், ரொறன்ரோ போன்ற இடங்களில் நடக்கும் திரைப்பட விழாக்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பலர் வருகின்றனர். இப்பொழுதெல்லாம் நாட்டிலுள்ள குடிவரவாளர்களையும் இத்திரைப்பட விழாக்கள் குறிவைக்கின்றன.

இன்று புதிய சமூகங்கள் இத்திரைப்பட விழாக்களுக்கு ஊடாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. அச்சமூகங்களின் அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளைப் புதிய பார்வையாளர்கள் நுகர்கின்றனர். திரைப்பட விழாக்களுக்கு வரும் பார்வையாளர்கள் ஒரு சீரிய படைப்பை நுகரும் நோக்குடன் வருவதனால், அங்கு திரையிடப்படும் திரைப்படங்களும் சீரிய கருத்தியலைக் கொண்டுள்ளன. வணிக திரைப்படங்களிலிருந்து இப்படங்கள் மாறுபட்டுள்ளன என்பதனை அவர்கள் அறிவார்கள். அதனால் இத்திரைப்பட விழாக்கள் ஒரு சமூக மாற்றியக்கமாக உருவாகிறது. நாட்டில் நிகழும் அரசியல் மாற்றம், திரைப்பட விழாக்களைச் சமூக பொருளதார அடையாளங்களை வெளிப்படுத்தும் அரங்காக உருமாற்றம் செய்கின்றன. பார்வையாளரிலிருந்து போராளியாக, கேள்வி கேட்பவராக மாற்றம் பெறுவதற்கான களத்தை இவ்விழாக்கள் கொடுக்கின்றன. உலகமயமாதல், நவதாராளவாதம், பாசிசம், இனவாதம், நிறவாதம் போன்ற பல விடயங்களையும் உள்ளடக்கிய படங்கள் திரையிடப்படுகின்றன. ஊடகங்கள் இப்படங்களைப் பற்றிய கருத்துகளை, விமர்சனங்களை வெளிப்படுத்துகின்றன.

இவ்விழாக்களில் திரையிடப்படும் விவரணத் திரைப்படங்கள் நேரடி அரசியலையும் பேசுகின்றன. அரசுகளை விமர்சிக்கின்றன. இவை பல சமயங்களில் ஒரு சார்பாகவும் உள்ளன. பல படங்கள் மக்களுக்கான குரலை எழுப்பத் தவறுவதில்லை. மேற்கு நாடுகளின் திரைப்பட விழாக்கள் அதிகளவு மூன்றாம் உலக நாடுகளின் சமூக அரசியல் படங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. குறிப்பாக ஈரானிய படங்கள் அதிகளவு கான், வெனிஸ், ரொறன்ரோ, பேர்லின் திரைப்பட விழாக்களில் திரையிடப்படுகின்றன. இன்றைய ஈரானிய அரசுக்கு எதிரான கருத்தியலை இப்படங்களினூடாக இவ்விழாக்கள் வெளிப்படுத்துகின்றன. இங்கு இரண்டு தொழிற்பாடுகள் ஒரே சமயத்தில் நடைபெறுகின்றன. ஒன்று ஈரானிய அரசின் அடக்குமுறையை விமர்சித்தல், இரண்டாவது ஈரானிய அரசுக்கு எதிரான ஒரு அரசியல் கருத்தியலை உருவாக்குதல்.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவும் ஈரானிய படங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து திரையிடுகின்றன. சத்தமின்றி பல அரசியல் படங்கள் ரொறன்ரோ சர்வதேச திரைப் பட விழாவில் திரையிடப்பட்டு வருகின்றது. ஆனால் இங்கு முக்கியம், எவ்வாறான அரசியல் திரைப்படங்கள் திரையிடப் படுகின்றன என்பதே. இவ்வருடம் No Other Land(பாலஸ்தீனம்), To a Land Unknown(பாலஸ்தீனம்), The Seed of the Sacred Fig(ஈரான்), Universal Language(கியூபெக், கனடா), Shepherds(கனடா) போன்ற முக்கிய படங்கள் திரையிடப்பட்டன. இவற்றைவிட லிற்றில் ஜப்னா, த லாஸ்ட் றிப்பப்ளிக்கன் (டொனால்ட் ரம்ப்பை மையப்படுத்தியது), Men of War, From Groud Zero போன்ற படங்களும் திரையிடப்பட்டன. கடந்த காலங்களில் பல முக்கிய அரசியல் திரைப்படங்கள் திரையிடப்பட்டுள்ளன. குறிப்பாக ஹொலிவூட் அரசியல் படங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் அரசியல் பிரச்சினைகளை மையப்படுத்திய படங்களும் திரையிடப்பட்டுள்ளன. ஆனாலும் மேற்கு நாடுகளை அதிகம் விமர்சிக்கப்பட்ட படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. அதே போல் கம்யூனிச ஆதரவு படங்களும் தவிர்க்கப்பட்டுள்ளன. எனவே ரொறன்ரோ விழாவிற்கும் அரசியல் உண்டு. அரசியலிலும் ரொறன்ரோ விழா சிக்கியுள்ளது. அரசியல் சுயாதீனம் என்பதனை இன்றைய திரைப்பட விழாக்கள் இழந்துவிட்டன என்பதே நிதர்சனமான உண்மை.

அடுத்த வருடம் ரொறன்ரோவின் ஐம்பதாவது சர்வதேச திரைப் பட விழா நடைபெறவுள்ளதால் கடந்த ஐம்பது வருட ரொறன்ரோ விழா பற்றி ஒரு விரிவான கட்டுரை அடுத்து வரும் இதழ்களில் வெளியாகும்.

இவ்வருடம் உலகெங்கும் பாலஸ்தீனிய ஆதரவுக் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. குறிப்பாக யுவதிகள், இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் அதிக குரல்களை எழுப்புகின்றனர். பல்கலைக்கழக மாணவர்களது சுயாதீனக் குரல்

கள் ஒடுக்கப்படுகின்றன. ஆனாலும், அவர்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

2024-ன் விழாவின் முதல் நாளன்று பிறின்ஸ் வேல்ஸ் அரங்கில் மாலை ஆறு மணிக்கு அமெரிக்க திரைப்படமான Nutcrackers திரையிடப்பட்டது. அரங்கின் முன்னாலும், அரங்கினுள்ளும் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவிற்கு நீண்ட காலமாக RBC எனப்படும் றோயல் வங்கி நிதி வழங்கி வந்தது. இந்த வங்கிக்கு இஸ்ரேலுடன் தொடர்புகள் உள்ளன. எனவே ‘இவர்களிடமிருந்து நிதி பெறுவதனை நிறுத்து’ போன்ற கோசங்கள் முன்வைக்கப்பட்டன. ‘RBC is killing our future, RBC funds genocide’ போன்ற கோசங்கள் எழுப்பப்பட்டன. இவற்றை விட Variety சஞ்சிகை, ஹொலிவூட் நட்சத்திரங்களுடன் இணைந்து கனடிய திரைத்துறையினர் ரொறன்ரோ சர்வதே திரைப்பட விழா அமைப்பினருக்கு றோயல் வங்கியுடனான தொடர்பை துண்டிக்குமாறு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. (a group of Canadian filmmakers joined together with Hollywood stars urging the Toronto Film Festival to cut its ties with RBC because of its funding of the oil and gas industry.) Variety – Sep 05,2024. (https://variety.com/2024/film/news/pro-palestine-protesters-interrupt-tiff-opening-night-screening-1236132410)

வழமைக்கு மாறாக இவ்வருடம் இரண்டு போர்கள் நடைபெற்று வருகின்றன. பாலஸ்தீனிய ஆதரவுக் குரல் எழுப்புவோர் ரஷ்யாவிற்கு எதிராக குரல் எழுப்பவில்லை. அதே சமயம் உக்ரேனுக்கு ஆதரவாகவும் கருத்துகள் வெளியிடவில்லை. இதுவரை நடந்து முடிந்த நான்கு முக்கிய திரைப்பட விழாக்களிலும் (வெனிஸ், கான், பேர்லின், ரொறன்ரோ) பாலஸ்தீனத்துக்கு எதிரான இஸ்ரேலின் யுத்தத்தை நிறுத்துமாறு அறிக்கை விடவில்லை.

டொனால்ட் ரம்பின் ‘ஜனவரி ஆறு’ சம்பவத்தை மையமாகக் கொண்ட, ‘த லாஸ்ட் றிப்பப்ளிக்கன்’ திரைப்படத்தை திரையிட்ட ரொறன்ரோ, The Apprentice படத்தை திரையிடவில்லை. இப்படம் கான் திரைப்பட விழாவில் இவ்வருடம் திரையிடப்பட்டது. இப்படத்தில் Sebastian Stan டொனால்ட் ரம்ப்பாக நடித்துள்ளார். ஈரானிய இயக்குநர் Ali Abbasi இயக்கியுள்ள இப்படம் டொனால்ட் ரம்பின் வாழ்க்கையை மையப்படுத்தியது. இப்படம் அமெரிக்கா, கனடா, டென்மார்க், அயர்லாந்து கூட்டுத் தயாரிப்பாகும். பொதுவாகவே கான் திரைப்பட விழாவின் பின்னர் ரொறன்ரோ விழா நடைபெறுவதால் அங்கு திரையிடப்படும் பெரும்பாலான படங்கள் இங்கும் திரையிடப்படும். இப்படத்துக்கு டொனால்ட் ரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றார். இதனால் இப்படம் அமெரிக்காவில் திரையிடுவதில் சிக்கல்கள் உள்ளன. தற்சமயம் ரொறன்ரோ திரையரங்குகளில் காண்பிக்கப்படுகின்றன. ரொறன்ரோ விழா அமைப்பினர் டொனால்ட் ரம்ப்க்கு ஆதரவாக இப்படத்தை திரையிடவில்லையோ ? அல்லது இதுவும் அவர்களது அரசியலா ?

### Russians at War:

ரஷ்யன்ஸ் அற் வோர் ஒரு கனடிய திரைப்படம். இதற்கு ரீவி ஒன்றாறியோ 340,000 கனடிய டொலர்களை நிதியாக வழங்கியிருந்தது. ரீவி ஒன்றாறியோ அரசின் தொலைக்காட்சியகம் (TV Ontario இப்போது TVO) is an educational television network formed out of, and run by, The Ontario Educational Communications Authority (OECA), a Crown corporation owned by the Government of Ontario.) கனடிய மத்திய அரசின் ஊடக நிதியிலிருந்தும் ஒரு பகுதியை இப்படத்துக்கு ரீவி ஒன்றாறியோ வழங்கியிருந்தது. இப்படம் ஏற்கனவே வெனிஸ் சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. இப்படத்தின் இயக்குநர் ஒரு ரஷ்ய கனடியர். Anastasia Trofimova இந்த விவரணத் திரைப்படத்தின் இயக்குநர். ரஷ்யா, உக்ரேனை ஆக்கிரமித்த பகுதிகளில் ரஷ்யாவின் அனுமதியின்றி இப்படத்தை படம் பிடித்தாக இதன் இயக்குநர் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். மேலும் அவர் ரஷ்யாவின், உக்ரேன் மீதான ஆக்கிரமிப்பை தான் கண்டிப்பதாகவும் கூறியிருந்தார். இருப்பினும் இப்படத்தை ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிட வேண்டாம் என ‘உக்ரேனியன் கனடிய கொங்கிரஸ்’ போராட்டத்தில் ஈடுபட்டது. இப்படத்தின் முதலாவது திரையிடல் செப்ரெம்பர் 13-ஆக இருந்தது. இப்படம் மூன்று நாட்கள் திரையிடுவதாகவும் இருந்தது (செப். 13,14,15). செப்ரம்பர் 5-15 திரைப்படவிழா நடைபெற்ற காலம். இப்படத்தை கண்டித்து கனடிய உதவிப் பிரதமர் கிறிஸ்ரீன் பிறீலன்ட் ‘It’s not right for Canadian public money to be supporting the screening and production of a film like this.’ - ‘கனடியர்களின் சொந்தப் பணத்தில் இவ்வாறான திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதும், திரையிடலுக்கு ஆதரவு கொடுப்பதும் சரியானதல்ல’ என்று தெரிவித்திருந்தார். முதலில் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா அமைப்பினர் இப்படத்தின் திரையிடலை உறுதிப்படுத்தியிருந்தனர். எனினும் பின்னர் குறிப்பிட்ட நாளில் இப்படம் திரையிடப்படவில்லை. அதாவது ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்படவில்லை. திரைப்பட விழா முடிந்த பின்னர் செப்ரம்பர் 17 அன்று இரு காட்சிகளாக பலத்த பாதுகாப்பின் மத்தியில் திரையிடப்பட்டது. ரிவி ஒன்றாறியோ இப்படத்தை ஒக்ரோபர் மாதம் தொலைக்காட்சியில் திரையிடுவதாகவிருந்தது. அதனை ரீவி ஒன்றாறியோ இரத்துச்செய்துவிட்டது. இப்படம் முதலில் வெனிசில் திரையிடப்பட்ட பின்னர், பிரித்தானிய பத்திரிகையான கார்டியனில் வெளிவந்த விமர்சனத்தின் ஒரு பகுதி இது.

*‘young soldiers are portrayed grappling with the purpose of their fight. Their motivations to join Vladimir Putin’s invasion of Ukraine vary from financial to a sense of camaraderie. ‘It’s so confusing here. I don’t even know what we’re fighting for,’ says one soldier, a sentiment shared by others, who are largely portrayed in a sympathetic light.’*

### Bliss (Hemda):

Israeli Film Council and the Ministry of Sport and Culture நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்ட இப்படமும் ரொறன்ரோ விழாவில் சர்ச்ஜையை உருவாக்கியது. Jews Say No To Genocide, Artists Against Artwashing, and Writers Against the War on Gaza (WAWOG) ஆகிய அமைப்புகள் செப்ரெம்பர் 11 அன்று ஸ்கொசியா திரையரங்கின் முன்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இப்படத்தை Shemi Zarhin இயக்கியுள்ளார்.

இவ்வருட விழாவில் பல நல்ல திரைப்படங்கள் திரையிடப்பட்டன. வரும் இதழ்களில் இப்படங்கள் பற்றி விரிவாக பார்க்கலாம். பிரன்சுப் படமான ‘லிற்றில் ஜப்னா’ ஆர்ப்பாட்டங்க

ளின்றி அமைதியாக செப்ரம்பர் 14 அன்று றோயல் அலெக்-சான்ரியா அரங்கிலும், செம்ரம்பர் 15 அன்று ஸ்கொசியா திரையரங்கிலும் திரையிடப்பட்டது.

இப்படத்தை பிரான்சில் பிறந்து வளர்ந்த இலங்கை வம்சா வளி இளைஞர் லோறன்ஸ் வலின் இயக்கியுள்ளார். இவரே இப் படத்தின் நாயகனுமாவார். இவர் முன்பு இதே பெயரில் ஒரு குறும் படத்தையும் இயக்கியுள்ளார். அதில் ஷோபாசக்தி (யேசுதாசன் அந்தோனிதாசன்) பிரதான பாத்திரத்தில் நடித்துள்ளார். லிற்றில் ஜப்னா முழு நீளப் படத்தில் ராதிகா, வேல ராமமூர்த்தி ஆகியோரும் நடித்துள்ளனர்.

ஏற்கனவே ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் இனி அவன் (அசோக ஹங்கம), This Place (V.T. Nayani) Funny Boy (Deepa Metha) ஆகிய படங்கள் இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினையை வெளிப்படுத்தியுள்ளன. அவ்வரிசையில் லிற்றில் ஜப்னா படமும் இடம்பெறுகின்றது.

பிரான்சின் தலைநகர் பரிசில் உள்ள சிறுபகுதி லாச்சப்பல் (La Chapelle). தமிழர்களின் வணிக நிறுவனங்கள் அதிகமாக உள்ள பகுதி இது. சில மாதங்களுக்கு முன்னர் ரிக்ரொக் பதிவர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் இப்பகுதியிலேயே இடம் பெற்றது. லாச்சப்பலை 'குட்டி யாழ்ப்பாணம்' எனவும் அழைப்பார்கள். மேற்கு நாடுகளில் ஒவ்வொரு சமூகத்தினரும் அதிக மாக வாழும் பகுதியை Little Italy, China Town, Little India போன்ற பெயர்களில் அழைப்பது வழமை.

'லிற்றில் ஜப்னாப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு ஈழப் போருக்காக நிதி சேகரிக்கின்றார்கள். இங்கு நடைபெறும் முறைகேடுகளைப் புலனாய்வு செய்ய அகதியாக பிரான்ஸ் வந்துள்ள Michael Beaulieu லாச்சப்பல் புலிக் கோட்டைக்குள் செல்கின்றார். அவர்களில் ஒருவராகி தலைவரின் நம்பிக்கைக்குரியவராக மாறி அவர்களை காட்டிக் கொடுக்கின்றார். பிரான்ஸில் புலிகள் எவ்வாறு நிதி சேகரிக்கின்றார்கள், கடத்தல், ஆட்கடத்தல் போன்ற பல்வேறு சட்டத்துக்கு புறம்பான விடயங்களைச் செய்கின்றார்கள் என்பதனை இப்படம் வெளிப்படுத்தியுள்ளது. இக்குழுவிற்கு தலைவராக வேல ராமமூர்த்தி உள்ளார். கிரிக்கெட் பந்தினால் அடித்து ஒருவர் கொலை செய்யப்படுகின்றார். லாச்சப்பல் புலிகளை ஒரு மாபியா கும்பலாக படம் பதிவு செய்துள்ளது. வழமையான தமிழ் சினிமா போன்று காதலும் உள்ளது. கடும் வன்முறையும் உள்ளது.

படத்தில் அடையாளம் பற்றி உரையாடல் ஒன்றும் இடம் பெறுகின்றது. நிலத்துடன் அடையாளம் இணைந்துள்ளது என்பது இயக்குநரின் கருத்து. ரொறன்ரோவில் இப்படத் திரையிடலின் பின்னர் கேள்விகளுக்குப் பதிலளித்த இயக்குநர் இது ஒரு தமிழ் ஈழப் படம் என்றும் கூறினார். தனக்கு இரண்டு அடையாளங்கள் உள்ளன. ஒன்று பிரெஞ்ச் பிரஜை. இரண்டாவது தமிழ். எனவே நான் இரண்டையும் நியாயப்படுத்திவிட்டேன் என்றார். படத்தில் இவர் இலங்கையில் தமிழர்கள் படும் துயரங்களை வசனங்களாக வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் அதற்காக நிதி சேகரிப்பவர்கள் மிக மோசமான வன்முறையாளர்கள், கொள்ளையர், கொலைகாரர்கள், மனிதாபிமானமற்றவர்கள் என உருவகப்படுத்தியுள்ளார். முடிவில் தான் ஒரு நியாயமான பிரெஞ்ச் பிரஜை எனக் கூறியுள்ளார். படம் முடிந்தபோது நுகர்வோர் மனதில் வன்முறையே மேலோங்கி நிற்கின்றது. படத்தில் பிரான்ஸ் புலி உறுப்பினர்களின் உடல் மொழி, உரையாடல் போன்றவை அவர்கள் ஒரு ஒடுக்கப்படும் இனத்துக்காக இயங்கும் போராளிகளாக வெளிப்படுத்தப்படவில்லை. காட்சிகள் மிகக்கவனமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கும், புலம் பெயர் புலிகள் அமைப்புக்களுக்குமிடையில் ஒரு முரண்-எதிர் நிலையுள்ளது என்று காட்டாமல், போராட்டத்தின் அங்கமாக இவ்வமைப்புகள் உள்ளன என வெளிப்படுத்துகின்றார். இதனாலேயே இயக்குநரின் பிரதிநிதித்துவம் பற்றிய கேள்வி எழுகின்றது.

ஹொலிவூட் படங்களில் போராளிகள் குழுக்களை இவ்வாறே சித்திரிப்பார்கள். ஹொலிவூட் அரசியலின் மறுபிரதியே இப்படம் இதுவரை. வெனிஸ், ரொறன்ரோ, சூரிச் ஆகிய திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுள்ளது. இப்படத்தின் பார்வையளர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் அல்லாதவர்கள். இவர்கள் முன் இவ்வாறான ஒரு கருத்தியலைக் கொண்ட படத்தை கொண்டு செல்வதன் நோக்கத்தின் பின்னணி என்ன? ரொறன்ரோ திரையிடலின் பின்னர் சமூக வலைத் தளங்களில் வெளிவந்த பல கருத்துகள் 'விடயம் புதியது.' 'விடுதலைப் புலிகள் மிகவும் மோசமானவர்கள்', இவற்றுடன் பொதுவாகவே 'குடிவரவாளர்கள் வன்முறையாளர்கள்' என்ற கருத்து நிலையும் முன்வைக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் வலது சாரி அமைப்புகள் குடிவரவாளர்களை வெளியேற்ற வேண்டும் என்ற கோசத்துடன் செயற்படுகின்றன. ஜேர்மனியின் வலது சாரிக் கட்சியான ஏ.எப்.டி சகல குடிவரவாளர்களையும் வெளியேற்ற வேண்டும் எனக் கூறி வருகின்றது. இவர்களுக்கான படமாக இது அமைந்துவிட்டது. ஆனாலும் பிரான்சின் லாச்சப்பலின் உண்மை நிலையை இப்படம் வெளிப்படுத்தியுள்ளது என்பது மறுப்பதற்கில்லை.

இப்படத்தில் ராதிகா சிறப்பாக நடித்துள்ளார். ஆனால், அவரும் வேல ராமமூர்த்தியும் பேசும் உரையாடல் மொழி ஒரு அந்நியத் தன்மையுடன் வெளிப்படுகின்றது. இயக்குநர் சிறப்பாக நடித்துள்ளார். இப்படம் மிகவும் சிறப்பாக படமாக்கப்பட்டுள்ளது. பின்னணி இசை சிறப்பாகவுள்ளது. இவ்வளவு இருந்தும் படம் கூறும் விடயம் பிரான்சின் பெரும்பான்மைச் சமூகத்திடமிருந்து தமிழர்களை அந்நியப்படுத்துவதற்கு துணை போகின்றது.

கான் திரைப்பட விழாவில் 2015-ம் ஆண்டு தீபன் திரைப்படம் சிறந்த பட விருதைப் பெற்றது. இப்படம் ஒரு தெலுங்கு படத்தைப் போன்ற மிக மோசமான படம். கான் விருதுக்கான காரணம், இப்படம் அங்கு வாழும் முஸ்லீம் மக்களை மிக மோசமாக சித்தரித்தமையேயாகும். அதிலும் மற்றொரு சிறுபான்மையினமான இலங்கைத் தமிழர்கள் முஸ்லீம்களை மோசமாக சித்தரித்துள்ளனர். தன்னை முற்போக்காளராகக் காட்டிக் கொள்ளும் ஷோபாசக்தியும் துணை போயுள்ளார். அதே போன்ற மற்றொரு முயற்சியே இது. இப்படத்தை தேர்வு செய்ததன் மூலம் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா தனது அரசியலை வெளிப்படுத்தியுள்ளது.



rathan@thaiveedu.com



### குழந்தை ம. சண்முகலிங்கத்தின்

# தான் விரும்பாத்தியாகி

## மொழிபெயர்ப்பு நாடகங்கள் ஆறு

– நா. நவராஜ்

குழந்தை ம.சண்முகலிங்கம் என்ற நாடக ஆளுமையின் படைப்பாக்கச் செயற்பாடுகள் பற்றிப் பேசுகின்றபோது பலரும் அவர் நூறு, நூற்றைப்பது நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார் என்றும் நாற்பது, ஐம்பது மொழிபெயர்ப்புக்களைச் செய்துள்ளார் என்றும் ஒரு குத்துமதிப்பாகக் கூறிக் கடந்து செல்வதனை அவதானிக்க நேர்ந்தபோது, அவர் உண்மையில் எத்தனை நாடகங்களை எழுதியும் மொழிபெயர்த்தும் உள்ளார் என்பதனை அறியும் சுயவிருப்பு என்னுள் உருவாகியது. அவ்விருப்பின் மூலம் மேற்கொண்ட முயற்சியால் இற்றைவரை அதன் இற்றைப்படுத்தல்களை மேற்கொண்டுவருகின்றேன். அதன் அடிப்படையில் இகட்டுரை எழுதும் இக்கணம் வரை...

- கோக்கேசிய வெண்கட்டி வட்டம்
- வேதாளம்
- துறவி
- மன்னன் ஈடிப்பஸ்
- ஒரு பாவையின் வீடு
- செரிப்பழத்தோட்டம்
- வீரத்தாயும் அவளது பிள்ளைகளும்
- வெண்கட்டி வட்டம். (சீன நாடகம்)
- கொடோவுக்காகக் காத்திருத்தல்.
- பிரித்தெடுப்பு
- மேற்கின் அரச மாதா (சியோபோ)
- கனெஹிரா
- செக்கிடெராவில் கொமாச்சி அல்லது செக்கிடெரா கொமாச்சி
- செமிமறு
- ஷோ(க்)குன்
- நக்கமிட்சு(மஞ்சு)
- ஒரு விற்பனையாளனின் மரணம்,
- கடலருகே இரு சிறு முயல்களும் கழுதையொன்றும்
- பசு
- துயரத்தின் பறவைகள்
- சிவப்பு விளக்கு
- ஹ(ப்)போவும் அவரது மகள் சுஜியும்
- திங்கள் இரண்டின் ஞாபகம் ஒன்று
- ஹேடிஸில் பறவைபிடிப்பவர்
- அந்திமாலைப் பாடலொன்று
- தான் விரும்பாத் தியாகி ஒருவர்
- திருமணம்
- இந்திரன் தீர்ப்பு
- மடொன்னா டயநோறா
- வெவ்வேறு வழிகளில் அமைதி
- பட்டிக்காட்டான்
- அன்பமுதூறும் அயலார்
- உலைவைப்போர்
- அன்டிகனி
- மன்னன் லியர் (மொழிபெயர்ப்பில்)
- சுணைக்கேடு
- ஐராங்கனி
- இருளார்ந்த யுகம்
- முன்னம் சிறப்புற வாழ்ந்தார்களே
- கட்டுண்ட புறொமீதியஸ்
- வசந்த காலச்சக்கரம்
- கொலொனொஸில் ஈடிப்பஸ்
- அகமெம்னன்
- தவளைகள் (சில பக்கங்களோடு நிறுத்தப்பட்டுள்ளது)
- படையல் பானம் ஏந்திச் செல்வோர்
- இரவலன் அல்லது இறந்துபோன நாய்
- முடிவாட்டம்
- வார்த்தைகளற்ற நடிப்பு
- வீதிகள்! பாதைகள்! வழிகள்! தெருக்கள்!
- பறத்தல் மறந்த பறவைகள்
- அந்திமாலை முதல் புலர் காலைவரை
- உருப்பளிகினில் நெருப்புக்கள்

- அவள் பெயர் பாரதி
- வெருளித் தெய்யம்
- அவளது தாயின் கதை
- செங்கொடி
- இலெக்ரா
- வீட்டிற்கு வெளியே
- அகதிமுகாம் - 25
- விலங்குக் காட்சிச்சாலைக் கதை (மொழிபெயர்ப்பில்)

போன்ற அறுபது நாடகங்களை அவரது மொழிபெயர்ப்பு நாடகங்களாக இனங்கண்டு பட்டியல்படுத்த முடிந்துள்ளது. இப்பட்டியலில் மாற்றங்கள் ஏற்படலாம். 'குழந்தை' அவர்களது மொழிபெயர்ப்புச் செயற்பாடு (இவரது மொழிபெயர்ப்புச் செயற்பாட்டின் ஆரம்பம் பற்றி அறிய 'குழந்தை ம. சண்முகலிங்கம் சொல்லால் சொல்லைப் பின்பற்றுபவர்' என்ற கட்டுரையை ஜீவநதி-135, மார்கழி-2019 மற்றும் தாய்வீடு தை-2022-ல் பார்க்கவும்).

குறிப்பாகப் பிறமொழி நாடகங்களை மொழிபெயர்க்கும் செயற்பாடு 1987-களில் 'வேதாளம்' என்ற நாடக மொழிபெயர்ப்புடன் தொடங்கித் 'துறவி', 'மன்னன் ஈடிப்பஸ்' என அது காலந்தோறும் விரிவடைந்து வந்தது. மேற்படி கட்டுரையில் இந்தவாறே பதிவு செய்யப்பட்ட நிலையில் இன்றைய தரவுகளின் படி, கிடைக்கப்பெற்ற மொழிபெயர்ப்பு எழுத்துருவின் அடிப்படையில் நோக்குகின்றபோது பிறமொழி நாடகங்களை மொழி பெயர்க்கும் செயற்பாடு 1979-இல் 'கோக்கேசிய வெண்கட்டி வட்டம்' என்ற நாடக மொழிபெயர்ப்புடன் தொடங்கி 'வேதாளம்','துறவி மன்னன் ஈடிப்பஸ்' என அது காலந்தோறும் விரிவடைந்து வந்துள்ளது என்ற முடிவுக்கே வரமுடிகின்றது. கோக்கேசிய வெண்கட்டிவட்டத்தின் ஆரம்ப எழுத்துரு குறித்து 97 / 98 ஆற்றுகை இதழுக்கான நேர்காணலில் குழந்தை அவர்கள் இது குறித்து கூறி இருந்தார். '1979-இல் இதனைத் (கோக்கேசிய வெண்கட்டிவட்டத்தினை) தமிழில் மொழிபெயர்த்தேன் ஆமி எடுத்து எறிஞ்சு போட்டுது' எனக் குறிப்பிட்டது (நாடகவழக்கு பக்கம்-229) போல 'இராணுவத்தினரால் எடுத்தெறியப்பட்டு' தொலைந்து போனமையால் குழந்தை அவர்கள் மீளவும் 25.02.2000-ல் அதனை மொழிபெயர்ப்புச் செய்தார். எனினும் தொலைந்துபோனது என்று கருதப்பட்ட எழுத்துரு இராணுவத்தால் எடுத்தெறியப்பட்டதென வைக்கப்பட்ட இத்துப்போன பழைய 'குப்பையுள்' கிடந்து தற்போது மீளப் பெறப்பட்டுப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இவரது இம்மொழிபெயர்ப்புச் செயற்பாடுகளின் ஆரம்ப கால கட்டத்தை இனி நோக்குவோம். 10.04.1995-களில் மொழிபெயர்க்கப்பட்ட 'துறவி' நாடகம் தற்போதைய உளமருத்துவ நிபுணர் சா. சிவயோகனின் நெறியாள்கையில் 09.06.1995 சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் மேடையேற்றப்பட்டது. 1995 ஐப்பசியில் 'மன்னன் ஈடிப்பஸ்' நாடகத்தை குழந்தை அவர்கள் மொழிபெயர்க்கத்தொடங்கினார். அம்மாதக் கடைசியில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வினால் மீசாலைக்குச் சென்று வைத்திய கலாநிதி சா.சிவயோகனது வீட்டில் தங்கியிருந்து அந்நாடகத்தை 28.11.1995-ல் மொழிபெயர்த்து முடித்தார். 'மன்னன் ஈடிப்பஸ்' நாடகம் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்களது முன்னுரையுடன் கனிமொழி வெளியீட்டகத்தின் ஊடாக 1997 ஏப்ரலில் சின்னபாலா (பாலநடராஜா ஐயர்)என்பவரால் வெளியிடப்பட்டதாலும், இவரது மொழிபெயர்ப்பு நாடகமான 'துறவி' முதல் மேடையேற்றம் கண்ட நாடகமாகவும் 'மன்னன் ஈடிப்பஸ்' முதல் மொழிபெயர்பு வெளியீடாகவும் தம்மை நிலைநிறுத்திக்கொண்டன. மன்னன் ஈடிப்பஸ் நாடகம் பின்னர் 01.09.1997-ல் கலாநிதி க. ரதிதரனின் நெறியாள்கையில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் மேடையேற்றப்பட்டது. இது குழந்தை அவர்களின் மேடையேற்றம் கண்ட இரண்டாவது மொழிபெயர்ப்பு நாடகம் எனும் பெருமையைப் பெறுகின்றது.

'மன்னன் ஈடிப்பஸ்' புத்தக வெளியீட்டைத் தொடர்ந்து முறையே 'ஐராங்கனி', 'அன்டிகனி', 'ஒரு பாவையின் வீடு', 'கோக்கேசிய வெண்கட்டி வட்டம்', 'மன்னன் ஈடிப்பஸ்' (மீள் பதிப்பு) போன்ற மொழிபெயர்ப்பு நாடகங்கள் நூலுருப்பெற்றன. இத்தகைய நூலாக்கப்பின்னணியில் ஆரம்ப நூல் தவிர ஏனைய நூல் வெளியீடுகளோடு சிறுதொடர்பு எனக்கும் ஏற்பட்டது. அவற்றோடான செயற்பாட்டின் அடிப்படையிலும் 'எந்தையும் தாயும்', 'ஆரொடுநோகேன்' போன்ற 'குழந்தை' அவர்களின் சுய எழுத்துருக்களைப் பிறர் வெளியிடும்போதும் 'எந்தையும் தாயும்', 'வேள்வித்தீ', 'மண்சுமந்த மேனியர்', போன்ற நாடகங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோதும் குழந்தை அவர்களின் பணிப்பின்பேரில் அவற்றை மூலத்தோடு ஒப்பிட்டுநோக்கி அவற்றைத் திருத்திய அனுபவத்தின் அடிப்படையிலும் குழந்தை அவர்களின் எழுத்துருக்களைப் பதிப்பிப்பது தொடர்பாகச் சில அடிப்படைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற சிந்தனையும் அது தொடர்பாக வேலைசெய்யவேண்டும் என்ற விருப்பும் என்னுள்ளெழுந்தது. அதன் அடிப்படையில் சில முயற்சிகளை குழந்தை அவர்களோடு இணைந்து மேற்கொண்டேன். அது பற்றி இக்கட்டுரையில் குறித்துச் செல்லலாம் எனக்கருதுகின்றேன்.

குழந்தை' அவர்களால் எழுதப்பட்ட சுய எழுத்துருக்களும் மொழிபெயர்ப்பு எழுத்துருக்களும் சிலவற்றைத் தவிர ஏனையவை ஒழுங்கு முறை பேணப்படாமலும், சிதைந்தநிலையிலும் காணப்படுகின்றன. அது போக எஞ்சியவை மாணவர்களது கையெழுத்துக்களில் விடுபடல்களுடன் காணப்படுகின்றன. வசனம் மற்றும் சொற்பிழைகள் நிறைந்தவையாகவும் சில பிரதிகள் இருப்பதுடன் பல எழுத்துருக்களின் மூல எழுத்துருவை எடுத்துச் சென்றவர்கள் 'குழந்தை' அவர்கள் கூறுவதுபோல 'பிரதி உபகாரமாக' அதைக் 'காணாமல் போன எழுத்துருக்கள்' என்ற பட்டியலில் சேர்த்துவிட்டனர்.அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட எழுத்துருக்களில் சிலவற்றின் தட்டச்சுசெய்யப்பட்ட பிரதிகளும் கணினியில் ரைப்செய்யப்பட்ட பிரதிகளும் - எழுத்துருக்களை ரைப்செய்தவர்கள், பார்த்து எழுதியவர்கள், வகுப்புக்களில் அவர் சொல்லச் சொல்ல எழுதியவர்கள், குழந்தை அவர்களின் நாடகமொழியினைக் கவனத்தில் கொள்ளவில்லை. தமக்குத்தெரிந்தவகையில் திருத்தங்களை மேற்கொண்டார்களேயன்றி சரியான முறையில் அவர்கள் எழுதவில்லை. அவர்கள் தத்தம் நினைப்பில் திருத்தியும் புதுக்கியும் தமது பணியினை மேற்கொண்டுள்ளமையால் பல்வேறுவகையான பிழைகளைத் தாங்கியபடியே அவையும் இருக்கின்றன. அத்தோடு 'குழந்தை' அவர்களது எழுத்துருக்களை முன்னர் பெற்றுச்சென்று நினைவுமலர்களிலும் சஞ்சிகைகளிலும் நாடகப்புத்தகவடிவிலும் வெளியிட்டவர்கள் சிலர் அவதானமின்மையாலும் அவசரப்பதிப்பித்தல்

வேலைகளாலும் பலவகையான பிழைகளோடும் மாறுபாடுகளோடும் அவற்றைப் பதிப்பித்து இருக்கின்றமையினாலும் 'குழந்தை' அவர்களது மூல எழுத்துரு எது என்ற மயக்கமும் காணப்படுகிறது. இதனால் மிகநிதானமாகவும் அவதானத்துடனும் எழுத்தெண்ணி 'குழந்தை' அவர்களின் எழுத்துருக்களைத் தேடிப்பெற்றுப் பதிப்பிக்கும் பணியினை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இத்தகைய ஒரு பின்னணியில் நின்றே 'குழந்தை' அவர்களின் எழுத்துருக்களை மொழிபெயர்ப்புக்களைப் பதிப்பிக்கின்றேன். இதற்கமையவே முன்னர் வெளியிடப்பட்ட 'மன்னன் ஈடிப்பஸம்' என்ற நூலும் பின்னர் குழந்தையவர்கள் மொழிபெயர்த்த 'அன்டிகனி' நாடகமும் பலகுறிப்புக்களுடனும் திருத்தங்களுடனும் வகுத்துத் தொகுத்து வெளியிடப்பட்டன. அத்தோடு 'குழந்தை' அவர்களின் சுய எழுத்துருக்களில் 'எதிர்கொள்ளக் காத்திருத்தல்' என்ற பெயரில் திருமறைக்கலாமன்றத்தினரால் 1993களில் வெளியிடப்பட்ட நூலும் கிடைக்கப்பட்ட எழுத்துருக்களினை ஒப்புநோக்கி ஆராய்ந்து பல திருத்தங்களுடனும் குறிப்புக்களுடனும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக குழந்தை அவர்கள் மொழிபெயர்த்த'இரவலன் அல்லது இறந்துபோன நாய்', 'வார்த்தைகளற்ற நடிப்பு', 'இந்திரன் தீர்ப்பு', 'தான் விரும்பாத் தியாகி ஒருவர்', 'அந்திமாலைப் பாடலொன்று', 'துறவி' போன்ற ஆறு நாடகங்கள் வகுத்தும் தொகுத்தும் 'தான் விரும்பாத்தியாகி' என்றபெயரில் குழந்தை அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பின் மூலஎழுத்துருக்களுக்கு அமைவாக பதிப்பிக்கப்பட்டுள்ளது. இரவலன் அல்லது இறந்துபோன நாய் என்ற நாடகம் பேர்ட்டோல்ட் பிறெஃட் (Bertolt Brecht) டினால் 1919களில் எழுதப்பட்டு ஆங்கிலத்தில் The Beggar or The Dead Dog என மொழிமாற்றம் செய்யப்பட்டிருந்த இந்நாடகத்தினைக் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு 'இரவலன் அல்லது இறந்துபோன நாய்' என்ற பெயரில் மொழிபெயர்த்தார். இந்நாடகத்தின் மொழிபெயர்ப்புச் செயற்பாட்டை அவர் 20.01.2017 அன்று இரவு தொடங்கி 22.01.2017 அன்று காலையில் நிறைவு செய்திருந்தார். இந்நாடகம் 23.01.2017 அன்று யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள தேசிய கலைஇலக்கியப் பேரவையினரின் நாற்சார் வீட்டில் நடந்த நாடக அரங்கக் கல்லூரியின் 39-வது ஆண்டு நிகழ்வில் நா. கிருபாகரன், நா. நவராஜ் போன்றோரால் வாசிப்பரங்காக நிகழ்த்தப்பட்டது.


வார்த்தைகளற்ற நடிப்பு என்ற நாடகம் சமூவெல் பெக்கெட் (Samuel Beckett)இனால் பிரஞ்சு மொழியில் எழுதப்பட்டது. பின்னர் அவராலேயே ஆங்கிலத்தில் 'Act Without Words - A Mime for one Player' என மொழிமாற்றம் செய்யப்பட்டது. இந்நாடகத்தினைக் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு 'வார்த்தைகளற்ற நடிப்பு - ஒரு நடிகருக்கானதோர் ஊமம்' என்ற பெயரில் 11.02.2013-களில் மொழிபெயர்த்தார். மொழிபெயர்ப்புத் திகதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் இடப்படவில்லை. பதிப்பாசிரியரால் ஆராய்ந்து கண்டறிந்திடப்பட்டுள்ளது. எதேச்சையாக அலை சஞ்சிகையை வாசித்தபோது இந்நாடகம் அபிநயம் - 1 என்ற தலைப்பில் ஏ.ஜே. கனகரத்தினாவால் மொழிபெயர்க்கப்பட்டு (1977 மார்கழி அலை (10) இதழில்) வெளியாகியிருந்ததைக் கண்டேன். பின்னர் 2006-ல் ஆற்றுகை (காட்சி - 15) சஞ்சிகையிலும் அது ஏ.ஜே. கனகரத்தினாவின் நினைவாக மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள நாடகமாணவர்கள் அம் மொழிபெயர்ப்பினையும் நாடகாசிரியர் குழந்தை ம.சண்முலிங்கத்தின் மொழிபெயர்ப்பினையும் ஒப்பீட்டு ஆராயலாம்.

'இந்திரன் தீர்ப்பு' என்ற நாடகம் இந்தியாவைச் சேர்ந்த தான் கோபால் முக்கர்ஜி (Dhan Gopal Mukerji) என்பவரால் எழுதப்பட்டது. ஆங்கிலத்தில் 'The Judgment of Indira' என்ற பெயரில் இருந்த இந்நாடகத்தினைக் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் தமிழில் 'இந்திரன் தீர்ப்பு' என்ற பெயரில் 11.02.2005-களில் மொழிபெயர்த்தார். 'தான் விரும்பாத்தியாகி ஒருவர்' என்ற நாடகம் ருஷ்ஷிய மொழியில் அன்ரன் செக்கொவினால் எழுதப்பட்டது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு 'A Tragedian in Spite of Himself, Unwilling Martyr, An Involuntary Tragedian' (From the life of Vacationers) என்ற வெவ்வேறு தலைப்புக்களில் காணப்படுகின்றது. ஆங்கில மொழியில் இருந்து இந்நாடகத்தைக் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் 01.02.2005-களில் 'தான் விரும்பாத் தியாகி ஒருவர்' என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்தார். இதனது தமிழ் மொழிபெயர்ப்பின் மூலஎழுத்துரு தொலைந்துவிட்ட நிலையில் கணினியில் ரைப்செய்யப்பட்ட பிரதியொன்றே தமிழ் மொழிபெயர்ப்பின் மூல எழுத்துருவாக இன்று உள்ளது. 2005-ல் மொழிபெயர்க்கப்பட்ட இந்நாடகம் 2017-ம் ஆண்டுகளில் கலாநிதி க. ரதிதரன் அவர்களின் நெறியாள்கையில், நா. கிருபாகரன், ந. தவசோதிநாதன், ந. நவநீசன் போன்றோரின் நடிப்பில் 'தான் விரும்பாத் தியாகி' என்ற பெயரில் பல இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது. தற்போதும் ஆற்றுகை செய்பட்டு வருகின்றது. இத்தலைப்பே இந்நூலுக்குப் பெயராகவும் இடப்பட்டுள்ளது.

'அந்திமாலைப் பாடலொன்று' என்ற நாடகம் ரஷ்ய மொழியில் அன்ரன் செக்கொவினால் எழுதப்பட்டது. ஆங்கில மொழியில் 'Swan Song' என்ற தலைப்பில் இருந்த இந்நாடகத்தைக் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் 28.01.2005-களில் 'அந்திமாலைப் பாடலொன்று' என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்தார். இந்நாடகத்தை 01.08.2005-ல் குழந்தை ம. சண்முலிங்கம் அவர்களின் நெறியாள்கையில் கலாநிதி க. ரதிதரன், நா. நவராஜ், போன்றோர் ஒத்திகை பார்த்தனர். அது அரங்க ஆற்றுகையாக மேற்கொள்ளப்படவில்லை. பின் மூன்றுவருடங்கள் கழித்து 22.08.2009-களில் மீளவும் கலாநிதி க.ரதிதரன், சிவரூபன் போன்றோரால் ஒத்திகை பார்க்கப்பட்டது. அதுவும் மேடையேற்றத் திகதி குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் சூழல் காரணங்களால் கைவிடப்பட்டது. அதன் பின்னர் 18.01.2017-களில் கலாநிதி க. ரதிதரன் ந. தவசோதிநாதன் போன்றோர் ஒத்திகை பார்ப்பதில் ஈடுபட்டனர். அவ்வேளையில் தவசோதிநாதன் தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்திகையில் பங்குபற்ற முடியாது போனமையால் கலாநிதி ரதிதரன், கலாநிதி உமேஸ் போன்றோர் தொடர்ந்து ஒத்திகை பார்ப்பதில் ஈடுபட்டிருந்தனர். அதுவும் அரங்காற்றுகையாக மேற்கொள்ளப்படவில்லை. இவ்வேளையில் இந்நாடகம் தி.தருமலிங்கத்தின் நெறியாள்கையில் தி. தருமலிங்கம், ர.-கேதுஜா போன்றோரின் நடிப்பில் 12.10.2017-இல் கிழக்குப் பல்கலைகக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள்

நிறுவகத்தின் இராசதுரை மண்டபத்திலும், 26.02.2018-ல் மன்னார் நகரசபை மண்டபத்திலும், 28.02.2018-ல் வவுனியா கலாசார மண்டபத்திலும், 10.03.2018-ல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும் 30.03.2019-ல் வல்வெட்டித்துறையிலும் அரங்காற்றுகை செய்யப்பட்டது.

'துறவி' என்ற நாடகம் ரவீந்திரநாத் தாகூரினால் (இப்பெயரின் எழுத்துவடிவம் பின்னாளில் குழந்தை அவர்கள் எழுதியபடி




உள்ளது) பிரகிருதிர் ப்ரதிஷோத் (இயற்கையின் வஞ்சினம்) என்ற பெயரில் 1884-ல் எழுதப்பட்டது. இது உரையும், செய்யுளும் பாடல்களும் கலந்துள்ள பலகாட்சிகளின் தொடர்மாலையாக அமைந்துள்ளது. சிசிர்குமார்கோஷ் அவர்களால் எழுதப்பட்டு அ.அ. மணவாளன் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 'இராவீந்திரநாத் தாகூர்' என்ற புத்தகத்தில் இந்நாடகம் பற்றி 'என்னுடைய இலக்கியப்படைப்புக்களுக்கெல்லாம் இது ஒரு முன்னுரை' (பக்கம் 73) என்று தாகூர் கூறியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை இங்கு சிந்திக்கத்தக்கது. இந்நாடகம் ஆங்கிலத்தில் 'Sanyasi or The Ascetic' என்ற பெயரில் மொழி மாற்றம் செய்யப்பட்டது. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் ஆங்கில வழி நின்று 'துறவி' என்ற பெயரில் இதனை 10.04.1995-ல் மொழிபெயர்த்தார். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் அதே ஆண்டு 09.06.1995-ல் வைத்திய கலாநிதி சா. சிவயோகனின் நெறியாள்கையில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது. பின்னர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிதிக்காகத் தமிழ் மன்றத்தால் 30.06.1995, 01.07.1995 காலப்பகுதியில் நடாத்தப்பட்ட 'காலைப்பொழுது' என்ற நிகழ்வில் இருதடவைகளும் மேடையேற்றப்பட்டது. 1979-ல் கோக்கேசி வெண்கட்டி வட்டம் என்ற நாடகத்தை குழந்தை அவர்கள் முதலில் மொழிபெயர்த்திருப்பினும் குழந்தை அவர்களின் மேடையேற்றங் கண்ட முதல் மொழிபெயர்ப்பு நாடகமாக இது விளங்குகின்றது. இந்நாடகத்தின் எழுத்துரு திருமறைக்கலா மன்றத்தினால் வெளியிடப்படும் ஆற்றுகை' நாடக அரங்கியலலுக்கான இதழ் காட்சி - 15 (பக்கம் 29-52)-இல் டிசம்பர் 2006-ம் ஆண்டு வெளிந்துள்ளது.

கனடாவில் உள்ள அரியாலையைச் சேர்ந்த ப. ஸ்ரீஸ்கந்தன் அவர்கள் குழந்தை அவர்களின் மொழிபெயர்ப்பு நாடகங்கள் சிலவற்றை வெளியிடவிரும்புவதாகவும் அதற்காகச் சில எழுத்துருக்களைத் தருமாறும் கேட்டிருந்தார். அதற்கு உடன்பட்டு எனது கோணத்தில் மேற்கொண்டுவரும் பதிப்புமுயற்சி பற்றியும் குறிப்பிட்டேன். அவர் அதனைச் செவிமடுத்து எனது பதிப்புப்பணியையே முன்னெடுக்குமாறும் அதன் வெளியீட்டுக்குத் தான் உதவுவதாகவும் அது தனக்குத் திருப்தி அளிக்கும் எனவும் குறிப்பிட்டார். அவரது அவ்வேண்டுதலாலும் உதவியாலும் 'தான் விரும்பாத் தியாகி' என்ற இப்பதிப்பு ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

இத்தொகுதியில் காணப்படும் மொழிபெயர்ப்பு நாடகங்களில் உள்ள வேறுபாடுகள், செய்யப்பட்ட மாற்றங்கள், மற்றும் நாடக எழுத்துருசார்ந்த முக்கியமான விபரங்கள் போன்றன குறிப்புக்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை வாசகர்கள் இத்தொகுதியில் காண்க. இத்தொகுதியில் உள்ள மொழிபெயர்ப்பு நாடகங்கள் எவ்விதமான சிறப்புரிமை கருதியும் ஒன்றாகத் தொகுக்கப்படவில்லை எனினும் அவற்றுக்கிடையில் ஒரு ஒற்றுமை நிலவுவதனை அவற்றை வாசித்துத் தொகுக்கின்றபோது அவதானிக்க முடிந்தது. இதனை வாசிப்பவர்களும் உணர்ந்து புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றேன்.



navaraj@thaiveedu.com

# பரதம்: தீதும் நன்றும்

## பார்வை | நடனம் | கருவுரு | படைப்புருவாக்கம்

– ரூபன் சிவராஜா



### கருப்பொருள்:

'தீதும் நன்றும்' எனும் கருப்பொருளில் (Thematic Presentations) ஓர் ஆடல் அரங்காற்றுகை.

வழமையான (சடங்கு ரீதியான) பரத நாட்டிய அரங்கேற்றங்களைக் கலாசாதனா கலைக்கூடம் நிகழ்த்துவதில்லை. 2014-ம் ஆண்டிலிருந்து நடன மாணவிகளின் அரங்கேற்ற நிகழ்வுகளை கருப்பொருள் சார்ந்தவையாகவே வடிவமைக்கப்படுகின்றன. இதற்குமுன் (2018) சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினோராடல், பாரதியின் தமிழிசை (2015), தமிழ் இலக்கியத்தில் பெண் (2014) எனும் பல்வேறு கருப்பொருள் சார்ந்த அரங்கேற்றங்களைக் கலாசாதனா கலைக்கூடம் நிகழ்த்தியது. அவை பார்வையாளர்களிடத்தே வரவேற்பைப் பெற்றிருந்தன.

இம்முறை கவிதா கண்டடைந்த கருப்பொருள் 'தீதும் நன்றும்'

புனைவுகள் மற்றும் காப்பியங்களின் கிளைக்கதைகள், எதிர்மறைப் பாத்திரங்கள் குறித்த வியாக்கியானங்கள் முதலானவற்றின் மறுவிசாரணைகளை நிகழ்த்துகின்ற வகையில் இந்த அரங்கேற்றத்தின் வெளிப்பாடுகள் அமைந்தன. பாத்திரச் சித்தரிப்புகள் குறித்த புதிய பார்வைக்கான தேடலாகவும், கதை சொல்லாடலாகவும், பாத்திரங்களின் உளவியலைக் கண்டடைவதாகவும் இம்முயற்சியைக் கொள்ளமுடியும்.

### தீதும் நன்றும்:

கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற காப்பியங்களில் எதிர்மறைப் பாத்திரங்களாக - அதாவது தீய சக்திகளாகச் சித்தரிக்கப்பட்ட பல பாத்திரங்கள் உள்ளன. இலக்கியங்களை வாசிக்காதவர்கள்கூட அப்பாத்திரங்களை மேலோட்டமாகவேனும் அறிவர். அவை காலம் காலமாகக் கதைசொல்லாடல்கள் மூலம் மக்களுக்கு கடத்தப்பட்டு வந்தவையாகக் காணப்படுகின்றன.

இப்பாத்திரங்கள் இலக்கியத் தழுவல்கள், மேற்கோள்கள், உவமைப்படுத்தல்கள் மூலம் பெரும்பான்மை சமூகத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன. அவற்றின் மறுபக்கத்தையும் அப்பாத்திரங்களின் நியாயங்களையும் கருத்திலெடுக்காத வகையில் அவை பரவலாக நிலைபெற்றும்விட்டன.

மனித மனத்தின் குண இயல்புகளையும் வாழ்வின் அநுபவங்களையும் உணர்வுகளையும் செயற்பாடுகளையும் வெறுமனே கருப்பு - வெள்ளை, தீயது - நல்லது என்ற இருமைப் பார்வைக்கு ஊடாக மட்டும் பார்த்துவிட முடியாது. அப்படி அணுகிவிடவும் முடியாது.

தீதும் நன்றும் இரண்டறக் கலந்ததே மனமும் வாழ்வும்.

### எதிர்மறைப் பாத்திரங்களின் கதைகள்:

இந்த அரங்கேற்றத்தில் பரத நாட்டிய அரங்கேற்ற உருப்படிகளுக்கான கட்டமைப்புக்குள் தாடகை, இராவணன், சூர்ப்பனகை, கூனி, சிகண்டி, சகுனி, பாஞ்சாலி ஆகிய புனைவிலக்கியப் பாத்திரங்களின் கதைகளும் சித்தரிப்புகளும் மறுபக்கங்களும் வியாக்கியானங்களும் எடுத்தாளப்பட்டிருந்தன.

தாடகை, கூனி ஆகிய பாத்திரங்களுக்கான பாடல்கள், உரையாடல்களை நான் எழுதியிருந்தேன். இராவணன், சகுனி பற்றிய பாடல்களை உமாபாலன் சின்னத்துரை எழுத, சிகண்டி, பாஞ்சாலி குறித்த பாடல்களைக் கவிதா எழுதியிருந்தார். அருணாசலக் கவிராயர் படைத்த ஒரு பாடல் சூர்ப்பனகை காதலைச் சித்தரிக்கவும் எடுத்தாளப்பட்டிருந்தது.

பரதநாட்டிய அரங்கேற்றத்திற்குரிய வடிவம் அப்படியே இருக்க, அலாரிப்பு, கவித்துவம், வர்ணம், பதம், கீர்த்தனை, தில்லான எனவான ஆடல் வடிவங்களுக்கு ஊடாகவே புதிய பேசுபொருட்கள் பேசப்பட்டன. கவித்துவம் என்ற உருப்படிக்குள் மகாபாரதத்தின் முக்கிய பாத்திரங்களில் ஒன்றான அரக்கியாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் - தாடகையின் கதை சொல்லப்பட்டது. அதேபோல் கதை சொல்லல் வடிவத்திற்கு ஊடாக கூனியின் கதை நிகழ்த்தப்பட்டது.

கர்ணன் மீதான பாஞ்சாலியின் காதலும் இராமன் மீதான

சூர்ப்பனகையின் காதலும் பதம் என்ற பரத உருப்படியாக தனித்தனியாக தீப்பிகா மற்றும் ஹர்ணி ஆகியோரால் ஆடப் பட்டன. சிருங்கார ரசம் நிறைந்தவையாக இவ்விரண்டு உருப் படிகளுக்கான ஆற்றுகைகள் அமைந்தன. இராவணனின் கதை அப்பாத்திரத்தின் பல்பரிமாணப் பக்கங்களைப் பிரதிப லிக்கும் வகையிலான 'வர்ணம்' ஆக வடிவமைக்கப்பட்டி ருக்க, சிகண்டியின் கதையும் சகுனியின் கதையும் 'கீர்த் தனை' உருப்படிகளாக நிகழ்த்தப்பட்டிருந்தன.

## காட்சிப்படுத்தல்:

ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு பாத்திரங்களினதும் செயல்க ளுக்கும், இயல்புகளுக்கும் காரணமாக அமைந்த அவர்க ளின் தரப்பு நியாயங்களும் உளவியற் தன்மைகளும் வெளிப் படுத்தப்பட்டன. கருப்பொருளின் தலைப்பிற்கமைய பாத்தி ரங்களின் குணாம்சங்களும் அவற்றின் அக-புறச் சூழல்க ளும் பாடல்வரிகள், காட்சிப்படுத்தல், பாத்திரச் சித்தரிப்புக ளுக்கூடாகப் பிரதிபலித்தன.

நடன அமைப்பில் மெய்ப்பாடுகள், உடல்மொழி, நடன அசை வுகளின் அழகியல், காட்சிப்படுத்தல்கள், நிகழ்த்திக்காட்டல் கள் என அனைத்தும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஒவ் வொரு பாத்திரங்களும் வலுவான வகையில் தனித்துவ இயல் புகளைக் கொண்டதாகப் படைக்கப்பட்டிருந்தன. பாத்திரங்க ளையும் அவற்றின் கதைகளையும் பார்வையாளர்களுக்குக் கடத்துவதற்கு காட்சிப்படுத்தல்கள் அவசியம். அதனைக் கவிதா சிறப்பாக வடிவமைத்து நெறிப்படுத்தியிருந்தார். அரங்கேற்ற நாயகிகளும் பாத்திரங்களின் தனித்துவங்களை உணர்ந்து மெய்ப்பாடுகளையும் உடல்மொழியையும் வெளிப் படுத்தியிருந்தனர். ஆற்றுகைக்குரிய (Performance) வெளி மிகப்பெரியதாக இருந்தது. அதனை இருவரும் தனித்துவமா கவும் நுணுக்கமாகவும் வெளிப்படுத்தியிருந்தனர். ஒவ்வொரு பாத்திரங்களின் கதைகளும் ஆற்றுகையாக நிகழ்த்தப்பட் டன. ஒவ்வொரு உருப்படியும் ஒவ்வொரு நடன நாடகம் எனச் சொல்லக்கூடியவை. அன்றைய அரங்கேற்றத்தில் பல நடன நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன என்று சொல்வதுகூட ஒருவகை யிற் பொருத்தமானது. அரங்கேற்றப் பேசுபொருளும், கதைக ளும் ஆற்றுகையும் அற்புதமான பார்வை அனுபவத்தினை வழங்கியிருந்தது.

## வடிவம் – கட்டமைப்பு – பேசுபொருள்:

அலாரிப்பு - விருத்தம் என்ற உருப்படிகளுக்கு நடுவுநிலமை அதிகாரத்திலிருந்து மூன்று திருக்குறள்கள் பயன்படுத்தப்பட் டன. அரங்கேற்றக் கருவுருவுக்குக் கட்டியம் கூறுவதாக அவை அமைந்தன. முடிவில் தில்லானாவில் கணியன் பூங் குன்றனாரின் தத்துவார்த்த, மானிட சமத்துவ, இயங்கியல் குறித்த ஆழமான கவித்துவ வரிகளைக் கொண்ட 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' பாடல் பயன்படுத்தப்பட்டிருந்தமை உகந்த நிறைவுரைப் பாடலாகவும் அமைந்திருந்தது.

அரங்கேற்ற நிகழ்விற்கு ஆற்றல் மிக்க பக்கவாத்தியக் கலை ஞர்கள் இசையால் உயிர்கொடுத்தனர். குரலிசை ஹரிகரன் சுயம்பு, மிருதங்கம் பிரசாந்த் பிரணவநாதன், வயலின் அதிச- யன் சுரேஸ், வீணை சௌமியா இராமச்சந்திரன் என அனைவ ரினதும் பங்களிப்புக்களும் நிகழ்வு சிறக்க காரணமாய் அமைந்தனர்.

ஒரு கலை வடிவத்தின் கட்டமைப்புக்குள் நின்று - அதன் இலக்கணத்திற்குள் நின்றபடியே - பல்வேறு புதிய பேசுபொ ருட்களை பேச முடியும் என்பதனை நிறுவுகின்ற அல்லது அத னைப் பழக்கப்படுத்துகின்ற ஒரு முனைப்பாகவும் கவிதா- வின் கலை படைப்பாக்க முயற்சிகளை நோக்க முடியும். ஒரு கலை வடிவத்தின் ஊடாகத் திரும்பத் திரும்ப ஒரே மாதிரி யான பொருளையே பேச வேண்டும் என்ற அவசியம் இல்லை என்ற கட்டுடைப்புச் சிந்தனையும் செயற்பாடும் இத்தகு கருப் பொருள் சார்ந்த பரத அரங்கேற்றப் படைப்பு உருவாக்கங்க ளில் வெளிப்படுகின்றன.

## பார்வை | நடன அமைப்பு | கருவுரு (concept) | படைப்புருவாக்கம்:

நடனத்தில் எடுத்துக் கொண்ட பொருளை, அதன் அகநிலை - புறநிலை சார்ந்த பல பரிமாணங்களிற் பிரதிபலிக்கும் வகை



யில் உடலால் ஆற்றுகை செய்யவேண்டும். அந்த ஆற்றுகை என்பது செயல் (Action) மற்றும் எதிர்வினை (Reaction) இரண்டையும் உள்ளடக்கியது.

'சமபாதத்தில் உறைந்துவிட்ட இந்திய நடனங்கள்' என்ற தலைப்பில் கலை, இலக்கிய விமர்சகர் வெங்கட் சாமிநாதன் எழுதிய கட்டுரைத் தொடர் வரலாற்றுப் போக்கில் பரதக் கலையின் தேக்கம் குறித்தும் குறைபாடுகள் குறித்தும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. பரதம் பற்றிய கவிதாவின் பார்வையிலும் அவரது நடன அமைப்பிலும், கருவுருத் தேடலிலும் (consept), படைப்புருவாக்கத்திலும் இந்த வேறுபாட்டினை நுணுக்கமாக அவதானிக்கலாம். கவிதா பாடல் வரிகளை உடல் அசைவு, அபிநயம், மெய்ப்பாடுளால் மொழிபெயர்ப்பவர் அல்ல. பேசுபொருளின் சூழலையும் கதையின் களத்தையும் சம்பவங்களையும் பிரதிபலிக்கும் வகையிலான நடன அமைப்பினையும் ஆற்றுகை வெளிப்பாட்டினையும் முக்கியமாகக் கருதுபவர். பேசுபொருள் ரீதியான கட்டுடைப்பு மட்டுமல்ல, வெளிப்பாட்டு உத்திகள், கலைத்துவ அழகியல் மெருகூட்டல்கள் சார்ந்த உடைப்புகளையும் நிகழ்த்தி வருபவர்.

## சமபாதத்தில் உறைந்துவிட்ட பரதம்:

பரத நாட்டியத்திற் பொதுவாக அபிநயங்களின் வழி, முத்திரைகளின் வழி பாடல் வரிகளை ஒப்புவிக்கின்ற செய்கையே அதிகமானவர்களால் நிகழ்த்தப்படுகின்றது. இலகுவான ஓர் உதாரணம் மூலம் அதனை விளக்குவதற்குப் பாரதியின் 'சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா, செல்வக் களஞ்சியமே' என்ற வரியை எடுத்துக் கொண்டால், சின்னஞ்சிறு கிளி, செல்வக்களஞ்சியம் என்பதை அபிநயத்தின் மூலமும் முத்திரைகளின் மூலமும் பெரும்பான்மைப் பரதக் கலைஞர்கள் உருவகித்துக் காட்டுவர். இன்னொரு வகையில் சொல்வதானால் மொழியின் வரிகளை உடலின் சைகைகள் மூலம் அபிநயிப்பர். பரதக் கலையின் உள்ளார்ந்த வடிவமும் வெளிப்பாடும் அதுவாக இருக்க முடியாது.

'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக் களஞ்சியமே' என்று குழந்தையைக் கொஞ்சுவதை ஆற்றுகை செய்வது தான் முதன்மையானதே அன்றி வார்த்தைகளை உடல் அசைவுகளால் அச்சொட்டாக மொழிபெயர்ப்பதல்ல. குழந்தை மீதான உவகை, குழந்தைக்கும் கொஞ்சுபவருக்கும் இடையிலான உறவும் அது சார்ந்த சூழலும் நடன ஆற்றுகையிற் பிரதிபலிக்க வேண்டும்.

நடன ஆசிரியரும் கலாசாதனா கலைக்கூட இயக்குநனருமான கவிதா லட்சுமியின் மாணவிகள் ஹர்ணி நகுலேஸ்வர-தாஸ் மற்றும் தீபிகா மகேசன் ஆகியோரது ஆடல் அரங்கேற்றம் ஓகஸ்ட் 17, 2024-இல், நோர்வே Sandvika Teater அரங்கில் இடம்பெற்றது.

நோர்வேயில் இடம்பெற்ற இந்த அரங்கேற்றத்தில் ஆடல் நாயகிகள் ஒவ்வொரு உருப்படிகளிலும் அந்தந்தப் பாத்திரங்களாக மாறினர், கதைசொல்லிகளாகச் செயற்பட்டனர். காட்சியை நிகழ்த்திக் காட்டினர். நிகழ்த்துகையினதும் ஆற்றுகையினதும் இத்தகு தன்மை கலைத்துவ வெளிப்பாட்டுக்கும் மெருகுகூட்டியது. பரத நாட்டிய ஆடை வடிவமைப்பிலும் அவற்றின் நிறத் தெரிவிலும் நுணுக்கம் தெரிந்தது.

## இதிகாசங்கள்:
## கேள்வி, விவாதம், மாறுபட்ட பார்வை:

இதிகாசங்கள், புராணங்கள் வரலாற்றுப் பார்வையில் அணுக முடியாதவை. அவை புனைவுக்கதைகள் என்ற வரையறையுடன் அணுகப்பட வேண்டியவை. பெரும்பாலும் கடவுளர்களைப் பற்றியதும் 'இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள்', அவதாரங்களைப் பற்றியதான கதைகளைக் கொண்டவை. மதங்களுக்குப் புனிதப் போர்வை போர்த்துவது, கடவுளர்களைப் போற்றுவது, கடவுளுக்கு நிகராகச் சில பாத்திரங்களை அவ



படங்கள்: தீபன் கணேஷ்

தார புருஷர்களாக நிலைநிறுத்துவது போன்றவற்றை முன்னிலைப்படுத்துவதை இவை கொண்டிருந்தன. 'மேல்நிலை - கீழ்நிலை, உயர் குலம் - தாழ் குலம்' என மானிடர்கள் சார்ந்தும் சமூகங்கள் சார்ந்தும் பாகுபாடுகளை நிலைநாட்டும் முனைப்புக் கொண்டவை. அத்தோடு 'உயர்ந்தவர்கள்' என்போர் சார்ந்த அதிகாரத்தை நிலைநாட்டும் முனைப்பும் அவற்றுக்குண்டு.

ஒரு வகையில் இவற்றை மத அடிப்படைவாதமாகவும் நாங்கள் தர்க்க ரீதியில் நிறுவலாம், மதிப்பிடலாம். பக்தி, ஆன்மீகம் என்ற வரையறைகளுக்குள் இவை அடங்காது. மறுபிறப்பு, வரம், சாபம், குலம், கோத்திரம், யாகம், தவம், சாத்திரம், சம்பிரதாயம், சோதிடம், ஐதீகம் எனவாக அதீத மூடநம்பிக்கை அம்சங்களை இந்த இதிகாச இலக்கியங்கள் கொண்டிருக்கின்றன.

***பெரியோரை வியத்தலும் இலமே,***
***சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே***

என கணியன் பூங்குன்றனாரின் கவிதை ஏற்றத் தாழ்வுகளை அறவே மறுதலிக்கும் அற்புதமான மானிட தத்துவம். இது போன்ற தமிழ்ச் சிந்தனைகள் இலக்கிய மரபில் உள்ளது என்பதை நாம் இந்த இடத்தில் நினைவில் கொள்வது பொருத்தமாகும்.

## புராண இதிகாசங்களும் உலகமும்:

உலகில் எல்லா சமூகங்கள் மற்றும் கலாசாரங்களும் இத்தகைய இதிகாசப் புனைவுகளை கொண்டிருக்கின்றன. வாய்மொழியாகவும் எழுத்து வடிவமாகவும் பல்வேறு மொழிகளில் இவை பல்வேறு தலைமுறைகளுக்கு கடத்தப்படுகின்றன.

பெரும்பாலான புராண இதிசாசங்கள் பலநூறு வேறுபட்ட, திரிபுபட்ட, மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்ட வடிவங்களை எழுத்திலும் கொண்டிருந்தன. இவை மொழிபெயர்ப்புகளாகவும், வாய்வழிக் கதை - சொல்லாடல்களாவும் காலத்துக்கு காலம் கடத்தப்பட்டு பேணப்பட்டு வருகின்றன.

மேற்சொன்ன அத்தனை குறைபாடுகளுக்கு மத்தியிலும் இவற்றில் உள்ள பாத்திர படைப்புகள் பல சுவாரஸ்யமானவை. மிகுந்த கற்பனைத் திறனோடு பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. அரங்கப் படைப்புகள், சிறுகதை, நாவல், திரைப்படம் என ஆக்க இலக்கியங்களுக்கூடாகக் கண்டறியலாம். பல்வகையான படைப்புகளுக்குமான கட்டமைப்பினையும், பாத்திரச் சித்தரிப்புகளுக்குரிய முன்னுதாரணங்களையும் புராண இதிகாசங்களில் இருந்து கண்டடையலாம். குறிப்பாக திரைப்படம், நாடகம் உட்பட்ட காண்பியற் கலைகளுக்கு முரண்பாடு முதன்மையானது.

## பாத்திரச் சித்தரிப்புகளும் முரண்பாடும்:

'நாடகத்தில் முரண்பாடு வளர வேண்டும். இரண்டு பாத்திரங்கள் மோதும் போதுதான் முரண்பாடு வளரும். ஒவ்வொரு நிலைகளிலும் முரண்பாடு படிப்படியாக வளர்ந்து வளர்ந்து உச்சத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். அதைத் தான் பேரவலம் என்பது...' என இராமாயணத்தின் யுத்த காண்டத்தைத் தனக்குக் கற்பிக்கும்போது, பேராசிரியர் சிவத்தம்பி கூறியதை ஒரு நேர்காணல் ஒன்றில் பேராசிரியர் மௌனகுரு பகிர்ந்து கொண்டிருந்தமை நினைவில் வருகின்றது.

உலகம் எப்படி உருவானது?, எவ்வாறு செயற்படுகிறது?, மனிதர்கள் உட்பட்ட உயிரினங்கள் எவ்வாறு தோன்றின? என்பதை விளக்குவதை புராணங்கள் முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளன. உலகின் தோற்றம் பற்றிய கட்டுக்கதைகள், அண்டவியல் தொடர்பான புனைவுகள், நம்பிக்கைகள், இறையியல் - கடவுள்கள் எவ்வாறு படைக்கப்பட்டனர், மானுடவியல் - மனிதர்கள் எவ்வாறு உருவாகினர், Eschatological myths - கடைசி காலங்கள் பற்றிய கதைகள், Soteriological - மீட்பர் உருவம் பற்றிய கருத்துகள், தோற்றம் பற்றிய கட்டுக்கதைகள் - நகரங்கள், இடங்கள் அல்லது மக்கள் எப்படி உருவானார்கள் என்பது பற்றிய கட்டுக்கதைகள், இயற்கை பற்றிய கட்டுக்கதைகள் - கடவுள்களை இயற்கை நிகழ்வுகளுடன் இணைக்கும் கட்டுக்கதைகள் என்பனவற்றை விளக்குவதாக புராணங்கள் காணப்பட்டன. உலகின் எல்லா மதங்களிலும் கலாசாரங்களிலும், மொழிகளிலும், இனங்களிலும் இத்தகு புராண இதிகாசக் கதைகள் உள்ளன. ஆதாம் - ஏவாள் பற்றிய புனைவு இன்றளவும் உலகம் முழுவதும் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒன்றாக இருக்கின்றது.

## மகாபாரதம், இராமாயணம்:

மகாபாரதம், இராமாயணம் ஆகியவை அடிப்படையில் உன்னத இலக்கியங்களாக, மானிடத்தை மேம்படுத்துவனவாக உள்ளனவா? என்றால், இல்லை என்பது ஒற்றைப் பதிலாக இருக்க முடியும், ஆனால் அவற்றிலிருந்தும் அவற்றை கேள்வி கேட்பதன் ஊடாக, மறுவாசிப்புச் செய்வதன் ஊடாக, வியாக்கியானம் செய்வதன் ஊடாக, எதிர்வாதங்களை முன்வைப்பதன் ஊடாக, தர்க்கிப்பதன் ஊடாக ஏற்றத் தாழ்வுகள், ஒடுக்குமுறைகளுக்கு எதிரான, மானிடத்தை மகிமைப்படுத்தும் படைப்புகளை உருவாக்கமுடியும்.

இராமாயணம் மகாபாரதம் ஆகியவை இலக்கியப் பிரதிகளாக அணுகப்பட வேண்டியவை என்ற வலுவான வாதங்களும் பல மட்டங்களில் இருக்கின்றன. குறிப்பாக இராமாயணத்தினை கம்பனின் கவித்துவ உச்சத்திற்காகவும் தமிழ் மொழியின் செழுமையை அழகியலைக் கற்பதற்காகவும் அதனைச் சுவைப்பதற்குமாகவேனும் வாசிக்கவேண்டும் என்பது எனது அபிப்பிராயம். ஆனால், இவை யாருடைய குரலை உயர்த்திப் பிடிக்கின்றன?, யாருக்காகப் பேசுகின்றன? என்பதையும் நாம் கருத்திற் கொண்டு ஆராயவேண்டும். பகுத்தறிவுப் பார்வையுடன் அவை வாசிக்கப்படவும் விவாதிக்கப்படவும் கேள்விகளுக்கு உட்படுத்தப்படவும் வேண்டுமென்பதையும் குறிப்பிடவேண்டும்.

## புத்தாக்க தரிசனம்:

'யதார்த்தத்தை அதன் ஒற்றைக் கண்ணோட்டத்திலிருந்து மீள்தேடலுக்கு ஊடாக மீள்கண்டடைகின்றது கலை. 'தனித்துவமான கலைஞர் உண்மைகளுடனான தனது உறவின் மூலமும் தனக்கே உரித்தான பார்வை மற்றும் உணர்வுகள் மூலமும் புத்தாக்கப் படைப்புகளை உருவாக்கம் செய்கின்றார்' என்கிறார், ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கியலின் தந்தை அகுஸ்ரூ போல் (Augusto Boal). அரங்கின் அழகியல் குறித்த அவரது தத்துவார்த்த தரிசனத்தின் வெளிப்பாடு இது. கவிதாவின் படைப்புகளிலும் அணுகுமுறை, அவற்றுக்கான தேடலிலும், அவரது படைப்பினை ஒத்த அம்சங்களை அவதானிக்கலாம்.

புராண இதிகாச மற்றும் இலக்கியங்களைத் தழுவிய படைப்புகளை உருவாக்குவது என்பது அவற்றை ஏற்றுக் கொள்வது என்ற அர்த்தத்தில் மாத்திரம் உருவாக்கப்படும் கலைச்செயற்பாடு மட்டுமல்ல. அவற்றின் மீது கேள்வி எழுப்புவது அவற்றை விமர்சிப்பது, மறுப்பது, நீதிகோரலாக முன்வைப்பது, வியாக்கியானப்படுத்துவது, எதிர்ப்பது என்பவை அவற்றை தழுவிய அல்லது அவை சார்ந்து உருவாக்கப்படும் புதிய படைப்புகளின் வெளிப்பாடாக அமையும். அதுவே சமூகப் பிரதிபலிப்பிற்கும் சமகாலப் பிரதிபலிப்பிற்கும் கலைத்துவ அழகியலுக்குமான பங்களிப்பாக இருக்க முடியும்.

தமிழ் இலக்கியங்கள், புராணக் கதைகளிலிருந்து கருப்பொருளை எடுத்தாண்டு, நோர்வேயிற் கவிதா லட்சுமி படைத்துவரும் நடன நாடக, அரங்கேற்றங்கள் முதலான படைப்புருவாக்கங்கள் அத்தகைய வெளிப்பாடுடையவையே. அத்தகு அணுகுமுறையில் மூன்று படைப்புகளை அண்மைக் காலங்களில் கவிதா படைத்துள்ளார். சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினோராடலைத் தழுவிய அரங்கேற்றம், 'சூர்ப்பனகை' நடனநாடகம், 'தீதும் நன்றும்' எனும் இந்த ஆடல் அரங்கேற்றம் முதலானவை இதற்குச் சான்றுகளாக அமைகின்றன.



rooban.s@thaiveedu.com



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 50 :

# அரசியல் சுவாலைக்குள் ஒரு நந்தவனம்

– மு. நித்தியானந்தன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒக்ரோபர் 1976-ல் ஆரம்பிக்கப்பட்டு, ஒன்றரை ஆண்டுகளின் பின், ஜூலை 1976-ல் பொருளியல், வணிகவியல் துறைக்குத் துணை விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்றேன். லேக்ஹவுஸ், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் குடிவிபரவியல் நிறுவனம், சசெக்ஸ் பல்கலைக்கழக களஆய்வு அலுவலர் என்று பல நிலைகளில் பணியாற்றிய பின், நான் ஏற்ற புதிய பணி இது.

1976-ம் ஆண்டில் முதல் தடவையாக மாணவர்கள் வணிகத் துறைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

பேராசிரியர் க. கைலாசபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்



தின் முதல் தலைவராகப் பணியேற்று, அந்தப் புதிய கல்வி நிறுவனத்தை வழிநடத்திச் செல்லும் பெரும் பொறுப்பைச் சுமந்திருந்தார். நான் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் சிறப்புக் கற்கைநெறியில் பயின்று கொண்டிருந்தேனாயினும், தமிழில் சிறப்பு நெறியை மேற்கொண்டிருந்த மாணவர்களுக்கு அவர் விரிவுரையாற்றிய 'புனைகதை' வகுப்புகளுக்கு ஓராண்டாய்ச் சீராகச் சென்று அவரிடம் பாடம் கேட்டிருக்கிறேன். அவர் என் குருவுமாவார்.

அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிங்களத் துறைப் பேராசிரியராகவிருந்த கலாநிதி சுச்சரித கம்லத், மனிதப்பண்பியற் பீடத்தின் பீடாதிபதியாகவிருந்தார். கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து அவரை நான் நன்கறிவேன். சிங்கள கலை இலக்கிய உலகில் நன்கறியப்பட்டவர். மார்க்சிய ஈடுபாடு மிக்க கம்லத் அவர்கள் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்ட அபூர்வமான மனிதர். தனது அரசியலுக்காக ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் பல்கலைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, பதினைந்து ஆண்டுகள் அவர் தொழில் இன்றி அல்லலுற்றார்.

பேராசிரியை சித்ரலேகா மௌனகுரு என்னுடன் சமகாலத்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர், அங்கு தமிழ்த் துறையில் பணியாற்றிக்கொண்டிருந்தார். பேராசிரியர் எம்.ஏ. நுஹ்மான் மொழியியல் சிறப்புப் பட்டம் பெற்று, அவரும் அங்கு இணைந்திருந்தார்.

மெய்யியல் அறிஞர் செ.வே. காசிநாதனின் மாணவராக எம்.எஸ். அனஸ், மெய்யியல் துறைக்கு விரிவுரையாளராக வந்தமை புதிய நல்வரவாக அமைந்தது. விசாலமான இதயமும் மாண்பும் மிக்கவர் அனஸ்.

ஏ.ஜே. என்னும் நல்லறிஞன், ஆங்கிலப் போதனாசிரியனாய் அப்பல்கலைக்கழகத்தை அணி செய்திருந்த காலமும் அதுவே. இந்த நல்லறிஞர் கூட்டம் எனக்குப் பெருந்துணையாய் அமைந்தது.

அரபு இஸ்லாமிய நாகரிகத் துறையைச் சேர்ந்த கே.எம்.எச்.காலிதீன் சில காலம் எனக்கு திருக்குர்ஆன் போதித்தார். 'கலிமா சொல்லி இஸ்லாத்தில் சேர்ந்துவிடுங்கள்' என்று ஒருமுறை சொன்னார். நல்ல இதயம் கொண்டவர் காலிதீன்.

இவர்களுடன் கா. ஆனந்தநடராஜா, சா. சத்தியசீலன், இர. சிவச்சந்திரன், ந. பேரின்பநாதன், அ. கணபதிப்பிள்ளை ஆகியோரும் வெவ்வேறு துறைகளில் பணிபுரிந்தாலும், குடும்ப நண்பர்களாய்க் குலவி மகிழ்ந்த காலம் ஒரு கனாக்காலமாய் மனதில் புகைமூட்டமிடுகிறது.

சிங்களச் சினிமாத்துறையின் கீர்த்தி மிக்க தர்மசேன பத்திராஜ, யாழ். பல்கலைக்கழகத்தின் சிங்கள மொழி விரிவுரையாளராக இருந்த காலத்தில்தான் 'பொன்மணி' என்ற தமிழ்த்

திரைப்படத்தைத் தயாரித்திருந்தார். ஹர்ஷா குணவர்த்தன, தயபால திராணகம போன்ற ஆளுமைகளும் அப்பல்கலைக் கழகத்திற்கு அணி சேர்த்தனர்.

கடந்த ஐம்பது ஆண்டு காலத்தைத் திரும்பிப் பார்க்கையில், பல நல்ல இதயங்களை இழந்துபோன துயரம் நெஞ்சை வாட்டுகிறது. ஒரு நீண்ட பட்டியல் கண்முன் விரிகிறது.

பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் முதல் விரிவுரையாளராக நியமனம் பெற்ற கா. ஆனந்தநடராஜா பொருளியல் கோட்பாட்டினைச் சிறப்புறக் கற்பித்து, மாணவர்களுக்



குச் செழுமையான அடித்தளத்தை இட்டவர். கிழக்கு ஜெர்மனியில் கார்ல் மார்க்ஸ் பல்கலைக்கழகத்தில் உயர்கல்விக்காகச் சென்றவர் சுகவீனமுற்று, அவர் நாடு திரும்பியமை துரதிர்ஷ்டமானது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் 7-ம் திகதி நடைபெற்ற மாணவர் சங்கத் தேர்தலில் மலையக மாணவர்கள் தாக்கப்பட்ட நிகழ்வு பல்கலைக்கழகத்தின் கறை படிந்த பக்கம். இந்நிகழ்வினைக் கண்டித்து, மலையக மாணவர்கள் பக்கம் நியாயம் உள்ளது என்று தனிக்குரல் கொடுத்த மாண்பு ஆனந்தநடராஜாவினுடையது.

பேராசிரியர் கைலாசபதியின் காலத்தில் தற்காலிகப் பணியில் சேர்க்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் கழிந்து, பேராசிரியர் சு. வித்தியானந்தன் உபவேந்தராக நியமனம் பெற்று, முறையான பல்கலைக்கழக யாப்பிற்கிணங்க அமைக்கப்பட்ட, பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இருவரும் உள்ளடங்கிய தேர்வுக் குழுவினரால் எங்கள் நியமனங்கள் நிரந்தரம் பெற்றன.

சில காலம் வணிகவியல் துறை, வேறொரு துறைத் தலைவரின் நிர்வாகத்தின் கீழும் வந்தது. அவரை வந்து சந்திக்குமாறு அவரது பியூன் மூலம் ஒரு முறை எனக்கு அழைப்பு விட்டிருந்தார்.

ஏதோ ஓர் அறை எண்ணைக் குறித்து, அந்த அறையில் முதல் நாள், நேரம் எல்லாம் துல்லியமாகச் சொல்லி, அங்கு விரிவுரை எடுத்தீர்களா ? என்று கேட்டார். ‘ஆம், சில சமயங்களில் ஒதுக்கப்பட்ட விரிவுரை நேரங்கள் போதாது போனால், மேலதிகமாச் சில விரிவுரைகளை எடுப்பதுண்டு’ என்று பதில் கூறினேன்.

‘ஆனால் அதற்கு என்னிடம் ஏன் அனுமதி பெறவில்லை ?’ என்றார்.

‘ஏன் ? அந்த அறையை வேறு யாராவது விரிவுரைக்கு ஒதுக்கியிருந்தீர்களா ?’ என்று கேட்டேன்.

‘இல்லை, நீர் என்னிடம் அனுமதி பெற்றிருக்கவேண்டும்’ என்றார்.

அந்த அறையின் ஜன்னலுக்கூடே தெரிந்த மைதானத்தின் எல்லையில் நிழல் பரப்பி நின்றிருந்த மரத்தைச் சுட்டிக் காட்டி, ‘அந்த மரத்தின் கீழ் நான் வகுப்பு எடுத்திருந்தால் என்ன செய்வீர்கள் ?’ என்று கேட்டேன்.

அந்தப் பதிலை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

சுதந்திர வர்த்தக வலயம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில், அது பற்றிய ஒரு கருத்தரங்கிற்கு நாங்கள் ஏற்பாடுகள் செய்திருந்தோம். பேராசிரியர் சோ. செல்வநாயகம், ந. பாலகிருஷ்ணன், க. ஆனந்தநடராஜா, நான் ஆகியோர் உரையாற்றும் நிகழ்வு. உரையாளர்களின் பேச்சுகள் கட்டுரை வடிவத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, றோனியோ மூலம் அச்சிடப்பட்டு நூலாகக் கருத்தரங்கில் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. பல்கலைக்கழகத்திற்கு வெளியில் பெரும்பாலான கட்டுரைகள் அச்சிடப்பட்டுவிட்டன. ஒரு கட்டுரையைப் பல்கலைக்கழகத்தில் றோனியோ செய்யவேண்டி இருந்த நிலையில், ஜே.எச். அரியரத்தினம் அவர்களிடம் சென்று கேட்டேன். பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பொறுப்பு அவர் கையில் இருந்தது. கண்ணியம் மிக்க கனவான் அவர். சிறந்த கல்விமான். அவர் என்னுடைய வேண்டுகோளை ஏற்று, ஒரு கடிதம் எழுதித் தருமாறு கேட்டார். எழுதிக் கொடுத்தேன். கட்டுரை றோனியோ பண்ணப்பட்டு, அன்று கருத்தரங்கில் சிறப்பாக விநியோகிக்கப்பட்டது.

ஒரு வாரம் கழித்து, எங்களுக்குப் பொறுப்பாகவிருந்த வேறொரு துறைத் தலைவரைச் சந்திக்குமாறு அவரிடமிருந்து அழைப்பு வந்தது. சந்தித்தேன்.

நிர்வாகப் பிரிவிற்கு நான் எழுதிக் கொடுத்திருந்த கடிதம் அவரது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

‘எப்படி நேரடியாக நிர்வாகப் பிரிவிற்கு கடிதம் எழுதிக் கொடுத்தீர் ?’ என்பது அவரின் கேள்வி.

எனக்கு விளங்கவில்லை.

‘ஏதும் பிரச்சினையா ?’ என்று கேட்டேன்.

‘இல்லை, எனக்கூடாகத்தான் நீர் அந்தக் கடிதத்தை அனுப்பியிருக்கவேண்டும்’ என்றார் அவர்.

‘றோனியோவில் அச்சிடுவதற்காக ஏற்படும் மை போன்ற செலவீனங்களுக்கான பணத்தை எனது சம்பளத்தில் கழித்துக் கொள்ளலாம்’ என்று தெளிவாக நான் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறேன்.

அந்தக் கடிதத்தை நான் ஏன் உங்களுக்கூடாக அனுப்பவேண்டும் ?’ என்று கேட்டேன்.

‘நீர் தற்காலிக நியமனத்தில்தான் இருக்கிறீர்!’ என்றார்.

‘நீங்களும் எங்களுக்குத் தற்காலிகமாகத்தான் துறைத் தலைவராக இருக்கிறீர்கள்’ என்றேன்.

அந்த இனிய கல்விச் சூழலில், ஓர் உயர் கல்விக்கூடத்தில் அதிகாரத்தைச் செயற்படுத்தும் தீவிரம் எப்படியெல்லாம் தலையெடுக்கிறது என்பதை இப்போது நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது.

பேராசிரியர் டோனி ராஜரட்னம் பொருளியல், வணிகவியல் துறைத் தலைவராக அமர்ந்தபோது, அத்துறை சீராக வளர ஆரம்பித்திருந்தது. ஆங்கில மொழிக்கல்வி கோலோச்சிய ஒரு காலத்தில், பொருளாதார வரலாற்றைப் போதிக்கும் நல்லாசானாக டோனி ராஜரட்னம் புகழ் பெற்ற காலம் ஒன்றிருந்தது. தமிழ் மூலம் கல்விப் போதனை ஆரம்பமான ஒரு கட்டத்



தில், வெகு சிலரே அதற்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது. அவரது போதனைக் காலம் கிட்டத்தட்ட பேராதனைக் காலத்தோடு முடிந்துவிட்டது என்றே கூறவேண்டும். மிகுந்த எளிமையும் அன்பும் கொண்டவர் அவர். காசை வீசிச் செலவழிக்கும் பண்பு அவருடையது. இலண்டனில் அவரின் மறைவின்போது நான் அஞ்சலி உரையாற்ற நேர்ந்தது துயரமானது.

அவரின் காலத்தில் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகி வந்தார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் எங்களுக்கு Advanced Economic Theory பாடம் எடுத்திருந்தார். சிறந்த பொருளாதார அறிஞர். பொருளாதாரத் துறையில் பெரும்பாலானோர் பொருளாதார வரலாற்றையே ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டிருந்துள்ளனர். பாலகிருஷ்ணன் அவர்கள் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் (School of Economic Studies, University of Leeds), தனது முதுமாணிப் பட்டத்திற்காக Government Finance and Monetary expansion in Ceylon (1955-1965) என்ற ஆய்வேட்டைச் சமர்ப்பித்திருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலக் கல்வி ஆரம்பித்த காலப்பகுதியில், பொருளாதாரப் பிரிவுகள் அனைத்திலும் அயராது விரிவுரையாற்றிய அவரின் கடமையுணர்வு மிக மிக மெச்சத்தக்கது. ‘தேவை ஏற்படும்போது பல்வேறு பொறுப்புகளையும் கையேற்றுத் திறனோடு செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்’ என்று உலக வங்கியின் பொருளாதார நிபுணராகத் திகழ்ந்த கலாநிதி சரத் ராஜபத்தி



ரன குறிப்பிடுகிறார். இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை உருவாக்கத்தில், பாலகிருஷ்ணன் அவர்களின் இலங்கை நாணய நிலைமை பற்றிய ஆய்வேடு மிகவும் உதவியிருக்கிறது. பாலகிருஷ்ணன் நாணயமும் நேர்மையும் மிக்க கனவான். ஒரு பல்கலைக்கழகம் கொண்டிருக்கவேண்டிய பெரும் ஆளுமை அவர்.

பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறையினருடனும் ஓரினிய குடும்பமே போன்று உறவாடி மகிழ்ந்த நாட்கள், ஆறு ஆண்டுகளின் பின் முடிவுக்கு வந்தன.

1982-ம் ஆண்டு நவம்பர் 16-ம் திகதி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ், சாவகச்சேரி போலிஸ் நிலையத்தைத் தாக்கிய விடுதலைப் புலிகளுக்குப் புகலிடம் வழங்கிய குற்றச்சாட்டில் நான் கைது செய்யப்பட்டேன். குருநகர் இராணுவ முகாமிற்கும், பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும் கொண்டு செல்லப்பட்டு, சிறைவைக்கப்பட்டேன்.

குருநகர் இராணுவ முகாமில் நான் தடுத்துவைக்கப்பட்டு மூன்று வாரங்கள் கழிந்த நிலையில் மேஜர் சரத் முனசிங்க அந்தத் துயரச் செய்தியை என்னிடம் சொன்னார். அதிர்ந்து போனேன்.

யாழ். பல்கலைக்கழகத் தலைவர் கைலாசபதி மறைந்து போனார் என்ற செய்தியை என்னால் நம்ப முடியவில்லை.

ஐம்பது வயதைத் தாண்டுவதற்குள் அவர் காலன் வசப்பட்டது உண்மையில் எனக்கு அதிர்ச்சிச் செய்திதான். எனக்கு ஓர் ஆசிரியன் என்பதற்குமப்பால், இனிய நண்பராகவும் இருந்தார். மாண்பு மிக்க மனிதர் அவர்.

நான் யாழ்ப்பாணத்தில் இருந்த நாட்கள் கொந்தளிப்பானவை. அரசின் இனவாதக் கொடுங் கரங்கள் யாழ் மண்ணைக் கந்தக பூமியாக மாற்றிக்கொண்டிருந்த நேரம் அது.

‘நான் இளவயதில் குத்துச் சண்டை வீரனாக இருந்திருக்கிறேன். முகத்தில் குத்துவதுபோல் பாவனை பண்ணிக்

கொண்டு, வயிற்றில் குத்துவதுதான் அந்தச் சண்டையின் யுக்தி. உண்மைதான். நான் ஒரு schemer தான்' என்று வாக்கு மூலம் தந்து, 21 ஜுலை 1977-ல் தனது தேர்தல் வெற்றிக்கு விளக்கம் தந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன, பதவியேற்று ஒரு மாத காலத்தில் கட்டவிழ்த்து விட்ட இனக்கலவரத்தில் நூற் றுக்கணக்கான மலையகத் தமிழர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த லயங்கள் கொளுத்தப்பட்டன.

'இலங்கையில் ஒரு பெருந் துயரச் சம்பவம் நிகழ்ந்து கொண் டிருக்கிறது. அண்மையில் நடந்து முடிந்த தேர்தலுக்குப் பின், அரசியல் முரண்பாடு என்பது இனப் படுகொலையாக மாறிக் கொண்டிருக்கிறது.' என்று The Times (20.9.1977) லண்டன் ஏடு செய்தி வெளியிட்டது.

1978-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி விடுதலைப் புலிகள் தடைச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, பின்னர் அது பயங்கரவாத தடைச் சட்டமாக உரு மாற்றம் பெற்ற போது, தமிழ் இளைஞர்களுக்கு எதிரான சுருக்குக் கயிறா கவே அது தோற்றம் தந்தது.

யாழ். நூல் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் வண. பிதா போல் கெஸ்பர்ஸ் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கெதிராக நிகழ்த்திய கூட்டத்தில் நான் பங்கு கொண்டிருந்தேன். தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தச் சட்டத்திற்கெதிரான எந்தக் கண்டனக் கூட்டத்தையும் நடத்தவில்லை.

1979-ம் ஆண்டு ஜுலை 11-ம் திகதி பிரிகேடியர் 'Bull' வீர துங்க இலங்கையின் முழு இராணுவப் படையின் பொறுப்பதி காரியாக அமர்த்தப்பட்டு, 31.12.1979 திகதி முடிவில் பயங்கர வாதத்தை முற்றாக யாழ்ப்பாணத்திலிருந்து ஒழித்துவிட வேண்டும் என்ற ராஜாங்கக் கட்டளையுடன் வடக்கிற்கு அனுப்பப்பட்டார்.

பதினோராம் திகதி யாழ்ப்பாணம் சென்ற பிரிகேடியர் வீரதுங் கவின் பணிப்பின்பேரில் பதின்மூன்றாம் திகதி (13.7.1979) இரவு இன்பம்(27 வயது), செல்வம்(29 வயது) என்ற இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டு, மறுநாள் காலை பண்ணைப் பாலத்தில் கொடூரச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட நிலை யில் அவர்களின் சடலங்கள் வீசி எறியப்பட்டிருந்தன. என் நெஞ்சில் ரணத்தை ஏற்படுத்திய நிகழ்வு இது. மரணங்கள் கௌவிக் கொண்ட இரவுகள்.

அந்த ஆண்டின் முடிவில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட் டது என்று, தனக்குத் தந்த பணியைச் 'செவ்வனே' செய்து முடித்து விட்டதாக அறிவித்த வீரதுங்கவிற்குப் பாராட்டுத் தெரிவித்து, அவரைக் கனடாவின் இலங்கைத் தூதுவராக அனுப்பிவைத்தார் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன. யாழ்ப் பாணத்தில் எரிமலை கனன்றுகொண்டிருக்கிறது என்பது அந்த மூடர்களுக்குத் தெரியவில்லை.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைப்பதற்கான ஏற்பாடு களை அரசாங்கம் செய்யப்போவதாக அறிவித்தபோது, அர சாங்கத்தின் ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையில் பல்கலைக்கழகத் தென்னாசியவியல் கருத்த ரங்கு நடத்திய நிகழ்வில், 'சிறுபான்மையினத்தின் நம்பிக்கை யைப் பெற்றுக்கொள்ளாமல் அரசு தயாரிக்கும் எந்தப் பிர தேச அபிவிருத்தித் திட்டமும் வெற்றியளிக்கமாட்டாது' என்று கூறியிருந்தேன். மாவட்ட அபிவிருத்திச் சபை பற்றிய கருத்த ரங்கிற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பெருங் கண்டனத் தைத் தெரிவித்தது. அறிவார்ந்த ஒரு பார்வையை அவர்கள் ஏற்றுக்கொள்ள இயலாமலிருந்தது, எனக்கு வியப்பளித்தது.



யாழ்ப்பாண எம்.பி. வெ. யோகேஸ்வரன் ஒரு வெள்ளாந்தி மனிதர். 'தமிழ் மக்களின் உயர்கல்விக்கூடமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை சார்ந்த நிலைப்பாடு என்ன?' என்று நான் அவரி டம் நேசமாகவே கேட்டிருக்கிறேன். ஆபத்தான சந்தர்ப்பங்க ளில் இளைஞர்களுக்கு உதவும் மெல்லிதயம் கொண்டவர். அந்த நல்லெண்ணமே அவரின் உயிரைக் காவு கேட்டிருந் தது என்பது துயரக் கதை.


25.3.1981-ல் நீர்வேலி வங்கிக் கொள்ளை நாட்டைத் திடுக்கிட வைத்தது.

1.6.1981-ல் யாழ்ப்பாணப் பொது நூல் நிலையம் தீக்கிரை யாக்கப்பட்டது.

மறுநாள் காலை, காகிதச் சாம்பரால் மூடப்பட்டிருந்த அந்த நூல் நிலையத்தைப் பார்த்துச் சிந்தை நொந்தவன் நான். நூல்கள் எப்போதும் எனது பொக்கிஷங்கள். எத்தகைய பேர ழிவு இது.

அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்து செய்து முடித்துவிட்டுச் சென்ற கோர நாடகம். இந்த அவலங்களை யார் பொறுப் பார்? 'ஈழநாடு' எரியுண்டது. மக்கள் நெஞ்சங்களில் ஆத்திரம் கனன்று கொண்டிருந்தது.

1981-ம் ஆண்டு சோகத்தோடு விடைபெற்றது. எதிர்காலத் தில் அந்த மண்ணில் நிகழப்போகும் அனர்த்தங்களுக்கு முன் நிமித்தமாக எல்லாமே நடந்து முடிந்திருந்தன.



nithiyananthan.m@thaiveedu.com



# இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஆசியப் பெண் எழுத்தாளர்

# ஹன் காங்

## – அன்னலட்சுமி இராஜதுரை

2024-ஆம் ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசினைப் பெற்ற ஆசியாவின் முதல் பெண் எழுத்தாளரான ஹன் காங் (Han Kang) தென்கொரியா நாட்டைச் சேர்ந்தவர். சர்வதேச ரீதியில் பெருமதிப்புப் பெற்ற இப்பரிசினைப் பெற்ற முதல் தென்கொரியப் பெண் எழுத்தாளர் என்னும் வரலாற்றுப் பெருமைமிக்க ஹன் காங் அவர்களது மகத்தான எழுத்தாளுமை உலகெல்லாம் பரந்து விரிந்த செய்தியாக மிளிர்ந்ததையும் அந்த வகையில் அவருக்கு பாராட்டுகள் குவிந்ததையும் பார்த்தோம். ஹன் காங்-இன் எழுத்து மேதாவிலாசத்தை எமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மீண்டும் ஒருமுறை நினைத்துப் பார்ப்பதும் பொருத்தமானதே.

2007-ம் ஆண்டு வெளியிடப்பட்ட இவரது 'வெஜிரேறியன்' (Vegetarian) என்னும் நாவல் சர்வதேசத்தினதும் கவனத்தைப் பெற்ற ஒன்றாக விளங்கியது. கலை, இலக்கியம், மனித உடலமைப்பு ஆகியவற்றின் சங்கமத்தில் எழுகின்ற சமூக மேல் வரிச்சட்டங்களையும் தனிப்பட்ட சொந்தப் போராட்டங்களையும் நுணுகி ஆராய்வதாக இந்நாவல் அமைகின்றது. வரலாற்றுப் பெருந் துயரங்களையும், மனித வாழ்வின் பலவீனங்களையும் கவித்துவமான மொழி நடையில் இந்நாவலில் பதிவு செய்துள்ளார். உடல், உள ரீதியான வலிகளின் கருப்பொருட்களைத் தகவலுக்காக ஆழமாகத் தேடி ஆராயும் இந்நாவல் கீழைத்தேய மெய் விளக்கத் தத்துவத்தைப் பரீட்சார்த்தரீதியான பேச்சு மொழிக்கூடாக வெளிப்படுத்தி நிற்கிறது. வரலாற்று ரீதியான கடும் தாக்கத்தின் எதிர் நோக்கங்களையும் மனித வாழ்வின் நோய்மையையும் (உடையுந் தன்மை) கச்சிதமான பாத்திரங்களின் வாயிலாகவும் காத்திரமான மொழிநடைக்கூடாகவும் இந்நாவல் விளக்கி நிற்கிறது,

விமர்சன ரீதியாகப், பாராட்டப்பட்ட இந்நாவல், சமூக வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகளையும் ஒருவரின் தனிப்பட்ட தெரிவுகளின் விளைவுகளையும் கொண்ட கருப்பொருட்களை ஆழமாக ஆராயும் ஒன்றாக அமைகின்றது. கொரிய மொழியில் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட இந்நாவல் பின் 2015-ல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 2016-ல் மான் புக்கர் சர்வதேச பரிசினை வென்றதுடன், சர்வதேசத்தின் கவனத்தைப் பெற்ற ஒன்றாக விளங்கியது. நவீன கால சியோல் வாழ்வினை அடி நாதமாகக் கொண்டு அமைக்கப்பட்ட இக்கதை, யொங் ஹை (Yeong - Hye) என்னும் ஒரு சாதாரண பெண்ணின் முடிவு ஒன்றினைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ளது. புலால் உண்பதில்லை. அதாவது, மாமிச உணவுகளை இனி உண்பதில்லை என அப்பெண் முடிவு செய்கிறாள். அதற்கு காரணம் மனித கொடூரங்களைக் கொண்டதான சம்பவங்கள் நிரம்பிய கனவுகளை அவள் கண்டு கடும் அச்சம் கொண்டதினாலாகும். அந்தப் பெண்ணின் இந்த எதிர்பாராத முடிவு அவளது வாழ்வில் தாக்கமான மாற்றங்களைத் தோற்றுவிப்பதுடன் அவளைச் சுற்றி இருப்பவர்களுக்கும் அழிவுக்கான விளைவுகளை ஏற்படுத்துகிறது. மூன்று பாத்திரங்கள் மூலமாக, அதாவது யொங் ஹை என்ற அந்தப் பெண் அவளது கணவன் மற்றும் அவளது சகோதரி ஆகிய மூன்று பேர் மூலமாக கதை நகர்த்தப்படுகிறது. ஒவ்வொருவருடைய உளவியல் நிலையின் தனித்துவமான நோக்கத்தையும் அவரவரது வாழ்க்கையில் ஏற்பட்ட தாக்கங்களையும் விவரிப்பதாக நாவலின் கதை அமைந்துள்ளது என எடுத்துக் கூறப்படுகிறது.


இந்நாவலாசிரியையின் படைப்புகள், மனித அவலங்களின் எல்லைகளையும் சட்ட வரம்புகளை ஏற்றுக் கொண்ட ஒரு சமுதாயத்தில் வாழமுனையும் மனித ஜீவராசிகளின் உரிமைக்கான போராட்டங்களையும் கூறிநிற்கின்றன. கவித்துவ வசன நடையைக் கொண்டிருக்கும் இந்நாவல் தீவிர கற்பனைத் தன்மையுடன் கருத்தைக் கவரும் வகையில் எழுதப்பட்டது. இவரது இந்தத் தனித்துவத்தைச் சுட்டிக் காட்டிய நோபல் கமிட்டி, இவரது கருப் பொருளுக்குப், பாராட்டும் தெரிவித்துள்ளது. மேலும் இந்த வெஜிரேறியன் நாவல் உயிர் வாழ்தலின் இயல்பு உடல் மட்டுமல்ல, தனிப்பட்ட விருப்பத் தெரிவுகள் வாழ்தலுக்கான இருப்பை எவ்வாறு தீர்மானிக்கும் என்பதையும் பேசுகிறது. வாழும்போது மனிதர்கள் மீது பிரயோகிக்கப்படும் சமூக அழுத்தங்களையும் அவற்றினால் எழுகின்ற குழப்பமான கேள்விகளையும் மீள நோக்குகிறது. மனித நிலை குறித்து, உணர்வு பூர்வமாக எழுதப்பட்ட இந்நாவல் சக்தி வாய்ந்த சிந்தனையைத் தூண்டும் வாசிப்புக்கும் உரியதாகின்றது. 'வெஜிரேறியன்' என்ற விருப்பமான ஓர் உணவு உட்கொள்ளும் முறையைத் தெரிவு செய்த கதாசிரியர், அதன் வழிக் கதையை விபரித்துச் செல்கிறார். வாழ்க்கையின் அடையாளத்தையும் மனித மனத்தின் உணர்வுச் சிக்கல்களையும், சுயதேவை நோக்கிய வலி நிறைந்த வாழ்வின் பயணத்தையும் ஆழமாக இந்நாவல் நோக்குகிறது.

53 வயதுடைய தென்கொரிய எழுத்தாளரான ஹன் காங்-இன் ஏனைய நாவல்கள் We do not part, Greek Lessons, The white book, Human Acts, Your Cold Hands என்பனவாகும். இந்த எழுத்தாளருக்கு நோபல் பரிசு கிடைத்ததையடுத்து, இவரது நாவல்கள், பத்து இலட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகி இருப்பதாக பின்வந்த செய்திகள் கூறுகின்றன. இந்த நாவல் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 1970-ம் ஆண்டு குவாங்ஜு என்னுமிடத்தில் பிறந்த ஹன் காங் குடும்பமும் ஒரு கல்விப் பாரம்பரியமுடைய குடும்பமே. இவரது தந்தையும் ஒரு பெயர் பெற்ற எழுத்தாளராக விளங்கினார் எனக் கூறப்படுகிறது. இவரது ஒன்பதாவது வயதில் இவரது குடும்பம் சியோலுக்கு இடம் பெயர்ந்தது. சிறுவயதில் இருந்தே கலைகளிலும், சங்கீதத்திலும் ஈடுபாடு கொண்டிருந்த ஹன் காங், கொரியாவில் உள்ள யொன்சி (Yoncei) பல்கலைக்கழகத்தில் இலக்கியத் துறையில் கல்விகற்றார். இவரது முதலாவது நாவல் Black Deer (கறுப்பு மான்) என்பதாகும். 1998-ம் ஆண்டு வெளிவந்த இந்நாவல் காணாமல் போன ஒரு பெண் பற்றிய மர்மம் தொடர்பானது. கிட்டத்தட்ட அந்த நேரத்தில் தான், மரக்கறி உணவுக்கு மாறிய ஒரு பெண்ணைப் பற்றிய சிறுகதை ஒன்றினை எழுதுவதற்கு தான் கற்பனை செய்ததாகவும், அந்தக் கற்பனையே பின்னர் தொடர்ந்து வளர்ந்து 'வெஜிரேறியன்' நாவலாக உருவெடுத்ததாகவும் ஹன் காங் 2016-ல் வழங்கிய செவ்வி ஒன்றில் குறிப்பிட்டதும் நினைவுகூரத்தக்கது. இவரது படைப்புகள் அனைத்திலும் இவரது கலை, இலக்கிய ஈடுபாட்டின் தாக்கங்கள் விரவி இருப்பதைக் காணமுடியும் எனவும் விமர்சகர்கள் குறிப்பிடுவர். ஹன் காங்-இன் சிறுவயதுக் காலத்தில், இவரது குடும்பம் பொருளாதார ரீதியில் மிகவும் கஷ்டப்பட்டதாகவும், அதன் விளைவாக இடத்துக்கு இடம் மாறிக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. 2016-ல் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு ஹன் காங் வழங்கிய நேர்காணலில், இடம் விட்டு இடம் மாறிமாறித் திரிந்த பின்னணியில் தான் வளர்ந்ததாகவும், இந்நிலை ஒரு சிறு பிள்ளைக்கு மிகக் கூடுதலான கஷ்டத்தை தந்ததாகவும் குறிப்பிடுகிறார். ஆனால், நான் புத்தகங்களால் சூழப்பட்டு இருந்ததினால் நன்றாகவே இருந்தேன்' எனவும் குறிப்பிட்டிருக்கிறார். இலக்கியத்தின் மூலமாக நாம் காணாத, பேசாத மற்றும் வாழ்க்கையில் சொல்லாமல் விட்டு விடப்பட்ட விடயங்கள் ஆகியவற்றை நேராக எதிர்க்க முடியும் எனக் கருத்து தெரிவித்த இந்த நோபல் பரிசாளர், மற்றுமொரு நேர்காணலில் தமது எண்ணத்தை வெளிப்படுத்துகையில், 'மனித சமுதாயத்தின் கொடூரத்தை நாம் எதிர் கொண்டிருக்கும்போது எங்களை நாங்களே கேள்விக்கு உட்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்' என்பதையும் தெரிவித்திருக்கிறார். அத்துடன், மனித குலத்தின் இருண்ட பக்கங்களோடு ஹன் காங் தமது மன கொந்தளிப்பை எடுத்துக்கூறுகையில், குறிப்பாக 1980-ல் ஏற்பட்ட குவான் யூ (Gwang ju) கிளர்ச்சிக்குப் பின்னரான சூழ்நிலை எவ்விதம் தமது எழுத்தையும் அந்த கிளர்ச்சியில் தப்பி பிழைத்தோரையும் பாதித்தது என்பதனையும் தெரிவித்திருக்கிறார், இவ்விடத்தில் இந்த எழுத்தாளரின் நாவல்களின் சில வரிகள், அவரது தீவிர எண்ணப்பாடுகளோடு நினைவுகூரப்பட்டிருக்கிறது என்பதையும் கூறலாம். அந்த வகையில் அவரது Human Acts (ஹியூமன் அக்ற்ஸ்) என்னும் நாவலின் இறுதி வரிகள் ஆழமானவை. அவரின் ஜீவான்மாவை அவ்வரிகள் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

*'நான் தினமும் போராடுகிறேன். நான் உயிர் பிழைத்துள்ள நரக லோகத்துடன் போராடுகிறேன். எனது சொந்த மனித குலத்தின் உண்மையுடன் போராடுகிறேன். உண்மையில் இருந்து தப்பிக்கொள்ள, மரணம் ஒன்றே ஒரே வழி என்ற எண்ணத்துடன் போராடுகிறேன்'*

ஹன் காங் மற்றுமொரு நாவலின் சிந்தனைக்குரிய இறுதி வரிகள் வாழ்வு குறித்தான எண்ணப்பதிவாகும். துன்பம் என்னும் அணு உலையில் எழும் இறுதி வரிகள் மனத்தைக் கிழித்துச் செல்கின்றன. *'நீ இறந்த பின்னர் நான் ஒரு மரணச் சடங்கை நடத்த முடியாது. ஆனால் எனது வாழ்க்கை ஒரு மரண சடங்காகும்'.*

## வெஜிரேறியன்
## தமிழ் மொழிபெயர்ப்பு:




சர்வதேச ரீதியில் பாராட்டு பெற்ற 'வெஜிரேறியன்' நாவல் தமிழில் 'மரக்கறி' என்னும் தலைப்பில் தமிழ் நாட்டில் சமயவேல் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு, நூலாக வெளி வந்திருக்கிறது என்பதையும் குறிப்பிடலாம். இவ்விடத்தில் 'வெஜிரேறியன்' தொடர்பாக ஒரு சிறு சிந்தனை தோன்றுவதும் தவிர்க்க முடியாததாக உள்ளது. 'வெஜிரேறியன்' அதாவது புலால் உண்பதை முற்றாகத் தவிர்த்து, மரக்கறி உணவுகளை மட்டும் உண்பது தொடர்பாக சிந்திக்கின்றபோது பொதுவாக நாம் அறிந்த வகையில் தமிழ் மக்களுக்கு உரிய ஒரு பாரம்பரிய பண்பாடு ஞாபகத்துக்கு வருவது இயல்பானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

உலகப் பொதுமறையான திருக்குறளைத் தந்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் தமது நூலில் 'புலால் மறுத்தல்' என்னும் ஒரு அதிகாரத்தைச் சேர்த்து அனைத்து உயிர்கள் மீதும் அன்பைப் பேணுவதே தர்மம். என்பார் அதுவே அருள் நிறைந்த வாழ்வு' என வலியுறுத்துவதும் தெரிந்ததே.

***கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி***
***எல்லா உயிருந் தொழும்***

என்று முத்தாய்ப்பு வைத்திருப்பது தெரிந்த ஒன்றே. அனைத்து மக்களும் புலாலுண்ணாமையைத் தமது வழக்கமாகக் கொண்டிருக்கவில்லை. எனினும் மரக்கறி உணவை மட்டுமே, காலாதி காலமாக, பரம்பரை பரம்பரையாக உட்கொண்டு வாழ்ந்து வரும் மக்களும் கணிசமாக வாழ்கின்றனர். இது ஒன்றும் நமக்குப் புதியதொன்றல்ல. ஆனால், உலக மக்களின் உணவுப் பழக்கம் அவர் தம், கால, தேச, வர்த்தமானங்களைக் கொண்டதாகவே இருந்து வருவது வெளிப்படை. இதில் எந்தவொரு கேள்விக்கும் இடமில்லை. இதில் கொரியாவும் அடங்கும் என்பதைக் கூற வேண்டியதில்லை. எனவே,

ஆத்மீக சிந்தனைகளை ஆழமாகக் கொண்டு, பிற உயிர்களுக்கு ஊறு விளைவித்தல் மாபாவம் என்ற உண்மையைத் தீர்க்கமாக உணர்ந்தவராக தனது கதாநாயகியின் கதை மூலம் மனித குலத்தின் கொடூர செயல்களைக் கனவுகளில் கண்டதன் தாக்கமாக மரக்கறி உணவு மட்டுமே உண்பது என்ற அசைக்க முடியாத முடிவை, அந்தச் சாதாரணப் பெண் எடுத்ததன் மூலம், தனது குடும்பத்துக்கு மட்டுமல்ல, சமூகத்துக்கே சவால் விட்டது போல் காட்டியதுமல்லாமல், கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பெண்ணினத்தின் எழுச்சியையும், தமது கவித்துவ பாணியில் காட்டியிருப்பது, கொரிய தேசத்துக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே புதுமையானதும், புரட்சியுமான சிந்தனை என்பதனையும் கூறலாம்.

2004 ஜுலையில் '21-ம் நூற்றாண்டின் மிகச் சிறந்த நூல்கள்' என்ற மதிப்பீட்டில் 'வெஜிரேறியன்' நூலை, 49-வது இடத்தில் 'நியூயோர்க்டைம்' வைத்துள்ளது என்பது மேலதிகமான ஒரு தகவலாகும்.

### நோபல் பரிசு – பெற்ற பெண்கள்:

1901-ம் ஆண்டிலிருந்து 2023-ம் ஆண்டுவரை 64 பெண்மணிகளுக்கு 65 நோபல் பரிசுகள் மற்றும் பொருளாதார விஞ்ஞானத்துறைகளில் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், இத்தனித்துவ நோபல் பரிசு பெற்ற பெருந்தகைகளில் 894 ஆண்கள், 64 பெண்கள் மற்றும் 27 ஸ்தாபனங்கள் அடங்கும் என 'விக்கிபீடியா' தெரிவிப்பதையும் கருத்தில் கொள்ளலாம். இதில் 18 பெண்கள் இலக்கியத்துக்கான நோபல் பரிசினைப் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் 19 பெண்கள் சமாதானத்துக்காகவும், 13 பெண்கள் உடற்கூற்றுக்காகவும் (Physiology), 5 பெண்கள் பௌதீகத்திற்காகவும் (Physics) 3 பெண்கள் பொருளாதார விஞ்ஞானத்திற்காகவும், 8 பெண்கள் இரசாயனத்துக்காகவும் (Chemistry) நோபல் பரிசினைப் பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோபல் பரிசினைப் பெற்ற முதலாவது பெண்மணி என்ற வரலாற்றுப் பெருமைக்குரியவர் மேரி கியூரி அம்மையார் என்பது நாமறிந்ததே. 1903-ம் ஆண்டு பௌதீகத்திற்கான நோபல் பரிசினை இவர் பெற்றார். அத்துடன் பல்வேறு நோபல் பரிசுகளையும் வென்ற முதலாவது பெண்மணி என்ற பெயருடன் இவ்வகையில் ஒரே ஒரு பெண்ணாகவும் புகழ் பெற்றிருக்கிறார். மிகச் சமீப காலத்தில் நோபல் பரிசினைப் பெற்ற பெண்மணிகளாக ஹன் காங் (இலக்கியம்), குளோடியா கோல்டின் (பொருளாதாரம்), நர்கிஸ் மொகமதி (சமாதானம்), ஆன் எல் குய்லியர் (பௌதீகம்), கற்றலின் கரிக்கோ (Physiology or Medicine), ஆன் எர்னோக்ஸ் (இலக்கியம்), கரோலின் ஆன் பீட்ரோஸி (இரசாயனம்), மேரியா ரொபியா (சமாதானம்), லூஸி க்ளக் (இலக்கியம்), அன்ட்ரியா எம். கெஸ் (பௌதீகம்), எமானுயலி கார் பென்ரியர் மற்றும் ஏ.டௌட்னா (இரசாயனம்) ஆகியோர் விளங்குகின்றனர் என்பதையும் குறிப்பிடலாம்.



annaluxmi.rajadurai@thaiveedu.com





# பாலியல் வன்புணர்வும் பாலியல் துஷ்பிரயோகங்களும்

– த. சிவபாலு

பாலியல் வன்புணர்வு என்பது உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் இடம்பெறுவதை நாளாந்தம் பத்திரிகைகள் வாயிலாகவும், தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது, ஏன் இந்த காட்டுமிராண்டித்தனம் எனப் பலரும் சிந்திக்கவும் கேள்வி எழுப்பவும் செய்கின்றார்கள். பெற்றவர்கள் தங்கள் குழந்தைகளைப் பாதுகாக்கத் திராணியற்றவர்களாக அரசாங்கத்தையும் பாதுகாவலர்களையும் கையேந்தும் கையறு நிலையில் உள்ளமையை அறிய முடிகின்றது. ஏன் இந்த அவலம்? பாலியலின் தொடக்கம் எது? இன்றுதான் இது உக்கிரம் அடைந்துள்ளதா? மனிதர் பிறந்த காலந்தொட்டே பாலியல் உணர்வுடையவராகவே காணப்படுகின்றனர். மனித சமூகம் மேம்பாடு அடையத் தொடங்கியதைத் தொடர்ந்து, நாகரீக வளர்ச்சியில் முன்னேறிய மனிதர் விலங்குகளில் இருந்து மாறுபட்டு பாலியல் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வாழப் பழகிக்கொண்டனர். சனத்தொகை வளர்ச்சிக்குப் பாலியல் தொடர்பாடல் முக்கியமானது. ஆனால், அவை சமூகக் கட்டுப்பாடுகளுக்குள் நின்று செயற்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாலியல் வன்முறை என்பது பல்வேறு தன்மைகளைக் கொண்டதாக உள்ளது. வன்முறை என்பது ஒரே மாதிரியானதல்ல. பாலியல் வன்கொடுமை பல்வேறு வடிவங்களை எடுக்கும். பாலியல் துஷ்பிரயோகம் பல வகைகளில் நிகழ்கிறது. பாலியல் தாக்குதல், வன்புணர்வு, குழந்தைப் பருவ பாலியல் துஷ்பிரயோகம், ஆயுத மோதலின் போது நிகழும் வன்புணர்வு, பாலியல் துன்புறுத்தல், பின்தொடர்தல், அநாகரிகமான பாலியல் வெளிப்பாடு, இழிவுபடுத்தும் பாலியல் படங்களைக் காட்டல், கடத்தல், பாலியல் சுரண்டல் எனப் பல்வேறு வகைகளில் பாலியல் தொல்லைகள் இடம்பெறுகின்றன. கணவன் மனைவியாக இருந்தாலும் விருப்புக்கு மாறாக பாலியல் தொடர்பை வைப்பதும் வன்முறையாகவே கருதப்படுகின்றது.

பாலியல் வன்முறை என்பது ஒருவரின் பாலியல் நேர்மைக்கு எதிராக அந்த நபரின் அனுமதியின்றி செய்யப்படும் செயலாகும். இது உடல்ரீதியாகவோ உளரீதியாகவோ நிகழலாம். எல்லா வயதினரையும் பாதிக்கும் நடவடிக்கையாகவே பாலியல் வன்முறை காணப்படுகிறது. மேலும் இச்செயலைச் செய்யும் நபர் தெரிந்தவராகவோ அல்லது அந்நியராகவோ இருக்கலாம். இது சட்டத்திற்கு எதிரானது-சிவில் மற்றும் கிரிமினல் குற்றங்களுக்குள் ஒன்றாகக் கருதப்படுவது..

கனடியப் பெண்களில் 3-ல் ஒருவர் பாலியல் வன்முறையை அனுபவிக்கின்றனர், கனடிய ஆண்களில் 8-ல் ஒருவர் பாலியல் வன்முறையை அனுபவிக்கின்றனர், பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகின்றார்கள்.

2017-ம் ஆண்டிற்கும் 2022-ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் 252 பாடசாலைகளில் பணியாற்றும் நபர்கள் மீது பாலியல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இதில் 38 பேர் பாலியல் ரீதியான குற்றமிழைத்ததாக சுட்டிக் காட்டப்படுகின்றது. இதில் 71% பெண்பிள்ளைகளும் 29% வளர்ந்த பெண்களுமாவர். உயர்நிலைப் பாடசாலைகளில் 74 வீதமான விளையாட்டுத்துறைப் பயிற்றுநர்களே இந்த தகாத செயலைச் செய்தவர்களாவார். இவ்வித செயல்களுக்கு ஸ்னப்சொட், இன்ஸ்ரகிறாம், முகநூல் போன்றவை பொதுவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்களை உதாசீனம் செய்வதாலும், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்குவதாலும் மாணவரைச் சீண்டுதலாலும் பாலியல் சார்ந்த சொற்பிரயோகங்களைப் பிரயோகிப்பதாலும் பல ஆசிரியர்கள் பணியிடைநிறுத்தப்பட்டுள்ளனர். இவ்வித முறைப்பாடுகளில் சில, வேண்டுமென்று செய்யப்பட்டுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக கடந்த ஆண்டு ரொறன்ரோவில் உள்ள ஒரு இடைநிலைப் பாடசாலையின் அதிபர் இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர். அவரின் தலைமையை ஏற்றுக்கொள்ளமுடியாத இனவாதியான ஒரு ஆசிரியையால் மாணவியொருர் நெறிப்படுத்தப்பட்டுள்ளார். இதனால் குழந்தை நல அமைப்பின் சட்டத்தின் பிரகாரம் அவர் உடனடியாகப் பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

பாலியல் துன்புறுத்தலை அனுபவிக்கும் மாணவர்கள் தனது பள்ளிப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது போகின்றது. பள்ளிப் பாடங்களிலும் அவர்களால் கவனஞ் செலுத்த முடியாது. அவர்களால் பாடப்புறச் செயற்பாடுகளிலும் பங்குபற்ற முடியாது. இதனால் பாடசாலைக்குச் செல்வதையோ அங்கு பல்வேறு செயல்களில் பங்கேற்பதையோ நிறுத்தலாம். அல்லது அவர்கள் வகுப்புகளைத் தவிர்க்கலாம், சிலசமயங்களில் பள்ளிக்குச் செல்வதை முழுவதுமாக கைவிடலாம். உளவியல் விளைவுகளாக இவர்களுக்கு கவலை, மனச்சோர்வு, தூக்கமின்மை, பசியின்மை, கவனம்

செலுத்த இயலாமை, சுயமரியாதை குறைதல், வழக்கமான செயல்பாடுகளில் ஆர்வம் இழப்பு, சமூக தனிமை மற்றும் சோகம், பயம் அல்லது அவமானம் போன்றன ஏற்படலாம். சிலர் தமக்கு வேண்டியவர்களைச் சமாளிக்க போதைப் பொருள் அல்லது மதுவைப் பாவிக்கலாம். தீவிர நிகழ்வுகளில், மாணவர்கள் தற்கொலை பற்றிக்கூட சிந்திக்கலாம் அல்லது முயற்சி செய்யலாம்.

ஒன்ராறியோ மனித உரிமைகள் சட்டத்தின் கீழ், பாலியல் துன்புறுத்தல் என்பது 'தெரிந்த அல்லது விரும்பத்தகாத ஒரு செயற்பாடு ஆகும். ஒரு எரிச்சலூட்டும் கருத்து அல்லது நடத்தையில் ஈடுபடுவதையும் பாலியல் துஸ்பிரயோகம் என்பர். சில சந்தர்ப்பங்களில், ஒரு சம்பவம் பாலியல் துன்புறுத்தலாக இருக்கும் என எண்ணும் அளவுக்கு தீவிரமானதாக இருக்கலாம். பாலியல் துன்புறுத்தலின் சில எடுத்துக்காட்டுகள்:

- ஒரு நன்மை அல்லது உதவிக்குப் பதிலாக உடலுறவைக் கேட்பது.
- பலமுறை தேதிகளைக் (Dating) கேட்டும், மாட்டேன் எனக் கூறாதவிடத்து அதனைச் சாதகமாக எடுத்துக்கொண்டு கட்டியணைக்கக் கேட்பது.
- தொடுதல் உட்பட தேவையற்ற உடல் தொடர்புகளை உருவாக்குதல்.
- முரட்டுத்தனமான அல்லது அவமதிக்கும் மொழியைப் பயன்படுத்துதல்.
- இழிவான சொற்களைப் பயன்படுத்தி பாலியல் தேவைக்கு அழைப்பது
- ஒரு நபரின் உடல் பண்புகள் அல்லது செயல்கள் பற்றி பாலியல் தொடர்பான கருத்துகளை உருவாக்குதல்.
- ஒரு நபர் பாலியல் தேவைக்கு இணங்கவில்லை என்று நினைப்பதால் ஏதாவது சொல்வது அல்லது செய்வது தம் வயப்படுத்த நடவடிக்கை எடுப்பது.
- ஆபாசப் படங்கள், பாலியல் படங்கள் அல்லது கார்ட்டூன்கள், வெளிப்படையான பாலியல் வரைபடங்கள் அல்லது பிற பாலியல் படங்கள் இடுகையிடுதல் அல்லது பகிர்தல்.
- நகைச்சுவைகளைப் பாலியல் சார்ந்தே உருவாக்குதல்.
- பாலியல் பலம் பற்றி பெருமை பேசுதல்.
- பாலியல் அல்லது பாலினத்தின் அடிப்படையில் கொடுமைப்படுத்துதல்.
- பாலியல் வதந்திகள் அல்லது செய்திகளைப் பரப்புதல்

போன்றன இன்று பாடசாலை மாணவர்களிடையே மலிந்து காணப்படுகின்றன.

## பாலியல் தொடர்பாக அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்களும் சட்டவாக்கங்கள் தரும் வரையறைகளும் வழிமுறைகளும்

- பாலியல் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கும் அதற்குப் பதிலளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய சட்டப் பூர்வமான கடமை கல்வி வழங்குநர்களுக்கு உண்டு. மனித உரிமைகளை மதிக்கும் 'விஷம்' இல்லாத சூழலை மாணவர்களுக்கு உறுதி செய்ய வேண்டும்.
- தெளிவான, விரிவான பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்புக் கொள்கையைக் கொண்டிருப்பதன் மூலம் கல்வியாளர்கள் பலர் மாணவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாலியல் துன்புறுத்தல் நிகழ்வுகளைத் தடுக்கலாம்.
- பாலியல் துன்புறுத்தல் தடுப்புக் கொள்கை மற்றும் புகார்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.
- பாலியல் துன்புறுத்தல் நடத்தைகள் இல்லாமல் இருப்பதை உறுதிசெய்ய கல்வி வழங்குநர்கள் தங்கள் சுற்றுப்புறங்களை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். விஷம் இல்லாத சூழலை பராமரிக்க நடவடிக்கை எடுப்பது, பாலியல் துன்புறுத்தல் வேரூன்றாமல் இருப்பதையும் அது வளர வாய்ப்பில்லை என்பதையும் உறுதிப்படுத்த உதவும். பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான துன்புறுத்தலைத் தடுக்க உதவப் பெற்றோர் நலன்விரும்பிகள் முன்வரலாம்.
- பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான துன்புறுத்தல்கள் பொறுத்துக் கொள்ளப்படாது என்ற தெளிவான அணுகுமுறையை யாவரும் கொண்டிருக்கவேண்டும்.
- ஒரு பயனுள்ள பாலின எதிர்ப்பு மற்றும் பாலின அடிப்படையிலான துன்புறுத்தல் கொள்கையை நடைமுறைப்படுத்துவதுடன், அனைத்து மாணவர்களும் அதைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்
- தொழில்நுட்ப முறையிலான பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான துன்புறுத்தல் உட்பட அனைத்து வகையான பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான துன்புறுத்தல்களின் விளைவுகளை மாணவர் அமைப்பிற்கு தெளிவாகத் தொடர்பு கொண்டு அறிவுறுத்துதல்
- பாலியல் துன்புறுத்தல் மற்றும் பள்ளி இணையக் கொள்கைகளில் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பச் சாதனங்கள் வழி துன்புறுத்தல் தடுப்பு நடவடிக்கைகள் உட்பட பல செயற்பாடுகள் மூலம் பாலியல் வன்புணர்வு, பாலியல் வன்கொடுமை என்பன பற்றிய தெளிவை ஏற்படுத்துதல்.
- பாலின அடிப்படையிலான துன்புறுத்தல், கட்டாய ஓரினச் சேர்க்கை கருத்து மற்றும் நடத்தை உள்ளிட்ட பாலியல் துன்புறுத்தல் பற்றி மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கற்பித்தல்.
- மற்றவர்கள் மீதான பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான துன்புறுத்தலின் தாக்கம் குறித்து மாணவர்கள் அதிக விழிப்புணர்வுடன் இருக்க உதவும் வகையில் பங்கு வகிக்கும் மற்றும் கல்விப் பயிற்சிகளைப் பயன்படுத்துதல்.
- ஆன்லைன் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான துன்புறுத்தலில் இருந்து தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதை மாணவர்களுக்குக் கற்பித்தல்.
- பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான துன்புறுத்தல் மற்றும் அதுதொடர்புடைய கொடுமைப்படுத்துதல் ஆகியவற்றைப் புகாரளிக்கும் மாணவர்களின் இரகசியத்தன்மைக்கு மதிப்பளித்தல். இது மற்ற மாணவர்களும் துன்புறுத்துவதைப் புகாரளிக்க ஊக்குவிக்கும்
- பணியாளர்கள், பாலியல் ரீதியான நடத்தைகளைக் கண்டறிய போதுமான ஆதாரங்கள், பயிற்சி மற்றும் கருவிகள் இருப்பதை உறுதி செய்தல். துன்புறுத்தும் நடத்தைகள், மற்றும் சம்பவங்கள் நிகழும்போது அவற்றைக் கண்டறிந்து புகாரளிக்கவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.

### பாலியல் கல்வியும் பயன்களும்:

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் பாலியல் கல்வியால் ஏற்படும் பயன்களைப் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர்.

- வளர்ந்தவர்கள் திருமணமாகாமலே-முறைசாராமலே பாலியல் அனுபவம் பெறுவதைத் தடைசெய்கின்றது.
- பதின்ம வயதினரை பாதுகாப்பான முறைகளைக் கையாளவும் வழிவகுக்கின்றது.
- உலக சுகாதார அமையத்தின்படி பாலியற் கல்வியை பதின்ம வயதினருக்குக் கட்டாயமாக்க வேண்டும் என்கின்றது.

ஆனால் பாடசாலைகளில் பாலியற் கல்வி கற்பிப்பது பற்றிப் பெற்றோரிடம் இருவிதமான கருத்துக்கள் காணப்படுகின்றன. இந்தியாவில் பெற்றோர்கள் எவ்வளவுதான் பாலியற் கல்வியை தங்கள் பிள்ளைகள் கற்றுக்கொள்வதை விரும்பாவிட்டாலும் பெருந்தொகையான மாணவர்கள் பாலியற் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர். அதனைக் கற்றுக்கொள்வது பயனுடையது என்ற கருத்தையும் கொண்டுள்ளனர்.

பாலியல் கல்வி பதின்ம வயதினருக்கு மிகவும் அவசியமானது என்பது அமெரிக்க அரசின் கொள்கையாகும். அமெரிக்க தேசிய கல்வி நிலையம் பாலியற் கல்வியைப் பாடசாலைகளில் கற்பிக்க வேண்டும் என்பதற்காகப் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் பாலியற் கல்வியைப் பாடசாலை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு இரண்டு காரணிகளை முன்வைக்கின்றது.

- பாலியல் தொடர்பான நோய்களைப் பற்றி அறிந்திருப்பதற்கும், அவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் பாலியற் கல்வி தேவையானது.
- பாலியற் கல்வி மாணவர்களுக்கு விளக்கத்தையும் தெளிவையும் தருகின்றது

என்பதை அமெரிக்க அரசாங்க சபை முன்வைத்துள்ளது.

பாலியல் தொடர்பு வைத்தல் பல பின் விளைவுகளைக் கொண்டுள்ளது. கைத்தொழில் விருத்தியடைந்த நாடுகளில் பதின்ம வயதினர் கற்பமாகுதல் விகிதம் அமெரிக்காவில் மிக உயர்வாக உள்ளமையை புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த நிலை கனடாவிலும் உண்டு. பெயர் குறிப்பிடாது பல மருத்துவர்கள் பதின்ம வயதினர் கருத்தரித்தமை பற்றி பெற்றோருக்கு குறிப்பிட்டு அவர்களுடன் போதியளவு பாலியல் தொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்கின்றனர். பாதுகாப்பான பாலியல் தொடர்பினை மேற்கொள்வது குறித்து பிள்ளைகளுடன் பெற்றோர் கலந்துரையாடும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். தமது கலாச்சாரப் பாரம்பரியங்கள், விழுமியங்கள் பற்றியும் பாலியற் செயற்பாடுகளின் பின் விளைவுகள், பக்க விளைவுகள் எத்தகையன என்பவை பற்றியும் பிள்ளைகளுக்கு பெற்றோர் எடுத்துக்கூறவேண்டும். ஆயினும் பல பெற்றோர் எவ்விதம் பிள்ளைகளுடன் பாலியல் தொடர்பான கலந்துரையாடலைத் தொடங்குவது என்று தெரியாதவர்களாகவே உள்ளனர். பிள்ளைகள் தவறான பாலியற் தொடர்புகளைக் கொண்டபின்னர் அதற்கு என்ன செய்வது என்று தெரியாது பெற்றோர் தவிப்பதனையும் காணமுடிகின்றது. இதற்குப் பெற்றோரின் பாலியல் தொடர்பான அறிவுப் பற்றாக்குறையும் ஒரு காரணம் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

பாலியற் கல்வி பாடசாலைகளில் போதிக்கப்படத் தொடங்கிய பின்னர் பதின்மவயதினரின் பிள்ளைப்பேறு வீதம் குறைவடைந்தமையைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. நான்கில் ஒரு பெண்பிள்ளைகள் தங்கள் 20 வயதினை அடைய முன்னரே திட்டமிடப்படாத தாய்மையை அடைந்துவிடுகின்றார்கள் என்பதனையும், அவர்கள் தங்கள் உயர்கல்வியை முடிக்காதவர்களாகவும், ஏழ்மை நிலைமைக்குச் செல்பவர்களாகவும் உள்ளனர் என்பதனைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பாடசாலை மாணவர்களிடையே அதிகளவில் பாலியல் தொடர்பினால் வரும் நோய்களான எச் ஐவி மற்றும் எயிட்ஸ் போன்றன தொற்றிக் கொள்கின்றன என்பதற்குப் பல ஆதாரங்கள் தரப்படுகின்றன. 2011-ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி 13 தொடக்கம் 24 வயதினரிடையே இந்த நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த காரணங்களை முன்வைத்து பாடசாலைகளில் பாலியற் கல்வி மேற்கொள்ளப்படுவதனால் இத்தகைய நோய்கள் வராது தடுக்கலாம் என்பதோடு, பதின்மவயதினர் தாய்மையடைவதையும் குறைத்துக் கொள்ளலாம் என்பது மருத்துவர்கள், மற்றும் கல்வியியலாளர்களின் கருத்தாகும். சி.என்.என் தொலைக்காட்சியைச் சார்ந்த றொனால் மாட்டின்: ‘தங்கள் பிள்ளைகளுக்கு பாலியற் கல்வியைப் பாடசாலைச் சபைகள் கற்பிப்பது தொடர்பாக உளறிக்கொண்டிருக்கும் பெற்றோர்கள், அதற்கு எதிராக முறைப்பாடு செய்வது மனதிற்கு வேதனை தருவதாக உள்ளது’ எனக் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து மேலும் அவர் கூறுகையில் ‘பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு கணிதம், விஞ்ஞானம், வரலாறு மற்றும் பெருந்தொகையான மற்றைய பாடங்கள் கற்பிக்கப்படுவததை சரி எனக் கூறும் பெற்றோர்கள் உயிரியல் பாடத்தில் சற்று கவனம் மேலும் செலுத்தி அதில் பாலியல்கல்வி கற்பிக்கப்படுவதைக் கண்டு ஆத்திரப்படுவதோ அல்லது குறைசொல்வதோ எப்படிச் சரியாகும்’ எனக் கேட்பது சற்றுச் சிந்திக்கத்தக்கது. (Roland martin, CNN Contributor Lctober 29, 2011).

இன்று பாடசாலைகள் சபையினது செயற்பாட்டினால்...

- கரு உருவாவதைக் குறைத்தல் விகிதமும் பாதுகாப்புச் சாதனைங்களைப் பயன்படுத்தும் விகிதமும் அதிகரித்துள்ளது.
- திட்டமிடப்படாத கருத்தரிப்பு குறைந்துள்ளது.
- STIs and HIV என்னும் பாலியல் தொடர்பான நோய்கள் வராது தடுக்கப்பட்டுள்ளது.
- பாலியல் துர்நடத்தைகளைத் நிறுத்தியுள்ளது.

இவ்வித பயன்கள் காணப்பட்ட போதிலும், பல வளர்முக நாடுகளில் இவை இன்னும் குறைவடையாத நிலையிலேயே உள்ளன. ஏழ்மை நிலையில் உள்ள பல பெண்பிள்ளைகள் இன்று சிறுவர் திருமணத்திற்கும் பாலியல் வன்புணர்வுக்கும் பெற்றோராலேயே ஈடுபடுத்தப்படுவது மனவேதனையைத் தருகின்றது.




sivapalu@thaiveedu.com



# 6 நாள் செயல்வாதம்: எதைப்பற்றியது?

– சிவா மாலதி

நவம்பர் 25-ம் திகதி தொடக்கம் டிசம்பர் 10-ம் திகதி வரையான தொடர்ச்சியான 16 நாட்கள் சர்வதேச அளவில் பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட, குறிப்பாக பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான பிரச்சாரங்களை மேற்கொண்டு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் செயல்வாதத்துக்கான நாட்களாக அமைகின்றன. பெண்களுக்கெதிரான வன் முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினமாக நவம்பர் 25-ம் திகதி காணப்படுகிறது. இந்நாள் முதற்கொண்டு மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10-ம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் செயல்வாதமானது முன்னெடுக்கப்படுகின்றது. பெண்களின் உரிமைகள் மனித உரிமைகளே என்பதைச் சுட்டும்விதமாகவும், பெண்கள்மீதான வன்முறைகள் அடிப்படை மனித உரிமை மீறல்களே என்பதைச் சுட்டும் விதமாகவும் அது அமைந்துள்ளது.



மிரபல் சகோதரிகள்

16 நாள் செயல்வாதத்தின் முக்கியத்துவத்தினை அறிந்துகொள்வதற்கு அதன் தோற்றத்தினை அறிந்துகொள்ள வேண்டும். பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தன்று அரசியல் செயற்பாட்டாளர்களான மிரபல் சகோதரிகளின் இறப்பு நினைவுகூரப்படுகின்றது. சகோதரிகளான பற்றியா, மினேவா, மரியா தெரேசா மிரபல் ஆகிய மூவரும் டொமினிக்கன் குடியரசில் ரொகியோவின் (Trujillo) சர்வாதிகாரத்தின்கீழ் இழைக்கப்பட்ட கொடுமைகளையும், கட்டமைப்பு ரீதியான வன்முறைகளையும் தொடர்ச்சியாக எதிர்த்தனர். இதன்காரணமாக, சகோதரிகளான இம் மூவரும் 1960-ம் ஆண்டு நவம்பர் 25-ம் திகதி ரொகியோவின் ரகசிய பொலிசாரினால் அடித்துக் கொல்லப்பட்டு செங்குத்தான பாறையொன்றின் அடிப்பகுதியில் வீசப்பட்டனர். மிரபல் சகோதரிகள், பெண்ணிலைவாதிகள் வெளிப்படுத்தும் எதிர்ப்பின் குறியீடாக பார்க்கப்பட்டனர். அவர்களை நினைவுகூரும் விதத்தில் அவர்கள் கொலைசெய்யப்பட்ட நவம்பர் 25-ம் திகதியானது லத்தின் அமெரிக்காவில் 1980-ம் ஆண்டு பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. இது 1999-ல் ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. 1991-ம் ஆண்டு யூன் மாதம் உலகளாவிய பெண்கள் தலைமைத்துவத்திற்கான மையமானது (Centre for Women's Global Leadership - CWGL) பெண்கள், வன்முறை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பெண்களுக்கான உலகளாவிய நிறுவகத்தின் (Women's Global Institute on Women, Violence and Human Rights) முதலாம்கட்ட பங்குபற்றுநர்களுடன் இணைந்து பால்நிலையினை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகளுக்கு எதிரான 16 நாள் பிரச்சாரத்திற்கு அழைப்புவிடுத்தது.

இத்தகையதோர் வரலாறானது, சர்வாதிகாரம், அரச ஒடுக்குமுறை போன்ற கட்டமைப்புரீதியான வன்முறைகளுக்கெதிரான பெண்களின் எதிர்ப்பினையும், அத்தகைய பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளையும் வன்முறைகளையும் முக்கியத்துவப்படுத்துகின்றது. ஆயினும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழித்தல் என்னும்போது வீட்டு வன்முறைகளை முன்னுரிமைப்படுத்தப்படும் போக்கு அதிகரித்து வருவதனைக் காணலாம். அதேவேளை, பெண்கள் மீது கட்டவிழ்த்துவிடுகின்ற வீட்டு வன்முறைகளைத் தூண்டுகின்ற கட்டமைப்புரீதியான காரணிகள் போதியளவில் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் முற்றுமுழுதாக கண்டுகொள்ளப்படாமல் விடுவதானது மீண்டும் மீண்டும் ஒரு சங்கிலித்தொடராகத் தொடர்வதனை உறுதிப்படுத்துகின்றன.

அதுமட்டுமல்லாது அனைவரது கவனமும் வீட்டு வன்முறையினை நோக்கி மட்டுமே திசைப்படுத்தப்படுவதனூடாக, பெண்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் பல்வேறுபட்ட வன்முறைகளும் அநீதிகளும் புறந்தள்ளப்படுகின்றன அல்லது திட்டமிடப்பட்ட முறையில் திசைதிருப்பப்படுகின்றன. அவ்வாறிருக்க வீட்டுவன்முறை தொடர்பில் நிலவும் இரட்டை நிலைப்பாடுகளும், சமூக கலாசார கண்ணோட்டங்களும் பல்வேறுபட்ட தரப்பினராலும் வீட்டுவன்முறை எவ்வாறு அணுகப்படுகின்றது என்பதில் செல்வாக்குச்செலுத்துகின்றது.

வீட்டு வன்முறை எனும்போதுகூட உடல்ரீதியான தாக்குதல்களுக்கு / வன்முறைகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் பாலியல்ரீதியான மற்றும் உளரீதியான வன்முறைகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. குடும்பத்தினர், சமூகம் மற்றும் அரசு போன்ற பல்வகைப்பட்ட தரப்பினரும் பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறையினை, குறிப்பாக உடல்ரீதியான மற்றும் பாலியல்ரீதியான வன்முறையினை எதிர்கொள்ளும் அல்லது அணுகும்போக்கிலும் இனம், கலாசாரம், சமூகக்களங்கம், குடும்பகௌரவம் போன்ற பல அடுக்குகளினடிப்படையில் பல நுட்பங்களும் வேறுபாடுகளும் காணப்படுகின்றன. இதன்காரணமாக சட்டரீதியான நிவாரணங்கள் காணப்பட்டாலும் பெண்கள் அவற்றின்மூலம் சிறந்த நன்மையினைப் பெற்றுக்கொள்வதென்பது இன்றுவரை கேள்விக்குரியதாகவே இருக்கின்றது. அத்துடன் பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைகளும் தொடர்ந்தபடியே இருக்கின்றன. பெண்கள் சொல்லிப்புரியவைக்க முடியாதளவிற்கான உளநெருக்கடிகளைக் குடும்பக்கட்டமைப்பிற்குள் எதிர்கொள்கின்றனர். குறிப்பாக பெண்கள் கணவன் அல்லது நெருங்கிய துணையினால் தொடர்ச்சியான உளரீதியான தாக்குதல்களை எதிர்கொள்வதோடு பல சந்தர்ப்பங்களில் அவை பெண்களின் உளநலத்தில் மிகமோசமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. அவர்களை உடல், உளரீதியான பல்வேறுபட்ட நோய்களை நோக்கித் தள்ளுபவையாகவும் இவை இருக்கின்றன. ஆயினும், அதிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புக்களைத் தானாகவே கண்டடைந்து கொள்ளுமளவிற்கு அவர்கள் தனிமைப்படுத்தப்படுவதுடன், அதற்கான பொறுப்பும் அவர்கள்மீது மட்டுமே முழுவதுமாகச் சுமத்தப்பட்டிருப்பதானது பெண்களுக்கெதிரான நேரடி வன்முறைகளுக்கு அப்பால் அவர்கள் மீது சுமத்தப்படும் அடுத்தகட்ட அநீதியாகக் காணப்படுகின்றது. குடும்பத்திலும் சமூகத்திலும் இதற்கான நிவாரணிகள் இல்லையென்பது ஒருபுறமிருக்க, இத்தகையதோர் வன்முறை தொடர்பான சட்டரீதியான அங்கீகாரமும் அதற்கான நிவாரணப்பொறிமுறைகளும் அரசமட்டத்தில் இல்லாதிருப்பதென்பது பேரவலமாகும். ஆக, பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்பதற்கான குரலென்பது உண்மையிலேயே பெண்களின் தேவைகளையும், நலன்களையும் முதன்மைப்படுத்தியவையாக இருக்கவேண்டுமேயன்றி கட்டமைப்புரீதியாகப் பெண்கள்மீது இழைக்கப்படும் வன்முறைகளைத் திசைதிருப்புவதற்கும் பெண்களை முன்னிறுத்தி முற்போக்கான அமைப்புகளாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்கான முனைப்புகளாகவும் இல்லாதிருக்க வேண்டும்.

உலகளாவியரீதியில் யுத்தம், பொருளாதார அநீதிகளின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள், காலநிலை மாற்றம்சார் பேரிடர்கள் போன்றவை வீட்டிற்கு வெளியிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் பரந்தளவிலான கவனத்தைக் கோரிநிற்கின்றன. இத்தகைய உலகளாவிய நெருக்கடிகளின் மத்தியில் இந்த ஆண்டு பால்நிலைசார் வன்முறைகளுக்கெதிரான 16 நாள் செயல்வாதமானது எத்தகைய முக்கியத்துவத்தினைக் கொண்டிருக்கின்றது? இலங்கையைப் பொறுத்தவரை மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையானது தடுத்துவைத்தல், சித்திரவதைசெய்தல், பாதுகாப்புப் படையினரால் தமிழர்கள்மீது நடத்தப்படும் பாலியல் வன்முறைகள் போன்றன தொடர்பான முறைப்பாடுகள் ஜனவரி 2024 அளவிலான அண்மைக்காலங்களில்கூட தமக்குக்கிடைத்திருப்பதாக தெரிவிக்கின்றது. குறிப்பாக தமிழர்கள் செறிந்துவாழும் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகியமாவட்டங்களில் இது பிரதான பிரச்சினையாகக் காணப்படுவதாக அவ்வறிக்கை குறிப்பிடப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்களில் பெண்களின் எண்ணிக்கை தொடர்பான தெளிவான தரவுகள் வழங்கப்படவில்லையாயினும், காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களை மிரட்டுதல் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடர்பில், குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பின்னிரவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினைச் சேர்ந்தோரிடமிருந்து அல்லது பயங்கரவாத புலனாய்வுத் திணைக்களத்தினைச் சேர்ந்த நபர்களிடமிருந்து அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இவ்வறிக்கை சுட்டிநிற்கின்றது. போராட்டங்களில் பங்குபற்றியமை தொடர்பிலும், கொழும்பு அல்லது ஜெனீவாவிற்குச் சென்றமை தொடர்பிலும் அதற்கான நிதி மற்றும் அவர்கள் சந்தித்த நபர்கள் தொடர்பான விடயங்கள் தொடர்பிலும் கேள்வியெழுப்பப்பட்டதென்பதையும் அவ்வறிக்கை பிரஸ்தாபிக்கிறது.

மேலும் அந்த அறிக்கையானது, பாதுகாப்புப் படையினரின் சித்திரவதைகளையும் மனிதத்தன்மையற்ற, கொடூரமான, இழிவுபடுத்தும் விதமான நடத்தைகளையும் கூறிநிற்கிறது. பல்வேறுபட்ட முறைகள் தொடர்பில் இராணுவத்தினரால் நேர்காணல் செய்யப்பட்டோரில் பலர் விசாரணைகளுக்கு உட்படும்போதோ அல்லது தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிறையிலோ பாலியல் வன்கொடுமை உள்ளடங்கலாக பாலியல்ரீதியான சித்திரவதைகள், விதைப்பைகள் நசுக்கப்படுதல், நிர்வாணமாக இருப்பதற்குக் கட்டாயப்படுத்தப்படல், மார்பகங்கள் கடிக்கப்படுதல் போன்ற சித்திரவதைகளை அனுபவித்ததையும் அறிக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது.

பொருளாதார அநீதியின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும், அதன்விளைவாக மேற்கொள்ளப்பட்ட அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றமும் பெண்களை உணவு உட்பட தமது அத்தியாவசியத் தேவைகளை மட்டுப்படுத்திக் கொள்ள நிர்ப்பந்திக்கிறது. அத்துடன் மாதாந்த குருதிப் போக்கிற்கான அணையாடையினைப் பெற்றுக்கொள்வதிலும் பெண்கள் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றனர். இது மாதாந்த குருதிப்போக்குடன் தொடர்புடைய வறுமையினை (Period poverty) அதிகரித்துள்ளது. பெண்களின் பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரத்திலும் மனநலத்திலும் பாரிய தாக்கத்தினை இது ஏற்படுத்தியுள்ளது. பெண்களின் பொதுவெளி ஈடுபாடு மற்றும் வருவாயீட்டும் தொழிலில் பங்குபற்றுதல் போன்றவற்றிலும் பொருளாதார நெருக்கடிகள் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. இதுதவிர உலகளாவியரீதியிலும் இத்தகைய போக்குகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளன. உடனடியான கவனத்தினையும் செயற்பாட்டினையும் கோரிநிற்கும் விசேடதேவைகளும் நிலைமைகளும் ஆங்காங்கே உலகெங்கிலும் காணப்படுகின்றன. இத்தகையதோர் காலத்தில் 16 நாள் செயல்வாதம் எத்தகைய எதிர்பார்ப்பினைக் கொண்டிருக்கின்றது? எத்தகைய செயற்பாட்டினைக் கோரி நிற்கின்றது?



siva.malathy@thaiveedu.com



# குழந்தைக் கவிஞர் அம்பி

- வே. விவேகானந்தன்

இலக்கிய உலகில் அம்பி என்னும் பெயரில், புகழுடன் வலம் வந்தவர் இராமலிங்கம் அம்பிகைபாகர் அவர்கள். இவர் இயற்கை வளம் நிறைந்த நாவற்குழி என்னுமிடத்தில் வாழ்ந்து வந்த, இராமலிங்கம் சிவகாமிப்பிள்ளை இணையருக்கு மகனாக 1929-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ம் திகதி பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை நாவற்குழி கிறிஸ்தவ மிஷன் பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ். பரி. யோவான் கல்லூரியிலும் கற்றார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்த இவர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில், கணித, விஞ்ஞான மற்றும் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்தார். பின்னர் ஓட்டமாவடி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பணியாற்றி, 1969-ம் ஆண்டு கொழும்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் கணித பாடநூல் எழுத்தாளராகப் பதவியேற்றார். அங்கு சிலகாலம் பணியாற்றிய பின்னர், குடிசனக் கல்விக்கான புலமைப் பரிசில் பெற்று அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு, University of Connecticut (Institute of Public service)-இல் குடிசனக் கல்விக்கான பயிற்சியை நிறைவு செய்து இலங்கை திரும்பிய அம்பி, கொழும்பில் குடிசனத்தொகை கல்விப் பாடத்திட்ட அதிகாரியாகப் பதவியேற்றார்.

1981-ம் ஆண்டு பப்புவா நியூகினி நாட்டுக்குச் சென்று அங்கு தொலைக் கல்வி நிறுவனத்தில் கணிதத்துறைத் தலைவராகவும், விஞ்ஞான பாடவிதான பொறுப்பாளராகவும் பணிபுரிந்து, 1992-ம் ஆண்டு ஓய்வு பெற்றார். பின்னர், அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து சிட்னி நகரில் நிரந்தரமாகக் குடியேறினார்.

அம்பி பாடசாலை மாணவனாக இருந்த காலத்திலேயே தமிழ் மொழி, இலக்கியம், கவிதை, நாடகம் போன்றவற்றில் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். இவர் புகழ் பெற்ற இலக்கியவாதியாகவும் பிரகாசிக்கத் தொடங்கினார். 1950-ம் ஆண்டு தினகரன் பத்திரிகையில், 'இலட்சியச்சோடி' என்ற சிறுகதையை எழுதி, இலக்கிய உலகுக்கு அறிமுகமானார்.

அம்பி அவர்களின் ஆற்றலை அறிந்து திறமையை வெளிக்கொணரத் தூண்டுகோலாக அமைந்தவர் பரி. யோவான் கல்லூரித் தமிழ் ஆசிரியர் திரு. சுப்பிரமணியம் அவர்கள், அம்பியிடம் இருந்த கவிதை புனையும் ஆற்றலை மெருகூட்டி பிரகாசிக்கச் செய்த பெருமை இவரைச் சாரும். அத்துடன் நாவற்குழியூர் நடராஜன், த. தியாகராஜன், பண்டிதர் சு. வேலுப்பிள்ளை, க.வ. தியாகராஜன் ஆகியோரது வழிகாட்டல்களும் அம்பி அவர்கள் கவிதைத் துறையில் உச்சம் பெற, பக்கபலமாக அமைந்தன. தமிழ்த்துறையின் மொழி, இலக்கியம், நாடகம், உரைச் சித்திரம் போன்ற பல்வேறு பிரிவுகளில் திறமை பெற்றிருந்த இராமலிங்கம் அம்பிகைபாகர், கவிஞர் அம்பி என்ற பெயரிலேயே இலக்கிய உலகில் பிரகாசித்தார்.

அம்பி அவர்களின் ஆசிரியப் பணியில் மிக நீண்ட காலப் பயனைப் பெற்ற பாடசாலை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியாகும். அங்கு கணித, விஞ்ஞான மற்றும் தமிழ் ஆசிரியராக, 1950-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டு வரை பதினெட்டு ஆண்டுகள் பணியாற்றி, சக ஆசிரியர்களிடமும் மாணவர் மத்தியிலும் நன் மதிப்பைப் பெற்றிருந்தார். யூனியன் கல்லூரிக் கீதமாகிய

***வாழ்த்தி வணங்கி மகிழ்வோம் - உவந்து***
***தலை தாழ்த்திப் பணிந்து தொழுவோம்...***

என இவர் பண்ணோடு இயற்றிய பாடல் இன்று வரை மாணவர்களால் இசைக்கப்பட்டு வருகிறது. அத்துடன், தெல்லிப்பழையை அண்மித்த, கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பாலர் ஞானோதய கலை உடல் வளர்ச்சிக் கழகக் கீதமாகிய

***பட்டொளி வீசிப் பறக்க வைப்போம் - எங்கள்***
***பாலர் ஞானோதய கழகப் பசுங் கொடியேற்றி...***

என்ற பாடலை இயற்றிய பெருமையும் அம்பி அவர்களைச் சாரும்.

அறிஞர் அண்ணா தமிழகத்தின் முதல்வராகப் பதவியேற்றதையடுத்து 1968-ம் ஆண்டு நடந்த இரண்டாவது தமிழாராட்சி மகாநாட்டில் கலந்து கொண்டு அங்கு நடைபெற்ற அகில உலகக் கவிதைப் போட்டியில் பங்குபற்றி, தங்கப் பதக்கத்தினைப் பரிசாகப் பெற்றார். இவர் சிறுவர்களுக்காகப் பல பாடல்களை எழுதியதோடு நில்லாது, அவற்றினை நூல்களாகவும் வெளியிட்டார். அவற்றுள் 'அம்பி பாடல்கள்', 'பாலர்

பைந்தமிழ்', 'கொஞ்சும் தமிழ்' ஆகிய நூல்கள் தனித்துவம் வாய்ந்தனவாகும். இவற்றுள் கொழும்பு தமிழ் சங்க வெளியீ டாக வெளிவந்த 'கொஞ்சும் தமிழ்' என்ற சிறுவர் இலக்கிய நூலுக்கு 1994-ம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. 'அந்தச் சிரிப்பு', 'யாதும் ஊரே: ஒரு யாத் திரை', 'உலகளாவிய தமிழர்' என்பன இவர் எழுதிய ஏனைய சில நூல்களாகும்.

சிறுவர்களுக்குப் பாடல்கள் ஊடாக அறிவியல், உளவியல்,



சுகாதாரம் சார்ந்த கருத்துகளை அறிமுகம் செய்ய முடியும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். உதாரண மாக சோலையிலே பறந்து செல்லும் வண்ணாத்திப் பூச்சி யைப் பார்த்து, ஒரு சிறுமி, ஏன் பறந்து திரிகிறாய்? எனக் கேட் பதாகவும், அதற்கு வண்ணாத்திப்பூச்சி பதில் சொல்வதாக வும் அமைந்திருந்தது அப்பாடல்.

***சோலையிலே பூவிருக்கும்***
***பூவினிலே தேனிருக்கும்***
***தேனிருக்கும் பூக்களை நான்***
***தேடுகிறேன் தங்கையரே...***

அறிவியல் கருத்துகளை எளிமையாக வெளிப்படுத்தியதாக அம்பியின் இப்பாடல் அமைகிறது. இவ்வாறு ஏராளமான குழந்தைப் பாடல்களை எழுதிக் குவித்துள்ளார்.

கவிதை நாடகங்கள் தமிழ் இலக்கியத்தில் அதிகமாக அறி யப்படாத காலத்திலேயே, 'வேதாளம் சொன்ன கதை', 'யாழ் பாடி', ஆகிய கவிதை நாடகங்களை எழுதிய அம்பி, அவற்றை வானொலியிலும் மேடைகளிலும் அரங்கேற்றியுள் ளார். 'வேதாளம் சொன்ன கதை' என்ற கவிதை நாடகம், இலங்கையில் தாசீசியஸ் அவர்களின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்டது. 'யாழ்பாடி' என்ற கவிதை நாடகம், அவுஸ்திரேலியாவில் அண்ணாவியார் இளைய பத்மநாத னால் அரங்கேற்றப்பட்டது.

இலங்கையில் மட்டுமன்றி, பப்புவா நியூகினியில் பணியாற் றிய காலத்தில், அங்கு பிறந்து வளர்ந்து வந்த குழந்தைக ளும், வளர்ந்தவர்களும் விரும்பிப் படிக்கும் வகையில் Ambi's Lingering Memories என்ற பாடல் நூலை எழுதினார். இவர் ஆங்கிலத்தில் எழுதிய மற்றுமொரு குழந்தைப் பாடல் நூல் A String of Pearls என்பதாகும். அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த காலத்தில், அங்கு பிறந்து வளர்ந்த சிறுவர்களுக் கும், இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடு களிலிருந்து குடிபெயர்ந்து வாழ்ந்தவர்களின் சிறுவர்களுக் கும், தமிழ் மொழியைப் போதிப்பதற்காக அமைக்கப்பட்ட, பாடநூலாக்கக் குழுவில் இணைந்து பணியாற்றினார். அவுஸ் திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஸ்தாபக உறுப் பினரான அம்பி, அதன் பணிகளிலும் பெரும் பங்காற்றினார். வருடாந்த எழுத்தாளர் ஒன்றுகூடலில் நடைபெறும் சிறுவர் அரங்கு, மாணவர் அரங்கு போன்றவற்றில் பங்குபற்றும் சிறு வர்களுக்குத் தான் எழுதிய, சிறுவர் இலக்கிய நூல்களைப் பரிசளித்து வந்தார். அம்பி யூனியன் கல்லூரியில் ஆசிரியரா கப் பணியாற்றிய காலத்தில், அவரது மாணவனாக இருந்த மாவை நித்தியானந்தன் 1995-ம் ஆண்டு மெல்போன் நகரில் 'பாரதி பள்ளி'யை ஆரம்பித்தபோது அதனைத் தொடக்கி வைத்து ஊக்கமளித்தார்.

அம்பி, தமிழ் மருத்துவ முன்னோடி சாமுவேல் பிஸ்க் கிறீன் அவர்கள் குறித்து விரிவாக எழுதி, தமிழ் சமூகத்துக்கும் உல குக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். தனது குருநாதர் குரும்பசிட்டி கனக. செந்திநாதன் கேட்டுக்கொண்டதற்கி ணங்க, கிறீனின் வாழ்க்கை பற்றி ஆய்வு செய்து கட்டுரைக ளையும் நூல்களையும் எழுதியதாக, அவுஸ்திரேலிய SBS வானொலிக்கு 2015-ம் ஆண்டு அளித்த பேட்டியில் அம்பி குறிப்பிட்டுள்ளார்.

ஏறக்குறைய நூற்றேழுபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க மிஷன், யாழ்ப்பாணத்தில் மருத்துவ சேவையை ஆரம்பிக்கத் தீர்மானித்து, மானிப்பாயில் ஒரு மருத்துவ நிலையத்தை, 1848-ம் ஆண்டு நிறுவியது. அங்கு பணியாற்ற வந்தவர் தான், நியூயோர்க் மருத்துவக் கல்லூரியில் மருத்து வம் பயின்ற சாமுவேல் பிஸ்க் கிறீன் (Samuel Fisk Green). மருத்துவ நிலையத்துக்கு அருகே ஒரு மருத்துவக் கல்லூ ரியை ஆரம்பித்த அவர், தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலத்தி லும் தமிழிலும் மருத்துவம் கற்பிக்க முயற்சி செய்தார். தமி ழில் மருத்துவ நூல்களை எழுதினார். தமிழ் மொழி மூலம் முப்பத்திமூன்று வைத்தியர்களை உருவாக்கிய பின்னரே கிறீன் அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்றார் என அம்பி கூறியதாக 'அகவை தொண்ணூறு காணும் கவிஞர் அம்பி' என்னும் கட்டுரையில் ஆசி. கந்தராஜா அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.

கிறீனின் அற்புதமான சேவையை உணர்ந்த அம்பி, கிறீன் பற்றி பல கட்டுரைகளை எழுதியதோடு 'கிறீனின் அடிச்சுவடு',

‘மருத்துவத் தமிழ் முன்னோடி’, ‘மானிப்பாய் டாக்டர் கிறீன் வாழ்வும் பணியும்’, ’Scientific Tamil Pioneer’ எனத் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களையும் எழுதி வெளியிட்டார். கிறீனின் மருத்துவ சேவை பற்றி அம்பியின் பரிந்துரையை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டு, 1998-ம் ஆண்டு கிறீனின் தபால் தலையை வெளியிட்டது. அமெரிக்காவில் மசாசு செட்ஸ் மாகாணத்தில் கிறீனின் கல்லறையைத் தேடிச் சென்று மலர் அஞ்சலியைச் செலுத்தியதோடு வூஸ்டர் நூல கத்தில் கிறீன் பற்றி மேலும் தகவல்களைப் பெறுவதற்காக ஆய்வில் ஈடுபட்டார். அமெரிக்கப் பாதிரியாரான கிறீனை உலகுக்கு அறிமுகப்படுத்தியதற்காக இலங்கையின் அமெரிக்கத் தூதரகம் அம்பியை அழைத்துப் பாராட்டி கௌரவித் தது.

அம்பி அவர்களின் பவள விழாவை முன்னிட்டு, லெ. முருகபூபதி அவர்களால் ஆய்வு செய்து எழுதப்பட்ட, ‘அம்பி வாழ்வும் பணியும்’ என்ற நூல் 2004-ம் ஆண்டு கன்பராவில் நடந்த, நான்காவது தமிழ் எழுத்தாளர் விழாவில் வெளியிடப்பட்டது. ஈழகேசரியில் கனக செந்திநாதன் அவர்கள் எழுதி வந்த ‘ஈழத்துப் பேனா மன்னர்கள்’ என்னும் தொடரில், அம்பியின் எழுத்துப் பணிகள் பற்றி விபரித்துள்ளார்.

அம்பியின் இலக்கியப் பணிகளுக்காக இலங்கை அரசின் இந்து கலாச்சார அமைச்சு ‘தமிழ் மணி’ விருதினை வழங்கி கௌரவித்தது. மல்லிகை, ஞானம் சஞ்சிகைகள் முன் அட்டைப் பக்கத்தில் அம்பியின் புகைப்படத்தைப் பிரசுரித்து மதிப்பளித்துள்ளன. அவுஸ்திரேலியாவில் ‘அக்கினிக்குஞ்சு’ இணைய இதழ், கன்பரா தமிழ் இலக்கிய கலைச் சங்கம் என்பன அம்பிக்குவிருது வழங்கிப் பெருமை கொண்டன. கனடாவில் 1998-ம் ஆண்டு தமிழர் தகவல் சஞ்சிகை அம்பியின் நாற்பது வருடங்களுக்கு மேலான தமிழியல் மற்றும் இலக்கியப், பணிகளைப் பாராட்டி சி.வை. தாமோதரம்பிள்ளை நினைவாகத் தங்கப் பதக்கத்தினை வழங்கிச் சிறப்பித்தது.

மிக நீண்ட காலமாகத் தமிழ் இலக்கியப் பணிகளை மேற்கொண்ட அம்பி நூலாசிரியர், பாடவிதான ஆலோசகர், கட்டுரையாளர், வானொலி மற்றும் மேடை நாடக எழுத்தாளர், ஆய்வாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவராக விளங்கினார். இவர் 2024-ம் ஆண்டு, அதாவது இவ்வருடம் ஏப்ரல் மாதம் 27-ம் திகதி தனது 95-வது வயதில் சிட்னியில் இப்பூவுலக வாழ்வை நீத்தார். இலங்கையில் மட்டுமன்றி புலம்பெயர் நாடுகளிலும் தமிழையே மூச்சாகக் கொண்டு வாழ்ந்த அம்பியை, நாம் என்றும் நினைவு கூரவும், எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துக் கூறவும் கடமைப்பாடு உடையோம்.



vivekananthan.v@thaiveedu.com





# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

# நாகபூஷணியின் நெற்றிக்கண்

## - மல்லியப்புசந்தி திலகர் -

இலங்கை வானொலித் துறையில் மிகவும் பிரபலமான பெண் அறிவிப்பாளர் நாகபூஷணி கருப்பையா 'நெற்றிக் கண்' என்ற கவிதைத் தொகுப்பை வெளிக்கொண்டு வந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பட்டதாரி யான இவர் மலையகத்தின் கண்டி மாவட்டத்தினைப் பிறப்பிட மாகக் கொண்டவர். வானொலியில் மிகப் பிரபலமான அறி விப்பாளரான இவர் எழுத்து உலகில் அடி எடுத்து வைப்பதற் கான முதல் படியாக எழுதிய கவிதை தொகுதியே 'நெற்றிக் கண்'. கண்டியைத் தளமாகக் கொண்டு இயங்கும் சிந்தனை வட்டம் பதிப்பகத்தின் ஊடாக 2003-ம் ஆண்டு வெளிவந்தி ருந்த இந்த கவிதை தொகுதியில் பெரும்பாலான கவிதை கள் 1990-களுக்கும் 2000-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பத்திரிகைகளில் எழுதப்பட்டவை என்ப தனை அந்தக் கவிதையின் அடிக்குறிப்புகள் சுட்டி நிற்கின் றன.

சிந்தனை வட்டத்தின் வெளியீடாக வந்த இந்நூல் அவர்களது 150-வது வெளியீடு என அதன் பணிப்பாளர் புண்ணியாமீன் தனது பதிப்புரையில் எழுதியுள்ளார். இத்தொகுதியில் மொத் தமாக 40 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவை நாதபூ- ஷணி கருப்பைய்யாவின் எண்ணக்கருக்களாக பிரவாகித் தவை. சமூக உணர்வுமிக்க இக்கவிதைகள் யதார்த்தமா னவை. நாகபூஷணி கருப்பையாவின் விரிவுரையாளரான பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் பேராசி ரியர் கலாநிதி துரை. மனோகரன் பின்வருமாறு ஒரு குறிப்பி னைப் பதிவு செய்கிறார். 'மலையகத்தில் பெண் அறிவிப்பாள ராக விளங்கும் நாகபூஷணி கருப்பையா யாழ்ப்பாண பல்க லைக்கழகத்திலும் பேராதனை பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றவர். தமிழ்ச் சிறப்பு கலைப்பட்டதாரியான இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது மேற்பார்வையில் என்.எஸ்.எம். ராமையா பற்றி தமது இறுதி ஆண்டில் ஆய்வு செய்தவர். இப்போது வானொலி அறிவிப்பாளராக விளங்கும் நாகபூஷணி ஒரு கவிஞரும் கூட' எனத் தனது கருத்துகளை முன் வைத்திருக்கும் கலாநிதி துரை. மனோகரன் விரைவில் வெளிவரவிருக்கும் நாகபூஷணி கருப்பையாவின் என்.எஸ்.- எம். ராமையா பற்றிய ஆய்வு நூலுக்கான முன்னுரையில் பின் வருமாறு எழுதுகிறார்.

'பிரபல வானொலி தொலைக்காட்சி ஒலிபரப்பாளர், ஒளிபரப் பாளரான நாகபூஷணி, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவியாகக் கற்றவர். இன்று ஒலிபரப்பு, ஒளிபரப்பு துறையில் புகழ்பூத்த ஒருவராக விளக்குகிறார். ஒரு நல்ல கவிஞரான இவர் சிறந்த மேடை அறிப்பாளராகவும் துலங்குகி றார்.' கலாநிதி துரை. மனோகரனின் இந்த இரண்டு காலகட்ட குறிப்புகளுக்குமான இடையிலான இடைவெளி சுமார் 20 வரு டங்கள். இந்த 20 வருடங்களுக்குள் நாகபூஷணி எனும் கலை ஞருக்குள் ஏற்பட்டிருக்கக் கூடிய மாற்றங்கள் பல இருந்த போதிலும் கூட, இவரது ஆரம்பகால கவிதைகள் அடங்கிய இந்த நூலினை மலையகப் பெண் கவிஞர் என்கின்ற வரிசைக் குள் வைத்துப் பார்ப்பது அவசியம் எனக் கருதப்படுகிறது. தனது கவிதைகள் குறித்து அறிமுகம் செய்யும் நாகபூஷணி தனதுரையில் இவ்வாறு எழுதுகிறார்.

**அரிச்சுவடித் தோட்ட காலம் முதல்**
**அறிவிப்பாளரான இற்றை வரை**
**ஆற்றிய சாதனை ஏதுமில்லை. ஆயினும்**
**ஆங்காங்கே சலசலக்கும் எதிர்ப்பொலிகள்**
**ஆக்கிடலாம் என்னையோர்**
**அக்கினிக் குஞ்சாய் ...**

இவ்வாறு தன்னை அறிமுகம் செய்து கொள்ளும் நாகபூ- ஷணி கருப்பையாவின் 'வளமுள்ள மலைநாடு' எனும் கவிதை இவ்வாறு அமைகிறது.

**நெளிந்தோடும் அருவிகளும்**
**நீர் தொடராய்க் குன்றுகளும்**
**வழிநெடுக மரங்களுடன்**
**வீசு தென்றல் தவழ்ந்து வர**
**களி கொண்டு ஆடவைக்கும்**
**கவர்ச்சி மிகவும் மலைநாடு**

**வரட்சி எங்கள் நிலத்தில் இல்லை**
**வாடி நிற்கும் பயிர்கள் இல்லை**
**திரட்சி கொண்ட கனிகள் தரும்**
**நெடி துயர்ந்த தருக்களிலே**
**புரட்சி கீதம் புட்கள் பாட**
**சோர்க்கமான மலைநாடு**

**முகில் தவழும் மலைகளிடை**
**முகம் மறைப்பால் வெண்மதியாள்**
**துகிலெனப் பச்சைப்பயிர்**

*தரையெல்லாம் விரித்திருக்கும்*
*அகிலம் உயர உழைப்போர்*
*தனைக் கொண்ட மலைநாடு*

இந்தக் கவிதை 1990-ம் ஆண்டு ஜுலை மாதம் எட்டாம் தேதி சிந்தாமணி இதழில் வெளி வந்திருக்கிறது என்பது சிறப்பு. அந்த காலகட்டத்தில் 'சிந்தாமணி' என்னும் வாரப் பத்திரிகை இலக்கியத்துக்கு வழங்கியிருந்த முக்கியத்துவம் என்பது என்றென்றும் சிறப்புக்குரியது. மணிக் கவிதை என்கின்ற பேரிலே பத்திரிகை கட்டுரைகளுக்கு இடையே கிடைக்கும் சின்ன சின்ன இடைவெளிகளில் கவிதைகளை வெளியிட்டு பல கவிஞர்களை உருவாக்கிய பெருமை பத்திரிகை ஜாம்பவான் எஸ். டி. சிவநாயகம் அவர்களுக்குரியது என்று சொல்லலாம். பின்னாளில் அவை கவிதைகளாக அடையாளம் காண முடியாத போதும் ஆரம்ப காலத்தில் பலருக்கும் கவிஞர் அந்தஸ்தை சிந்தாமணி பெற்றுக் கொடுத்தது என்பதை நினைவில் கொள்வது நல்லது. 'கரைகளைக் காணவில்லை' என்கின்ற கவிதை இவ்வாறு அமைகிறது.

*இவர்கள் ...*
*தமது வாழ்வெனும்*
*ஏழ்மை விளையாட்டு அரங்கில்*
*ஓடி திரிந்து*
*ஒட்டிக்கொண்ட*
*வறுமை அழுக்கை*
*கழுவப்போய்*
*தீபுண்களுடன்*
*தெருவுக்கு விரட்டப்பட்டவர்கள்*

*வாழ்க்கையேட்டில்*
*வறுமையை மட்டுமே*
*வரவாக்கியவர்கள்*

என வெளிநாட்டுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக வேலைக்குச் செல்லும் பெண்களைப் பற்றிய உருக்கமான வரிகளாக இவை அமைகின்றன. இது தினகரனில் வெளிவந்த கவிதை. நாகபூஷணி கருப்பையாவின் கவிதை நூலிலே ஆங் காங்கே அழகிய காதல் கவிதைகள் மேம்பட்டு நிற்பது இன் னும் ஒரு சிறப்பு அம்சமாகும்.

*ஆடையுலர்த்த வெய்யில் தேடும் பெண்ணாய்*
*ஆசை உணர்த்த உன் வழி தேடும் எந்தன்*
*விழி பேசும் மொழி உனக்கு*
*இன்னுமா புரியவில்லை?*

*தேன் கூட்டை கலைத்தவுடன்*
*துரத்துகின்ற தேனியாய் - என்*
*உள்ளம் கலைத்த உன்னை*
*துரத்தி வரும் என்னுடைய*
*விழி பேசும் மொழி உனக்கு*
*இன்னுமா புரியவில்லை?*

இவ்வாறு ...காதல் மொழியைக் கண்களால் பேசிய அவரது அந்த காலத்தின் கற்பனைகளை அழகிய காதல் கவிதைகளாக வடித்தவராக நாகபூஷணி கருப்பையாவைப் பார்க்க முடியும். இன்றைய நாட்களில் தவிர்க்க முடியாத ஒரு உபகரணமாக மாறிப் போய் இருக்கும் தொலைபேசி குறித்து நாகபூஷணி கருப்பையா இவ்வாறு எழுதுகிறார்.



*சிங்காரச் சிணுங்களிலே*
*சேதியின் வரவு கூறி*
*நிமிடக் கணக்கெடுப்பில்*
*நிதிதனை வசூலிக்கும்*

*கைக்கு அடக்கம் தான்*
*கட்டாய தேவைதான்*
*அவசர உலகிலே*
*அதுவின்றி சிரமம் தான்*

*ஆனாலும் சில நேரம்*
*அது தரும் சங்கடம்*
*மும்முர வேலைதனில்*
*முகம் சுளிக்க வைத்துவிடும் ...*

*இன்பமும் துன்பமும்*
*இவ்வுலகில் இயற்கை*
*கையடக்க தொலைபேசி*
*கதையும் அதுவே தான் !*

எனக் கைத்தொலைபேசி வெளிவந்த ஆரம்ப காலத்திலேயே அதனை விமர்சனபூர்வமாகக் கவிதை ஆக்கியுள்ளார் நாகபூஷணி கருப்பையா. மழைக்கால மகிழ்ச்சி எனும் இயற்கை நேசிப்பு கவிதை ஒன்று இவ்வாறு அமைகிறது.

*குளிர் காற்று குடை பறிக்க*
*தயிர் மேனி நடுநடுங்க*
*பளீரென்று வரும் மின்னல்*
*பார்வைதனைத் தாக்க*
*பொழிகின்ற மலையருவி*
*பொன்மேனி நனைக்கும்*
*நீர் உதைத்துப் பந்தாடும்கால்கள்*
*நீந்தும் நடு வகிட்டில் தளிகள்*
*நார்போல சொரிகின்ற மழையில்*
*கோர்த்திடவே பூ ஒன்றுமில்லை*
*சேர்த்துக் கை பிடிக்கச் சிதறும்*
*சோட்டுக்கள் முத்தாக ஜொலிக்கும்*

இவ்வாறு மக்கள், மலை, மழை, மானுடம், கலை, காதல் அங்கலாய்ப்பு , ஆதங்கம் என அனைத்துப் பக்கங்களிலும் தனது கவிதைகளைப் படைத்திருக்கும் நாகபூஷணி கருப்பையா இலங்கை வானொலி தொலைக்காட்சி வரலாற்றில் தவிர்க்க முடியாத ஓர் ஆளுமையாக தன்னை இற்றைநாள் வரை நிருபித்துக் கொண்டுள்ளார் மிக விரைவில் வெளி வரவிருக்கும் அவரது 'மலையகச் சிறுகதைச் சிற்பி என் எஸ் எம் ராமையா' ஆய்வு கட்டுரை நூல் வெற்றி பெறுவதற்கு எமது வாழ்த்துக்களை தெரிவிப்போம்.

(தொடரும் ...)



thilagar@thaiveedu.com

# ‘கொலுஷா’ - பிறமொழிச் சிறுகதைகள்

– நவஜோதி ஜோகரட்னம்

நினைவுகளை அனுபவங்களினூடாக அவற்றின் வழியாக வளர்த்துச் செல்வதுதான் ‘கதை’ என எனக்குத் தோன்றுகின்றது. சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுத்து வாசிப்பதை என் குறிக்கோளாக்கி, கிடைக்கும் நேரங்களிலெல்லாம் வாசித்து மகிழ்வேன். அந்த வகையில் ‘கொலுஷா’ என்ற பிறமொழிச் சிறுகதைகளைப் படித்தபோது மட்டற்ற மகிழ்வுற்றேன். 143 பக்கங்களை உள்ளடக்கி கலைஒளி முத்தையாப்பிள்ளை நினைவுக்குழு வெளியீடாக ஹற்றனில் இருந்து 2023-ம் ஆண்டு வெளிவந்தது. மலையகத்தின் மூத்த எழுத்தாளர் ‘சாகித்திய ரத்னா’ தெளிவத்தை ஜோசப் அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளமை மேலும் எனக்கு மிகுந்த மகிழ்வைத் தந்தது.

‘உலகக் கதைகளின் ஒரு வெட்டுமுகத்தை இத்தொகுப்பில் காண்கிறோம்’ என்ற விமர்சகர் மு. நித்தியானந்தனின் குறிப்பு என்னை மேலும் வாசிக்கத் தூண்டியது. ‘கோடிச்சேலை’, ‘பிள்ளையார்சுழி’ போன்ற சிறுகதைத் தொகுதிகளை எழுதி வெளியிட்ட மலரன்பன், சிங்களத்திலிருந்து தமிழுக்கு மூன்று நூல்களை மொழிபெயர்த்து வெளியிட்ட சிறப்புக்குரியவர். இத்தகைய இலக்கியப்பணி சிங்கள இலக்கிய உலகிலும் மலரன்பனை நன்கு அறியச் செய்திருக்கிறது. உலகச் சிறுகதைகளுக்கு உயிர் கொடுத்து மொழிபெயர்ப்பதில் பாராட்டைப் பெற்றவர் சாலிய குணவர்த்தன என அறிந்திருக்கிறேன். ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிக்க சாலிய குணவர்தன ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்த பத்து உலகச் சிறுகதைகளையும் சிங்கள மொழியில் எழுதப்பட்ட நான்கு கதைகளையும் மலரன்பன், இலக்கியச் சுவையோடு தமிழ்ப் படைப்புலகுக்கு கொண்டு வந்திருக்கின்றார்.


இந்நூலுக்கு விமர்சகர் மு. நித்தியானந்தன் பல சுவையான தகவல்களைக் கொண்ட நீண்ட முன்னுரையை வழங்கியிருப்பது மேரலும் வலுச்சேர்த்திருக்கிறது. அத்துடன், இந்நூலுக்கு வெளியீட்டுரை வழங்கிய எச்.எச். விக்கிரமசிங்க மாத்தளை இலக்கியவாதிகள் குறித்தும், மாத்தளைக் கல்வி முன்னேற்றம் குறித்தும் எழுதியுள்ளார். அத்தோடு வீரகேசரி பத்திரிகை நிறுவனம், இந்து கலாச்சார அமைச்சுகளுடன் இணைந்து ‘கலைஒளி முத்தையா பிள்ளை ஞாபகார்த்த குழுவினர்’ நடத்தும் இலக்கிய நிகழ்வுகள் குறித்தும் பல தகவல்களைப் பொதித்துள்ளார். அந்த வகையில் மாத்தளையில் பிறந்த மலரன்பனின் 80-வது பிறந்த நாள் பரிசாக அவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ‘கொலுஷா’ என்ற பிறமொழிச் சிறுகதைத் தொகுப்பை அவர்கள் வெளியிடுவது பாராட்டுக்குரியதாகும்.

பதினான்கு பிறமொழிச் சிறுகதைகளை அடக்கியுள்ள இச்சிறுகதைத் தொகுப்பில் உலக இலக்கியத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய மிகச் சிறந்த படைப்பாளிகளின் சிறுகதைகள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த மொழிபெயர்ப்புகளை மலரன்பன் தெரிந்தெடுத்து மேற்கொண்டமை உண்மையில் பிரமிப்பில் ஆழ்த்துகின்றது. மார்க்சிம் கோர்க்கியின் ‘கொலுஷா’ என்ற கதை என்னை உலுக்கிக் கொண்டது. ஒரு தாயின் உணர்வுகளை ஒரு தாயைவிட யாரால் உடலில் போட்டுச் சூடாக்க முடியும்? ஒரு தாயாகி என்னுடலில் சோகக்கதிர்களைப் பரப்பிச் சுட்டெரித்தேன். கதை வளர்த்த முறையும் மலரன்பனின் மொழிபெயர்ப்பும் உயிர் கொடுத்து என்னுடலைச் சிலிர்க்க வைத்தது. மாக்ஸிம் கோர்க்கியின் ‘தாய்’ என்ற நூலை இளம் பருவத்தில் எங்கள் வீட்டுப் புத்தக அடுக்கில் இருந்து எடுத்து வாசித்திருக்கிறேன். ஆனால் இப்படி ஊன்றிப் படித்தேனா என்பது எனக்கு இன்று ஞாபகம் இல்லை. ஒவ்வொரு தடவையும் வாசிக்கும்போது வாசிப்புகள் வேறு வேறு அர்த்தத்தைக் கொடுப்பதையும் நான் உணர்ந்துள்ளேன்.

துருக்கிய இலக்கியத்தின் புகழ்மிக்க எழுத்தாளரான ‘சிவ்தெத் குத்ரெத்’தின் ‘மரணவீட்டுக்குச் சாப்பாடு’ என்ற சிறுகதை கொடிய வறுமையில் மனதை உருக்கும் கதை. நாளாந்த வாழ்க்கை அனுபவத்திலிருந்து நெஞ்சை இறுக்கும் கதை. ‘அம்மா அண்ணா செத்துப்போயிடுவானா?’ தாயைக் கேட்கிறான். ‘ஏன் மகனே அப்படிக் கேக்கிறாய்?’ என்று அவனின் தாய் அவனைக் கேட்கிறாள். சிறிது நேரம் அமைதியாக விருந்துவிட்டு தாயின் காதருகே வாயை வைத்து தனது அண்ணனுக்குக் கேட்காதபடி அவன் தாயிடம் கூறுகிறான் ‘அண்ண செத்துப்போனால் அந்த வெள்ளைப் பங்களாவிலிருந்து சாப்பாடு கொண்டு வருவாங்களே!’ என்று. ‘ஆ... என்ன

வேதனை தரும் வறுமையான வாழ்வு அன்று இருந்திருக்கிறது' என மனம் ஏங்கியது. என்ன கொடுமை. இன்றைய காலத்தில் இப்படி இல்லைத்தானே...?

லியோ டோல்ஸ்டோயின் 'உண்மை வெளிவரும் நாளில்' என்ற மலரன்பனின் தலைப்போடு வந்த கதை, செய்யாத ஒரு குற்றத்திற்காக அக்ஸியோநொவ் அனுபவித்த தண்டனை,




அநீதி, விதி, மன்னிப்பு, மரணம் என விசாலித்துச் செல்லுகின்றது. மிக அருமையாகக் கதையைக் கோர்த்து நகர்த்திச் செல்கிறார் ஆசிரியர். சிறுகதை மன்னன் என்று போற்றப்படும் அன்ரன் செக்கோவின் 'இரண்டு நண்பர்கள்' என்ற கதை உளவியல் ரீதியான உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கிறது. ஸ்பரிசம் தரக்கூடிய உண்மைகளை எழுத்துத் தருகின்றதா? என்ற கேள்வி இக்கதையினூடாக என்னுள் எழுந்தது. இக்கதையில் இடம்பெறும் நுட்பமான சித்தரிப்புகள் மனதை ஆழத்தொடுகின்றது.


உலகப் புகழ்பெற்ற திரைப்படமேதை சத்யஜித்ரேயின் 'வெருளி' என்ற சிறுகதையைப் படித்தபோது ஒரு திரைப்படத்தைப் பார்த்த உணர்வை அக்கதை தந்தது எனலாம். திரைப்பட இயக்குநர், இசை அமைப்பாளர், கதை-வசனகர்த்தா, சிறுகதை, நாவலாசிரியர் என்று பல்துறைத் திறன் கொண்ட சத்தியஜித்ரேயின் கதையைப் படிக்கும்போது இதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. 'புதியதொரு சிறுதைக்கான கருவைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்த வேளையில் அப்படியே கார் சீட்டில் அவர் நித்திரையாகியிருந்தார். கண் விழித்ததும் கண்களைத் துடைத்துவிட்டு தூரத்தில் தெரியும் வெருளியை பார்க்கிறார். வெருளி முன்னர் நட்டு வைத்த அதே இடத்தில் எதுவித மாற்றமுமின்றி முன்னர் இருந்ததுபோலவே இருக்கின்றது' என்று வாசகரை அதிர்ச்சிக்குள்ளாக்கி கதையை நிறைவு செய்வது அலாதியானது.

உருது, ஹிந்தி இலக்கியத்தின் முன்னோடியாகப் புகழ்பெற்ற பிரேம்சந்தின் 'கோடிச்சேலை' என்ற கதை சோம்பேறித்தனமான தகப்பன் - மகன் கதை. மகனின் மனைவி தலைப்பிரசவத்துக்காகத் துடிதுடித்து வலி பொறுக்கமாட்டாமல் கதறிக்கொண்டே இருந்தாள். பிரசவ வேதனையோ கொடுமையானது. பரிதாபமான அந்த இளம் பெண்ணின் அழுகுரல் ஒலித்துக்கொண்டே இருந்தது. காலையில் குடிசைக்குள் போன மாதவுக்கு அதிர்ச்சி. அவன் மனைவி இறந்து கிடந்தாள். சில்லிட்டுப்போன உடலில் கண்கள் திறந்தபடியே வாயில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. உடல் பூராவும் செம்மண்தூசி. பிள்ளை வயிற்றிலேயே இறந்துவிட்டது. துயரச் சம்பவம். வேறு வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டதை மலரன்பன் மிகச் சிறப்பாக தமிழில் தந்திருப்பதை மனதாரப் பாராட்டியே ஆக வேண்டும்.

சிங்கள நாடக அரங்கிலும் தொலைக்காட்சியிலும் அரங்கத் தயாரிப்புகளிலும் சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யமாகப் பேசப்பட்டவர் கபிலகுமார காலிங்க. இவரது 'இரண்டு நடிப்புகள்' என்ற சிறுகதையை மலரன்பன் இலாவகமான கதையோட்டத்தோடு மொழிபெயர்த்துள்ளார். ஒரு புதுவிதமான உத்தியோடு இச்சிறுகதை எழுதப்பட்டுள்ளது. மயானத்தில் உண்மையாக ஒரு இளம் பெண் புதைக்கப்படுகின்றாள். அதுபோல் நடிக்கும் நடிகைக்கு பிணம் மாதிரி அலங்காரம் பண்ணி நடிக்க வைப்பதை கதை உணர்வுபுபூர்வமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

'பிணப்பெட்டி மெது மெதுவாக குழிக்குள் இறக்கப்படுகிறது. பின்னால் நிற்கும் உறவினர்களின் அழுகுரல் கேட்கிறது. நடிகைக்கும் ஓ வென்று அழவேண்டும் போல் இருக்கிறது.' 'யாரோ ஒருவரின் மெலிதாக விம்மியழும் குரல் காற்றில் கலந்து மயானத்தின் உடைந்துபோன கேட்டுக்கு வெளியே செல்கிறது' என்று மலரன்பன் சோக உணர்வை வெளிப்படுத்தி முடிக்கும் விதம் முற்றிலும் யதார்த்தமானதே!

இவ்வண்ணம் இதிலுள்ள பதினான்கு சிறுகதைகளையும் எளிமையான எழுத்து நடையில் நகர்த்திச் செல்வது மிகவும் சிறப்பானவை எனக் கூறுவேன். 'ஞானம்' சஞ்சிகையிலும் இவரது இத்தகைய சிறந்த படைப்புகளைப் பார்த்திருக்கிறேன். மலரன்பன் அவர்கள் நிறைந்த ஆரோக்கியமான தேகசுகத்துடன் இன்னும் இதுபோன்ற அருமையான சிறந்த படைப்புக்களைத் தமிழ் இலக்கிய உலகிற்கு வழங்கவேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.



navajothy@thaiveedu.com




# என் புழுதி ரசம்

## வாசுதேவன் கவிதைகள்

– ஜிஃப்ரி ஹாசன்

ஈழக்கவிஞர்கள் வரிசையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கவிஞர் வாசுதேவன், கிழக்கிலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். கவித்துவ ஆற்றலுடனும் கவிதைக்கான அசல் இயல்புகளோடும் கவிதை எழுதி வருபவர். ஒரு கணத்தில் துலங்கும் வாழ்க்கைத் தத்துவத்தை எப்போதும் அவரது கவிதை வரிகளுக்குள் நமக்கு தரிசிக்க முடியும். சிறிய படிமங்கள், குறியீடுகள் மூலம் நமது வாழ்க்கை அனுபவங்களை அவரது கவிதைகள் வேறொரு கோணத்தில் அர்த்தப்படுத்துகின்றன.

***‘ஓட்டப்பந்தயம் முடியுமிடத்தில்***
***மேலால் பதிந்திருக்கிறது***
***கடைசியாக வந்தவனின் கால்தடம்’***

இந்தத் தொகுப்பிலுள்ள எல்லாக் கவிதைகளையும் படித்து முடித்த பின் என் மனதில் ஆழமாகப் பதிந்தது இந்தக் கவிதைதான். அண்மையில் நான் வாசித்த தொகுப்புகளில் இது சற்று வித்தியாசமான கவிதை ஒழுங்கமைப்பைக் கொண்டது. சிறிய கவிதைகள், அதைவிட சற்றுப் பெரிய கவிதைகள், தலைப்பிடப்பட்ட கவிதைகள், தலைப்பில்லாத கவிதைகள் என ஒரு வித்தியாசமான கவிதை ஒழுங்கமைப்பைக் கொண்ட கவிதைத் தொகுப்பு இது. இதற்கு முன்னும் தலைப்பிடப்படாமல் சில கவிதைத் தொகுப்புகள் இங்கிருந்து வந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக திருமலை ஷகியின் நிறங்கள் உதிர்க்கும் இரவு என்ற தொகுப்பினைக் கூறலாம்.

உண்மையில் கவிதை ஒரு கவிஞனின் உணர்வு வெளிப்பாடுதான். அது எல்லா நேரங்களிலும் ஒரே அளவில் வெளிப்பட வேண்டும் என எந்த விதிகளும் இல்லை. அது தருணத்துக்கேற்றாற் போல் வெவ்வேறு நிலைகளில் அளவுகளில் வெளிப்படுவதே இயல்பானது. எப்போதும் ஒரே அளவில் அமையும் கவிதைகள் எல்லாப் பருவங்களிலும் ஒரே அளவுடைய சட்டையை அணிவதைப் போன்றதுதான். எனவே திட்டமிட்டு செய்யப்படாத கவிதைகள் போன்று எனக்கு இவை தென்படுகின்றன. அல்லது இது வாசுதேவனின் ஒரு புதிய பரிசோதனை முயற்சியாகக்கூட இருக்கலாம்.

சற்றுப்பெரிய கவிதைகள் மிக எளிமையாகவும், சிலவேளைகளில் ஆழமாகவும், மானுடவாழ்வையும் அதன் அனுபவங்களையும் முன்வைக்கின்றன. எடுத்துக் காட்டாக: ‘என் முற்றத்து வண்ணத்துப்பூச்சி’, மற்றும் ‘கூழாங்கல்’ எனத் தொடங்கும் கவிதைகளைச் சொல்ல முடியும். போரும் வாழ்வும் பற்றிய கவிதைகளும் இந்தத் தொகுப்பில் உள்ளன. போரின் போதான கனன்றுழந்த வாழ்வின் துயரங்களையும் போருக்குப் பின்னரான வாழ்வையும் சில கவிதைகளில் முன்வைக்கிறார் வாசுதேவன். ‘நியாயமென்ன?’ என்கிற கவிதை போர்க்காலத்தில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் இன்று இல்லாதொழிந்துவிட்டாலும் அப்போதிருந்த ஒரு நிறை இப்போது இல்லை என்கிறார். அது என்ன என்றால் சமூக ஒழுக்கம் என்று ஊகித்துக்கொள்ள முடிகிறது.

ஹைகூ வடிவிலான சிறிய கவிதைகள் இந்தத் தொகுப்பின் கனதியைக் கூட்டுகின்றன. பெரிய கவிதைகளை விட சிறிய கவிதைகள் கொண்டிருக்கும் அர்த்த வெளிப்பாடுகளும், பன்முகப் பார்வைகளும் ஆழமானவையாக இருக்கின்றன. இத்தகைய கவிதைகளில் நிறைந்திருக்கும் உருவகங்கள் குறியீடுகள் மூலம் கவிதை பூடகமாகிறது. ஆனாலும் சற்றே நிதானித்தால் அதன் அர்த்த வெளிப்பாடு ஒரு முக்கிய தத்துவத்தை நமக்குச் சொல்வதாக இருக்கிறது.

***‘தென்னையின் தலைகுழப்பி விளையாடும்***
***அதே காற்று பனை மரத்திடம்***
***பணிந்துதான் போகிறது’***
***‘அணைத்துவிட வந்து மூடும் மேகமும்***
***சேர்ந்து ஒளிர்கிறது முழுநிலவில்’***
***‘மேயும்மாட்டின் நிழலில்***
***மெய் மறக்கின்றன***
***அப்பாவிப் புற்கள்’***

***‘இருளுக்குப் பழக்கப்படும் வரை***
***இருளுக்குள் இருப்பவரைக் காணமுடியாது’***

இந்தக் கவிதைகள் தனக்குள் கொண்டிருக்கும் அர்த்தம் மிக ஆழமானது. இந்தக் குறியீடு நமக்குத் தெளிவாகிவிட்டால் அது ஒரு பெருந்திறப்பாக விரிகிறது. ஒரு பெருந்தத்துவத்தை மிக எளிமையாக நமக்குச் சொல்லி இருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இதற்கு பல்வேறு புரிதல்கள் சாத்

தியமானவையாக இருக்கின்றன. இறுதி வரிகளில் இருளை நாம் அறியாமையாகப் பார்க்கலாம். சாதாரண மனிதர்களின் பார்வையில் எந்த அர்த்தமும் அற்ற அல்லது விநோதமற்ற ஒரு நிகழ்வு ஒரு கவிஞனின் பார்வையில் இலகுவில் கடந்து விட முடியாத அற்புதமாக மாறுவதையே வாசுதேவனின் இந்த வரிகள் நிருபிக்கின்றன.

ஒரு சொற்களின் தொகுப்பிலுள்ள சொற்கள் எப்போது கவிதையாகின்றன என்ற கேள்வி இன்று தமிழ்ச் சூழலில் பெருக்கெடுத்திருக்கும் தமிழ்க் கவிதை வெளியை உற்றுநோக்கும் போது தவிர்க்க முடியாமல் எழுகிறது. இதுவரை காலமும் கவிதை குறித்து சொல்லப்பட்ட வரையறைகளும், நாம் கொண்டிருந்த புரிதல்களும், முக்கியத்துவம் இழந்து போகின்ற ஒரு காலகட்டமாகவும் இது இருக்கிறது என்பதையும் நினைவுபடுத்திக்கொள்கிறேன். ஆனாலும் இந்த உடைப்பு எல்லா எழுத்துகளையும் இலக்கியப் படைப்பு என்ற அந்தஸ்தை நோக்கி உயர்த்துவதில்லை என்று உறுதியாக நம்புகிறேன். கவிதையின் வடிவங்கள், உள்ளீடுகள், எடுத்துரைப்பு முறைகள் என்பன காலத்துக்கு காலம் மாறலாம். ஆனால் கவிதைக்கென ஒரு அடிப்படையான சாரம் இருக்கிறது. அது கவிதையின் ஆன்மா போன்றது. சொற்களின் தொகுப்பை கவிதையாக ஆக்கும் மந்திரம் அதுதான்.

ஒரு கவிதையில் நாம் காணும் சொற்களின் ஒருங்கிணைவை அல்லது ஒழுங்கின்மையை 'ஏதோவொன்று' கவிதையாக்குகிறது. சொற்கள் நேர்த்தியாக அடுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்காக, அவை எல்லாம் ஒருங்கிணைந்து ஒரு மாபெரும் கருத்தை தருகின்றன என்பதற்காக அது கவிதையாகிவிடுமா? அந்த சொற்களின் ஒருங்கிணைவை அல்லது ஒழுங்கின்மையை கவிதையாக்கும் அந்த 'ஏதோவொன்று' இல்லாத எந்த சொற்குவியலும் கவிதையாவதில்லை.

இன்று கவிதை குறித்த வரையறைகள், கோட்பாட்டு வியாக்கியானங்கள் அர்த்தமற்றதாக அல்லது கல்விப்புலத்துக்குள் மட்டுமே உள்ளொடுங்கியதாக இருக்கலாம். ஆனால் சொற்களின் தொகுப்பொன்றை வாசிக்கும்போது இது கவிதைதான் என்ற உணர்வை நமக்குள் பொங்கவைக்கும் அந்த 'ஏதோவொன்று' சொற்களால் ஆக்கப்பட்ட படைப்புக்குள் இருந்தாக வேண்டும் இல்லையா?


ஒரு படைப்பு ஏதேனுமொரு அர்த்தத்தை பிரதிபலித்தாக வேண்டும் என்ற நிலையிலிருந்து காலம் நம்மை நகர்த்தியிருக்கிறது. அது ஓர் அர்த்தத்தையோ அல்லது அர்த்தங்களையோ அல்லது அர்த்தமின்மையையோ வெளிப்படுத்தலாம். ஒரு கவிதை உள்ளீடு சார்ந்து எதனையும் கொண்டிருக்கலாம். அது எந்த வடிவத்திலும் வெளிப்படலாம். எந்த அளவையும் கொண்டிருக்கலாம். அப்படியானால் அந்த சொற்கூட்டத்தைக் கவிதையாக்கும் அந்த 'ஏதோவொன்று' எதுவாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை கவிஞர் கையாளும் மொழி அழகியலும், அவர் கிளர்த்தும் உணர்வெழுச்சியும்தான் அந்த 'ஏதோவொன்று' என்று என நான் நம்புகிறேன். ஒரு பூமரத்தை இரசிப்பதைப் போல, ஒரு வண்ணத்துப்பூச்சியை இரசிப்பது போல, ஒரு மலையருவியை இரசிப்பது போல, ஒரு கலைப்படைப்பு இரசிக்கப்படுவது போல ஒரு கவிதையும் தான் இரசிக்கப்படுவதற்கான அடிப்படையை முதலில் கொண்டிருக்க வேண்டும். அதற்கப்புறந்தான் கவிதை குறித்த ஏனைய வியாக்கியானங்கள், கருத்துரைகள், விவாதங்கள் நமக்குத் தேவையாகின்றன.

தேர்ந்த வாசகரை ஒரு கவிதை, இரசனை சார்ந்து ஏமாற்றிவிடுமாக இருந்தால் அந்த இடத்துக்கு அப்பால் அந்தக் கவிதையால் நகரமுடியாது. அது சம்பிரதாயத்துக்காக ஓதிவிட்டு முடித்துக்கொள்ளும் உச்சாடனம் போல் ஆகிவிடும். கவிதை அதன் வெளிப்படையான அர்த்தத்துக்காக மட்டுமே முக்கியத்துவம் பெற்றுவிடுவதில்லை. எந்த அர்த்தத்தையும் அது கொண்டிருக்காவிட்டாலும் கூட ஒரு மகத்தான கவிதையாக அது நின்று நிலைக்கலாம்.

வாசுதேவனின் பல கவிதைகள் இந்த வரையறைக்குள் வரக்கூடியவை. இன்றைய மனித வாழ்வின் சூழலையும், குழப்பத்தையும் வெளிப்படையாகவும் மறைமுகமான கருத்திலும் பேசுபவை.

***அருவி நீர்***
***தானாய் பாயும்***
***நதி நீர்***
***தானாய் ஓடும்***
***கிணற்று நீர்***
***தானாய் ஊறும்***
***நாமாய் ஏதும்***
***செய்தாலன்றி தொட்டி நீர்***
***உயிருள்ள தண்ணீரை***
***விட்டு விலகி வந்து***
***செத்துப்போன தண்ணீருடன்***
***வாழ்க்கை நடத்துகிறோம்***

இந்தக் கவிதையில் வாசுதேவன் முன்வைக்கும் சமகால மனித வாழ்வின் எந்திரத்தனமும், போலியும் மிகுந்த கவனிப்புக்குரியவை. சமகால வாழ்வின் பல்வேறு துயர்களையும் அவர் இது போன்று பல கவிதைகளில் வெளிப்படுத்துகிறார். வாசுதேவனின் இந்தத் தொகுப்பு ஈழ இலக்கிய வெளியில் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதுகிறேன்.



jiffry.hassan@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***




# மனிதன் மாறிவிட்டான்

- நெல்லை ஜெயசிங்

அரசியல்... அ... ஆ..., என்ற நூலின் ஆசிரியரும், சமூக செயற்பாட்டாளரும், இடதுசாரி சிந்தனையாளருமான எழுத்தாளர் தோழர் அ. ஆறுமுகம் அவர்கள், எழுதி அன்பாலயம் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ள ‘மனிதன் மாறிவிட்டான், என்ற நூல், அண்மையில் வெளியாகி பலராலும் பேசப்பட்டு வருகிறது. பன்முகத்தன்மை கொண்ட இந்திய தேசத்தில், மத முரண்பாட்டை உருவாக்கி, சமூகங்கள் இடையே பிளவை ஏற்படுத்தி, அதன் ஊடாக ‘இந்துத்துவா’ எனும் கோட்பாட்டை நிலை நிறுத்த முயற்சிக்கும் பாசிச ஆர்.எஸ்.எஸ். அமைப்பின், சமூகம் ஏற்றுக் கொள்ள முடியாத செயற்பாட்டை, மிகத் துல்லியமாக விளக்கும் நூலாக இது அமைந்துள்ளது.

இன்று இந்திய தேசத்தில், கடந்த பத்து ஆண்டுகளாக ஆளும் கட்சியான, பாரதிய ஜனதா கட்சியின் அதிகாரம் படைத்த தாய் அமைப்பாக, ஆர்.எஸ்.எஸ். இருப்பதால் அதன் நெறிபிறழ்ந்த செயல்களை, மக்கள் அறிந்துகொள்ள உதவும் என்ற வகையில் இருப்பதால், இந் நூல் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. கவியரசு கண்ணதாசன் அவர்களின், ‘வந்த நாள் முதல் இந்த நாள் வரை’ என்ற பொருள் பொதிந்த அற்புதமான வரிகளுடன் ஆரம்பமாகும் இந் நூல், 20 தலைப்புகளுடன், 110 பக்கங்களில், மிக இலகுவான தமிழ் நடையில், வாசிப்போர் புரிந்து கொள்ளும் வகையில், நூலாசிரியர் வடிவமைத்து இருப்பதைக் காணலாம். முன்னாள் பேராசிரியர் பொன்னுராஜ் அவர்கள் தன் முன்னுரையில் குறிப்பிடுவதைப் போன்று, ஆர்.எஸ்.எஸ். கும்பல் கட்டவிழ்த்து விடும் மிக மலிவான பொய்களை உடைத்தெறிய, இது போன்ற நூல்கள் மிகவும் அவசியம் என்பது இந்நூலை வாசிக்கும் போது தெளிவாகத் தெரிகிறது.

சாதி, மதம் போன்ற மேட்டுக்குடி நிலப் பிரபுத்துவ சிந்தனைகளை, முதலாளித்துவ அமைப்புகள் எவ்வாறெல்லாம் இந்தியாவெங்கும் பரப்பி, பயன்படுத்தி வருகிறது என்பதை நூலாசிரியர் மிகச் சிறப்பாக இந்நூலில் எடுத்துரைத்துள்ளார். சமூகம் வளர்ந்து வரும் வேகத்தைவிட மத வாதத்தின் வேகம், பன்மடங்காக வேகமெடுத்து வருவதுடன் தனிமனித வாழ்விலும் மதவாதம் ஊடுருவி அவர்களை நிலை தடுமாறச் செய்துகொண்டிருப்பதையும் கண்கூடாகக் காணமுடிகிறது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இந்துத்துவா சித்தாந்தத்தின் கோர முகத்தைத் தோலுரித்துக் காட்டும், ‘மனிதன் மாறிவிட்டான்’ என்ற இந்நூல், ‘மத வாதம்’ மனித குலத்தைக் குழிதோண்டிப் புதைக்க வந்த விஷ வித்து போன்றது என சித்தரிப்பதைக் காணமுடிகிறது.

சாதாரண அப்பாவி மக்கள், மதத்தின் பெயரால் நாட்டில் நடக்கும் பொய்ப் பித்தலாட்டங்களுக்கு தங்களை அறியாமலேயே இரையாகிக் கொண்டிருப்பதை மிகுந்த சமூக அக்கறையுடன் கூறும் எழுத்தாளர் தோழர் ஆறுமுகம், ஆர்.எஸ்.-எஸ். அமைப்பு தோன்றிய ஆரம்ப கட்டத்தையும், அதன் பின் அது அனைத்து தளங்களிலும் கால் பதித்து, எவ்வாறு தன்னை பலப்படுத்திக் கொண்டது என்பதனையும் வரலாற்று ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். வரலாற்று நிகழ்வுகளை ஆதாரமாகக் கூறும் நூலாசிரியர், சாதிய அடுக்கு முறையும், மதவாதமும் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே தோன்றி வளர்ந்து வந்ததுடன், விடுதலைப் போராட்டத்துடன் மதவாதமும் வளர்ந்து வந்தது என்ற வரலாற்றுத் தகவல்களையும் சுட்டிக் காட்டுகிறார். 1922-ல் இந்துராஷ்டிரம் என்ற பெயரில் விதைக்கப்பட்ட விதை இன்று விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. இதுவும், இதன் துணை அமைப்புகளும் நாடெங்கும் நடத்தி வரும் விரும்பத்தகாத செயல்கள் ஏராளம் என்பதை மக்கள் புரிந்து கொள்ள முன்வர வேண்டும்.


கிட்லர், முசோலினி போன்ற இனவெறி ஆட்சியாளர்களின் பாசிச கொள்கைகளை உள்வாங்கி செயற்படும் ஆர்.எஸ்.-எஸ். அமைப்பின், ஓர் அங்கமாக உள்ள பாஜக, அரசியல் அதிகாரத்தின் ஊடாக நாட்டில் அமல் நடத்த முயற்சிக்கும் சமூக விரோத செயல்களையும் நூலாசிரியர் ஆதாரங்களுடன் இந்நூலில் பதிவிட்டுள்ளமையைக் காணலாம். 1951-ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட ஜனசங்கம், 1980-ல் பா.ஜ.க.-வாக மாற்றம் பெற்று, 2014 முதல் கடந்த 10 வருடங்களாக,

மோடி தலைமையிலான ஆட்சி நாட்டில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இந்துத்துவ கொள்கைத் திட்டங்களை நிறை வேற்றி வருகின்ற போக்கைக் காணமுடிகிறது. நாட்டில் விலைவாசி உயர்வு, வேலை இல்லாத் திண்டாட்டம், மருத் துவ வசதி இன்மை எனப் பல்வேறு மக்கள் பிரச்சினைகள் இருப்பதைக் கண்டுகொள்ளாத பாஜக அரசு, மக்களிடையே மத வெறியை ஊட்டி சமூகங்கள் இடையே அமைதியற்ற சூழலை உருவாக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருவதை அறிந்துகொள்ள முடிகிறது.

இன்றைய பாஜக ஆட்சியின் மதவெறி செயற்பாடுகளை வன் மையாக கண்டிக்கும் நூலாசிரியர், கல்வி முதற்கொண்டு அனைத்து கலை கலாசார பண்பாட்டு அம்சங்களில், காவிச் சாயத்தை பூசி, பன்முகத்தன்மை மிக்க நாட்டை சீரழிவுப் பா தைக்கு இட்டுச் செல்வதாகக் குறிப்பிடுகிறார். இந்துக்க ளுக்கு ஆபத்து வந்துவிட்டது போன்ற தோற்றத்தை கற்ப னையாக வடிவமைத்து, அவர்களை மீட்டெடுக்க வந்த இரட்ச கராக தங்களை காட்டிக்கொள்ள முயன்று வரும் பாஜக, முஸ்லிம் சமூகத்தின் மீது வெறுப்பை கக்கி வருவதைக் காணலாம். இதனை வளர்த்துச் செல்லும் வகையில், இந்திய வரலாற்றை, இஸ்லாமிய மக்களுக்கு எதிராக திருப்பி விடும் வேலைகளை, அவர்கள் ஆட்சி நிர்வாகத்தின் ஊடாக செய்து வருவதை இந்நூல் அம்பலப்படுத்தி உள்ளது. தேசிய கல் விக் கொள்கை என்ற பெயரில், வரலாற்றை திருத்தி, மாநில பாடநூல் முதற் கொண்டு அனைத்து கல்வி கட்டமைப்பை யும் தங்களின், வர்ணாசிரம, இந்துத்துவ கொள்கை கோட்பா டுகளுக்கு ஏற்ப, மாற்றும் முயற்சியில் அரசு செயற்பட்டு வரு கின்ற ஆபத்தான போக்கையும் எழுத்தாளர் குறிப்பிடத் தவற வில்லை. இதனை நிரூபிக்க ஏராளமான தரவுகள் நூலில் இடம்பெற்றுள்ளன. நேதாஜி, முத்துராமலிங்கத் தேவர் போன்ற தேசிய தலைவர்களை, இந்துத்துவ தலைவர்களாக நிலைநி றுத்த இவர்கள் முயன்று வருவதையும் அண்மைக் காலங்க ளில் காணக் கூடியதாக இருக்கிறது.

மிக நீண்ட காலமாக இஸ்லாமிய மக்களின் வழிபாட்டுத் தல மாக இருந்த பாபர் மசூதி, எப்படி இராமர் ஜென்ம பூமியாக மாற்றப்பட்டது, என்ற வரலாற்றை எழுத்தாளர் தோழர் ஆறுமு கம், சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் மிக வும் தெளிவாக 'மனிதன் மாறிவிட்டான்' நூலில் குறிப்பிட்டுள் ளமை பாராட்டத்தக்கதாகும். இராமர் கோயில் உருவாவதன் பின்னணியில் பொதிந்திருந்த சூழ்ச்சிகள், ஆர்.எஸ்.எஸ், பாஜக போன்ற மதவாத சக்திகளின் திரைமறைவுச் சதிகள், அதன் பின்னால் இருந்த அரசியல் என அனைத்தும் இந்நூ லில் ஒளிவு மறைவு இன்றி இடம்பெற்றுள்ளமை வரவேற்கத் தக்க விடயமாகும். பாபர் மசூதி இடிப்பு நடைபெறுவதற்கு முன்னதாக இந்துத்துவாவாதிகளை அணி திரட்டும் வகை யில் அரங்கேறிய அத்வானி அவர்களின் ரத யாத்திரை, அப் போது பிரதமராக இருந்த நரசிம்மராவின் கையாலாகாத தன்மை, மீறப்பட்ட நீதிமன்ற வாக்குறுதி என அனைத்து விட யங்களும், தகவல்களும் நூலில் மிகத் தெளிவாக நூலாசிரி யர் இடம்பெறச் செய்துள்ளார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கொள்கைத் திட்டங்களில் ஒன்றாக பாபர் மசூதி, 1992 டிசம்-பர் ஆறாம் திகதி இடிக்கப்பட்டது. அதனை இந்துத்துவவாதி கள் வரலாற்றுப் பெருமையாக கூற, மத நல்லிணக்கம் சார்ந்த மக்கள், அந்நாளை இந்திய அரசியல் வரலாற்றில் கறுப்பு தினமாக குறிப்பிடுகின்றனர்.

ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாஜகவினர், இராமர் பிறந்த இடம் அயோத்தி என மக்களை நம்ப வைத்து, அங்கே கோயில் கட்



டுவது இந்து மக்களின் வாழ்நாள் பிரார்த்தனை, வேண்டுதல் என பிரச்சாரம் செய்தனர். திட்டமிட்டப்படி பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயிலும் கட்டப்பட்டது. கடந்த மக்களவைத் தேர்தலில் பாஜகவின் தேர்தல் பிரச்சாரத்தில் 'இராமர் கோயில் 'முக்கிய இடத்தைப் பிடித்தது. ஆனால் தேர்தல் முடிவில், இராமர் கோயில் கட்டப்பட்ட பைசாபாத் தொகுதியில் பாஜக படுதோல்வி அடைந்தது.

மக்கள் தொகையில் 15% வீதமாக இருக்கும் முஸ்லிம் சிறு பான்மையினரை அழித்தொழிப்பது அவர்களின் பிரதான இலக்காக இருப்பதைக் காண முடிகிறது. இந்துத்துவா என்ற

எண்ணத்தை மக்கள் மத்தியில் பரப்பி அதனை நிறைவேற்ற முயற்சி செய்கின்றனர். மதத்தை முன்நிறுத்தி செய்கின்ற இச் செயல், இனப் பெருமை பேசி யூதர்களை அழித்தொழித்த கிட்லரின் செயலுக்கு ஒப்பானது. சிறுபான்மை மக்களுக்கு எதிராக, குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கு எதிராக பெரும் பான்மை இந்து மக்களை மதத்தின் பெயரால் திசை திருப்பும் செயலில் ஆர்.எஸ்.எஸ். பாஜக தீவிரமாக ஈடுபட்டு வருவதை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தி உள்ளார்.

வரலாற்றில் பல்வேறு கட்டங்களில், பல்வேறு பகுதிகளில் ஆட்சி புரிந்த இந்து, இஸ்லாமிய மதம் சார்ந்த அரசர்கள் இடையே, நிலப்பரப்பை கைப்பற்றுவது தொடர்பாக நடந்த போர்களை திசைமாற்றி, திரித்து அதனை மதப் போராக வர லாற்றை எழுத முற்படும் அமைப்பு, ஆர்.எஸ்.எஸ். என ஆதா ரபூர்வமாக கூறும் நூலாசிரியர், இந்து, இஸ்லாமிய மக்கள் நல்லிணக்கத்துடன் வாழவே விரும்புகின்றனர் என்கிறார். பாபருக்கும் ஐயப்பனுக்கும் உள்ள நெருக்கத்தை மக்கள் புரிந்து கொண்டு உள்ளனர். சிறிரங்கம் ரெங்கநாதர் கோயி லில் ‘துலுக்க நாச்சியார் சந்நிதி’ இந்து இஸ்லாமிய மக்களின் மத நல்லிணக்கத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு. முன்னோர் கள் மத நல்லிணக்கத்துடனேயே வாழ்ந்து வந்தனர் என்பதை மறைத்து, மத மோதல்களை உருவாக்குவதே அவர்களின் நிகழ்ச்சி நிரல் என்பதை நூல் தெளிவுபடக் கூறுகிறது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கொள்கை கோட்பாடுகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் மோடி தலைமையிலான பாஜக அரசாங்கமானது, தனது ஆட்சி அதிகாரத்தின் ஊடாக, தனக்கு இருக்கும் பெரும்பான்மையை பயன்படுத்தி, முஸ் லிம் மக்கள் அதிகமாக வாழும் காஷ்மீர் மாநிலத்தை மக்கள் விருப்பத்திற்கு மாறாக துண்டாடி, யூனியன் பிரதேசமாக மாற் றியது. தற்போது பெரும்பான்மை இல்லாத நிலையிலும், அனைவருக்கும் பொதுவான சட்டம் என்ற பெயரில் இந்தியா வின் பன்முகத்தன்மையை சிதைத்து பொதுச் சிவில் சட்டம் என்ற பெயரில் ஒரு சமூகத்தின் மீது வன்மையைக் கக்க முயற்சிக்கும் கொடுமையை நூலாசிரியர் இந்நூலில் பதிவிட் டுள்ளார். இந்து மதத்துக்குள்ளேயே வெவ்வேறு விதமான சடங்காச்சாரங்களும் சம்பிரதாயங்களும் இருக்கும் போது, அனைத்து சமூகத்தவர்களையும் ஒரே சட்டத்தின் கீழ் கொண் டுவரும் முயற்சி, தவறான ஒன்று என்பதை நூலின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம். நாட்டில் இருந்துவரும் பல்வேறு கலாசாரங்களையும், தனித்தன்மையையும் சிதைத்து விடக்கூ டாது என்பது நூலாசிரியரின் எதிர்பார்ப்பாகும். இவ்வாறு நூலாசிரியர் யதார்த்த நிலையையும், உண்மைத் தன்மையை யும் பதிவிட்டு, ஆர்.எஸ்.எஸ், பாஜகவின் மக்கள் விரோத நட வடிக்கைகளை அம்பலப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ள தைக் காணலாம்.

இந்திய தேசத்திற்குள் மட்டுமல்லாமல் கடல் கடந்து பல நாடுகளிலும் வாழ்ந்து வரும் இந்துக்கள் இடையே மதத்தின் பெயரால் நச்சு விதைகளை விதைத்து வருவதையும் காண லாம். இலங்கை, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில், இந்து மத மக்களை ஈர்க்கும் வகையில், ஆர்.- எஸ்.எஸ். அமைப்பு வெவ்வேறு பெயர்களில் செயற்பட்டு, இந் துத்துவா என்ற செயல் திட்டம் ஊடாக சமூகங்கள் இடையே பிணக்கை உருவாக்க முயற்சிப்பது, இந்நூலில் மிகத் தெளி வாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எழுத்தாளர் தோழர் ஆறுமுகத்தின் ‘மனிதன் மாறிவிட்டான்’ என்ற நூல், ஆர்.எஸ்.எஸ், பாஜக கூட்டணி, இந்து மதக் காவ லர்கள் என்ற போர்வையில், நாட்டில், ஏற்படுத்த முயற்சிக் கும் மத மோதல்களுக்கு எதிராக, ஒரு விழிப்புணர்வை மக் கள் மத்தியில் ஏற்படுத்துவதாக இருக்கிறது. இந்திய தேசத் தில் சிறுபான்மையினரால் இந்துக்களுக்கு பேராபத்து என் றும், இந்து மதம் ஆபத்தில் உள்ளது என்றும், இந்துக்கள் பாதுகாப்பற்ற வகையில் இருப்பது போலவும் உண்மைக்குப் புறம்பானவற்றை விதைத்து வருவதாகவும் கூறும் இந்நூல், மக்களை சரியான திசை நோக்கி நகர்த்த பெரும் முயற்சி செய்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்து மதம், இந்துத்துவம் இரண்டுக்கும் உள்ள வேறு பாட்டை மிகத் தெளிவாகக் கூறும் நூலாசிரியர், இந்துத்துவத் தின் அபாயத்தை மிகவும் அழுத்தம் திருத்தமாக சுட்டிக் காட் டியுள்ளார். இந்து மதம் என்பது சாதாரண இந்துக்கள் பின்பற் றும் வழி முறை என்றும், இந்துத்துவம் என்பது ‘இந்து ராஷ்டி- ரம்’ என்ற ஒன்றை அமைக்க இந்துக்களை அணி திரட்டும் தத்துவமாகும் என்றும் நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.


இந்திய தேசத்தை முழுமையாக ஆக்கிரமிக்க ‘இந்துத்துவம்’ முயற்சிப்பதால், அதனை வெளிப்படுத்தும் விதமாக இந் நூலை வடிவமைத்துள்ள நூலாசிரியர், மற்ற மதங்களில் உள்ள விரும்பத்தகாத செயற்பாடுகளையும் கூறத் தவற வில்லை. குறிப்பாக இஸ்லாமிய மதத்தில் உள்ள தீவிரவாதி களின், பயங்கரவாத செயற்பாடுகளையும் நூலாசிரியர் வன் மையாகக் கண்டிப்பதையும் காணலாம். அதேபோன்று கிறிஸ் தவ தேவாலயங்களில் நடைபெறும் விரும்பத்தகாத நிகழ்வுக ளையும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதா கும்.

மக்களின் நல்லிணக்கத்தை குலைக்கும் சக்திகளுக்கு எதி ராக, சமூக ஐக்கியத்தை சிதைக்கும் செயல்களுக்கு எதிராக, அப்பாவி மக்களை திசை திருப்பி அரசியல் இலாபம் பெற முயற்சிக்கும் சமூக விரோதிகளுக்கு எதிராக, முற்போக்கு சிந்தனையாளர்கள் களத்திற்கு வரவேண்டும். அதனை தனது ஆளுமையான எழுத்தின் ஊடாக தோழர் ஆறுமுகம் நிறை வேற்றி உள்ளார். இதுபோன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும், சிந்தனையைத் தூண்டும் நூல்கள் நிறையவே வெளிவர வேண்டும்

இன்றைய காலகட்டத்தில் அனைவரும் வாசிக்க வேண்டிய நூலாக ‘மனிதன் மாறிவிட்டான்’ என்ற நூல் அமைந்துள்ளது.



jeyasingh@thaiveedu.com




# சிவாவின் 'சீருடை'

– அகமட் பிஸ்தாமி

சீருடை நூலின் ஆசிரியர் சிவா அவர்கள் சிறந்த வாசகர். குழந்தைகள் பற்றிய மிகச்சிறந்த பார்வை கொண்டவர். அவரது எழுத்துக்களிலும் செயற்பாடுகளிலும் சிறுவர் உலகம் பட்டவர்த்தனமாக வெளிப்படும். கல்விச்செயற்பாட்டாளரான இவர் கல்விப் புலத்துடன் தொடர்பான நடைமுறைச் சிக்கல்கள் குறித்துப் பல நூல்களை எழுதியுள்ளார். கல்விப்புலத்தில் முன்மாதிரியான ஆளுமைமிக்கவர். இவரது எழுத்துக்களில் நவீன நாகரிகப் போக்குகளுக்கு ஏதுவாக அமைகின்ற சிறுவர் மையக் கருத்துக்களும் சிந்தனைகளும் மிகப்பெரிய இடத்தை பிடித்துக் கொள்ளும். சிவா ஆசிரியர் அடிப்படையில் ஓர் ஓவியர்; பள்ளி ஆசிரியர்; வரலாற்றுப் புகழ்மிகு மதுரையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவரது பேச்சில் எப்போதும் மேன்மையும் அன்பும் வெளிப்படும். அவரது எழுத்தும் அப்படித்தான். கற்பித்தலைத் தவமாகக் கொண்டு பேணிவரும் இவர் எந்த இடத்திலும் மாணவர் பக்கம் இருந்து கல்வியின் அழுத்தங்களைக் குறித்துப் பேசியும் எழுதியும் வருபவர்.

குழந்தைகள் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய கூர்மையான ஒரு பகுதி இருக்கின்றது அதற்கான சில வினாக்கள் உள்ளன.

- உங்கள் குழந்தை உங்களோடு உரையாடுகிறதா ?
- கருத்துக்களை வெளிப்படுத்துகிறதா ?
- புதிதாகவும் புத்தாக்கத்துடனும் சிந்திக்கிறதா ?
- வினாத்தொடுக்கிறதா ?
- இன்னொரு கருத்தை அல்லது தீர்வைச் சொல்கிறதா ?

அப்படியாயின் அப்பிள்ளை சிந்திக்கிறது.

சின்னப்பிள்ளையென்று சாதாரணமாக எண்ணி அப்பிள்ளையைச் சிரிப்பாக்கிவிடவேண்டாம் நாளை அப்பிள்ளை ஓர் ஐன்ஸ்டீனாகவோ நியூற்றனாகவோ எடிசனாகவோ வரலாம்.

கற்பித்தல் என்பது நான்கு சுவர்களுடன் முடிந்துவிடும் ஒன்றல்ல, அது வாழ்நாள் நீடித்த செயற்பாடு. மனித உருவாக்கப் பணி. ஒவ்வொருவரதும் தனியாள் வேறுபாடுகளை அனுசரித்து அவரவர் திறமைகளையும் ஆற்றல்களையும் இனங்கண்டு சுதந்திரமான, சுவாரசியமான, வித்தியாசமான ஆளுமைகளை உருவாக்குவதே கல்வி. ஆனால் பரீட்சை முறையும் கல்வி முறைமையும் சந்தையில் நிலவும் போட்டிகளுக்கேற்ப குழந்தைகளிடமிருந்து அவர்தம் ஆசைகளை முளையிலேயே கிள்ளி எறிந்து அவர்களது உலகைச் கருகச்செய்து நிர்மூலமாக்கி விடுகின்றன. இவற்றை எதிர்த்துச் சிந்திக்க வைக்க முனைகிறது சீருடை.

பாடசாலைகளில் நாம் யாரை உருவாக்குகிறோம் ?

உருவாக்க முனைகின்றோம், பாடுபடுகின்றோம் என்பவற்றைக் குறித்துச் சிந்திக்க இந்நூல் வழியமைக்கிறது எந்த ஆசிரியரும் குழப்படியான மாணவர்களை விரும்புவதில்லை; அங்கீகரிப்பதில்லை; புகழ்வதில்லை; பாராட்டுவதில்லை; பரிசளிப்பதில்லை; காது கொடுப்பதுமில்லை; பதிலளிப்பதுமில்லை; பரிவு காட்டுவதுமில்லை. தண்டனை வழங்குவது, பாய்ந்து விழுவது அல்லது காரியாலயத்திற்கு அழைத்துச் செல்வது அல்லது ஒழுக்காற்றுக் குழுவில் முறையிடுவது அல்லது பெற்றோரிடம் புகார் செய்வது போன்றவற்றைத்தான் ஆசிரியர் விரும்பித் தெரிவு செய்வர்.

- குழந்தை உளவியல்
- கட்டிளம் பருவ உளவியல்
- வகுப்பறை முகாமை
- கோப முகாமை
- இடர்நெருக்கடி
- நிலைமைகளைக் கையாளல்

போன்ற கலைகள் குறித்துத் தெரியாதபோது இந்த விபத்துகள் நிகழும்.

எமது பரீட்சைமையக் கலைத்திட்டமும் பாடசாலை நிர்வாக கட்டமைப்பும் கிளிப்பிள்ளைகளைச் செல்லப்பிள்ளைகளை, உயிரோடு அடக்கமாக்கிவிடுகிறது. மாறாக உணர்விழந்த

பிள்ளைகளை, நல்ல பிள்ளைகளாகக் கருதிப் பாராட்டி விடுகிறது. தூக்கி வைத்து கொண்டாடுகிறது.

செல்வார்த்தை/ சொல்வார்த்தை கேட்போரைப் பளிச்சிட்டு மிளிர வைக்கிறது.

மனனம் செய்து அச்சுப்பிசகாமல் உள்வாங்கி பரீட்சை விடைத்தாளில் வாந்தி எடுப்பவர் திறமைசாலி.

தெய்வாதீனமாக அஜீரணத்தால் வாந்தியோ வயிற்றோட்டமோ விடையாக வராமல் வயிற்றிலும் மூளையிலும் சிக்குண்டால் அவர் முட்டாள்; தோல்வியடைந்தவர்; பெற்றோரை ஏமாற்றியவர்; பாடசாலையின் பெயரைக் கெடுத்தவர். இதுதான் நிலை என்றால் நீங்கள் வகுப்பில் ஆண்டாண்டு காலம் அப்படியே அலுப்பின்றி உதிர்க்கும் வார்த்தைகளைப் பத்திரமாக, பக்குவமாக மாணவரது மனங்களில் சேகரிக்கக் கற்றுக் கொடுங்கள்.

விழுங்கிய வார்த்தைகளை பரீட்சைத்தாளில் வாந்தியெடுக்கப் பழக்குங்கள் நாடு வளமாகும். கொஞ்சம் பச்சைக்கிளிகளை பஞ்சவர்ணக்கிளிகளை வாடகைக்காவது கொண்டு வந்து வகுப்பறைக்கூண்டில் அடைத்து வைத்து கற்பிக்க ஆரம்பியுங்கள்

நவீன கற்பித்தல் பாணிகளை நோக்கி நகர வேண்டிய காலத்தின் கட்டாயதேவையை மீளவும் வலியுறுத்துகிறது சீருடை. மாணவர்களின் உளவியல் கட்டமைப்பைப் புரிந்து செயற்படுபவரே உண்மையான நல்லாசான். அந்த நல்லாசானை உருவாக்கவே சீருடை முயல்கிறது. கற்பித்தல் என்பது சிக்கல் நிறைந்த ஒன்று. பாடசாலைகள் பலிபீடங்கள் ஆகுமளவு வகை தொகையற்ற அதன் இறுக்கமும் கெடுபிடிகளும் பரீட்சையும் பாடத்திட்டமும் பிள்ளைகளை இயந்திரத்தனமாக இயக்குவிக்கிறது. புத்தகம் சுமந்தே பூப்பெய்த வைக்கும் புதுமையைத்தான் அவை செய்கின்றன. பெற்றோரும் மற்றோரும் ஆசிரியர்களும் சமூக நிறுவனங்களும் மதிப்பெண்களுக்காக ஓடி அலைகின்றார்களே தவிர குழந்தைகளின் மனோநிலையை, உளவியலை, உணர் வை, ஆசை அபிலாசைகளைப் புரிந்துகொள்ளத் தயாரில்லை.

தகவல்களைத் திணிப்பதிலும் கடத்துவதிலும் பரீட்சைக்கு வாந்தி எடுக்க வைப்பதிலுமே ஆசிரியர்களும் ஓய்வின்றி மும்மரமாக உள்ளனர். இந்த இடத்தில் தான் சிவா ஆசிரியர் சற்றுத் தரித்து தன் புதிய தரிசனங்களைப் பேசுகிறார். தான் கற்றதும், பெற்றதுமான அனுபவங்களை, அவதானங்களை வார்த்தைகளாகக் கோர்க்கிறார். அனுபவமே மிகப்பெரும் பாடம். அது என்றும் தவறுவதில்லை. தனது வாழ்வைத் திசை திருப்பிய விடயங்களை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கற்பித்தலை ஒருங்கிணைக்கிறார். மகிழ்ச்சியான கற்பித்தலை, மாணவர் சார்பான கற்றலை ஊக்குவிக்கிறார். கற்பித்தலை சுமை எனும் நிலையிலிருந்து சுகம் எனும் நிலைக்கு பரிமாற்றம் செய்கிறார். இந்த பின்னணியில்தான் கற்பித்தலில், வகுப்பறைச் செயற்பாடுகளில் பிரதான கதாபாத்திரமாக இயங்கும் ஆசிரியர்களை மையப்படுத்தி உலகளாவிய நிலையில் அறியப்பெற்ற திரைப்படங்கள் மூலம் ஆசிரியர்களுக்கு மிகப் பெரிய செய்தியை நூலாசிரியர் சொல்ல முனைகிறார்.

போதனைகள் எழுப்பாத அசரீரியை காட்சிகள் நிச்சயம் எழுப்பிவிடும். இறுகிய உள்ளங்களை அது இளக வைக்கும். அப்படித்தான் சீருடை எனும் பெயரில் உள்ள நூல் கன்வேஷ் எனும் தலைப்பிலான மராத்தி படம் குறித்துப் பேசுகிறது. பாடப்புத்தகங்கள் பரீட்சைப் புள்ளிகள், விளையாட்டுப் போட்டி, பிரம்படி, ஒதுக்கல், ஓரங்கட்டல், பாரபட்சம், அழுத்தம், தண்டனை, ஆதரிப்பு, அரவணைப்பு, ஊக்குவிப்பு, நெருக்கம், நேர்மை, நெருடல், வருடல் எனக் குழந்தை உலகு வேண்டுகின்ற எண்ணற்ற சிந்தனைகளை, செயற்பாடுகளை மையப்படுத்திய கல்வியியல் படங்கள்தான் இங்கு பரிமாற்றப்படுகின்றன. பன்முக ஆளுமைகளாகத் தம்மை வளர்த்து இற்றைப்படுத்திக்கொள்ள வேண்டிய ஆசிரியர்கள் ஈரமும் இரக்க இருதயமும் கொண்டவர்களாக இருந்தால் மட்டும் தான் வகுப்பறைகளில் மாணவர்கள் சீரான இரத்த ஓட்டம் கொண்டவர்களாக நடந்துகொள்ள முடியும். அவ்வாறு இன்றேல் சீறிப்பாயும் காட்டு விலங்குகளாக, கர்ணகொடூர முகங்களாக, மனிதாபினம் தொலைத்து அன்பை இழந்து, அழகிய வார்த்தைகளை அடகு வைத்து அவமானங்களை மட்டுமே மாணவர்களுக்கு அன்றாடம் பரிசளிப்பார்கள்.

ஆசிரிய உலகம் என்பது ஆன்மாக்களின் உலகில் அத்துணை மகத்துவமும் மகோன்னதமும் கொண்டது. அது மனித மனங்களில் வாழும் அபூர்வமான அனுபவம். அனைவருக்கும் வாய்க்காது. குழந்தைகளின் கல்வி வாழ்வு என்பதே அவர்களது எதிர்கால வாழ்வுக்கான ஆரூடம் தான். அத்தகைய கல்வி வாழ்வுடன் தொடர்புபடும் ஆசிரியர்கள் எந்தளவு விழிப்புடனும் உணர்வுபூர்வமாகவும் பள்ளிச்சூழலில் மாணவர்களுடன் பண்பட்டு நடக்க வேண்டும் என்பதைத் தான் சீருடை உணர்த்துகிறது.

கன்வேஷ் இல் தொடங்கி Mr. Holland's Opus வரையான உலகத்தரம் வாய்ந்த ஒன்பது திரைப்படங்கள் குறித்த சீருடையானது பிள்ளைகளின் உலகை, உணர்வைப் புரியாமல் அவர்களுக்கும் ஓர் உயிர் இருப்பதை உணராமல் மாணவர்களை வார்த்தைகளால் நிர்வாணமாக்கி அவமானப்படுத்தும் சகல ஆசிரியர்களும் அணிந்துகொள்ள வேண்டிய அழகிய ஆடை பற்றியது.

ஒவ்வொரு படம் குறித்தும் நூலாசிரியர் சொல்லும் பாங்கு திரை விமர்சனம் போன்று அமையாமல் சிந்தனைக்கு விருந்து தருவதாகவும் சீர்தூக்கி பார்க்கவும் தூண்டுவதாக உள்ளது. ஆசிரியர்களை குத்திக்காட்டாமல், சுட்டிக்காட்டாமல் அவரவராகவே உணர்ந்து தங்களை சீர்திருத்தி சீர்படுத்தி சீரியஸாக வகுப்பறைச் செயற்பாடுகளை உயிரோட்டமாக்கவும் பூரண ஆளுமை உள்ள நட்பிரஜைகளாகவும் மாற்ற எத்தனிக்கும் எளிய ஒரு முயற்சியே சீருடை. சீருடைக்கும் அதனை சீராக அணிவிக்க முயலும் கலகலப்பான சிவா ஆசிரியருக்குப் பெருத்த நன்றிகள்.



bisthamy.ahamed@thaiveedu.com

# பெருஞ்செல்வம் + பேரறிவு + இரத்தம்

## கருணாகரன்

இது கவிதையைப் பற்றிய, இலக்கியத்தைப் பற்றிய அல்லது கவிதைகளை எழுதிக் கொண்டிருக்கும் தேன்மொழி தாஸைப் பற்றிய சொற்களின் இணைவு மட்டுமல்ல. உங்களைப் பற்றியும் என்னைப் பற்றியும் தேன்மொழி தாஸின் சொற்கள் ஊடாகப் பார்க்கும் முயற்சியின் விளைவு. மேலும் உங்களையும் என்னையும் இணைத்திருக்கும் காலத்தையும் இந்த உலகத்தைப் பற்றியுமான சொற்களின் கூட்டு.

அநேகமாக ஒவ்வொரு நாளும் குறைந்தது ஐந்து ஆறு கவிதைகளையாவது படிக்கிறேன். இந்த வழக்கம் நானும் கவிதைகளை எழுதுவதால் வந்ததல்ல. கவிதைகளைப் படிக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியும் நிறைவுமே இதற்குக் காரணம். எல்லாக் கவிதைகளும் மகிழ்ச்சியைத் தருகின்றனவா என்றால், நிச்சயமாக இல்லை. ஆனால், அதற்கு அப்பால் அவை நிறைவைத் தருகின்றன. அந்த நிறைவு கொண்டாட்டத்தினாலோ மகிழ்ச்சியினாலோ ஏற்படுவதல்ல. நாம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதால் அல்லது அறிந்துகொள்ள வேண்டியவற்றை அறியத் தருகின்றன என்பதால் ஏற்படுவது.

நாம் வாசித்துக்கொள்ளக் கூடிய பலவகையான கவிதைகள் பலராலும் எழுதப்படுகின்றன. அவற்றில் வாழ்வின் சூட்சுமங்களையும் தத்தளிப்புக்களையும் காணலாம். இயற்கையின் தளத்தில் நிகழ்கின்ற - நிகழத் துடிக்கின்ற வாழ்க்கையின் பிரதிபலிப்புகளால் அவை நிரம்பியுள்ளன. தவிர்க்க முடியாத தத்துவத்தின் ஒளியும் நிழலும் அவற்றில் கலந்திருக்கின்றன.

இவ்வாறான கவிதைகள் உண்டாக்குகின்ற ஈர்ப்பு ஒரு வகையானது. இதற்கு மறுதிசையைக் கொண்டவை நம்மிடம் குறைந்த பட்சமாக இருக்கிற மகிழ்ச்சியையும் அடித்துக் கொண்டு போகும் கவிதைகள். அவை பெரும்பாலும் அரசியற் கவிதைகள். நேரடியாகவே அவற்றில் அரசியல் அடையாளம் இருக்கும். சிலவேளை இல்லாதிருக்கலாம். ஆனால், அவை எப்படியோ அரசியற் கவிதைகளாகவே உணரப்படுகின்றன. அவற்றின் தொழிற்பாடு சமூகவியலாக, அரசியலாக இருப்பதால் அவற்றை அரசியற் கவிதைகள் என்று அடையாளப்படுத்துவது தவிர்க்க முடியாதது. இலக்கிய அடிப்படையில் சிலவேளைகளில் இது தவறு. அப்படியான ஒரு அடையாளப்படுத்தல் தவிர்க்கமுடியாத ஒன்று. ஆயினும் இவ்வாறன அடையாளப்படுத்தல் குறித்த கவிதைகளுக்கும் அவற்றை எழுதிய கவிஞர்களுக்கும் இழைக்கும் அநீதி. வாசக நிலையிலிருந்து அடையாளப்படுத்த முற்படும் அதிகார நிலை இது என்று சிலர் வாதிடக்கூடும்.

கவிதை அல்லது அந்த வெளிப்பாட்டு வடிவத்தில் உள்ள அந்தச் சொற்கள், அந்தச் சொற்களின் கூட்டு, அவற்றில் இணைவு கொண்ட வரிகளின் ஒழுங்கமைவு, அவை திரண்டு உருவாக்கும் உணர்வுகள் எல்லாமே, நம்முள் சமூகம் பற்றிய அகவிழிப்பை ஏற்படுத்துகின்றன. இவை தனி மனித அகத்திலும் புறத்திலும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. இத்தகைய உள் - வெளி தூண்டல் நிகழும்போது அது அரசியற் பிரக்ஞையாகவே உருத்திரள்கிறது என்பதால்தான் இவை ஏதோ ஒரு வகையில் அரசியல் கவிதைகளாக இருக்கின்றன. அப்படி அவை அரசியற் கவிதைகளாக இருக்கும்போது, நம்முடைய மகிழ்ச்சியைச் சில சந்தர்ப்பங்களில் அவை அடித்துச் சென்றாலும், அதற்குப் பதிலாக நமக்குள்ளே அவை உண்டாக்கும் விழிப்பு நாம் கொண்டிருந்த அல்லது இழந்த மகிழ்ச்சியையும் விட பெறுமதியானது. சமூகம் பற்றிய உணர்வை அளிக்கும் விழிப்புக் கிடைப்பது பெருநிறைவன்றி குறையன்று. ஆகவே இன்னொரு நிலையில் இந்த வகைக் கவிதைகள் உண்டாக்குகின்ற நிறைவு மகிழ்ச்சிக்குரியதே.

சொல் என்பது வெறுமனே எழுத்துகளின் இணைவு அல்ல. அது வினையாற்றலைக் கொண்டது. விளைத்திறன் மிக்கது. ஆழ்ந்த பொருளில் கட்டுண்டது என்பதாற்தான் சொற்களை மந்திரம் என்று கருதினர். மந்திரம் என்பது மாயங்களின் அடியொலிப்பு மட்டுமல்ல, நம்மை இயக்கக் கூடிய சக்தியையும் கொண்டது. ஒரு சொல், அதனுடைய தொனியினாலும் அது கொண்டிருக்கின்ற பொருளினாலும் நம்மை மகிழ்ச்சிப்படுத்துகிறது. இன்னொரு சொல் நம்மை நிலை குலைய வைக்கிறது. வேறொரு சொல் நம்மைத் துயரத்தில் ஆழ்த்துகிறது. இப்படியெல்லாம் வினையாற்றக்கூடிய சொல், மந்திரமன்றி வேறென்ன ?

ஒவ்வொரு சொற்களும் பொருத்தப்படுகின்ற விதத்தினால் பொருளும் வினைத்திறனும் கூடிப் பொலிகின்றன. இலக்கியம் சொற்களின் கூட்டிணைவின் உச்சமென்பர். கவிதை இதன் சிகரம். 'மொழியின் அரசி' என்னும் தொல்வழக்காற்றுச் சொல் இதனை விளக்கி நிற்கிறது.

தேன்மொழி தாஸ் தன்னுடைய சமூகப் பிரக்ஞையில் உருவான சொற்களை அடுக்குகின்ற விதத்தினால் அல்லது



இணைக்கின்ற விதத்தினால் பலகோடி மின்னதிர்வுகளை உண்டாக்குகிறார்.

***'கொழுத்த செல்வந்தன் காட்டில்***
***வெள்ளரி படர***
***கம்புகளாக்கப்பட்ட தகப்பன்களின் கால்களை***

***எள்ளின் முடிவாக்கப்பட்ட***
***திருமனசு கொண்ட தாய்களை***

***கைகள் முன்னங்கால்களாக்கப்பட்ட***
***குழந்தைகளை***
***நாம் காப்பாற்ற வேண்டும்***

***மொழி தொழும் நாடு என்றும்***
***மதம் முதுகெலும்பாக்கப்படாத தேசம் என்றும்***
***ஒன்று உண்டோ? ..'***

உழைப்புச் சுரண்டலையும் மனிதர்களின் மீதும் இயற்கையின் மீதும் செலுத்தப்படும் அதிகாரத்தையும் அந்த அதிகாரத்தைக் நிலைநிறுத்திக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் அடிமைப்படுத்தலையும் மிக நுட்பமாகவும் ஆழமாகவும் இந்தச் சொற்களும் அவற்றின் கூட்டிணைவும் உணர்த்துகின்றன. கூடவே நம்மை எய்த்துக் கொள்ளும் வகையில் கட்டமைக்கப்பட்ட தேசம் என்ற கற்பனைச் சித்திரத்தில் எப்படி மதமும் மொழியும் (நிறமும்தான்) முதுகெலும்பாக்கப்பட்டு, நம்முடைய முதுகெலும்பையும் இரத்தத்தையும் அதற்குப் பலியிட வேண்டியிருக்கிறது என்பதையும் உணரவைக்கிறார்.

இந்தச் சொற்களின் இணைவு வெறுமனே மேலோட்டமாகக் கேட்டோ பார்த்தோ, படித்தோ கடந்துவிட முடியாதவாறு நம்மை இழுத்துத் தம்முடைய ஆழத்துள் கொண்டு செல்கின்றன. இதை நாம் படிக்கும்போதே உணர்கிறோம். அந்த ஆழம் கனலாலும் சீழாலும் காயங்களாலும் துயரங்களாலும் நிரம்பியிருக்கும் மாபெரும் கிடங்காகும். அதை எதிர்கொள்ள வேண்டியிருப்பதும் அதிலிருந்து மீள்வதும் நம்முடைய இயல்பூக்கமாகிறது. இயற்கையின் நியதி - விதியும் அதுவே. எதிர்கொண்டு விளைதல். இல்லையெனில் வீழ்ந்தழிதல்.

இந்தச் சொல்லடுக்குதல் ஒன்றும் தொழில்முறைத் தேர்ச்சியினால் மட்டும் வந்ததல்ல. வருவதுமல்ல. சமூகப் பிரக்ஞையினால், மானுட நேச உணர்வினால், அரசியற் புரிதலினால் வந்தது, வருவது. இவை இல்லையென்றால் இவற்றைக் குறித்து நாம் இந்தத் திசையில் நின்று பேச வேண்டியிருந்திருக்காது.

இலக்கியத்தில் இயங்குகின்ற பலரும் இந்த மாதிரிச் சொற்களை அடுக்கி அல்லது இணைத்து ஆழமான பொருண்மைகளை உருவாக்குகிறார்கள். அதுதான் படைப்பாளிகளின் - கவிஞர்களின் சிறப்பாகும். அவை காட்சிகளாக, நிகழ்வுகளாக, அனுபவங்களாக, பாத்திரங்களாக, அவற்றின் உணர்வுகளாக எனப் பன்முகம் கொண்டு நிகழும் ஆற்றலாகின்றன. இலக்கியத்தில் மட்டுமல்ல, அ - புனைவிலும் இதுதான் அடிப்படையாகும். சிலர் இதை ஒரு வித்தைபோல (சொற்களின் ஜாலமாக) வணிக உத்தியாக நிகழ்த்துவதும் உண்டு. அவை ஒரு குறிப்பிட்டளவுக்கு அதிர்ச்சியை அளிக்கலாம். ஒரு trend ஐ உருவாக்கலாம். அந்தளவுக்கு கூடிய கதியில் உலர்ந்து வற்றிப்போகும்.

பயிலப் பயில சொல்லும் முறையிலும் வடிவ உருவாக்கத்திலும் வெளிப்பாட்டுத் திறனிலும் தேர்ச்சியேற்படுவதுண்டு. சிலர் இதைத் தொழிற்தேர்ச்சிபோல, நுட்பமாகப் பயன்படுத்துவர். அப்படியானோர் வெளிப்பாட்டுத் திறனிலும் வடிவப் புதுமையிலுமே அதிகக் கவனஞ் செலுத்துவர். அதில் உருவாகும் புதுமையும் கிளர்ச்சியுமே அவர்களுடைய முதன்மை நோக்காகும். இந்த நோக்கு சமூகப் பிரக்ஞையிலிருந்து அவர்களை விலக்கி அல்லது குறைத்துத் தம்மையும் தமது அடையாளத்தையும் தமது சிறப்பையும் குறித்தே அதிகமும் கரிசனைப்பட வைக்கிறது. தம்மை முன்னிலைப்படுத்தும் இச்செயற்பாட்டில் இங்கே நிகழ்வது உட்திரும்புதல் - சுருங்குதலாகும். இதைச் சுயமுன்வைப்பு, சுயமுன்னிறுத்தல் எனலாம். இங்கே எழுத்து அல்லது படைப்புத் தந்திரங்களும் உள்நோக்கங்களும் அதிகமாகும். அதற்குரிய நுட்பங்களின் நுண்ணிய வலைப்பின்னல் அடர்த்தி கொண்டிருக்கும்.

இதற்கப்பால் வரலாறு, சமூகம் ஆகியவற்றின் மீதான பார்வையோடு, சமகாலம், எதிர்காலம் குறித்து விரிவும் ஆழமும் கொண்ட உணர்தலைக் கொள்ளும் போக்கில் - அந்த வகை எழுத்தில் அல்லது படைப்பில் வெளிவிரிதல் நிகழ்கிறது மலர்கள் விரிவதைப்போல. மலர் ஒன்று விரியும்போது ஆகாயமே அதனுடைய ஒளியைப் பெறுகிறது. நிலம் அதனுடைய அழகைக் கொள்கிறது. வெளி அதனுடைய வாசனையைப் பகிர்கிறது. அப்படித்தான் சமூகப்பிரக்ஞை கொண்ட ஒவ்வொரு சிந்தனையும் ஒவ்வொரு சொல்லும் மலரிதழ்களாக விரிகின்றன. அந்த மலர்களிலிருக்கும் மகரந்தங்களின் சேர்க்கையும் பரவுதலுமே விளைவுகளாகும். அதுவே அவற்றின் தொடர்ச்சியுமாகும். அதுவே நல்விளைவாகவும் கொள்ளப்படும்.

தேன்மொழி தாஸின் சொற்களும் அவற்றின் இணைவுகளும் நம்மை, நம்முடைய காலத்தை, நம்முடைய சூழலைப் பளிச்செனத் திறந்து காட்டுகின்றன. அதைக் காணும்போது நாம் அதிர்ச்சியடைகிறோம். அவை வெறும் சொற்களல்ல. அவருடைய இதயத்தின், ஆன்மாவின் ரத்தம்.

ஒரு சொல் உங்களை நிலைகுலைவுக்குள்ளாக்கினால் அல்லது ஒரு வார்த்தையோ ஒரு வரியோ உங்களுக்குள்ளே அதிர்வை உண்டாக்கி, விழிப்பூட்டினால் அதை மந்திரச் சொல் எனலாம். அது உங்களுக்குள் நிகழ்த்தும் வினைகள் சாதாரணமானவையல்ல. பாருங்கள், எளிய சொற்களில் நிறைந்து கிடக்கின்ற - எளிய சொற்களில் கொதித்துக் கொண்டிருக்கின்ற - எளிதல்லாத உண்மையை, உண்மையின் ஒளியை, உண்மையின் வெம்மையை அவருடைய கவிதையில் தரிசிக்கலாம்.

***‘நாடு, சுரண்டப்பட்ட பூர்வகுடிகளின் காடு.***

***நகரம், வேறு என்ன மழுங்கடிக்கப்பட்ட மக்களின் மனநிலை.***

***அரசு, திருடன் கையில் அகப்படும் தங்க வாள்’.***

இதைப் படிக்கும்போது மாபெரும் மின்னல் வெட்டுகிறது நமக்குள். பேரொளி பாய்கிறது. அரசியலையும் வரலாற்றையும் அறிந்தோருக்கு இதொன்றும் புதிதாக இருக்காமலிருக்கலாம். ஆனாலும் ஆயிரமாயிரம் சொற்களினால் விளக்க முற்படும் - விளக்கப்பட்ட உண்மையை - யதார்த்தத்தை மூன்று வரிகளில் திரட்டித் தருவது மின்னலன்றி வேறென்ன? ஒளியுமிளும் ஆயிரமாயிரம் மின்குமிழ்களையும் விட ஒரு மின்னலின் ஒளியாழமும் ஒளியாற்றலும் அதிகமே!

இந்தச் சொற்கள் யாருக்கானவை? எதற்கானவை? குழப்பமோ சந்தேகமோ இல்லை. இவை நமக்கானவை? நம்முடைய வாழ்விற்கானவை. ஆனால், நம்மையும் நம்முடைய வாழ்க்கையையும் நம்மிடமிருந்து பறித்து வைத்திருக்கிறது நாடு - அரசு - நகரம் - எல்லாமும் தான்.

***‘நமது தேசத்தின் சதையை***
***யாரோ உணவாக உட்கொண்டு விட்டார்கள்***
***எலும்புகளோ***
***நூலாக சிலர் குறுமுதுகளின் குறுக்கே கிடக்கிறது***
***இப்படியான விசித்திர விதியில் தான்***
***தேசம் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறது***

***ஆன்மமற்ற இதிகாசத்தின் நாயகன்***
***ஓரிடத்தில் பிறந்ததாக நிலம் புரட்டப்படுகிறது***
***எழுப்பப்பட்ட கட்டிடங்கள் இடிக்கப்படுகின்றன***
***எழுதப்பட்ட இருட்டு பகலாக உருட்டப்படுகிறது***
***இதிகாசத்தின் பொருட்டு மொழியும்***
***அதன் மூல நடுகற்களும் மாற்றப்படுகின்றன***
***தேசத்திற்கு தேசம் மொழி பகையாகிறது***
***இயற்பேரறிவு கொண்ட வீரன்***
***புனைவு வில்லனாகிறான்***
***பிறக்காத சதை புனைவுகளால் வரலாறாகிறது’***

தேன்மொழி தாஸை வாசித்தல் அல்லது அவருடைய சொற்களைத் தொடருதல் என்பது அவருடைய மனதை நெருங்குவதாக, ஆன்மாவின் ரத்தச் சூட்டை உணர்வதாக அமைகிறது. அவருடைய உலகம் தனித்து, அவருக்கு மட்டும் உரியதல்ல. அதை அவர் அப்படி வைத்திருக்கவும் இல்லை. அப்படி



வைத்திருந்தால் அதில் நமக்கு அதிக கவனமும் இல்லை. இதுதான் அவருடைய பலம் என எண்ணுகிறேன். அதை அவர் பொதுமைப்படுத்தி வைத்திருக்கிறார் என்பதால்தான் இப்படியொரு பதிவை எழுதத் துண்டுகிறது நம்முடைய அகம்.

***‘குற்றத்தை விவரிக்க வேண்டியதில்லை***
***ஆட்சியாளன் பெயரை உச்சரியுங்கள்***
***குற்ற காலம் நெளிந்தாடும்.***

***நீதியை விவரித்துச் சொல்லுங்கள்***
***போராளியின்***
***எரித்துச் சாம்பலாக்கப்பட்ட வாழ்நிலம்***
***பளபளத்து வெளிவருவதைக்***
***காண்பீர்கள்.***

***நம் சகோதரர்களின் எலும்புக்குள்***
***பாய்ந்தோட வேண்டியது***
***நம்மால் நம்மிலிருந்து படைக்கப்பட்ட***
***தீ தண்டு’***

இதற்கு மேல் வேறு விளக்கங்கள் எதற்காக? போராட்டத்தில்

ஈடுபட்ட அனுபவத்தோடும் ஒடுக்குமுறைக்குள்ளாகிய சமூகத்திரளின் உணர்வோடும் இந்த வரிகளைப் படிக்கும்போது -தொடும்போது - திறக்கப்படும் நம்முடைய புலன்களும் கொதிக்கும் ஆன்மாவும்... விளக்கச் சொற்களில்லை. வார்த்தைகளில்லை. தொண்டை அடைக்கிறது.

இந்தப் புவிப்பரப்பில் நீதி கோருகின்ற மக்களே பலகோடி. நீதி மறுப்பே தினமும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நாம் நீதி மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் யுகத்தில், உலகில்தான் வாழ்கிறோம். வாழ்கிறோமா? இல்லையில்லை, செத்து மடிகிறோம். இதுதான் வரலாறு. இப்படித்தான் உள்ளது நம்முடைய காலம். இதற்குள் நாம் கொண்டாட்டங்களை நடத்துவது, கொண்டாட்டங்களில் ஈடுபடுவது, நல்ல உணவை உண்பது, பகட்டாக உடுப்பது, அணிகலன்களை அணிவது, நம்மிடமுள்ள பெருஞ்செல்வம், பேரறிவு எல்லாம் இந்த நீதிமறுப்பின் முன்னேதான். நம்முடைய இயலாமைகளின் திரைமறைவில் நாம் ஆடிக் கொள்கிற நாடகம். இது நம்முடைய காலத்தில் மட்டும் நிகழ்ந்து கொண்டிருப்பதல்ல, நம்முடைய தாயரின், தந்தையரின் மூதாதையரின் காலமும் இப்படித்தானிருந்தது. இனியும் அப்படித்தான் இருக்கப்போகிறது. 'எரித்துச் சாம்பலாக்கப்பட்ட வாழ்நிலமாகவும் வாழ்க்கையாகவும்'.

இதற்கு என்ன செய்யப்போகிறோம்? எவ்வளவு தூரம் இதிலிருந்து விலகிச் செல்வது? பிரச்சினைகளிலிருந்து - துயரங்களிலிருந்து, சிக்கல்களிலிருந்து புலம்பெயரும் எல்லைதான் என்ன? கண்ணும் காதுகளுமற்ற இதயத்தைக் காவிக் கொண்டு, அதற்கு அலங்கார மலர்களைச் சூடிக் கொண்டிருக்கப்போகிறோமா? பல ஆயிரம் (அரசியற்) கவிதைகளை -சொற்களின் கூட்டிணைவைப் படித்து வருகிறோம். நீந்தி முடிக்க முடியாத சமுத்திரத்தைப்போல அவை விரிந்து கொண்டேயிருக்கின்றன. நீந்திச் செல்லச் செல்ல நீரின் ஆழமும் கடலின் விசித்திரமும் பேருண்மையும் தெரிவதைப் போல, பிரச்சினைகளும் ஒடுக்கு முறையும் தெளிவாகத் தெரிகின்றன.

ஞானம் என்பதென்ன? வாழ்வையும் இயற்கையையும் ஆய்ந்தறிய முற்படுவதுதானே! தேன்மொழி தாஸின் ஞானக் கண் காண்கிறது.

***பூமிக்கு புதிய வஸ்திரம் தைத்துக் கொண்டிருப்பதாக***
***பூக்களுக்கு சாயமேற்றும் நீராக***
***இரத்தத்தில் வழுக்கி விழுவதாக***
***தனது பிள்ளைகளின் நாமங்களைப் பாடும்***
***உடலற்ற குரலாக***
***வார்த்தைகளைப் பாறைகளிலிருந்து எடுப்பவளாக***
***சூரியனின் பற்களுக்கு தைலம் கொண்டு செல்வதாக***
***வீட்டுக்கு மலையூற்று நீர் தெளிப்பதாக***
***வீழும் மரங்களைத் தாங்கிப் பிடிப்பதாக***
***மின்மினியின் வயிற்றில் ஒளியாய் கசங்குவதாக***
***விதைகளாகிச் சிதறுவதாக***
***சிலையாக***
***பசிகளைச் சிலுவையாக வரைபவளாக***
***வெளியை கைத்தடியாய் சுருட்டுவதாக***
***வெற்றிலைக் கொடியின் குருத்தாக***
***மரணத்தை ஒடிப்பதாக***
***வாசல்படியில் கண்களாக***
***உச்சி வகிடில் முத்தங்களாக***
***பட்டாம்பூச்சியின் அமைதியாக***
***முத்திரைகளில் நிற்பதாக***
***நட்சத்திரங்களை ஒழுங்கு செய்வதாக***
***அக்கினிக் காட்டை வலக்கரத்தில் ஏந்தியவளாக***
***இடக்கரத்தில் குளிர்காலத்தை தாங்குவதாக***
***அம்மா கனவில் வருகிறாள்***

....

***சமயவாதிகளின் தராசில் 'வெறி'***
***நடுமுள்ளாக இருக்கையில்***
***சமத்துவத் தட்டு நடுங்கும்***
***அநீதிகளை நிறுத்துக் கட்டுவார்கள்***
***ஆறுகள் தனது பாதையின் ரேகைகளை***
***நீரின்றி நிர்வாணமாய்***
***காட்டும் காலத்தைப் படைத்து விட்டார்கள்***
***பூமியின் உள்ளழகை***
***இலட்சக்கணக்கான உயிர்களை***
***மூதாதையர்களின் ஞானத்தை***
***மந்திர சஞ்சீவி மூலிகைகளின் புலத்தை***
***மரங்களின் குரல்களை***
***ஒடுக்கி விட்டார்கள்.***

....

***தந்திரமான தர்க்கம் ஞானமாகாது***
***சதுரமாகவோ முக்கோணமாகவோ***
***சதுரங்கக் காயில் ஒன்றாகவோ***
***சிக்கிக் கொள்பவன்***
***தொடரியாக இருக்க முடியாது.***
***ஆயுதங்கள் பெருகிய தேசத்தில்***
***நுரையீரல் சுத்தமாக ஒரு எழுத்தாளன் இருக்க முடியாது.***

....

***மனிதர்களை எவ்வகையிலெல்லாம்***
***பிணமாக்கலாம் என்பதை விட***
***மனித நரம்பு, மூளை, மூச்சு***
***இவைகளை எவ்வகையிலெல்லாம்***
***பணமாக்கலாம் என்பதை***
***ஆழத் தெரிந்து கொண்டார்கள்***
***ஆட்சியாளர்களின் பணி இதுவே***
***குடிமக்களின் எலும்புகள் குமுறுகின்றன***
***இரவின் நிறம் மாறிவிட்டது***
***துயரங்கள் உடலுக்குள் செயற்கையாக***
***உட்செல்லுகின்றன***
***ஒரு வாக்கியத்தை மடித்து மாத்திரை ஆக்குகிறேன் -***
***வேறு என்ன***
***இயற்கையை நம்புங்கள்***

- தேன்மொழி தாஸ்



karunagaran@thaiveedu.com

# அலை பற்றிய உண்மையையும் கரை பற்றிய மிகைப்படுத்தலையும் பேசும் கதை

-தானா விஷ்ணு

ஈழவிடுதலைப் போராட்டம் முப்பது ஆண்டுகளுக்கு மேல் நீண்ட பயணம் செய்திருந்தாலும் கனதியானபாடுகளைத் தமிழ் மக்கள் வன்னியில் 2016-ன் இறுதிப் பகுதியிலிருந்து 2019-ன் நடுப்பகுதிவரை நிகழ்த்தப்பட்ட யுத்த காலத்தி லேயே அனுபவித்திருந்தார்கள். முப்பது வருடங்களாக இரா ணுவத்தின் இனவழிப்பு, கொலைகள், கற்பழிப்பு, காணாமல் ஆக்கப்படுதல் போன்ற துயரங்களையும் தாண்டி விடுத லைப் போராட்டத்தினை ஆயுதவழியில் முன்னெடுத்த குழுக் களுக்கிடையிலான மோதல், சகோதரப் படுகொலைகள், புத்திஜீவிகள் கொல்லப்படுதல், ஒவ்வொரு ஆயுதக்குழுக்க ளின் ஆதரவாளர்களும் மாறிமாறிக் கொல்லப்படுதல், காணாமல் ஆக்கப்படுதல் எனத் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களும் துயரங்களும் மிக நீண்டவை. ஆனால் இதனை யும் தாண்டிய நெருக்கடிகளைத், துயரங்களை, அடக்கு முறைகளை... தமிழ் மக்களில் குறிக்கப்பட்ட ஒரு பகுதியினர் வன்னியின் யுத்த நிலத்தில் அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டி ருந்தனர்.


இவ்வாறு பாடுகளையும் நெருக்கடிகளையும் அனுபவித்து, வாழ்ந்து மீண்ட மக்களின் மனவடுக்கள் எத்தனை யுகம் கடந் தாலும் மறக்கவோ, மறக்கடிக்கப்படவோ முடியாதவை. அவர் கள் அதனைக் குறித்த மூன்று வருடகால எல்லைக்குள் வாழ்க்கையாக வாழ்ந்து மீண்டவர்கள். அவர்களின் பாடு களை யுத்த காலத்திற்கு வெளியில் நின்றோர் கேள்விப்படும் போது, வெறும் செய்தியாகவே அவரிடம் வந்து சேரும். இரத் தமும் சதையும் நிணமுமாக அதனை உணர்ந்து கொள்வது கடினம்.

ஆனால், முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவிலேனும் அனுபவ ஊற்றோடு படைப்பிலக்கியங்கள் அவற்றை வெளிப்படுத்தி வருகின்றன. வன்னி யுத்த முடிவின் பின்னர் குறிப்பாக முள்ளிவாய்க்காலில் விடுதலைப்புலிகள் தோற்க டிக்கப்பட்ட பின்னர், அங்கு வாழ்ந்த மக்களின் துயர்மிகுந்த வாழ்க்கையை மையமாக வைத்து எழுதப்பட்ட இலக்கியங் கள் அதிகமானவை. அதிலும் குறிப்பாக நாவல்கள் இத்த கைய களத் துயரத்தினை அதிகம் வெளிப்படுத்தி நிற்கின் றன. நாவல்கள் இறுதி யுத்தகால களத்தின் நெருக்கடிகளை யும் மக்களின் இழப்புகளையும் அன்றைய மக்களின் வாழ் வின் மீதான நம்பிக்கையீனங்களையும் வெளிப்படுத்துபவை யாக அமைந்தாலும் அவை இருதள முரண்நிலைகளை உரு வாக்கி வருகின்றன.

வன்னி யுத்தம் மன்னாரில் ஆரம்பித்து முள்ளிவாய்க்காலில் முடிவடையும் நிலையில், இராணுவத்தின் குரூரமான நில ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாக ஒவ்வொரு பிரதேசத்தி லிருந்தும் இடம்பெயரத் தொடங்கிய மக்களின் வாழ்க்கை யையும் அலைவுகளையும் இழப்புகளையும் துயரங்களையும் ஒரு சாராரின் நாவல்கள் பேசு பொருளாகக் கொண்டியங்க, இன்னொரு சாரார் அதே வன்னியின் அதே மக்களின் அலை வுகளையும் இழப்புகளையும் பேசுவதோடு நின்றுவிடாமல், மக்கள் தமது மீட்பர்களாக எண்ணிய விடுதலைப்புலிகள், அதே மக்கள் மீது நிகழ்த்திய கொடூரமான அடக்கு முறை களை, வன்முறைகளை வெளிப்படையாகப் பேசும் நாவல்க ளைப் படைத்தனர். இது இருதள படைப்பாளிகளை அடை யாளம் காட்டியிருக்கின்றது. ஒன்று, விடுதலைப்புலிகளை நியாயப்படுத்தும் சார்புநிலைப் படைப்பாளிகள். மற்றையது, விடுதலைப்புலிகளையும் விமர்சனத்துக்குள்ளாக்கும் நோக் குநிலைப் படைப்பாளிகள். இத்தைகைய சார்புநிலைப் படைப்பாளிகள் ஒருவரையொருவர் நிராகரிக்கவும் விமர்ச னத்துக்குள்ளாக்கவும் தம் சார்புநிலைக்குரியவர்களின் படைப் புக்களை ஏற்றுக்கொள்ளவுமான நியாயங்களோடு இயங்கு கின்றனர்.

யுத்த நிலப்பரப்பில் இராணுவத்தின் நேரடியான ஆளு கைக்கு உட்படாத மக்கள் அவர்களின் எறிகணைக்கும் துப் பாக்கிச் சன்னங்களுக்கும் விமானத் தாக்குதல்களுக்கும் ஈடு கொடுக்க முடியாமல் அலையவும் கோரமாக இறந்து போக வும் உறவுகளை கண்முன்னே இழந்து போகவும் மனரீதியான பாதிப்புக்கு உள்ளாகவுமான கொடூரங்களை எதிர்கொண்ட

னர். அதேவேளை விடுதலைப்புலிகளின் நேரடியான ஆளுகைக்கு உட்பட்டிருந்த அதே மக்கள் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கட்டாய ஆட்சேர்ப்பு, அதனை எதிர்த்து நின்ற உறவுகள் மீதான வன்முறைகள், கொலைகள், முன்னாள் போராளிகளைக் குடும்பத்திலிருந்து பிரித்து வலுக்கட்டாயமாக களமுனைக்கு கொண்டு செல்லுதல் போன்ற பல நெருக்கடியான செயற்பாடுகளால் மனரீதியாக பாதிப்புக்கு




ளாகினர்.

இத்தகைய பேசுபொருளை மையமாகக் கொண்டு அதிகமான நாவல்கள் ஈழத்திலும், புலம்பெயர் தேசத்திலும் எழுதப்பட்டு வந்துள்ளன இத்தளத்தில் இயங்கும் நாவல்களில் ஒன்றுதான் அண்மையில் வெளிவந்த அலெக்ஸ் பரந்தாமனின் 'கடலலைகளை மேவிய கதை'.

அலெக்ஸ் பரந்தாமன் தனது வாழ்க்கைக் காலங்கள் அனைத்தையும் யுத்தநிலத்திலேயே கழித்தவர். போர் எல்லாத் திசைகளிலும் அவரைத் தூக்கி வீசி அலைக்களித்து, துயரங்களையும் துன்பங்களையும் கொடுத்து மாத்தளன் கடற்கரைவரை நகர்த்திச் சென்றிருக்கிறது. தான் மீளப் போவதில்லை என நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் எதிர்பாராத விதமாக அங்கிருந்து மீண்டு இன்றுவரை யுத்த நிலத்தின் சாட்சியமாக வாழ்ந்து வருபவர். அத்தைகைய சாட்சியங்களின் பதிவாக அவரால் எழுதப்பட்டதே 'கடலலைகளை மேவிய கதை'

'இன்றிலிருந்து, வாழ்வின் மேலும் பல சோகங்களை சுமக்க ஆயத்தமாகும் நாளென்று பரமன் அறிந்திருக்கவில்லை' இவ்வாறுதான் நாவல் ஆரம்பமாகிறது.

இது போர் நிலத்துள் வாழ்ந்த அத்தனை மனிதர்களின் நிலை. யுத்தம் இறுதியில் எதைத் தரப்போகிறது என்ற தெளிவு இல்லாமல் அவர்கள் வாழ நிர்பந்திக்கப்பட்டிருந்தார்கள். அந்த வாழ்க்கை கொடூரமாகவும் கோரமாகவும் அவர்கள் மீது தேங்கி, சுமையாகி, இறுதியில் இழப்போடு நீண்டு முடிந்துபோனது.

ஆயுதவழிப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட அன்றைய காலத்திலும் மக்கள் தங்கள் மீதான அடக்குமுறைகளுக்கும், தங்களுக்கான அநீதிகளுக்கும் விடிவு கிட்டி விடும் என்று நினைத்தார்களே தவிர, ஆயுதத்தின் இயங்கியல் காலத்தில் ஏற்படப்போகும் விளைவுகளையோ அனர்த்தங்களையோ எண்ணத் தலைப்படவில்லை. அதன்விளைவுகள் ஆங்காங்கே காலத்திற்குக் காலம் ஆயுதக் குழுக்களின் உள் முரண்பாடுகள் காரணமாக நிகழ்ந்த கொலைகளும் வன்முறைகளும் சிதறல்களாக வெளிப்பட்டிருந்தாலும் 'புனிதம்' எனும் ஒற்றைச் சொல்லை வைத்து நியாயப்படுத்தலுக்கும் சமாதானத்திற்கும் உட்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், ஒட்டுமொத்த அறுவடையும் முள்ளி வாய்க்காலில் மேற்கொள்ளப்பட்டது என்பதனை அலெக்ஸ் பரந்தாமன் தனது நாவலில் பதிவாக்கியுள்ளார்.

அலெக்ஸ் பரந்தாமனுடைய கதைக்களம் மன்னாரிற்கும் பொக்கனைக்கும் இடைப்பட்டது. இப்பகுதிக்கு உட்பட்ட மக்கள் இராணுவத்தின் நில ஆக்கிரமிப்புப்போரின் விளைவாக நிலையான இருப்பிடமற்று குறுகிய கால எல்லைக்குள் பல்வேறு ஊர்களில் வாழ்விடம் அமைத்து அமைத்து, அலைந்து அலைந்து செல்பவர்கள். அத்தகைய அலைவுகளின்போது அவர்கள் எதிர்கொள்ள நேரிட்ட வாழ்வியல் நெருக்கடிகளையும் வன்முறை நெருக்கடிகளையும் ஒவ்வொரு கதைமாந்தர் வாயிலாக வெளிப்படுத்தி நிற்கின்றார். இங்கு பிரதான கதைமாந்தராக பரமன் விளங்கும் நிலையில், அவர் நகரும் ஒவ்வொரு புள்ளியினூடாக தான் சொல்ல வந்த பேசுபொருளை முன்வைத்துள்ளார். கதையில் உலாவும் பரமன் நாவலின் ஆசிரியர் என்பது அவரது முன்னுரையில் பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் அறிந்து கொள்ள முடிகிறது.
அவர் இவ்வாறு பதிவு செய்கின்றார்:

*'உள்ளதை உள்ளபடி உரைத்துள்ளேன். எனது அனுபவங்களும் என்னோடு இருந்தவர்களின் துயரங்களும் கடலலைகளை மேவிய கதையாக இங்கு நகருகின்றது'*

*'இது ஒரு புனைவு என புலம்புவோர் குறித்து எனக்கு எந்தவொரு அக்கறையும் இல்லை. ஏனெனில், இது வலி அனுபவித்தோரின் வாழ்வியல் கதை' (முன்னுரை, பக் - 06)*.

இதன் வெளிப்பாடு, தன்னுடைய அனுபவமும், கூட இருந்த வர்களின் வலியையும் உள்ளதை உள்ளவாறு சொல்வதாக அமைகிறது. அப்படியென்றால் இது ஒரு சாட்சியப்பதிவு.

அலெக்ஸ் பரந்தாமன் எதனைச் சாட்சியப்படுத்த முனைகி றார் ? இவருக்கு முன் நாவல்களை எழுதிய சில நாவல் ஆசிரி யர்கள் எழுதிய விடயங்களுக்கும் இவர் எழுதியுள்ள விடயங் களுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. விடுதலைப்புலிக ளைப் புனிதர்களாக கட்டுருவாக்கம் செய்யும் முனைப்புடன் இயங்கும் நாவலாசிரியருக்கு மத்தியில் அலெக்ஸ் பரந்தா-மன் அத்தகைய புனிதங்களைத் தகர்த்தெறிந்துள்ளார். நிகழ்த்தப்பட்ட போரிலும் புனிதம் இல்லை, போரை நிகழ்த்தி யோரும் புனிதர்கள் இல்லை என்று, ஒரேயடியாகத் தறித்து வீழ்த்துகிறார். எந்த மக்கள் விடுதலைப்புலிகளை ஒரு காலத் தில் புனிதர்களாகக் கருதினார்களோ அதே மக்கள் மீது விடு தலைப் புலிகள் மேற்கொண்ட வன்முறைகளை மிகுந்த கோபத்துடன் பதிவு செய்துள்ளார். இவருடைய கோபத் தினை விடுதலைப்புலி உறுப்பினர்களை வீரர்கள், மறவர் கள், போராளிகள் என்று உயர்நிலையில் அழைக்க விரும் பாமல் சீருடைக்காரன் என அழைப்பதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

*‘குரல் வந்த திக்கை நோக்கி அவனது பார்வை திரும்புகிறது. கூடவே சீருடைக்காரனும் பார்க்கிறான். (பக்-19)*

*‘தனக்குப் போக்கைக் காட்டிவிட்டு பரமன் தப்பிப் போனதை நினைக்க சீருடைக்கு தாங்க முடியவில்லை போலும், உடனே ஆத்திரத்துக்கு ஒரு வடிகால் தேடுவதற்கு சந்தியில் நின்ற சனங்களுக்கு அடிக்கத் தொடங்கினான்.* (பக் - 19)

குறைந்தபட்சம், தன்னுடைய நாவலில் தான் உருவாக்கிய பாத்திரத்திற்கு ஒரு பெயரை வைத்து அழைக்கக்கூட விருப்ப மற்று இருந்துள்ளார் என்றால், அவர் கொண்டுள்ள கோபம் எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஒரு காலத்தில் தமிழ் மக்களின் அதிக விருப்புக்குரியவர்க ளாக வியந்தும், விருப்போடும் பார்க்கப்பட்டவர்கள் உதாசீ னத்துக்குரிய பாத்திரங்களாக மாறிப்போனது வேதனையைத் தருவதாக இருந்தாலும், அவர்கள் மக்கள் மீது மேற்கொண்ட வன் முறையான அணுகுமுறைகள் அவ்விதம் நோக்க வைத் துள்ளது என்பதனை நாவலினை வாசிப்பதன் மூலம் உணர்ந் துகொள்ள முடிகிறது.

வலுக்கட்டாய ஆட்சேர்ப்பு, முன்னாள் போராளிகள் கட்டாயப் படுத்தப்பட்டு போர்க்களம் அனுப்புதல், நாளாந்த வாழ்வா தாரத்துக்கு ஏங்கி, அடுத்து என்ன செய்வது எனத் தெரியா மல் மரண பயத்தோடு குடும்பத்துக்காக உணவு தேடி வெளி யில் வரும் ஆண்களை அவர்களது நிலையை கொஞ்சமே னும் கருத்தில் கொள்ளாது இழுத்துச் சென்று, களமுனையில் விடுவது, அவர்கள் எங்கு போனார்கள் ? இருக்கின்றார்களா ? இல்லையா ? எனத் தெரியாமல் மனைவியும் பிள்ளைகளும் அவஸ்தைப்படும் நிலைமை, கட்டாய ஆட்சேர்ப்பின் போது எதிர்க்கும் தாயை, தந்தையை, சகோதரரை அடிப்பதும், சுடு வதும் என நீளும் கொடூரங்களே விடுதலைப்புலிகள் மீது மக் கள் வெறுப்புக் கொள்ளக் காரணமாகியது என்பதனை அலெக்ஸ் பரந்தாமன் நாவலில் பதிவு செய்துள்ளார்.

*‘அட நாசமா போனவரே... எங்கேயடா இருக்கிறான் உங்கட தலைவன். ஆமி ஒரு பக்கத்தால அழிக்க வெளிக்கிடுறான், நீங்களும் எங்கள அழிச்சு துடைக்கிறதுக்கோ துவக்கெடுத்த னீங்கள்’... ‘இதனைக் கண்ட சீருடை விரைந்து வந்து அவ ளைப் பெண்ணென்றும் பாராமல் அவளின் வயோதிபத் தன் மையையும் கணக்கெடுக்காமல் பச்சை மட்டையால் அடித்த தும் கிழவி பத்திரகாளியாகவே மாறிவிட்டாள்.* (பக்-19)

இத்தகைய பதிவினை வாசிக்க நேரும் இறுதி யுத்தநிலத்தில் வாழாது பார்வையாளர்களாக இருந்த ஒருவருக்கு அல்லது விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளர் ஒருவருக்கு ஏற்றுக் கொள்ளக் கடினமாக இருக்கும் ‘தலைவர்’, என்றும் ‘தம்பி’ என்றும் ‘அண்ணன்’ என்றும் அதிமதிப்புமிகுதியுடன் அழைக் கப்பட்ட ஒருவரை ‘எங்கடா இருக்கிறான் உங்கட தலைவன்’ என்று ஒருமையில் அழைப்பது ஏற்றுக் கொள்ளக் கடினமா னது ஒன்றுதான்.

‘இராணுவத்தின் கோரத்தாக்குதலால் இருப்பிடங்களை, உற வுகளை இழந்து அலையும் நிலை ஒருபுறம், தாம் தமது மீட் பர்களாக நம்பிய விடுதலைப்புலிகள் தமது பிள்ளைகளை, கணவன்மாரை கேட்க நாதியற்று வலுக்கட்டாயமாக களமு னையில் நிறுத்தி ஓரிரு நாட்களில் பிணமாக கொண்டு வந்து கொடுக்கும் நிலை இன்னொரு புறமென... விரக்தியுற்ற மக் கள் இவ்வாறு மோசமான வார்த்தைகளால் திட்டுவதும் தூற்று வதும் சர்வசாதாரணமான நிகழ்வு. இதனால் ஏற்படப் போகும் பின்விளைவுகள், ஆபத்துகள் பற்றி சிந்திக்கும் ஆற்றலை மூளை இழந்துவிடுவதும் அனுபவத்துக்குரியது.

வன்னியில் இறுதி யுத்த காலத்தில் அங்கு வாழ நிர்ப்பந்திக் கப்பட்ட மக்கள், பல்வேறு துயரங்களை அனுபவித்திருந்தார் கள் என்பதனை அலெக்ஸ் பரந்தாமன் நாவலின் பல இடங்க ளில் பதிவு செய்துள்ளார். இடப்பெயர்வு, உணவுக்கு கஷ்டப் படுதல், பிறரிடம் கையேந்தி நிற்கும் நிலை, மான-வெட்கம் என்பவற்றினை முள்ளிவாய்க்கால் கடலுக்குள் கழற்றிவிட்டு கரையில் பலபேரும் பார்க்க மலம் கழிக்கும் துர்ப்பாக்கிய மான வாழ்க்கை, மருத்துவ வசதியின்மை, மருத்துவமனை மீதான கொடூரத் தாக்குதல்... போன்ற பல துயரங்கள் இவ ரின் நாவலெங்கும் விரவிக்காணப்படுகிறன.

துன்பங்களையும் துயரங்களையும் பதிவு செய்வதுதான் நாவல் ஆசிரியரின் வேலையா ? ஒரு மக்கள் குழுமத்தின் வாழ்வியலைப் பதிவு செய்தல் வேண்டும். அதனை நாவலில் உலாவிடும் பாத்திரங்கள், பதிவு செய்யப்படும் புறச் சூழல் என்பவற்றின் மூலம் இயல்பாகக் கொண்டு வருதல் வேண் டும். அலெக்ஸ் பரந்தாமன் விடுதலைப்புலிகள் யுத்த காலத் தில் அங்கு வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள் மீது பிரயோ கித்த அனைத்து அடக்கு முறைகளையும் கொடுமைகளை

யும் முழுமையாக இந்நாவலில் சொல்லிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டுள்ளார். இது நாவலின் முழுமைத் தன்மையில் சிதைவினை ஏற்படுத்திவிடுகிறது. அவர் தான் உருவாக்கிய அனைத்துக் கதாபாத்திரங்கள் மூலமும் விடுத லைப்புலிகள் தவறானவர்கள், போராட்டம் தவறானது என்று சொல்வதிலேயே முனைப்புக் கொண்டு இயங்கியுள்ளார். உண்மையை நிச்சயமாக மறைக்க முடியாது. ஒரு படைப் பாளி என்பவர் தன்னுடைய அக நியாயத்துக்கு உட்பட்டு யார் பிழை செய்தாலும் அதனை வெளிப்படுத்தவோ தட்டிக்கேட் கவோ துணிவுள்ளவராக இருக்க வேண்டும். ஆனாலும், படைப்பிலக்கியம் என்று வரும் போது இலக்கியத்துக்குரிய அழகியல், மொழி போன்றவற்றிலும் படைப்பு நகரத்தப்படும் நேர்த்தியிலும் கவனம் செலுத்த வேண்டும்.

வெறும் சம்பவங்களின் திரட்சி நாவலாகிவிட முடியாது. மக்க ளின் வாழ்வியல் கூறுகள், பண்பாட்டம்சங்கள், வாழ்நிலை யதார்த்தம், அகநிலை - புறநிலை வாழ்வொழுங்கு எனபவற் றின் கூட்டு வெளிப்பாடே நாவலைக் காத்திரமான வாசிப்பு நிலைக்கு நகர்த்திச் செல்லும். அலெக்ஸ் பரந்தாமனால் பதிவு செய்யப்பட்ட அனைத்து விடயங்களையும் ஏற்கனவே அனுபவித்தவர்கள் அல்லது அறிந்தவர்கள் நாவலினை வாசிக்கும் நிலையில் அவர்களுக்குச் சலிப்புக்கு உண்டா கும் நிலையுண்டு.

சிலர் சொல்வது போல இவற்றை எழுதக்கூடாது என்றும், எழு தியது கண்டிக்கத்தக்கது என்றும் நான் குறிப்பிடவில்லை. எந்த வழியிலும் அந்த வலியை அனுபவிக்காத, அதனைக் கேட்டும் விளங்கிக் கொள்ளும் அறிவுத்திறனற்ற அல்லது வறட்டு கௌரவ நிலைப்படுத்தலுக்கு உட்பட்ட ஒருவர்தான் அவ்விதம் கூறுவார். யாதார்த்த நிலைக்கு உட்பட்ட ஒருவர் அவ்விதம் கூறமாட்டார் என்பது எனது துணிவு. நான் இங்கு சொல்வது அலெக்ஸ் பரந்தாமன் தன்னை நிதானப்படுத்தியி ருக்க வேண்டும். எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும் என்றும், சொல்வதை தனது வரலாற்றுக் கடமை என்றும் கொண்ட ஆவல், அவரை சில இடங்களில் இடறச் செய்துள் ளது. எடுத்துக்காட்டுக்கு ஒரு சில இடங்களைக் குறிப்பிட லாம்.

விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசும், அவர்கள் விடமாட் டார்கள் என்று மார்புதட்டும் பாத்திரமாக வரும் குணாளன் ஒரு குடிகாரன். அவர் திட்டமிட்டுத்தான் அந்தப் பாத்திரத்தை வடிவமைத்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. புத்திநிலை தடுமாறும் ஒருவரால்தான் இவ்வாறு அதீத நம்பிக்கை வைத்து ஆதரிக்க முடியும் என மறைமுகமாகச் சொல்வதா கத் தோன்றுகிறது. இராணுவம் வன்னிக்குள் முன்னேறி வரு கின்ற காலத்தில் 'பெடியள் விடமாட்டாங்கள் அண்ணே' என்று குணாளன் சொல்வது போல் பலதரப்பட்டவர்கள் சொல்லியிருக் கிறார்கள். படித்தவர்கள், படிக்காதவர்கள் எனப் பலதரப்பட்ட வர்கள் இதில் அடங்குவார். அதிலும் சில பெண்கள் தீவிர மாக நின்று வாதாடும் தன்மையும் யதார்த்தமானது. ஆனால் இராணுவம் விசுவமடு, தேவிபுரப் பகுதிக்குக் கால்வைக்கத் தொடங்கிய பிறகு, நம்பிக்கை சிதறிப் போக இவ்வாறு கதைப்பவர்கள் குறைந்து போயிருந்தனர். புதுக்குடியிருப்பை இராணுவம் அண்மித்த பிறகு 'பெடியள் விடமாட்டாங்கள் அண்ணை' என்று ஒருவர் சொன்னால் அவர் அலெக்ஸ் பர-ந் தாமன் வடிவமைத்த பாத்திரத்திற்கு ஒப்பானவர் என்பதில் சந்தேகம் இல்லை. அலெக்ஸ் பரந்தாமன் தனது நாவலில் குணாளனைத் தவிர வேறுபாத்திரங்கள் ஊடாக இத்தகவல்க ளைப் பதிவு செய்திருக்க வேண்டும்.

இன்னொரு இடத்தில் பரமன் வீடு பார்ப்பதற்கு தேவிபுரம் சென்றபோது இராணுவத்திடம் அகப்படும் நிலையில் அங் கொரு இராணுவ இளைஞன் அவன் மீது இரக்கம் கொண்டு வீட்டுக்குத் திருப்பி அனுப்புவதாகவும், போகும் வழியில் விடுதலைப்புலிகளிடம் ஒரு செய்தியைச் சொல்லச் செல்வ தாகவும் பதிவு செய்துள்ளார். இதன் சாத்தியப்பாடுகள் கேள் விக்கு உட்படுத்தக் கூடியது. இராணுவ இளைஞன் பற்றிய பதிவு விடுதலைப்புலிகளையும்விட இராணுவத்தினர் நல்ல வர்கள் என்பது போன்ற தோற்றத்தினை ஏற்படுத்துகின்றது.

*'தனது சுயநலத்திற்காகவும் சுக போக வாழ்க்கைக்காகவும் காட்டிக்கொடுப்பவனாக அந்த இராணுவ இளைஞன் இருக்க வில்லை என்பதனையும், சற்று முன்பு 'நாங்களும் பிள்ளை குட்டிக்காரர்கள்தான், எங்களுக்கும் மனிதம் என்ற ஒன்று இருக்கு என அந்த இளைஞன் கண்கலங்கிய நிலையில் கூறி யதையும் பரமன் நினைத்துப் பார்த்ததோடு...' (பக்-123)* நீளும் வரிகள் இத்தனை காலக் காட்டி கொடுப்புகளையும் தமிழ் மக்கள் மீது இராணுவம் மேற்கொண்ட கொலை வெறிக ளையும் நியாயப்படுத்துவது போன்ற தோற்றத்தைத் தருகி றது. இது விடுதலைப்புலிகளைத் திட்டமிட்டு உதாசீனம் செய்ய முனைவதாகவே எண்ணத் தோன்றுகிறது. இராணுவத் தோடு யுத்தகளம் வந்த ஒருவனை, நல்லவன் என்று சொல் வது உடன்படக் கூடிய விடயமாக தெரியவில்லை.

மக்கள் நம்பிய விடுதலைப்புலிகள் மக்களோடு மிக மோச மாக நடந்து கொண்டார்கள் என்பதற்கு, இன அழிப்பை கொடூரத்தனத்தோடு மேற்கொண்ட இராணுவத்தினரைப் புனி தர்களாகச் சித்தரிப்பது மிகைப்படுத்தப்பட்ட ஒன்று.

வரலாற்றை தவறாக்கியவர்களின் வரலாற்றைத் தவறாகச் சித் தரிப்பது வரலாற்றில் தான்செய்யும் வரலாற்றுத் தவறென அலெக்ஸ் பரந்தாமன் நினைத்துச் செயற்பட்டிருந்தால், மேற் குறிப்பிடப்பட்ட பதிவுகளை மேற்கொள்ளும்போது கூடுதல் அவதானிப்புடன் செயற்பட்டிருக்கலாம். இத்தகைய இடங் கள், வாசகரிடம் நாவல் மீதான நம்பிக்கை இழப்பினை ஏற்ப டுத்தும் சாத்தியங்களை அதிகப்படுத்தும்.

அலெக்ஸ் பரந்தாமன் தன்னுடைய அனுபவத்தினையே பதிவு செய்துள்ளதாகச் சொல்கிறார். வன்னியின் இறுதிக் கள யதார்த்தம் நாவலை வாசிக்கும்போது காட்சியாக விரிகிறது. ஆனால், படைப்பு மனத்தினை அவர் இன்னும் நிதானப்படுத் தியிருந்தால் உயிர்ப்பு மிக்க நாவலாக 'கடலலைகளை மேவிய கதை' உருப்பெற்றிருக்கக் கூடிய வாய்ப்புகள் அதி கம் என்பது என்னுடைய வாசிப்பு அனுப வமாக அமைகிறது.



thana.vishnu@thaiveedu.com

# ஒரு நூலின் உருவாக்கம்: ஆசிரிய - வெளியீட்டாளருக்கான கைந்நூல்

– என். செல்வராஜா



கடந்த மாதப் பதிவில், ஒரு நூலின் பதிப்பு ஆண்டின் முக்கியத்துவம் பற்றி முடிந்தவரை தெளிவாக விளக்கியிருந்தேன். அக்கட்டுரையை வாசித்த வாசக நண்பர் ஒருவர் என்னுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டிருந்தார். அதில் அவர் குறிப்பிட்ட விடயமொன்று கடந்த இதழின் கட்டுரைத் தொடருடன் தொடர்பானதாக அமைவதால், அதன் பின்னூட்டமாக இங்கு அதனை முதலில் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஒரு நூலின் பதிப்பு விபரம் அதன் பின்னைய பதிப்புகளில் குறிப்பிடப்பட வேண்டியதன் அவசியம் பற்றி முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். பெரும்பாலான ஈழத்து நூல்கள் முதற்பதிப்புடன் நின்றுவிடுவதால் இரண்டாம் பதிப்பு பற்றிய கவலை எழுத்தாளருக்கோ பதிப்பாளருக்கோ இருந்ததில்லை. ஆனால், இன்று பெரும்பான்மையான நூல்களின் மீள்பதிப்புகள் தமிழகத்தில் முதற்பதிப்புகளாக அச்சிடப்பட்டு 'மூல நூலின் வயதினைக் குறைத்துக் காட்டப்படுவதால்' அந்நூலின் வரலாற்று முக்கியத்துவம் பாதிக்கப்படுகின்றது.

இதற்கு உதாரணமாக அந்த வாசகர், முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்களின் 'பண்டார வன்னியன்' வரலாற்று நாடகத்தை உதாரணமாகக் காட்டினார். 17 காட்சிகளில் அமையும் பண்டாரவன்னியன் என்னும் வரலாற்று நாடகத்தில் மக்கள் நலனை மனதுட்கொண்டு தேசப்பற்றுடன் வன்னியை ஆண்ட பண்டாரவன்னியனை அவனது நற்பண்புகள் மக்களுக்கு விளங்குமாறு நேருக்கு நேராக இந்நாடகப் பாத்திரத்தின் மூலம் ஆசிரியர் முன்நிறுத்தியிருக்கின்றார். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போர்முரசு கொட்டிப் போரிட்ட வீரமன்னனின் தியாக வரலாறு இது. முள்ளியவளைப் பண்டாரவன்னியன் கழகத்தினால் ஜுன் 1970-ல் முதற்பதிப்பைக் கண்ட இந்நூல் 2-வது பதிப்பை 1972-லும் கண்டது. இதனது மூன்றாவது பதிப்பை வவுனியா வாணி பதிப்பகம் 1999-ல் வெளிக்கொண்டு வந்த நிலையில், சென்னை மணிமேகலைப் பிரசுரம் முதலாவது பதிப்பு என்று குறிப்பிட்டு முல்லைமணியின் 'பண்டார வன்னியன்' வரலாற்று நாடகத்தை 2006ல் பதிப்பித்து வெளியிட்டது 4-வது பதிப்பாக இருக்கலாம். தமிழக வாசகர் முல்லைமணியின் இந்நூலை 2006-ல் எழுதப்பட்டது என்றே நினைப்பர். ஈழத்து படைப்பாளியான முல்லைமணி, கலைஞர் மு. கருணாநிதியின் 'பாயும்புலி பண்டார வன்னியன்' நாவலைத் தழுவியே இதனை எழுதியிருக்கக் கூடும் என்ற எண்ணமும் அவர்களுக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. ஈழத்து வாசகர்கள் கலைஞரின் நாவலுக்கு 1970ல் வெளிவந்த 'முல்லைமணியின் நாடகமே அடிப்படையாக இருந்தது என்பதை உணர்வர். அது உண்மையாகவிருந்தால் ஒரு நூலியல் பதிவில். பதிப்பு விடயத்தில் எமது அக்கறையின்மையால் வரலாற்றில் எவ்வளவு பெரிய தவறுகளை விட்டுச்செல்கின்றோம் என்று ஒவ்வொரு படைப்பாளியும் சிந்தித்தாக வேண்டும்.

அண்மையில் குமரன் புத்தக இல்லத்தினாலும் 2015-ல் இந்த நூல் மீள்பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவர்கள் 'முதற் பதிப்பு-ஆனி 1970 (பண்டாரவன்னியன் கழகம்), மீள்பதிப்பு-2015 (குமரன் புத்தக இல்லம்)' என்று குறிப்பிட்டுள்ளார்கள். இதுவும் ஒரு தீவிர நூலியல் ஆய்வாளரை அல்லது ஒரு நுலகத்தில் பட்டியலாக்கம் செய்பவரை மூலநூலின் இரண்டாவது பதிப்பையே குமரன் பதிப்பகம் வெளியிட்டிருக்கின்றது என்ற தப்பான கருத்தை உள்வாங்க வழிகோலும்.

ஒரு நூலின் பின்னைய ஒவ்வொரு பதிப்பிலும் முன்னைய பதிப்பு விபரத்தை முழுமையாக ஒரு படைப்பாளி வழங்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இங்கு ஒவ்வொரு பதிப்பும் யாரால் வெளியிடப்பட்டது என்பதை குறிப்பிட்டால் மிகுந்த நன்மை பயக்கும். படைப்பாளியின் நேரடித் தொடர்போ, அவர் இறந்த பின்னர் அவரது 'அறிவுசார்ந்த சொத்துக்களின்' பாதுகாவலரின் தொடர்போ, அனுமதியோ இல்லாமல் ஒரு பதிப்பாளர் ஒரு நூலை மீள்பதிப்புச் செய்திருக்க முடியாது. (இது பற்றி விளக்கமாக, நூல்களுக்கான பதிப்புரிமைச் சட்டம் பற்றி பின்னர் எனது தொடரில் குறிப்பிடுகையில் விபரமாகப் பார்க்கலாம்.) அப்படிச் செய்யும் பதிப்பாளர் 'அறிவுத் திருட்டு' என்ற வகையறாவில் சட்டச் சிக்கலையும் எதிர்நோக்க வாய்ப்புள்ளது. எனவே, ஒரு நூலின் பதிப்பு வரலாற்றை நன்கு அறிந்த நூலின் ஆசிரியர் அல்லது அதன் சட்டபூர்வ உரித்தாளர், அவ்விபரங்கள் அனைத்தையும் ஒவ்வொரு பதிப்பிலும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

உதாரணமாகக் குறிப்பிடுவதாயின் பண்டார வன்னியனின் 2015-ம் ஆண்டுப் பதிப்பில் கீழ்க்கண்டவாறு தகவலைப் பதிவுசெய்தல் பொருத்தமாக இருக்கும்:

- 1-ஆம் பதிப்பு, ஆனி 1970 (முள்ளியவளை, பண்டாரவன்னியன் கழகம்)

- 2-ஆம் பதிப்பு, 1972 (முள்ளியவளை, பண்டாரவன்னியன் கழகம்)
- 3-ஆம் பதிப்பு, 1999 (வவுனியா, வாணி பதிப்பகம்)
- 4-ஆம் பதிப்பு, 2006 (சென்னை, மணிமேகலைப் பிரசுரம்)
- 5-ஆம் பதிப்பு, 2015 (கொழும்பு, குமரன் புத்தக இல்லம்)

வெறுமனே மீளச்சு அல்லது மீள்பதிப்பு என்ற சொற்பதங்களுக்குள் நூலின் வரலாற்றுப் பாதையைச் சுருக்கிவிடலாகாது. (இத் தகவல்கள் நூல்தேட்டப் பதிவினை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே தரப்படுகின்றன. மேற்படி உதாரணத்துக்கு எடுக்கப்பட்ட நூலின் மேலதிக பதிப்புகள் வெளிவந்து நூல்தேட்டப் பதிவில் இன்னமும் இடம்பெறாதிருக்கவும் கூடும் என்பதை வாசகர்கள் மனதிற்கொள்ளவேண்டும்).

ஒரு நூலின் நூலியல் தகவல்களைப் பதிப்பகத்திற்கு வழங்கும் ஆசிரியர் பொறுப்புணர்வுடன் சிந்தித்து அவற்றின் பூரணத்துவத்தையும், நம்பகத்தன்மையையும் பதிப்பு வரலாற்றையும் உறுதிசெய்துகொண்ட பின்பே பதிப்பகத்திற்கு அவற்றை வழங்கவேண்டும். நூலியல் தகவல்களைப் பதிப்பாளரோ வெளியீட்டாளரோ பக்க வடிவமைப்புச் செய்யும் ஊழியரோ தேடிப் பெற்றுக்கொள்ளட்டும் என்று தனது முக்கியமான வரலாற்றுப் பொறுப்பைத் தட்டிக்கழிக்கக்கூடாது. பதிப்பாளரும் நூலின் தலைப்புப் பக்கத்தின் பின்பக்கமான வேர்சோ பக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராக இருக்கவேண்டும்.

## அச்சகங்கள்–பதிப்பகங்கள்–வெளியீட்கங்களுக்கிடையேயான வேறுபாடுகள்:

இனி இத்தொடரில் தமிழ்ப் பதிப்புலகச் சூழலில் அச்சகங்கள்-பதிப்பகங்கள்-வெளியீட்டகங்கள் என்பவற்றுக்கு இடையேயான வேறுபாடுகள் பற்றிப் பார்க்கலாம். கணினித்துறையின் மற்றுமொரு பரிமாணமான DTP என்னும் டெஸ்க்டொப் பப்ளிஷிங் (desktop publishing) எனப்படும் கணினிவழிப் பதிப்புத்துறை அறிமுகப்படுத்தப்பட்ட 1983-க்குப் பிற்பட்ட காலத்தில் அச்சுத்துறையில் வர்த்தகரீதியில் பாரிய பாய்ச்சல் ஒன்றை நாம் எதிர்கொண்டோம்.

அமெரிக்காவின் James Davise என்பவர் முதன் முதலில் பிலடெல்பியா மாநிலத்தில் ஒரு சமூகச் செய்தித்தாள் ஒன்றை DTP முறையில் பரீட்சார்த்தமாகக் கணினி வடிவமைப்பில் 1983-ல் அச்சிட்டு வெளியிட்டார். இதுவே பதிப்புத் துறையில் ஒரு பாரிய பாய்ச்சலை தோற்றுவிக்கக் காரணமாயிற்று. DTP தொழில் நுட்பம் 1985-ன் பின்னர் அப்பிள், மக்கின் டொஷ், மைக்ரோ சொப்ட் போன்ற நிறுவனங்களின் போட்டி வர்த்தகத்துக்குட்பட்டு துரிதமான வளர்ச்சிகண்டு, இன்று பதிப்புத்துறையில் தவிர்க்கமுடியாததொரு தொழில்நுட்பமாகப் பரிணமித்துள்ளது. அதன் வளர்ச்சி முன்னைய பாரம்பரிய ஈய அச்சுப்பொறிமுறைக்கு இடமில்லாமல் செய்துவிட்டது. உலகெங்கிலும் உள்ள அச்சுக்கோப்பாளர் என்ற ஒரு தொழிலாளர் வர்க்கத்தையே நவீனத்துவ அச்சாக்கம் இல்லாதொழித்துவிட்டது.

1980களுக்கு முன்னர் ஒரு நூலின் உருவாக்கத்திலிருந்து அது வாசகர் கைகளை அடையும் வரை பஞ்சபூதங்கள் போன்று ஐந்து பதிப்புலகக் கூறுகளின் கைகளினூடாக நூலுருவாக்கம் பயணித்தாக வேண்டியிருந்தது.

- நூலை ஆக்கும் படைப்பாளி (Author).
- அதனை வெளியிடும் பொறுப்பை ஏற்கும் வெளியீட்டு நிறுவனம் (Publisher).
- அதனை அச்சிட்டு வெளியீட்டாளருக்கு வழங்கும் அச்சகம் / பதிப்பகம் (Printer).
- நூலை விநியோகம் செய்யும் விநியோக நிறுவனம் (Distributor).
- நூலின் பயனாளி-வாசகர் (End Reader/User)

என்று ஒரு தெளிவான சிக்கலற்ற பாதையிலேயே ஒரு நூலின் பயணம் அமைந்திருந்தது.

பின்னாளில் அது நவீனத்துவமாக்கப்பட்ட அச்சுக்கலையின் வசதிகளாலும், சிக்கலான வெளியீட்டுப் பொறிமுறைகளாலும், உள்ளக விநியோக முறைமைகளினாலும் சிக்கல் மிகுந்ததாகிவிட்டது. இலங்கையின் எழுத்தாளர்களைப் பொதுவாக ஆசிரியர் (Author) என்றழைப்பதைவிட ஆசிரிய வெளியீட்டாளர் (Author -Publisher) என்றே அழைப்பதைக் கண்டுள்ளோம். அது மட்டுமல்லாமல் ஒரு கணினியை மாத்திரம் வைத்திருக்கும் ஒரு தொழில்நுட்பவியலாளர் தன்னை ஒரு 'நூல்வெளியீட்டாளர்' என்று அழைக்கும் நிலைமையையும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சி இலங்கையில் எமக்குக் காட்டிவருகின்றது. வெளியீட்டாளருக்கும் அச்சகத்தார் அல்லது பதிப்பாளருக்கும் வேறுபாடு காண முடியாதவாறு ஒன்றுடன் ஒன்று கலந்து போயிருப்பதால், எம்மவர்களிடையே பதிப்பகமும் அச்சகமும் ஒன்றையே குறிக்கும் வெவ்வேறு சொற்கள் என்பதை புரிந்துகொள்ள முடியாதவர்களாக உள்ளனர். அச்சுத்துறையில் பயன்படும் 'அச்சுக் கோர்ப்பு' என்ற பதம் போலவே மற்றும் ஒரு கலைச்சொல்லான 'அச்சுப் பதிப்பு' என்ற வினை அடியிலிருந்தே அச்சகமும், பதிப்பகமும் உருவாயிற்று.

இன்று கொழும்பில் இயங்கும் எத்தனை பதிப்பகங்கள் மற்றும் வெளியீட்டகங்களிடம் தமக்கென்று உரிமையான ஒரு அச்சக வசதி இருக்கின்றது என்று நீங்கள் ஆராயப் புகுந்தால் அதிசயப்படுவீர்கள். இன்று ஒரு கணினியுடனும் அதனுடன் இணைந்த நவீன பாரிய பல்நோக்கு போற்றொஸ்ரற் பிரதி இயந்திரத்துடனும் சில வெளியீட்டகங்கள் இயங்குகின்றன.

இலங்கையிலும் சரி, தமிழகத்திலும் சரி, நூல்வெளியீட்டாளர்களில் பலருக்கு சொந்தமாக அச்சக வசதி இருப்பதில்லை. தட்டச்சாளர் / பக்க வடிவமைப்போர், சரவை பார்ப்போர், கறுப்பு வெள்ளை அச்சகம், வண்ண அட்டைக்கான அச்சகம், மட்டை கட்டுவோர், கரைவெட்டிச் செப்பனிடுவோர் என்று ஒவ்வொரு சிறு பிரிவும் முன்னர் ஒரே கூரையின்கீழ் இருந்தது போன்ற நிலை இன்றில்லை. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான தனி மனித நிறுவனங்கள் இயங்கிவருகின்றன.

வெளியீட்டாளர், படைப்பாளியுடன் தொடர்பு கொண்டு கையெழுத்துப் பிரதியைப் பொறுப்பேற்றுக்கொண்டதும் அது தனித் தனித் தொழிலகங்களுக்கும், துறைசார் பணியாளருக்கும் துணை ஒப்பந்தத்தின் கீழ் நமது 'வெளியீட்டாளரால்' வழங்கப்படுகின்றது. அனைத்துப் பணிகளையும் ஒழுங்கமைப்பது தான் வெளியீட்டாளரின் பாரிய பொறுப்பாகின்றது. ஆசிரியருடன் பணக்கொடுக்கல் வாங்கல்களை வெளியீட்டாளரே பொறுப்பேற்றுக் கொள்கின்றார். படைப்பாளிக்கும் வெளியீட்

டாளருக்குமிடையே தான் வடிவமைப்பு, திருத்தம் உட்பட அனைத்துத் தொடர்பாடல்களும் இருக்கும். துணை ஒப்பந் தக்காரர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொண்டு நூலின் உருவாக்கத்தை ஒவ்வொரு கட்டத்திலும் நடத்திச் செல்லும் முயற்சியாளராகவே 'நமது வெளியீட்டாளர்' இயங்குவார்.

இதில் நன்மை என்னவென்றால், ஒவ்வொரு துறையிலும் தனி யொருவர் ஒரே வேலையில் மீண்டும் மீண்டும் ஈடுபடுவத னால் தனித்துவ அனுபவம், மற்றும் அத்துறைசார்ந்த ஆழ




மான அனுபவ அறிவு வளர்ச்சியை பெற்றுள்ளவர்களாக அவ் வப் பணியாளர்கள் இருப்பர். அதனால் நூல் சிறப்பான முடி வுப் பொருளாக வெளிவருகின்றது. அவ்வத் துறைகளில் மேலதிக முதலீடுகளைச் செய்து சில நிறுவனங்கள் மற்ற வற்றை விட அத்துறையில் முன்னேறிச் செல்கின்றன. இதி லுள்ள தீமைகள் என்னவென்றால், படைப்பாளியின் நூலாக் கத்துக்கான செலவினம் அதிகமாகின்றது. பிரதியின் விலை யும் அதன்காரணமாக அதிகரித்தே ஆகவேண்டிய நிலை தோன்றுகின்றது. ஒரு பிரிவின் பணியாளரிடம் கொடுக்கப் பட்ட வேலை தவிர்க்கமுடியாத காரணங்களால் நகராமல் சிக் கிக்கொண்டால் நூலின் அடுத்தகட்ட நகர்வு அதனால் தாம திக்கப்படுகின்றது. அந்தத் தாமதம் தொடருந்து போல (KnockonEffect) மற்றைய பணிகளைச் செய்யும் துறையின ரையும் பாதிக்கச்செய்கின்றது. அதனால் முதலில் படைப்பா ளியிடம் ஒப்புக்கொண்ட திகதிக்கு நூலை முடித்து வழங்கவி யலாத நிலையில் வெளியீட்டாளர் தவிப்பார்.

ஐரோப்பிய நாடுகளில் நூலாக்க அனுபவம் வேறானது. முற்றி லும் வர்த்தக நோக்கம் கருதியது. நூலாசிரியர் ஒரு நூலை எழுதி கையெழுத்துப் பிரதியுடன் ஒரு வெளியீட்டாளரை அணுகுகின்றார். அந்த வெளியீட்டாளர் நூலின் வர்த்தக வாய்ப்புகளை ஆராய்ந்து அது தனக்கு இலாபகரமானதா கவோ மக்களிடம் எளிதில் சென்றடையக்கூடிய சுவையான, கவர்ச்சியான விடயதானத்தை உள்ளடக்கியுள்ளதாகவோ கருதினால் படைப்பாளியுடன் ஒரு எழுத்துமூலமான ஒப்பந் தத்தைச் (Author-PublisherAgreement) செய்துகொள்வார். (இலங்கையில் தமிழ்நூல் பதிப்புத் துறையில் இத்தகைய எழுத்துமூலமான ஒப்பந்தங்கள் பெரிதளவில் இருப்பதாகத் தெரியவில்லை).

குறித்த ஒப்பந்தத்தில் அந்த நூலுக்காக வெளியீட்டகம் படைப்பாளிக்கு வழங்கும் ஒட்டுமொத்தமான பணத்தொகை, அது எவ்வாறு வழங்கப்படும் என்பது பற்றி, அல்லது வெளியி டப்படும் பிரதிகளுக்கேற்ப ஒவ்வொரு பதிப்புக்குமான வரு டாந்த ரோயல்டி தொகை, அல்லது இரண்டும் சேர்ந்த ஒரு கலப்பு உடன்படிக்கை என்பன உள்ளடங்கும். அறுதியாக ஒரு விலைகொடுத்து அந்த நூல் படைப்பாளியிடமிருந்து வெளியீட்டாளரால் கொள்வனவு செய்யப்பட்டால் பதிப்புரிமை பெரும்பாலும் வெளியீட்டகத்துக்கு உரியதாகிவிடும். மீள்ப திப்புரிமை எவ்வளவு காலத்திற்கு வெளியீட்டகம் தனக்குரி மையாக வைத்திருக்கலாம் என்ற விடயங்கள் முன்னர் குறிப் பிட்ட ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். அத்தகைய குறிப்புகள் ஒப்பந்தத்தில் இடம்பெறாவிடில், நூலின் மீள் பதிப்புரிமை குறிப்பிட்ட காலத்தின் பின்னர் படைப்பாளிக்குரியதாகும். இது தெளிவாக வேர்சோ பக்கத் தில் வெளியீட்டாளரினால் குறிப்பிடப்படும். நூலை வெளியீட் டகம் பணம் செலுத்திக் கொள்வனவு செய்ததும் படைப்பா ளிக்கும் நூலின் அந்தப் பதிப்புக்கும் தொடர்பு அற்றுப் போய் விடுகின்றது. படைப்பாளி உலக அரங்கில் கொண்டிருக்கும் மதிப்பு, வாசகர் எண்ணிக்கை என்பன இவ்வொப்பந்தத்தின் சரத்துக்களைத் தீர்மானிக்கும் வலிமையை இருசாராரில் ஒரு வருக்கு வழங்கும். இலங்கையில் படைப்பாளிகள் எவரும் தமது கையெழுத்துப் பிரதிகளை வெளியீட்டாளரிடம் விற் பனை செய்யாததால், பதிப்புரிமை எப்போதும் படைப்பாளிக் குரியதென்பது ஒரு எழுதாச் சட்டமாகிவிட்டது.

ஒருவேளை ஆக்கியோன் பல்வேறு புறக் காரணிகளால் தனது நூலை வெற்றிகரமாக ஒரு வெளியீட்டாளரிடம் விற் பனை செய்ய முடியாது போனால், அவர் நேரடியாகப் பதிப் பாளர் ஒருவரை நாடுவார். அச்சுப் பதிப்பாளர் அந்த நூலின் தரம் பற்றிய கவலையோ, விற்பனைக்கான சந்தை வாய்ப் பின் சாத்தியக்கூறுகள் பற்றியோ அக்கறை கொள்ளமட்டார். அவர் அந்த நூலை படைப்பாளியின் விருப்பத்துக்கேற்ப, அவர் குறிப்பிடும் எண்ணிக்கையான பிரதிகளை அச்சிட்டு வழங்க ஏற்படும் செலவுத் தொகையை படைப்பாளியிடமி ருந்து முற்பணமாகவோ பகுதி அடிப்படையிலோ பெற்றுக் கொண்டு நூலை அச்சிட்டு வழங்குவார்.

அபிவிருத்தி அடைந்த ஐரோப்பிய நாடுகளாயின், அதன் பின்னர் படைப்பாளி தனக்குப் பொருத்தமான, இணக்கமான தொரு விநியோக நிறுவனத்திடம் நூலின் பிரதிகளை வழங்கி விநியோகப் பொறுப்பினையும் விற்பனைப் பொறுப்பினையும் அவர்களுக்கே வழங்குவார். அந்நிறுவனம் நூலைத் தன் விநி யோக வலையமைப்புகளின் மூலம் விற்பனை செய்து ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கொமிஷனைப் பெற்றுக்கொண்டு காலத்துக்குக் காலம் ஆசிரியருக்கு விற்பனைக்கான வரு டாந்த உரிமைத் தொகையான ரோயல்ட்டியையும் வழங்கிவ ருவர். நூலை ஊடகங்களில் விளம்பரம் செய்யும் பொறுப்பி னையும், கண்காட்சிகளினூடாக அறிமுகப்படுத்தும் பொறுப்

பினையும், நூலகங்களுக்கோ, நூல்விற்பனையாளர்களுக்கோ வழங்கும் பொறுப்பினை யும், நூல் விநியோக நிறுவனங்களே ஏற்றுக்கொண்டு படைப்பாளியின் சுமைதாங்கியாக மாறிவிடுகின்றது. உலகளாவிய ரீதியில் பொது நூலகங்களுக்கான கூட்டுக் கொள்வனவுகளை இத்தகைய விநியோக நிறுவனங்களினூடாகவே உள்ளூராட்சி மையங்கள் மேற்கொள்வதால், இத்தகைய விநியோக நிறுவனங்களின் பணி இலகுவாகிவிடுகின்றன.

இலங்கையில் இந்த நடைமுறையினை முயற்சிசெய்ய ஏற்கெனவே விநியோக வலையமைப்பைக் கொண்ட தேசிய பத்திரிகை நிறுவனங்கள் கூட முன்வருவதில்லை என்பது கவலைக்குரியது. நாம் இதற்கான காரணங்கள் பலவற்றைக் குறிப்பிடலாம். அவற்றுட் சில...

- இங்கு நூலின் ஆசிரியரே குறித்த நூலின் வெளியீட்டாளராகவும் (Author-Publisher) இயங்குகின்றார். காரணம், இலங்கையில் ஆசிரியரிடம் முற்பணமாகப் பணத்தை வழங்கி நூலின் அச்சு, வெளியீட்டு, விநியோகப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் நூல்வெளியீட்டுச் சூழல் ஆரோக்கியமானதாக இல்லை. தம்மை வெளியீட்டகங்கள் என்று தாமே இனம்காணும் அனைத்து வெளியீட்டகங்களும் தனிமனிதத் தலைமையிலான அச்சீட்டு நிறுவனங்களாகவே இயங்குகின்றன. கூட்டு முயற்சியில் இயங்கி பெரும் முதலீட்டை தமது நிறுவனத்தில் ஈடுபடுத்தும் வாய்ப்பினையோ, நூல்களை ஆசிரியர்களிடமிருந்து கொள்வனவு செய்து இலாபமீட்டலாம் என்ற மனத்துணிவையோ அற்றவர்களாகவோதான் இவர்கள் இயங்குகின்றார்கள்.
- இலங்கையில் முறையான நூல்விநியோகப் பொறிமுறைகள் எதுவும் இல்லாத நிலையும் நூல் வெளியீட்டுத்துறையின் நலிவுக்குக் காரணமாகும். இலங்கையில் நூல்களைத் தாமே தேர்வுசெய்து, கொள்வனவு செய்யும் தகுதிகொண்ட தமிழ் நூலகங்கள் என்று பார்த்தால் மாநகர, நகராட்சி மன்றத்தின் கீழ் இயங்கும் பொது நூலகங்கள், பிரதேசசபைகளின் கீழ் உள்ளூராட்சி மன்ற நிதியுதவியுடன் இயங்கும் பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், தனியார் நூலகங்கள் என சுமார் 600 நூலகங்களைப் பட்டியலிடலாம். இவற்றுக்கான நூல் விநியோகத்துக்கான பொதுத்திட்டங்கள் எதுவும் இலங்கையிலுள்ள தமிழ் நூல் வெளியீட்டகங்களிடம் கிடையாது. ஆண்டிறுதியில் குறுகியகால அறிவுறுத்தல் களின்கீழ் திடுதிப்பென்று கிடைக்கும் ஒதுக்கீட்டுப் பணத்தொகைக் கேற்ப ஓடிச்சென்று புத்தக நிலையங்களில் அவ்வேளையில் தட்டுகளிலுள்ள நூல்களைச் சகட்டுமேனிக்கு அள்ளிக் குவிக்கும் நூல்கொள்வனவு அதிகாரிகளே நூலகங்களுக்கான நூல் கொள்வனவாளர்களாக-தனிமனிதர்களாக வீற்றிருக்கிறார்கள். திட்டமிட்ட நூல்கொள்வனவு என்ற விதிகளெல்லாம் நூலகவியல் பாடப் புத்தகங்களுடனும், நூலகத்துறையின் விரிவுரைகளுடனும் முடங்கிவிடுகின்றன.
- இலங்கையில் தனித்துவமான நூல்வெளியீட்டுக் கலாச்சாரம் ஒன்றுண்டு. ஒரு நூலை எழுதுபவர் தனது ஆத்ம திருப்திக்காகவே எழுதும் சம்பிரதாயம் ஈழத்தமிழர்கள் மத்தியில் ஆரம்பம் முதலே ஆழ வேரூன்றியுள்ளது. வர்த்தக நோக்கில் இயங்கும் முழுநேரப் படைப்பாளிகளைத் தமிழகத்திலேயன்றி, இலங்கையில் - அதுவும் தமிழ்ச் சூழலில் காணமுடியாதுள்ளது.

பெரும்பான்மையான படைப்பாளிகளுக்கு நூல் வெளியீடு என்பது கௌரவத்தையும், தனித்துவ அடையாளத்தையும் சமூகத்தில் ஈட்டிக்கொள்ளும் ஒரு வழிமுறையாகவே உள்ளது. அறிவுஜீவிகளைப் பொறுத்தமட்டில் முன்னோரால் தமக்கு வழங்கப்பட்டதும், அனுபவ வயப்பட்டதுமான தமது அறிவுத் தேட்டத்தை தமது மாணவர்களுக்கு முதுசொமாக வழங்கிச்செல்லும் ஒரு வழிப்பாதையாகவே நூல்வெளியீடு அர்த்தப்படுகின்றது. நிறுவனங்களைப் பொறுத்தவரை தமது நிறுவனம்சார் வெளியீடுகள் தமது பணிகளுள் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது. ஆக, ஒவ்வொருவருக்கும் தான், நூலொன்றைச் சமுகத்துக்கு உருவாக்கிச் செல்லவேண்டும் என்ற எண்ணமே பிரதானமாகத் தோன்றுகின்றது. தம் நூல் தமது கிராமத்தையோ மாவட்டத்தையோ விட்டு வாசகர்களை நாடி வெளியே செல்கின்றதா? அது எங்காவது ஆவணப்படுத்தப்படுகின்றதா? தனது பிரதேச நூலகத்திலாவது அது போய்ச் சேர்ந்துள்ளதா என்பதையெல்லாம் படைப்பாளி சிந்தித்துச் செயலாற்றுவது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. தனது நூல் அச்சிடப்பட்டதும் பத்திரிகையில் அந்நூல் பற்றிய ஒரு அறிமுகம் வந்தால் விற்பனை தானாக நடந்தேறும் என்ற கனவுடன் வாழும் படைப்பாளிகளை இன்றும் எம் மத்தியில் நாம் கண்டும் கடந்தும் கொண்டே இருக்கின்றோம். தமது நூலுக்கு ஒரு வெளியீட்டு விழாவை வைத்து அன்றைய தினம் வந்தோருக்குத் தனது நூலை வழங்கி மகிழ்வதற்கும், ஒரு சில பேச்சாளர்களின் வாயால் வாழ்த்துகளைப் பெறுவதற்கும் அப்பால் படைப்பாளியிடம் தனது நூல் தொடர்ந்து பலரது கைகளைச் சென்று அடையச் செய்யவேண்டும் என்ற எந்தவொரு அக்கறையோ, வாய்ப்போ இருப்பதாகத் தெரியவில்லை.

அந்த அக்கறையின்மையே இன்று வாசிப்புக் கலாச்சாரமும், ஈழத்துப் பதிப்புலகமும் நலிந்து செல்வதற்கு ஒரு காரணம் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். எழுத்தாளர்களிடையே விழிப்புணர்வினையும், உற்சாகத்தையும், வெளியீட்டுத்துறை சார்ந்த அடிப்படை அறிவையும் வளர்ப்பதில் அறிவுஜீவிகளும் கல்வியியலாளர்களும் அக்கறையுடன் செயற்படல் வேண்டும்.

எழுத்தாளர் சங்கங்களை உருவாக்குவதில் நாம் காட்டும் அக்கறையில் ஒரு பங்கை, பல்வேறு கருத்தியல்களுடன் தனித்தனித் தீவுகளாக வாழும் எழுத்தாளர்கள், கலை-இலக்கிய அமைப்புகளை ஒருங்கிணைத்து, நாடளாவிய ரீதியில் நூல் விநியோக / விற்பனைச் சங்கமொன்றை உருவாக்கும் வழிமுறைகள் பற்றி ஆராயவேண்டும். வெறுமனே எம்மிடையே வாசிப்புக் கலாச்சாரம் குறைகின்றது, பதிப்புத்துறை நலிவடைகின்றது என்று வெற்றுக் கோஷமிடுவதில் எவ்வித மான நன்மையும் ஏற்படப் போவதில்லை.

அண்மைக்காலங்களில் வேகமெடுத்துள்ள புத்தகச் சந்தைகள் சற்று ஆறுதலை எம்மவர்களுக்கு அளிப்பதாயுள்ளன.

(இன்னும் வரும்)



selvarajah.n@thaiveedu.com




மகாவம்சத்தின் 6-வது தொகுதியானது 1978-2010 வரையான காலத்தைப் பற்றி பேசும் தொகுதி. இறுதியாக வெளிவந்த 6வது தொகுதி 'மகாவம்சம்' 1978- 2010 காலத்தைப் பற்றியது. ஜே.ஆர். காலம் தொடக்கம் மகிந்த ராஜபக்ச காலம் வரையானது அது. அதாவது ஈழப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து முள்ளிவாய்க்கால் முடிவு வரையிலானது. இதில் தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியப்படும் பகுதி 'பயங்கரவாதம்' என்கிற தலைப்பில் எழுதப்பட்டுள்ள பகுதியாகும்.

இந்த காலப்பகுதியில் ஆட்சி செய்தவர்களின் 'பாதுகாப்பு' அத்தியாயங்கள் மட்டும் இங்கே தொடராக வெளிவருகின்றன. ஜே.ஆர். பிரேமதாச, டி.பி. விஜேதுங்க, சந்திரிகா ஆகியோரின் காலத்தைப் பதிவு செய்கிற அத்தியாயங்கள் மூன்று மாதங்களாக தாய்வீட்டில் வெளியாகின. அந்த வரிசையில் இது இறுதி அத்தியாயம். மகிந்த ராஜபக்சவின் ஆட்சி காலத்து யுத்த நிலைமை பற்றியது.

இன்னும் சொல்லப்போனால் இறுதி யுத்தம் பற்றிய அரச பதிவுகள். மகாவம்சத்துக்காக இவ் அத்தியாயத்தை எழுதித் தருவதற்காக இறுதி யுத்தத்தில் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளும், இன்னும் சில சிங்கள நிபுணர்களையும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இதுவரை வெளியான மகாவம்சத் தொகுதிகளில் இத் தொகுதி தமிழர்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதைப்போலவே இந்த தொகுதியில் உள்ள இந்த அத்தியாயம் அதைவிட முக்கியமானது.

தமிழர்களின் அரசியல் அபிலாசை, அதற்கான போராட்டம், பற்றிய அரசின் கொள்கை என்ன? வியாக்கியானம் என்ன? இதற்கு அரசு வினையாற்றிய விதம் என்பவற்றை அறிவதற்கு இந்த தொகுதியில் பயங்கரவாதம் என்கிற பகுதி தமிழில் மொழிபெயர்த்து உங்களிடம் தருகிறோம்.

**179.** 2007-2009-ஆம் ஆண்டில், பாதுகாப்புப் படையினரின் கவனத்தை மோதல்கள் நிகழ்ந்துகொண்டிருந்த பகுதிகளுக்கு வெளியே உள்ள பகுதிகளை நோக்கி திசைதிருப்ப ஒரு தந்திரோபாயத்தைப் பயன்படுத்தி பயங்கரவாதிகள் தொடர்ச்சியான கொலைகளையும் சொத்துச் சேதங்களையும் மேற்கொண்டனர். அதன்படி, 2007 ஜனவரி 05-ஆம் திகதி, நிட்டம்புவ - கிரிஎல்ல வீதியில் பயணிகள் போக்குவரத்து பஸ் மீது குண்டு ஒன்றை வெடிக்கவைத்ததில் ஐந்து பயணிகள் கொல்லப்பட்டதுடன் அம்மாத 6-ஆம் திகதி காலி சீனிகம பகுதியில் கொழும்பு-மாத்தறை பஸ் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். 2007 ஏப்ரல் 04 அன்று, அம்பாறை கொண்டைக்கட்டுவானில் அம்பாறை -பதுளை பயணிகள் பஸ் மீது குண்டு வெடிக்க வைத்ததில் 14 பேர் கொல்லப்பட்டனர், நவம்பர் 26 அன்று, நுகேகொடை சந்தைக்கு எதிரில் குண்டு வெடிக்கவைத்ததில் டிசம்பர் 05 அன்று, அனுராதபுரம், அபிமண்ணுவர, ஜனகபுர நோக்கிச் சென்ற பஸ் ஒன்றில் குண்டு வெடிக்கவைத்ததில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

ஜனவரி 16, 2008 அன்று, மொனராகலை ஒக்கம்பிட்டியில் இருந்து புத்தளம் நோக்கிச் சென்ற பயணிகள் போக்குவரத்து பஸ் மீது கிளைமோர் குண்டுகள் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 27 பேர் கொல்லப்பட்டனர். 2008-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பயணிகள் பேருந்து மீது குண்டு வீசப்பட்டதில் 4 பேர் கொல்லப்பட்டனர். பெப்ரவரி 2, 2008 அன்று தம்புள்ளை-மாத்தளை பேருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பஸ் ஒன்றில் குண்டு வெடித்ததில் சிலர் கொல்லப்பட்டனர். அதே மாதம் 3-ஆம் திகதி கொழும்பு புகையிரத நிலையத்தினுள் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 9 டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி மாணவர்கள் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர். அதே மாதம் 4-ஆம் திகதி, நிக்கவெவ வெலி ஓயாவில் ஒரு பஸ் வெடித்ததில் எட்டு பேர் கொல்லப்பட்டனர். அதே மாதம் 6-ஆம் திகதி கம்பஹா வெலிவேரியில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மற்றும் 10பேர் தற்கொலை குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

2008-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 11பேர் கொல்லப்பட்டனர். ஏப்ரல்25, 2008 அன்று, கொழும்பு பிலியந்தலையில் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் வெடித்ததில் 12பேர் கொல்லப்பட்டனர். மே 8 அன்று, அம்பாறை கடிகார கோபுரத்திற்கு அருகில் ஒரு குண்டு வெடித்தது. அதே மாதம் 26-ஆம் திகதி கொழும்பு தெ

ஹிவளை புகையிரத நிலையத்தில் ரயிலுக்குள் குண்டு வெடித்ததில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். கட்டு பெத்த பல்கலைக்கழகத்திற்கும் கொழும்பு சைலபிம் பாராம விகாரைக்கும் இடையில் 06-ஆம் திகதி பயணி கள் பஸ் ஒன்றில் கிளெமோர் குண்டு வெடித்த தில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

2008 ஜுலை 11 அன்று, புத்தளத்தில் இருந்து கதிர் காமம் நோக்கி சென்ற பஸ் ஒன்று வெடித்ததில் நான்கு பயணிகள் கொல்லப்பட்டனர். 2008 ஒக்டோபர் 6 அன்று, வட மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் கே.ஜே.சி.பெரேரா உட்பட 26 பேர் அனு ராதபுரத்தில் ஒரு தற்கொலைக் குண்டுதாரியினால் கொல்லப்பட்டனர்.

2009 பெப்ரவரி 09-ஆம் திகதி கிளிநொச்சி புளியம் பொக்கனையில் இடம்பெயர்ந்தவர்களை சோதனை யிட்டுக் கொண்டிருந்த பாதுகாப்புப் படையினர் ஓர் தற்கொலைக் குண்டுதாரியால் ஏவப்பட்டதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். அந்த மாதம் 10-ஆம் திகதி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் பாதுகாப்பு படையின ரிடம் திரும்பிக் கொண்டிருந்த இடம்பெயர்ந்த மக்கள் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 19 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அதே நாளில் அக்கு ரஸ்ஸ கொடபிட்டிய ஜும்மா பள்ளி வாசலின் மீது நடத் தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். அதன் போது அரசாங்க அமைச் சரான மஹிந்த விஜேசேகர தலையில் பலத்த காயம் ஏற் பட்டதோடுஅவர் நிரந்தர ஊனமுற்றவரானார்.

வன்னி போர் முனையில் உள்ள A9 பாதையின் மேற்குப் பகுதி புதர்கள் நிறைந்த அடர்ந்த காடுகளைக் கொண்ட சேற்று சமவெளியாக இருப்பதால், குறிப்பாக மழைக்கா லத்தில் நடப்பது மிகவும் கடினம். 2007-ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், வன்னி நடவடிக்கை தொடங்கப்பட் டபோது, பருவ மழை தொடங்கியதால், 57 மற்றும் 58 படைப்பிரிவுகள் காடுகளாக இருந்த A9 பாதையின் கிழக்கை நோக்கி மிக மெதுவாக முன்னேற முடிந்தது. எல்.ரீ.ரீ.ஈ.யின் தலைநகராகப் பேணப்பட்டு வந்த கிளி நொச்சிக்கு தெற்கே காடுகள் இருந்ததால் பீரங்கிகளின் பயன்பாடு எளிதாக இருக்கவில்லை. அதற்கமைய பாது காப்புப் படையினரின் இராணுவ உத்திகள் இந்தச் சூழலுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டியிருந்தது.

183. பெரிய படைபிரிவுகளும் படையணிகளும் இருந்த அதே வேளை போர் முனைக்குச் செல்வதே இராணுவத்தால் பின்பற்றப்பட்ட பிரதான தந்திரோபாயமாக இருந்த போதிலும், அந்த தந்திரோபாயத்தில் விசேட பயிற்சி பெற்ற இராணுவ அதிகாரிகள் அந்த முறைக்கு பதிலாக வன்னிப் பிரதேசத்தில் நிலவும் சூழலுக்கு 'சியோட்' குழு அமைப்பு மிகவும் பொருத்தமானது என்று கருதினர். அந்த நேரத்தில் இராணுவத்தின் நடுநிலை அதிகாரி களாக இருந்த பிரிகேடியர் சாகி கால்லகே, இஸ்ரேலில் பயன்படுத்தப்பட்ட முறையின் 'மாதிரி'யான "சியொட்" அமைப்பின் பயிற்சியைப் பெற்றிருந்ததுடன், மாதுரு ஓயா முகாம் மற்றும் பிற இராணுவ குழுக்களுக்கு தொடர்புத்துறை, பாலங்களையும் கால்வாய்களையும் தகர்த்தல், விமானங்களுக்கு இலக்குகளை வழிகாட் டுதல், இலக்குகளை நோக்கிச் சுடுதல், பீரங்கித் தாக்கு தலுக்கு இலக்குகளை வழிகாட்டுதல். இரவு சண்டை போன்றவற்றுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆரம் பத்தில் குறைந்த எண்ணிக்கையிலான நபர்களுக்கே இப்பயிற்சி அளிக்கப்பட்ட நிலையில், பின்னர் அதிக எண்ணிக்கையிலான இராணுவத்தினருக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த முறைமையின் கீழ், ஒரு முழுப் படையணி அல்லது இராணுவப் பிரிவு ஒரே நேரத்தில் போர் முனைக்குச் செல்வதற்குப் பதிலாக, படையணி ஒரு பாதுகாப்பு வலயத்தில் தங்கியிருக்கும் மற்றும் 08 பேர் கொண்ட பல 'சியோட் ' குழுக்கள் 48 மணிநேரத்திற்கு முன்னோக்கி அனுப்பப்பட்டது. ஒவ்வொரு குழுவும் ஒரு நாளைக்கு ஒரு பயங்கரவாதியையேனும் கொன்றுவிடு வதும், 48 மணி நேரத்திற்குப் பிறகு, ஆரம்ப பாது காப்புக் கோட்டில் இருந்த படையணி முன்னேறி, ஆரம்ப 'சியொட்' குழுக்களை மாற்றுவதும் நடவடிக்கை களின் இலக்குகளாகும். கிழக்கு மாகாணத்தில் மனிதா பிமான நடவடிக்கையின் போது இந்த முறை ஓரளவிற்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது வன்னியின் இயற் கைக்கு பொருத்தமானது என்பதால் அந்நடவடிக் கையில் பரவலாக செயல்படுத்தப்பட்டது.

எல்.ரீ.ரீ.ஈ. பயன்படுத்திய உத்திகள் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்பலத்திற்கும் வன்னிப் பிரதேசத்தின் நிலத்தின் தன் மைக்கும் பொருத்தமாக வடிவமைக்கப்பட்டன. அவற் றில் முக்கியமானது கண்ணிவெடிகள் மற்றும் மரணப் பொறிகள் மற்றும் நீர் அகழிகளுடன் கூடிய மண் கரை களை நிர்மாணிப்பது ஆகியவை அடங்கும். குறிப்பாக 'நெல் கால்வாய்' பகுதியில் தானியங்களுக்குப் பதிலாக, கிலோ மீட்டர் தூரத்திற்கு தெரியும் நிலத்தில் கண்ணி வெடிகளும், மரணப்பொறிகள் புதைக்கப்பட்டிருந்ததால் அந்தப் பகுதிகளைக் கைப்பற்றுவது மட்டுமல்ல மனிதா பிமான நடவடிக்கையின் முடிவில் பல ஆண்டுகளாக சர்வதேச ஆதரவுடன் கூட இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதும் மிகவும் கடினமாக இருந்தது. 'நெல் கால்வாய்' பிரதேசத்தின் அடம்பன், ஆனந்தகுளம், பரப் பகட்டான் ஆகிய பகுதிகளில் கண்ணிவெடிகள் புதைக் கப்பட்டிருந்ததால், அவற்றில்18பகுதிகளைக் கைப்பற்ற ஒன்பது மாதங்களுக்கும் மேலாக ஆனது.

சுமார் 10 அடி ஆழத்தில் தோண்டப்பட்ட பள்ளத்தில் இருந்து மண்ணை எடுத்து பாதுகாப்பு தடுப்புகளை அமைத்து மிக உயரமாக ஒரு மண் மேட்டை எல்.ரீ.ரீ.ஈ. யினர் அமைத்திருந்தனர். சாதாரண மக்களையும் கன ரக இயந்திரங்களையும் பயன்படுத்தி இந்த அகழிகள், கரைகளை அமைக்கும் போது அரசாங்க விமானப்ப டைகள் அவர்களைத் தாக்கின. ஆனால் இந்த அனைத்து தடைகளுக்கும் மத்தியில், வன்னியின் குறுக்கே அத்த கைய அகழிகள் மற்றும் கரைகள் கட்டப்பட்டன. மேலும் பல தடைகள் கட்டப்பட்டு பாதுகாப்புப் படையினருக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டன. 10அடி ஆழமான பள்ளத் தை நிரப்பி சுற்றியுள்ள பகுதிகளை சேறும் நிரப்பப்பட்டி ருந்தன. எனவே தாக்குதல் படையினர் முன்னேறுவது கடினமாக இருக்கும்போது, இடத்தின் முக்கியத்து

வத்தைப் பொறுத்து 100-200 அல்லது அதற்கு மேற்பட்ட பயங்கரவாதிகள் மறைந்து நின்று, முன்னேறி வரும் இராணுவ படையணிகளுக்கு பதிலடி கொடுப்பதே எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகள் பயன்படுத்திய முக்கிய தந்தி ரோபாயமாகும்.

**187.** மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் தலைமையிலான 57-வது படையணி A9 வீதிக்கு மேற்கே பெரியமடுவில் அமைக் கப்பட்டிருந்த அகழியும் மண்மேட்டினையும் ஓர் தடை யாக பாதுகாப்பு படையினர் எதிர்கொள்ள நேரிட்டது. இவ்வாறான ஒரு தடையை எதிர்கொள்வது அதுவே முதன்முறையாக இருந்தது. 150-200 வரையான பயங்கர வாதிகள் எதிர் தாக்குதல் நடத்தியது பாதுகாப்பு படையினர் எதிர்கொண்ட மற்றுமொரு தடையாக இருந் தது. துப்பாக்கிச் சூடு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பிரிகேடியர் ஷவேந்தர சில்வாவின் 58ஆவது படையணி வெள்ளங்குளம் பகுதியில் A-32 வீதியின் குறுக்கே நிர் மாணிக்கப்பட்டிருந்த 5 கிலோமீட்டர் நீளமுள்ள அகழியி லிருந்தும் வீதியின் குறுக்கே கட்டப்பட்ட ஒரு மண்மேட் டில் இருந்தும் மறைந்திருந்து சுமார் 200 பயங்கரவாதி கள் நடாத்திய எதிர் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

மேற்கு கரையோரத்தில் நாச்சிக்குடாவில் இருந்து அக்க ராயன்குளம் ஏரி வரை மற்றுமொரு மண்மேடு சுமார் 30 மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டிருந்தது. இந்த பாதுகாப்பு வேலியை சுமார் 1000 பயங்கரவாதிகள் பாதுகாத்து வந்தனர். A9 வீதியின் கீழ், மேற்கிலிருந்து வடக்காகச் செல்லும் 57 மற்றும் 58-ஆவது படையணிகள் இந்த தடையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மேலும் குளங்களைச் சுற்றி கட்டப்பட்டிருந்ததால் பயங்கரவா திகள் அடிக்கடி அப்பகுதிகளை சேற்றை நிரப்புவது எளிதாக இருந்தது. இந்த அகழியும் மண்மேடும் ஆங்கில எழுத்து 'L' வடிவில் கட்டப்பட்டதால், ஒரு புறத்தில் அதை தகர்த்தாலும் கூட மற்றைய புறத்திலிருந்து தாக் குதல்களை நடத்துவதற்கு இலகுவாக இருத்ததால் அந்த தடையை உடைத்து முன்னேறுவது கடினமாக இருந்தது. ஏனெனில் மண்மேடு உடைக்கப்பட்டவுடன், உடைக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த மண்மேடு மற்றும் மண் மேட்டினால் உருவாக்கப்பட்ட தடையானது, துப்பாக்கி சூடு அல்லது பீரங்கி தாக்குதல்களை விட வலுவாக இருந்தது. குறிப்பாக கிளிநொச்சி நடவடிக் கைக்காக சேற்றில் தத்தளிக்கும் சக இராணுவத்தினரை காப்பாற்ற முடியாமல் படையினர் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு வெகுநேரம் கழிக்க வேண்டியி ருந்தது. கிளிநாச்சி நடவடிக்கையின் போது பருவக்காற் றுடன் கூடிய கடும் மழையின் காரணமாக இரணைமடு ஏரி திறக்கப்பட்டது. இது படையினர் எதிர்கொண்ட தடையில் தீவிரத்தன்மையை காட்டியது. இந்த அகழி யும் மண்மேடும் நாச்சிகுடா முனையையும் தகர்க் கும் பொறுப்பு மேஜர் ஜெனரல் ஜகத் டயஸின் படையணி யிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், அக்ராயன்குளம், இரணை மடு முனையை தகர்க்க பிரிகேடியர் சவேந்திர சில்வா வின் 58-வது படைப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. நாச் சிக்குடா முனையை தகர்க்க இரண்டு மாதங்கள் ஆனதுடன் அதன்போது 153 பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டனர்.

A9 பாதையின் கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த பிரிகேடியர் நந்தன உடவத்தவின் 59-ஆவது படையணி நாயாறு ஏரிக்கும் தன்னிமுறிப்பு நகருக்கும் இடையி லான 12 கிலோ மீட்டர் நீளமுள்ள அகழி மற்றும் மண்மேடு ஆகியவை அத்தகையதொரு பாரிய தடை யாக இருந்தன. சுமார் 800-1000 மீற்றர் பரப்பளவில் கைவிடப்பட்ட நெல் வயலுக்கு முன்னால் இந்த மண் மேடு கட்டப்பட்டது. முன்னேறி வரும் பாதுகாப்புப் படை யினருக்கு திறந்த வெளியில் பதிலடி கொடுப்பது பயங் கரவாதிகளுக்கு எளிதாக இருந்தபோதிலும் ராணுவ படையினருக்கு மண்மேட்டை அடைவது அவ்வளவு எளிதான காரியமாக இருக்கவில்லை. பகல் வேளை களில் ஒளிந்து மறைந்து கொண்டும், இரவில் மோட்டார் குண்டு மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி படிப்ப டியாக முன்னேறி இந்தத் தடையைக் கடப்பதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொண்டது.

57-ஆவது படைப் பிரிவின் 571-ஆவது மற்றும் 572-ஆவது படையணிகள் மன்னாரில் இருந்து 5.5 கி.மீ தூரத்தில் நிலைகொண்டிருந்தன. மடு பகுதி, பாலம் பிட்டி மற்றும் பெரியமடு ஆகிய பிரதேசங்களை மீட்கும் பொருட்டு 2007-ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07-ஆம் திகதி இந்த மீட்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. மடு பிரதேசம் என்பது கிறிஸ்தவர்களின் புனித மருதமடு அன்னையின் தேவாலயம் அமைந்திருந்த பகுதியாகும். அப்பகுதி பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட போது கத் தோலிக்க மதகுருமார்கள் அன்னையின் உருவச் சிலை யை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றனர். பாலம்பிட்டி பகுதியில் வீதி அமைப்பு விரிவாக்கம் இராணுவத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. போர்ச்சூழலில் மத வழிபாட்டுத் தலங்கள் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய சர்வதேச மரபுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந் தாலும், அதனை பொருட்படுத்தாமல் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய போதிலும், அரசாங்க பாதுகாப்புப் படையினர் இப்பகுதியை மீட்பதில் மிகவும் கவன மாகவே செயல்பட்டனர். எனவே தேவாலயப் பகுதியைக் கைப்பற்றுவதற்கான 57 படையணியின் நடவடிக்கை மிகவும் மெதுவாக முன்னேறியது. இதற்கிடையில், அதே படைப்பிரிவின் படையினர் 2007 டிசம்பர் 22 மற்றும் 28 ஆகிய தேதிகளில் வவுனியாவில் கந்த பெருங்குளமும் டிசம்பர் 28 பெரிய பண்டி விரிச்சான் பகுதியும் பெரிய தம்பனையிலிருந்த எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளின் வியட்-நாம் முகாமும் கைப்பற்றப்பட்டது.

வன்னிப் பகுதியை மீட்கும் மனிதாபிமான நடவடிக் கையில் ஈடுபட்ட 58-ஆவது படையணியின் படையினர் 2007 டிசம்பர் 22-ஆம் திகதி மன்னாரின் உயிலங்கு ளத்தைக் கைப்பற்றியதுடன், 58-ஆவது படைப்பிரிவு தமது அடுத்த நடவடிக்கைகளுக்காக அடம்பன் மற்றும் விடத்தல்தீவு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது. இலங் கையின் மேற்குக் கடற்கரை வழியாக போருக்குத் தேவையான வெடிமருந்துகள் மற்றும் பிற தடைசெய்யப் பட்ட பொருட்களை பயங்கரவாதிகள் கொண்டு சென்ற னர். 'நெல்கால்வாய்' என்று அழைக்கப்படும் பகுதியில், அடம்பன் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நீர்ப்பாசன

அமைப்பு மற்றும் தெங்கு வளர்ப்பு மேற்கொள்ளும் பகுதிகளாக இருந்ததுடன் இவை ராணுவ முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் காணப்பட்டது. அதனால் தான் எல்.ரீ.ரீ.ஈ.அப்பிரதேசத்தை பாதுகாக்க அத்தனை முயற்சியையும் மேற்கொண்ட போதும் 58- வது படைப்பிரிவின் அனைத்து படைகளும் இணைந்து 2008 ஜூன் 04, அன்று அடம்பன் நகரில் இருந்த ஒரு பெரிய அகழியையும், மண்மேட்டையும் கைப்பற்றின. பாரிய மரண பொறிகளுடன் தயார் செய்யப்பட்ட இந்தப் பிரதேசம், எல்.ரீ.ரீ.ஈ.அமைப்பின் முக்கிய தலைவர்களும், உறுப்பினர்களும் தங்கியிருந்த பகுதியாகவும் இருந்தது. ஏழு அடி ஆழமான அகழியானது பூநகரி பகுதியை நோக்கி சென்றதுடன் அதனை கைப்பற்றிய இராணுவத்தினால் அன்றைய தினமே அடம்பன் நகருக்கு வடக்கே ஒரு கிலோமீட்டர் அளவிலான பகுதியொன்றை விடுவிக்க முடிந்தது.

வயல்வெளியில் நீண்ட காலமாக பயிரிடப்படாமலும் விவசாயத்திற்காக நெறிப்படுத்தப்பட்டிருந்த ஒரு பெரிய திறந்த வெளியில் எல்.ரீ.ரீ.ஈ கன்னிவெடிகளை புதைத்திருந்த காரணத்தினால் பாதுகாப்பு படையினர் அடம்பன் பிரதேசத்தில் மிகவும் மெதுவாகவே நகர வேண்டியிருந்தது. 2008 பெப்ரவரி 28-ஆம் திகதி 58-ஆவது படையணியின் 581-ஆவது படையணி அடம்பன் ஏரியின் தெற்குப் பகுதிகளையும் மன்னார் இராட்சத ஏரியின் வடக்கே உள்ள பகுதிகளையும் மார்ச் 06-ஆம் திகதி மன்னார் மற்றும் பரப்புகண்டல் ஆகிய பகுதிகளையும் கைப்பற்றியது.

மார்ச் 27, 2008 அன்று, 57-வது படையணி வவுனியாவின் சின்னபண்டிவிரிச்சன் பகுதியைக் கைப்பற்றியது. ஏப்ரல் 21 அன்று, 581-வது படையணி 'லீமாபேஸ்' என்று அழைக்கப்படும் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் முகாமைக் கைப்பற்றியது. இதற்கிடையில், A9 பாதையின் மேற்குப் போர்முனைகளில் பல வெற்றிகளை கண்ட போதும் வெவ்வேறு திசைகளில் இருந்து ஒரே நேரத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டு எல்.ரீ.ரீ.ஈ.அமைப்பின் போர் சக்தியை தளர்த்துவதற்கு உத்திகளை மேற்கொண்ட இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா வடக்கிலிருந்து தாக்குதல் நடவடிக்கைகளை முன்னெடுத்தார். 2008 ஏப்ரல் 23 அன்று, வடக்கு பிராந்தியத்தில் நிலை கொண்டிருந்த 53 மற்றும் 55 படைப் பிரிவுகளின் ஐந்து படையணிகள் கிளாலி மற்றும் சதுப்பு நிலக்காடுகளில் இருந்து எட்டு கிலோமீட்டர் முன்னரங்க பாதுகாப்பு வளையத்தைக் கடந்து எல்.ரீ.ரீ.ஈயின் முதலாவது பாதுகாப்பு வளையத்தை எளிதாக அடைந்தன. அங்கிருந்து, சுமார் 700 மீற்றருக்கு முன்னால் இராணுவம் நிலை கொண்டிருந்த போது, எல்.ரீ.ரீ.ஈ.யினர் பெருந்தொகையான பீரங்கிகளையும் மோட்டார் குண்டுகளையும் ஏவினர். இதன் காரணமாக பாதுகாப்பு படையினரின் ஏராளமானவர்கள் உயிரிழந்தனர். அத்தாக்குதலைத் தொடர்ந்து, உயிர்களை காப்பாற்றிக் கொள்வதற்காக தாக்குதல்களில் இருந்து பின்வாங்க வேண்டியிருந்தது. இந்த போரில் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் உடல்கள் எல்.ரீ.ரீ.ஈ.அமைப்பினரால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது பாதுகாப்புப் படையினரின் ஆயுதங்கள் அழிக்கப்பட்டு 150 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன் சுமார் 300 பேர் காயமடைந்தனர் என்கிற எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் அறிக்கைகள் பொய்யானவை என்றும், இந்த தோல்வியின் காரணமாக பாதுகாப்புப் படையினர் சோர்வடைய மாட்டார்கள் என்றும் இராணுவத் தளபதி கூறினார். எல்.ரீ.ரீ.ஈ.அமைப்பிற்கு ஓர் முடிவு கட்டும் வரை நான்காவது ஈழப்போர் நிறுத்தப்படமாட்டாது என்று உறுதியுடன் கூறியதுடன் இராணுவ நடவடிக்கைகள் மேலும் முன்னெடுத்து செல்லப்பட்டது.

**192.** 57-வது மற்றும் 58-வது படைப்பிரிவுகளால் தொடங்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகளில், 57-வது படையணி 24 ஏப்ரல் 2008 அன்று மடு தேவாலயம் அமைந்துள்ள பகுதியை மீட்கும் நடவடிக்கைகளில் வெற்றி பெற்றது. அந்த வெற்றியின் பின்னர் அத்தேவாலயத்திற்கு பொறுப்பாக இருந்த அருட்தந்தை இராயப்பு ஜோசப் அவர்களிடம் தேவாலயம் ஒப்படைக்கப்பட்டதுடன், அழிக்கப்பட்ட தேவாலய வளாகத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புனரமைப்புப் பணிகளையும் மேற்கொள்ள இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்தனர். பெரியமடுவை மீட்க 572-ஆவது படையணி சென்றதுடன், 571-வது படையணி பாலம்பிட்டியை மீட்க சென்றது.

2008-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ஆம் திகதி மன்னார் வேப்பங்குளத்தில் அமைந்திருந்த எல்.ரீ.ரீ.ஈ.யினருக்குச் சொந்தமான வான் எய்ட் பேஸ் முகாமை 58 ஆவது படையணியின் 58-ஆவது படையணி கைப்பற்றி மே 09-ஆம் திகதி அடம்பன் நகரையும் கைப்பற்றியது.

அதே மாதம் 18-ஆம் திகதி 58-ஆவது படையணி கடற்புலிகளின் முகாமான விடத்தல்தீவைக் கைப்பற்றும் நடவடிக்கையை ஆரம்பித்தது. இலங்கையின் மேற்கு கடற்பரப்பில் மன்னாரில் அமைந்துள்ள புவியியல் ரீதியாக முக்கிய இயற்கை துறைமுகமான விடத்தல்தீவு, எல்.ரீ.ரீ.ஈ.யின் முக்கிய சட்டவிரோத கடத்தல் மையங்களில் ஒன்றாக பயன்படுத்தப்பட்டது. 16 ஜூன் அன்று, அரச படைகள் விடத்தல்தீவு பகுதிக்குள் நுழைந்த போது, எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்கள் பிரதேசத்தை விட்டு வெளியேறியிருந்த நிலையில் 58-ஆவது படைப்பிரிவினால் அங்கு அரசாங்கத்தின் அதிகாரத்தை பலப்படுத்த முடிந்தது. இதன் மூலம் தென்னிந்தியாவிலிருந்து கிளிநொச்சிக்கு எல்.ரீ.ரீ.ஈ.யினரால் கொண்டு வரப்பட்ட ஆயுதக் கடத்தல், போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத குடியேற்றம் போன்றவை நிறுத்தப்பட்டன. தலைமன்னாரில் இருந்து கடற்படை தளங்களின் பாதுகாப்பையும் அது உறுதிப்படுத்தியது. அதன்படி, 2008 ஜூன் 16அன்று, ஏ 9 வீதிக்கு மேற்கே ஒரு முக்கிய விசாலமான பகுதியில் இருந்து எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பை பாதுகாப்பு படையினரால் விரட்ட முடிந்தது. அதனைத் தொடர்ந்து, விடத்தல்தீவு பகுதியை இராணுவம் கைப்பற்றியபோது, அங்கிருந்த பாரிய படகுத்துறை ஒன்றும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதன்போது எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் பாரிய தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்த போதிலும், பாதுகாப்புப் படையினர் வெற்றிகரமாக எதிர்த்தாக்குதல்களை நடத்தி அதன் வெற்றியை உறுதிப்படுத்த முடிந்தது.

மடுபிரதேசம் விடுவிக்கப்பட்ட பின்னர் 571-ஆவது படையணியினர் 2008மே 14-ஆம் திகதி பாலம்பிட்டியில் மீட்பு நடவடிக்கைகளை ஆரம்பித்து 16-ஆம் திகதி அப்பகுதியை விடுவிக்க முடிந்தது. இந்த வெற்றியுடன் பாலம்பிட்டி ஊடாக எல்.ரீ.ரீ.ஈ.யினர் முன்னெடுத்த அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் இல்லாதொழிக்கப்பட்டு அனைத்து விநியோகப் பாதைகளும் அடைக்கப்பட்டன. பின்னர் 20 மே 2008 அன்று, 571-ஆம் படையணியினர் பெரியமடு பகுதியை மீட்கும் நடவடிக்கையை முன்னெடுத்து அதனை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த போது, 572-ஆவது படையணியுடன் இணைந்து 2008-ஆம் ஆண்டு ஜூன்மாதம் 16-ஆம் திகதி பெரியமடு பகுதியை மீட்டனர். பயங்கரவாதிகளின் பிரதான சமையலறை மற்றும் மருத்துவமையம் போன்ற பிரதான சேவை நிலையங்கள் இந்த பகுதியில் அமைந்திருந்ததால், பயங்கரவாதிகள் பெரியமடு கிராமத்தை பாதுகாக்க அகழிகளையும் மண்மேடுகளையும் அமைத்து ஒரு பொறியை அமைத்திருந்தனர். பயங்கரவாதிகளின் பலத்த எதிர்த் தாக்குதலுக்கு மத்தியில், பாதுகாப்புப் படையினர் முதலில் பெரியமடு குளத்தின் மண்மேட்டையும் பின்னர் பெரியமடு கிராமத்தையும் கைப்பற்றினர்.

நாளுக்கு நாள் வெற்றியுடன் முன்னேறிக் கொண்டே 58-ஆவது படைப் பிரிவின் அனைத்து படையணிகளையும் சேர்ந்த படையினர் வெற்றிகரமாக முன்னேறி ஜூன் 24 ஆம் திகதி மன்னார் அடம்பனின் வடக்குப் பகுதியான முள்ளிக்கந்தல், மினுக்கன் மற்றும் மரத்திக்கண்ணாடி ஆகிய இடங்களிலிருந்து முன்னேறி 03 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிற்கு அதிகாரத்தைப் பரப்பினர்.

அதனைத் தொடர்ந்து, 58-வது படையணியால். சேரிக்குளத்திலுள்ள 45-வது பேஸ் முகாம், ஆனந்தகுளம் மற்றும் பரப்புகண்டல் என்கிற ‘பானுபேஸ்’ என்பவற்றை எல்.ரீ.ரீ.ஈ.யினரின் பிடியிலிருந்து விடுவிக்க முடிந்தது. எல்.ரீ.ரீ.ஈ. ஆயுதப்படைகளின் தலைவரான பானு என்பவர் பதுங்கி இருந்த இடமும், எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பால் சுட்டுப் பழக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட களமும் மானம் என்பவற்றைக் கொண்ட முகாம் இருக்கும் வளாகம், இராணுவக் கண்ணோட்டத்தில் மிகவும் வளமான மற்றும் மிக முக்கியமான பிரதேசமாக கருதப்பட்டமைனால் பாதுகாப்புப் படையினரால் அது கைப்பற்றப் பட்டது.

போரின் அடிப்படையில் மிகவும் வளமான மற்றும் மிக முக்கியமான பகுதியாக கருதப்பட பரப்புகண்டல், மாந்தை, வெள்ளங்குளம் மற்றும் அடம்பன் போன்ற கிராமங்களின் நெல் கால்வாய் பகுதியை பாதுகாக்க எல்.ரீ.ரீ. ஈ.யினர் தங்களால் இயன்றவரை முயன்றனர், ஆனால் 581-வது படையணி 2008 ஜூன் 28 அன்று அப்பகுதியை கைப்பற்றியது.

2008 யூன் 30-ஆம் திகதி A9 வீதிக்கு மேற்கே முன்னேறி வந்த அனைத்து ஆயுதப் படைகளும் பெரியமடுவில் ஒன்றிணைந்து வன்னி மேற்பிராந்தியத்தில் ஒரு பெரிய போர் முனையை உருவாக்கியது. இந்த காலகட்டத்தில், பொதுமக்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான நுழைவாயில்களாக குறிக்கப்பட்டிருந்த ஓமந்தை மற்றும் புளியங்குளத்தில் ஆயுதமேந்திய எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர், ஆனால் மார்ச் 2008 முதல், சில பொதுமக்கள் பாதுகாப்புக்காக சிறிய குழுக்களாக பிரிந்து அரசாங்க பகுதிகளை அடைய முடிந்தது. மார்ச் 2008-இல், அத்தகைய 138 பேர் கொண்ட 46 குடும்பங்கள் எல்.ரீ. ரீ.ஈ.யினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை விட்டு வெளியேறின. ஐ.நா. முகவர் நிலையங்களால் அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக A9 மற்றும் A32 பாதைகளுக்கு இடையில் திறக்கப்பட்ட பல பாதுகாக்கப்பட்ட பாதைகள் வழியாக பொதுமக்கள் அரசாங்க பகுதிகளுக்கு தப்பிச் செல்வது வழக்கமாக இருந்தது.

ஒரே நேரத்தில் பல முனைகளில் நடவடிக்கைகளை மேற்கொண்ட இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்சோன்சேகா A-9 பாதையின் மேற்கே செயற்பட்ட 57-ஆவது மற்றும் 58-ஆவது படையணிகளுடன் நின்று வேறொரு திசையில் நடவடிக்கைகளை ஆரம்பித்தார். எல்.ரீ.ரீ.ஈ.யின் வன்னி முகாமான கிளிநொச்சியின் அடர்ந்த காடுகள் இயற்கையான இரவு நேர போர்வையாக அமைந்திருந்தது. A9 வீதிக்கு கிழக்கே ஆனந்தக்குளம் மற்றும் நகரச்சோலை பிரதேசத்தின் அடர்ந்த காடுகளினூடாக கிளிநொச்சிக்கு நோக்கி முன்னேறும் நடவடிக்கைக்காக பிரிகேடியர் நந்தன உடவத்த தலைமையிலான 59-ஆவது படையணியை இராணுவத் தளபதி ஈடுபடுத்தினார். 11-வது கெமுனு மற்றும் 14-வது சிங்க ரெஜிமென்ட்கள் அப்படைப்பிரிவில் சேர்க்கப்பட்டன, பின்னர் 1-வது சிங்க ரெஜிமென்ட் சேர்க்கப்பட்டது. இப்படையணி 2008 ஜனவரியில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது, ஆனால் காடுகளினூடாக முன்னேறுவதில் எதிர்கொண்ட இயற்கை தடைகள் மற்றும் எதிரிகளின் எதிர்த்தாக்குதல்கள் காரணமாக, அவர்களின் முன்னேற்றம் மிகவும் மெதுவாக இருந்தது. இருப்பினும் அவர்கள் தொய்வின்றி முன்னேறிக்கொண்டே இருந்தனர்.

A9 வீதியின் கிழக்கு மற்றும் மேற்கு திசைகளில் நிலைநிறுத்தப்பட்ட இந்த மூன்று முனைகளுக்கும் மேலதிகமாக, பிரிகேடியர் ரொஹான் பண்டார தலைமையிலான 2-வது விசேட அதிரடிப்படைக்கு பாதையின் மத்தியில் எதிரியின் அதிகார தளங்களை அழிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு முதற்தடவையாக பிரயோகித்த விஷவாயுத் தாக்குதல்களுக்கு முதலில் பலியான இந்தப் படையணி, ஒரு இராணுவ மருத்துவர் மற்றும் ஹெலிஸ் நிறுவனம் என்பவற்றின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட விஷவாயு முகமூடிகளைப் பயன்படுத்தி ஜூலை 11, 2008 அன்று நாசிக்குடாவில் 850 சதுர கிலோமீட்டர் நிலத்தைக் கைப்பற்றுவதில் கடினமான பாத்திரத்தை வகித்தது. அதனைத் தொடர்ந்து 2008 ஜூலை மாத இறுதியில் இராணுவத் தளபதி வன்னியை விடுவிப்பதற்காக அமுல்படுத்திய திட்டத்தின் படி மேற்குப் பக்கத்திலிருந்து இரண்டு, கிழக்குப் பக்கத்திலிருந்து ஒன்று மற்றும் A9 வீதியின் மத்தியிலிருந்து ஒன்று என மூன்று முனைகளில் இருந்தும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடற்கரையில் கொக்குத்தொடுவாயில் இருந்து நாட்டின் உட்புறத்தில் கம்பிலி ஏரி வரையான 300 முதல் 350 சதுர கிலோமீற்றருக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் எல்.ரீ.ரீ.ஈ.யி னரின் மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்ததோடு சுமார் 100 மீட்டர் தூரத்தில் பதுங்கு குழிகளும் கட்டப்பட் டிருந்தன. கிழக்கு வன்னியில் அரசாங்கத்தின் அதிகார வரம்பிற்கும் எல்.ரீ.ரீ.ஈ தளத்திற்கும் இடையிலான எல்லையைக் குறித்திருந்த எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் படை பிரிவில் 325 பயங்கரவாதிகள் இருப்பது ராணுவ உள வுத்துறைக்கு தெரிந்திருந்தது. அவர்களிடம் கனரக ஆயுதங்கள் மற்றும் மோட்டார் குண்டுகள் இருந்தன. மேலும் பாதுகாப்பு வரம்பிற்கு முன்னால் அனைத்துப் பகுதிகளிலும் ஆட்களைக் கொல்லும் கண்ணிவெடி களும் மரணப் பொறிகளும் புதைக்கப்பட்டிருந்த. பிரிகே டியர் உடவத்தவின் வழிகாட்டலின் கீழ், 59-வது படைப் பிரிவு எல்.ரீ.ரீ.ஈ.யினரின் பாதுகாப்பு நிலைக்கு முடிந் தவரை சமீபமாக நிறுவி 2008 ஜனவரி 07-ஆம் திகதி வெலிஓயா கிரி இப்பன் ஆர பாதுகாப்பு மையத்திலி ருந்து இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. 59-ஆவது படையணி எல்.ரீ.ரீ.ஈ.யின் பாதுகாப்பு அரண் களை உடைத்து முறியடிக்க ஆறு வாரங்களுக்கு மேல் ஆனது.

201 2008 பெப்ரவரி 22 அன்று, முல்லைத்தீவில் எல்.ரீ.ரீ.ஈ.யின் பகுதிக்குள் நுழைந்து தனது முன்னேற்றத்தைத் தொடங் கிய 59-வது படையணி, வெலிஓயா ஜனகபுரவில் முன்ன ரங்க பாதுகாப்பு வளையத்திலிருந்து 6 கி.மீ வடக்கே முல்லைத்தீவு ஆந்தைகுளம் பாதுகாக்கப்பட்ட வனப்ப குதியில் அமைந்திருந்த பயங்கரவாதிகளின் முகாமான 14-வது பேஸ் வளாகத்தைக் கைப்பற்ற 2008 ஏப்ரல் 09-ஆம் திகதி ஒரு நடவடிக்கையை மேற்கொண்டதுடன், அந்த ஃபேஸ்காகேம்ப் முகாமைக் கைப்பற்றுவதன் மூலம் முதல் கட்டம் நிறைவடைந்தது. ஜூன் 11, 2008 அன்று, எல்.ரீ.ரீ.ஈயின் 2-வது பாதுகாப்பு வளையத்தைத் தாண்டிய 59-வது படையணி, ஜூலை 30 க்குள் முணக்கம் பேஸ் தலைமையில் இருந்த 14 பேஸ் முகாம் வளாகத்தை முழுமையாக அழித்தது. முல்லைத்தீவு ஆந்தகுளம் வனப்பகுதியில் முனகம் பேஸ், ரஞ் சன்பேஸ், கீழ்பேஸ் மெடிக்கல் பேஸ், நிஷாம் பேஸ், கமல்பேஸ், சுகந்தபேஸ், மைக்கேல்பேஸ், ஜீவன்டோஸ், கஸ்ட்ரோ பேஸ், ஈசபேஸ், இலச்சபரேட்பேஸ், மலாபொ யிண்ட்பேஸ், கட்டுவாண்டோஸ் ஆகிய 14 தளங்களை உள்ளடக்கிய பயங்கரவாதிகளின் மிகவும் சக்திவாய்ந்த படைத்தள வளாகம் பெரிய பரப்பளவில் பரவியிருந்த துடன், ஒரு சுரங்கப்பாதையும் தரையில் தோண்டப்பட்ட மூன்று கட்டிடங்களையும் கொண்டிருந்தது. இந்த நடவ டிக்கையின் போது, திட்டுக்காய்குளம் வாவிக்கரை, மைக்கேல்பேஸ் மற்றும் சுகந்தபேஸ் ஆகியவற்றைக் கைப்பற்றியபோது பயங்கரவாதிகளால் கடுமையான எதிர்த்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்திய அமைதிப் படையால் கூட கைப்பற்ற முடியாத அந்த முகாம் வளாகத்தை அரசாங்க பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றி அழிக்க முடிந்தது.

203 கிளிநொச்சியைக் கைப்பற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட 57-வது படைப்பிரிவின் படையினர் 2008 ஜூலை 22 அன்று துணுக்காய் மற்றும் உயிலங்குளத்தை வென் றனர். இந்தப் பிரதேசத்தில் பலத்தை நிலைநிறுத்தும் நடவடிக்கையில் வெற்றி பெற்ற பின்னர், எல்.ரீ.ரீ.ஈ.யின ரின் பிரதான நிர்வாக மையமான கிளிநொச்சிக்கு தெற்கே 12கி.மீ தொலைவில் நிலைகொண்டிருந்த பயங் கரவாதிகள் மீது பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தினர்.

2008 யூலை31-ஆம் திகதி பெரியமடு மேற்குப் பகுதியில் கட்டப்பட்ட வெள்ளாங்குளம் பாலத்தைக் கைப்பற்றிய பின்னர், எல்.ரீ.ரீ.ஈ.யினருடன் கடுமையாகப் போராடிய 58-ஆவது படையணியினரால் மன்னாரில் உள்ள வெள் ளாங்குளம் கிராமத்தை பயங்கரவாதிகளிடமிருந்து முழு மையாக விடுவிக்க முடிந்தது. மன்னார் இலுப்பக்கட வைக்கு வடக்கே சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இக் கிராமம் விடுவிக்கப்பட்டதன் மூலம் மன்னாருக்கு வடக்கே 40 கிலோமீற்றர் தொலைவில் படையினர் நிலைகொள்ள வாய்ப்பு கிடைத்தது. இந்த வெற்றியோடு மன்னர் பிரதேசத்தில் எல்.ரீ.ரீ.ஈ யினரின் அதிகாரமானது முழுவதுமாக தகர்க்கப்பட்டதுடன் அர சாங்க படைகள் படிப்படியாக கிளிநொச்சி மாவட் டத்தை நெருங்கின. இதற்கிடையில், 2008 ஓகஸ்ட் 11 அன்று, 58-வது படையணி கள்ளிக்குடா இறங்குதுறை யைக் கைப்பற்றியது. இது எல்.ரீ.ரீ.ஈயின் கடற்புலிகளின் பலத்தை மேலும் கட்டுப்படுத்த முடிந்தது.

2008ஓகஸ்ட்13, அன்று, A9 பாதைக்கு மேற்கே இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட பாதுகாப்புப் படையினர் கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் நகரைக் கைப் பற்றினர். எல்.ரீ.ரீ.ஈ.யினரின் பிரதான நிர்வாக மையமான கிளிநொச்சிக்கு மேலதிகமாக, எல்.ரீ.ரீ.ஈ.யின் துணை நிர்வாக நகரமாக பராமரிக்கப்பட்டு வந்த முழங்காவில், A9 பாதையின் மேற்கில் அவர்களின் பிரதான ஒருங்கி ணைப்பு மையமாகவும் இருந்தது. 'மாவீரர் கிராமம்' என்று அழைக்கப்படும் இந்த நகரம் வருடாந்த மாவீரர் நினைவிடமாக மட்டுமல்லாமல், உயிரழந்த சுமார் 5,000 எல்.டி.டி.ஈ யினருக்கான மயானம், மருத்துவமனை, பாடசாலை, நிர்வாக கட்டிடம் என பல எல்.ரீ.ரீ.ஈ முகாம்கள் கட்டப்பட்டிருந்ததுடன் சுமார் 25 அடி உய ரத்தில் சமிக்ஞை கோபுரமும் கட்டப்பட்டு இருந்தது. முழங்காவில் பகுதியை இழந்ததும் பயங்கரவாதிகள் அப்பிரதேசத்தை தப்பி ஓடிவிட்டனர்.

2008ஓகஸ்ட்13 அன்று, மேற்குக் கரையோரத்தில் எல்.ரீ. ரீ.ஈ க்கு சொந்தமான நாசிக்குடாவையும், அவர்களின் பிரதான நிர்வாக மையமாக இருந்த கிளிநொச்சிக்கும் இடையில் தொடர்புகளை பேணிவந்த முழங்காவில் நகரம் மட்டுமல்லாது, கல்விலான் பிரதேசத்தையும் இழந்தது அவர்களுக்கு பெரும் இழப்பாக இருந்த போதிலும், பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப் படும் தாக்குதல்களில் இருந்து உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பயங்கரவாதிகள் அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றனர்.

நாசிக்குடா, மூலோபாய ரீதியாக சாதகமான இடத்தில் அமைந்துள்ள ஒரு சக்திவாய்ந்த கடற்புலிகளின் கோட் டையாகவும், அண்டை நாடுகளுடனான ஆயுத விநியோ கத்திற்கான சக்திவாய்ந்த மையமாகவும் இருந்தது. இப்

பகுதியை பயங்கரவாத பிடியிலிருந்து விடுவித்தமை வன்னி மனிதாபிமான நடவடிக்கையில் மேற்கொள்ளப் பட்ட ஒரு முக்கிய அம்சமாக கருதப்படுகிறது. நாச்சிக்கு டாவிலிருந்து அக்கராயன்குளம் ஊடாக திருமுறிகண்டி வரையான ஆழமான அகழிகளிலும் மண்மேடுகளிலும் மறைந்து நின்று தாக்கிய பயங்கரவாதிகள், பாதுகாப்பு படையினரை நோக்கி தாக்கிய கடுமையான தாக்குதல் களுக்கு மத்தியில் பிரதேசங்களை கைப்பற்றுவது என்பது மிகவும் கடினமான காரியமாக இருந்தது. இந்த அகழியும் மண் அணையும் வன்னி மனிதாபிமான நடவ டிக்கையில் ஈடுபட்ட பாதுகாப்பு படையினருக்கு பெரும் சவாலாக இருந்தது. மேலும் பாதுகாப்பு படையினரை முன்னோக்கி நகர்வதை தடுத்து அவர்களை வீழ்த்தும் பிரதான தாக்குதல்களை இவ்விடத்தில் வைத்து மேற் கொள்வதே எல்.ரீ.ரீ.ஈ யினரின் திட்டமாக இருந்தது. ஆகவே பாதுகாப்பு படையினருக்கு அக்கராயன் குள மண்மேட்டை தகர்க்க சில நாட்கள் தேவைப்பட்டன.

208 2008 ஓகஸ்ட் 27 அன்று, 58-வது படையணி பல்லாவரா யங்ககட்டின் தெற்குப் பகுதியிலிருந்து நாச்சிக்குடாவின் மீட்பு நடவடிக்கையைத் ஆரம்பித்தது. ஒக்டோபர் 25 ஆகும்போது அகழியையும் மண்மேடுகளையும் தகர்த்து 2008 ஒக்டோபர் 30-இல் நாசிகுடா நகரை முழுவதுமாக கைப்பற்றினர். இலங்கையின் மேற்குக் கடற்கரையில் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் கட்டுப்பாட்டில் இருந்த மிகப்பெரிய புலிகளின் கோட்டை நாசிக்குடா ஆகும். அதனை பாதுகாப்பு படையினர் கைப்பற்றியதன மூலம் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு அண்டைய நாடுகளில் இருந்து கடல் மார்க் கமாக மேற்கொள்ளும் ஆயுத விநியோகங்களையும் பிற சட்ட விரோத நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்த முடிந்தது. பயங்கரவாதிகள் இதன்போது விஷவாயு தாக்குதல்களை மேற்கொண்டதோடு, இச்சமரில் ஏராள மான பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். நாச்சிக்குடா வை கைப்பற்றியதன் ஊடாக பயங்கரவாதிகளின் மற்று மொரு பிரதான அதிகார மையமான பூநகரிக்கு பாது காப்பு படையினரால் ஒரு வலுவான அச்சுறுத்தலை ஏற் படுத்துவதற்கு முடிந்தது.

209 இதற்கிடையில், இராணுவத்தின் முதலாவது அதிரடிப் படை 2008 ஒக்டோபர் 29 அன்று கிளிநொச்சி மாவட் டத்தில் நாச்சிக்குடாவிற்கு வடகிழக்கில் உள்ள ஜெயபு ரத்தை கைப்பற்றி அங்கு தேசியக் கொடியை ஏற்றியது. 2008 செப்டெம்பர் 25-ஆம் திகதி வன்னிப் போர்மு னையின் மேற்குப் பகுதிக்கு முன்னேறிய 58-ஆவது படைப்பிரிவின் படையினர் வணக்காப்புலிக்குளத்தில் எல்.ரீ.ரீ.ஈ.யின் பாதுகாப்பு வளையத்தின் தொடர் பதுங்கு குழிகளைத் தாக்கி அதனைக் கைப்பற்றியது மட்டு மல்லாது பேசாலை கடற்புலிகள் முகாமையும் கைப்பற் றினர். இதேவேளை, எல்.ரீ.ரீ.ஈ.க்குச் சொந்தமான வன் னேரிக்குளத்திற்கு மேற்கே 15 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அக்கராயன்குளம்-நாச்சிக்குடா வீதியின் பலத்தை உறுதிப்படுத்திக் கொண்ட 57-ஆவது படையணியினரால் அன்றைய தினம் அக்கராயங்குளம்-முறிக்கண்டி வீதியின் 4 கிலோமீட்டருக்கு பலத்தை நிலைநாட்டினர். புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அக் கராயன்குளத்தில் மிகவும் பலமான ஒரு மண்மேட்டை அமைத்திருந்ததுடன் பயங்கரவாதிகள் பாதுகாப்பு படையினருக்கு எதிராக கடுமையாக பதில் தகுதல் தொடுத்தனர், ஆனால் பாதுகாப்பு படையினர் மண்மேட்டை தகர்த்து அப்பகுதியை கைப்பற்றினர்.

2008 செப்டெம்பர் 03-ஆம் திகதி 57-ஆவது படையணி கிளிநொச்சி முறிக்கண்டி புகையிரத நிலையத்தைக் கைப்பற்றியதுடன், செப்டெம்பர் 30-ஆம் திகதி மாங்கு ளத்தில் இருந்து 7கிலோமீற்றர் வடமேற்கிலும் A9 பாதைக்கு மேற்கே சுமார் 500 மீற்றர் தொலைவிலும் உள்ள பணிக்கன்குளத்தில் எல்.ரீ.ரீ.ஈ.யினருக்குச் சொந் தமான 500 மீட்டர் நீளமான விமானப் ஓடுபாதை யை பாதுகாப்புப் படையினர் அழித்தனர்.

2008 ஒக்டோபர் 21-ஆம் திகதி கொக்காவில் புகையிரத நிலையத்தை 57-ஆவது படையணி கைப்பற்றியதன் மூலம் கிளிநொச்சி நோக்கி முன்னேறுவதற்கு வாய்ப்ப ளித்தது. A9 பாதையைப் பாதுகாப்பதற்காக பயங்கரவா திகள் கொக்காவில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக பள்ளங்களை வெட்டி, கன்னிவெடிகளை புதைத்து பாதுகாப்பு படையினருக்கு பொறி வைத்தனர். பாதுகாப்புப் படையினரின் முன்னேற்றத்தைத் தடுக்க பீரங்கிகளையும் மோட்டார் குண்டுகளையும் பயன்ப டுத்தி கொக்காவில் சமிக்ஞை கோபுரத்திற்கு அருகில் வலுவாக அமைக்கப்பட்டிருந்த பதுங்குகுழிகளில் இருந்து 2008 நவம்பர் 15 அன்று 20 முதல் 30 பயங்கர வாதிகள் 57-வது படையணியின் முன்னேற்றத்தைத் தடுக்க தாக்குதலை நடத்தினர். எவ்வாறாயினும், கொக்குவில் சமிக்ஞை கோபுரத்துக்கு அருகில் இருதரப் பினருக்கும் இடையில் நடந்த கடுமையான சண்டையின் பின்னர், இலங்கை காலாட்படை மற்றும் இலங்கை சிங்க படையணி தலைமையிலான 57-வது படைப்பிரிவின் படையினரால் அப்பகுதியைக் கைப்பற்ற முடிந்தது. நவம்பர் 19 அன்று, இந்தப் படையினர் முறிக்கண்டியின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளைத் தாக்கி அப்பகு தியைக் கைப்பற்றியதோடு அந்தப் பகுதியிலிருந்து கிளிநொச்சி நகருக்குச் செல்வதற்கான தடைகளையும் அகற்றினர்.

2008 நவம்பர் 08-ஆம் திகதி 632-ஆவது படையணி மாங்குளத்தை விடுவிப்பதற்கான நடவடிக்கையை ஆரம் பித்ததுடன், 2008 நவம்பர் 11-ஆம் திகதி 631- ஆவது படையணியும் இணைந்து 17-ஆம் திகதி மாங்குளத்தை கைப்பற்றியது. கண்டி-யாழ்ப்பாணம் A9 வீதியில் அமைந் துள்ள ஒரு பிரதான சந்தியான மாங்குளத்திலிருந்து வடக்கு,தென்கிழக்கு மற்றும் மேற்கு கிளிநொச்சி, கனக ராயன்குளம், முல்லைத்தீவு மற்றும் மல்லாவி வரை செல்லும் பிரதான வீதிகளைக் கொண்டிருந்ததாலும், பயங்கரவாதிகளால் பிரதான விமான ஓடுபாதையாக பராமரிக்கப்பட்ட பகுதியாக இருந்ததாலும் இராணுவ ரீதியில் முக்கிய போர் மையமாக இருந்தது. 1999-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து பத்து வருடங்களாக இந்தப் பிரதேசம் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்ததோடு, 63-ஆவது படைபிரிவின் படையின ரால் மாங்குளம் நகரம் கைப்பற்றப்பட்டதால், கிளி நொச்சி, ஒட்டுசுட்டான் மற்றும் மல்லாவி ஆகிய பிரதே சங்களில் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பினரின் விநியோகப்பாதை யாகவும் பயங்கரவாத குழுக்களை அழைத்து வருவதற்

கான பாதையாகவும் இருந்து வந்த அவ்வீதி தடைப்பட்டதன் காரணமாக தோல்வியுற்ற பயங்கரவாதிகள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

2008-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி பாதுகாப்புப் படையினர் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் பிரதான மையமான கிளிநொச்சியை நெருங்கிக் கொண்டிருந்தபோது, அடுத்தடுத்த வெற்றிகளுடன் மடம் பகுதியையும் பட்டருவல் வில்லு பகுதியையும் கைப்பற்ற முடிந்தது. மடம் பிரதேசமானது பாதுகாப்பு படையினர் கைக்கு சென்றால் அவர்கள் பூநகரியை அடைவதை தடுக்க இயலாமல் போகும் என்பதால் பயங்கரவாதிகளுக்கு மிகவும் முக்கியமான ஒரு பிரதேசமாக மடம் இருந்தது. மடம், ஜயபுரம் மற்றும் வன்னேரிகுளத்தில் கடுமையான எதிர்த்தாக்குதல்களை எதிர்கொண்ட 583-வது படையணி, பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் அப்பகுதியை வென்றனர். கிளிநொச்சியைச் சுற்றி வளைத்திருந்த பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றியிருக்க வேண்டிய மற்றொரு முக்கியமான கிராமமான அக்கராயன்குளத்தைப் பாதுகாக்க நவம்பர் 5-ஆம் திகதி எல்.ரீ.ரீ.ஈ.யினர் தமது முழு பலத்தையும் பிரயோகித்திருந்தனர்.

கிளிநொச்சிக்கு செல்லும் அனைத்து வீதிகளும் நீர் அகழிகளாலும் பாரிய மண்மேடுகளாலும் கட்டப்பட்டு சுற்றியுள்ள பிரதேசங்கள் சதுப்பு நிலங்களாக மாற்றப்பட்டிருந்ததுடன் இரணைமடு மற்றும் கல்மடுகுளம் நீர்த்தேக்கங்களின் மதகுகளைத் திறந்து விட்டதன் மூலமும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் வெள்ளத்தில் மூழ்கியதன் மூலமும் பாதுகாப்புப் படையினரின் முன்னேறுவது எல்.ரீ.ரீ.ஈ அமைப்பினரால் இடையூறு செய்யப்பட்டன. நீர் அகழிகளையும் மண்மேடுகளையும் அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட சிவில் மக்களை பலாத்காரமாக இயக்கத்துக்கு இணைத்துக் கொண்டதுடன் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் அவசர அவசரமாக குறுகிய கால பயிற்சிகளை அளித்து அவர்களை பயன்படுத்தி இந்த தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்தப் பின்னணியில், 2008 ஒக்டோபர் 18-ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அக்கராயன்குளத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையில் 57-ஆவது படையணி வெற்றி பெற்றது. இப்பிரதேசத்தில் 12 வாட்டுகளைக் கொண்ட மருத்துவமனை, பாடசாலை, துணை தபால் அலுவலகம், ஆசிரியர்கள் மற்றும் சில தாதியர் இல்லங்கள் போன்றன கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவை அனைத்தும் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பினரால் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டவை ஆகும்.

நாச்சிக்குடாவைக் கைப்பற்றிய பின்னர் முன்னேறிய 58-வது படைப்பிரிவு, பூநகரி இராணுவ நடவடிக்கை முன்னேறியபோது, 2008 நவம்பர் 11 அன்று இரண்டு தளங்களைக் கொண்ட டெவில்பாயிண்டைக் கைப்பற்றினர். இதன் மூலம், பயங்கரவாதிகள் மேற்குக் கடலில் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் கைவிட வேண்டியிருந்தது.

மூன்று முக்கிய வீதிகளை இணைக்கும் பூநகரி பகுதி எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் முக்கிய நில மற்றும் கடல் போக்குவரத்து மையங்களில் ஒன்றாக பயன்படுத்தப்பட்டு வந்தது. 2008 நவம்பர் 14 அன்று, முதல் கட்டத்தை கடந்து வந்த இராணுவப் படையணி, அதே மாதம் 15 ஆம் திகதிக்குள் பூநகரி நகரைக் கைப்பற்ற முடிந்தது. இதன் விளைவாக, 20 ஆண்டுகளின் பின்னர், யாழ்ப்பாண நகரத்திற்கும் பலாலியில் அமைந்துள்ள விமான மற்றும் இராணுவ தளங்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருந்த A-32 வீதியை பாதுகாப்புப் படைகளால் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்ததுடன் யாழ்நகரத்துக்கும் பலாலி இராணுவ முகாமுக்கும் இருந்த பிரதான அச்சுறுத்தலாக இருந்த எல்.ரீ.ரீ.ஈ.யின் பீரங்கித் தாக்குதல்களை முற்றிலும் தடுத்து நிறுத்த எதுவாக இருந்தது. மேற்கு கடற்கரையில் எல்.ரீ.ரீ.ஈ.யின் அனைத்து இராணுவ விநியோகங்களையும் பிற பயங்கரவாத நடவடிக்கைகளையும் முடிவுக்குக் கொண்டுவந்த இராணுவத்தின் அடுத்த திட்டமான பரந்தன் மற்றும் கிளிநொச்சிக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் இதன்மூலம் வழிவகுத்தது.

2008 நவம்பர் 20, அன்று, முதலாவது அதிரடிப்படை நவில் பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பகுதியில் பயங்கரவாதிகளுக்கு சொந்தமான 200 மீட்டர் நீளமுள்ள விமான ஓடுதளத்தை கைப்பற்றியது. பூநகரி-பரந்தன் B-69 வீதியின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி கட்டப்பட்ட விமான ஓடுதளத்தை கைப்பற்றிய இராணுவம் பரந்தனிலிருந்து 14 கிலோ மீற்றர் மேற்கு பகுதியில் ஒரு நடவடிக்கையைத் தொடங்கி முன்னேறினர்.

2008 நவம்பர் நடுப்பகுதியில், A9 பாதையின் கிழக்கே ஒட்டுசுட்டான், இரணைமடு, பரந்தன், முல்லைத்தீவு, சுண்டிக்குளம் மற்றும் A9 பாதையில் அமைந்துள்ள கிளிநொச்சி, ஆனையிறவு, சோரன்பற்று மற்றும் முகமாலை ஆகிய முக்கிய மையங்கள் இன்னும் எல்.ரீ.ரீ.ஈ யின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

பூநகரி பிரதேசத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிய முக்கிய அனைத்து எல்.ரீ.ரீ.ஈ. மையங்களும் அரசாங்க பாதுகாப்புப் படைகளால் கைப்பற்றப்பட்டிருந்ததோடு கிலாலி களப்பு பகுதி எல்.ரீ.ரீ.ஈ. யின் பிடியிலிருந்து விடுபட்டதும் யாழ்ப்பாணத்தில் பயங்கரவாத ஆக்கிரமிப்புக்கான வாய்ப்புகள் இல்லாது போயின. இப்படிப்பட்ட சூழ்நிலையில், யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த 53 மற்றும் 55-ஆவது படைப் பிரிவுகளுக்கும் தெற்கிலிருந்து முன்னேறி வந்த வன்னி நடவடிக்கைகளில் இணைந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அதன்படி, 2008 நவம்பர் 20 அதிகாலையில், வன்னி நடவடிக்கையில் இணைந்த 53 மற்றும் 55-வது படையணிகளின் வீரர்கள் யாழ்ப்பாணக் கடலில் நிலைகொண்டிருந்த எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளின் முன்னரங்க பாதுகாப்பு வளையத்தைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளைத் ஆரம்பித்ததுடன் ஆறு நாட்கள் தாக்குதலுக்குப் பிறகு, 2008 நவம்பர் 26 அன்று, அரசாங்கப் படைகள் எல்.ரீ.ரீ.ஈ.யின் முகமாலை மற்றும் கிளாலி பாதுகாப்பு வளையத்தை உடைத்து எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கு ஒரு பெரும் தோல்வியை ஏற்படுத்தினர்.

2008 நவம்பர் 21 அன்று, கிழக்கிலிருந்து நடவடிக்கை

களைத் ஆரம்பித்த இரண்டாவது படையணி, ஓமந்தையில் இருந்த எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளின் பாதுகாப்பு அரணை உடைத்துக்கொண்டு அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர், வடக்கு நோக்கி மாங்குளம் மற்றும் ஒட்டுசுட்டான் வரை விரிவுபடுத்த முடிந்தது. அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம்-முல்லைத்தீவு A-34 வீதி வரை மாங்குளத்தில் இருந்து வடகிழக்கில் 4 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள ஒலுமடு பிரதேசத்தில் சில காலம் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பினர் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒரு கோட்டையாக இருந்துவந்தது. 2008 நவம்பர் மாதம் 25-ஆம் திகதி 03-ஆவது அதிரடிப்படையின் படையினர் அப்பகுதிக்குள் நுழைந்த போது எல்.ரீ.ரீ.ஈ யுடனான மோதலின் பின்னர் அவர்கள் அப்பகுதியை வெல்ல முடிந்தது.

இராணுவ நடவடிக்கையில் முன்னேறிக்கொண்டிருந்த 59-வது படைப்பிரிவின் துருப்புக்கள் 2008 நவம்பர் 29, அன்று, ஒதியமலை பகுதிக்குள் நுழைந்து எதிரியுடன் கடுமையாக மோதின. அவர்களுக்கு 14-வது சிங்க மற்றும் 12-வது காலாட்படை படைப்பிரிவுகளைச் சேர்ந்த துருப்புகள் உதவியுடன் எல்.ரீ.ரீ.ஈ.யின் பாதுகாப்பு வளையத்தை உடைத்து ஒதியமலை பகுதியைக் கைப்பற்ற முடிந்தது. இதேவேளை கிளிநொச்சி களத்தில் மிகவும் முக்கியமானதும், எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் பலமான மையமான முறிகண்டியை 2008-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ஆம் திகதி 57-ஆவது படைப்பிரிவு கைப்பற்றியது.

2008 டிசம்பர் 02-ஆம் திகதி 59-ஆவது படைப்பிரிவின் படையினர் பெரியங்குளத்தில் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்தினர். நெடுங்கேணியில் இருந்து கிழக்கே நான்கு கிலோமீட்டர் தூரத்திலும் ஒதியமலையில் இருந்து மேற்கே ஒரு கிலோமீட்டர் தூரத்திலும் டிசம்பர் 30 அன்று எல்.ரீ.ரீ.ஈ.யின் ஒரு கட்டளையிடும் பதுங்கு குழி உட்பட ஆறு பதுங்கு குழிகள் பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்டது.

கிளிநொச்சி நடவடிக்கையின் போது மிக முக்கியமான இரண்டு நிலையங்களான புளியங்குளம் மற்றும் கனகராயன்குளம் ஆகிய இடங்களில் 2008 ஜூன் 25-ஆம் திகதி மீட்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போதும் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் எதிர்த்தாக்குதல்கள் காரணமாக பெரும் முயற்சிகளுக்கு மத்தியில் சுமார் ஆறு மாத சண்டையின் பின்னர் பாதுகாப்புப் படையினரால் அப்பகுதிகளைக் கைப்பற்ற முடிந்தது. 621-வது படையணி 2008 டிசம்பர் 03 அன்று புளியங்குளத்தையும் அப்படையணியும் 622-வது படையணியும் இணைந்து 2008 டிசம்பர் 04 கனகராயன்குளத்தை மீட்டன. A9 வீதியில் புளியங்குளத்திலிருந்து கனகராயன்குளம் வரையில் செல்லும் பகுதி கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து அதனை அண்டிய பிரதேசங்களில் பயங்கரவாத செயற்பாடுகளும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததுடன் எல்.ரீ.ரீ.ஈ. இந்த மையங்களில் மனிதக் கேடயங்களாக வைக்கப்பட்டிருந்த பொதுமக்கள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைவதற்கான அணுகல் வழிகளை திறக்கப்பட்டன.

கனகராயன் குளம் நகரமானது கண்டி - யாழ்ப்பாண A9 வீதியில் புளியங்குளத்திற்கு வடக்கே அமைந்துள்ள ஒரு முக்கிய நகரமாகும். மேலும் யாழ்ப்பாணம் மற்றும் ஒலுமடு நோக்கிச் செல்லும் பிரதான வீதிகள் முறையே வடக்கு மற்றும் கிழக்கில் அமைந்துள்ளதால் போர் ரீதியாக இது மிக முக்கியமான நகரமாக இருந்தது. 1997 ஆம் ஆண்டில் இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட 'ஜய சிக்குருய்' நடவடிக்கையின் பிரதான செயல்பாட்டு மையத்தில் இந்நகரம் அமைந்திருந்தது. அதன் பின்னர் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட இந்நகரம் 2008 டிசம்பர் நாலாம் தேதி 621 மற்றும் 622 படை அணிகளினால் கையகப்படுத்தப்பட்டு சுமார் பத்து வருடங்கள் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்தது. புளியங்குளத்தைக் கைப்பற்றிய பின்னர், A9 பாதையின் ஊடாக வடக்குக்குச் சென்ற பாதுகாப்புப் படையினர் அதே பாதையில் அமைந்துள்ள மற்றொரு பிரதான மையமான கனகராயன்குளத்தைக் கைப்பற்றினர். இந்நகரங்களுக்கு இடையில் A9 வீதி மற்றும் அவை அமைந்துள்ள பிரதேசங்களில் பயங்கரவாதிகளின் அனைத்து நடவடிக்கைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டன.

கிழக்கிலிருந்து முன்னேறி கிளிநொச்சி நடவடிக்கைக்கு பங்களிப்புச் செய்த 59-ஆவது படைப்பிரிவின் படையினர் 2008 டிசம்பர் 04-ஆம் திகதி அலம்பிலைக் கைப்பற்றினர். கிழக்கு கடற்கரையில் எல்.ரீ.ரீ.ஈ.இயக்கத்தின் முக்கிய கடற்புலிகளின் தளம் வெற்றிகொள்ளப்பட்டதோடு, முல்லைத்தீவில் உள்ள ஏனைய கடற்புலிகளின் முகாம்களின் மீது பாதுகாப்புப் படையினரால் தாக்குதல் நடத்தும் வாய்ப்பு திறக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது கொக்குத்தொடுவாயிலிருந்து முல்லைத்தீவு வரையான பாதையின் கொக்குதொடுவாயிலிருந்து அலம்பில் வரையான பகுதிகள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டன. எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் கடற்புலிகளுக்கு சொந்தமான ஏராளமான தற்கொலை வெடி குண்டுகள், தாக்குதல் படகுகள் மற்றும் செயலில் உள்ள ராடார் நிலையம் ஆகியவற்றை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர். இதன்போது கடற்புலிகளின் தலைவர்கள் உள்ளிட்ட பல உறுப்பினர்களும் 59-வது படைப்பிரிவின் துருப்புக்களால் கொல்லப்பட்டனர்.

2008 டிசம்பர் 04-ஆம் திகதி அதிரடிப்படையினர் எல்.ரீ.ரீ.ஈ.யினர் மீது தாக்குதல் நடத்தி வவுனியா மாவட்டத்தின் புளியங்குளத்தையும், அதே மாதம் 5-ஆம் திகதி கனகராயன் குளத்தையும், 2008 டிசம்பர் 09-ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலையையும் கைப்பற்றினர். 2008 டிசம்பர் 12-ஆம் திகதி குமிழமுனையில் நிர்மாணிக்கப்பட்ட முன்னரங்க பாதுகாப்பு வளையம், டிசம்பர் 15-ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட அம்பகாமம் பிரதேசத்தையும் கைப்பற்றினர். பல ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்திருக்கும் அம்பகாமம் என பெயரிடப்பட்டுள்ள அம்பகமுவ, வெஹெர விகாரையின் தொல்லியல் இடிபாடுகள் ஏராளம். அங்கு ஒரு தூபி இடிக்கப்பட்டு ஒரு தானியக் களஞ்சியம் கட்டப்பட்டிருந்ததுடன் ஸ்தூபியின் செங்கற்களும் கட்டிடங்களின் கற்கள் பதுங்கு குழிகளை உருவாக்க பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்த நடவடிக்கைகளில் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் தாக்குதல்களுக்கு பாதுகாப்பு படை

யினரின் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

2008 டிசம்பர் 12 முதல் 17 வரை, 58-வது படையணியால் நல்லூர் முதல் சின்னப்பறிச்சான் வரையிலான பீ69 வீதியை கைப்பற்ற முடிந்தது. இப்பகுதியைச் சுற்றியிருந்த மண்மேட்டை இராணுவத்தினரால் கைப்பற்ற முடிந்தது. ஆனால் அடுத்த நாள் அதிகாலையில், பயங்கரவாதிகள் திட்டமிட்ட முறையில் பதிலடி கொடுத்தனர். இதன்போது கொமாண்டோக்கள் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் கடுமையாக சண்டையிட்டு மீண்டும் மண் அணையை கைப்பற்றிய பாதுகாப்புப் படையினர் சின்னப்பறிச்சான் வரையிலான பிரதேசத்தை கைப்பற்றினர்.

2008 டிசம்பர் 21, அன்று பல முக்கிய நகரங்களை இணைக்கும் வீதிகளைப் பிரிக்கும் ஒரு சந்தியில் அமைந்துள்ள நெடுங்கேணியானது பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டது. நகரின் வடக்கு, தென்மேற்கு மற்றும் தென்கிழக்கில் முறையே ஒட்டுச்சுட்டான், கனகராயன்குளம் மற்றும் மணலாறு நோக்கி செல்லும் வீதிகள் உள்ளன. நான்காவது அதிரடி படை வீரர்கள் இந்தப் பிரதேசத்தில் தமது பலத்தை நிலை நிறுத்துவதற்காக, பயங்கரவாதிகளினால் மணலாறு பிரதேசத்தை நோக்கி துப்பாக்கி, மோட்டார் குண்டு தாக்குதல்கள் முழுவதுமாக நிறுத்தப்பட்ட பின்னர் ஒட்டுச்சுட்டான் மற்றும் கனகராயன்குளம் போன்ற பிரதான நகரங்களுடனான தொடர்பு முறிந்ததோடு, பயங்கரவாத குழுக்களுடனான போக்குவரத்துகள், விநியோகங்கள் தடைபட்டதன விளைவாக பயங்கரவாத நடவடிக்கைகள் பெரும் பின்னடைவை சந்தித்தன. இரணைமடு பிரதேசத்திற்கு தெற்கில் உள்ள வனப்பிரதேசத்தில் மிகவும் ரகசியமாக கட்டப்பட்டிருந்த எல்.ரீ.ரீ.ஈ அமைப்பிற்கு சொந்தமான விமான ஓடுபாதை 24 டிசம்பர் அன்று பாதுகாப்பு படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

வன்னி மனிதாபிமான நடவடிக்கையின் போது கிளிநொச்சி மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கு முன்னர் முள்ளியவளை மற்றும் பரந்தன் பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட இருந்தன. ஒட்டுசுட்டான்-முல்லைத்தீவு வீதியில் உள்ள ஒரு முக்கிய நகரமான முள்ளியவளையைக் கைப்பற்றும் நடவடிக்கையை ஆரம்பித்த 59-வது படைப்பிரிவு 2008 டிசம்பர் 25 அன்று நகருக்குள் நுழைந்தது.

இப்பகுதியின் பாதுகாப்புக்காக கட்டப்பட்ட நீர் அகழிகள் மற்றும் மண்மேடுகளைப் பயன்படுத்தி ஒரு சதுப்பு நிலமாக மாற்றப்பட்டிருந்த அப்பிரதேசத்திற்குள் பிரவேசிப்பது பாதுகாப்பு படையினருக்கு மிகவும் கடினமானதாக இருந்த நிலையில் டிசம்பர் 26 அன்று இரு தரப்பினருக்கும் இடையே கடுமையான மோதல்கள் வெடித்தன. அதுவரை எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த மிக முக்கியமான மையமான கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவின் பாதுகாப்பை சீர்குலைத்து பாதுகாப்பு படையினரால் முள்ளியவளை நகரை கைப்பற்ற முடிந்தது. இந்த நகரில், எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கு சொந்தமான ஒரு பெரிய தகவல் தொடர்பு கோபுரத்தை இராணுவம் கண்டுபிடித்ததோடு எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்குச் சொந்தமான தண்ணியூற்று பிரதேசத்தையும் கைப்பற்றினர். A9 வீதியின் கிழக்கு மற்றும் மேற்கு திசைகளில் நிலைநிறுத்தப்பட்ட இந்த மூன்று முனைகளுக்கும்.

28 டிசம்பர் 2008 அன்று, பாதுகாப்புப் படையினர் நெடுங்கேணி-புளியங்குளம் வீதியைக் கைப்பற்றினர். டிசம்பர் 30 அன்று, பரந்தன் மேற்கு, கச்சுவன்கட்டி மற்றும் குமரிக்குளம் ஆகிய பகுதிகளை பலப்படுத்துவதன் மூலம் முன் பாதுகாப்பு வளையம் விரிவுபடுத்தப்பட்டது.

கிளிநொச்சி இராணுவ நடவடிக்கைக்கு சாதகமான சூழலை தயார்படுத்தும் இறுதி நடவடிக்கையான பரந்தனைக் கைப்பற்றும் முதலாம் கட்டமானது 58-ஆவது படையணி, கொமாண்டோ படையணி மற்றும் வேறு சில படையணிகளின் உதவியுடன் 2008 டிசம்பர் 17-ஆம் திகதி நிறைவடைந்தது. டிசம்பர் 20-ஆம் தேதி இரண்டாம் கட்ட இறுதியில், இந்த படைகள் எதிரிகளின் பாதுகாப்பு வளையத்தை உடைத்து முன்னேறி 2009 ஜனவரி 1-ஆம் தேதி பரந்தன் நகரம் கைப்பற்றப்பட்டது. இதன்போது பயங்கரவாதிகளின் வலுவான எதிர் தாக்குதல்களின் மத்தியில், கடினமான காலநிலைமைகளின் மத்தியில், மோசமான அனுபவங்களுடன் அடையப்பட்ட வெற்றியாகும். பரந்தனின் வெற்றியுடன், யாழ்ப்பாணத்தில் பயங்கரவாத தாக்குதல்களுக்கான சாத்தியம் முற்றாக அகற்றப்பட்டதுடன், பயங்கரவாதிகளின் ஆனையிறவு முகமாலை மற்றும் கிளாலி செல்வதற்கான ஒரே தரை வழிப் பாதையும் அடைக்கப்பட்டது.

58-வது படைப்பிரிவின் தலைமையிலான படையினர் பரந்தன் மீதான இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த போது 57-ஆவது படைப்பிரிவு 2008 டிசம்பர் 16-ஆம் திகதியும் 632-ஆவது படைப்பிரிவு 23 ஆம் திகதியும் கிளிநொச்சிக்கு 6 கிலோமீற்றர் தெற்கு திசையில் அமைந்திருந்த, இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இரணைமடு பிரதேசத்தை இரண்டு இடங்களில் இருந்து கைப்பற்றும் நடவடிக்கையை ஆரம்பித்தனர். கிளிநொச்சியை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றுவதைத் தடுப்பதற்காக, பயங்கரவாதிகள் அப்பகுதியில் மிகவும் வலுவான மண் மேட்டை அமைத்து, சுற்றுப்புறத்தில் ஏராளமான நாசகர கண்ணிவெடிகளையும் மரண பொறிகளையும் ஏற்படுத்தி பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர். எனினும், டிசம்பர் 16 அன்று, 57-வது படையணி தலைமையிலான இராணுவப் பிரிவுகள் பதுங்கு குழிகளை அடையாளம் கண்டு அவற்றைத் தாக்கி இரு தரப்பினருக்கும் இடையிலான கடுமையான மோதல்களுக்கு மத்தியில் அப்பகுதியைக் கைப்பற்ற முடிந்தது. 2009-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01-ஆம் திகதி இரணைமடு நகரை உள்ளடக்கியிருந்த பதுங்கு குழிகளை பாதுகாப்புப் படையினர் அழித்து நகரைக் கைப்பற்றினர்.

கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக, எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு பாரிய மண்மேடுகளை அமைத்து பாதுகாப்பு அரண்களை ஏற்படுத்தி தமது அபிலாஷையான ஈழ அரசினது தலைநகராக ஆக்கிக்கொண்ட கிளிநொச்சி நகரை

பாதுகாத்து வந்த போதும் பல நாட்கள் நடத்தப்பட்ட மோதல்களின் பின்னர், இராணுவத்தால் அனைத்து பாதுகாப்பு கட்டுமானங்களையும் அழிக்க முடிந்தது. 2008 டிசம்பர் 25, அன்று, 57-வது படைப்பிரிவின் 571-வது மற்றும் 572-வது படையணிகள் ஒன்றிணைந்து அவர்களின் முதல் பாதுகாப்பு வளையத்தை தகர்த்த துடன் 58-வது படைப்பிரிவின் 582-வது படையணி 2009 ஜனவரி1-ஆம் தேதி தனது இரண்டாவது பாதுகாப்பு வளையத்தையும் உடைத்ததோடு அம்மாதம் இரண்டாம் தேதி கிளிநொச்சி நகரை பாதுகாப்பு படையினரால் கைப்பற்ற முடிந்தது. ராணுவம் பயங்கரவாதிகளுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியதோடு, எல்.ரீ.ரீ.ஈ. அமைப் பின் வரலாற்றில் மிக மோசமான தோல்வியாகக் கருதப் படும் கிளிநொச்சி நகரம் மற்றும் கனகராயன் ஆறு ஆகி யவற்றின் இழப்பு வன்னி மனிதாபிமான நடவடிக்கையில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். இது அவர்களின் இராணுவ மற்றும் நிர்வாக அமைப்புகளின் முழு வலையமைப்பும் எல்.ரீ.ரீ.ஈ.க்கும் அரசுசாரா சர்வதேச அமைப்புகளுடனான அமைப்பின் உறவுகளும் இதனால் முற்றிலுமாக வீழ்ந்தன.

57-ஆவது படையணியானது அதிரடிப்படையின் 3 மற் றும் 4-ஆவது படையணிகளுடன் இணைந்து A-34 வீதியில் மாங்குளம் மற்றும் தண்ணியூற்று வரையான பகுதிகளையும், 2009 ஜனவரி 05-ஆம் திகதி முல்லைத் தீவின் ஒடுசுட்டான் வரையான பகுதிகளையும் மீட்டது. பயங்கரவாதிகளின் இதயமாக இருந்த முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பு ஆகியவற்றின் பாதுகாப்புக்கு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒடுச்சுட்டான் கைப் பற்றப்பட்ட பின்னர், முல்லைத்தீவு முதல் மாங்குளம் வரையிலான A-34 வீதி பாதுகாப்பு படையினரின் கைகளில் சிக்கியது.

2009-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06-ஆம் திகதி 53-ஆவது மற்றும் 55-ஆவது படையணிகள் முகமாலை பிர தேசத்தில் தேடுதல் நடவடிக்கையொன்றை ஆரம் பித்தன. எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் இரண்டாவது பாதுகாப்பு வளையத்தை உடைத்து பீரங்கி மற்றும் போர் தாங்கி களைப் பயன்படுத்தி அந்தப் பகுதியைக் கைப்பற்றினர். பாதுகாப்பு படையினரின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத பயங்கரவாதிகள் தப்பி ஓடிவிட்டனர். 2009 ஜனவரி 08-ஆம் திகதி 53-ஆவது படைப்பிரிவின் கீழ் இயங்கிய விஜயபா மற்றும் கஜபா படைப்பிரிவுகள் பளை பிரதேசத்தில் எதிரிகளை தோற்கடித்து தமது பலத்தை நிறுவின.

53-வது மற்றும் 55-வது படையணிகளின் வீரர்கள் தொடர்ந்து தெற்கு நோக்கி செயல்பட்டு 2009 ஜனவரி 08-ஆம் திகதி பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து A9 வீதியில் பயங்கரவாதிகளின் பிரதான மையமான பளை மற்றும் சேரன்பற்று நகரங்களை மீட்டனர். A9 வீதியில் பளைக்கும் ஆனையிறவுக்கும் இடையில் அமைந்துள்ள சேரன்பற்று கைப்பற்றப்பட்டமையானது யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயங்கரவாத செல்வாக்குக்கான அனைத்து சாத்தியக்கூறுகளையும் முற்றாக அடைத்தது. இதனால் இந்த படைப்பிரிவுகள் 58-வது படைப்பிரிவுடன் கை கோர்த்து தாம் திட்டமிட்ட ஆனையிறவைக் கைப்பற்றும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு சாதகமான சூழலை உருவாக்கியது.

58-வது படைப்பிரிவு, வேறு பல படைப்பிரிவுகளுடன் சேர்ந்து, பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் உள்ள பிர தான நகரான முரசுமோட்டையைக் கைப்பற்றி அங்கு அரசாங்கத்தின் பலத்தை ஸ்தாபிப்பதற்கான நடவடிக் கையை முன்னெடுத்தது.

**221.** 58-ஆவது படைப் பிரிவும் கொமாண்டோ படைப் பிரிவின் படையினரும் பரந்தனில் இருந்து வடக்கே நகரத் தொடங்கினர். 53 மற்றும் 55-ஆவது படைப் பிரிவு களின் துருப்புக்கள் சேரன்பற்றிலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்து அவர்கள் எதிர்கொண்ட அனைத்து தடைக ளையும் தகர்த்து வரலாற்று சிறப்புமிக்க ஆனையிறவு பிரதேசத்தை 2009 ஜனவரி 09-ஆம் திகதி எதிரியின் பிடி யிலிருந்து மீட்டனர். பாதுகாப்புப் படைகளால் அந்ந கரம் கைப்பற்றப்பட்டவுடன், எல்.ரீ.ரீ.ஈ. யாழ்ப்பாணம் குடாநாட்டிற்கு செல்லும் ஒரே பாதையையும் பயங்கரவா திகள் இழந்தனர். ஆனையிறவு வீதியை மீட்பதற்கு முன்பு, அப்பகுதி ஒன்பது வருடங்கள் எல்.ரீ.ரீ.ஈ. பயங்கர வாதிகளின் பிடியில் இருந்தது. இந்த நடவடிக்கையில் சேரன்பற்றிலிருந்து முன்னேறத் தொடங்கிய 533 மற்றும் 553-வது படையணிகள் இயக்கச்சி நகரைக் கைப்பற்றிய துடன் 551-வது படையணி வெற்றிலைக்கேணி நகரத் தைக் கைப்பற்றியது.

எல்.ரீ.ரீ.ஈ.யின் கடற்புலிகளின் நடமாட்டம் அதிகமாக இருந்த வெற்றிலைக்கேணியைக் கைப்பற்றியதன் மூலம் முன்னோக்கி பயணித்த 551வது படையணியினர் 2009 ஜனவரி 10-ஆம் திகதி முதல் அதே மாதம் 14-ஆம் திகதி வரை கட்டைக்காடு, கெக்காவில் மற்றும் வடக்கு சுண்டிக்குளம் ஆகிய பகுதிகளை கைப்பற்றியதுடன், 2009 ஜனவரி 14-ஆம் திகதி கடற்புலிகளின் மையமாக இருந்த சுண்டிக்குளம் பிரதேசத்தை தமது கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை, ஜனவரி 01-ஆம் திகதி இரணைமடு நகரை கைப்பற்றிய 57-ஆவது படையணி மற்றும் 3-ஆவது அதிரடிப்படை ஆகியன ஜனவரி 14-ஆம் திகதி இரணைமடு அணைக்கட்டை வந்தடைந்தன. 2009 ஜனவரி 16-ஆம் திகதி வேறு பாதையில் வந்த 632 ஆவது படையணி கொக்காவில் விமான ஓடுபாதையை கைப்பற்றி 2009 பெப்ரவரி 04-ஆம் திகதி இரணைமடு அணையை நோக்கி சென்றது. அணைத் தொட்டியின் இருப்பிடத்தை தனக்கு சாதகமாக மாற்றிய எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு அதன் மீது பதுங்கு குழிகளை அமைத்து பாதுகாப்புப் படையினரின் முன்னேற்றத்தைத் தடுக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தது. முழு அணையின் தெற் குப் பகுதி கண்ணிவெடிகள் மற்றும் மரணப் பொறி களால் பாதுகாக்கப்பட்டதுடன், அங்கு இரு தரப்பின ருக்கும் இடையே கடுமையான சமர் நடந்தது. சுமார் 100 மீட்டர் நீளமும் 50 மீட்டர் அகலமும் கொண்ட விமான ஓடுபாதையையும் இராணுவத்தால் கண்டுபிடிக்க முடிந் தது. ஜனவரி 16, 2009 அன்று, மேற்கூறிய படையினர் இரணைமடு ஏரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிக ளைக் கைப்பற்றினர். இது ஒரு பயங்கரவாதிகளின் பெரிய கோட்டையாகும். இதன் விளைவாக எல்.ரீ.ரீ.ஈ. இரண்டு பெரிய விமான தளங்களை இழந்தது மட்டுமல் லாமல் அவர்களின் வான் பலத்தையும் இராணுவம்

முடக்கியது. அணையை வெடிக்கவைத்து தகர்த்ததில் அதனை சுற்றியுள்ள தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியது மட்டுமல்லாமல் அப்பகுதிகளினூடாக புதுக் குடியிருப்பு நோக்கி பயணித்த இராணுவத்தினரை சேதத்திற்குள்ளாக்குவதற்கு எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு மேற் கொண்ட போர்த் திட்டமும் முறியடிக்கப்பட்டது.

ஜனவரி 15, 2009 அன்று, 58-வது படைப்பிரிவின் துருப் புக்கள் வன்னி போர்க்களத்தில் தர்மபுரம் கிராமத்தைக் கைப்பற்றின. கிளிநொச்சி நகரப் பகுதியின் வடக்கு எல் லையாகக் கருதப்படும் கரடிப்போக்கு பகுதியையும் 2009 ஜனவரி 16-இல் பாதுகாப்புப் படையினர் கைப்பற் றினர்.

பொதுமக்கள் எல்.ரீ.ரீ.ஈ.யின் பிடியிலிருந்து தப்புவதற்கு உதவுவதற்காக இராணுவத்தினர் படிப்படியாக யுத்த வலயத்தை அடைந்து பல்வேறு வழிகளில் மக்கள் வெளியேறுவதற்கு வசதியாகவும் இருந்ததன் விளைவா கவும், 2009 பெப்ரவரி முதல் வாரத்தில் சுமார் 20,000 பொதுமக்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்கு வந்தனர். இதற்கிடையில், 631-ஆவது படையணியின் கீழ் 4-வது இலங்கை காலாட்படையின் துருப்புக்கள் கரையோரப் பகுதியான உடையார்கட்டு குளம் பகுதிக்கு வடக்கே இரும்பு தகடுகள் மற்றும் சீமெந்தைப் பயன்படுத்தி கட்டப்பட்ட 50×75 அடி வேலைத்தளங்கள் மூன்றையும் மற்றும் 20×30 அடி அளவில் முழுமையாக ஓடுகளால் வேயப்பட்ட ஒரு சொகுசு வீட்டையும் கைப்பற்றினர். இரும்பைப் பயன்ப டுத்தி கட்டப்பட்ட 35அடி நீளமுள்ள நீர்மூழ்கிக் கப்ப லும் அரைகுறையாக முடிக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் களும் வாகனங்களை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப் படும் கனரக வாகனத்திலிருந்து பறிமுதல் செய்யப் பட்டன. நீர்மூழ்கிக் கப்பல் கட்டுமானப் பகுதியில் இருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவில், பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினரைத் தாக்கி, நீர்மூழ்கிக் கப்பல் கட்டுமானப் பகுதிக்கு வருவதைத் தடுக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர். ஆனால் படையினர் அவற்றைக் கைப்பற்றினர்.

பாதுகாப்புப் படைகளின் அடுத்த இலக்கு எல்.ரீ.ரீ.ஈ.யி னரின் எஞ்சியிருந்த ஒரேயொரு கோட்டையான முல் லைத்தீவைக் கைப்பற்றுவதாகும். கன்னியார் கோயி லுக்கு அருகில் ஒரு பெரிய ஸ்தூபி தோண்டப்பட்டு ஒரு பதுங்கு குழி கட்டப்பட்டிருந்தது. கள்விளான் கிரா மத்தில் இருந்த ஸ்தூபி அகற்றப்பட்டு, அங்கிருந்து செங்கற்களை எடுத்து ஒரு பண்ணைக் கிணறு உருவாக் கப்பட்டு, கட்டிடங்களின் கற்கள் கழிப்பறைகளுக்கு பயன் படுத்தப்பட்டிருந்தன. 59-வது படைப்பிரிவின் கீழ் 591, 592 மற்றும் 593 படையணிகள் மேற்கு எல்லையான முள் ளியவளை, தண்ணியூற்று, வற்றாப்பளை மற்றும் நந்திக் கடல் களப்பையும், அங்கு கட்டப்பட்ட மிகப்பெரிய பயங் கரவாத விமான ஓடுதளத்தையும் 2008 டிசம்பர் 12-ஆம் திகதி முதல் கடுமையான மோதல்களின் பின்னர் கைப் பற்றினர். இதனால், பயங்கரவாதிகளின் மிக முக்கிய பகுதியாக கருதப்பட்ட முல்லைத்தீவு நகரை மூன்று பக் கங்களிலும் சுற்றிவளைத்தது மட்டுமல்லாமல், 2009 ஜனவரி 2-ஆம் திகதி பயங்கரவாதிகளின் வான்பலத் தையும் பலவீனப்படுத்தவும் முடிந்தது.

ஜனவரி 12 அன்று, முல்லைத்தீவுக்கு தெற்கே நடவடிக் கைகளை முன்னெடுத்த 59-ஆவது படையணி, முள்ளி யவளை மற்றும் பதுங்கு குழிகளையும் தண்ணியூற்று வைத்தியசாலையையும் கைப்பற்றியது. அன்றைய தினமே பாதுகாப்புப் படையினர் அங்கு குவிக்கப்பட்டு எல்.ரீ. ரீ.ஈ. பயங்கரவாதிகளை பயங்கரமாகத் தாக்கி முள்ளிய வளையும் ஜனவரி 17 அன்று, ராமநாதபுரம் பகுதியும் மீட் கப்பட்டது.

2009 ஜனவரி 21-ஆம் திகதி புதுக்குடியிருப்பு மேற்கில் வன்னி மனிதாபிமான பணியில் ஈடுபட்டிருந்த அதிரடிப் படையினர் உடையார்காட்டுக்குளம் ஏரிக்கு அருகில் இருந்த எல்.ரீ.ரீ.ஈ.யினரின் இரண்டு வெடிகுண்டு தயா ரிக்கும் தொழிற்சாலைகளைக் கைப்பற்றியது. மெல்ல மெல்ல 4-வது அதிரடிப்படையும் நடவடிக்கைகளை மேற்கொண்டு புதுக்குடியிருப்பு நோக்கி நகர்ந்ததுடன் அந் நடவடிக்கையின் போது எல்.ரீ.ரீ.ஈ.யினரின் இரண்டு முகாம்கள் கைப்பற்றப்பட்டன.

**228.** 2009 ஜனவரி 23, அன்று, 641 படையணியைச் சேர்ந்த துருப்புக்கள் பயங்கரவாதிகளின் இரசாயன தொழிற் சாலை மீது தாக்குதல் நடத்தினர். எல்.ரீ.ரீ.ஈ. தலைவர் பிரபாகரனின் மூன்று மாடி நிலக்கீழ் வீடு என்று நம்பப் படும் கட்டிடமும் கடுமையான மோதல்களின் பின்னர் கைப்பற்றப்பட்டது. இந்த வீட்டிற்கு அருகிலுள்ள ஏனைய 10 முகாம்களில் கண்டுபிடிக்கப்பட்டது.

முல்லைத்தீவு பிரதேசத்தில் சிக்கியிருந்த எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளை கண்டுபிடிப்பதற்காக பல மாவட்டங் களில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த பாது காப்புப் படையினர் முன்னேறுவதைத் தடுப்பதற்காக 2009 ஜனவரி 24-ஆம் திகதி கல்மடுகுளத்தின் அணை யை எல்.ரீ.ரீ.ஈ.யினர் வெடிவைத்து தகர்த்தனர். அதனால் தருமபுரம், ராமநாதபுரத்தின் பல பகுதிகள் வெள்ளத் தால் மூழ்கின. இதனால் பயங்கரவாதிகளால் சிறைபிடிக் கப்பட்ட பொதுமக்கள், ராணுவம் மற்றும் பயங்கரவாதி களும் பெரும் சிரமத்திற்கு ஆளாகினர்.

இதற்கிடையில், 593-ஆவது படையணி 2009 ஜனவரி 24 ஆம் திகதி இரவு, எதிரியை அதிர்ச்சியூட்டியபடி எதிர்த் தாக்குதலை நடத்தி முல்லைத்தீவு நகரின் வடக்கில் நுழைந்து தெற்கு பகுதி மீது தாக்குதல் நடத்தி. ஜனவரி 25 அன்று, எல்.ரீ.ரீ.ஈ.யினரின் தொடர்புகளைத் துண் டித்து அவர்களின் முக்கிய போர் மையங்களில் ஒன் றான முல்லைத்தீவைக் கைப்பற்றினர். எல்.ரீ.ரீ.ஈ. தங்க ளது இராணுவ நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க மட்டு மல்லாமல் சர்வதேச உறவுகளைப் பேணுவதற்கும் பயன்ப டுத்தப்பட்ட முல்லைத்தீவு நகரத்தை இழந்த பின்னர், ஜனவரி 26 அன்று, 591-ஆவது படையணியினால் வட்டு வக்கால் நகரைக் கைப்பற்ற முடிந்தது.

இதற்கிடையில், 57-வது படைப்பிரிவின் வீரர்கள் 2009, 25ஜனவரி அன்று நயினடியாறு வரையிலான பகுதியைக் கைப்பற்றும் நடவடிக்கையைத் தொடங்கின. கிளிநொச் சிக்கு கிழக்கே மற்றும் புதுக்குடியிருப்பு நகருக்கு

மேற்கே உள்ள கோலமடுகுளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது, கோலமடு குளத்தின் கரைகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதிகளின் எதிர்த்தாக்குதலை இராணுவம் முறியடித்து அப்பகுதியைக் கைப்பற்றியது.

57 மற்றும் 58-ஆவது படையணிகள் 2009 ஜனவரி 24 முதல் 29 வரை விஸ்வமடு, நலியதச்சுவான் மற்றும் கலைமடு பகுதிகளில் எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகளின் வலுவான எதிர்த்தாக்குதலை எதிர்கொண்டு தமது நடவடிக்கைகளை மேற்கொண்டன. பயங்கரவாத தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பதுங்கியிருந்த இடம் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ.யின் முக்கிய பிரதான தலைமையகம் அமைந்திருந்த. விஸ்வமடு பிரதேசத்திற்குள் பாதுகாப்பு படையினர் பிரவேசிப்பதை தடுக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டது. விஸ்வமடு சந்தியின் வடக்கே உள்ள நெத்தலியாற்று பாலம் வெடிவைத்து தகர்க்கப்பட்டதையடுத்து, கலைமடு ஏரியின் கரையை உடைத்து எதிரேவரும் இராணுவத்தினரை சிக்கவைத்து கொல்லத் திட்டம் தீட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் பாதுகாப்பு படையினரின் திட்டங்களுக்கு முன்னால் பயங்கரவாதிகளின் நோக்கம் நிறைவேறவில்லை.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்புலிகளின் நடவடிக்கைகளுக்கு மிகவும் முக்கியத்துவமுள்ள சாலை பகுதியைக்கைப்பற்றுவதற்கான நடவடிக்கையை 55-ஆவது படைப்பிரிவு ஆரம்பித்து 2009 பெப்ரவரி 05-ஆம் திகதி வரை தொடர்ந்தது. இரு தரப்பினருக்கும் இடையே கடும் சண்டைக்குப் பிறகு, பாதுகாப்புப் படையினர் அப்பகுதியை கைப்பற்றினர். கடற்புலிகளின் கட்டுப்பாட்டில் எஞ்சியிருந்த கடைசி கடற்புலிகளின் தளமான சாலையை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியதால், எல்.ரீ. ரீ.ஈ. அமைப்பின் ஒட்டுமொத்த கடற்புலிகளின் பலத்தையும் பாதுகாப்புப் படையினர் வெற்றிகொண்டிருந்தனர்.

இதற்கு முன்னர் 2009-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06-ஆம் திகதி விஸ்வமடு கிழக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டிருந்த 57-ஆவது படையணியானது கரும்புலி ராதா படையணியின் தலைமையகத்தையும் கைப்பற்றியது. எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் தலைவருக்கும், அந்த அமைப்பின் விமானப் பிரிவுக்கும் பாதுகாப்பு வழங்கியதாகக் கூறப்படும் 'ரத்னம்' என்பவர் இதன் தலைவராக இருந்ததாகக் கூறப்படுகிறது. முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து வடகிழக்கே ஒரு கிலோமீட்டர் தூரத்தில் எல்.ரீ.ரீ.ஈ. தலைவர்களின் நவீன பதுங்கு குழிகளை இலக்கு வைத்து விமானப்படையினர் பெப்ரவரி 6-ஆம் திகதி கிபீர் மற்றும் A07 ரக போர் விமானங்கள் தாக்குதலை நடத்த பயன்படுத்தப்பட்டன. இத்தாக்குதலின் போது மூத்த எல்.ரீ.ரீ.ஈ. தலைவர் ஒருவர் உட்பட 11 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தொடர்ச்சியாக தோற்கடிக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ.யினர், தங்கள் முழுப் பலத்தையும் பிரயோகித்து பதிலடி கொடுத்தது மட்டுமல்லாமல், பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு தப்பிச் செல்வதைத் தடுக்க தங்களிடம் பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த பொதுமக்களை பல்வேறு வழிகளில் சித்திரவதை செய்தனர். அதுவரைக் காலமும் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் கட்டுப்பாட்டில் இருந்த A-35 வீதியில் உள்ள சுதந்திரபுரம் கிராமத்தில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த ஒரு இடத்தை தாக்கி ஏராளமான பொதுமக்களைக் கொன்றனர். பயங்கரவாதிகளின் பலத்த எதிர்த்தாக்குதல்களுக்கும் மத்தியில் 2009-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01-ஆம் திகதி முதல் 09-ஆம் திகதி வரை சுதந்திரபுரம் கிராமத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையில் 58-ஆவது படையணி, 581-ஆவது மற்றும் 582-ஆவது படையணிகள் மற்றும் ஏனைய பிரதான இராணுவப் பிரிவுகள் வெற்றி பெற்றன.

2009 பெப்ரவரி முதல் வாரத்தில் 57-வது படையணி புதுக்குடியிருப்பைக் கைப்பற்றும் நடவடிக்கையைத் ஆரம்பித்தது. உடையார்கட்டுக்குளம் ஏரி மற்றும் அதே கிராமப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின் போது, பாதுகாப்புப் படையினர் மீது பயங்கரவாதிகள் நடத்திய எதிர்த்தாக்குதல் மிகக் கடுமையான மட்டத்தில் இருந்தது. கனரக ஆயுதங்கள் மற்றும் பீரங்கித் தாக்குதல்களும் இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டாலும் எதிர்த்தாக்குதல் தொடுத்து புதுக்குடியிருப்பு பகுதியின் மேற்குப் பகுதியில் அதாவது உடையார்கட்டுக்குளம் ஏரியையும் அப்பிரதேசத்தின் A35 வீதியின் ஒரு பகுதியையும் பெப்ரவரி 10 அன்று, 57-வது படையணி தலைமையிலான 572-வது படையணி மற்றும் கஜபா ரெஜிமென்ட், விஜயபா ரெஜிமென்ட், இலங்கை காலாட்படை, ஸ்ரீலங்கா சிங்க ரெஜிமென்ட் மற்றும் பிற ஆயுதப் படைகளால் கைப்பற்ற முடிந்தது.

2009 பெப்ரவரி 11-ஆம் திகதி 58-ஆவது படையணியின் படையினர் சுதந்திரபுரத்தில் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கு சொந்தமான பெரிய அளவிலான அச்சகமும் வெடிகுண்டு தொழிற்சாலையும் கண்டுபிடிக்கப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தினரின் இதேபோன்ற மேலும் சில அச்சிடும் இயந்திரங்கள் புதுக்குடியிருப்பு தெற்கு பகுதியில் இருந்து 4-வது அதிரடிப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டன.

பெப்ரவரி 28, 2009 அன்று, கடற்புலிகளின் தலைவர் சூசையின் முகாமும் புதுக்குடியிருப்புக்கு மேற்கே அமைந்துள்ள தற்கொலைக் குண்டுகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையையும் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர். அதே நாளில், எல்.ரீ.ரீ.ஈ.யின் முன்னணித் தலைவர்கள் பயன்படுத்திய சொகுசு நீச்சல் குளத்தை 58-ஆவது படைப்பிரிவின் படையினர் கண்டுபிடித்தனர். 70 அடி நீளம், 30 அடி அகலம், 7 அடி ஆழம் கொண்ட இந்த நீச்சல் குளத்தில் ஆழ நீந்தும் வசதிகள் இருந்தன. வான்வழி கண்காணிப்பில் சிக்கக்கூடாது என்பதற்காக அது முழுவதும் வலைகளால் மூடப்பட்டிருந்தது.

2009 பெப்ரவரி 01-ஆம் திகதி தொடக்கம் 19-ஆம் திகதி வரையான காலப்பகுதியிலும் 2009-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03-ஆம் திகதி தொடக்கம் 05-ஆம் திகதி வரையான காலப்பகுதியிலும் 58-ஆவது படையணியினால் புதுக்குடியிருப்பு நகரம் மற்றும் இரணைப்பாலை நகரைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. புதுகுடியிருப்பு சந்தி, புதுமாத்தளன் பாதையில்

அம்பலவன்பொக்கனை மற்றும் இரணைப்பாலை பிரதே சங்களில் நடந்த பலத்த சண்டையின் மத்தியில் அப்பிர தேசங்களை கைப்பற்றுவதில் 58-ஆம் படையணியும் அதற்கு உறுதுணையாக இருந்த இராணுவத்தினரும் வெற்றி கொண்டனர். பெப்ரவரி 27 அன்று, பயங்கரவாதி களுக்கு சொந்தமான உயர் தொழில்நுட்ப செயற்கைக் கோள் நிலையமும் கண்டறியப்பட்டது.

மனிதாபிமான நடவடிக்கையில் வெற்றி பெற்று பாது காப்புப் படையினர் முன்னேறிய போது, சிங்கள இராணு வம் தமிழ் மக்களை அழிப்பதற்காக வந்திருக்கும் ஆபத் தான அச்சுறுத்தல் என்று பிரச்சாரம் செய்த பயங்கரவா திகள், தாங்கள் தோற்கடிக்கப்பட்ட பகுதிகளில் இருந்த பொதுமக்களை அழைத்துச் சென்று பயங்கரவாத தலை வர்களின் பாதுகாப்புக்காக அவர்களை மனிதக் கேட யங்களாகப் பயன்படுத்தினர்.

பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் மிக முக்கிய மையமாக இருந்த விஸ்வமடு இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர், எல்.ரீ.ரீ.ஈ. இயக் கத்தின் தலைவர் பலத்த பாதுகாப்புடன் இருப்பதாக நம்பப்பட்ட புதுக்குடியிருப்புக்கு பாதுகாப்புப் படை யினர் நுழைவதைத் தடுப்பதற்காக, பயங்கரவாதிகள் பொதுமக்களை ஒரு பாதுகாப்பு மனித கேடயமாக பயன் படுத்தினர். ஆகவே, பயங்கரவாதிகளின் பிடியில் சிக்கி யுள்ள பொதுமக்களை மீட்க இராணுவம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

238 2009 ஜனவரி 02, அன்று, இலங்கை இராணுவத் தளபதி இந்த சூழ்நிலையில் ஆயுதங்களைத் துறந்து சரணடை யுமாறு எல்.ரீ.ரீ.ஈ.யினருக்கு உத்தரவிட்டார். ஆனால் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு அதற்கு இணங்கவில்லை. எனவே, எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் கீழ் எஞ்சியுள்ள மட்டுப்படுத்தப் பட்ட பகுதியைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கை ளுக்கு இணையாக, அவ் அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பொதுமக்களை மீட்க ஒரு மீட்பு நடவடிக் கையும் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, 2009 ஜனவரி 16 அன்று, விஸ்வமடு பகுதியை மையப்படுத்தி முதலாவது போர் அற்ற வலயமாக அறிவிக்கப்பட்டது. பயங்கரவாதி களின் அடக்குமுறைக்குள் சிக்கி மனிதக் கேடயங் திரமன்றி, பதுங்கு குழி வெட்டுதல், சேறு அகற்றுதல் போன்ற பயங்கரவாதிகளின் தேவைகளுக் குப் பயன்ப டுத்தப்பட்ட பொதுமக்களைக் காப்பாற்றுவதற்காகவும் இவை யுத்தமற்ற வலயங்களாக பிரகடனப்படுத்தப் பட்டன.

பொதுவாக, போர் ஒன்றின் போது, போரிடும் இரு தரப்பி னரின் சம்மதத்துடனாகும் போர் வலயங்கள் அறிவிக்கப் படுவதே வழக்கம். அவ்வாறு அறிவிக்கப்பட்ட போர் வல யங்களில் எந்தவொரு தரப்பும் இராணுவ நடவடிக்கை களில் ஈடுபடுவதில்லை. எனினும், வன்னி மனிதாபிமான நடவடிக்கையின் போது அறிவிக்கப்பட்ட வலயங்கள் மீது பாதுகாப்புப் படையினர் மாத்திரமே கட்டுப்பட்டனர். இந்த செயல்முறைக்கு உடன்படாத பயங்கரவாதிகள், அந்தந்த வலயங்களில் உள்ள பொதுமக்களை கேடயங் களாக வைத்திருந்தும், மிகவும் பாதுகாப்பான முறையில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியும் பாதுகாப்புப் படையினரைத் தாக்கியது மட்டுமல்லாமல், பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்ட பகுதிகளுக்கு பொதுமக்கள் தப்பிச் செல்வதைத் தடுக்க தற்கொலைக் குண்டுதாரியாக ளையும் பயன்படுத்தி பொதுமக்களைக் கொன்று மோச மான அணுகுமுறைகளையும் கையாண்டனர்.

பிணைக்கைதிகளாக இருந்த பொதுமக்கள் மீட்கப்பட்டு மனிதாபிமான நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தில் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பைத் தோற்கடித்து அப் பகுதிகளைக் கைப்பற்றுவதே பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப் பட்ட முக்கிய பணியாக இருந்தது. ஏனெனில் பொது மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் ஆயுதங் களைப் பயன்படுத்த முடியாத நிலையில் இது மிகவும் கடினமான பணியாக இருந்தது. எல்.ரீ.ரீ.ஈ.யின் போர் வல யத்தில் உள்ள மக்களை இராணுவத்தினரை சென்ற டைய விடாமல் தடுக்கும் வகையில் அவ் அமைப்பு மண் மேடுகளை கட்டியதால் இராணுவத்தினர் தாக்குவது மிகவும் கடினமானதாக மாறியதுடன் மிக சிறிய பகுதி யில் மக்களை சுற்றி வளைத்து மக்கள் மத்தியில் அமர்ந்து எல்.ரீ.ரீ.ஈ. பாதுகாப்புப் படையினரைத் தாக்கியதால் இராணுவத்தின் பணிகள் மேலும் கடினமாயின.

2009 மார்ச் 12 அன்று, 53-வது படையணியும் 8 வது அதி ரடிப்படையின் துருப்புக்களும் புதுக்குடியிருப்பு மருத்து வமனையை எல்.ரீ.ரீ.ஈ.யின் பிடியிலிருந்து மீட்டது. 2009 ஜனவரி 25, அன்று, முல்லைத்தீவில் எல்.ரீ.ரீ.ஈயின் பலம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, அவ் அமைப்பின் செயல்பாட்டு மையமாக இருந்த இந்த மருத்துவமனை மீட்கப்பட்டபோது அது ஒரு இராணுவ கோட்டையாக மாற்றப்பட்டிருந்தது. 2009 ஏப்ரல் 1, அன்று, பாதுகாப்புப் படைகள் பச்சைபுல்மூட்டைப் பகுதியைக் கைப்பற்றின. ஆம்மாதம் 2-ஆம் திகதி எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் கடை சிக் கோட்டையான ஆனந்தபுரத்தில் உள்ள விநியோக மையமும் அழிக்கப்பட்டது.

இதற்கிடையில், 2009 ஏப்ரல் 03, அன்று, கிழக்கு மாகா ணத்தில் உள்ள அம்பாறை லகுகல பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியின் மீது விசேட அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில் நீண்ட காலமாக பயங்கரவாத நடவடிக்கை களில் ஈடுபட்டு வந்த எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினர்கள் கொல் லப்பட்டனர். இதில் அந்த அமைப்பின் தலைவர் பரமா னந்தன் மாஸ்டர் உள்பட 13 பேர் கொல்லப்பட்டனர்.

இதன்போது, எல்.ரீ.ரீ.ஈ வசமிருந்த பகுதி சுமார் 700 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்கு, அதாவது நந்திக்கடல் களப்புக்கும் கிழக்கே கடற்கரைக்கும் இடைப்பட்ட நிலப் பரப்பில் பழமாத்தளன், புதுமாத்தளன், வன்யன்மாத்தளன், கரைமுள்ளிவாய்க்கால் மற்றும் வெள்ளமுள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த யுத்தமற்ற வல யத்திற்கும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கும் இடையில் அமைந்திருந்த எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் முக்கிய கோட்டையாக விளங் கிய புதுக்குடியிருப்பு, இரண்டரை மாத கால கடுமை யான சண்டையின் பின்னர் 2009 ஏப்ரல் 05-ஆம் திகதி

பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்டது. அம்மோதல்களில் கொல்லப்பட்ட பல பயங்கரவாத தலைவர்களின் உடல்களும், அவ்வமைப்பை சேர்ந்த சுமார் 420 உறுப்பினர்களின் உடல்களும் கண்டெடுக்கப்பட்டன. இந்த போரில் பல ராணுவ உத்தியோகத்தர்களும், ராணுவ வீரர்களும் உயிரிழந்தனர்.

247. ஏப்ரல் 08, 2009 அன்று, ஆயுதங்களைத் துறந்து சரணடையுமாறு அரசாங்கம் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கு இறுதி அறிவிப்பை விடுத்தது. ஆனால் அவர்கள் பதிலளிக்கவில்லை. 2009 மார்ச் 20 முதல் 2009 ஏப்ரல் 20 வரை யுத்த வலயத்தில் சிக்கியிருந்த பொதுமக்களை மீட்க நான்கு கட்டங்களில் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இறுதிக் கட்டமாக அம்பலவன் பொக்கனை புதுமாத்தளன், பழமாத்தளன் பகுதிகளில் சிறைபிடிக்கப்பட்டிருந்த பொதுமக்களை மீட்கும் புதுமாத்தளன் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வன்னிக்கரை முழுவதிலுமுள்ள பொதுமக்களையும் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு ஆயுதமுனையில் மக்களை ஓர் கேடயமாக பயன்படுத்தி தனது ஆயுதங்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் சென்று இறுதியில் புதுமாத்தளன் பகுதிக்குரிய இராணுவம் அற்ற வலயத்துக்குள் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. இப்பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு மற்றும் மருந்துகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால் அவற்றை எல்.ரீ.ரீ.ஈ யினர் தமக்கு பயன்படுத்திக் கொண்டனர்.

இந்நிலையில், எல்.ரீ.ரீ.ஈ.யினரிடம் இந்த யுத்தமற்ற வலயத்தின் ஒரு பகுதியாக ஒரு சிறிய நிலப்பகுதி மட்டுமே இருந்த போதிலும், அதை விடுவிப்பது மிகவும் கடினமான மற்றும் சிக்கலான பணியாக இருந்தது. ஆயுத பலத்தால் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்ட 300,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பணயக்கைதிகளாக மாற்றப்பட்டு அவர்களைக் கொண்டு பாதுகாப்புப் படையினரை கடுமையான ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்கினர். பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால் எல்.ரீ.ரீ.ஈ.யின் தாக்குதல்களுக்கு பாதுகாப்புப் படையினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

பொதுமக்கள் தங்கியிருந்த பகுதியைச் சுற்றி சுமார் 14 கிலோமீட்டர் நீளத்திற்கு ஒரு பெரிய மண்மேடு கட்டப்பட்டிருந்ததால் பாதுகாப்புப் படையினர் அப்பகுதிக்குள் நுழைவது கடினமாக இருந்தது. மண்மேடுடானது ஒருவருக்கொருவர் சுமார் 80 மீட்டர் இடைவெளியில் இருக்கும் வகையில் பாதுகாப்பு பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு அவற்றில் எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகள் ஆயுதங்களை வைத்திருந்ததால், பொதுமக்கள் அவர்களிடமிருந்து தப்பித்து அரசாங்க பகுதிகளுக்கு தப்பிச் செல்ல முடியவில்லை.

இராணுவத்தின் ஆட்பலத்தை போலவே பீரங்கிகள், மோட்டார்கள், டாங்கிகள், அதிக சக்தி வாய்ந்த இயந்திர துப்பாக்கிகள் போன்றவை மட்டுமல்லாமல், விமானப்படையிடம் கிபீர்கள், மிக்-26 போர் விமானங்கள், M-24 கவச ஹெலிகாப்டர்கள் மற்றும் கடற்படை வைத்திருந்த எந்த கடற்படை ஆயுதங்களையும் இந்நேரத்தில் பயன்படுத்த முடியாமல் போனது. ஒரு கட்டத்தில், பொது மக்கள் குறித்து எதுவித அக்கறையுமின்றி பாதுகாப்புப் படையினருக்கு எதிராக அதிகபட்ச பலத்தையும் பயன்படுத்த அவர்கள் தயாராக இருந்ததால், பாதுகாப்புப் படையினரினருக்கு அது மிகவும் கடினமாக இருந்தது. இந்த சூழ்நிலையில், 2009 மார்ச் 20, இலிருந்து 2009 ஏப்ரல் 20, வரை தரைவழிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, பணயக் கைதிகளை மீட்பதற்கான மனிதாபிமான நடவடிக்கையாக மாறியது.

பொதுமக்களையும் பயங்கரவாதிகளிடம் இருந்த கடைசி சிறு பிரதேசத்தையும் விடுவிப்பதற்காக தமது உயிர்களையும் துச்சமாகக் கொண்டு ஒரு நுணுக்கமான திட்டத்திற்குப் பின்னர் 58-வது படையணி, சிறப்புப் படைகளின் கொமாண்டோ ரெஜிமென்ட் மற்றும் ஒரு காலாட்படை பிரிகேட் ஆகியவை களப்பு வழியாக யுத்தமற்ற வலயத்திற்குள் நுழைந்தன. சாலைப்பகுதி ஊடாக தெற்கு நோக்கி வந்த 55-ஆவது படையணியும் யுத்த மற்ற வலயத்தின் வடக்கிலிருந்து யுத்தமற்ற வலயத்திற்குள் நுழைந்து 53-ஆவது படையணியுடன் இணைந்தது. கடுமையான மோதல்களுக்கு மத்தியில் மெதுவாக நகர்ந்து, போர் வலயத்தின் தெற்கு முனையான முல்லைத்தீவின் வடக்குப் பகுதியில் வட்டுவாகலில் நிலைகொண்டிருந்த 59-வது படையணி, பயங்கரவாத பாதுகாப்பு வளையத்தை உடைத்துக்கொண்டு போர் அற்ற வலயத்திற்குள் நுழைந்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு யுத்த வலயத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வட்டுவாகல் வீதியில் இராணுவப் பாதுகாப்புடன் விடுவிக்கப்பட்ட பகுதிகளை அடைந்தனர். இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பின் கீழ் தப்பிச் செல்வதைத் தடுக்க எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு ஆயுதங்களைப் பயன்படுத்தினர். ஆனால் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தன. பொதுமக்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து அரசாங்கப் பகுதிகளுக்கு தப்பிச் சென்றனர். எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பினால் அதனை தடுக்க முடியவில்லை. எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் கொடூரமான நடவடிக்கைகளின் கீழ் பரிதாபகரமான ஓர் வாழ்க்கையை வாழ்ந்த இடம்பெயர்ந்த பொதுமக்களை மீட்பதற்கான இந்த மனிதாபிமான நடவடிக்கையில் பாதுகாப்புப் படைகளின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன், எல்.ரீ.ரீ.ஈ.யினரின் ஏராளமான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டன.

250 இந்த மனிதாபிமான நடவடிக்கையில் விடுவிக்கப்பட்ட மக்களுடன், பெருந்தொகையான எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் தஞ்சம் தேடி வந்திருந்த போதிலும் பாதுகாப்புப் படையினர் எவ்வித பாரபட்சமும் இன்றி அவர்கள் அனைவருக்கும் மனிதாபிமானத்தின் பெயரில் அத்தியாவசிய உணவு, மருந்து, உடைகள் போன்றவற்றை வழங்கி அகதி முகாம்களுக்கு அனுப்பி வைத்தனர். இந்த நடவடிக்கையில் 115, 018 பொது மக்கள் மீட்கப்பட்டதாக பதிவானது.

இந்த நடவடிக்கைக்குப் பின்னர், மனிதக் கேடயங்களை மீட்பதற்காக, பாதுகாப்புப் படைகள் கிழக்கு கடற்கரை வரை தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்த தங்கள் நட வடிக்கையை முன்னெடுத்தன. புதுமாத்தளன், கரைமுள் ளிவாய்க்கால், வெள்ளமுள்ளிவாய்க்கால் ஆகிய பகுதி களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பயங்க ரவாதிகள் மக்களை புதுமாத்தளன் பகுதிக்கு மட்டுமல் லாது, கரைமுள்ளிவாய்க்கால் மற்றும் வெள்ளமுள்ளி வாய்க்கால் பகுதிகளில் களப்பு பக்கமாக கடல் திசை யில் மண்மேடுகளை அமைத்து போது மக்களை சுற்றிவ ளைத்து இருந்தனர். இதன் போது முல்லைத்தீவு புது மாத்தளன் வழியாக முன்னேறிய 53, 58, 59 படையணி களின் துருப்புகள் மீது பயங்கரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்த போதிலும், பொதுமக்களை மீட்கும் நடவடிக்கையும் நடந்து கொண்டிருந்ததால் பாதுகாப்புப் படையினரால் பதிலடி கொடுக்க முடிய வில்லை. எனவே, கிழக்கு கடற்கரை வரையான பகுதி களை கைப்பற்றுவது மிகவும் கடினமாக இருந்தது. இதற்கு ஏப்ரல் 22 முதல் மே 15 வரை பல வாரங்கள் வரை சென்றதுடன் பாதுகாப்புப் படையினரும் கடுமை யான தாக்குதல்களுக்கு உள்ளாகினர்.

புதிய போர் முனையைத் தொடங்கவும், பயங்கரவாதி களின் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதைக் கட் டுப்படுத்தும் நோக்கத்திற்காக 53-வது, 58-வது, 59-வது படையணிகளும், 8வது அதிரடிப்படையும் இணைந்து 2009 ஏப்ரல் 30 இலிருந்து மே14 வரை மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கையில் நந்திக்கடல் ஏரியைக் கடந்து, ஒட்டிவாய்க்கால் நீர்நிலை உள்ளிட்ட பாதைகள் பலப்படுத்தப்பட்டன.

மே 16 இரவு, பாதுகாப்புப் படைகள் கிழக்கு கடற்கரை வரை அதிகாரத்தை நிறுவுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டபோது, பயங்கரவாதத் தலைவர்கள் நந் திக்கடல் களப்பு வழியாக முல்லைத்தீவு காட்டுக்குள் தப்பிச் செல்ல முயன்றனர். இருப்பினும், 592 மற்றும் 682 படையணிகளின் சிறப்பு நடவடிக்கையால் அவர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டது. இந்த மோதலில் நடேசன், புலித்தேவன், சார்ள்ஸ் அன்ரனி, புலிகளின் பொலிஸ் பொறுப்பாளர் இளங்கோ ஆகியோர் கொல்லப்பட்டவர் களில் உள்ளடங்குவர்.

இதற்கிடையில், தப்பிக்க முயன்ற பயங்கரவாத தலை வர்களை பாதுகாப்புப் படையினர் முறியடித்து, வட்டு வாகல் நீர்நிலையைக் கைப்பற்றினர். பாதுகாப்புப் படை யினரால் வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதியில் எல்.ரீ.ரீ.ஈ.இயக்கத் தலைவர் உட்பட சுமார் 900 பயங்கர வாதிகளை பாதுகாப்புப் படையினால் சிக்க வைக்க முடிந்தது. 30 ஆண்டுகாலமாக தீவிரவாதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதி நடவடிக்கை மே மாதம் 15-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை வெள் ளமுள்ளிவாய்க்காலில் மேற்கொள்ளப்பட்டது. அங்கு வெவ்வேறு இடங்களில் மறைந்து கொண்டு சிறிய ஆயு தங்களைப் பயன்படுத்தி வந்த எல்.ரீ.ரீ.ஈயினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் தொடுத்தனர். 53-ஆவது, 58-ஆவது, 59-ஆவது படையணிகள், 8-ஆவது அதிரடிப்படை மற்றும் கொமாண்டோக்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர், இதில் பயங்கரவாதிகளின் உயர்மட்ட தலைவர்கள் உட்பட ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

**257.** இந்த நடவடிக்கையின் வெற்றியுடன், எல்.ரீ.ரீ.ஈ. அமைப் பின் கீழ் உள்ள அனைத்து பிரதேசங்களும் பாதுகாப் புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. ஆனால் ஏற்கனவே வெவ்வேறு பகுதிகளில் மறைந்திருந்த சிறிய பயங்கரவாத குழுக்கள் பாதுகாப்புப் படையினரைத் தாக்கியபோது, எப்படியோ பாதுகாப்பு வளையங்களை உடைத்துக்கொண்டு பயங்கரவாதிகளின் முன்னைய கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு தப்பி ஓட முயன்றமை நிகழ்ந்து கொண்டே இருந்தது. இதற்கிடையே, நந்திக் கடல் ஏரியின் சதுப்பு நிலக் காடுகளில் பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் குழு ஒன்று, தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தியது.

பயங்கரவாதிகளின் துப்பாக்கிச் சூடு நிறுத்தப்பட்ட சிறிது நேரத்தின் பின்னர் கொல்லப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ.யினரின் பல சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன, அத்துடன் அங்கிருந்து எல்.ரீ.ரீ.ஈ தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உட லும் 681-வது படைப்பிரிவின் விஜயபா படைப்பிரி வின் துருப்புக்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இறு தி நட வடிக்கையில், விமானப்படையின் 681-வது மற் றும் 682-வது படைப்பிரிவின் கீழ் பணியாற்றிய இலங் கை சிங்க படைப்பிரிவு, கெமுனுஹேவா படைப்பிரிவு, கஜபா படையணி, விஜய காலாட் படையணி உட்பட அனைத்து இராணுவப் பிரிவுகளின் இராணுவ அதிகாரிகளும் படை யினரும் இடம்பெற்றிருந்தனர்.

உலகின் மிகவும் கொடூரமான பயங்கரவாத அமைப்பாக கருதப்படும் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்குத் தலைமை தாங் கிய பிரபாகரனின் உடலைப் பார்க்க படையணியின் தள பதிகள் அனைவரும் வந்தனர், பாதுகாப்பு படையினரும் அங்கு திரண்டிருந்தனர். அதே நாளில், எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் முன்னாள் செய்தித் தொடர்பாளர் இ. தயா மாஸ்டர் மற்றும் அவ் அமைப்பில் இருந்து வெளியேறியி ருந்த கருணாவும் அந் நேரத்தில் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் சட லங்களை அடையாளம் காட்டுவதற்காக அழைத்து வரப்பட்டனர். அவர்கள் இருவரும் அந்த சடலம் பிரபாக ரனுடையது என்று சந்தேகத்திற்கு இடமின்றி அடை யாளம் காட்டினர்.

**259.** மே 19, 2009 அன்று காலை 9.30 மணிக்கு,சேனாதிபதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகள் தோற்க டிக்கப்பட்டதாக அறிவித்தார். ஆனால் பிரபாகரனின் உடல் கண்டெடுக்கப்பட்டதாக அவர் கூறவில்லை. அதனை அப்போதைய இராணுவத் தளபதி லெப்டி னன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா அதனை நிச்சயப்ப டுத்திக் கொண்டதன் பின்னர் உறுதியாக அறிவித்தார். அந்தவகையில், 30 வருட கால பயங்கரவாத யுத்தத்தை வெற்றியுடன் முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்த ராஜ பக்ஷ அரசாங்கம் அத்துடன் நின்றுவிடாமல், அதே ஆட்சியில் போரினால் பாதிக்கப்பட்ட நாட்டையும் தேசத் தையும் மீண்டும் கட்டியெழுப்பும் செயற்பாடுகளை

ஆரம்பித்தது.

ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. 2010 ஜனவரி 26, அன்று நாடு தழுவிய ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது மற்றும் அந்த ஆண்டு ஏப்ரலில் நாடாளுமன்றத் தேர்தல்களும் நடத்தப்பட்டன.

ஆயுதம் ஏந்திய எல்.ரீ.ரீ.ஈ. உட்பட பல்வேறு குழுக்களை நிராயுதபாணியாக்கி சட்டவிரோதமாக ஆயுதம் ஏந்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இதனால் நாடு முழுவதும் அனைவரும் சுதந்திரமாக நடமாடுவதற்கான அமைதியான சூழல் ஏற்பட்டது. மனிதாபிமான நடவடிக்கையின் போதும் அதன் முடிவிலும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்ட பதினோராயிரத்துக்கும் மேற்பட்ட எல்.ரீ.ரீ.ஈ.யினரில் சிறு குற்றங்களுடன் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், ஐக்கிய நாடுகளின் சிறுவர் அபிவிருத்தி நிதியத் திட்டத்தின் உதவியுடன் 595 சிறுவர் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு 2010 மே மாதத்தில் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

எந்தவொரு குழந்தை போராளியையும் தண்டிப்பதில்லை என்ற கொள்கையின் அடிப்படையில் அரசாங் கம் முடிவு எடுத்தது. எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களான 6130 முதியவர்களுக்கு வெற்றிகரமாக மறுவாழ்வு அளிக்கப்பட்டதுடன் ஜூன் 2011 க்குள் சமூகமயமாக்கப்பட்டனர். ஏனையவர்கள் நீண்டகால புனர்வாழ்வு திட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். நீதிமன்றங்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டவர்கள் மட்டுமே சட்டத்தின் முன் கொண்டு வரப்பட்டனர்.

இடம்பெயர்ந்த மில்லியன் கணக்கான மக்களின் மீள்குடியேற்றத்தின் போது, எல்.ரீ.ரீ.ஈ.யினரால் வன்னிக்கரை முழுவதும் எல்லையில்லாமல் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றுவது பாரதூரமான பிரச்சினையாக இருந்தது. வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் உதவியுடன், அதற் கான பணிகளை ஆரம்பித்து பெருந்தொகையான மக்களை விரைவாக மீளக்குடியமர்த்த முடிந்த போதிலும், அதற்கான பணிகள் முடியும் வரை அகதி முகாம்களில் தங்கியிருக்க வேண்டிய இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான வசதிகளையும் வழங்க அரசாங்கம் ஏற்பாடுகளை செய்தது.

நீண்டகாலத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் வழமையான அமைதியான சூழலில் வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டது. சிறுவர் போராளிகளாக ஆட்சேர்ப்பு செய்யப்படலாம் என்ற அச்சமின்றி பிள்ளைகள் கல்விக்காக பாடசாலைக்குச் செல்வதற்கும், முதியோர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடவும் அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து படிப்படியாக இயல்பு வாழ்க்கையை வழமைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறிப்பாக மனிதாபிமான இராணுவ நடவடிக்கையின் போது, மீனவர்களுக்கு மீன்பிடியை தடை செய்யும் வலயங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. அது மீனவர்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பெரும் இடையூறாக இருந்தது. பயங்கரவாத மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர், அரசாங்கம் அத் தடைகளை நீக்கி மீனவர்கள் அச்சமின்றி தங்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதித்தது.

இக்காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான உடனடி வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்தது. 2007-ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் மனிதாபிமான செயற்பாடுகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் இவ்வாறான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன், பெருந்தெருக்கள் மற்றும் நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள், நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம், கடற்றொழில் மற்றும் மின்சார வசதிகள், கல்வி வசதிகள், வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களை நிறுவுதல் போன்ற திட்டங்கள் வட மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இயல்பு நிலை திரும்பும்வரை மக்களுக்கு தேவையான பொருட்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டன. அமைதியையும் விரைவான உட்கட்டமைப்பையும் உருவாக்குவதன் மூலம் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் கீழ் இருந்த பிரதேசங்களில் கடந்த 30 வருடங்களாக கிடைக்கப்பெறாத சிறிய மற்றும் பாரிய அளவிலான கருத்திட்டங்களில் முதலீடுகள் செய்வதினூடாக நாட்டின் ஏனைய பகுதிகளின் பொருளாதார அபிவிருத்தியும் அதன் நன்மைகளும் இக்காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் கிடைத்தன.

மனிதாபிமானப் நடவடிக்கையின் வெற்றியின் பின்னர், பிரதேச மற்றும் தேசிய மட்டத்தில் பல்வேறு இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்கமைய கடந்த காலங்களில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக பல்வேறு இனங்களிடையே ஏற்பட்ட அதிருப்தியையும் மனக்கசப்புகளையும் தீர்த்து தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக 2010 மே மாதம் 15-ஆம் திகதி ஜனாதிபதியால் ‘கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழு' நியமிக்கப்பட்டது. அரச அதிகாரிகள், இராணுவத்தினர், இராஜதந்திரிகள் போன்ற பல்வேறு தரப்பு மக்களின் வெளிப்படையான கருத்துக்களையும் விமர்சனங்களையும் பெற்றுக் கொண்டு 2010 செப்டெம்பர் 13-ஆம் திகதி இடைக்கால அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதில் உள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த உயர்மட்ட ஆணைக்குழுவையும் அரசாங்கம் நியமித்தது.



sarawanan.n@thaiveedu.com



# ‘எனக்கு திசைகளைப் பற்றிக் கவலையில்லை, தேடல்களைப் பற்றியதுதான் என் கவலை’

*– ஆர். பாலகிருஷ்ணன்*

## நேர்காணல்

*– எஸ். சத்தியதேவன்*

*– அருண்மொழிவர்மன்*

நான் ஒரு தமிழ் மாணவன்; அதுவே எனது அடையாளம் என்பதைத் தொடர்ந்து சொல்லிவரும் ஆர். பாலகிருஷ்ணன் இந்தியவியல், திராவிடவியல், தொல்லியல் போன்ற துறைகளில் ஆழங்கால்பட்ட அறிவுடைய ஆய்வறிஞரும் ஆவார். தமிழில் இளங்கலை, முதுகலைப் பட்டங்களைப் பெற்ற இவர், ஐ.ஏ.எஸ். பரீட்சையை முழுமையாகத் தமிழ்மொழி மூலம் எழுதித் தேர்தவான ஒரே நபர் என்ற பெருமையையும் கொண்டவர். இந்திய ஆட்சிப் பணியில் 34 ஆண்டுகள் பணியாற்றி 2018-இல் ஓய்வுபெற்ற பாலகிருஷ்ணன் அவர்கள் ஓய்வின் பின் ஒடிசா மாநில முதல்வரின் தலைமை ஆலோசகராகப் பணியாற்ற வந்த அழைப்பை ஏற்று ஐந்து ஆண்டுகள் பணியாற்றியவர். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்துவெளி ஆய்வு மையத்தின் மதிப்புறு ஆலோசகர். பொறுப்புவாய்ந்த பல பதவிகளை வகித்தபோதும் சங்க இலக்கியம் மீதான தன் ஆய்வுமனப்பாங்கினாலும் இவரது தேடல்களின் பலனாகவும் ‘சிந்துச் சமவெளி விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றே’ என்பதை ஆய்வுரீதியாகக் கண்டடைந்தவர். ‘மக்களின் வரலாறே வரலாறு; மற்றதெல்லாம் வாய்க்கால் தகராறு’ என்பதை அழுத்தமாகச் சொல்லும் இவர் சங்க இலக்கியங்கள் சொல்லும் வாழ்வியலுடன் வரலாற்றையும் தொல்லியலையும் இடப்பெயர் ஆய்வையும் இணைத்துத் தன் ஆய்வுகளை முன்னெடுப்பவர். சங்க இலக்கியத்தை மக்களிடம் பரவலாக்கும் நோக்குடன் உரைகளையும் எழுத்துப்பணிகளையும் தொடர்ந்து செய்துவரும் சிந்துவெளி ஆய்வாளாரான இவர் சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம் (2016), Journey of a Civilization: Indus to Vaigai (2019), ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை (தமிழ்ப் பதிப்பு) (2023) ஆகிய முக்கியமான ஆய்வு நூல்களை எழுதியுள்ளார்.

சிந்து வெளி நாகரிகம் அறிவிக்கப்பட்ட நூற்றாண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த ஆண்டு, 2023 ஆம் ஆண்டுக்கான இயல்விருதினைப் பெற்றுக்கொள்ள கனடா வந்திருந்த ஆர். பாலகிருஷ்ணன் அவர்களுடன் தாய்வீடு இதழுக்காக எடுக்கப்பட்ட நேர்காணல் இது.

▸ **தமிழ் இலக்கியத்தை முதுகலை வரை கற்ற நீங்கள் பின்னாட்களில் தொல்லியல் சார்ந்து மிக ஆழமான ஆய்வுகளில் ஈடுபடுவதற்கு எவை அடிப்படையான காரணங்கள் என்று கூறமுடியுமா?**

அடிப்படையில் ஆட்சிப் பணி போன்ற பல்வேறு பதவிகளில் இருந்தாலும் கூட தமிழ் மாணவன் என்பதுதான் எனது அடையாளம். நான் அப்படிச் சொல்வதுடன் அப்படியாகத்தான் வாழ்ந்துகொண்டுமிருக்கின்றேன். தொல்லியலில் நான் ஆய்வு செய்வேன் என்றோ அதில் ஈடுபாடுகொள்வேன் என்று கூட எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு நிறையக் கேள்விகள் இருக்கின்றன என்பது நன்றாகத் தெரியும் அந்தக் கேள்விகள் என்னை ஒரு தேடலை நோக்கி நகர்த்தின. சங்க இலக்கியமாணவனாக இருக்கும் பொழுது எனது மனதில் சங்க இலக்கியத்தில் வருகின்ற ஓர் அகநானூற்றுப் பாடலில் ஒட்டகம் எப்படி வந்தது? அது எப்படி எலும்பைத் தின்றது? எப்படி வணிகர்களின் சுமையைத் தாங்கியது? தென்னிந்தியாவில் தான் பாலைவனமில்லையே? ஒட்டகமும் இல்லையே? அப்போ சங்க இலக்கியம் ஒட்டகத்தை இங்கே எப்படிக் குறிப்பிடுகிறது? இப்படி எல்லாம் எனக்குக் கேள்விகள் வரும்.

நாங்கள் சங்க இலக்கியம், சங்க இலக்கியம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றோமே; அது ஏன் சங்க இலக்கியம் என்றுசொல்லுகின்றோம்? 'ச' என்ற எழுத்தில் தமிழ்ச்சொல் தொடங்காதென்று தொல்காப்பியர் சொல்லி இருக்கின்றாரே? 'சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே, அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே' என்று ஒரு தொல்காப்பிய சூத்திரத்தின்படி சங்கம், சமணம், சத்தியம் என்கின்ற இவையெல்லாம் தமிழ்ச் சொற்களாக இருக்க முடியாது. மேலும் நாங்கள் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று சொல்லும் பொழுது கபாடபுரம் என்று சொல்கிறார்களே, கபாடபுரம் என்ற சொல் தமிழ் போலத் தெரியவில்லையே? இப்படியாக நிறையக் கேள்விகள் எனக்குப் படிக்கும்போதே வரும். ஒரு மாணவனாக எனக்கு எழுந்த அந்தக் கேள்விகளுக்கான விடை எனக்கு வகுப்புகளில் கிடைக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், அந்தக் கேள்விகளை எவரும் பெரிதாக ஆதரிக்கவும் இல்லை. வெளியில் இருந்து பார்ப்பவர்கள் தேவையில்லாத கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்று நினைத்தார்கள். ஆனால் எனக்கோ அந்தக் கேள்விகள் மிக முக்கியமானவையாகப்பட்டன.

ஆனால், பின் நாட்களில் நான் தொல்லியல் ஆய்வுகள் செய்யப்போகிறேன் என்றோ, ஐ.ஏ.எஸ். ஆகி ஒடிசாவுக்கு போகப் போகின்றேன் என்றோ, அல்லது சிந்து வெளி என்று ஆராயத் தொடங்கி கோவை மாநாட்டில் கட்டுரை சமர்ப்பித்துப் பிறகு கீழடி வரை வந்து சேர்வேன் என்றோ நான் அப்பொழுது நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இப்பொழுது யோசித்துப் பார்க்கும்பொழுது இவற்றுக்கெல்லாம் தொடக்கம் எனக்குள் இருந்த கேள்விகளும் விடைகள் கிடைக்காத அந்த கேள்விகளுக்கு நான் விடை தேடத் தொடங்கியதும் தான் என்று நினைக்கின்றேன்.

► **ஒடிசா மாநிலத்தின் கூடுமைத் தலைமைச் செயலாளர், வளர்ச்சி ஆணையாளர், இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையகத்தின் பிரதித் (Deputy) தேர்தல் ஆணையாளர், ஒடிசா மாநில முதலமைச்சரின் தலைமை ஆலோசகர் உள்ளிட்ட பல முக்கியமான பதவிகளை வகித்தவர் நீங்கள். 'நான் ஒரு தமிழ் மாணவன், அதுவே எனது அடையாளம்' என்று பெருமையுடன் சொல்லுகின்ற உங்களின் இந்தப் பயணம் எவ்விதத்தில் ஆரம்பித்தது?**

பொதுவாகத் தமிழ்நாட்டுச் சூழலில் ஒருவர் தமிழ் இலக்கியம் கற்றுவிட்டு அதன் வழியில் தன்வாழ்க்கையைக் கொண்டு நடத்தப் போகிறேன் என்று சொன்னால் அவரது உறவினர்களிடம் இருந்தோ நண்பர்களிடமிருந்தோ ஆதரவு கிடைக்காது. எஞ்சினியர் அல்லது டாக்டருக்குப் படித்தால் முன்னேறிவிடுவார்; வெளிநாட்டுக்குப் போய்விடுவார் என்று அவர்கள் நம்பிக்கொண்டிருக்கும் பொழுது ஒருவர் தமிழ்படிக்கப் போகிறேன் என்று சொன்னால் அவரது எதிர்காலம் என்னவாகும் என்று பயம் அவர்களுக்கு ஏற்படும்.

'ஆனால் பிடித்ததை விடாதீர்கள், பிடிக்காததைத் தொடாதீர்கள்' என்பதே வாழ்க்கை குறித்த எனது அணுகுமுறையாக இருந்தது. தமிழில் தான் நான் முதல் மாணவனாக இருப்பேன் என்று எனக்கு நம்பிக்கை இருந்தது. அதனால் நான் தமிழைத் தேர்ந்தெடுத்தேன். தமிழ் படித்தால் வேலை கிடைப்பது சிரமமாக இருக்கும் என்று சிலர் சொன்னார்கள். ஆனால் எனக்கு அது சிரமமாக இருக்கவில்லை, எனது எம்.ஏ. பரீட்சை முடிவுகள் வெளிவருவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பாகவே நான் தினமணி பத்திரிகையில் உதவி ஆசிரியராக வேலைக்குச் சேர்ந்துவிட்டேன். நான் எழுதிய ஒரே ஒரு தேர்வு ஐ.ஏ.எஸ். தேர்வு தான். இந்தியாவில் இதைத் தவிர வேறு எந்தத் தேர்வு எழுதுவதற்கும் நான் விண்ணப்பங் கூட போட்டது கிடையாது.

எனது நண்பர்கள் வெவ்வேறு தேர்வுகளுக்கு விண்ணப்பித்த போதும் நான் விண்ணப்பிக்கவில்லை. 'அப்படி விண்ணப்பித்து சிலவேளை எனக்கு ஏதோ ஒருவேலை கிடைத்துவிட்டால்...' என்ற பயம் எனக்கு இருந்தது. நான் வெற்றி பெற விரும்பிய ஒரே தேர்வாக ஐ.ஏ.எஸ். தேர்வே இருந்தது. அதனால் அதற்கு மட்டும் நான் பரீட்சை எழுதினேன். அந்தப் பரீட்சையில் நான் முதல் தடவையிலேயே வெற்றியும் பெற்றேன்.

முதலில் நான் ஒடிசாவில் சப் கலெக்டராகப் பணிபுரியச் சென்றேன். நான் போன இடம் ஒடிசாவில் மிகவும் சவால் நிறைந்த பிரதேசமாகவும் இருப்பதிலேயே பெரிய மாவட்டமாகவும் இருந்தது. அது மட்டும் இல்லாமல் ஒரு புயல் ஏற்படும் பொழுது அங்கு முன்னணிக் களவீரர்களில் ஒருவராகவும் நான் செல்லவேண்டி இருந்தது. இப்படியாக புயல், வெள்ளம் என்று சவால்கள் ஏற்படும் பொழுதும் தேர்தல் போன்ற நெருக்கடியான காலகட்டங்களின் பொழுதும் நிதித்துறையில் சில சிக்கல்கள் ஏற்பட்டபோது அதைச் சமாளிக்கும் பொருட்டும் வெவ்வேறு பதவிகளும் பொறுப்புகளும் 2018-இல் நான் ஓய்வு வரும் வரை என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. 2018-இல் நான் ஓய்வு பெற்ற பின்னர் முழுநேர ஆராய்ச்சிகளில் இறங்குவோம் என்று நினைத்தபோதும்கூட ஒடிசா முதல்வரின் தலைமை ஆலோசகராக இருக்க வேண்டும் என்கின்ற வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு நான் மீண்டும் ஒடிசாவுக்கே சென்று விட்டேன்.

ஆனால், இப்பொழுது திரும்பிப் பார்க்கும்பொழுது, நான் பணியாற்றிய ஒவ்வொரு வேலையிலும் அதன் புதிய எல்லைகளைத் தொட்டிருக்கின்றேன் என்பது திருப்தியாக இருக்கின்றது. 25 - 30 வருடங்களானபோதும் கூட அந்தத் துறைகளில் சிறப்பாகப் பணியாற்றியவராக எனது காலம் இருக்கின்றது என்று பலர் நினைவுகூரும்போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. நான் வேலை செய்த துறைகளிலும் மாவட்டங்களிலும் சிறந்த புதிய விடயங்களை நான் செய்ததாக பலர் கூறுவார்கள்.

இடர் மேலாண்மை போன்ற பயிற்சிகளையும் மேற்பட்டங்களையும் பெறுவதற்கு எனக்கு வாய்ப்புகள் கிடைத்தன. இவற்றை நான் அரசநிதி உதவியுடன் செய்திருக்கலாம், ஆனால், அப்படிச் செய்தால் அவையெல்லாம் நான் பெற்றுக் கொண்ட இந்த நிதி நிர்வாகம், இடர் மேலாண்மை போன்ற கல்விப் பின்புலத்தால்தான் என்னால் செய்யக் கூடியதாக இருந்தது என்று சொல்வார்கள். ஆனால் நான் அதை விரும்பவில்லை. ஒரு தமிழ் மாணவனாகிய நான், ஒரு தமிழ் மாணவனாகத்தான் இவற்றையெல்லாம் செய்தேன் என்று நிரூபிக்க விரும்பினேன். ஹார்வர்டில் படித்தவர், ஒக்ஸ்போர்டில் படித்தவர் என்று சொல்லி அதுவே முன்னிலைப்படுத்தப்படுவதை விட 40 ஆண்டு காலமாக ஐ.ஏ.எஸ். ஆகச் சிறப்பாகப்

பணிபுரிந்த, தொல்லியல் ஆய்வுகளைச் செய்த இவர், தமிழ் எம்.ஏ. என்பதையே தனது தகுதியாகக் கொண்ட தமிழ் மாணவர் என்பதுவே எனது அடையாளமாக இருக்கவேண்டும் என்று நான் விரும்பினேன். ஒரு தமிழ் மாணவனால் இவை யெல்லாம் முடியாது என்று கிடையாது, அதனை நிரூபிக்கும் படியாக எனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டேன்.

▸ **இந்தியக் குடிமைப் பணித் தேர்வினைத் தமிழில் எழுதிச் சித்தியடைந்த ஒரேயொருவர் என்பது உங்க ளது இன்னொரு தனித்துவமான அடையாளம். அந்த விதத்தில், தாய்மொழிக் கல்வியின் முக்கியத்து வத்தைச் சொல்ல மிகவும் தகுதியான ஒருவர் நீங்கள். அது பற்றி சிறிது சொல்லுங்கள்?**

தாய்மொழிக் கல்விக்கொள்கைக்கு ஆதரவான குரல் எங்கு ஒலித்தாலும் அத்துடன் சேர்ந்து ஒலிக்கும் குரல்களில் எனது குரலும் ஒன்றாக நிச்சயம் இருக்கும். எனது தாயை நான் நேசிப்பதன் அர்த்தம் இன்னொரு தாயை வெறுப்பது அல்ல என்பதை எனது வாழ்க்கையின் கொள்கைகளில் ஒன்றாக வைத்துள்ளேன். அந்தந்தப் பகுதி களில் வாழ்பவர்களின் வாழ்க்கையை அந்தந்தத் தாய்மொழியில் தான் சரியாக எடுத்துரைக்க முடியும். அதி கம்பனி உள்ள பிரதேசங்களில் தான் பனிக்கான பல சொற்கள் இருக் கின்றன என்பதை நீங்கள் அறிந்தி ருப்பீர்கள்.

மேலும், தகவல் தொழினுட்பத்தில் சிறந்து விளங்குகின்ற நாடுகளான ஜப்பான், ஜேர்மனி, கொரியா போன்ற நாடுகளில் அவர்களது தாய்மொழி யில்தான் அறிவியலை வளர்க்கின் றார்கள். அவர்களுக்கு மேலதிகமாக ஓர் இணைப்புமொழி தேவைப்படு கின்றது. அந்த விதத்தில் ஆங்கிலம் தவிர்க்க முடியாத ஓர் இணைப்பு மொழியாக இருக்கின்றது. அவ்விதமே தமிழைத் தாய்மொழி யாகவும் ஆங்கிலத்தை இணைப்புமொழியாகவும் கொண்ட என்னால் உலகில் எங்கு போயும் வேலை பார்க்கமுடியும்.

உதாரணத்துக்கு, என்னை ஒடிசாவில் பணிக்கமர்த்தி னார்கள். இப்போது என்னால் ஒரிய மொழியைப் பேசவும் எழுதவும் வாசிக்கவும் முடியும். நான் ஒடிசாவைப் பற்றி பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி இருக்கிறேன். அவை ஒரிய மொழிக்கு மொழிபெயர்க்கவும் பட்டிருக்கின்றன. கடைசியாக 2024 பெப்ரவரியில் நடந்த சர்வதேச ஒரியா செம்மொழி மாநாட்டினை நான்தான் முழுமையாகப் பொறுப்பேற்று நடத் தினேன். தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் நான் கட்டுரை வாசித்தேன். தமிழைச் செம்மொழியாக்கவேண்டும் என்கின்ற அமைச்சரவைக் குறிப்பேட்டுக்கான வரைபாணையை என்னை எழுதும்படி அமைச்சர் தயாநிதி மாறன் கேட்டிருந்தார். நானும் அதை எழுதிக்கொடுத்திருந்தேன். எனவே நான் தமிழைச் செம்மொழி ஆக்குவதற்கும் ஒரு பங்கைச் செய்திருக் கின்றேன். அதுபோல நான் வேலைசெய்யப்போன இடத்தில் அந்த இடத்து மக்களின் தாய் மொழியான ஒரிய மொழியைச் செம்மொழியாக்குவதற்கும் பங்களித்திருக்கின்றேன். இந்த மொழி பெரிது சிறிதென்று இல்லை. ஒவ்வொருவரும் தமது தாய் மொழியில் கல்வி கற்கும்போது அவர்களது அறிவுக் கூர்மையாகும் என்பதுடன் அவர்களது பங்களிப்பும் அதிக மாகும் என்று நான் நம்புகின்றேன்.

ஓர் அறிவியல் பாடத்தை ஆங்கிலத்தில் கேட்கும்பொழுது அதனை மனனம் செய்யத்தான் முடிகின்றதே தவிர அது என்ன சொல்லி இருக்கின்றது என்பதனை முழுமையாக உணர்ந்து பகுத்தாய்ந்து சிந்திப்பதற்குத் தாய்மொழியில் கற் காதபொழுது தடையாக இருக்கின்றது. ஆட்சிப்பணியர் பத விகளைப் பொருத்தவரை அவை நீதியரசர்களின் பிள்ளைக ளுக்கோ அல்லது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பிள்ளைக ளுக்கோ கிடைக்கக்கூடிய பதவி என்பது போலத்தான் இருந்தது. ஆனால் சாதாரணமானவர்களும் இந்த பதவி களைச் சென்றடையலாம் என்பது கல்வியில் பரவலாக்கம் நடந்த பின்னர் தான் சாத்தியமானது. 1950-களில் யார் ஐ.ஏ.எஸ். ஆக வந்தார்கள், 1960-களில், 1970-களில், 1980-களில் யார் ஐ.ஏ.எஸ். ஆக வந்தார்கள் ? என்று பார்த்தாலே இந்த மாற்றத்தை நீங்கள் புரிந்து கொள்ளமுடியும். ஒருவர் ஐ.ஏ.எஸ். பரீட்சையின் அனைத்துத் தாள்க ளையும் அவர்களது தாய்மொழி யிலேயே எழுதலாம் என்பது 1979-இல் தான் நடைமுறைக்கு வரு கின்றது. ‘1979 முதல் 1984 வரை யாரும் இந்த பரீட்சையை எழுதி னார்களா ?’ என்பது எனக்குத் தெரிய வில்லை. ஆனால் எழுதி எவரும் வெற்றிபெறவில்லை என்று தெரியும். சிலர் ஒரு தாளை மட்டும் தமிழில் எழுதினார்கள். ஆனால் நான் தான் பி.ஏ. தமிழ், எம்.ஏ. தமிழ் படித்து ஐ.ஏ.எஸ். தேர்வுக்கான அனைத்துத் தாள்களையும் தமிழில் எழுதி வெற்றி பெற்ற முதலாவது நபர். இது 1984-இல் நடைபெற்றது.

**ஓர் அறிவியல் பாடத்தை ஆங்கிலத்தில் கேட்கும் பொழுது அதனை மனனம் செய்யத்தான் முடிகின்றதே தவிர, அது என்ன சொல்லி இருக்கின்றது என்பதனை முழுமையாக உணர்ந்து பகுத்தாய்ந்து சிந்திப்பதற்குத் தாய்மொழியில் கற்காதபொழுது தடையாக இருக்கின்றது.**

இப்படியாக, தமிழ் இலக்கியம் படித்தவர்கள்நிறையப்பேர் ஐ.ஏ.எஸ். பரீட்சையை தமிழில் எழுத முன்வரவேண்டும், தேர் வாகவேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். ஆனால் ஒரு சில தாள்களை மட்டும் எழுதி இருக்கிறார்களே தவிர வேறு யாரும் முழுமையாக ஐ.ஏ.எஸ். பரீட்சையைத் தமிழில் எழுத வில்லை. தமிழ் இலக்கியம் படித்தவர்கள் யாருக்கும் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர் என்பதை நான் இங்கே மீண்டும் ஒருமுறை அழுத்திச்சொல்கின்றேன். நான் ஐ.ஏ.எஸ். பரீட்சையைத் தமிழில் எழுதிச் சித்தி அடைந்தவுடன் அப் போதைய பத்திரிகைகளில் எல்லாம் இது ஒரு செய்தியாக வந்தது. அப்போதைய தமிழக முதல்வரைச் சந்தித்து ஆசி பெறுமாறும் அவர் மூலம் வேலைக்கான பரிந்துரை கிடைக்கும் என்றும் சிலர் ஆலோசனை கூறினார்கள். உண்மையில் அப்போதைய தமிழக முதல்வரிடம் இருந்து எனக்கு அழைப்புக் கூட வந்தது. நான் பரீட்சையைத் தமிழில் எழுதிச் சித்திய டைந்ததால் தமிழ்நாட்டில் நான் பணியாற்றுவதுதான் பொருத் தமாக இருக்கும் என்றும் பலர் ஆலோசனை கூறினார்கள். ஆனால் அதனை நான் ஒரு குறையாக நினைத்தேன். எனக்கு எங்கு இடம் ஒதுக்கப்படுகிறதோ அந்த இடத்திலேயே நான்

சென்று பணியாற்றலாம். தமிழில் நான் பரீட்சை எழுதி சித்தி அடைந்தது எந்த விதத்திலும் எனக்கு ஒரு தடையாக இருக்காது என்று நான் முழுமையாக நம்பினேன். அப்படியே ஒடிசாவில் எனக்காக பணியை ஒதுக்கினார்கள். நானும் அங்கு சென்றே எனது பணியை ஆரம்பித்தேன்.

► **இன்று ஓர் ஆய்வாளராக மிகப்பரவலாக அறியப்பட்டுள்ள உங்களது முதலிரண்டு நூல்களும் கவிதைத் தொகுப்புகள். ஆரம்பகாலத்தில் புனைவிலக்கியத்தில் தான் நாட்டம் அதிகம் இருந்ததா? சிறுவயதில் வாசிப்புப் பழக்கம் இருந்ததா? எவற்றையெல்லாம் விரும்பி வாசித்தீர்கள்?**

என்னுடைய பல பேச்சுகள் யூடியூப் காணொளிகளாக இருக்கின்றன. அவற்றில் நான் ஒரு தமிழ் மாணவன் என்று எப்படிச் சொல்கிறேனோ, அது போலவே அடிப்படையில் நான் ஒரு கவிஞன் என்பதையும் அடிக்கடி சொல்லி இருக்கின்றேன். நான் அடிப்படையிலேயே எழுதுபவன், பேசுபவன். மதுரையில் இருந்த பொழுது கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கின்றேன். எனவே கவிதை எனக்குள் இருந்தது என்றே சொல்லவேண்டும். எனக்கு அப்போது மரபுக்கவிதைகளில் நல்ல பயிற்சி இருந்தது. அறுசீர்விருத்தம், எண்சீர்விருத்தம் போன்ற வடிவங்களில் எல்லாம் எனக்கு நல்ல லாவகம் இருந்தது. எண் சீர்விருத்தம் எனக்குப் பிடித்தமான வடிவமாகவும் இருந்தது. ஆனால் இதற்குப் பிறகு நான் புதுக்கவிதைகளும் எழுதியிருக்கின்றேன். நீங்கள் சொன்னது போல 1991-இல், ‘அன்புள்ள அம்மாவுக்கு’ என்கின்ற எனது கவிதைத் தொகுதி நர்மதா பதிப்பக வெளியீடாக வந்தது. அப்பொழுது நான் ஒடிசாவில் இருந்தேன். அதற்குப் பிறகு 2012 வரை நான் எழுதவே இல்லை. கிட்டத்தட்ட 21 ஆண்டுகள் நான் எழுதாமல் இருந்தேன். அவ்வாறு எழுதாமல் இருக்கின்றேன் என்பதை நான் வெளியே பெருமையாக சொல்லியிருக்கின்றேன். ஏனென்றால் எனக்கு அப்பொழுது செயற்படுவதில் கூடுதல் ஆர்வம் இருந்தது. அப்பொழுது பணி நிமித்தம் நிறையப் பிரச்சினைகளை எதிர் கொண்டிருந்தேன். மண்ணெய் ஊழல் நடந்திருக்கும். சில நிர்வாகச் சிக்கல்கள் நடந்திருக்கும். இப்படியான சந்தர்ப்பங்களில் எல்லாம் எனக்கு இருந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு அடித்தட்டு மக்களின் உரிமைக்காக போராடுகின்ற ஒருவனாக, தாடியெல்லாம் வைத்துக்கொண்டு ‘கோபக்காரனாக’ இருந்தேன். எழுதுவதாலோ, கவியரங்களில் கலந்து கொள்வதாலோ எந்த மாற்றத்தையும் உருவாக்க முடியாது. மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான வாய்ப்புகளும் அதிகாரமும் எனது கையிலே இருக்கின்ற பொழுது அதனை நான் செயல்படுத்துவது தான் சரியானதாக இருக்கும் என நம்பினேன். எனவே நான் ‘செயற்படுவதே ஒரு கவிதை’ என்று சொல்லிக் கொண்டிருந்தேன்.

> **எனது படைப்புகள் எப்பொழுதும் மக்களுக்கானவை. திருவள்ளுவரை பிறர் தமது அரசியலுக்குப் பயன்படுத்தும் நோக்குடன் அவரது வண்ணத்தை மாற்ற முற்பட்டபோது அதற்கான எதிர்வினையை நான் பதிவு செய்தேன்.**

இதற்குப் பிறகு நிறைய நண்பர்கள் ஊக்குவித்து என்னைக் கூட்டங்களில் பேசக்கூப்பிட்டார்கள். அப்பொழுது எனது அனுபவங்களை, ‘சிறகுக்குள் வானம்’ என்று எழுதினேன். அதில் ஒவ்வொரு பகுதியையும் நிறைவு செய்யும் பொழுது ஒரு கவிதையை எழுதி நிறைவு செய்வதை வழக்கமாக வைத்திருந்தேன். எனவே, அடிப்படையில் ஒரு படைப்பாளர் என்று என்னைச் சொல்கின்ற உங்களது அனுமானம் சரியானதுதான். உண்மையில் நான் இப்பொழுது கூட கவிதைகள் எழுதிக் கொண்டு தான் இருக்கின்றேன். சென்ற ஆண்டு ‘இப்படி ஒரு தீயா!’என்கின்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டேன். அவை குறள் தழுவிய காதல் கவிதைகளாக இருந்தன. அதற்கு முன்னர் ‘பன்மாயக் கள்வன்’ என்கின்ற கவிதைத் தொகுப்பு ஒன்றும் வெளியிட்டேன். அவையும் திருக்குறளின் இன்பத்துப்பாலை அடிப்படையாகக் கொண்டவையாக அமைந்திருந்தன. இதன் பின்னர், ‘நாட்டுக்குறள்’ என்ற பெயரில் ஏழுபாடல்களைக் கொண்ட ஒலிப்பேழையும் டிராட்ஸ்கி மருதுவின் ஓவியங்கள் நிறைந்த ஒரு புத்தகமும் வெளியிட்டேன். இந்த மூன்று புத்தகங்களையும் நான் திருக்குறளை அடிப்படையாக வைத்து எழுதுவதற்கு காரணம் நான் ஒரு எழுத்தாளன் என்றோ கவிஞன் என்றோ நிரூபிப்பதற்காக அல்ல. அவை திருவள்ளுவரின் வேட்டி வெள்ளை நிறமானது தான் என்பதை எடுத்துக்காட்டுவதற்காக நான் எழுதியவை. திருவள்ளுவரின் வேட்டியின் வண்ணத்தை ஒருவரும் மாற்றிவிடக் கூடாது; அவருக்கு வேறு சாயம் பூசிவிடக்கூடாது என்கின்ற எனது பண்பாட்டு அரசியலை நான் அங்கு முன்னெடுத்தேன். எனது படைப்பு எப்பொழுதும் நோக்கம் கருதியே அமைவது. நான் படைப்பு படைப்புக்காக என்ற அரசியல் பேசுபவன் அல்லன். எனது படைப்புகள் எப்பொழுதும் மக்களுக்கானவை. திருவள்ளுவரை பிறர் தமது அரசியலுக்குப் பயன்படுத்தும் நோக்குடன் அவரது வண்ணத்தை மாற்ற முற்பட்டபோது அதற்கான எதிர்வினையை நான் பதிவு செய்தேன். அந்த எதிர்வினையைப் பதிவு செய்வதற்கு எனது கவிதை பயன்பட்டது.

நீங்கள் கேட்டது போல நான் சிறுவயதில் நிறைய வாசிப்பேன். அப்பொழுது புதுமைப்பித்தன் எனக்கு மிகப் பிடித்தவராக இருந்தார். அதுபோல ஜெயகாந்தன், கி. ராஜநாராயணன், பிரபஞ்சன் ஆகியோரின் எழுத்துகளை மிகுந்த நேசத்துடன் நாங்கள் வாசித்திருக்கின்றோம். எனது வயதொத்தவர்களுக்குப் பிடித்த கவிஞர்களாக, மு. மேத்தா, அப்துல் ரகுமான், மீரா போன்றவர்கள் இருந்தார்கள். ஆனால் நான் தமிழ்நாட்டுக்கு வெளியே நீண்டகாலம் இருந்தபடியால் எனக்குப் பலருடன் தொடர்புகள் இல்லாமலே இருந்தது. இந்தக் காலப்பகுதியில் புதிதாக எழுதவந்தவர்களைப் பற்றிய அறிமுகம் எனக்கு அப்பொழுது கிடைக்கவில்லை. பணியும் அழுத்தம் நிறைந்ததாக இருந்தது. அதுபோலவே சிந்துவெளி பற்றிய ஆராய்ச்சியும் மிகுந்த நேரத்தைச் செலுத்த வேண்டியதாக இருந்தது. எனவே இந்தக் காலப்பகுதியில் எனது பணி, சிந்துவெளி பற்றிய ஆய்வுகள், சங்க இலக்கியம் என்றே நான் பெரிதும் வாழ்ந்து

விட்டேன். நண்பர்களில் நிறையப்பேர் நான் சங்க இலக்கியத்திலேயே வாழ்வதாகச் சொல்லுவார்கள். இதனால் எனது சமகால இலக்கிய வாசிப்பும் பரிச்சயமும் குறைந்துவிட்டது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் உண்மையில் அதற்காக நான் பெரிதாக வருந்துவதும் கிடையாது. எனது எழுத்துகளில், 'கவிதைக்கான தோரணம் இருக்கின்றதா?' 'எழுத்துக்கான தோரணம் இருக்கின்றதா?' என்பது பற்றியெல்லாம் நான் அதிகமாக யோசிப்பது கிடையாது. எனது எழுத்துகளும் செயற்பாடுகளும் காரணம் கருதியவை. எனவே அந்த நோக்கத்துடன் தொடர்பில்லாத எதையும் நான் செய்வதில்லை. அதற்கான நேரமும் எனக்கு இல்லை.

- **முதுகலை தமிழ், இதழியல் ஆகியவற்றில் பட்டம் பெற்றவர்கள் நீங்கள். உங்களிடம் இருக்கின்ற ஆய்வு ரீதியான பார்வைக்கு உங்கள் சிறுவயது வீட்டுச் சூழல், கல்விச் சூழல், வாசிப்புப் பழக்கம் போன்றவை காரணங்களாக இருந்தனவா? எவ்வாறு இருந்தன?**

நிச்சயமாக அது காரணமாக இருந்தது. 'நான் என்ன படித்தேன்?' என்பது காரணம். 'அதை நான் எங்கே படித்தேன்?' என்பது காரணம். 'அதை எப்படிப் படித்தேன்?' என்பது காரணம். நான் சங்க இலக்கியம் படித்தது 1970-களில். '2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் வாழ்க்கை எப்படி இருந்தது?' என்பதனைப் பற்றி யோசித்துப் பார்க்கக் கூடிய வாய்ப்பை அந்தத் தமிழ் இலக்கியம் எனக்குத் தந்தது. அப் பொழுது நான் சங்க இலக்கிய மாணவனாக இருந்தேன்; ஆனால் சமகாலத்தில் இருந்தேன். இது தமிழ் இலக்கியம் படித்ததால் தான் எனக்குக் கிடைத்தது. மற்றைய துறைகளில் கல்வி கற்றவர்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்திருக்காது.




அடுத்து நான் எங்கு படித்தேன் என்பது முக்கியம். நான் மதுரை காமராஜர் கல்லூரியில் படித்தேன். மதுரை, கலை இலக்கியத்தில் எப்பொழுதும் ஒரு முக்கியமான பங்களிப்பைத் தந்த இடமாக இருந்திருக்கின்றது. அது மட்டுமல்லாமல் நான் அப்பொழுது பொதுவாழ்க்கையிலும் இருந்தேன். நெருக்கடி நிலைக்கு முன்னரே பெருந்தலைவர் காமராஜரின் ஒரு தொண்டனாகவும் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவனாகவும் நான் இருந்தேன். பழ.நெடுமாறன் அப்பொழுது எனக்கு மிக நெருக்கமானவராக இருந்தார். நான் அவரை, 'அண்ணன்' என்றும், அவர் என்னை, தம்பி' என்றுந்தான் அழைப்போம். இப்பொழுது எனது, 'Journey of a Civilization: Indus to Vaigai' என்கின்ற புத்தகத்தைப் பற்றிக் கூட 167 பக்கங்களில், 'சிந்து நாகரிகமும் பழந்தமிழர் நாகரிகமும்' என்கிற ஓர் ஆய்வுநூலை அவர் எழுதி இருக்கின்றார்.

நான் ஒரு செயற்பாட்டாளன். என்னைச் சுற்றி நடக்கின்ற ஒவ்வொரு விடயத்திலும் நான் ஏதோ ஒரு நிலைப்பாடு எடுத்திருக்கின்றேன். இவை எல்லாம் சேர்ந்துதான் எனக்கு ஒரு தேடலைக் கொடுக்கின்றன. எனவே எனது வாசிப்புப்பழக்கம், நான் என்ன படித்தேன்?, நான் எங்கு படித்தேன்?, நான் வாழ்ந்த சூழல், எனக்கு ஏற்பட்ட போராட்டங்கள் போன்றன எல்லாம் சேர்ந்து எனக்கு ஒரு தேடலை கொடுத்தன.

நான் தமிழ் இளங்கலை படிக்கும் பொழுது பல்கலைக்கழகத்தின் முதல் மாணவனாக வந்து அதற்காகத் தங்கப்பதக்கம் கூட வாங்கினேன். அதுபோல நான் முதுகலையிலும் பல்கலைக்கழகத்தின் முதல் மாணவனாக வந்து தங்கப்பதக்கம் வாங்கினேன். வழமையாக இப்படியாகத் தங்கப்பதக்கம் வாங்குகின்றமாணவர்கள் முனைவர் பட்டத்துக்கான ஆராய்ச்சியைச் செய்வார்கள். ஆனால் நான் முனைவர் பட்ட ஆராய்ச்சிக்கு போகவில்லை. எனது முதுகலைப் படிப்பை முடித்த பின்னர் நான் 240 ரூபாய் சம்பளத்திற்கு தினமணி பத்திரிகையில் உதவி ஆசிரியர் பணியில் இணைகிறேன். எனது தேடல் தான் இதற்குக் காரணமாக இருந்தது. எனது தேடுதலுக்கான விடைகளை இப்படியான பணிகளின் ஊடாகத்தான் பெற்றுக் கொள்ளலாம் என்று நான் நம்பினேன். உண்மையைச் சொல்வதென்றால் அப்பொழுது எனது கேள்வி என்ன என்பது கூட எனக்கு முழுமையாகத் தெரியவில்லை. ஓர் ஆராய்ச்சி செய்வது என்றால் அதற்கு அடிப்படையான ஒரு கேள்வி தேவை. பொதுவாக ஆராய்ச்சி செய்வதற்கு வழிகாட்டுபவர்கள் இது இலகுவான தலையங்கம், இதில் ஆராய்ச்சியைச் செய்யலாம் என்று ஒரு தலையங்கத்தை ஆராய்ச்சி மாணவர்களுக்குக் கொடுப்பார்கள். எனக்கு அப்படி இலகுவான தலையங்கங்களில் ஆராய்ச்சி செய்வதில் விருப்பம் இருக்கவில்லை. எனது தேடல் எதுவோ அது குறித்ததாக ஆராய்ச்சி இருக்கவேண்டும் என்று நான் விரும்பினேன்.

எனவே, எனது வாழ்நாள் முழுக்க என்னைத் துரத்திக் கொண்டிருக்கக் கூடிய அந்தக் கேள்வியை முழுமையடையச் செய்வதற்கு முதல் எனது ஆராய்ச்சியைத் தொடங்குவது முறையல்ல என்று நான் உணர்ந்தேன். நான் உதவி ஆசிரியராகத் தினமணியில் பணியாற்றச் சென்றமைக்கும் இதுவே தூண்டலாக அமைந்தது. ஆனால் நான் பின்னாளில் ஐ.ஏ.எஸ். ஆவதற்கு இந்த இதழியல் சார்ந்த பணி தான் எனக்கு உதவியது. நான் அங்கு இருக்கின்றபொழுது எனது பணி PTI, UNI போன்ற செய்தி நிறுவனங்களில் இருந்து ஆங்கிலத்தில் வருகின்ற மூலச் செய்திகளைத் தமிழுக்கு மொழிபெயர்த்துத் தமிழில் தலைப்பிடுவது. இந்தப்பணி காரணமாக எனக்கு உலகச் செய்திகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அதிகம் கிடைத்தது. இந்தக் காலப்பகுதியில் ஆர்ஜென்டினாவிற்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான ஃபோக்லாண்ட் போர் நடைபெற்றது. இலங்கையில்

வெலிக்கடைப் படுகொலைகள், மட்டக்களப்புச் சிறையுடைப்பு போன்ற சம்பவங்களும் பஞ்சாப் கலவரங்கள் போன்றனவும் இந்தக் காலப்பகுதியில்தான் நடக்கின்றன. இப்படியான பல செய்திகளை ஆங்கிலத்தில் படித்து உடனடியாக அதைத் தமிழில் எழுதி அதனை அச்சுக்கனுப்புவது என்பதன் மூலம் எனக்குக்கிடைத்த பயிற்சி எனது ஐ.ஏ.எஸ். பரீட்சையை நான் தமிழில் எழுதுவதற்கு உதவியது. ஐ.ஏ.எஸ். பயிற்சிக்காக பல ஆங்கில நூல்களைத்தான் நான் படிக்க வேண்டியிருந்தது. இவ்வாறு ஆங்கில நூல்களில் நான் கற்றுக் கொண்ட விடயங்களை பரீட்சையில் தமிழில் விரைவாகவும் தெளிவாகவும் எழுதுவதற்கு எனக்கு இந்தப் பயிற்சி உதவியது.

ஒரு விதத்தில் பார்த்தால் நான் இந்த உதவி ஆசிரியர் பணிக்குப் போகாமல் முனைவர் பட்ட ஆராய்ச்சிக்குப் போயிருந்தால் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆகியிருக்க மாட்டேன்; ஒடிசாவுக்குப் போயிருக்க மாட்டேன்; ஒடிசாவுக்குப் போயிருக்காவிட்டால் நான் இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்க மாட்டேன் இந்த ஆராய்ச்சிகளில் நான் ஈடுபட்டிருக்காவிட்டால் இன்று நானும் நீங்களும் பேசிக்கொண்டி ருக்கட்டோம்.




எனது அப்போதைய அணுகுமுறை.

***'நாளை விடிந்ததும் பேசலாம் நாளையோடு, இப்போது பாடத் தோன்றினால் பாடு'***

என்கிற எனது கவிதையைப் போல் இருந்தது. காற்றில் பட்டம் பறப்பது போல் வாழ்க்கை இலகுவாக அமையவேண்டும் என்று நினைப்பேன். பல எழுத்தாளர்கள் தாங்கள் ஒரு சிலுவையைச் சுமந்து கொண்டிருப்பது போல பேசுவார்கள். தாங்கள் எழுதாவிட்டால் அந்த மொழியோ இலக்கியமோ செத்துவிடும் என்பது போல் அவர்கள் செயற்படுவார்கள். எனக்கு அப்படியான நினைப்பு எதுவும் கிடையாது. நான் மிக மிக இலகுவானவன். நான் துரத்துகின்ற கேள்வி என்னை விடப் பெரிதாக இருக்கவேண்டும். என்னை விடப் பெரிய கேள்விகளைத்தான் நான் துரத்த வேண்டும் என்றும் என்னை விடப் பெரிய விடயங்களின் பின்னர் தான் நான் செல்லவேண்டும் என்றும் நான் எப்பொழுதும் விரும்புவேன். இப்படியான சூழல் எனக்கு அமைந்தும் விட்டது. அதற்குப்பிறகு முனைவர் பட்டமே நான் வாங்கியது இல்லை. எனக்கு மதிப்புறு முனைவர் பட்டம் தருவதற்காகச் சில பல்கலைக்கழகங்களிலிருந்து அணுகினார்கள், ஆனால் நான் அவற்றையெல்லாம் மறுத்துவிட்டேன். இறுதியில் மதிப்புறு முனைவர் பட்டத்தை வழங்க பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் அணுகியபோது அதைத் தருவது பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் என்பதனால் மாத்திரம் அந்தப் பட்டத்தை நான் பெற்றுக்கொண்டேன்.

**▸ உங்களுடைய நூல்களையும் உரைகளையும் அறிந்தவர்கள் உங்களுக்கிருக்கின்ற பழந்தமிழ் இலக்கியப் பரிச்சயத்தையும் அதனை விஞ்ஞான ரீதியிலான ஆய்வுநோக்கில் பார்க்கின்ற பார்வையையும் அறிந்திருப்பார்கள். இன்றைய தலைமுறையினருள் பலரிடமும், 'இலக்கியம், வரலாறு போன்றவற்றின் பயன் என்ன?' என்கிற கேள்வியும் விளக்கமின்மையும் இருப்பதை அவதானிக்கமுடிகின்றது. வரலாற்றுணர்வு, இலக்கியப்பரிச்சயம், பண்பாட்டு வரலாறு பற்றிய அறிதல் போன்றன ஆளுமை விருத்திக்கும் சமூகத்தின் பண்பாட்டு விடுதலைக்கும் எவ்விதம் பங்களிக்கும் என்று கருதுகின்றீர்கள்?**

இது ஒரு மிக முக்கியமான கேள்வி. இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டது எனக்கு மிகமகிழ்ச்சி. இந்தக் கேள்வியை முன்வைத்துத்தான் நான் தொடர்ந்து இளம் சமூகத்திடம் உரையாடிக்கொண்டிருக்கின்றேன். நாம் நிகழ்காலத்தில் வாழ்கிறோம். நான் இந்தியாவிலிருந்து கனடாவுக்கு வந்து ஓரிடத்தில் இருந்து ஓர் எதிர்காலத்தை மனதில் வைத்து பேசிக்கொண்டிருக்கின்றோம். நாம் இதை இளைய தலைமுறையை மனதில் வைத்துத்தான் பேசுகிறோம். இதைப் பேசிக்கொண்டிருக்கும் எம்மை விட ஓர் இளைய தலைமுறை மீதிருக்கும் அக்கறையிலும் நம்பிக்கையிலும் நாம் நிகழ்காலத்தில் இருந்து எதிர்காலத்துக்காகப் பேசுகின்றோம். இப்படியாக நாம் நிகழ்காலத்திலிருந்து கொண்டு எதிர்காலத்தைப் பற்றி பேசும்பொழுது அங்கு தவிர்க்க முடியாமல் இருக்கின்ற ஒருவிடயம் கடந்தகாலம் என்பது. கடந்தகாலத்தைப் பற்றி திரும்பிப் பார்க்காத எந்தச் சமூகமும் தனது நிகழ்காலத்தைச் சரியாகக் கட்டமைத்து எதிர்காலத்தை நோக்கிச் சரியாகப் பயணிக்க முடியாது. அதற்குக் காரணம், நம்மைக் கடந்து போவது கடந்த காலம்தான். நிகழ்காலம் என்று எதுவுமில்லை, எதிர்காலம் என்றும் எதுவும் இல்லை, கடந்தகாலம் தான் நம்மைக் கடந்து செல்கிறது என்று நான் ஓரிடத்தில் குறிப்பிட்டு இருப்பேன்.

இப்பொழுது கொரோனாக் காலத்தில் நான் சங்க இலக்கியத்தை மீள்வாசிப்புச் செய்தேன். அந்த மீள் வாசிப்பை வைத்துக்கொண்டு நான் எழுதியவை, 'சங்கச் சுரங்கம்' என்ற தலைப்பில், 'கடவுள் ஆயினும் ஆக', 'அணிநடை எருமை', 'ஓர் ஏர் உழவன்' ஆகிய மூன்று புத்தகங்கள். ஒவ்வொரு புத்தகத்திலும் பத்து உரைகளாக மொத்தம் 30 உரைகளை எழுதினேன். இந்தக் கொரொனா காலத்தின் பின் யார் யார் உயிருடன் இருப்போம், யார் யார் உயிருடன்இருக்க மாட்டார்கள் என்று கூடத் தெரியாத ஒரு சூழலில் நான் இவற்றை எழுதினேன். இறந்தவர்களின் உடலைக் கூட உறவினர்கள் பெற்றுக்கொள்ளாத நிலையையும், அந்த இறந்த உடல்களை

அரச செலவில் எரிப்பதும் வழமையாகிப் போன காலம் அது. நெடுஞ்சாலைகளில் பல மனிதர்கள் நடந்தே தங்கள் சொந்த இடங்களுக்குப் போவதைப் பார்த்தேன். கட்டடத் தொழிலையும் கூலித்தொழில்களையும் செய்யும் லட்சக்கணக்கான மக்களை ஒருநாள், இரண்டு நாளில் இந்த கொரோனா 1500 கிலோ மீட்டர் தூரம் தெருவில் நடந்து செல்ல வைத்ததல்லவா? இது என்னை மிகவும் வருத்தியது. ஆனால் இது புதியதொன்றல்லவே? எமது முன்னோர்கள் இதுபோல பஞ்சம் பிழைப்பதற்காகவும் நோயிலிருந்து தப்பிப்பதற்காகவும் வெள்ளத்தில் இருந்து தப்பிப்பதற்காகவும் கடற்சீற்றத்தில் இருந்து தப்பிப்பதற்காகவும் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் நடையாய் நடந்திருக்கின்றார்கள். இந்தக் கொரோனாக் காலத்தில் இப்படியாக மக்கள் நடந்துபோனதை பார்க்கும் பொழுது எனக்கு எனது முன்னோர் நடந்தது, சங்ககாலத்தில் மக்கள் நடந்தது தான் தெரிந்தது. சிந்துவெளி அழிந்தபொழுதும் இப்படி நடந்திருப்பார்கள் என்று தோன்றியது. இதனால் கடந்த காலம் பற்றிய இந்த வாசிப்பு எனக்கு முக்கியமானதாகப்பட்டது. எனவே காப்பாற்றப்பட வேண்டியது நிகழ்காலமும் எதிர்காலமும் மட்டுமல்ல, கடந்தகாலமும் தான் என்பதை நான் வலியுறுத்துவேன். கடந்தகாலம் ஏன் காப்பாற்றப்பட வேண்டும் என்றால் வரலாறு முக்கியமானது. வரலாறு முக்கியமானது மட்டுமல்ல தப்பிக்கவும் முடியாதது. நாம் வரலாற்றைச் சரியாகக் கட்டமைக்கா விட்டால் எம் மீது கட்டுக்கதைகள் திணிக்கப்படும். அந்தக் கட்டுக்கதைகளை நாம், 'வரலாறு' என்று நம்பி விடுவோம். வரலாற்றைப் பொறுத்தவரை அந்த வரலாற்றை யார் எழுதுகிறார்கள் என்பதை வைத்துத்தான் வரலாறு



தீர்மானிக்கப்படும். இருண்ட காலம் எது? பொற்காலம் எது? என்பதை யார் தீர்மானிப்பது? எனது இருண்டகாலம் இன்னொருவருக்குப் பொற்காலமாகவும் எனது பொற்காலம் இன்னொருவருக்கு இருண்டகாலமாகவும் இருக்கலாம். எனவே இருண்ட காலம், பொற்காலம் என்பதை வரலாற்று அறிஞர்கள் தீர்மானிக்க முடியாது. இதுவரை எந்த ஒரு வரலாற்று ஆசிரியரேனும் ஒரு மன்னனின் குறைபாட்டைப் பற்றியோ அவனது அநீதிகள் குறித்தோ எழுதியிருக்கின்றாரா? எனவே நாம் தான் பகுத்தறிவோடு தரவுகளைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

'எனது பண்பாடு பெரியது, உனது பண்பாடு சிறியது; எனது வரலாறு முக்கியம், உனது வரலாறு முக்கியம் இல்லை; நான் முக்கியம், நீமுக்கியமில்லை' என்கிற முன் முடிவுகளுடன் நான் வரலாற்றை அணுகுவதில்லை. அடிப்படையில் நாம் எல்லோரும் மனிதர்கள்; ஆனால் பின்னால் ஏற்பட்ட அடையாளங்கள் இருக்கின்றனவல்லவா? அந்த அடையாளத்தை இன்னொருவனுக்கு அல்லது இன்னோர் இனத்துக்குக்கான அடையாளம் ஆக்கி ஒருமொழியின் அடிப்படையிலோ, இனத்தின் அடிப்படையிலோ ஒற்றை அடையாளமாக யார் கட்டமைத்தாலும் அவர்கள் இந்த உலகத்தின் அழிவுக்கு காரணமானவர்கள் ஆகின்றார்கள். அந்த வகையில் இணக்கமான, வெறுப்புணர்வில்லாத, பொறுப்புணர்வுள்ள ஒரு பிரதிநிதியாக, ஓர் ஆய்வாளனாக நான் வாழவிரும்புகிறேன். இதற்கு என்னைத் தூண்டியது, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கின்ற வரியும், 'எத்திசைச் செலினும் அத்திசை சோறே' போன்ற பழம் பாடல்களும் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்று சொன்ன பழந்தமிழ் இலக்கியமும் தான். பொதுவாகவே தமிழ் மக்கள் தொடர்ந்து பயணப்பட்ட மக்களாக இருக்கின்றார்கள். தமிழருக்குத் தெரியாத பயணம் என்ன? இலங்கைத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் உலகம் முழுக்கப் பரவியிருக்கின்றார்கள். எனவே தமிழ் கூறும் நல்லுலகம் என்பது எமக்கு நன்றாகவே பொருந்தும். அப்படி இருக்கும் பொழுது பயணங்களால் தான் மனிதர்களின் வாழ்க்கை கட்டமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் தொடர்ந்து பேசி வருகிறேன்.

▸ **வரலாறு என்பது அறிவியல் பூர்வமாக அணுகப்பட வேண்டியது என்பது நீங்கள் மீளமீள வலியுறுத்துகின்ற விடயங்களுள் ஒன்று. வரலாறு என்பதை உணர்வு சார்ந்ததாகவும் பெருமிதம் சார்ந்ததாகவும் பார்ப்பதில் இருந்து விடுபட்டு அதனை அறிவியல் நோக்குடன் பார்ப்பதன் அவசியம் பற்றிக் கூறுங்கள்?**

வரலாறு என்பது எழுதுபவரின் நோக்கில் செய்யப்படுகின்ற ஒரு சித்தரிப்பு தான். ஆனால் அந்த வரலாற்றை எதை வைத்துத் சித்தரிக்கின்றீர்கள்? அந்த வரலாற்றை எழுதுகின்ற முயற்சிக்கு உங்களுக்குத் தேவையான அடிப்படை கட்டுமானப் பொருளாக எது பயன்படுத்தப்படுகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். எனவே வரலாற்றை எழுதுவதற்கான கச்சாப் பொருள் என்ன, அந்தக் கச்சாப் பொருளை எப்படி நாங்கள் வாசிக்க வேண்டும், அதை அறிவியல் கொண்டு எப்படி நாங்கள் ஆராயவேண்டும் என்பது முக்கியமானது. எந்த ஓர் அறிவியலையும் எம்மால்

உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் வரலாற்றை உண்மையில் அப்படியாக உறுதிப்படுத்த முடியாது. பெருமைகள் என்ற பெயரில் பல விடயங்கள் எழுதப்பட்டிருக் கின்றன. அவற்றைப் பலர் நம்பிக் கொண்டும் இருக்கி றார்கள். அதனாற்றான், வரலாற்றைக் கூட அறிவியல்பூர் வமாக அணுகவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன். வரலாற்றை அறிவியல்பூர்வமாக அணுகுவதென்றால் என்ன ? நாம் வரலாறு என்று நினைத்துக் கொண்டிருக்கிற பல விட யங்கள் உண்மையில் அவ்விதமாக இல்லாமல் இருக்கலாம்.

ஒரு விடயத்தைச் சொல்லுகிறேன் இந்தியாவில் அசோகர் என்று ஒரு மன்னர் இருந்தார். அவர் ஒடிசாவில் இருகின்ற கலிங்கத்தில் போர் நடத்தினார். அங்கு அசோகரின் கல்வெட் டுகள் இருக்கின்றன. அசோகரின் மகனும் மகளும் இலங் கைக்குச் சென்று அங்கே பௌத்தமதத்தைப் பரப்பினார்கள், இப்படி எல்லாம் ஒரு வரலாறு இருக்கிறது. ஆனால் அசோகர் என்று ஒரு மன்னர் இருந்தார் என்பதே 250 ஆண்டு களுக்கு முன்னர் நமக்குத் தெரியாது. அப்படியாக ஒரு மன்னர் இருந்தார் என்பதையே ஒரு வெளிநாட்டுக்காரர் வந்து பிராமி மொழி படித்து, ‘அசோகன் பிராமி’ என்று அதற்கு பெயர்வைத்ததுடன் தேவநம்பிரிய என்பது அசோகன்தான் என்றும் அந்த வெளிநாட்டுக்காரர் தான் சொன்னார். அது வரை இருந்த வரலாறு என்ன ? எனவே வரலாறு என்பது தரவு களால் கட்டமைக்கப்படுவது என்று சொல்லலாம். அந்தத் தரவுகளை எம்மால் பரிசோதித்து உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும். நான் ஓர் உதாரணம் சொல்கிறேன். சிந்துவெளி மக்கள் ஓர் இயற்கைச் சீற்றத்தால் அல்லது கடற் சீற்றத்தால் அல்லது ஒரு பெரும்புயலால், அல்லது சுனாமி போன்ற ஒன்றினால் புலம்பெயர்ந்து இருந்தார்கள் என்று வைப்போம். அப்படிச் செல்லும்போது எதைக் கொண்டு செல்வார்கள், எதை விட்டுச்செல்வார்கள் என்பதை நாம் கவனத்திற்கொள்ளவேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து செல்லும்போது எதைக் கொண்டுபோனார்கள் ? இந்தியத் தமிழர்கள் எதைக் கொண்டுபோனார்கள் ? தோட்டத் தொழிலாளர்களாகப் பிற நாடுகளுக்குப் போனவர்கள் இவ்வாறு எதை எடுத்துச் சென்றார்கள் ? எதை விட்டுச்சென்றார்கள் ? என்ற கேள்வியை மட்டும் கேட்டேன். பொருட்களை எடுத்துச் சென்றார்கள், வீட்டைத் தூக்கி சென்றார்கள் என் றெல்லாம் சொல்லமுடியாது. அவர்கள் அவர்களுடைய ஊர்ப் பெயர்களையும், இடப்பெயர்களையும், மலைகளின் பெயர்களையும் கடவுளின் பெயர்க ளையும் அவர்களுடன் எடுத்துச் சென்றார்கள். கடவுளும் மாறாது. இங்கே இருந்தாலும் அங்கே இருந்தாலும் முருகன்தான். இங்கேயும் முனியாண்டிதான், அங்கேயும் முனியாண்டி தான். அதுபோல அவர்கள் அந்த இடப்பெயர் களையும் மீண்டும் பயன்படுத்துவார்கள் என்ற அடிப்படையில் தான் கொற்கை - வஞ்சி - தொண்டி பற்றி எல்லாம் நான் பேசுகின்றேன். வரலாற்றை அறிவியல் என்று சொல்லமாட்டேன். ஆனால் வரலாற்று எழுத்து அறிவியல் பூர்வ மாக இருக்கவேண்டும். அறிவு சார்ந் திருக்கவேண்டும். அதனை உறுதிப் படுத்துவதற்கான சான்றுகளைக் கொண்டிருக்கவேண்டும் என்பது முக்கியமானது. இது தான் சரி என்று வாதிட முடியாத எதையும் நான் எழுதியது கிடையாது. ‘பண்பாட்டின் பயணம்’ என்கிற எனது பெரிய புத் தகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு பக்கத்திலும் நான் கூறியி ருக்கிற விடயங்களைக் குறித்து என்னால் சான்று சொல்லி வாதாடமுடியும். ஒரு விடயத்தை பத்தாண்டுக்கு முன்னரே நான் கண்டுபிடித்துத் தரவுகளை வைத்திருப்பேன். ஆனால் அது உண்மையா என்கின்ற கேள்வி அந்தப் பத்தாண்டுக ளுக்கு மேலாக என்னுடன் இருக்கும். இந்தப் பத்தாண்டு களாக நான் என்னை உறுதிப்படுத்தி ஆயிரம் முறை என்னை நானே கேள்வி கேட்ட பிறகுதான் அதனை நான் பொதுவெ ளியில் வைக்கின்றேன். அண்மைக்காலத்தில் வந்திருக்கின்ற மரபணு ஆராய்ச்சி முடிவுகளும், அண்மைக் காலமாக நடக் கின்ற அகழாய்வு போன்றனவும் நாங்கள் இப்போது பேசிய இந்த வரலாற்றை சரியானவைதானென்று நிறுவியிருப்பது முக்கியமானது. இடப்பெயர் ஆய்வு சொல்வதை அகழ்வா ராய்ச்சி உறுதி செய்ய வேண்டும். அகழ்வாராய்ச்சி சொல்வதை இடப்பயர் ஆய்வு ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த இரண்டும் சொல்வதை மரபணு ஆராய்ச்சி உறுதி செய்ய வேண்டும். இந்த மாதிரியான தொடர்ச்சியான இணைப்புக ளையும் ஒன்றை ஒன்றை கேள்வி கேட்டு உறுதிப்படுத்துவ தையும் தான் அறிவியல்பூர்வமான வரலாறு என்று நான் சொல்கின்றேன்

- **செம்மொழித் தமிழ் மாநாட்டில், ‘கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம்’ அல்லது KVT Complex என்கிற கோட்பாட்டை முன்வைத்திருந்தீர்கள். இந்த ஆய்வினை நீங்கள் தொடங்குவதற்கு உந்துதலாக இருந்தது எது?**

என்னுடைய மிக முக்கியமான அறிவிப்புகளை யார் முன்னி லையில் வெளியிடுகிறேன் என்பதை நான் எண்ணிப் பார்ப்ப துண்டு. 2010இல் செம்மொழித் தமிழ் மாநாட்டில் நான் கொற்கை, வஞ்சி,





**‘ஏன் வடக்கு அல்லது தெற்குக்குப் போனீர்கள் என்று கேட்க முடியாது. பசித்தது, அதனால் போனார்கள். பசிதான் மனிதரைத் துரத்துவது. மனிதர்கள் எல்லா திசைகளிலும் பயணிப்பார்கள்.’**


தொண்டி வளாகம் என்பதை அஸ்கோ பார்ப்பலோ, ஐராவதம் மகாதேவன் இருவர் முன்னிலையிலும் அறிவித்தேன். இவ்விருவர் முன்னிலையிலும் வெளியிட்டதை நானல்ல, காலமே முடிவுசெய்திருந்தது. இதனை வளாகம் என ஓர் உருவகமாகவே தலைப்பிட்டேன். சங்க இலக்கியத்தில் நாம் எதை உரிமை, உணர்வு, அடிப்படை எனக் கொண்டாடுகிறோமோ அந்தக் கொண்டாடுகின்ற எல்லா அடையாளங்களும் சிந்துவெளியில் இடப்பெயர்களாக விட்டு வரப்படுகின்றன என்பது என்னுடைய முன்மொழிவு. விட்டுவிட முடியாத சங்க இலக்கியம் கொண்டிருந்த அடையாளம் அது.

அதில் முக்கியமான ஒன்று இடப்பெயர்கள். என்ன வகையான இடப்பெயர்கள் என்றால் கொற்கை, வஞ்சி, தொண்டி, நாலை, பாழி இந்த மாதிரியாகச் சொல்லப்படுகின்ற ஊர்ப் பெயர்கள். இந்த ஊர்ப்பெயர்களை நான் ஏன் முக்கியமாக எடுத்துக் கொள்கிறேன் என்றால் இந்த ஊர்ப்பெயர்கள் வடமொழிக்குத் தெரியாதவை. வட இந்தியாவில், இந்தியோ சமஸ்கிருதமோ படித்த ஒருவரிடம், கொற்கை, வஞ்சி, தொண்டி என்றால் என்னவென்று கேட்டால் அவருக்குத் தெரியவே தெரியாது. அவர் கேள்விப்பட்டுக்கூட இருக்கமாட்டார். நான் அவரிடம் மாறன், வழுதி, பாரி, பேகன் போன்ற பெயர்களைச் சொன்னால் அவருக்கு அது புரியமாட்டாது. அவர்கள் சம்பந்தப்பட்ட இந்திரன், வசிஸ்டர், வியாசர் போன்றவை அவருக்குத் தெரிந்திருக்கும். எனவே வேறு எவராலும் உரிமை கோரப்பட முடியாத, தமிழ் மக்களுக்கு மட்டும் சொந்தமான ஒரு கோப்பொன்றினை நான் உருவாக்கினேன். இவை சிந்துவெளிப் பண்பாட்டிலும் இருக்கின்றன என்பதை நிறுவினேன். சிந்துவெளிப் பண்பாட்டில் அதற்குத் தேவையான கேள்விகளை நான் கேட்டேன். உதாரணமாக வன்னி, நொச்சி, ஈழம் போன்ற பெயர்கள் அங்கும் இருக்கின்றன. அவர்கள் ஆங்கிலத்தில் வேறுவிதமாக இந்தப் பெயர்களை எழுதுவார்கள், உதாரணத்துக்கு ஈழம் என்பதை ILAM என்று எழுதுவார்கள். இப்படியான இடப்பெயர்கள் எப்படியாக அங்கு வந்தன? அதியமான் என்பது எப்படி அங்கிருந்தது? கண்ணகி எப்படி ஓர் ஊர்ப்பெயராக இருந்தது? கோவலன் எப்படி ஓர் ஊர்ப்பெயராக இருந்தது? என்று கேள்விகளை நான் கேட்டபோது, கொற்கை - வஞ்சி - தோண்டி வளாகம் கோட்பாட்டை உறுதிசெய்தேன். அதனை இந்த இரண்டு அறிஞர்கள் முன்னிலையில் நான் முன்வைத்தது எனக்குக் கூடுதல் மகிழ்ச்சியாக இருந்தது.

**▸ இடப்பெயர் ஆய்வு என்பது இன்றும்கூட அதிகம் பிரபலமாகாததாகவே இருக்கின்றது. நீங்கள் செய்த இடப்பெயர் ஆய்வுகள் விஞ்ஞானரீதியிலும் பண்பாட்டின் அடிப்படையிலும் அமைந்தவை. இதில் நீங்கள் கவனம் குவித்தற்குக் காரணம் என்ன?**

இதில் நான் கவனம் குவித்ததற்கு காரணம் யதார்த்தமாக நிகழ்ந்த ஒன்றுதான். நடைமுறையில் அது ஒடிசாவில் நிகழ்ந்தது. நான் மேற்கொண்டு ஆய்வுகள் செய்யாமல் இந்திய ஆட்சிப்பணிக்குச் சென்றமைக்குக் காரணமாக அமைந்தவை பெயர்கள் பற்றி எனக்குள் இருந்த கேள்விகள்தாம். கபாடபுரம் தமிழில்லை, வேறு என்று தோன்றும். அது எதுவென அப்போது தெரியவில்லை. அப்படியாயின் ஏன் நாம் கொண்டாடுகின்றோம்? பின்னாளில் நாம் சங்க இலக்கியத்தில் திரும்பத் திரும்பச் சொல்கின்ற, ‘வாயில்’ என்ற சொல்லின் மொழிபெயர்ப்பாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தேன். ஏனென்றால் இந்தியில் ‘கபாட்’ என்றால் ‘கதவு’. துவார் என்றால் கதவு, துவாரகா என்றால் வாயில்/முற்றம் போன்ற சொற்களின் மொழிபெயர்ப்பு என பின்னாளில் புரிந்து கொண்டேன். மதுரைக்கு அருகில், ‘சிலம்பாறு’ என்ற ஒன்று உண்டு. அதனை ‘நூபுர கங்கை’ என மொழிபெயர்த்திருப்பார்கள். அவ்வாறாயின் தமிழ்ச் சொற்களை வடமொழிக்கு மொழிபெயர்த்தல் என்பது ஒரு வகையான பண்பாட்டு மேலாதிக்கத்துக்கான கருவியாகும். அதனை நான் இந்தோனேசியாவிலும் தாய்லாந்திலும் அவதானித்துள்ளேன்.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது பெயர்கள் என்னை ஆய்வாளராக ஆக்காமல் தடுத்து வேறுபணிகளை நோக்கித் திசைதிருப்பிய போதிலும், அடிப்படையில் மாற்றத்தை உருவாக்கியது ‘தமிழி’ என்று ஒரிய மொழியில் பெயர் எழுதப்பட்டிருந்த மைல்கல். அதில் ஆங்கிலத்தில் ‘THAMILI’ என்று குறிப்பிடப்பட்டிருந்து. இது தமிழியா? தாமிழியா? தமீழியா? என எனக்குத் தெரியாமல் அந்த ஊருக்குச் சென்று அங்கு வாழ்ந்த மக்களிடம் பேசி அவர்கள் யார் எனத் தெரிந்து கொள்ள வேண்டும் எனப் போனேன். அங்கு திராவிட மொழியைப் பேசக்கூடிய, திராவிடக் குடும்ப மொழியைப் பேசக்கூடிய மக்கள் வசித்தார்கள். நிறையப்பேர் புரியாமல் திராவிட என்ற சொல்லைக் கேட்டாலே தலையைப் பிய்த்துக் கொண்டு திரிவார்கள். அந்த அந்தப் பிரச்சினை எனக்குக்




கிடையாது. ஒடிசாவில் உள்ள கோயா, குயி, குவி, டோன்கிரியா, கோண்ட், பிகாரில் உள்ள மால்ட்டோ, ஒடிசா, ஜார்க்கண்ட்டில் உள்ள குருக், பாகிஸ்தான் பகுதியில் உள்ள பிராகூய், போன்ற வையும் துளு, தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்று திராவிட மொழிகள்.

அவ்வூரில் இருந்தவர்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ‘குவி’ என்ற மொழியைப் பேசிய மக்கள். தமிழி என்றால் அவர்களுக்கும் பொருள் தெரியாது. எனக்கும் தெரியாது. தமிழ் என்ற சொல்லோடு பொருளானதா அல்லது வேறானதா ? எனத்தெரியாது. திராவிட மொழியைப் பேசுகின் றவர்கள் ஆதலால் அதில் ஏதோ தொடர்பிருக்குமோ என ஏற்பட்ட உணர்வுதான் என்னை இடப்பெயர் ஆய்வை நோக்கிக் கொண்டுசென்றது. அதன் பிறகே இடப்பெயர் பற்றிய புத்த கங்களை வாங்கிப் படிக்க ஆரம்பிக்கிறேன். மெட்ராஸ் பிரசி டென்சியில் இருக்கக்கூடிய அகரவரிசைப் பட்டியலில் முதலில் ஆரம்பித்தேன். சத்தீஸ்கரில் பஸ்த்தரில் இருக்கக் கூடிய ‘நாடு’ என முடிகின்ற 282 ஊர்களைத் தொகுத்து அந்த ஊர்ப் பெயர்கள் எவ்வாறு வந்தன, அவர்களின் வாழ்க் கைமுறைகள் என்ன என்றெல்லாம் கேள்விகளை எழுப்பினேன். அந்த வாழ்க்கை முறைகளை அவதானித்தால் சங்க இலக்கி யத்தில் இருக்கக்கூடிய குறிஞ்சி நிலத்திணையில் இருக்கக் கூடிய வாழ்க்கைமுறையை அவர்கள் என் கண்முன்னே வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். அந்த வாழ்க்கை முறையை தமிழ்நாட்டில் தேடினால் கிடைக்காது. நீலகிரியில் வாழ்கிற பழங்குடி மக்களிடம் அந்த வாழ்க்கை முறையைக் கண்டுபிடிக்க முடியாது. சங்க இலக்கிய குறிஞ்சித் திணை கூறும் வாழ்வியலை கொல்லிமலையிலும் ஜவ்வாது மலை யிலும் காணமுடியாது. 2000 ஆண்டுகளில் சங்க இலக்கி யத்தில் எழுதப்பட்ட வாழ்வியலுக்கு ஓர் ஆய்வுகூடம் இருக் குமெனில் அது ஒடிசா - சத்தீஸ்கரில் இருக்கக்கூடிய திராவிட பழங்குடி மக்களிடம் உள்ளது என 1997-இல் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டேன். அவர்களின் பெயர்களைத் தேடும் போது குமிழி, பழனி, தேக்கடி, தேனி போன்ற மதுரைக்கு அருகில் இருக்கக் கூடிய பெயர்கள் மத்திய பிரதேசத்தில் இருப்பதைக் கண்டேன். அந்த ஊர்களில் இருப்பவர்களும் திராவிட மொழியைப் பேசுவர் களாக இருக்கிறார்கள். ‘இப்பெயர்கள் எங்கிருந்து எங்கு சென்றன ?’ என்ற உடனே எழுகின்ற கேள்விகளை நான் ஒத்தி வைத்துவிட்டு இவற்றுக்கிடையோன உறவை உறுதிப்படுத்தி விட்டு அக்கேள்விகளுக்கு வரவிரும்பினேன். ஏனெனில் நானும் லெமூரியாக் கண்டம் என்ற ஒன்று இருந்தது, அங்கிருந்தே நாம் வந்தோம் என்றே படிப்பிக்கப்பட்டேன். ஆகையினால் முதலில் இவற்றிடையான தொடர்பை உறுதி செய்ய விரும்பினேன்.

பின்பு மத்திய பிரதேசத்தில் இருக்கக்கூடிய திராவிடப் பழங் குடியின் மூதாதையினர் அங்கிருந்து பழனி, இடுக்கியை



‘நான் ஐம்பது ஆண்டுகள் உழைத்து ஒரு கருத்தை முன் வைப்பேன். ஆனால், திட்டமிட்டு அரசியல் செய்கிறவன் காலையில் முடிவுசெய்து அதனை மறுதலிப்பான். அப்போது நான் எதனை வைத்து அதனை எதிர்கொள்ள முடியும்?’


நோக்கி வந்திருக்க வேண்டுமேயொழிய இங்கிருந்து அங்கு சென்றிருக்க வாய்ப்பில்லை என என் சிந்தனையில் தோன்றியது. ஏனெனில், கடினமான பகுதியிலிருந்து வசதியான பகுதிகளை நோக்கியே மக்கள்பயணிப்பார்களே அல்லாமல் வசதியான இடத்தை விட்டு கடினமான பகுதியை நோக்கிப் பயணிக்க மாட்டார்கள். அது மட்டுமல்லாமல் அவர்களின் வாழ்வுமுறை மிகவும் பழங்குடித்தன்மை வாய்ந் தததாக உள்ளது. நமது வாழ்வியலோ உயர்ந்த நாகரி கத்தைக் கொண்டதாக இருக்கிறது. ஆக, இவையெல்லாவற் றையும் பார்த்த பின்பே இடப்பெயர்கள் உண்மையானவை என்று நம்பி, தொடர்ந்து பயணம் பண்ணினேன். அது என்னை கொற்கை, வஞ்சி தொண்டி வளாகத்திலும் சிந்துவெ ளியிலும் கொண்டுவந்து சேர்த்தது. அதை நான் பலவகையான அறிவியல் சான்றுகளோடு தொடர்ந்து நிறுவிக் கொண்டிருக் கிறேன். இதில் திசைகளைவிட தேடல் முக்கியம். ‘திசைகள் என்பவை நேற்று வந்தவை, தேடல்கள் மனிதனின் உடன்பி றந்தவை’ என எனது பேச்சுக்களிலும் உரையாடல்களிலும் திரும்பத் திரும்பத் திரும்ப வலியுறுத்துவேன். கூறியது கூறல் குறித்து நான் கவலை கொள்வதில்லை. ஒரு மனிதரின் பொதுப்புத்தியில் போய்த் தங்கும் வரை கூறியதையே திரும்பத் திரும்ப வலியுறுத்திக்கொண்டிருப்பேன். இது முக்கி யமானது.

புலப்பெயர்வு வரலாற்றைப் படிக்கும்போது 400 ஆண்டுக ளுக்கு முன்னர், உணவுக்கு வழியின்றி மக்களை அடிமை களாக விற்றிருக்கின்றனர். அடிமைகளாக தென்னாபிரிக்கா வுக்கும் மொரிசியஸ் தீவுகளுக்கும் கொண்டு செல்லப்படு கின்றனர். பின்பு அடிமை வியாபாரம் தடைசெய்யப்படுகிறது. நான் ஆபிரிக்காவில் தான்சானியா, சான்சிபார் போன்ற அடிமை வணிகம் நடந்த கொத்தணிகளைப் பார்வை யிட்டேன். எவ்வாறு மனிதர்களை மனிதர்கள் விற்றார்கள் என நான் கேட்டுக்கொள்வதுண்டு. பின்பு, தமிழ்நாட்டிலிருந்து ஒப் பந்தக் கூலி முறையில் மனிதர்கள் மொரிசியசுக்கும் பிஜித்தீ வுகளுக்கும் குடும்பம் குடும்பமாக அனுப்பப்பட்டார்கள். அவர்க ளிடம் நீங்கள் ஏன் வடக்கு அல்லது தெற்குக்குப் போனீர்கள் என்று கேட்க முடியாது. பசித்தது.. அதனால் போனார்கள். பசிதான் மனிதரைத் துரத்துவது. மனிதர்கள் எல்லா திசைக ளிலும் பயணிப்பார்கள். அதைத்தான் ஔவையார், ‘எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே’ எனச்சொன்னார். சோறு எங் குள்ளதோ அங்கு மனிதர் செல்வர்.

ஆகையினால், நாம் மனிதரின் பயணத்தைத்தான் பேச வேண்டுமெயொழிய இப்படிப் போனான், அப்படிப் போனான் எனப் பேசமுடியாது. பயணத்தின் திசையைவிட முக்கிய மானது பயணம். பயணத்தைவிட முக்கியமானவர் பயணி. நீங்கள் பயணியின் முக்கியத்துவத்தை மறுப்பீர்களானால் உங்கள் வரலாற்றை மறுப்பவராகிறீர்கள். உங்கள் மூதாதையரை மறுக்கிறீர்கள். உங்கள் முன்னோடியை மறுக் கிறீர்கள். என் முன்னோடியும் மூதாதையரும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வயிற்றுப் பசியோடு நடந்திருப்பார்கள் என்று சொன்னால் அவர்கள் நடந்த திசையை மறுப்பது அவர்களை அவமதிப்பாகும். அதனால்தான் எனக்குத் திசைகளைப் பற்றிக் கவலையில்லை; தேடல்களைப் பற்றியதுதான் கவலை.

▸ **சிந்துவெளி ஆய்வறிஞர்கள் சிந்துவெளிப் புதிரை விடுவிப்பதற்கு அதன் எழுத்துகளையும் குறியீடுக ளையும் ஒழுங்குபடுத்துவதற்கும் வாசிப்பதற்குமான ஆய்வுகளைச்செய்து கொண்டிருந்தபோது நீங்கள் பண்பாட்டின் அடிப்படையில் சிந்துவெளி பற்றிய புதிர்களை விடுவிப்பதற்கான ஆய்வுகளை முன்னெ டுத்தீர்கள். இதற்கான முன்னோடிகளாக யார் இருந் தனர்? நீங்கள் எவ்விதம் இந்த ஆய்விலும் ஆய்வுமு றையிலும் ஈடுபாடு கொண்டீர்கள்?**

இதற்கான பதிலை சிந்துவெளி அறிவிப்பு வெளியிடப்பட்டதி லிருந்து தொடங்கவேண்டும். இந்த ஆண்டு செப்டம்பர் 20 அன்று சென்னையில், ‘ரிக்-இந்திரா-காந்தரா’ வளாகம் குறித்து ஓர் உரை நிகழ்த்தினேன். சரியாக நூறு ஆண்டுக ளுக்கு முன்பு 1924 செப்டம்பர் மாதம் சிந்துவெளி கண்டுபி டிப்பை சேர். ஜோன் மார்சல் வெளியிட்டார். அந்த நூற்றாண்டு நினைவாகவே அந்த உரையை நிகழ்த்தினேன். சிந்துவெளி அறிவிப்பை வெளியிடும் போதே, ‘அதுவரை அறியப்பட்ட கடந்தகால வரலாற்றிலிருந்து வேறுபட்டது. வேதங்களோடு தொடர்பற்றது, ஆரியரோடு தொடர்பில்லாதது’ என சேர் ஜோன் மார்சல் கூறினார். பின்பு வெளியிட்ட அறிக்கையிலும், ‘Most like Dravidic’ என்று குறிப்பிட்டார். இந்த அறிக்கை வெளியிடப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் வங்காளத்தைச் சேர்ந்த சுனித்குமார் சட்டர்ஜி எனும் அறிஞர், ‘இது ஆரியப் பண்பாட்டோடு தொடர்புடையதல்ல. ஆரியருக்கு முற்பட்ட,




ஆரியரோடு தொடர்பற்ற தமிழ்த் தொன்மைகளோடு தொடர் புடைய பண்பாடு' என மொடேர்ன் ரிவியுவில் எழுதினார். அவர் ஆதிச்ச நல்லூர் பற்றியும் அதில் மேற்கோள் காட்டினார்.

அதற்கடுத்து, மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஹீராஸ், சிந்துவெளி எழுத்துகளை வாசித்தறிய முயற்சித்தார். ரஷ்ய அறிஞர்களும் இவ்வெழுத்துகளை வாசிக்க முயற்சித்தார்கள். பின்லாந்தைச் சேர்ந்த அஸ்கோ பார்ப்பலோ, ஐராவதம் மகாதேவன் எல்லோரும் முயற்சி செய்தும், அவ்வெழுத்துகளை வாசித் தறிய முடியவில்லை. ஏனெனில், இருவழிப் படிக்கக்கூடிய அழிந்து போன ஒரு மொழி. இன்னும் அழியாத மொழியிலி ருக்கக் கூடிய ஓர் ஆவணம் கிடைக்குமானால் இரண்டையும் ஒப்பிட்டு, இலக்கண அமைப்புகளைக் கண்டுபிடித்துவி டலாம். நமக்கு அவ்வாறான எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும், முற்குறிப்பிட்டவர்கள் இது திராவிட மொழியாக இருக்கலாம் என நம்புகிறார்கள். அவர்கள், இதில் 'முருகு' அல்லது 'பொறையன்' என எழுதியிருப்பதாக ஒரு முடிவுக்கு வருகிறார்கள். நான் அந்த முயற்சியைத் தொடரவில்லை. ஏனெனில் அவர்கள் 40 ஆண்டுகளாகத் தமது வாழ்க்கையை ஒப்புக்கொடுத்து ஆய்வுசெய்தபோதிலும், பண்பாட்டு அரசி யல் பேசுகின்ற ஒருவன் திட்டமிட்டே அதனை மறுக்கமுடியும். 'நீங்கள் 'முருகு' என எழுதியுள்ளதாகக் கூறுகிறீர்கள். எனது வாசிப்பில் அப்படியில்லையே. இதில் 'விஷ்ணு' என எழுதியி ருக்கிறதே' எனச் சொல்வான். 'எதை வைத்து அவ்வாறு சொல்கிறீர்கள்' எனக் கேட்டால், 'நீங்கள் எதை வைத்து முருகு என எழுதியிருக்கிறது என்று சொல்கிறீர்கள்' எனக் கேட்பான். நான் ஐம்பது ஆண்டுகள் உழைத்து ஒரு கருத்தை முன் வைப்பேன். ஆனால், திட்டமிட்டு அரசியல் செய்கிறவன் காலையில் முடிவுசெய்து அதனை மறுதலிப்பான். அப்போது நான் எதனை வைத்து அதனை எதிர்கொள்ள முடியும்?

நான் ஏலவே பணிச்சுமைகளுக்கு மத்தியில் ஆய்வுகளை முன்னெடுக்கிறேன். பணிச்சுமைகளோடு ஒரு 40 ஆண்டுகள் உழைத்து ஆய்வு செய்தபோதிலும், 'இவர் இவ்வாறு சொல்லி யிருக்கிறார்' எனச் சொல்வார்களே தவிர ஒப்புக்கொள்ளமாட் டார்கள். ஆகையினாலேதான் நான் ஒருபோதும் வரிவடி வத்தை வாசிப்பதற்கு முயற்சி செய்ததில்லை. ஏனெனில் இதைக் கடைசியில் யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அவர்களுக்கு வேறு அரசியல் உண்டு. இந்த அரசியலுக்குள் மாட்டிக்கொள்ள விரும்பவில்லை. நான் பண்பாடு தொடர்பில் பேசத் தொடங்கினேன். மொழி, பண்பாடு, பண்பாட்டு அசை வுகள், உடல் மொழி ஆகியவை குறித்துப் பேச விரும் பினேன். சிந்துவெளியின் மொழியைவிட சிந்துவெளியின் உடல்மொழியை நான் வாசிக்க முயற்சிசெய்தேன்.

அது என்ன உடல் மொழி?

- நகரத்தில் வாழ்ந்தவர்கள் – பெரிய வீடுகள் அமைத்தல், நேர்த்தியான தெருக்கள் அமைத்தல், குளியறை, கழிவறை, வடிகாலமைப்புகள் அமைத்தல் போன்றன இவை சிந்து வெளியின் உடல்மொழி.
- பத்து உருவ பொம்மைகள் கிடைத்தால், அதில் எட்டு பொம்மைகள் பெண் உருவம். பெண்ணுக்கு முக்கியத் துவம் கொடுத்தல், தாய்த்தெய்வத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தல் போன்றன சிந்துவெளியின் உடல்மொழி.
- அவர்கள் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கடல் தெரியும், வணிகம் தெரியும் என்பது சிந்துவெளியின் உடல்மொழி.
- அவர்களுக்கு எருமை மாடுகளைப் பிடிக்கும். அவற்றைப் பழக்கியுள்ளார்கள். அவற்றைக் கொண்டு மூவாயிரம் கிலோமீட்டர் அப்பாலுள்ள சுமேரியரோடு வணிகம் செய் துள்ளார்கள். அவர்களுக்கு எருமைமாடு பிடிக்கும் என்பது சிந்துவெளியின் உடல்மொழி.
- சிந்துவெளிப் பொறிப்புகளில் திமில் காளை பொறிப்பே உள்ளது. பசுமாடு இல்லாமல் காளைமாடு தோன்றமுடியாது. ஆயினும், அவர்கள் பசுவை முன்னிலைப்படுத்தவில்லை. பசுவை முன்னிலைப்படுத்தாமல் காளையை முன்னிலைப்ப டுத்துகின்றமை சிந்துவெளியின் உடல் மொழி.
- அவர்களுக்கு சேவல் சண்டை பிடிக்கும். சேவல் சண்டை சிந்துவெளியின் உடல்மொழி.
- புலியிருக்கிறது, சிங்கம் இல்லை. அவர்களுக்கு புலியைத் தெரியும், இது சிந்துவெளியின் உடல்மொழி.
- குதிரை இல்லை. அவர்களுக்கு குதிரை தெரியாது. இது சிந்துவெளியின் உடல்மொழி.
- அவர்களின் நகரங்கள் மேல் மேற்காகவும் - கீழ் கிழக்கா கவும் அமைந்திருக்கின்றமை; வடக்குதெற்காக சாலைகள் செல்லும் இருபகுதிகளாக நகரங்களைப் பிரித்திருக் கின்றமை ஆகியன சிந்துவெளியின் உடல்மொழி.



இந்த உடல் மொழியெல்லாம் எந்த விதங்களில் எல்லாம் திராவிடத்துக்கும் தமிழுக்கும் ஒத்திருக்கிறது. வடமொழிக்கும் வேதமொழிக்கும் இந்த உடல்மொழி ஒத்துவராது என்பதை நான் பரிசோதனை மூலம் நிருபித்தேன். ஏனெனில் வேதத்தில் பெண்கடவுளே இல்லை. வேத நாகரிகம் பெண்ணுரிமை மறுக் கப்பட்ட சமூகம், கல்விப் பரவலாக்கம் பிடிக்காது, நகர்மய வாழ்வு இல்லை. எருமையைப் பிடிக்காது, அதை மகிஷா சுரன் என அசுரனாக்குவார்கள்.

மாறாக, சிந்துவெளி நாகரிகமும் திராவிட நாகரிகமும் பெண்மையைப் போற்றும் சமூகம், கல்விப் பரவலாக்கத்தை விரும்புகின்ற சமூகம். நாங்கள் எருமையைக் கொண்டாடு வோம். திமில் காளையை அலங்காநல்லூர், அவனியாபு ரத்தில் ஜல்லிக்கட்டாக நடத்துகின்ற சமூகம். ஆகவே உடல் மொழி மூலமாகத்தான் சிந்துவெளி மக்களை அடையாளங் காணமுடியும் என நான் கருதுகிறேன்.


**▸ ‘சிந்துவெளி விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றே’ என்கிற உங்களது மிகப் பிரபலமான கூற்று புலப்படாமல் இருந்த / மறைக்கப் பட்டிருந்த வரலாற்றினைத் துலக்கமாக்குவதற்குப் பெரிதும் பயன்பட்டது. இந்தக் கூற்றினையும் இதனை எவ்விதம் வந்தடைந்தீர்கள் என்பதையும் விளக்கமுடியுமா?**

நான் ஓசைகளில் மயக்கமுடையவன். எனக்குக்கவிதைகள் பிடிக்கும். கவிதையாகப் பேசப்பிடிக்கும். ஒரு சில நேரங் களில் ஒரு மிகப்பெரிய வரலாற்று உண்மை ஓர் ஒற்றை வரியில் துலங்கும். அவ்வாறு நான் வியப்படையும் நிறைய விடயங்கள் உள்ளன. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பது நாலே சொல். இந்த நான்கு சொற்களுக்குள் ஒரு பெரிய வர லாற்றுப் புரிதலையே ஒருவர் அடைக்கிறார். அவருடைய பண்பாடு, பயணங்கள் இல்லாதவர் அப்படிப் பேச முடியாது. இன்னொருவரோடு பழகாதவர் இதனைச் சொல்லமுடியாது. இன்னொருவரை சகித்துக்கொண்டு அவருக்கு மரியாதை செலுத்தாதவரால் இதைச் சொல்லமுடியாது. ‘எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே’, என்று மிக முக்கியமான உண்மைகள் மிக எளிமையாகத் தான் சொல்லப்பட்டி ருக்கின்றன. அதையும் கவித்துவமாக ஓசை நயத் துடன் சொல்லும் போது நீங்கள் வரலாற்றை விட்டுச் செல்லவேண்டிய விடயங்கள் பெரிய பெரிய கட்டு ரைகளில் அல்ல, பெரிய பெரிய உரைகளில் அல்ல, ஒற்றைச் சொல் அல்லது ஒற்றை வரி அல்லது இரட்டை வரி என எனக்குத் தெரியும். அதைத் திடீரென திட்டமிட்டுக் கொண்டுவர முடியாது. ஒரு 30 - 40 ஆண்டு தேடலுக்குப் பின்னர். திடீரென உங்களுக்கு இப்படியான ஒன்று தோன்றும்.

சங்க இலக்கியத்தைப் படிக்கும் போது எனக்கு சிந்துவெளியில் இருப்பது போலவே இருக்கும். கீழடியில் இருப்பது போல் இருக்கும் .இரண்டுக்கும் தூரம் (distant) அதிகம்; ஆனால் இடைவெளி (gap) குறைவு. கங்கை சமவெளிக்கும் சிந்துவுக்கும் தூரம் குறைவு; ஆனால் இடைவெளி அதிகம். வைகைக்கும் சிந்துவுக்கும் தூரம் அதிகம்; ஆனால்,

பண்பாட்டு அடிப்படையில் இடைவெளி குறைவாக இருக்கிறது. சங்க இலக்கியத்தைப் படிக்கும் போது சிந்து வெளியில் இருப்பது போலஇருக்கும், சிந்து வெளிப் பொருட்களைப் பார்க்கும்போது சங்க இலக் கியத்தைப் படிப்பது போலிருக்கும். சிந்துவெளி வன்பொருள் (hardware) என்றால், அதற்கான மென் பொருள் (software) சங்க இலக்கியம் என்று சொல் வேன். சிந்துவெளிப் புதிர்முடிச்சை அவிழ்ப்பதற்கான திறவுகோல் சங்க இலக்கியம் எனச் சொல்வேன். கீழடி என்பது இன்னும் முழுவதுமாகத் தோண்டப் படாத சங்க இலக்கியம். சங்க இலக்கியம் இன்னும் முழுமையாக வாசிக்கப்படாத கீழடி என்பேன். இதுதான் எனக்குப் பிடித்தவகையான உரையாடல். அந்த வகையில் நான் பிடித்துக்கொண்ட இரண்டு வரிதான் 'சிந்துவெளி விட்ட இடம், சங்க இலக்கியம் தொட்ட இடம்'.

முகம் தெரியாத இடத்தில் தமிழர்களும் தமிழ்க் குடும் பப்பெண்களும், மாணவர்களும், இளைஞர்களும் என்னைப் பார்த்து அடையாளங்கண்டு பேசும்போதும் செல்பி எடுத்துக்கொள்ளும் போதும் நிறையப் பேர், 'சிந்து வெளி விட்ட இடமும் சங்க இலக்கியம் தொட்ட இடமும் ஒன்றே சார்' என்று சொல்லும்போதும், 'இந்த இரு வரிகளை நாம் விதைத்துள்ளோம்' என எனது வாழ்க்கை நிறைவானதாக எனக்குத் தோன்றும். படம் எடுக்கும்போது இந்த வரியை அவர்கள் சொல்வ துதான் என் 40 ஆண்டு வாழ்க்கைக்கான அடையாளமே.



► **உங்களது, 'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்' நூல் வெளிவந்து சிலகாலங்களின் பின்னரே கீழடிக் கண்டுபிடிப்புகள் தொடர்பான தக வல்கள் வெளிவந்தன. அவை உங்களது ஆய்வுக ளுக்கு வலுச்சேர்க்கும் தொல்லியல் சான்றுகளாக அமைந்தன. இதன்போது உங்களது மனநிலை எப்படி இருந்தது?**

மிகவும் மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும் இருந்தது. அதுக்கு முன்பு கீழடியில் இப்படியொரு ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருப்பது எனக்குத் தெரியாது. எனது சொந்த ஊர் மதுரைதான். நான் படித்தது, வளர்ந்தது எல்லாம் அங்குதான். கீழடியிலிருந்து 10- 15 கிலோ மீட்டர் தூரத்தில்தான் நான் இருந்தேன். ஆயினும் அங்கு கீழடி என்ற ஒன்று இருப்பது எனக்குத் தெரியாது. 2002 -2004 ஆண்டுகளில் கொற்கை-வஞ்சி-தொண்டி வளாகம் எனக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. ஆனாலும் 2010 வரை காத்திருந்து, அதுபற்றிய கட்டுரையை வெளியிடுகிறேன். 2012-இல் 'High-West: Low-East' என ஆங்கிலத்தில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக பிரசுரமாக வெளியிடுகிறோம். 2016 இல் 'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்' என நானே அக் கட்டுரையை தமிழில் மொழி பெயர்க்கிறேன். 'இதுவரைக்கும் சிந்து வெளியைப் பற்றி தமிழில் வெளிவந்த நூல்களிலேயே இதுதான் தலைசிறந்த நூல்' என்று அந்நூலின் அணிந்து ரையில் ஐராவதம் மகாதேவன் எழுதியதுடன் அந்நூலை வெளியிட்டும் வைக்கிறார். இவ்வளவும் நடந்த பின்னர் 2016 மே 29-ஆம் நாள், The Times of India செய்தித் தாளில், 'Harappa-like site surfaces in Tamil Nadu' என்ற செய்தியை படிக்கிறேன். மே - 29, 30 இருநாட்களும் அந்தச் செய்தி வெளியாகியது. அடுத்து நான்கு நாட்களில் நான் ஒடிசாவிலி ருந்து சென்னை வந்து அங்கிருந்து மதுரை சென்று விமானநி லையத்திலிருந்து நேராகவே கீழடிக்குச் சென்றேன். போகும் போதே அமர்நாத் ராமகிருஷ்ணா அவர்களுக்கு தகவல் தெரிவித்துவிட்டேன், அவரும் தயாராக இருந்தார்.

அமர்நாத் ராமகிருஷ்ணா வடமாநிலங்களில் பணியாற்றி யவர். ஆகையினால் கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் சிந்துவெளி - ஹரப்பா பொருட்களைப் போலி ருப்பதை அறிந்திருந்தார். அதை அவர் தனது மேலதிகாரிக ளிடம் தெரிவித்தபோது யாரும் அவரை ஆதரிக்கவில்லை. 'சிந்துவெளி எங்கே இருக்கிறது, கீழடி எங்கே இருக்கிறது, இரண்டுக்கும் முடிச்சுப் போடுகிறாயே?' என நகைத்துள் ளார்கள். அந்தக் கட்டுரையுமே தகவல் கசிந்துதான் வெளியாகி இருந்தது. அதைப்பார்த்தே நான் நேரடியாகச் சென்றேன். அங்கு அவருடன் அரைநாள் தங்கியிருந்து அவருடன் உரையாடினேன். அங்கு ஒரு பானையோட்டின் படமும் எடுத்துக்கொண்டேன். அழகான அந்தப்பானைக்கு 'கிளியோபட்ரா பானை' எனப்பெயரும் வைத்தேன். அந்தப் படங்கள் இணையத்தில் இருக்கும். அது குறித்து ஒருபாட லையும் பின்பு எழுதினேன். அது ஒரு மிகநிறைவான தருணம்.

அகழாய்வின் துணையில்லாமல் இலக்கியத்தின் துணைகொண்டு, இடப்பெயர்களின் துணைகொண்டு, பண்பாட்டு அசைவுகளைப் படிப்பதன் மூலமாகவும், பயணங் களின் மூலமாக ஒடிசாவில் பயணித்து, ஜார்க்கண்டில், பீகாரில், மத்திய பிரதேசத்தில் பயணித்தும் கண்டுபிடித்த அடிப்படை உண்மையை மதுரைக்கு அருகில் கீழடியில்

கிடைக்கிற பொருள் நிறுவுகிறது என்பதைத் தவிர மகிழ்ச்சி வேறெதுவும் வேண்டியதில்லை. அதற்குப் பின் வேறெதுவும் தேவையே இல்லை. அதன் பின்னரான அகழாய்வுகளில் பகடைக்காய்கள் கிடைக்கின்றன. அங்கு கிடைத்த பகடை கன சதுர அறுகோணப்பகடை. அதில் சொல்லப்பட்டுள்ள முறைதான் சங்க இலக்கியத்தில் பேசப்பட்டிருக்கிறது. ஆக, சங்க இலக்கியத்தில் பேசுப்படுவது, சிந்துவெளியில் கிடைத்தது, கீழடியில் கிடைத்தது எல்லாம் பொருந்திப்போனமை எனக்கு ஓர் உத்தரவாத முத்திரையாக இருந்தது. அகழாய்வு, இலக்கியம் இரண்டும் கைகோர்த்துக் கொள்ளும் இடமாகக் கீழடியைக் கண்டறிந்தேன்.

▸ **இந்தியா உருக்குப்பானை (Melting pot) அல்ல, பன்மியச் சிறப்புமிக்க மழைக்காடு (Rainforest Pluralism) என்று குறிப்பிடுகின்றீர்கள். இதனை விளக்கிச் சொல்ல முடியுமா?**

நீங்கள் இலங்கையில் இருந்து என்னுடன் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். நான் இந்தியாவில் இருந்து வந்திருக்கின்றேன். இப்பொழுது கனடாவில் இருக்கின்றேன். இந்த மூன்று இடங்களையும் வைத்துக் கொண்டு நாங்கள் பேசுவோம். இலங்கையை எடுத்துக் கொண்டால் அங்கு பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களும் இருக்கின்றார்கள் என்பது உண்மை. இது மற்றவர்களுக்கு விருப்பமோ இல்லையோ இதுதான் எங்கள் முன்னால் இருக்கின்ற பரம உண்மை. இன்னும் நீங்கள் பார்த்துக் கொண்டால் அங்கே காடுகளிலும் மலைகளிலும் வேட்டையாடிக்கொண்டிருக்கக் கூடிய மிகத் தொன்மையான பழங்குடியினர் இப்பொழுதும் இருக்கக்கூடும். இதுபோல மீன்பிடியைத் தொழிலாகக் கொண்டவர்கள் விவசாயத்தை தொழிலாகக் கொண்டவர்கள் இன்னபிற வேலைகளைத் தொழிலாகக் கொண்டவர்கள் என்று வெவ்வேறு பிரிவானவர்கள் இருக்கின்றார்கள். மதம் என்று எடுத்துக்கொண்டால் கூட பௌத்தர்கள், சைவசமயத்தை சேர்ந்தவர்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் போன்றவர்கள் இருக்கக்கூடும். அதுபோல ஐரோப்பிய காலனியத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கிக் கொண்ட மக்களாகவும் அவர்கள் இருப்பார்கள். இந்தியாவை எடுத்துக்கொண்டால் வட இந்தியா தென்னிந்தியா என்று பல்வேறு பிரிவுகள்; தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், காஷ்மீரைச் சேர்ந்தவர்கள், கேரளாவைச் சேர்ந்தவர்கள், ஏன் தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால் கூட அங்கு இருக்கக்கூடிய பல்வேறு வகையான மக்கள், இருளர்கள், தோடர்கள் போன்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்த மக்கள். இப்படியான பலவிதமான மக்கள், வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் இருக்கின்றார்கள். அடுத்து கனடாவை எடுத்துக் கொண்டால் இங்கும் ஆதிக்குடிகள் இருந்தார்கள். அதன் பின்னர் காலனியவாதிகள், ஐரோப்பியர்கள் வந்து இங்கு குடியேறினார்கள். அதற்குப் பிறகு வெவ்வேறு காலங்களில் புலம்பெயர்ந்து வந்த வெவ்வேறு நாடுகளையும் மதங்களையும் பின்னணியையும் கொண்ட மக்கள் இங்கு இருக்கின்றார்கள். இப்படியாக வெவ்வேறு மக்கள் சேர்ந்து வாழ்ந்தால்தான் இந்த உலகம் தொடர்ந்து வாழும்; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று சொல்வது அதைத்தான்.

*'மொழி பல பெருகிய பழி தீர் தேஎத்துப்*
*புலம் பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்,*
*முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்'*

என்று பட்டினப்பாலையில் வருகின்ற பாடல் ஒன்று சொல்கின்றது. பல்வேறு மொழிகளைப் பேசக்கூடிய மக்கள் வெவ்வேறு இடங்களில் இருந்து புலம்பெயர்ந்து வந்து ஓரிடத்தில் கலந்து இனிது வாழும் பட்டினம் என்று இந்த பாடல் சொல்கிறது.

நீங்கள் ஏ.எல். பசாம் எழுதிய, 'வியத்தகு இந்தியா' (The Wonder That Was India) என்கிற நூலை அறிந்திருக்கக் கூடும். அதுபோல ஆனந்தகுமாரசாமி எழுதிய நூல்கள் இருக்கின்றன; வால்கா முதல் கங்கை வரை, இப்பொழுது வந்திருக்கக்கூடிய சேப்பியன்ஸ், ஆதி இந்தியர்கள் (Early Indians) போன்ற நூல்களை எல்லாம் எடுத்துக்கொண்டால் அவை எல்லாமே இவ்வாறு வெவ்வேறு இடங்களில் இருந்து வந்து சேர்ந்த மக்கள் ஓரிடத்தில் கூடி வாழ்ந்த பின்னணியைத்தான் கூறுகின்றன. இந்தியாவைப் பற்றிக் கூறும்போது இவையெல்லாமே சாராம்சமாக, 'உருக்குப்பானை' (India is a melting pot of many languages and cultures) என்ற உருவகத்தைப் பயன்படுத்தின. அதனை நான் மறுத்தேன். உருக்குப்பானை என்று எடுத்துக் கொண்டால, நீங்கள் ஐம்பொன்



**❛ காப்பாற்றப்பட வேண்டியது நிகழ்காலமும் எதிர்காலமும் மட்டுமல்ல, கடந்தகாலமும் தான் என்பதை நான் வலியுறுத்துவேன். கடந்தகாலம் ஏன் காப்பாற்றப்பட வேண்டும் என்றால் வரலாறு முக்கியமானது. வரலாறு முக்கியமானது மட்டுமல்ல தப்பிக்கவும் முடியாதது. நாம் வரலாற்றைச் சரியாகக் கட்டமைக்கா விட்டால் எம் மீது கட்டுக்கதைகள் திணிக்கப்படும். அந்தக் கட்டுக்கதைகளை நாம், 'வரலாறு' என்று நம்பிவிடுவோம். ❜**

என்று கேள்விப்பட்டிருப்பீர்கள், ஐந்து விதமான உலோகங்களை சேர்த்து உருக்கிச் செய்கின்ற சிலைகள் ஐம்பொன்னாலானது என்று சொல்வார்கள். இன்று இந்த உருவகத்தைப் பயன்படுத்தும்போது பல்வேறு விதமான உலோகங்களால் ஆக்கப்பட்டது என்பதைப் பெருமையாகச் சொல்கின்றார்கள். ஆனால் அங்கு இருக்கின்ற சிக்கல் என்னவென்றால் இந்தத் தனித்தனி உலோகங்களின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு அவை எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டு அடையாளமாக உருவாக்கப்படுகின்றன. எனவே, இவ்வாறு நிகழும்போது அது ஓர் ஒட்டுமொத்தமான, ஒற்றையான ஒரு தேசிய வடிவத்துக்கு அதிகாரத்தைத் தருவதாக அமையும். அதன் கீழாக இருக்கக்கூடிய சிறு சிறு கூறுகள் தங்கள் அடையாளங்களை இழந்ததாகப் போய்விடும். அத்துடன் இப்படியான ஒரு கூட்டு அடையாளம் உருவாகும் பொழுது அதன் பகுதியாக இருக்கின்ற, ஏதோ ஒரு விதத்தில் செல்வாக்கு மிக்கதான ஒரு கூறு பிற கூறுகளின் தனி அடையாளங்களையும் இயல்புகளையும் மறைத்து, அவற்றைத் தனது சாயலாக்கி தான் பலம்பெற்றதாகவும் அதிகாரத் தரப்பாகவும் மாறிவிடும். எனவே இந்த உருக்குப்பானை என்று சொல்லும்பொழுது அதற்குள் இருந்து அடையாளம் அழிக்கப்பட்ட ஒன்று கதறி அழுவது போன்ற ஒரு தோற்றம் எனக்குத் தோன்றுகின்றது. நான் ஒடிசாவில் கிட்டத்தட்ட 2000 பேர் மட்டுமே இருக்கக் கூடிய ஒரு பழங்குடி இனமக்களைப் பார்த்தேன். அவர்கள் தங்கள் மொழியைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த மொழியைத் தான் அவர்கள் பேசுகின்றார்கள். அவர்களுக்கான தனித்துவமான உடைகள் இருக்கின்றன; ஆபரணங்கள் இருக்கின்றன; ஒரு பண்பாடு இருக்கின்றது; தனிக் கடவுள் இருக்கின்றது. இப்படி ஒவ்வொரு அடையாளமும் இன்றும் பேணப்படுகின்ற இடமாகத்தான் இந்தியா இருக்கின்றது. இவர்கள் எல்லோரையும் இந்தியர்கள் என்று உருக்குப்பானையில் இட்டு உருக்கினால் அவர்களின் அடையாளமே போய்விடும். அதனால் இந்தியா ஓர் உருக்குப் பானை இல்லை என்பதை நான் உறுதியாக கூறத் தொடங்கினேன்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் இது இன்னொரு விதமாகச் செய்யப்படுகின்றது. அங்கு கறுப்பின மக்கள் ஆரம்பத்தில் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட போதும், பின்னர் அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடினார்கள். தற்போது அவர்களை 'ஆஃப்ரோ அமெரிக்கர்கள்' (Afro-Americans) என்று அழைக்கின்றார்கள். ஆனால் அங்கே என்ன நடக்கின்றது என்றால், மெக்சிகர்கள், ஸ்பானியர்கள், இந்தியர்கள், சீனர்கள் என்று அங்கிருக்கின்ற எல்லாரும், அமெரிக்கர் என்கிற குடிமக்களாக நாம் இருக்கின்றோம்' என்கிற அடையாளத்தைப் பெருமையாகக் கூறுகின்றார்கள். ஆனால் இந்தப் பொறிமுறையும் ஜனநாயக ரீதியிலான, இயல்பானதாக இருப்பதில்லை என்பதால் எனக்கு அதிலும் உடன்பாடில்லை. இந்த இடத்தில்தான் நான் மழைக்காடு (Rainforest) என்கிற பொருத்தமான உருவகத்தைக் கண்டடைந்தேன்.

மழைக்காடுகளில் நிலம் எப்போழுதும் ஈரலிப்பாக இருக்கும். இதனால் அங்கே நிலத்தில் புழுக்கள், சிறு பூச்சிகள், பூஞ்சைக் காளான்களிலிருந்து, பட்டாம்பூச்சிகள், குரங்குகள், சிறுத்தைகள், யானைகள், பறவைகள் என்று வெவ்வேறு உயிரினங்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும். மழைக்காடுகளின் மரங்கள் எல்லாம் சேர்ந்து Canopy என்று அழைக்கப்படுகின்ற குடை போன்ற ஒரு வடிவில் இருக்கும். சில மரங்கள் மாத்திரம் அந்தக் குடைவடிவை விடச் சற்று உயர்ந்ததாக இருக்கும், ஆனால் அவற்றின் வேர்களும் அந்த மழைக்காட்டில் தாம் இருக்கும். இங்கே யார் பெரிது சிறிதென்பது முக்கியமில்லை. எல்லோருடைய வேரும் அந்த மழைக்காட்டில்தான் ஊன்றி இருக்கின்றது. இங்கே இருக்கின்ற மிருகங்களும், மரங்களும் எல்லா உயிரிகளும் ஒன்றில் ஒன்று சார்ந்திருக்கின்றன, ஆனாலும் கூடிவாழ்கின்றன. இந்தியாவையும் நான் ஒரு மழைக்காடாகத்தான் பார்க்கின்றேன்.

**▸ ரிக் –இந்திரா – காந்தரா வளாகம் (RIG Complex) ஆரியப் பரவல் கோட்பாடு என்பது நீங்கள் முன்வைத்திருக்கும் ஒரு கோட்பாடு. அதுகுறித்துச் சற்று விளக்கமுடியுமா?**

இது குறித்த தரவுகளை நான் 2003-2004 காலப்பகுதியில் சேர்த்திருந்தாலும் இப்போதுதான் பேசத் தொடங்கியிருக்கின்றேன். வேறுவேலைகளில் கூடுதலாக நேரத்தைச் செலவழிக்க வேண்டியிருந்ததாலும், மேலும் சிறிது இது குறித்துப் படிக்கவும் தரவுகளைச் சேர்க்கவும் வேண்டியிருந்ததாலும் பொறுத்திருந்து, சென்னையில் செப்ரம்பர் 2024-இல் நடந்த, சிந்துவெளி நூற்றாண்டு நிகழ்வில்தான் முதலில் இது

**“ எல்லோரையும் இந்தியர்கள் என்று உருக்குப்பானையில் இட்டு உருக்கினால் அவர்களின் அடையாளமே போய்விடும் அதனால் இந்தியா ஓர் உருக்குப் பானை இல்லை என்பதை நான் உறுதியாக கூறத் தொடங்கினேன். ”**





குறித்துப் பேசினேன். எப்படி கொற்கை-வஞ்சி-துண்டி வளாகம் குறித்து அஸ்க்கோ பார்ப்பலோ, ஐராவதம் மகாதேவன் ஆகியோர் முன்னிலையில் வெளி யிட்டேனோ அதுபோலவே, ரிக் - இந்திரா - காந்தரா வளாகம் பற்றிய கோட்பாட்டை பண்பாட்டு மானுட வியல் அறிஞர் பக்தவத்சல பாரதி முன்னிலையில் வெளியிட்டேன். இதுவும் ஓர் இடப்பெயர் ஆய்வு தான். மனிதர்கள் மரம் அல்ல, அவர்கள் கால்நடை. தொடர்ந்து அவர்கள் பயணித்துக்கொண்டே இருக் கின்றார்கள், அதற்கேற்ப வரலாறும் மாறிச் செல்கின்றது. இந்த அடிப்படையில் தான் எனது மூதாதையர்களின், சங்க இலக்கி யத்தை எழுதியவர்களின் மூதாதை யர்கள் கட்டியெழுப்பிய பண்பாடே சிந் துவெளிப் பண்பாடு என்பதை நான் நிறுவமுற்பட்டேன். இதுபற்றிய முரண் பாடுகள் சிலருக்கு இருக்கலாம், சங்க இலக்கியத்தினை எழுதியவர் களின் முன்னோர் சிந்துவெளிப் பண் பாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொன் னால் எம்மையெல்லாம் வடக்கில் இருந்து வந்தவர்கள் என்று சொல்லிவிடுவார் களோ என்று சிலர் என்னிடமே சொன் னார்கள். ஆனால் எங்கள் மூதாதை யர்கள் அங்கெல்லாம் பரந்து வாழ்ந்தி ருக்கின்றார்கள் என்கிற உண்மையச் சொல்லத்தான் வேண்டும். நாம் கண்ண கியை எடுத்துக்கொண்டால், சிலப்பதி காரத்தின் படி கண்ணகி புகாரிலிருந்து மதுரைக்குப் போய், மதுரையில் இருந்து சேரநாட்டில் வஞ்சிக்குப் போனதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், இலங் கையில் இருக்கின்ற தமிழர்களும் சிங்கள வர்களும் கண்ணகியை வழிபடுகின் றார்கள். சொல்லப்போனால் தமிழ்நாட்டைவிட அதிகமாக இலங்கையில்தான் கண்ணகி வழி பாடு உள்ளது, ஆனால் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்பவர்கள் கண்ணகி மதுரையில் இருந்து இலங்கைக் குத்தான் நேரடி யாக வந்ததாகச் சொல்லுகின் றார்கள். இவை தான் கதை மரபு. இப்போது ஒருவர் கேட்கலாம், கண்ணகி மதுரையில் இருந்து நேரே சேர நாட்டுக்குப் போனாரா அல்லது இலங்கைக்குப் போனாரா என்று. இரண்டு இடத்துக்கும் தமிழர்கள் போனார்கள், அவர்களுடன் சேர்ந்து கண்ணகியும் போனார் என்பதே உண்மை. இந்த உண்மையைப் புரிந் துகொண்டால் நாங்கள் இடப்பெயர் ஆய்வு களைப் புரிந்துகொள்ளலாம்.

கொற்கை - வஞ்சி - தொண்டி வளாகத்துக்கு உரிமையாளர்களாகிய தமிழர்களின் முன் னோடிகளாகிய, சங்க இலக்கியத்தின் முன்னோ டிகள் பெரிய, உலகத்தில் சிறந்த நகர நாகரி கமான மொஹஞ்சதாரோ-ஹரப்பாவினை உரு வாக்கினார்கள் என்பதில் நான் பெருமையடை கின்றேன். சிலருக்கு அது பெருமைக்குரிய

விடயமாக இல்லாமல் இருக்கலாம். மரபணு ஆராய்ச்சிகளை எடுத்துக்கொண்டால் இந்த உலகத்தில் எல்லோருமே வந்தே றிகள், இந்த உலகத்தில் எல்லோருமே புலம்பெயர்ந்தவர்கள், இந்த உலகத்தில் எல்லாருமே பயணப்பட்டவர்கள். ஆனால் வரலாறு எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது என்றால், யார் எங் கிருந்து எப்போது எங்கே போனார்கள்?, அங்கே போய் என்ன செய்தார்கள்? என்பதை வைத்தே வரலாறு தீர்மாணிக் கப்படுகின்றது.


எந்த மக்கள் எந்தக் காலகட்டத்தில் எங்கு பயணித்தார்கள்?, யாரோடு பழகினார்கள்?, அதனால் வரலாறு எப்படி மாறியது? என்றுதான் நாம் பார்க்கவேண்டும். அந்தவிதத்தில் நான் கொற்கை-வஞ்சி-தொண்டி வளாகத்தை முன்வைத்து சிந்துவெளி மக்களுடைய தென்னோக்கிய புலப்பெயர்வு சங்க இலக்கியத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது, சங்க இலக்கியத்துக்கும் சிந்து வெளிக்கும் ஒருமரபு வழித் தொடர்ச்சி இருக்கின்றது என்பதைச் சொல்லும்போது வட நாட்டில் இருக்கக்கூடிய வேதங்களையும், ராமாயணம், மகா பாரதத்தையும் பேசக்கூடிய ஆரிய மக்கள் எங்கிருந்து வந் தார்கள் என்றும் பேசவேண்டிய தேவையும் இருக்கின்றது அல்லவா?

அதற்கானதுதான் இந்த ரிக்-இந்திரா-காந்தரா வளாகம். எப்படி கொற்கை–வஞ்சி–தொண்டி வளாகத்துக்கு தமிழர் களைத் தவிர வேறுயாரும் உரிமை கொண்டாட முடியாதோ அதுபோலவே ஆரியர்களைத் தவிர அல்லது இந்தோ ஆரி யர்களைத் தவிர வேறுயாரும் உரிமை கொண்டாடாத அடை யாளங்களான ரிக் (R), இந்திரன்(I), காந்தரா (G) ஆகிய வற்றின் முதலெழுத்துகளைக் கொண்டு இந்த ரிக்-இந்திரா-காந்தரா வளாகம் என்ற பெயரை உருவாக்கினேன். இதனை ஆங்கிலத்தில் RIG Complex என்றுசொல்லும்போது அதில் வருகின்ற, ரிக் என்பது கூட திராவிடர்கள் யாரும் உரிமை கோராத ரிக் வேதத்தின் பெயராக இருப்பதையும் திட்டமிட்டே செய்தேன்.

இந்த வரலாற்றை நான் இந்தோனேசியாவில் தொடங்கி, தாய்லாந்து என்று தொடர்ந்து தேடினேன். தாய்லாந்தில் ஓர் அயோத்தி இருக்கின்றது, அங்கிருக்கின்ற மன்னர்கள் தம்மை ராம் மன்னர்கள் என்று அழைப்பர். இந்தோனேசி யாவின் விமானசேவைக்கு கருடா என்றே பெயர். பாண்டு ரங்கன் என்ற பெயரில் அங்கே ஒரு ஊர் இருக்கின்றது. ஆனால், இங்கெல்லாம் இந்தச் சொற்கள் தென்னிந்திய மன் னர்களான பல்லவர்கள், சோழர்கள் மூலமாக இந்து மதம் அங்கு பரவும்போது போயின. இந்தப் பெயர்கள் வழங்கப்படு கின்ற இடங்களையெல்லாம் நான் திரட்டி அறிவியல் பூர்வமாக ஆராய்கின்றபோது இந்து மதப் பரம்பல் தென் னிந்தியா ஊடாக இந்தோனேசியா போன்ற கீழை நாடுக ளுக்குப் பரவுவதற்கு முன்னால் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வழியாக கிர்கிஸ்தான், தர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், ஈரான், அசர்பைஜான், ஜோர்ஜியா வரை சென்றிருக்கின்றது. இப்படியாக இந்தக் கதைப்பெயர்களையும், இடப்பெயர்க ளையும், சீதை தேடப்பட்ட இடங்களையும் தொகுத்து அட்சரேகை, தீட்சரேகையுடன் நான் கொடுக்கின்றேன். கணேசா, வியாஸ், சத்திரியன், பிராமணா, சூத்திரா என்கிற பெயர்களும் வர்ணக்கோட்பாடும் எப்படி வந்தது என்பதை இடப்பெயர் ஆய்வின் மூலம் நிரூபிப்பதாக அறிவித்திருக்கின்றேன். ரிக்-இந்திரா-காந்தரா வளாகத்தினை வெளிப்படுத்தும் அந்த நூலை நான் இப்போது எழுதிக் கொண்டிருக்கின்றேன். இதை முடித்தவுடன் நான் இரண்டு முக்கியமான அறிவுப்புகளைச் செய்தவனாக இருப்பேன்.

**▸ உங்களுடைய ஆய்வுப் பயணத்தில் தொழினுட் பத்தின் வளர்ச்சியை உள்வாங்கிப் பயணித்தவர்கள் நீங்கள். உங்களது ஆய்வுகளில் / இனிவரும் காலத்தில் இதுபோன்ற ஆய்வுகளில் AI தொழினுட்பத்தின் உதவியும் பாதிப்பும் எப்படி இருக்கும்.**


இதுவும் ஒரு முக்கியமான கேள்வி. ஒரு மொழிக்குத் தோற் றத்தைப் போலவே தொடர்ச்சியும் முக்கியமானது. தோற்றம் அதன் தொன்மையைக் காட்டுவது, தொடர்ச்சி அதன் இளமையைக் காட்டுவது. எனவே தோற்றத் தொன்மையும் தொடரும் இளமையும் மொழிக்குச் சிறப்பினைத் தருவனவா யிருக்கின்றன. அதற்கு தொழினுட்பத்தை மொழி பயன்படுத் திக்கொள்வது அவசியமானது. சங்க இலக்கியம் முதலில் பாறைகளில் தமிழி எழுத்துகளில் எழுதப்பட்டிருக்கும். பின்னர் பாறைகளில் இருந்து ஏட்டுக்கு வந்திருக்கும், பின்னர் அச்சுக்கலை வந்தபின்னர் அதனை அச்சுவடிவுக்கு மாற்றி னார்கள். இங்கே தொழினுட்பம், சங்க இலக்கியம் பரவுவ தற்கும் அந்தப் பரவல் ஜனநாயகப்படுத்தப்படுவதற்கும் உத வியிருக்கின்றது. பின்னர் கணினி, இணையம், செயலி என்று தொழினுட்பங்கள் ஊடாக மொழியும் இலக்கியங்களும் பரவின. இப்போது ஒரு சாதாரணத் தொலைபேசியிலேயே ஒரு நூலகத்தில் இருக்கின்ற அளவுக்குப் புத்தகங்களை மின் னூல்களாகச் சட்டைப்பையில் வைத்துக் காவிச்செல்லலாம். இதன்அடுத்த கட்டப் பாய்ச்சலாக Artificial Intelligence, Machine Intelligence ஆகியவற்றைச் சொல்லலாம். எதிர்கா லத்தில் இந்தத் தொழினுட்பங்களின் பாவனைகள் பரவலா கும்போது cloud களில் சேகரிக்கப்பட்டுள்ள தரவுகளில் இருந்தே அறிவுசேகரிக்கப்படுவது நடக்கும். கற்கள், எழுதுகோல், பேனா, தட்டச்சு, என்றிருந்த எழுதுகின்ற முறைகள் தற்போது பேச்சினை எழுத்துவடிவுக்கு மாற்று கின்ற (Voice to type) தொழினுட்பமாக வளர்ந்துள்ளது. இது இன்னும் செம்மையாகும். தகவல் தொழினுட்பமும் இப்ப டியான ஒலிப்பதிவுகளில் இருந்தும் தரவுகளைத்தேடி எடுக்கு மளவு வளர்ச்சிபெறும். நான் ரிக் -இந்திரா- காந்தரா வளாகம் பற்றிப் பேசி 30 நாள் கூட ஆகவில்லை, அதற்குள்ளேயே ChatGPT நான் பேசிய காணொலியைப் புரிந்துகொண்டு அந்த விபரங்களைக் கொடுக்கின்றது. பாறைகளில் இருந்து இணையம்வரை எப்படித் தமிழ் பயணப்பட்டதோ அதுபோல Artificial Intelligence, Machine Intelligence. Meta Data, Cloud Information போன்ற தொழினுட்பங்களூடும் தமிழ் பய ணப்படும். அதற்கு நாம் ஆவன செய்யவேண்டும். ஒரு காலத்தில் வேற்றுக்கிரகங்களுக்கு மனிதர்கள் இங்கிருந்து பயணித்தால் தமிழும் அவர்களுடன் சேர்ந்தே பயணிக்கும்.



sathiyathevan.s@thaiveedu.com



arunmozhivarman@thaiveedu.com




# கனடாவில் முதலாவது
# உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு

- குரு அரவிந்தன்

கனடா தொல்காப்பிய மன்றமும் தமிழ்நாடு இலக்குவனார் இலக்கிய மன்றமும் இணைந்து, 'உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி முதலாவது மாநாடு' கனடாவில், ரொறன்ரோவில் 2024-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20, 21, 22 ஆகிய தினங்களில் தொல்காப்பிய மன்றத் தலைவர் முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டின் முதல் இரு நாட்களின் நிகழ்வுகள் ரொறன்ரோ சிவிக் சென்டரிலும் இறுதிநாள் நிகழ்ச்சி தமிழ் இசைக் கலா மன்றத்திலும் நடைபெற்றன.

முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டின் முதலாவது நாள் நிகழ்வு, வழமை போல் தமிழ்த் தாய் வாழ்த்து, தேசிய கீதம், தொல்காப்பிய மன்றப் பாடல் முதலாய சம்பிரதாய நிகழ்வுகளுடனும் தமிழரின் பாரம்பரிய பறை இசையுடனும் தொடங்கியது. தொல்காப்பிய மன்ற நிர்வாகசபை அங்கத்தவர் திரு. குமரகுரு கணபதிப்பிள்ளையின் வரவேற்புரையும் அதனைத் தொடர்ந்து முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்களின் தலைமை உரையும் இலக்குவனார் இலக்கிய இணையத் தலைவர் திரு. இலக்குவனார் திருவள்ளுவரின் தலைமை உரையும் இடம்பெற்றன.

முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டின் முதல்நாள் நிகழ்வுக்கு மருத்துவர் இராமநாதன் இலம்போதரன் அவர்களும் இரண்டாம்நாள் நிகழ்வுக்கு பேராசிரியர் யோசப் சந்திரகாந்தன் அவர்களும் மூன்றாம்நாள் நிகழ்வுக்கு கனடா நாட்டு இந்தியத் தூதரகத்தின் தலைமைத் தூதுவர், மாண்புமிகு திரு. சித்தார்த்நாத் அவர்களும் பிரதம விருந்தினராகத் தலைமை தாங்கி மாநாட்டைச் சிறப்பித்தார்கள்.

## ஆராய்ச்சி மாநாடு:

மூன்று நாட்கள் நடைபெற்ற முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு மூன்று நோக்கங்களை முன்னிலைப்படுத்துவதாக அமைந்திருந்தது.

- உலகளாவிய அறிஞர்களை உள்வாங்கிக் கொண்ட தொல்காப்பிய ஆய்வு.
- தமிழர் பண்பாடு தொடர்பான நிகழ்வுகள்.
- இளைய தலைமுறைத் தமிழர்.

## தொல்காப்பிய ஆய்வு:

தொல்காப்பிய ஆய்வுகளே இம்மாநாட்டின் முதல் இலக்காக இருந்தன.

தொல்காப்பியம் தொடர்பான ஆய்வுகள் பல அண்மைக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 'அரைத்த மாவை அரைக்கும் தன்மை தவிர்க்கப்படவேண்டும். புதிய ஆய்வுத் துறைகள் திறக்கப்படவேண்டும்' என்னும் கொள்கை இம் மாநாட்டில் பின்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆய்வு என்னும் பதத்திற்கு உரிய முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. ஆய்வு, தொல்காப்பியம் தொடர்பான முதல் ஆய்வாக அல்லது முன்னைய ஆய்வின் நீட்சியாக அமையவேண்டும் என்பது எதிர்பார்க்கப்பட்டது. அதேசமயம் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் ஆய்வியல் நெறிமுறைகளை ஓரளவுக்கேனும் பின்பற்றியதாக அமையவேண்டும் என்றும் கூறப்பட்டது. அத்தோடு ஆய்வாளரின் கருத்துகள் சபையினருக்கு தெளிவாகப் புலப்படுத்தப்படும் வகையில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மாநாட்டில் ஆய்வாக அன்றி ஆய்வுப் பரப்பை ஒரு தொகுப்பாக நோக்கும் கட்டுரைகளும் ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளை மீண்டும் புரட்டிப் பார்ப்பதாக இருக்கும் ஆய்வுரைகளும் தவிர்க்கப்பட்டன.

ஆய்வுகள், உண்மையான ஆய்வை நோக்கி நகரவேண்டும் என்பதற்கு இம்மாநாடு ஒரு தொடக்கப் புள்ளியாக அமைந்தால், அதுவே இம்மாநாட்டின் வெற்றியாகக் கொள்ளத்தக்கது. மொத்தம் 124 ஆய்வுச் சுருக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் மொத்தம் 85 ஆய்வுச் சுருக்கங்கள், ஆய்வுரை சமர்ப்பிப்பதற்கு உரியனவாகத் தேர்வாயின. அவற்றில் 64 ஆய்வுரைகள் மாநாட்டில் படிப்பதற்கும் மாநாட்டு மலரில் பதிவாவதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு ஆய்வுரையும் மூன்று அறிஞர்களால் பார்க்கப்பட்டே தெரிவுசெய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வுரைகள் சிறப்புறத் தெரிவு செய்வதற்கு இணைந்து செயலாற்றிய இந்திய, கனடிய அறிஞர்கள் அத்தனை பேருமே இம்மாநாட்டின் வெற்



றியில் பங்கு கொள்கிறார்கள்.

தேர்வான ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் 758 பக்கங்களைக் கொண்ட மலராக வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், ஆய்வியல் அறிஞர்கள், அவர்களது ஆய்வுரை பற்றிய சிறுகுறிப்பு, ஆய்வாளர் படங்கள் முதலிய தகவல்களுடன் மாநாட்டில் இடம் பெறும் கலை நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல்களும் அடங்கிய 58 பக்கங்கள் கொண்ட சிற்றேடும் வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் முன்னெடுக்கப்பட்டு இன்று உலகின் அனைத்துத் துறைசார்ந்த செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்குப் பெரும் உதவியாக இருக்கும் இணையவழிக் கருத்தரங்குகள் தமிழை அடுத்த தளத்துக்கு எடுத்துச் செல்வதற்கும் பெரும் துணையாக இருந்திருக்கின்றது.

## தொல்காப்பியம் – மக்கள் மயமாக்கல்:

தமிழ் நாட்டில்கூட, தொல்காப்பியம் பற்றிய அறிவு பொதுமக்களிடையே மிக அண்மைக் காலம் வரை அருகியே காணப்பட்டிருந்தது. தொல்காப்பியம் கற்ற அறிஞர்களும், தொல்காப்பியத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்குப் பதிலாக 'தொல்காப்பியம் கற்றறிந்தாரால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடியது' என்னும் கருத்தையே கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள், இதனையே மாணவர் மத்தியிலும் பகிர்ந்து கொண்டார்கள். மாணவர்களும் தொல்காப்பியத்தை அச்சத்துடனேயே அணுகினார்கள். கற்பதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் தொல்காப்பியத்தின் பெருமையை உலகளாவிய நிலையில் மட்டுமல்ல தமிழகத்திலேயே எடுத்துச் செல்லத் தவறிவிட்டார்கள்.

மிக அண்மைக் காலத்திலேயே தொல்காப்பியத்தின் பெருமையைத் தமிழுலகுக்குக் கொண்டு சேர்க்கும் வகையிலான கருத்தரங்குகள், ஆய்வுகள், பயிலரங்குகள், பேச்சுப் போட்டிகள் முதலியன முன்னெடுக்கப்படுகின்றன. கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் மக்களின் இணையவழித் தொடர்பாடல் எதிர்பாராத அளவு பன்மடங்காக அதிகரித்தது. மக்கள், வீட்டில் இருந்தபடியே இணைய வழியாகத் தம் அறிவைப் பல வழிகளிலும் பெருக்க வாய்ப்பாயிற்று.

தொல்காப்பியத்தின் தொன்மை, இன்று வரை தமிழ் மொழியின் தனித்துவத்தைக் காத்து நிற்கிறது. அண்மைக் கால வளர்ச்சியான 'மொழியியற்' கூறுகளை 2700 ஆண்டுகளுக்கு முன்பே கொண்டிருந்த தொல்காப்பியம், செம்மொழித் தன்மையும் கொண்டியங்கும் இலக்கியம் ஆகும். இன்னும் இவை போன்ற அநேக சிறப்புகள் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது. தமிழ் நாட்டு அரசும், பல்கலைக்கழகங்களும், தனியார் நிறுவனங்களும் இணைந்தும் தனித்தும் தொல்காப்பியத்தைக் கற்பதையும் கற்பிப்பதையும் வலியுறுத்தி வருகின்றன.

## ஆய்வியல் அரங்குகள்:

உலக அரங்கின் பல்வேறு நாடுகளிலிருந்தும் 'தமிழ்' என்னும் ஒற்றைப் பாடுபொருளால் இணைக்கப்பட்ட அறிஞர்கள் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட பேசுபொருட்கள்கள் பன்முகத் தன்மை கொண்டவை. மொழியியல், மொழியியல் சார்ந்த ஒப்



பாய்வு நோக்கில் தொல்காப்பியத்தை அணுகிய அறிஞர்கள் அதனை இம்மாநாட்டில் மானிடவியல் சார்ந்தும் நோக்கினர்.

மூன்று நாட்கள் நடைபெற்ற மாநாட்டின் முதல் இரு நாட்களும் ஆய்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, சமகாலத்தில் மூன்று ஆய்வரங்குகள் மூவர் தலைமையில் இயங்கின.

- முதலாம் நாள், உரையாசிரியர் இளம்பூரணர் பெயரால் அமைக்கப்பட்ட, இலக்கணமும் உரையும் என்னும் பொருண்மை பற்றிய முதலாம் அரங்கை, முனைவர் மைதிலி தயாநிதி தலைமையேற்று நடத்தினார்.
- முதலாம் நாள், உரையாசிரியர் சேனாவரையர் பெயரால் அமைக்கப்பட்ட, அறிவியலும் மொழியியலும் என்னும் பொருண்மையில் அமைந்த இரண்டாம் அரங்கை, திரு.

சண்முகலிங்கம் கந்தையா அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

- முதலாம் நாள், உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பெயரால் அமைக்கப்பட்ட, வாழ்வியலும் மொழியியலும் என்னும் பொருண்மையில் அமைந்த மூன்றாம் அரங்கை, முனைவர் பார்வதி கந்தசாமி அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

ஆய்வரங்குகளின் பொறுப்பாளர்களுக்குத் துணையாக, தொழில்நுட்பக் கலைஞர்கள் உள்ளிட்ட நிர்வாக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, பேராசிரியர் இல. சுந்தரம் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் மிக இலகுவாக நடைபெற்றன.

முதலாம் நாள் நடைபெற்ற ஆய்வரங்குகளில், கனடா நாட்டு 27 ஆய்வாளர்களது கட்டுரைகள் படிக்கப்பட்டு, ஐயம் தெளியப்பட்டன.

மாநாட்டில் நேரில் வந்து கலந்துகொண்டு ஆய்வுரை வழங்க முடியாதவர்களுக்கு இணைய வழியாகக் கலந்து கொண்டு ஆய்வுரை வழங்குவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. மாநாடு தொடங்கியது முதல் முடியும் வரை மூன்று நாட்களும் மாநாட்டை நேரலை மூலம் கட்டுரை வழங்குவதைப் பார்ப்பதற்கும் கலந்துரையாடவும் வாய்ப்புக்களும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

முதல் நாளைப் போலவே இரண்டாம் நாளும் மூன்று ஆய்வரங்குகளில், கனடாவுக்கு வெளியே - அமெரிக்கா, இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளிலிருந்து இணைய வழியாகக் கலந்து கொண்டு தமது ஆய்வுரைகளைச் சமர்ப்பணம் செய்திருந்தார்கள். இரண்டாம் நாள் நிகழ்வுகள் தொழில்நுட்ப வல்லுனர்களான ரொறன்ரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. கே. நக்கீரன், கணியம் தாபனத்தின் நிறுவுநர் திரு. சீனிவாசன், பேராசிரியர் இல. சுந்தரம், முனைவர். அருள்ராஜ் முதலியோர் முன்னெடுப்பில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இணைய வழியாக ஆய்வு மாநாடுகளை நடத்தி வெற்றி கண்ட இம்மாநாடு, எதிர்வரும் காலங்களில் இணையவழி மாநாடுகள் வெற்றிகரமாக நடத்துவதற்கு முன்மாதிரியாக அமைந்தது என்பதில் ஐயமில்லை.

முதலாம் நாளைப் போலவே இரண்டாம் நாளும், சமகாலத்தில் மூன்று ஆய்வரங்குகள் மூவர் தலைமையில் இயங்கின.

- இரண்டாம் நாள், உரையாசிரியர் பேராசிரியர் பெயரால் அமைக்கப்பட்ட, இலக்கணமும் உரையும் என்ற தலைப்பின் கீழ் அமைந்த முதலாம் அரங்கை, பேராசிரியர் இல. சுந்தரம் தலைமையேற்று நடத்தினார்.
- இரண்டாம் நாள், உரையாசிரியர் தெய்வச்சிலையார் பெயரால் அமைக்கப்பட்ட, அறிவியல், மொழியியல், ஒப்பீட்டியல் என்னும் பொருண்மைகளில் அமைந்த இரண்டாம் அரங்கை முனைவர் மைதிலி தயாநிதி அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.
- இரண்டாம் நாள், உரையாசிரியர் கல்லாடனார் பெயரால் அமைக்கப்பட்ட, வாழ்வியலும் மொழியியலும் என்னும் பொருண்மையில் அமைந்த மூன்றாம் அரங்கை, முனைவர் பார்வதி கந்தசாமி அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

### தொல்காப்பியக் கண்காட்சி:

உலகத் தொல்காப்பிய மன்றத்தை 2015-ம் ஆண்டு தொடக்கிவைத்த தமிழ் நாட்டுப் பேராசிரியர் மு. இளங்கோவனார் அவர்கள் முதலாவது உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டர்.

தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டின் ஓர் அங்கமாகத் தொல்காப்பியக் கண்காட்சி அமைந்திருந்தது.

இக்கண்காட்சி முனைவர் மு. இளங்கோவனின் பெருமுயற்சியால் நடைபெற்றது. தொல்காப்பியம் குறித்த 500-க்கும் அதிகமான ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. தொல்காப்பிய மாநாட்டில் ஓலைச்சுவடி முதல் இன்றைய இணையத்திரை வரை தொல்காப்பிய ஆவணங்கள் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. இக்கண்காட்சி அரங்கினை ஊடகத்தினர் காணொளி வழியாகச் சிறப்பாக ஆவணப்படுத்தினர். இக்கண்காட்சியை வெளிக்கொணர்வதில் மன்றத் துணைத் தலைவர் வல்லிபுரம் சுகந்தன், பேராசிரியர் இல. சுந்தரம், திரு. கஜரூபன், ‘கணியம்’ த. சீனிவாசன் உள்ளிட்ட பலர் முன்னின்று உழைத்தனர்.

புலம்பெயர் நாடுகளில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் நாடு கனடா. கனடா நாடு ஒரு பல்லின பல்பண்பாட்டு நாடாகும். கனடாவில் தமிழை வளர்ப்பதற்காக முன்னெடுக்கப்படும் பல்வேறு செயற்றிட்டங்களில், தொல்காப்பிய மன்றத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் முக்கியமானவை.



## சிறுவருக்கான தமிழ்த் திறன் போட்டி:

தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டின் முதல் அங்கமாக, மாணவரிடையே தமிழ் மொழியையும் தொல்காப்பியத்தையும் கொண்டு செல்லும் நோக்கில் 'தமிழ் திறன் போட்டிகள்' நடைபெற்றன. பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்கள், முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டில் பேசும் வாய்ப்பினைப் பெற்றார்கள். அத்துடன் தமிழ்த் திறன் போட்டிகளில் பரிசில் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் மாநாட்டில் வழங்கப்பட்டன.

## சிறுவர், பெரியவர்களுக்கான விநாடி வினா:

மாநாட்டில், சிறுவருக்கான வினாடி வினாப் போட்டி மிகச் சிறப்பாக நடைபெற்றதுடன் அது பெரும்பாலான பார்வையாளர்களினால் விரும்பப்பட்டது. சிறுவருக்கான விநாடி வினாப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்குப் பட்டங்களும் வழங்கப் பட்டன.

இவை தவிர, தமிழர் பண்பாட்டு அம்சங்களான, சதிராட்டம், நடனம், நாடகம் என மாநாடு களைகட்டியது. திருமதி அற்புதராணி கிருபாராஜ் அவர்களின் மாணவிகளின் 'குற்றாலக் குறவஞ்சி' நாட்டிய நாடகமும், கவி ஆசான் சண்முகராசன் சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் 'அன்பின் ஐந் திணை' கவியரங்கமும், திருமதி மாலினி பரராஜசிங்கம் அவர்களின் நெறியாள்கையில் இடம்பெற்ற 'பறையிசை'யும், திரு. கஜேந்திரன் சண்முகநாதனின் ஒருங்கிணைப்பில் கலாலயக் கலைஞர்கள் வழங்கிய 'காத்தவராயன்' சிந்துநடைக் கூத்தும், திரு. இராஜ்குமார் குணரட்ணத்தின் நெறியாள்கையில் 'தொல்காப்பியம்' என்ற வில்லுப்பாட்டும், மற்றும் சிறுவர் நாடகமும் மாநாட்டுக்குப் புதுப்பொழிவைத் தந்தன. இதைவிட முனைவர் மு. இளங்கோவன் அவர்களின் ஒருங்கிணைப்பில் 'ஓலைச்சுவடி முதல் இணையத்திரை வரை' என்ற கண்காட்சியும் இடம் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இளைய தலைமுறையினரை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கான போட்டிகளும், நிகழ்ச்சிகளும் தமிழில் இடம் பெற்றுப் பரிசுகள் வழங்கப்பட்டதைப் பார்த்துப் பூரித்துப் போனேன் என்று சொன்னால் மிகையாகாது. கடந்த 35 ஆண்டுகளாகக் கனடாவில் பகுதிநேர ஆசிரியர்களாகப் பணியாற்றும் நாங்களும், பெற்றோரும் கனடிய மண்ணில் தமிழ் மொழியை நிலை நிறுத்த எடுத்துக் கொண்ட முயற்சியின் பலனைக் கண்ணாறக் கண்டோம். இங்கே பிறந்து வளர்ந்த இளைய தலைமுறையினர் மேடையில் நின்று தமிழ் மொழியில் முழங்கிய போது, அதைப் பார்த்து எம்மைப் போன்றோர் பரவசமடைந்தனர்.

இதைவிடக் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடந்தன. திருமதி வனிதா குகேந்திரன் அவர்களின் கலைக்கோயில் நுண்கலைக் கல்லூரி மாணவியரின் நடனமும், திருமதி கௌசல்யா ராஜகுமார் அவர்களின் சிவசக்தி நாட்டியாலயா குழுவினரின் நடனமும், திருமதி தயாளினி ஜீனராஜ் அவர்களின் சலங்கை நர்த்தனாலயா கலைக்கூடக் குழுவினரின் நடனமும், திருமதி நிரஞ்சனா சந்துரு அவர்களின் நடனக் குழுவினரின் நடனமும், திருமதி செந்தில்செல்வி அவர்களின் நாட்டியக் குழுவினரின் நடனமும் சிறப்பாக அமைந்தன.

ஆய்வரங்கத்தில் ஆய்வுக்கட்டுரை வாசித்தவர்களுக்கும், போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கும் தொல்காப்பியரின் சிறிய உருவச்சிலை விருதும், சான்றிதழும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வை மிகச் சிறப்பாக நடத்தி முடித்த மன்றத்தலைவி, முனைவர் திருமதி செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்களும், செயற்குழுவினரும், தன்னார்வத் தொண்டர்களும் கனடா தமிழ் ஆர்வலர்களின் பாராட்டுக்குரியவர்கள். இந்த மண்ணில் தமிழ் அழிந்துவிடும் என்று எதிர்வு கூறியவர்களுக்கு 'விழுந்தாலும் எழுந்து நிற்போம்' என்பதை இளைய தலைமுறையினர் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு வெளிவந்த விசேட மலரில் சிறப்புக் கட்டுரைகளை



எழுதியவர்களின் விபரங்களை இணையத்தில் கண்டு கொள்ளலாம். மூன்று நாள் தொடர்ச்சியாகக் கனடாவில் நடந்த இந்த முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு கனடியத் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இம்மாநாடு அடுத்த தலைமுறையினரிடம் தமிழை எடுத்துச் செல்லக் கூடியதாக அமைந்ததுடன் அவர்கள் தொடர்ந்தும் பயன்பெறக்கூடியதாக இம்மாநாட்டு மலரில் வெளிவந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் அமைந்திருந்தன. அந்த வகையில் இனிவரும் தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, பயனுள்ள இந்தக் கட்டுரைகளின் தலைப்பையும், அதை எழுதியவர்களின் பெயர்களையும் இணையத்தில் வெளியிட்டு இருந்தனர். புலவர்களுக்கும், பண்டிதர்களுக்கும் தான் தொல்காப்பியம் சொந்தம் என்ற நிலையை இந்தக் கட்டுரைகள் மாற்றி அமைத்திருப்பதையும், பலதரப்பட்ட மக்களிடம் இக்கட்டுரைகள் சென்றடைந்திருப்பதையும் நீங்கள் கவனத்தில் கொள்ளலாம்.

புலம்பெயர்ந்த மண்ணில் இதுபோன்ற மாநாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும். அவ்வாறான சூழலில் எமது தமிழ் மொழியை புலம் பெயர் நாடுகளில் தக்க வைத்துக் கொள்வதுடன் எமது செம்மொழியின் சிறப்பை அடுத்த தலைமுறையினரும் அறிந்து கொள்ளவும் வாய்ப்பாக அமைகின்றது. அத்துடன் தமிழர்கள் புகலிட மண்ணில் பெருமையுடன் வாழவும் இவை வழிவகுக்கும்.



kuruaravindan@thaiveedu.com

# எந்தக் கடிவாளத்தினாலும் அடக்க முடியாத நம் எண்ணங்கள்

– அ. லெட்சுமணன்

மொழி என்பது தொடர்பாடல் கருவியாகும் என்ற மேலோட்டமான வரையறை காணப்படுகின்ற நிலையில் அது முழுமையான விளக்கமாகாது. மொழி என்பது அதை பேசு கின்ற மக்கள் குழுமத்தின் அரசியல், கலை பண்பாட்டு அம் சங்கள், வரலாறு, சமூக நிலை, பழக்க வழக்கங்கள் போன்ற வாழ்வியல் கூறுகளுடன் கூடிய எண்ணங்கள் என்றவாறு விரி வுபெறும். 'காலத்துக்கு ஏற்றவாறு தன்னுள் மாற்றத்தை ஏற் றுக்கொள்ளும் மொழியே தொடர்ச்சியாக நிலைபெற்று வாழும்' என்பார்கள். எண்ணங்களை வெளிப்படுத்துவதிலும், எடுத்துரைப்பதிலும், பதிவதிலும் மனிதகுலத்திற்கு மொழி இன்றியமையாததாக விளங்குகிறது. இணைய யுகத்தில் இவ் வாறு பிரயோகத்திலுள்ள மொழிகள் தன்னுள் மாற்றத்தை கொண்டுள்ள நிலையிலேயே உயிர்ப்புடன் தன் ஆயுளை விரிவுபடுத்திக்கொள்கிறது. மொழி என்பது போர்க்கருவியாக அமைதல் வேண்டும் என்பார்கள். பண்பாட்டு படையெடுப் பில் இருந்து அறிவுப்போர், அறப்போர், உரிமைப்போர் புரித லுக்கு மொழியை மிகக் கூர்மையாகப் பயன்படுத்த துணிதல் என்பது அவ்வவ் தாய்மொழிக்குரியவர்களின் தலையாய கட மையாகும்.

எந்தவொரு மொழியிலும் நாட்டார் பாடல்களே அம்மொழிக ளின் இலக்கிய தோற்றுவாயாக அமையப்பெற்றுள்ளன. செவி வழியாகப் பேணப்பட்டு வந்த இப்பாடல்கள் ஓசை நயத்தை நன்கு புலப்படுத்துவதாக அமைந்தன. மொழியின் பரிமாணத்தில் எழுத்து வடிவ மாற்றத்தினைத் தொடர்ந்து கவிதை இலக்கியமே காலத்தால் மூத்ததாக அமைவது தெளிவாகிறது. மொழியினதும் கவிதையினதும் முன்நகர்வு செய்யுள் என்ற நிபுணத்துவ நிலையை அடைந்துள்ளது. இலக்கியம் என்றாலே செய்யுள் என்ற நிலையில் மாத்திரமே நோக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தமிழில் கவிதை இலக் கியத்தில் செய்யுள் நடையை மாற்றி நவீன வடிவமான புதுக்க விதைகளின் தோற்றுவாயிற்கு அடித்தளமிட்ட பாரதியி சத்தை நினைவுகூர வேண்டியுள்ளது. இன்று கவிதையின் தோற்றம் பற்றி பல்வேறு வியாக்கியானங்கள் முன்வைக்கப்ப டுகின்றன. அவ்வாறே அவ்வியாக்கியானங்கள் தமிழ் மொழி மூல கவிதைகளுக்கும் பொருந்துவதாகவே அமைகிறது. மொழியின் ஊடகம் என்ற வகையில் கவிதைகள் பற்றிய அவ தானமும் கவனிக்கத்தக்கது. இலக்கியத்தின் வகைப்பாட்டில் கவிதை ஓர் அங்கம் என்ற வகையில் அதனைச் சமூக ஆவ ணமாகவும் உற்று நோக்க வேண்டியுள்ளது.

தமிழ் இலக்கிய உலகில் பல்வேறு ஆளுமைகளுடன் இணைத்து அறியப்பட்ட தாழை. இரா. உதயநேசன் நவீன கவிதைகளுக்கூடாகத் தனக்கென ஒரு பாதையை வகுத்துக் கொண்டவர். அமைப்பார்ந்த செயற்பாடுகள், நிறுவனமயப்ப டுத்தப்பட்ட இலக்கியம் மற்றும் மொழியியல் சார்ந்த உயர் கல்வி முறைசார் செயற்பாடுகள் மற்றும் இலக்கிய ஆர்வலர் களிடத்தில் இலக்கிய படைப்புகளுக்கான களங்களை உரு வாக்குவதும், படைப்பார்வத்தை தூண்டுதலும், தமிழ் இலக் கிய ஆய்வுத் தளங்களை விரிவுப்படுத்துதலும் என்ற வகை யில் தாழை. இரா. உதயநேசனின் வகிபங்கு அண்மைக் கால மாக முனைப்பு பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. தமிழ் இலக்கியத்தைச் சர்வதேச மயப்படுத்தும் பணியில் புல மையாளர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கான அனுசர ணையை வழங்கி அவர்களை ஊக்குவிப்பதிலும் சிறந்த முன் மாதிரியை வெளிப்படுத்தி வருகின்றமையும் கவனிக்கத்தக் கது. அண்மைக்காலமாக தமிழ் கவிதைகளின் உருவாக்கம் வெளிப்படுத்துகை குறித்து இவரால் இணைய வழியில் விரி வுபெற எடுக்கும் முயற்சிகள் மனங்கொள்ளத்தக்கது. தமிழ்க் கவிதை இலக்கிய தொகுப்புகளின் பிரசவங்கள் இவரின் அமைப்பார்ந்த செயற்பாடுகளினால் அதிகரிக்கப்பட்டு வந் துள்ளமையும் அவதானத்திற்குரியது.

தமிழ் இலக்கியப் பரப்பில் ஏலவே நான்கு சிறுகதைத் தொகுப்புகளுடன் 'தமிழே விதையாய்', 'பூவோடு பேசும் பூஞ் சிட்டு', 'மலரே மௌனமா', 'விடை தேடும் விடியல்' ஆகிய கவிதைத் தொகுப்புகளைத் தந்தவர். இருபத்தோராம் நூற் றாண்டின் முதல் மூன்று தசாப்தங்களில் தமிழ் கவிதை இலக் கிய பரப்பில் தாழை. இரா. உதயநேசனின் கவிதைகளும் வலிமை சேர்க்குமாற்றலை அவதானிக்கலாம். தன்முனைப்பு கவிதைகளை எழுதிவரும் உதயநேசன் ஹைக்கூ கவிதைக ளிலும் முத்திரை பதித்தவர். உதயநேசனின் அண்மைய வரவு களான 'எண்ணமே ஏற்றம் தரும்', 'எரிதழல் கொண்டு வா' ஆகிய நூல்கள் தமிழ் கவிதை இலக்கிய உலகில் கூரிய கவ னத்தைப் பெற்றதாக விளங்குகின்றன. இந்நூலின் வெளியீட் டுத் தளம், அறிமுகக் களங்கள் என்பன இத்துறைசார் ஆர்வ லர்கள் குழுமிய அரங்குகளாக அமையப்பெற்றமையை சமூக வலைத்தளங்கள் ஊடாக அவதானிக்கலாம்.

உறவுகள் மீதான பாசத்தின் பாடுபொருளாய் அமைந்த கவி தைகளைப் பார்க்கின்றபோது அப்பா, அம்மா, மகள் எனத்

தொடரும் அன்பின் உருமாற்றங்களையும், மனிதநேயத்தின் சாட்சி பொருளாய் அவர்கள் அமைந்தவாறையும் உதயநேச னின் கவிதைகள் பலவற்றில் அவதானிக்கலாம். 'அன்புள்ள அப்பா' எனும் கவிதையில் பண்பின் திருவுருவாய் விளங்கும் தந்தையைத் தரிசிக்கலாம்.

*தந்தை என்றும் தரணியில் வள்ளலே*
*சிந்தை முழுவதும் நினைவுகள் துள்ளலே*
*உந்தன் சொற்களில் உயர்வுகள் கிட்ட*
*எந்தன் வழிகள் ஏற்றம் கொள்ளுமே*

என்ற வரிகள் தந்தையின் அர்ப்பணிப்பு தன்மையையும் நம் பிக்கை பிரவாகத்தையும் ஏற்படுத்துவதாக அமைகிறது. அவ் வாறே 'அன்பை விதைத்து அறுவடை செய்', 'அன்பினால் அகிலத்தை வெல்வோம்', 'மகளெனும் மகாசக்தி', 'கிள்ளை மொழிபேசும் பிள்ளைக்கொரு தாலாட்டு', 'சீர்வரிசை', 'தோழ னாய் அப்பா', 'என் அம்மா', 'நேசிக்கலாம் வாங்க..!' போன்ற தலைப்பிலான கவிதைகள் உறவுகளுக்கும் பாசத்துக்கும் இடையிலான இடைத்தொடர்பையும் பாசப் பிணைப்பினை யும் எடுத்துரைக்கின்றன. வாழ்க்கை நெறிமுறையில் உறவு கள் தவிர்க்க முடியாத அங்கமாகிறது. பண்பாட்டுக் கட்ட மைப்பில் உறவுகள் கட்டமைக்கும் விழுமியங்கள் வாழ்வியல் முறையை தெளிவுறுத்துவதை அறியலாம். தாய், தந்தை, பிள்ளை, மாமா போன்ற உறவுகளிடையே அந்நியோன்ய தன் மையையும், நட்பின் உயர்ச்சியையும் அனுபவபூர்வமான எடுத்துரைப்புகளாக இவரது கவி வரிகள் அமையுமாற்றைக் காணலாம். குறிப்பாக 'சீர்வரிசை' எனும் கவிதையில் குடும்ப விரிவின் தன்மையையும் மாமன் முறையின் பெருமையையும் விபரிப்பதையும் அவதானிக்கலாம்.

*போற்றும் தமிழர் பண்பாட்டு உருவாம்*
*ஊற்றாய் அன்பை பொழியும் உறவாம்*

உறவு முறை யதார்த்தத்தையும் விழுமிய பண்பாட்டுத்தன் மையையும் இக்கவிதை வெளிப்படுத்தி நிற்கிறது. 'சொர்க்கம் என்பது சொந்தம் நிறைந்தது - தர்க்கம் இன்றி தன்மையுடன் நடப்போம்' என்ற 'நேசிக்கலாம் வாங்க..!' தலைப்பிலான வரி கள் உறவுகளின் மேன்மையை அர்த்தப்படுத்துகின்றன. அவ் வாறே 'வாழ்வின் ஏணிப்படிகள்..' என்ற கவிதை வாழ்வின் உறவுகளின் இணைவுகள் தொடர்பின் முக்கியத்துவத்தை யதார்த்த பாங்கில் எடுத்துரைக்க முனைகிறது.

வாழ்வின் வழிகாட்டிகளும் முன்மாதிரிகளும் பெற்றுக்கொள் ளும் இடம் ஒவ்வொருவரிலும் முக்கியத்துவம் பெறுகிறது. அவ்வாறே மனதளவில் தாக்கத்தை ஏற்படுத்துபவர்களும் மறையான மன உந்துதலுக்கு வழி சமைப்பதுமுண்டு. அதன் தொடர்ச்சிநிலை மனதளவில் வக்கிரத்தை ஏற்படுத்தும் வழி யாக அமைவதுமுண்டு. உதயநேசனில் நேர் சிந்தனைக்குத் தூண்டுதலாக அமைந்த பிரமுகர்கள் இவரின் கவிதைகளில் வாழ்கின்ற தன்மையை அவதானிக்க முடிகிறது. அவ்வாறான நேசிப்பிற்குரியவர்கள் பலர் இருப்பினும் இத் தொகுப்பில் இடம்பெறும் 'இரும்பு பெண்மணி இந்திரா', 'கப்பலோட்டிய தமிழன்', 'கவிகளின் அரசன் கண்ணதாசன்' ஆகிய தலைப்பி லான கவிதைகளில் இவ்வாளுமைகள் வாழ்வதையும் அவதா னிக்கலாம்.

*ஏழ்மை நிலையின் ஆழ்மனம் அறிந்து*
*சீர்மிகு செங்கோல் ஆட்சி செய்து*
*உலக அரங்கில் வீரம் கொண்டு*
*உலா வந்தவர் இந்திரா அன்னையாம்*

எனப் பெண்களின் வளர்ச்சி நிலையின் அடையாளமாகத் திக ழும் அன்னை இந்திராவைப் போற்றிய உதயநேசன்.

*இருட்டு அறையிலும் நூல்கள் தந்தாய்*
*எதிரிகள் உனை போற்றிட வாழ்ந்தாய்...*

*சுரண்டல் ஒழிய சுதந்திரம் கேட்டாய்*
*திரண்டு எழும்பவே தத்துவம் தந்தாய்*

எனக் கூறி கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம்பிள்ளை யின் பெருமையை வெளிக்கொணர்கிறார்.

*உணர்ச்சிக் கடலே கவிதைக் கடவுளே*
*உணர்வுக் குவியலின் முத்துக்கள் எடுத்தவனே.*
*சொற்கள் அனைத்தும் உணர்ச்சியில் துள்ளும்.*
*விஞ்சி உன்னை வெல்வார் இல்லை*
*கவிகளின் அரசனுக்கு ஈடேதும் இல்லை.*

என்ற வரிகள் கண்ணதாசனின் முக்கியத்துவத்தை வெளிப்ப டுத்தி நிற்கிறது. அவ்வாறே கற்பித்த எல்லா ஆசிரியர்களும் மாணவர்களின் மனதை வெல்லும் வாய்ப்பை பெறுவது கடி னம். ஒவ்வொருவரின் வாழ்விலும் செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியர்கள் பலர் இருப்பார்கள். அவர்கள் வாழ்வின் அடை யாளமாகவும் திகழ்வார்கள். அவ்வாசிரியர்களை நன்றியுடன் அடையாளப்படுத்த முனைகிறார் உதயநேசன்.

*அறிவைப் பெருக்கி சிந்தனை வளர்த்து*
*அகிலம் போற்றும் வாழ்க்கை தந்து*
*அனைத்தும் பெறவே ஆசிகள் தந்து*
*அன்புடன் சிரிக்கும் ஆசானே வாழ்க*

எல்லாவற்றுக்கும் மேலாக பாரதியின் பாதிப்பு நிலை உதய நேசனின் கவிதைகளில் நன்கு புலப்படுகின்றமையையும் கவ னிக்கலாம். மனித எண்ணங்களை வலிமைப்படுத்துவதிலும் பாரதியின் கவிதைகள் மிகுந்த செல்வாக்குப் பெற்றதாக விளங்குகின்றன. விடுதலை உணர்வும் போர்க்குண பாய்ச்ச லும் அவனது கவிதைகளுக்குள் இயல்பாய்க் கலந்துள்ளன. இக்கவிதைகள் மீள் எழுகையை ஆற்றுப்படுத்தும் முனைப் பைக் கொண்டதையும் உணர முடியும். அவ்வாறு அமைந்த அவனது வரிகளில் எண்ணத்தை திடப்படுத்தும், புனிதப்படுத் தும், கூர்மைப்படுத்தும் கைங்கரியமாக பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

*மனதிலுறுதி வேண்டும்*
*வாக்கினிலே இனிமை வேண்டும்*
*நினைவு நல்லது வேண்டும்*
*நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்...*

மேற்குறித்த வரிகளின் உந்துதலை உதயநேசனின் கவிதைக ளில் உணர முடிகிறது. குறித்தவொரு இலக்கியம் ஊடாக எண்ணங்கள் தூண்டப்படுவதும் அதனூடே எழுத்துகள் நிலைமாறுவதும் இலக்கிய பரிமாணத்துக்கு அடிப்படையாகி

றது. 'கனவுகள் எண்ணங்களாக வடிவம் பெறுகின்றன, எண்ணங்கள் செயல்களாகப் பரிணமிக்கின்றன' என்பார் அப்துல் கலாம். அக்கருத்தியலின் தாக்கத்தையும் இங்கு உணரமுடிகிறது. அதன் நிலையிலேயே 'எண்ணங்கள் ஏற்றம் தரும்' என்ற தொகுப்பிற்கான தலைப்பு அமைந்திருப்பதும் சாட்சியமாகிறது. அவ்வாறே 'எரிதழல் கொண்டு வா' எனும் தலைப்பே பாரதியின் தாக்கத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

இவ்விரு தொகுப்புகளில் பாரதி மீதான நேசிப்பு குறித்த உதயநேசனின் 'சூரிய நிலவாய் பாரதி', 'பார் போற்றும் பாரதி', 'மீண்டும் பிறந்து வா பாரதி', 'என் பார்வையில் பாரதி' ஆகிய தலைப்புகளில் பாரதியை ஆராதித்தும் புகழ்ந்தும் கவிதைகளை எழுதியுள்ளார். பாரதியிசத்தை உலகறியச் செய்யும் நோக்குடனேயே இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.

***பேனா முனையில் பேதம் அகற்ற***
***தானாய் முழங்கிய தோழன் நீ***
***ஆதவன் போலே ஆவேசம் கொண்டு***
***கானங்கள் இசையிலே குளிர்நிலவு ஆனாய்...***

என்ற, பாரதியின் மொழிநடையில் துலங்கும் இவ்வடிகள் பாரதியின் சிறப்பையும் பாரதி பாடலின் ஆற்றலையும் விளக்கி நிற்கின்றன. 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்ற ஆரூடம் கனவாகிய முனைப்பில் அதனைப் பார்வையிட பாரதிக்கு அழைப்பு விடுக்கும் உதயநேசனின் இலாவகம் 'மீண்டும் பிறந்து வா பாரதி..!' என்ற தலைப்பிலான கவிதையில் உட்பொதிந்திருப்பதைக் காணலாம்.

***மழலைப் பேச்சில் பாரதி பார்***
***குழந்தை நாவில் உன்பாட்டு பார்***
***வளரும் கவிகள் புலமைப் பார்***
***உன்னைச் சொல்லும் உலகைப் பார்...***

***...***

***ஆணும் பெண்ணும் நிகரென நின்று***
***பேணும் பதவிகள் காணவே வா,***
***நாணம் கொண்ட நங்கை இவளும்***
***வானம் தொட்டதை வாழ்த்தவே வா...***

என அழைப்பு விடுப்பதையும் காணலாம்.

காலம் கடந்தும் கானம் பாடி - ஆலம் விழுதாய் அகிலத்தில் நிலைத்தவன் எனத் தன் மனதில் நிலைபெற்ற பாரதியை உதயநேசன் நினைவுகூருவதையும் காணலாம். அவ்வாறே இவ்விரு தொகுப்புகள் சுமந்த கவிதைகளுக்கான தலைப்புகளிலும் பாரதியின் தாக்கத்தை உணரலாம்.

பெண்ணிலைவாத முனைப்பு என்பது சிந்தனை மாற்றத்தின் விளைவாகப் பரிணமிக்கப்பட்ட எண்ணக்கருவாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இலக்கிய வடிவங்களில் அதன் தாக்கம் மிகுந்த கவனத்தைப் பெற்றுள்ளதை உணரலாம். அத்தாக்கம் கவிதை இலக்கியத்தில் மிக முனைப்பு பெற்றவொன்றாகக் கவனத்தை ஈர்த்துள்ளது. அதன் தாக்கத்தின் புரிதலை உதயநேசனின் கவிதையிலும் காணமுடிகிறது. பெண்களின் நிகழ்காலப் பாதிப்புகளையும் அவர்களின் உயர்வுக்குத் தேவையான வழிமுறைகளையும் அவர்களின் உயர்வு குறித்த ஆதர்சிப்புகளையும் இவரின் கவிதைகள் சித்திரித்துள்ளன. 'பெண்ணியத்தின் புரிதல் இலக்கணம்', 'பெண்மையே போற்றி', 'விழித்தெழு பெண்ணே', 'பெண்மை எனும் பேராற்றல்' ஆகிய தலைப்பிலான கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

***பெண் என்னும் பேராற்றல் மதித்து***
***விண்ணைத் தொட்டிடும் ஆற்றல் கொடுத்து***
***கண்போல் காக்க உறுதிகள் கொண்டு***
***பெண்மையைப் போற்றி புவியில் மகிழ்வோம்...***

***அடிமை எண்ணம் அறுத்து எறிந்தவள்***
***படிப்பும் பதவியும் பாங்காய் அடைந்தவள்***
***வெற்றி முரசில் வெளிச்சம் கண்டவள்***
***சுற்றிச் சுழலும் சுந்தரப் பெண்ணிவள்***
***சாத்திரம் உடைத்து சாதனைப் புரிந்து***
***காத்திடு என்றும் காரிகைப் புகழே***
***வேகம் கொண்டு வேலிகள் அறுத்து***
***சோகம் வெல்வாய் சோதியே நீ...***

பெண்களின் அவலங்களை எடுத்துரைத்தும் இக்கவிதை அதற்கான நிவாரணங்களையும் கூறிநிற்பதோடு பெண்ணிய விடிவுச் சிந்தனைளையும் பிரஸ்தாபிக்கிறது.

பால்ய அனுபவங்கள் மிகுந்த ஏக்கத்திற்குரியதாகும். அப்பருவம் மீண்டும் கிடைப்பதற்கான வாய்ப்பு கிடைக்குமானால் அதனை ஏற்றுக்கொள்வதில் பலரும் உடன்படுவார்கள். உலகியல் நியமத்தில் அதற்கான சாத்தியப்பாடுகள் இல்லாத நிலையிலும் பால்ய நினைவுகளும், கடந்த கால அனுபவங்களும் ஒவ்வொருவரிலும் செல்வாக்குச் செலுத்துவது யதார்த்தமானதே! அந்நினைவுகள் தொடர்பான அனுபவங்களையும் உதயநேசன் விட்டு வைப்பதாக இல்லை. அவ்வனுபவங்களை அடையாளப்படுதத்தும் கவிதைகளாக 'இளமைக் கால இன்ப நினைவுகள்', 'அது அந்த காலம்', 'மனம் வீசிடும் மனதின் நினைவுகள்..!', 'இருட்டறையில் உள்ளதடா உலகம்' போன்றன அமைகின்றன. பள்ளிக்காலம் தந்த அனுபவம், உறவுகளின் அரவணைப்பு, ஆசிரியர்கள் தந்த துன்ப இன்ப நினைவுகள், விடுமுறை கால சுகவனுபவங்கள், தாத்தா பாட்டிகளோடு கொண்டிருந்த தனித்துவ அன்புநிலைக் கூறுகள், உண்டு கழித்த இன்பநினைவுகள், பராமரிப்பின் உன்னத தன்மைகள், இயற்கை நேசிப்புடன் கலந்த ஈடுபாட்டு நிலைமைகள் என்பவற்றை எடுத்துரைக்கும் கைங்கரியத்தின் உயிர்ப்புமிக்க நிலையை இக்கவிதைகளின் வாயிலாகத் தன தாக்கிக் கொள்கிறார்.

***மழலை மாறா மலர்ந்த முகத்துடன்***
***மனதில் பயமின்றி தந்தை மடியமர்ந்து...***

***சினங்கொண்ட தாயை சிரிப்புடன் பார்த்து***
***அவளின் சிந்தைக் கவர்ந்தது சுகமே...***

என்ற வரிகள் இளமைக்காலத்தின் உச்ச ஏக்க நிலையை ஞாபகப்படுத்துவதாக அமைகிறது. அத்தோடு இக்கால அவசர பிரகடன நிலைகளை வெறுக்கும் தன்மையையும் இவரின் பல கவிதை வரிகள் பேசி நிற்கின்றன. எடுத்துக்காட்டாக

***சொந்தம் பந்த நெருக்கம் மறந்து***
***விஞ்ஞான உலகில் விதிகள் புனைந்து***
***வளர்ச்சி என்றே வாழ்வைத் தொலைத்து***
***தளர்வுடன் வேண்டுகிறோம் அந்த காலம்***

என்ற வரிகள் கவனத்திற்குரியதாகும். கால மாற்றத்தின் முரண்பாட்டு நிலைகள் உறவுகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை உணர்த்துகிறது.

***சிந்தையைச் சிறைபிடித்த கணினி உலகில்***
***ஏக்கம் தீருமோ?***
***இணையம் என்றார் இன்பம் மறந்தார்***
***அணைக்கும் குணங்கள் அறவே துறந்தார்***
***அழுத்தம் என்றே மனதை இழந்தார்***
***தலைமுறை மீளவே எரிதழல் கொண்டுவா ...***

இன்றைய இன்பத்தை அடியோடு தொலைக்கும் கணினியுகத்தைக் கடுமையாகச் சாடுகிறார். தோழமையுணர்வையும் மனிதநேய மேன்மையையும் வலியுறுத்தும் கவிதைகளையும் கவிஞர் எழுதியுள்ளார். இக்கவிதைகளில் மிக இலாவகமான மொழி நடையைக் காணமுடிகிறது. இருப்பினும் அதற்குள்ளே ஒரு ரௌத்திர போக்கும் தாண்டவம் ஆடுவது தெளிவாகிறது.

கடந்த கால சுகவனுபவங்கள் மீதான ஏக்கத்தைப் போலவே நிகழ்கால வலியுறுத்தல்களுக்கு அமைய எதிர்காலம் மீதான அவதானத்தை பல கவிதைகளில் படைத்துள்ளார். நிகழ்கால அனுபவிப்புகளை ஆதாரமாகக் கொண்டு திட்டமிடும் முனைப்புகளைப் பல கவிதைகளில் வெளிப்படுத்தியும் உள்ளார். இவ்வாறான எதிர்காலம் குறித்த அவதானத்தைப் பெற்றதாக 'தடை அதை உடை', 'வருங்காலம் வசந்த காலம்', 'விழித்தெழும் பெண்ணே', 'எண்ணமே ஏற்றம் தரும்', 'துணிந்து நில்', 'மானுடம் வெல்லும்', 'விழித்திருப்போம் விடியலுக்காக', 'சிறகுகள் விரித்திடு', 'நெஞ்சில் உறுதி வேண்டும்', 'பயணங்கள் தொடரட்டும்', 'புதியதோர் உலகம் செய்வோம்' ஆகிய தலைப்புகளிலான கவிதைகள் காணப்படுகின்றன.

***இலட்சிய பாதையின் நீளம் பெருகட்டும்***
***ஆசை விதைகள் அழகாய் முளைக்கட்டும்***
***விடாமுயற்சி விண்ணைப் பிளக்கட்டும்***
***சிறகுகள் விரிக்கத் தடைகள் அகலட்டும்.***

என்ற வரிகள் வாழப்பிறந்த மனிதனுக்கு மிகுந்த நம்பிக்கையை ஊட்டுவதாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே விழாக்கள், பண்டிகைகள் தொடர்பான தலைப்பில் அமைக்கப்பட்டுள்ள கவிதைகளும் நம்பிக்கை பிரவாகத்தின் ஊற்றுகளாகவே அமைகின்றன. 'தை பிறந்தால் வழி பிறக்கும்', 'பொங்கலோ பொங்கல்', 'சித்திரைப் பெண்ணே வருகவே', 'தித்திக்கும் தீபாவளி', 'வெற்றி உனதாகட்டும்' போன்ற கவிதைகள் நம்பிக்கை ஊடான வாழ்வின் தருணங்களைப் புலப்படுத்தி நிற்கின்றன.

***சிந்தனை முழுவதும் சீர்மை பரவட்டும்***
***வந்தனம் செய்கிறோம் வாழ்வு சிறக்கட்டும்***
***சரித்திரம் சொல்லும் சாதனை உதிக்கட்டும்***
***விசித்திரம் செய்யவே சித்திரை பிறக்கட்டும்...***

என்ற வரிகள் எடுத்துக்காட்டாக அமைகிறது. நம் வாழ்வைச் சீர் செய்யக் கூடிய சிறந்த நண்பன் நூல்கள் ஆகும். வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது. வாசிப்பு என்பது காரிருளில் செல்பவர்களுக்குச் சிறந்த பேரொளியாகவும், வழிதவறியவர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும் துலங்குகிறது. வாசிப்பின் தெளிவூட்டலையும் அதன் அவசியம் கைக்கொள்ள வேண்டிய தேவையையும் நம்பிக்கைக்குரியவகையில் கவிஞர் வெளிப்படுத்தி உள்ளார்.

***சிந்தனைகள் செதுக்கும் மேலான உளி***
***எண்ணங்கள் சீராக்கும் நூலைப்படி...***
***படிக்க படிக்க வெளிச்சம் கிடைக்கும்***
***நூல்கள் அனைத்தும் வழிகள் கொடுக்கும்...***

***மானுடர் அகமும் புதிதாய் பூக்கவே***
***புத்தகம் எழுதினார் புவியில் சிறக்கவே...***

என்ற வரிகள் புத்தகங்களின் மேன்மைக்கு கோபுரம் அமைத்து அதனை உலகறியச் செய்கிறது. 'வாசிப்பும் நேசிப்பும்' தலைப்பிலான வரிகளும் இவவெண்ணவோட்டத்திற்கு வலிமை சேர்க்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

இவ்விரு தொகுப்புகளிலுள்ள உதயநேசனின் கவிதைகளில் மொழி சார்ந்த பற்றுதலையும், மண் சார்ந்த பிடிப்புணர்வையும் காணலாம். தாய்மொழி மீதான உந்துதலோடு 'தமிழைச் சுவாசிப்போம்', 'யாமறிந்த மொழிகளிலே', 'ஜல்லிக்கட்டு மல்லுக்கட்டு', 'தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்' போன்ற தலைப்பிலான கவிதைகள் நேரடியாக தமிழின் சிறப்பினையும் தமிழர்களின் வாழ்வினையும் எடுத்தியம்புவதாக அமைகின்றன.

***அறிவும் செறிவும் அன்பும் அறனும்***
***சிறிதும் குறையாது சீருடன் அளித்து***
***உயர்வுக்கு வழிகாட்டி உழைப்பிற்கு வேராகி***
***அயராமல் என்றும் ஆளும் மொழி.***

உச்ச நிலைமையில் உள்ள தமிழின் பெருமைக்கு மகுடம் சூட்டுவதாக மேற்குறித்த வரிகள் காணப்படுகின்றன. அவ்வாறே இம்மொழி மீதான உயர்வினை அணுகும் பணியில் திருப்தி கொள்ளும் உதயநேசன், அது சுமந்துள்ள பண்பாட்டுக் கோலத்துடன் பின்னிப் பிணைந்த மண் சார்ந்த உணர்வினையும் நுட்பமாக பதிவுசெய்கிறார். மொழி என்பது வெறும் ஊடாட்டம் கொள்ளும் பாசை என்பதற்கப்பால் அம்மொழி வாழும் மண்ணோடும், அதனைப் பிரயோகிக்கும் மக்களின் பழக்க நெறி முறைகளோடும் வாழ்வியல் அம்சங்களைப் போதித்து நிற்கிறது. அதனுடைய தாக்கத்தை உதயநேசனின் 'தாய்நாடு', 'விவசாயம் நின்றுவிட்டால்', 'நான் பிறந்த மண்', 'புதியதோர் உலகம் செய்வோம்', 'முகவரி', 'இயற்கையை காத்திட்டால்', 'காவிரிப் படுகை', 'பூஞ்சோலைக் குயில்கள்', 'மேகக் கூட்டம்' போன்ற கவிதைகளில் காணலாம். மண் பிடிப்புடன் இயற்கை நேசிப்பும் அவரின் எண்ண வெளிப்பாட்டை அர்த்தமுள்ளதாக்கியுள்ளது.

இத் தொகுப்பில் இடம்பெறும் கவிதைகளில் காதலுணர்வும் மானுட நெறிமுறைகள் குறித்த ஊடாட்டமும் கவனத்தை ஏற்படுத்துகின்றன. பொதுவாக கவிதை மீதான காதலுணர்வைச் சிந்தனைக்குரிய அழகியல் உணர்வுடன் தெளிந்த நடையில் வெளிப்படுத்த முனைந்துள்ளார் உதயநேசன். மொழி மீதான காதல், மண் மீதான காதல், உறவுகள் மீதான காதல் என இக்கவிதைகள் விரிவு பெறுவதை அவதானிக்கலாம். பொதுவாக எதிர்பாலினர் மீதான கவர்ச்சி நிலையில் உருவாகும் பெரும்பாலான கவிதைகள் உடல் ரீதியான

கவர்ச்சிக்கு முக்கியத்துவமளிப்பதுடன் ஆண் - பெண் மன புரிதலையும் அவர்களுக்கிடையிலான அந்நியோன்னியத்தையும் பேசிநிற்கின்றன. இதுதான் இயற்கையின் நியதியாகவும் காணப்படுகின்றது. காதல் நிலை குறித்த உள்ளத்து உணர்வை இவருடைய 'காதல் வானில்' என்ற கவிதை அனுபவங்களுக்கூடாக எடுத்துரைக்கிறது.

***வறுமைக் கோட்டிலும் நுழைந்த காதல்***
***பொறுமை தனையே போதித்த காதல்***
***சிறகுகள் முளைத்து சிட்டாய் பறக்கும்***
***உறவெனும் வானிலே உள்ளத்துக் காதல்...***

***ஊன்றும் கைத்தடி உன்னைச் சொல்லும்***
***தோன்றும் கனவுகள் உன்னைக் காட்டும்***
***ஏக்கம் அனைத்தும் உன்னைத் தேடும்***
***தாக்கும் நினைவுகள் காதல் சொல்லும்...***

காதல் உடல் தேவைக்கு அப்பால் காலத்தால் அர்த்தம் பெற்று தெய்வீகத்தன்மை அடைவதை இக்கவிதை சுட்டி நிற்கிறது. அவ்வாறே மானுட நெறிமுறையினை வலியுறுத்தும் இக்கவிதைகள் வாசகன் மனத்தினில் குறிப்பிட்ட தாக்கத்தினைச் செலுத்துவதையும் உணரலாம். மானுடத்தை மனதளவில் திடப்படுத்தும் பல கவிதைகளை இத்தொகுப்புக்கள் கொண்டுள்ளன. மானுட நெறிமுறையினை வழிப்படுத்தும், வழிகாட்டும் நோக்கம் கருதிய கவிதைகளாகவே இவை அமைகின்றன. இவற்றைப் பேசுவதே இத்தொகுப்புகளின் பிரதான நோக்கமாகவும் கொள்ளப்படுகிறது. அவ்வாறான கவிதைகளில் 'பொறாமை குணமே', 'இருட்டறையில் உள்ளதடா உலகம்', 'மனிதம் போற்று', 'மனதின் ஆற்றல்', 'எண்ணமே ஏற்றம் தரும்', 'மனிதத்தை முத்தமிட்டால்', 'மானுடம் வெல்லும்' எனும் தலைப்புகளிலான கவிதைகள் கூர்ந்து கவனிக்கத்தக்கவை.

***உலகத்தில் பிறவி ஒருமுறை கொண்டோம்***
***மனதில் நிறுத்தி மாண்புகள் மீட்போம்***
***விருப்பு வெறுப்புகளைத் தீயிட்டு எரிப்போம்***
***மானுடம் ஒன்றை உயிராய் போற்றுவோம்.***

மொத்தத்தில் அவசரயுகத்தில் மானுடத்தை தொலைப்பதையே நோக்காகக் கொண்டு எழுதப்பட்ட இக்கவிதைகள் மானுட நெறிமுறை மேவவேண்டிய அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றன.

ஒத்ததன்மையான எண்ணக்கருக்கள் அடுத்தடுத்து கவிதைகளில் இடம்பெறுவதை கவிஞர் தவிர்த்திருக்கலாம். ஒரே விடயப்பரப்பு மீண்டும் மீண்டும் இத்தொகுப்புகளில் இடம்பெறுவது வாசகரைச் சலிப்படையச் செய்கிறது. சில இடங்களில் மொழிப் பிரயோகம் கருத்து நிலையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. எடுத்துக்காட்டாக 'சூரிய நிலவாய் பாரதி...!' எனும் தலைப்பிலான கவிதையில் 'எட்டயபுரத்தின் எட்டாம் அதிசயம்' என்ற சொல்லாடல் முரண்பாட்டு நிலையைத் தோற்றுவிக்கிறது. பொதுவாக உலக அதிசயம் ஏழு என்றே வரையறுக்கப்படுகிறது. இந்நிலையை எட்டயபுரத்தின் எட்டாம் அதிசயம் எனக்கூறுவது, இதனைப் படிக்கும் மாணவர் மனத்தினில் முரண்பட்ட சூழ்நிலையை உருவாக்கும். அவ்வாறே 'அழையாது வாழ்வோம் அந்நிய மொழிகளை' எனும் அடிகளைக் கூர்ந்து நோக்கினால் இனங்களுக்கிடையே உறவை வளர்க்கும் பன்மொழியறிவை தவிர்க்க வேண்டும் என்பது பொருளாகிறது. எழுத்துப் பிழைகளின் ஊடாட்டமும் கருத்தியலில் தவறான புரிதலை உருவாக்குகிறது. எடுத்துக்காட்டாக 'மனம் விழித்தால் மழையும் குன்றே' என்ற வரியில் 'மலை' எனக் குறிப்பிடப்பட வேண்டியதை மழை எனக் குறிப்பிடுவதால் கூறவந்த விடயம் வேறுப்பட்ட கருத்துக்குரியதாகிறது. இவ்வாறான பலவீனமான அமசங்கள் முரண்பாட்டு நிலையை உருவாக்குகின்றன. இவ்வாறான முரண்பாடுகளும் அடுத்த நிலையில் கருத்து நிலை உருவாக்கத்திற்கான களமாகவே அமைகின்றன.


இத் தொகுப்பின் கவிதைகள் நவீன கவிதைகளுக்குரியதும் புதுக்கவிதைகளுக்குரிய பண்புகளையும் பெற்றிருப்பதை அறிய முடிகிறது. இவ்வாறான கவிதைகள் பொதுவாக தனித்தமிழில் எழுதப்படுவதில்லை எனற குற்றச்சாட்டுகள் முனைப்புபெற்றுள்ள இன்றைய நிலையில் உதயநேசனின் கவிதைகள் தனித்தமிழில் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு தொகுப்புகளின் புறத்தோற்றங்கள் அகத்தோற்றங்களின் வடிவமைப்பு, பொருத்தப்பாடான படங்களின் பிரயோகம் என்பன மேலும் உதயநேசனின் கருத்தியலையும் அதன் ஊடான சிந்தனைக்குரிய களத்தை தூண்டுவதாக அமையப் பெற்றுள்ளமையும் வரவேற்கத்தக்கதாகிறது. உதயநேசன் தான் பெற்ற அனுபவங்களை மிகுந்த பொருத்தப்பாட்டுடன் அழகியல் உணர்வுடன் சமூக ஆவணமாகவும், ஆதர்சனமாகவும், வழிகாட்டல் கருத்து நிலையோடும் ஒப்புவித்திருப்பது பாராட்டுதலுக்குரியதாகும். தூய தமிழ்ப் பிரயோகத்துடன், தன் அனுபவ முதிர்ச்சியுடன் கூடிய வகையில் இயல்பான மொழிநடையில் கவிதைகளைப் படைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். 'தமிழ் கூறு நல்லுலகின் அன்பறிவுத் தேடலென இவ்விரு கவிதை நூல்களையும் படைத்துள்ளார். இத்தொகுப்புக்களின் வழி 'காலை நேரத்து கதிரொளியென நம் மனதுக்குள் பரவுகிறார்' என்ற சோ.பிலிப் சுதாகரனின் வாழ்த்துரை வரிகளும் நூலுக்குப் பொலிவை அளிக்கிறது. 'வார்த்தைகள் ஏதும் வெற்றாயிராது ஒளிக்கீற்றாய் அனைவரிடத்திலும் பாயும் இலாபகத்தைப் பெற்றுள்ள கவிஞரின் கவி வரிகளில் சிறுமை எல்லாம் மறைகிறது. ஆற்றல் பெருகி ஆனந்த கடலில் சங்கமம் ஆகிறது' என்ற கவிஞர் உமாபாரதியின் பார்வையின் வெளிப்பாடும், 'மகாகவியின் பெருங்கோபத்தை இவரது கவிதைகளிலும் காணமுடிகிறது' என்ற நந்தவனம் சந்திரசேகரனின் 'எரிதழல் கொண்டு வா' தொகுப்பின் வாழ்த்து வரிகளும் நிதர்சனமானவை. 'ஆழ்ந்தகன்ற உள்ளத்தின் அனுபவப் பெரும் பரப்பை அழகியலோடு உணர்த்துகிறது' என்ற ஆரூர் தமிழ்நாடனின் வரிகளும் மிகுந்த பொருத்தப்பாட்டுடன் அமையப்பெற்றுள்ளது. இக்கவிதைகள் எண்ணங்களை வலிமைப்படுத்தும் வகையில் அதற்கான அறைகூவல் களத்தை உருவாக்கும் பணியை ஆற்றும் என்பது திண்ணமே!

**உசாத்துணை:**


- *பாரதியார் (2004) பாரதியார் கவிதைகள், மாணிக்கவாசகர் நூலகம்.*
- *அப்துல் கலாம்.ஜெ (2004) எழுச்சி தீபங்கள், கண்ணதாசன் பதிப்பகம்.*
- *கைலாசபதி.க (1999) இலக்கியமும் திறனாய்வும், குமரன் பதிப்பகம்.*




letsumanan.a@thaiveedu.com



# பேராசிரியர் செல்வா கனகநாயகத்தின் பார்வையில் ‘சிதைவுகள்’ நாவல்

– மைதிலி தயாநிதி

ரொறன்ரோ பல்கலைக்கழக ஆங்கிலத்துறைப் பேராசிரியர் செல்வா கனகநாயகம் (மே 07, 1952 – நவம்பர் 22, 2014) அமரத்துவமடைந்து இந்த நவம்பர் மாதத்துடன் பத்து வருடங்கள் பூர்த்தி ஆகின்றன. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரான வி. செல்வநாயகத்தின் மைந்தனான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் சில வருடங்கள் ஆங்கில விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். சிறந்த பின்காலனித்துவப் புலமையாளரான இவர், இத்துறையில் நூல்கள் பல எழுதியுள்ளார். இலங்கையின் நவீன தமிழ் இலக்கியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகு அறியச் செய்தவர்களில் முதன்மையானவர். இலங்கைத் தமிழிலக்கியம் சார்ந்த அவரது முக்கிய நூல்களுள் சில வருமாறு: Uprooting the Pumpkin: Selections from Sri Lankan Tamil Literature, 1950–2012 (2016), In Our Translated World : Contemporary Global Tamil Poetry (2013), The Ritual ( 2011), You Cannot Turn Away (2010), Wilting Laughter: Three Tamil Poets (2009), Lutesong and Lament: Tamil Writing from Sri Lanka (2001). ரொறன்ரோ பல்கலைக்கழகமும், வின்சர் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய தமிழியல் மாநாட்டு (2006–2014) அமைப்பாளர்களில் ஒருவராகவும், ரொறன்ரோவில் இயங்கும் Tamil Literary Garden எனும் இலக்கிய அமைப்பின் தலைவராகவும் விளங்கினார்.

அன்புக்குரிய பேராசான் செல்வா கனகநாயகம் அவர்களை நினைவுகூரு முகமாகவே இக்கட்டுரையை எழுதுகிறேன். இக்கட்டுரையில் அவர் எழுதிய ‘Things Fall Apart from a Sri Lankan Perspective’ (Postcolonial Text, Vol 5, No 1 (2009)) என்ற ஆங்கிலக் கட்டுரையின் சாராம்சத்தினை மட்டும், எனது விளக்கத்திற் கேற்ப, இயலுமானவரையில் தமிழிற் தர முயன்றுள்ளேன். ‘Things Fall Apart’ என்பது சினுவா ஆச்சபே (Chinua Achebe) எனும் நைஜீரிய எழுத்தாளர் 1958–ல் எழுதிய நாவலாகும். இந்நாவல் ‘சிதைவுகள்’ எனும் தலைப்பில் என்.கே. மகாலிங்கத்தினாலும் (1998), ச. வின்சென்டினாலும் (2014) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் ஆங்கில இலக்கியம் படிப்பவர்களுக்குப் பாடநூலாக விளங்கும் இந்நாவலை, ஐரோப்பிய ஆதிக்கம் காரணமாகப் பாரம்பரிய சமுதாயங்கள் சிதைவுறுதலைக் கருப்பொருளாகக் கொண்ட இலக்கியப் பிரதியாகப் பார்ப்பதுதான் வழமை. ஆனால், பேராசிரியர் இந்நாவலைப் புதிய கண்ணோட்டத்தில், இலங்கைக்கு, குறிப்பாக அதன் 1958-2009 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதிக்கு மிக நெருக்கமானதொன்றாகப் பார்க்கின்றார். காலனிய ஆதிக்கம் என்ற புறவயமான மையப்புள்ளியிலிருந்து, காலனியத்தால் எழுச்சி பெற்ற தேசியவாதம், அதன் எழுச்சிக்கும், அதனை வலிமைப்படுத்தற்கும் முன்னிறுத்தப்படும் தொன்மங்கள், அவற்றின் வியாக்கியானங்கள் என நம் பார்வையை அகவயமாகத் திருப்புகின்றார். சுருங்கக்கூறின், சிங்கள, தமிழ்ச் சமூகங்கள் மேற்கொள்ளவேண்டிய சுயவிமர்சனத்தின் இன்றியமையாமையைக் குறிப்பால் தனது கட்டுரையில் வலியுறுத்துகின்றார்.

‘சிதைவுகள்’ நாவல் முக்கியமான பின்காலனித்துவ நாவல்களுள் ஒன்று ஆபிரிக்காவில் வாழுங் இனக்குழுக்களை நாகரிகமடையாதவர்கள் என்று இழிவு செய்யும் காலனிய எழுத்துகளுக்கு மாற்றீடாகப் புனையப்பட்ட இந்நாவல், ஐரோப்பியர் வருகையின் முன்னர் இக்போ (Igbo) இனக்குழுவில் நடைமுறையிலிருந்த சமூக அமைப்பு முறைகள், பண்பாட்டு அம்சங்கள், சிறப்பாக, அக்குடியின் சமய, ஆன்மிக முறைகள் தொடர்பான மிக நுணுக்கமான விவரங்களைத் தருகிறது. அவ்வகையில் காலனிய ஆதிக்கம் காரணமாக அழிந்து போய்க்கொண்டிருந்த சமூக, பண்பாட்டு அம்சங்களை மீட்டு எடுத்தல் எனும் செயற்பாட்டை இந்நாவல் மேற்கொள்கிறது. அதே சமயம், கிறிஸ்தவ மதப்பரப்புகை, புதிய சட்ட முறைகள், பழைய அதிகார முறைமையைப் பதிலீடு செய்யும் புதிய அதிகார அமைப்புகள் எனும் காலனிய ஆதிக்கம் காரணமாக எவ்வாறு இக்போ இனக்குழு நலிவுற்றுச் சிதைகிறது எனும் சோகத்தையும் இந்நாவல் பேசுகிறது. காலனியத் தாக்கம் தோற்றுவிக்கும் பண்பாட்டு மோதல்கள், அடையாளச் சிக்கல்கள் என்பனவும், காலனிய அடக்குமுறை எதிர்ப்புகளும், அவை தோல்வியில் முடிவுறுவதும் நாவலில் இடம்பெறுகின்றன. மேற்கூறிய அம்சங்கள் நாவலின் பிரதான பாத்திரமான ஒக்கொங்வோவின் (Okonkwo) வாழ்க்கைச் சரிதத்துடன் இரண்டற இணைந்து காணப்பெறுபவை. காலனியம் ஏற்படுத்திய ஒக்கொங்வோ எனும் தனி மனிதனின் சிதைவை அவன் பிறந்த இனக்குழுவான இக்போவின் சிதைவாகவும்,

ஏன் ஆபிரிக்கக் கண்டத்தின் சிதைவாகவும் எடுத்துக் கொள் ளலாம்.

'சிதைவுகள்' நாவலின் சுருக்கத்தை முதலில் பார்ப்பது பேரா சிரியரின் நாவல் பற்றிய புதிய கண்ணோட்டத்தைப் புரிந்து கொள்ள உதவும். இக்போ இனக்குழுவின் கிராமமான உமோ பியாவில் (Umuofia) சக மனிதர்களின் மரியாதைக்குரியவரா கத் தைரியமும், போர்க்குணமும் மிக்க ஒக்கொங்வோ விளங் குகிறார். தந்தையின் சோம்பேறித்தனம், மென்மைத் தன்மை, வறுமை என்பவற்றை வெறுத்த அவர், தந்தையிலிருந்து தன்னை முற்றிலும் வேறுபட்ட மனிதராக ஆக்கிக் கொள்கி



றார். தன் கடின உழைப்பு மூலமாக, சமூகத்தில் அந்தஸ்தும் செல்வாக்கும் மிக்க ஒருவராக விளங்குகிறார். சமூகத்தில் தலைமைத்துவமிக்க ஒருவராகத் தன் தந்தை திகழ முடியா மைக்குரிய காரணம் அவரது பலவீனமான குணவியல்புகளே என்ற முடிவுக்கு வரும் ஒக்கொங்வோ, தான் மற்றவர்களுக் குப் பலவீனனாகத் தோன்றுவேனோ என்ற அச்சத்தால் பீடிக் கப்படுகின்றார். இது அவரைத் தன் அன்புக்குரியவர்களிடத் தில் மிகக் கடுமையாக நடந்துகொள்ளத் தூண்டுவதுடன், தன் இனக்குழுவின் அறத்திற்கு மாறாகவும் ஒருமுறை அவ ரைச் செயற்பட வைக்கிறது. அவரிடம் ஒப்படைக்கப்பட்டி ருந்த இன்னொரு இனக்குழுவைச் சார்ந்தவனும், அவருட னும், அவர் குடும்பத்தினருடனும் மூன்று வருடங்கள் ஒன்றாக வசித்தவனும், அவரைத் தனது தந்தையாகவே கருதும் சிறுவ னுக்கு தனது இனக்குழு வழங்கிய மரண தண்டனையில் ஒக் கொங்வோ பங்கேற்கிறார். இக்போ இனக்குழுவின் மூத்தவ ருள் ஒருவர் 'அப்பையன் உன்னை அப்பா என்று அழைக்கி றான். அவன் மரணத்தில் பங்கேற்காதே' (That boy calls you father. Do not bear a hand in his death.) என்று எச்சரித்த லைப் புறக்கணித்துச் செயற்படுகிறார். ஆனால், தான் ஆண்மை குறைந்த பலவீனனாகப் பார்க்கப்படுவேனோ எனும் அச்சத்தினால் தன் வளர்ப்பு மகனுக்கு இறுதி மரண அடியை ஒக்கொங்வோ வழங்குகிறார். இவ்விடத்தில் இக்போ இனக்குழு ஆண்மை, வீரம், தைரியம் எனும் குணங்களைப் போற்றியது என்பதையும் நினைவிற் கொள்ளல் வேண்டும். நாவலில் அவர் தனது வளர்ப்பு மகனின் கொலையில் பங் கேற்றலை வெளிப்படையாகக் கடிந்தவர் எவருமிலர். ஆனால், இவரின் இச்செயலால் மன உளைச்சலுக்கு ஆளான அவரின் சொந்த மகன் அவரிடமிருந்து மௌனமாய் விலகிச் செல்கிறான், பின்னர் தன் தந்தையின் இனக்குழு விழுமியங்களைப் புறக்கணித்துக் கிறிஸ்தவ மதத்தைத் தழு வுகிறான்.

பின்னர், ஒக்கொங்வோ இறுதிச் சடங்கொன்றில் தற்செயலாக தன் இனக்குழுவின் அங்கத்தினன் ஒருவனைக் கொன்று விடு கிறார். இது இக்போ இனக்குழுவால் மிகக் கடுமையான குற்ற மாகக் கருதப்படுவது. இதன் காரணமாக, ஏழு ஆண்டுகள் தன் சொந்தக் கிராமத்தை விட்டு நீங்கிச் செல்ல வேண்டிய தாகிறது. தாயின் கிராமத்திற்கு சென்று அவர் ஏழு ஆண்டு கள் வதியும்போது, அவரின் சொந்தக் கிராமத்தில் பல மாற் றங்கள் உண்டாகின்றன. கிறிஸ்தவ மிஷனறிகளின் வருகை யும், அவர்களின் மதமாற்ற முயற்சிகளும் பாரம்பரிய இக்போ இனக்குடி நம்பிக்கைகளுக்குப் பெரும் சவாலாக அமைகின் றன. இக்காலத்திற்றான் மகன் கிறிஸ்தவ மதம் சார்ந்தமை அவனுக்கும், தந்தை ஒக்கொங்வோவுக்கும் இடையிலான பிளவை ஆழப்படுத்துகிறது.


ஏழு ஆண்டுகளில் தன் சொந்தக் கிராமத்திற்குத் திரும்பும் ஒக்கொங்வோ கிறிஸ்தவ மதத்தால் மட்டுமன்றி, காலனிய சட் டங்கள், அதிகார அமைப்பு என்பவற்றாலும் அது பாதிப்புற் றிருப்பதைக் காண்கிறார். அதிருப்தியும் விரக்தியும் கொண்ட அவர் ஒரு கிராமக் கூட்டம் காலனிய அதிகாரத் தூதர்களி னால் குழப்பப்படும்போது அவர்களில் ஒருவனைக் கொன்று விடுகிறார். கிராம மக்கள் ஏனையவர்களைத் தப்பிக்க விடுவ தும், ஒக்கொங்வோ ஏன் இதைச் செய்தார் என்று தமக்குள் அவர்கள் பேசிக்கொள்வதும், தம் செயலைக் கிராம மக்கள் ஆதரிக்கவில்லை என்பதை அவருக்கு உணர்த்துகிறது. தம் சொந்தக் கிராமமான உமோபியாவிற்கான தமது போராட்டம் தோற்று விட்டதால் மனம் வெதும்பிய அவர், தம் இனக்குழு


மிக அவமானகரமான சாவு எனக் கருதும் தற்கொலை மூலம் தம் வாழ்வை முடித்துக் கொள்கிறார். இது அவரைத் துன்பியல் வீரன் (tragic hero) ஆக்குகிறது.


பேராசிரியர் கனநாயகம் இந்நாவலில் காலனித்துவ எதிர்ப்பையும் தாண்டிப், பிரதிக்குள் ஆழமான விடயங்களைத் தேடும் புதிய, நுட்பமான வாசிப்பொன்றினைத் தமது கட்டுரையில் அறிமுகம் செய்கிறார். இந்நாவல் 1958-2009-க்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் இலங்கை அரசியல், பண் பாட்டு வரலாற்றுடன் நெருக்கமானதென்று அவர் கருதுகின்றார். 1958-ல் வெளிவந்த இந்நாவலை 1958-க்குப் பிந்தைய இலங்கையின் அரசியல், சமூக வரலாற்றுடனும் இணைத்துப் பார்க்கமுடியும், அதாவது இந்நாவலைக் காலனித்துவத்திற்குப் பிந்தைய இலங்கையைப் பற்றிய ஒரு உருவகக் கதையாடலாக வாசிக்கலாம் என்பது அவர் கருத்து. 1958-ம் ஆண்டினை அவர் தேர்ந்தெடுத்ததன் காரணம், அவ்வாண்டில் தமிழருக்கு எதிராகச் சிங்களவர்கள் நிகழ்த்திய தாக்குதல்கள் காலனித்துவத்திற்குப் பிந்திய இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு தீர்க்கமான தருணத்தைக் குறிக்கிறது என்பதாலாகும். ‘1958-ம் ஆண்டில் இந்நாவல் வெளிவந்தபோது, அதன் தலைப்பு நைஜீரியாவின் நிலைமைகளைக் குறிப்பாக உணர்த்தியது எனில், இன்று இந்நாவலை ஏறத்தாழ உருவகமாக (allegory), விலக்கு அரசியல் (politics of exclusion), தவறாக வழிநடத்தப்பட்ட வீரத்தின் அபாயங்கள் (dangers of misguided heroism) என்பன பற்றிய இலங்கையர்க்கான எச்சரிக்கைக் கதையாக (cautionary tale) வாசிக்க முடியும்’ என்கிறார். பல்லின சமூகத்தில் பாரம்பரிய உரிமைகள் என ஓர் இனத்தின் ஆதிக்கத்தை வலியுறுத்தும் அபாயகரமான தொன்மங்கள் முழு நாட்டையுமே அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் தீவிர தேசியவாதங்களுக்கு வலிமை சேர்க்கின்றன. எடுத்துக்காட்டாக, இலங்கையில், சிங்கள பௌத்த தேசியவாதம் எவ்வாறு இலங்கைத் தீவின் மீதான தனது உரிமை கோரலை நிலத்துடனான பண்டைக்காலம் தொட்டு வரும் தொடர்பு பற்றிய தொன்மங்கள் மூலம் நியாயப்படுத்துகிறது என்பதைக் குறிப்பிடலாம், இது அரசியல் அதிகாரத்தில் தமிழர் உட்பட ஏனைய சிறுபான்மையினரை ஒதுக்கி ஓரங்கட்டுவதற்கு வழிவகுத்தது.


தொன்ம உருவாக்கமும், வீரமும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவே நாவலில் சித்திரிக்கப்படுகிறது. அது குறித்த பேராசிரியர் கருத்துகளை நோக்கலாம்: ‘நாவல் ஒக்கொங்வோவுடன் தொடங்கி அவருடனேயே முடிவடைவது தற்செயலானது அல்ல. ஏனெனில் இந்த நாவலின் மைய விடயங்களில் ஒன்று வீரம். இறுதியில் தனது உயிரை மாய்த்துக் கொள்வதைத் தவிர ஒக்கொங்வோவுக்கு வேறு வழியில்லை என்றால், அது அவரது சொந்தக் கிராமம் அவரைக் கைவிட்டு விடுவதால் அன்று. அவர் எவ்வாறு தன்னைத் தானே வடிவமைத்திருந்தாரோ அதற்கே அவர் பலியாகிறார். சமூகக் கூட்டுறவை வலுப்படுத்தும் வீரத்துக்கும், தனி மனிதனை உயர்த்தும் வீரத்துக்கும் இடையிலான வேறுபாட்டை ஒக்கொங்வோ காணத் தவறுகிறார்.’

இந்தப் பந்தியின் இறுதி வாக்கியம் முக்கியமானது. நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வீரத்தை இரண்டு வகை



யாகப் பேராசிரியர் வகுக்கின்றார். ஒக்கொங்வோ தற்கொலை செய்து கொண்டமைக்கு அவரது கிராம மக்கள் அவரைக் கைவிட்டமை காரணம் அன்று. குறுகிய சுயலாபத்துக்காக ஒக்கொங்வோ எத்தகைய பிம்பத்தைக் கட்டி எழுப்பியிருந் தோரோ அதற்கே அவர் பலியாகிறார் என்பது இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது.

தொடர்ந்து, அவர் தொன்ம உருவாக்கத்தின் காரணங்களை யும் அதன் பாதக விளைவுகளையும் பற்றிப் பேசுகிறார்: 'ஒக் கொங்வோவின் வீரம் இலங்கையர் நன்கு அறிந்திருந்த ஒரு தொன்ம உருவாக்க செயல்முறையை வெளிப்படுத்துகிறது. இலங்கை இன முரண்பாட்டின் அடிப்படைத் தொன்மங்களில் ஒன்று, துட்டுகைமுனு, எல்லாளன் என்ற இரண்டு மன்னர்கள் பற்றிய தொன்மமாகும். ஒருவர் சிங்களவர், மற்றொருவர் தமி ழர். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நிலத்தின் கட்டுப்பாட்டிற் காக போராடியவர்கள். பிந்தையவர் தோற்கடிக்கப்பட்டார். நீங்கள் எந்தப் பக்கத்தில் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து, தொன்மம் என்பது ஒரு கருத்தியல் நோக்கத்திற்குச் சேவை செய்வதற்காக உருவாக்கப்படுவது. எவ்வகையாக இந்தத் தொன்மம் உருவாக்கப்படினும், அதன் அடிப்படை அம்சம் வீரம். இதுபோன்ற கட்டுக்கதை உருவாக்கத்தின் விளைவு களை அளவிடுவது கடினம், ஆனால் அவை உண்மையா னவை, அவற்றுக்கான சமூக அரசியல் விளைவுகள் உண்டு. இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு போராளி அமைப்பாக வளர்ந்து வந்தமையானது, தமிழர்கள் கோழைக ளாகவும், இணக்கமானவர்களாகவும், சரீர ரீதியில் போரிட இயலாதவர்களாகவும் சித்தரிக்கப்பட்ட விதமும் ஒரு கார ணம். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாக-ரன் இதற்கு முற்றிலும் எதிர்மாறாக தன்னை ஒரு வீரனாக வடி வமைத்துக் கொண்டார். காலனித்துவத்திற்கு முந்தைய காலத்தில் நிலவிய தமிழர்களின் பெருமையை மீண்டும் படைக்கும் திடசங்கற்பம் பூண்ட, துளியும் அச்சமற்ற, சுய மாக உருவாக்கப்பட்ட மனிதராக அவர் விளங்கினார். சிங்க ளவர்களிடையே கூட, தொன்மங்களை உருவாக்கும் செயல் முறை மிகவும் வலுவாக உள்ளது, தலைவர்கள் தங்களை ஒரு தேசிய அரசின் ஜனநாயகத் தலைவர்களாக அல்லாமல் போர் வீரர்களாகவும் வெற்றியாளர்களாகவுமே பார்க்கிறார் கள். ஆதிகாலத் தொன்மங்கள் மூலம் குழுக்கள் தங்கள் அதிகார உரிமை கோரல்களை நியாயப்படுத்துவதால், வீரம், அறுபடாத தொடர்ச்சி பற்றிய கதையாடல்கள் தவிர்க்க முடி யாதவையாகின்றன. சிதைவுகள் நாவல் அத்தகைய வீரன் பற் றிய உருவாக்கம் தொடர்பானது. இதுபோன்ற தொன்ம உரு வாக்கச் செயல்முறையின் அழிவுகரமான விளைவுகளிலி ருந்து மீள ஒக்கொங்வோ மட்டுமல்ல, அவரது சமூகமும் செலுத்த வேண்டிய விலை அதிகம்.'

அடுத்து, அவர் வீரம் என்பது பல் பரிமாணங்கள் கொண்டது என்பதையும், அதன் எல்லாவகையான வெளிப்பாடுகளையும் நாம் ஆதரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை யும் நினைவுபடுத்துகிறார். 'வீரம் என்ற தொன்மத்தின் மிகவும் விரும்பத்தகாத அம்சங்களில் ஒன்று, அது ஆண்மை (manli-ness) என்று அழைக்கப்படுவதற்கு எதிரானதாகக் காணப்ப டும் அனைத்தையும் விடாப்பிடியாக மதிப்பிழக்கச் செய்வது. 'சிதைவுகள்' நாவலில், இத்தடத்துக்கு வெளியே நிற்பவர்கள் மனிதாபிமானம் மிக்கவர்களாகக் காட்டப்படுகிறார்கள் என் பது கணிசமான முக்கியத்துவம் வாய்ந்தது. ஒக்கொங்வோ வின் மனைவியருள் ஒருத்தி தனது மகளைக் காப்பாற்ற, எச் சரிக்கைகளையும் மீறிப் பெண் பூசாரியைப் பின்தொடரும் போது, ஒக்கொங்வோ கூட வீரத்தை, தைரியத்தை வேறு வழி களில் காட்ட முடியும் என்று வெறுப்புடன் ஒப்புக்கொள்ள வேண்டி நேரிடுகிறது. இந்தப் 'பிற' குரல்கள் ஒடுக்கப்படும் போது அல்லது புறக்கணிக்கப்படும்போதுதான் சமூகக் கட்ட மைப்புகள் தங்களைத் தக்கவைத்துக்கொள்ளும் திறனை இழக்கின்றன. 'சிதைவுகள்' என்ற இப்புனைவில் இந்த மாற் றுக் கட்டமைப்புகள் கவர்ச்சிகரமானவையாயும் அவசியமான வையாகவும் இருக்கின்றன. ஆனால் இறுதியில் பேரழிவைத் தவிர்க்கக் கூடிய ஆற்றல் இல்லாதவை. இலங்கை மிதவாதி கள் நன்கு அறிந்திருந்ததை இந்த நாவல் உணர்த்துகிறது: பன்மைத்துவத்தை மறுக்கும், அகநிலைப்பட்ட (subjective) தேசியவாதக் கதையாடல்களுக்கு வெளியே நிற்பது மிதவாதி யரைக் கோழைகள் அல்லது உதாசீனம் செய்பவர்கள் என்று கருதப்படும் நிலைக்கு வழிவகுக்கும்.'

கட்டுரையின் நிறைவுப் பகுதியில் சிதைவுகள் நாவலுடன் ஒப் பிடக்கூடியவகையில் காலனித்துவம், உள்ளூர் பண்பாடுக ளில் அதன் தாக்கம் பற்றிய ஆழமான வரலாற்று அல்லது சமூக பகுப்பாய்வுகளை வழங்கும் நாவல்கள் இலங்கையில் எழவில்லை என்பதையும், இப்பொழுது அதுபோன்ற நாவல் எழுதுவது என்பது மிகக் கடினம் என்பதையும் சுட்டிக்காட்டு கிறார். அத்துடன், 'சிதைவுகள்' நாவலின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தால், இலங்கையில் நிகழ்ந்த அனர்த்தங்கள் அனைத்தையும் தவிர்த்திருக்க முடியும் என்று கருத்துப்படப் பின்வருமாறு கூறுகிறார்: 'சிதைவுகள் நாவல் பிரதியின் முக்கி யத்துவத்தை நாம் உணர்ந்திருந்தால், தேசிய இனக் கட்ட மைத்தல் (nation- building) என்பதை விடுத்து, நெருங்கிய மனித உறவுகளைக் கொண்ட கிராமங்களில் கவனம் செலுத் தியிருக்கலாம். வன்முறை குறித்தும், தொன்மங்களை உரு வாக்குவது குறித்தும், நவீனத்துவத்தின் கட்டமைப்புகளை உடனடியாக ஏற்றுக்கொள்வது குறித்தும், செங்குத்தான பாறையின் விளிம்பில் நடப்பது குறித்தும் நாம் இன்னும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்திருக்கலாம்.'

இது இலங்கை அரசியல் போக்குகளை நிர்ணயிப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்திய தீவிர சிங்கள, தமிழ்த் தேசி யக் கருத்தியல்கள் குறித்த விமர்சனமாகும். குறுகிய தேசிய வாதக் கருத்துகளுக்கு அப்பாற்பட்ட உரையாடல்களின் அவ சியத்தில் பேராசிரியர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண் டிருந்தார் என்றும், ஒருபுறம் வன்முறையும், பழிவாங்கலும், மறுபுறம் மௌனமும் செயலின்மையும் என்ற இரட்டை நிலை களுக்கு அப்பால் பல்கலைக்கழகம் 'மூன்றாவது வெளி' (third space) ஒன்றினைக் கட்டி எழுப்ப வேண்டியதன் தேவையை வலியுறுத்தி வந்தார் என்றும் அவரது இன்னொரு மாணவியான அநுபமா மோகன் தன் இரங்கலுரையில் குறிப் பிட்டதையும் ஈண்டு நினைவு கூரலாம்.



maithilithayanithy@thaiveedu.com

# தமிழ்முரசு நாளிதழ்க் கவிதைகளில் மகளிர்



**– கோட்டி திருமுருகானந்தம்**

உலக நாடுகளில் தமிழர் பல்லாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர் தமிழர்களை இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளுக்குக் கூலிகளாக அனுப்பினர். பின்னர் தமிழர்கள் தொழில் நிமித்தமும் கற்றல் கற்பித்தல் காரணமாகவும் உலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர். அப்படித் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் உலக நாடுகளுள் ஒன்றுதான் சிங்கப்பூர். இன்று தமிழகத்திலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்து பணியாற்றும் தமிழர் தொகையும் அதிகமாக உள்ளது. மலேசியாவிலிருந்து சிங்கப்பூருக்குப் பணியாற்ற வரும் ஆயிரக்கணக்கான மலேசியர்களுள் தமிழர்களும் அடங்குவர். சிங்கப்பூரில் தமிழ்மொழி ஆட்சிமொழியாக இருப்பதால் பிற தென்னிந்திய மொழிகளைவிட தமிழ்மொழிப்புழக்கம் அதிகமுள்ளது. இந்நாட்டில் பொ.ஆ.பி 1800-ம் ஆண்டு முதல் வாழ்ந்து வரும் தமிழர்கள் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை முதலிய படைப்பிலக்கிய முயற்சிகளில் ஈடுபாடு காட்டிவருகின்றனர். வானொலி, தொலைக்காட்சி, தமிழ்முரசு, சிங்கைச்சுடர், இந்தியன் மூவிநியுஸ் முதலிய தகவல் ஊடகங்கள் தமிழ்மொழி புழக்கத்திற்குரிய கருவிகளாக மட்டுமல்லாமல் படைப்பிலக்கியம் மலரவும் வாய்ப்பளிக்கின்றன. சிங்கப்பூரில் நடத்தப்படும் கவிதைப்போட்டி, சிறுகதைப்போட்டி, குறுநாவல்போட்டி, நாவல் போட்டி, கட்டுரைப்போட்டி, நாடகப்போட்டி முதலிய போட்டிகள் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்திற்குப் பாதையமைத்துத் தருகின்றன.

சிங்கப்பூர்த் தமிழர் வரலாறு: 1819-ம் ஆண்டு ஸ்டாம்ஃபோர்டு இராஃபிள்ஸ் சிங்கப்பூரில் காலடி வைத்த நாளில் இருந்து இந்நாட்டின் வரலாறு தொடங்குகிறது. ஸ்டாம்ஃபோர்டு இராஃபிள்ஸ் பினாங்கிலிருந்து சிங்கப்பூர் வந்தபோது குறைந்த மக்களே வாழ்ந்தனர். இந்த மக்களை மட்டும் வைத்துக் கொண்டு தம் செயல்களைச் சாதிக்க முடியாது என்று உணர்ந்த அவர், பல நாட்டு மக்களையும் தனக்கு உதவியாக அழைத்துக் கொண்டார். அப்படி வந்தவர் களில் ஒரு பிரிவினர்தான் இந்தியர். இவர்களில் அதிகமானோர் தமிழர். பின்னர் இலங்கையில் இருந்தும் தமிழர்கள் குடியேறினர். ஸ்டாம்ஃபோர்டு இராஃபிள்ஸ் உடன் வந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் நாராயணப்பிள்ளை என்றும் அவர் தமிழர் என்றும் வரலாறு கூறுகிறது. இராஃபிள்ஸ்சுடன் வந்தவர்கள் அங்கு வாழத் தொடங்கியபோது வீடின்மை, பணமின்மை, போக்குவரத்து வசதியின்மை, உணவின்மை, குடிநீரின்மை போன்ற இன்னல்களை எதிர்நோக்கினர். பின்னர் இவர்கள் இவற்றிலிருந்து விடுபட்டுச் சிங்கப்பூர் வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கியதை வரலாறு காட்டுகிறது. இவ்வாறு அன்று வந்த தமிழர் சிங்கப்பூரின் வளர்ச்சிக்குக் கால்கோள் இட்டனர்.

சிங்கப்பூரில் 1819-ம் ஆண்டு முதல் தமிழ்மொழி பேசப்படுகிறது. சிங்கப்பூரின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழ்மொழி இருந்து வருகிறது. எனவே சிங்கப்பூர் வரலாற்றோடு தமிழர் இரண்டறக் கலந்து உள்ளனர் என்பதுண்மை. தொடக்க காலத் தமிழர்கள் தமிழில் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். காலவோட்டத்தில் தமிழரின் தொகை பெருகப் பெருக தமிழ் மொழியும் வளர்ந்துள்ளது. தமிழர் சென்ற நாடுகளுக்கு எல்லாம் மனைவி, மக்களை மட்டும் அழைத்துச் செல்லாமல் தாய் மொழியோடும் சென்றனர். அப்படிச் சென்றவர்கள் மொழியை, பண்பாட்டை வளர்க்கப் பல வழிகளைப் பின்பற்றினர். அவைகளில் ஒன்றுதான் இதழ்களைத் தொடங்கி நடத்தியதாகும். இவர்கள் நடத்திய சில இதழ்கள் தோன்றிய வேகத்தில் மறைந்து விட்டன. சில இதழ்கள் சில காலம் வந்தன. தமிழ் முரசைத் தவிர வேறு எந்த இதழும் நீண்ட காலம் தாக்குப் பிடிக்கவில்லை.

சிங்கப்பூர்த் தமிழ் இதழ்கள்:சிங்கப்பூரில் 1875-ம் ஆண்டு முதல் காலந்தோறும் சிங்கை வர்த்தமானி, தங்கைநேசன், ஞானசூரியன், விஜயகெதனன், வித்தியா விசாரிணி, வாகைநேசன், உலக நேசன், சிங்கை நேசன், இந்து நேசன், நூருல் இஸ்லாம், சிங்கை ஞானோதயம், பினாங்கு ஞானாசாரியன், சிலாங்கூர் வித்யா பாஸ்கரன், ஜனோபகாரி, பாதுகாவலன், சத்தியவான், பினாங்கு ஜர்வசன மித்திரன், உதயதாரகை, பொதுஜன மித்திரன், தமிழ்நேசன், மலேயா கிறீஸ்த்துவ மித்-திரன், முன்னேற்றம், சீர்திருத்தம், நவநீதம், தமிழ் முரசு,

மலாய் மணி, புதிய உலகம், திராவிடகேசரி, பாரத நேசன், உதய சூரியன், பேனாமுனை, முஸ்லிம் இளைஞன், பட்டாணி முரசு, மலாயா நண்பன், சுதந்திர இந்தியா, யுவபாரதம், சந்திரோதயம், இந்தியன் மூவி நியூஸ், மாதவி, புதுயுகம், தமிழோசை, கலைமகள், திரையொளி, இளைஞன் குரல், மனோகரன், திரைமலர், மாணவன், தமிழ் மலர், சாந்திச் சுடர், அறிவுச் சுடர், தமிழ் ஞாயிறு, தமிழ் முஸ்லிம் ஜமாஅத் தகவல் மடல், உம்மா தகவல் மடல், விஜயன், தினவர்த்தமானி, இந்தியன், மலாயா தூதன், வளையாபதி, ஜன்மபூமி, அறிவுப் பேரிகை, ஜனநாயகம், செம்பிறை, கொள்கை முழக்கம், செய்திச் சுடர், சிங்கை எக்ஸ்பிரஸ், இளைய தளபதி, புண்ணியா, சிங்கைச் சுடர், சிராங்கூன் டைம்ஸ், தேன்கூடு, தமிழ் அமுதம், வளர்நிலா, முத்தமிழ், தமிழாசிரியர் குரல், நம்குரல், பொழில் முதலான நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் அவ்வக் காலங்களில் தோன்றிச் சிங்கப்பூர், மலாயா தமிழர்களுக்குச் செய்திகளுடன் இலக்கியம் வளரவும் வாய்ப்பு அளித்துள்ளன. இவ்விதழ்கள் அனைத்தும் தொடர்ந்து வெளிவரவில்லை. இவைகளில் சில இதழ்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. எஞ்சிய இதழ்கள் பெயர்களைத் தவிர வேறு தகவல்கள் கிடைக்கவில்லை. 1875-ம் ஆண்டு சிங்கப்பூரில் தோன்றிய சிங்கை வர்த்தமானி முதல் தமிழ் முரசு நாளிதழ் வரை அனைத்து இதழ்களும் சிங்கப்பூர்த் தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளன.




தமிழ் முரசு நாளிதழ் தோற்றம் நாளிதழ்: கோ சாரங்கபாணியை ஆசிரியராகக் கொண்ட தமிழ் முரசு 06-07-1935-ம் நாளன்று 20 கிள்ளான் சாலையில் அமைந்திருந்த அவர் இல்லத்திலிருந்து தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் வார ஏடாகத் தோற்றம் கண்டது. தமிழ் முரசு சீர்திருத்தக் கொள்கைகளை மலாயாத் தமிழர்களிடம் வளர்க்க வேண்டும் என்ற இலக்குடன் முனைப்பாகச் செயல்படத் தொடங்கியது. அன்றைய மலாயாப் பத்திரிகைகள் தமிழர், தமிழ்ப் பண்பாடு குறித்த தவறான புரிதல்களை எழுதின. இதற்கெல்லாம் மறுப்புரைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ் முரசு தோற்றம் கண்டது.

*‘முரசு அடித்துச் செய்தி பரப்பியது பண்டை வழக்கம். பத்திரிகை அச்சிட்டு செய்தி பரப்புவது இன்றைய வழக்கம். மலாய் நாட்டுத் தமிழர்கள் விரும்பிச் செய்யும் சீர்திருத்தங்களைப் பண்டைய பெயரில் இன்றைய முறையில் பரப்புவதுதான் தமிழ் முரசு மேற்கொண்டுள்ள வேலை. சிங்கப்பூர், தமிழர் சீர்திருத்தச் சங்கத்தாரால் தமிழ் முரசு வாரப்பதிப்பாக வெளியிடப்படுகிறது. சீர்திருத்தச் செய்திகளை, சீர்திருத்தச் சங்கங்கள் செய்து வரும் வேலைகளை, சீர்திருத்தவாதிகள் செய்து வரும் பிரச்சாரங்களை அவ்வப்போது வெளியிட மலாய் நாட்டிலுள்ள தமிழ்ப் பத்திரிகைகள் எதுவும் இசைவது இல்லை. அக்குறையை நிவர்த்திக்கவே தமிழ் முரசு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தமிழர் நலத்திற்கு ஷேமத்திற்கு முன்னேற்றத்திற்கு உரித்தான எல்லா செய்திகளையும் சுருக்கமாய் அவ்வப்போது வெளியிட்டு ஆணித்தரமான அபிப்ராயங்களைத் தமிழ் முரசு ஆர்க்கும்.*

*தமிழர் நலத்திற்கும் ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் இடையூறாய் நிற்கும் பொய்மைகளைக் கல்லி எறிந்து புல்லர்களை நிர்ஷண்யராய்க் கண்டித்து வாகை சூடி வெற்றி வெற்றி என தமிழ் முரசு ஒலிக்கும். தமிழர்கள் செல்வர்கள் அல்ல. ஆதலால் அவர்களின் முரசின் விலையும் ஒரு காசுதான். ஆனால் முரசோ கம்பீரமான ஒலியுடையது எடுத்த காரியம் யாவினும் வெற்றி பெறும் திடமுடையது. எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி, எடுத்த காரியம் யாவினும் வெற்றி என்ற ஜெயபேரிகையைத் தமிழ் முரசு இன்று ஒலிப்பதைக் கேளுங்கள். விழித்து எழுங்கள். உங்கள் கடமையைச் செய்யுங்கள்.’*

என இதழாசிரியர் கோ சாரங்கபாணி எழுதியுள்ள முதல் தலையங்கம் தமிழ் முரசின் தோற்றத்திற்கான காரணத்தையும் நோக்கத்தையும் குறிப்பிடுகிறது. இதற்கேற்பத் தமிழ் முரசு தோன்றியது முதல் மலாயா, சிங்கப்பூர்த் தமிழர்களின் நல்வாழ்விற்கு விடிவெள்ளியாக இருந்துள்ளதை உணரமுடிகிறது.

**தமிழ் முரசு நாளிதழ் வடிவமைப்பு:**

06-07-1935-ம் நாளன்று தமிழ் முரசு தொடங்கியபோது நான்கு பக்கங்களில் சிறிய அளவில் ஒரு காசு விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. முதலில் வார இதழாக வெளிவந்தது. 02-11-1935-ம் நாள் முதல் செவ்வாய், வியாழன், சனிக்கிழமை ஆகிய மூன்று நாட்களில் 21.5 x 15.5 என்ற வடிவமைப்பில் எட்டுப் பக்கங்களில் ஆறு காலங்களில் (Colums) வெளிவரத் தொடங்கியது. 1937-ம் ஆண்டு டிசம்பர் ஒன்றாம் நாள் முதல் நாளிதழாக மாற்றங்கண்டு இன்று வரை அதே வடிவமைப்பில் வருகிறது. அப்போது இதன் விலை மூன்று காசு. 2016-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து இவ்விதழானது வடிவமைப்பில் மாற்றம் இன்றி வார நாட்களில் அறுபது காசு, ஞாயிறுகளில் எழுபது காசு என விற்கப்படுகிறது. இவ்வாறு தமிழ் முரசு நாளிதழ் காலந்தோறும் தக்க வடிவத்தில் வந்து உள்ளதைப் போல தொடர்ந்து இன்றும் வந்து கொண்டிருக்கிறது.

**தமிழ் முரசு நாளிதழ் உள்ளடக்கம்:**

தமிழ் முரசு நாளிதழின் உள்ளடக்கம் தொடக்கம் முதல்

சீராக இருந்து உள்ளதைப் பார்க்க முடிகிறது. மலாயாத் தமிழர்களை விழிப்புடன் வைத்திருக்க வேண்டும் எனத் தோன்றிய நோக்கத்தில் இருந்து சற்றும் விலகாமல் வெளிவருகிறது. இலக்கிய வளர்ச்சி, எழுத்தாளர் அறிமுகம், கட்டுரை, கடிதம், செய்தியரங்கம், தலையங்கம், பத்தி, நேர்காணல், மாணவர் முரசு, முரசொலி, தகவல் சாதன நிகழ்ச்சிகள், விமர்சனங்கள், விளம்பரங்கள் எனத் தமிழ் முரசின் உள்ளடக்கப் பொருண்மைகளைப் பகுக்கலாம்.

**தமிழ் முரசு நாளிதழ் இலக்கிய வளர்ச்சி:**

தமிழ் முரசு தொடங்கியது முதல் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தை வளர்க்க அரும்பாடுபட்டு வருகிறது. கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய இலக்கிய வகைகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது. தொடக்கம் முதல் தாயகத்துப் படைப்பாளர்கள் படைப்புகளை வெளியிட்டு வருகிறது. இலக்கிய விவாதங்களில் வாசகர்களை ஈடுபடவைத்து இலக்கியச் சுவை ஊட்டியது. புதுமைப்பித்தன் சர்ச்சை, புதுக்கவிதை சர்ச்சை முதலியன இதற்குச் சிறந்த சான்றுகளாகும்.

*‘இலக்கியத்தைப் படைக்க வைத்தல், இலக்கியத்தைப் பரப்புதல், இலக்கியத் தரத்தை அடையாளம் காணவைத்தல், புதிய இலக்கிய வகைகளை உருவாக்குதல், புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்தல், மீண்டும் மீண்டும் தம்மைப் புடம் போட்டுக் கொள்ளும் வகையில் புகழ் பெற்றவர்களின் படைப்புகளைப் பிரசுரித்தல் எனப் பலவகைகளில் தமிழ் முரசு இலக்கிய வளர்ச்சிக்குப் பங்கு அளித்துள்ளது.’* (சீதாலட்சுமி, சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு ஓர் அறிமுகம்).

என ஆய்வாளர் சீதாலட்சுமி, தமிழ் முரசு காலந்தோறும் ஆற்றிவரும் இலக்கியப் பணியை மதிப்பீடு செய்துள்ளார். இது உண்மை என்பதைத் தமிழ் முரசு நாளிதழ் நிரூபித்து வருகிறது. தமிழ் முரசு நாளிதழ் கதை, கட்டுரை வளர்ச்சியில் மட்டுமன்றி கவிதை வளர்ச்சியிலும் ஆர்வம் காட்டிவருகிறது. இவ்விதழ் சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கு இரு நிலைகளில் பங்காற்றியுள்ளதைக் காணமுடிகிறது. சிங்கப்பூர்க் கவிதை குறித்த ஆய்வுக் கட்டுரைகளைப் பொது நிலையிலும் சிறப்பு நிலையிலும் வெளியிட்டுள்ளது ஒன்று, மரபுக் கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் வெளியிட்டுள்ளது மற்றொன்று. இளையர், இனப்பற்று, உழைப்பாளர், கல்வி, காதல், சமுதாயம், பண்பாடு, பெண், மொழி, வாழ்த்து என்ற பாடுபொருள்களில் கவிஞர்கள் கவிதைகளைப் படைத்துள்ளனர். இவ்வாறு தமிழ் முரசு நாளிதழ் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்குப் பணியாற்றி வருவதைப் பார்க்க முடிகிறது.

ஒரு நாட்டு மக்கள் தொகையில் பாதியாய் இருக்கும் மகளிரைப் பற்றிப் பாடாமல் இருக்க முடியாது. இதற்கேற்ப தமிழ் முரசுக் கவிஞர்களும் மகளிர் குறித்துப் பாடியுள்ளனர். குழந்தைகள் எதிர்நோக்கும் சிக்கல்கள், பள்ளிப் படிப்பில் கவனம் செலுத்த முடியாமை, காதல், மேற்கத்திய தாக்கம், நண்பர்களின் தாக்கம், மனைவி, மருமகள், தாய், மாமியார் எனப் பெண்களின் பல்வேறு நிலைகளைப் பாடியுள்ளனர். குழந்தைகளைப் பெற்றெடுத்து வளமாக வாழவேண்டியவர்கள் குழந்தைகளைப் பற்றி என்ன நினைக்கிறார்கள், தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தை என்ன நினைக்கிறது என்பன போன்ற படைப்புகளையும் கவிஞர்கள் படைத்துள்ளனர்.

ஒவ்வொரு இனத்திற்கும் சமுதாயத்திற்கும் குறிப்பிட்ட சிறப்பியல்புகள் உண்டு. இதன்படி தமிழ்ச் சமுதாயத்தில் மகளிர்க் கென சில அம்சங்கள் காலத்தோறும் சொல்லப்பட்டு பின்பற்றப்படுகின்றன. தமிழர்களின் குடும்ப அமைப்பு தாய்வழி சமூகமாகஅமைந்துள்ள பாங்கினை இலக்கியம் காட்டுகிறது. எனவே இத்தகைய சமுதாயத்தில் பெண்கள் எப்படி இருக்க வேண்டும் எனக் கவிஞர்கள் பாடியுள்ளனர். இதன் அடிப்படையில் தமிழ் முரசும் கவிதைகளை வெளியிட்டுள்ளது.

***அன்பும் அறிவும் பெற்றிடல் வேண்டும்***  
***அறம்பல செய்தே நடமிடல் வேண்டும்***  
***இன்பம் துன்பம் தாங்கிடல் வேண்டும்***  
***இனியதைப்பேசி நலம் பெறல் வேண்டும்***

***குலமகள் நீயென விளங்கிடல் வேண்டும்***  
***கோவில் தீபமாய் ஒளிர்ந்திடல் வேண்டும்***  
***நிலமகள் பொறுமை கொண்டிடல் வேண்டும்***  
***நிறைகுடம் போலவே வாழ்ந்திடல் வேண்டும்***

***அண்ணன் வார்த்தையை மதித்திடல் வேண்டும்***  
***அன்னை தந்தையைப் பணிந்திடல் வேண்டும்***  
***பெண்மையை உயிராய்ப் பேணிடல் வேண்டும்***  
***பேரின்பத் தமிழால் புகழ்பெறல் வேண்டும்***

***ஆடவர் பார்வையை விலக்கிடல் வேண்டும்***  
***அருந்தமிழ் நூல்கள் படித்திட வேண்டும்***  
***மூடப் பழக்கத்தை விலக்கிடல் வேண்டும்***  
***மேனியைச் சேலையால் மறைத்திட வேண்டும்***

***குங்குமம் நெற்றியில் துலங்கிட வேண்டும்***  
***கூந்தலில் மலரைச் சூடிட வேண்டும்***  
***மங்கல மங்கையராய் வாழ்ந்திடல் வேண்டும்***  
***வாழ்பவர் உன்னை வாழ்த்திடல் வேண்டும்***

***நால்வகைப் பண்பும் காத்திடல் வேண்டும்***  
***நாமொழி அடக்கம் பேணிடல் வேண்டும்***  
***மால்மருகன் தன்னைக் கைதொழல் வேண்டும்***  
***வாடா மலராய் விளங்கிடுதல் வேண்டும்***

***சோம்பல் இன்றி செயல்பட வேண்டும்***  
***தூயவளாய் நீ சிறந்திடல் வேண்டும்***  
***ஆம்பல் மலராய் மிளிர்ந்திட வேண்டும்***  
***அம்புலி போல சிரித்திடல் வேண்டும்***

*- நன்முல்லை, தமிழ் முரசு, 22-04-1981*

எனப் பெண்களின் குணங்களைப் பட்டியலிட்டு அதன்படி இருக்க வேண்டும், வாழ வேண்டும் எனக் கவிஞர்களும் சமுதாயமும் விரும்புகிறது. இத்தகைய பெண்கள் குடும்பத்தின் ஆணிவேராக இருந்து உறவுகளை வளர்ப்பர். இத்தகைய குடும்பங்களைக் கொண்டுள்ள சமுதாயம் சிறக்கும்.

ஆணும் பெண்ணும் சமம் எனச் சொல்லப்பட்டாலும் பெண்களுக்கு இன்னும் சமஉரிமை வழங்கப்படவில்லை. இதை ஊடகச் செய்திகளும் உறுதி செய்கின்றன. சங்க காலத்தில் ஆண்களும் பெண்களும் சமமாய் இருந்ததை இலக்கியங்கள் காட்டுகின்றன. இப்படி வாழ்ந்த இனத்தில் ஆண் பெண் பேதம் இருக்கக்கூடாதெனக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

*ஆணுக்குப் பெண் அடிமையென*
*அகங்காரம் கொண்டு நீவிர்*
*பேணாது பெண்ணைப் பெருமையின்றிப்*
*பேசுதல் பொல்லாப் பிசாசுகளன்றோ*
*ஆணுக்குப் பெண் அடிமையில்லை*
*அறிவிலும் குறைவல்ல அவள்*
*வீணாய் பெண்ணை வீழ்த்தாமல்*
*மேனோக்கிக் கொண்டு வாரீர்*

*வில்லன், தமிழ் முரசு, 27-12-1952*

எனக் கவிஞர் வில்லன் பெண்ணின் பெருமைகளைப் பாடியுள்ளார். பெண்களைச் சமுதாயம் எப்படி நடத்துகிறது என்பதை நாம் நடைமுறை வாழ்வில் காண்கிறோம். பெண்க




ளைச் சமுதாயம் மதித்தால் அச்சமுதாயம் வளரும் எனக் கவிஞர் கூறியுள்ளார்.

தாயும் சேயும் உரையாடும் கவிதையில் தாயன்பு வெளிப்படுகிறது. தாய் குழந்தையருகில் இருந்து நன்றாகக் கவனித்துக் கொள்கிறார். பிள்ளை இல்லாப் பழியை உன்னை ஈன்ற காரணத்தால் துடைத்துவிட்டேன். பிள்ளைகள் வளர்ந்து நாட்டையும் வீட்டையும் கண்காணித்துக் கொள்ள வேண்டும். மேலும் மலாயாவில் வாழும் பெண்களுக்குக் கல்வி அளிக்க வேண்டும். இதனால் பெண்கள் கற்று தம் பிள்ளைகளை நன்முறையில் வளர்க்க முடியும். இவர்கள் தமிழ் இலக்கயங்களைக் கற்கவும் இது வாய்ப்பாக அமையும். இந்நாள் எந்நாளோ எனக் கவிஞர் பாடியுள்ளார்.

*கொத்துமலர்க் கூட்டத்திலே நான்*
*கொய்துவிட்டேன் மென்மலரே*
*தத்துமொழி பேசும் பெண்ணே இனி*
*தலைமகனும் நீயே கண்ணே*
*எத்துணையும் புகழிமிருந்தாலும்*
*எடுத்தணைக்கப் பிள்ளையின்றிப்*
*பத்துமாதம் சுமந்த பின்னே*
*பாலகனே ஈன்றேனுன்னை*

*கண்ணுறக்கம் கொஞ்சமின்றி*
*கால்நிலையாய் நின்றருகே*
*கிண்ணத்தில் பாலூற்றிக்*
*கிழிவயிறாய்த் தந்திடுவாய்*
*பண்ணென்று பாடிக்காட்டிப்*
*படுக்கைக்கே அனுப்பிவிட்டு*
*அண்டையிலே கண்ணிருத்தி*
*அன்னையே நீ தூங்கிடுவாய்*

*பெண்ணுலகைக் காத்திடவே மைந்தர்*
*பெருந்தொண்டு செய்தல் வேண்டும்*
*கண்ணெனக் கென்றெண்ணியே*
*அதைக் காத்திடவும் வேண்டுமடா*
*பெண்கல்வி பெருகிவிட்டால் கண்ணே*
*பெரு விளக்காம் நம்நாடு*
*அண்மையிலே எழுச்சிவர நான்*
*அறிகுறிகள் காண்பதெப்போ*

*இந்நாட்டின் பெண்களெல்லாம் தமிழ்*
*இலக்கியங்கள் கற்றல் வேண்டும்*
*இன்மொழியாம் தமிழதனைப் பெண்கள்*
*இதயம் பதிக்க வேண்டும்*
*நன்னாடாய்த் தமிழ்நாடு இனி*
*நலமிகவே கொண்டுவிடும்*
*சிந்தையைத் தெளியவைத்துப்*
*பெண்கள் சீக்கிரமே பெறுவார் அறிவு*

*மு அ யாகூப், தமிழ் முரசு, 27-05-1956*

எனக் கவிஞர் பெண் கல்வியின் அவசியத்தையும் இக்கவிதையில் பாடியுள்ளமை தெரிகிறது. இதனால் இக்காலக் கட்டத்தில் மலாயாவில் வாழ்ந்த பெண்கள் நிலையை உணரமுடிகிறது.

ஒவ்வோர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் எனச் சொல்வதில் ஆழமான காரணம் இல்லாமல் இல்லை. மனைவி வீட்டின் முழுப்பொறுப்பைக் கவனித்துக் கொண்டு குழந்தைகளுக்கான கடமைகள், மூத்தோர்களுக்கான பணி என எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் செய்துவிடுவதால்தான், மன அழுத்தம் இன்றி ஆண்களால் வெளியுலகில் சாதிக்க முடிகிறது என்ற உண்மையைப் பலர் அலட்சியம் செய்கின்றனர். சமூகத்தின் மிகச் சிறிய அலகான குடும்பத்தில் அன்பும் அமைதியும் நீடிக்க கணவன், மனைவி, பிள்ளைகளுக்கு இடையில் அன்பு, புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் அர்ப்பணிப்பு போன்ற பண்புகள் இன்றியமையாதவை. அன்பை மனதுக்குள் வைத்துக் கொள்ளாமல் வார்த்தைகளால் செய்கைகளால் வெளிப்படுத்தக் கூடியதாக

இருக்க வேண்டும். இத்தகைய பண்புள்ளவளாக மனைவி இருப்பதால் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் எனக் கணவன் பாராட்டும் பாக்களையும் கவிஞர்கள் படைத்துள்ளனர்.

*தேன்ம ணக்கும் சொல்லாள்-நான் / தேர்ந்து மணந்த நல்லாள்*
*வான்ம ணக்கும் மறைகள் கூறும் / வழிக டக்கும் வல்லாள்*

*பூம ணக்க வந்து-உளம் / பூக்க இன்பம் தந்து*
*நாம ணக்கும் செயல்க ளாற்றி / நாளும் பணிவாள் எந்தாள்*

*விடியு முன்னே எழுந்து-படைத்த / விமலன் தாளில் விழுந்து*
*கொடிய பாவச் சுமையும் நீங்க / கருணை வேண்டித் தொழுவாள்*

*காலை முதல் மாலை-செய்வாள் / களைத்தி டாது வேலை*
*வேலை யின்றித் தூங்கி எழுந்து / வீணில் கழியாள் நாளை*

*உண்ண அமுது வடிப்பாள்-சுவை / யோடு தினமும் படைப்பாள்*
*எண்ணம் போல நடந்து விரும்பும் / இன்பத் தனையும் கொடுப்பாள்*

*அறிவு நூற்கள் படிப்பாள்-பே / ரழகுக் கவிதை தொடுப்பாள்*
*பரிவாய் என்றும் புகழை என்றான் / பாதங் களிலே படைப்பாள்*

*மாலை வீடு திரும்பும்-எனைக் / கண்டதும் நகை அரும்பும்*
*வேலைக் களைப்பு நீங்கச் செய்யும் / வனிதை யவளின் குறும்பும்*

*அன்பின் பண்பின் ஊற்று-என / அறிந்தவர் மகிழ்ந் தேற்றும்*
*இன்ப கீதம் என்றன் நெஞ்சில் / இனித்து இறையை போற்றும்*

*ஏழை எளியோர்க் கிரங்கும்-கொடை / ஈந்தா லேகண் ணுறங்கும்*
*கூழே எனினும் பகிர்ந்து உண்ணும் / கொள்கை என்றும் இலங்கும்*

*குற்றங் காணின் கடிவாள்-அவள் / குறையை கூறின் படிவாள்*
*சுற்றங் காத்து நிலைமைக் கேற்ப / சிக்க னவழி நடப்பாள்*

*பாவை யிவளின் கூட்டு-என்றும் / பேசி முடியாப் பாட்டு*
*சாவை ஏற்கு முன்பே சுவன / சுகத்தைக் கண்டேன் வீட்டில்*

*மதிமோகன், தமிழ் முரசு, 07-11-1965*

எனக் கவிஞர் மதிமோகன் இல்லத் தலைவியின் பண்புகளைப் போற்றிப் பாடியுள்ளார். இத்தகைய பண்புள்ள பெண்கள் இல்லத் தலைவியராக இருந்தால் வீடும் நாடும் சிறக்கும்.

மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்றே நினைக்கின்றனர். ஆனால் மகிழ்ச்சியான வாழ்க்கையானது அவரவர் எண்ணங்களைப் பொறுத்தமைகிறது. குடும்ப வாழ்வில் ஆணும் பெண்ணும் சமம் என்பதைத் தமிழர் வாழ்வியல் தொன்றுதொட்டு உணர்த்துகிறது. இன்றைய சூழ்நிலையில் பணத்தைக் கொண்டு தீர்மானிக்கும் திருணங்களால் எல்லாரும் மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்துகிறார்கள் எனச் சொல்ல முடியாது. ஆகவே பெண்கள் கணவரைத் தேர்ந்து எடுக்கும் போது விழிப்பாக இருக்க வேண்டும். ஆண்களில் எல்லோரும் நல்லவர்கள் எனக் கூறமுடியாது. அவர்கள் நல்லவர்களைப் போல நடித்துப் பெண்களை ஏமாற்றலாம். அதனால் பெண்களிடம் ஆண்களின் குணங்களைச் சொல்லும் போக்கில் கவிஞர்கள் சில கவிதைகளைப் படைத்துள்ளனர்.

*காளையர் கூட்டம் கன்னியர் தன்னை*
*பொம்மைகளா யெண்ணி-கை*
*பொம்மைகளா யெண்ணி-ஒரு*
*வேளைக் கொருத்தி யாக சுவைத்து*
*விட்டுச் செல்கின்றார்-அந்தோ*
*விட்டுச் செல்கின்றார்*

*சோலைக் கிளியே சுந்தர மயிலே*
*சுரந்திடுந் தேனமுதே-என்றும்*
*சுரந்திடுந் தேனமுதே எனக்*
*கூளைக் கும்பிடு போட்டிடுந் தீயரை*
*குலமே நம்பாதே-தாய்க்*
*குலமே நம்பாதே*

*அடுத்தொரு பிறவி எடுத்து வந்தாலும்*
*அதிலும் உனைப்பிரியேன்-கண்ணே*
*அதிலும் உனைப்பிரியேன் என*
*நடுத்தெரு ராணியாக்கிச் செல்லும்*
*நீசரை நம்பாதே-பெண்ணே*
*நீசரை நம்பாதே*

*ஏற்றிப் பேசி இன்பத் தன்னை*
*எழிலாய் மாந்தியபின்-நாளும்*
*எழிலாய் மாந்தியபின் வெறுத்து*
*தூற்றிச் செல்லும் தொழிலைக் கொண்ட*
*துட்டரை நம்பாதே-இழிந்த*
*துட்டரை நம்பாதே*

*உண்மைக் காதல் நெஞ்சங் கொண்ட*
*உயர்ந்த காளையரை-பெண்ணே*
*உயர்ந்த காளையரை வாழ்வில்*
*நன்மை காண திண்மை பேண*
*நன்றே தேர்ந்தெடுப்பாய்-உடன்*
*இன்றே தேர்ந்தெடுப்பாய்*

*கற்பு என்பது கன்னிப் பெண்ணே*
*கவினுயிர்க் குமேலாகும்-உன்றன்*
*கவினுயிர்க் குமேலாகும் அதனைப்*
*பொற்புடன் காத்துப் புகழையும் ஈர்த்து*
*பொலிவாய் விளங்கிடுவாய் குல*
*மகளாய் விளங்கிடுவாய்*

*இளங்கோ, தமிழ் முரசு, 25-09-1966*

எனக் கவிஞர் இளங்கோ ஆண்களின் செயல்களைப்பாடிப் பெண்கள் கவனமாக இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். மேலும் தமிழ்ப் பண்பாட்டில் பெண்களின் கற்பு பேணப்பட வேண்டியதையும் சொல்லியுள்ளார்.

பெண்ணின் நிலையை வர்ணித்துள்ள கவிஞனின் ஆற்றலைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இன்று பெண்கள் இப்படி இருக்கிறார்களா எனக் கேட்கும் காலக் கட்டத்தில் பெண்கள் இப்படி இருக்க வேண்டும், இப்படி இருந்தால் நல்லது எனக் கூற வேண்டிய தேவை கவிஞனுக்கு உண்டு. ஒரு குடும்பப் பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கவிஞர் பாடியுள்ள விதம் நன்றாக உள்ளது.

*வண்டாடும் சோலையென வான்முகிலின் வண்ணமென*
*வளைந்தாடும் வளமைகொண்ட கன்னல்*
*செண்டாடும் இதழாலே செங்கமலச் சிரிப்புதிர்த்து*
*சிந்திசைத்து பண்பாடும் தென்றல்*
*விண்ணோடு விளையாடும் வெண்ணிலவாய் ஒளிபாய்ச்சி*
*விழியாலே மொழிசொல்லும் மங்கை*
*பண்பாடு மறவாமல் பழமையெலாம் புறமொதுக்கி*
*புதுமைதனைக் கடைப்பிடிக்கும் தெய்வம்*

*கொஞ்சும் தேனிதழ்காட்டி கொம்புத்தேன் சுவைக்கூட்டி*
*கொடியரும்பாய் மணங்கமழும் முல்லை*
*மிஞ்சும்தே னும்வடிய மின்னலிடை தாங்காமல்*
*வில்லாக வளைகின்ற மருதம்*
*வஞ்சித்தேன் இன்பத்தேன் வாயினிக்கும் கொம்புத்தேன்*
*வற்றாமல் வழங்கும்நல் நெய்தல்*
*அஞ்சித்தான் அரவணைத்தால் ஆரத்தான் அணைத்துத்தான்*
*அத்தான் என்றழைக்கும் குறிஞ்சி*

*அலையாடும் கடல்போன்று அலையாத மனங்கொண்டு*
*அசைந்தாடும் தளிர்வண்ணப் பேடை*
*கலைபாடும் எழில்போன்று கலைமானின் விழிகொண்டு*
*கனிமுத்தம் சிந்துமா லாகடை*
*இலையோடு உறவாடும் இசைத்தென்றல் போலாகி*
*இணைந்தாட கொஞ்சும்நீ ரோடை*
*தலைவாழை இலைபோன்று தலைவாரிப் பூச்சூடி*
*தவழ்ந்தாடி தழுவும்குளிர் வாடை*

*மங்கலநாண் மலைமுகட்டை மனம்போல தான்புரண்டு*
*மனங்கனிந்து முத்தமிட மலர்வாள்*
*செங்கழுநீர் முகமலர செஞ்சாந்து வட்ட நிலா*
*திருநுதழில் துலங்கிடவே ஔிர்வாள்*
*பொங்கிவரும் புன்னகையை பொன்னுளன் மனதிற்கு*
*பூந்தமிழாய் விருந்தாக்கி மகிழ்வாள்*
*தங்கமயில் பல்லக்கை சேலைபின்னால் திரையிட்டு*
*தாங்கிவந்து சீர்வளக்கும் பெண்ணாள்*

*மெட்டியணிந் தகால்கள் முத்துமணி ஒலியெழுப்பு*
*மெத்தநடை நடந்துவரும் அன்னம்*
*சிட்டுப்போல் வளமார்பில் சேர்ந்துவந்து செயும் குறும்பு*
*செந்தமிழ்போல் சுவையூட்டும் பொங்கல்*
*பட்டுடலில் பளபளக்கும் பாற்குடத்தில் நீர்சுமந்து*
*பசிபோக்கும் பள்ளியறையத் திங்கள்!*
*கொட்டும்பனி குளிரெடுத்தால் கொடுக்கும் சீற்ற*
*உணர்வாலே*
*குளிர்போக்கி நலந்தரும்தீ முட்டம்*

*வாயிதழின் செந்தேனை வழங்கிடுவாய் என்றிட்டால்*
*வள்ளலைப்போல் வரையாமல் கொடுப்பாள்*
*தாயிவள் ஆனபோல் சேயென்றே அவள் நினைந்து*
*தாலாட்டி தூங்கவைத்துப் படுப்பாள்*
*கோயிலுக்குள் வாழுகின்ற கோலமிகு தெய்வமென*
*கொண்டவனின் கால்தொட்டுத் தொழுவாள்*
*காய்கனிந்து இனிப்பதுபோல் காலமகள் அவனோடு*
*காதலறம் நடத்திமிக மகிழ்வாள்*

*கார்கூந்தல் பாய்விரித்து காற்றாடி மணம்பரப்ப*
*கட்டிலின்மேல் பஞ்சணையை விரிப்பாள்!*
*மார்மீதில் தவழ்ந்தாடும் மலராடை தான்விலக*
*மஞ்சமதில் முத்தமிழைப் பொழிவாள்*
*சீர்வகுத்த சிற்றிடையும் திண்டாடித் துவண்டுவிழ*
*சிறையாகி சிலையாகக் கிடப்பாள்*
*ஏர்கொண்ட நிலந்தன்னில் செழித்தோடும் கதிர்போல*
*இன்பத்தை வழங்குகின்ற பெண்ணாள்*

- நன்முல்லை, தமிழ் முரசு, 19-08-1973

எனக் கவிஞர் குடும்பப் பெண்கள் இருக்க வேண்டிய பாங்கினைப் பாடியுள்ளார். இப்படி எல்லாப் பெண்களும் இருப்பார்களா என்பது கேள்விக்குறியே! இத்தகைய பண்புள்ள பெண்கள் மற்ற பெண்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும்.

அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து இரவு பதினோரு மணி வரை வேலை செய்யும் பணிபெண்களின் வாழ்க்கை கவலைக்குரிய ஒன்றாக உள்ளது. சிங்கப்பூரில் இந்தியா, இலங்கை, தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பணிப்பெண்கள் செவிலித்தாய்களாக இருந்து குடும்பத்தைக் காத்து வருகிறார்கள். இவர்கள் அன்றாடம் புரியும் பணிகளைக் கவிஞர்கள் பாக்களாகத் தந்துள்ளனர். இப்பாக்களில் இவர்களின் குமுறல்கள் காணக்கிடக்கின்றன.

*ஐந்துமணி ஆவதற்குள் விழித்தெழுந்து*
*அடுக்களையில் பாத்திரங்கள் துலக்கிவைத்து*
*நைந்துபோன திரைத்துணியை மாற்றிவிட்டு*
*நாற்காலி மேஜை பாலிஷ் போட்டபின்பு*
*ஜன்னலிலுள்ள அழகெல்லாம் நீக்கும்*
*சரந்தொங்கும் சிலந்திவலை போக்க வேண்டும்*

எனத் தொடங்கும் கவிதை குழந்தைகளைப் பராமரித்தல், முதியோர்களைப் பார்த்துக் கொள்ளுதல், அவர்கள் கொடுக்கும் வேலைகளைச் செய்தல், வீட்டைப் பெருக்கி குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் கொட்டுதல், சந்தைக்குச் சென்று காய்கறி வாங்கி வருதல், சமைத்தல், துணிகளைத் துவைத்து காய வைத்தல், காய்ந்த துணிகளை உரிய இடங்களில் முறையாக அடுக்கி வைத்தல், குளித்தபின் செடிகளுக்கு நீர் ஊற்றல், நாயைக் குளிப்பாட்டுதல், மாலை ஆறு மணியளவில் இரவு உணவைச் சமைத்தல் எனப் பணிப்பெண்களின் அன்றாட பணிகளைக் காட்டியுள்ளார்.

*பதினோரு மணிக்கவர்கள் படுத்தபின்பு*
*பசியாறி முடித்துவிட்டு உறங்கப்போனால்*
*விதியெண்ணி விழியோரம் துளிர்க்கும் கண்ணீர்*
*விழியிரண்டில் தூக்கமேது? துக்கம்தானே!*

*சத்தியமூர்த்தி, தமிழ் முரசு, 23-01-2005*

என அவர்கள் படுத்த பிறகு இரவு உண்டு உறங்கத் தொடங்கும்போது கண்ணீர் மல்க அழுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் என அவர்களின் உணர்வுகளைக் கவிஞர் சத்தியமூர்த்தி பாடியுள்ளார்.

தாயகத்தில் மனைவியும் சேயகத்தில் கணவனும் தனித்தியே வாழும் நிலையைக் காட்டியுள்ளது. வாசகன் மனதை நெகிழச் செய்கிறது. கணவனைப் பிரிந்து தனியாக வாழும் பெண்ணின் மனநிலையில் வருத்தத்தைத் தருவதோடு வாசகனையும் சோகமாக்குகிறது. இந்த அளவிற்குப் பிரிவு பாதிப்பைப்

தருகிறது.

*கடல் கடந்து பொருள் தேடக் கடிதினிலே சென்றீர்*
*கலியாணமாகி மாதம் சிலவாகு முன்னர்*
*மடமானே வருந்தேல் யான் விரைவினிலே வருவேன்*
*வாழ்க்கையினை நடத்துதற்கு வளம்தேடி என்றே*
*திடமுரைத்துப் பல்காலும் தேற்றியெனை விடுத்தே*
*சென்றதுவும் மறந்தீரே தினந்தினமும் சிறியேள்*
*உடல்தளர்ந்து மனமுடைந்து வாடுகின்றேன் என்றன்*
*உறுதுயரம் உமக்கெடுத்தே உரைப்பவருமிலையோ*
*தில்லைச் செல்வன், தமிழ் முரசு, 03-02-1952*

என்ற பாடலில் தில்லைச் செல்வன், அக இலக்கண மரபான பொருள் வயிற்பிரிவு, பிரிவாற்றாமை இவற்றை நினைவுபடுத்துகிறார். தாயகத்திலிருந்து மனைவியைப் பிரிந்து வந்து பணியாற்றும் பலரும் பொருள் தேடுவதில் நாட்டம் செலுத்துகிறார்களே தவிர தங்கள் குடும்பத்தைப் பற்றி அதிகம் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இக்கவிதையானது மனைவியின் துன்பத்தை உணர்த்துவதோடு பொருள்தேடலின் அவசியத்தையும் உரைப்பதாக உள்ளது. சங்க காலத்தில் தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் தேடச் சென்றதை இவ்வரிகள் நினைவூட்டுகின்றன.

அன்பை மையமாக கொண்டதுதான் வாழ்க்கை முறை. அன்பு விலைமதிப்பிட முடியாது, உணர்வு பூர்வமானது. அன்பு குடிகொண்ட உள்ளத்தில் சுயநலம் இருக்க முடியாது. அச்ச உணர்வு உண்டாகாது. அன்பு கொண்ட நெஞ்சங்களிடையே ஏற்படும் இணைப்பு வலுவானது. இருவரிடையே அன்பு இடைவெளி விழும்போது பந்தம் பலவீனமாகிறது. அன்பு அடிமனதிலிருந்து ஆழமாக இருக்க வேண்டும். கணவன், மனைவியிடையே அன்பு தங்கு தடையின்றி வெளிப்படுத்தப்பட வேண்டும். தலைவனின் பிரிவு தலைவியைப் பெரும் அளவில் பாதித்துள்ளது. எனவே அவனது வருகையை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறாள். திருமணம் செய்து கொண்டு இல்லறத்தார்க்குரிய கடமைகளில் தவறாது வாழ்ந்து வரும் தலைவன் மனைவியைப் பிரிந்து வாழும் நிலைமையும் சில சமயங்களில் நிகழ்கின்றது. ஓதல், நாடுகாவல், பொருள் ஈட்டல் முதலியவற்றில் ஏதாவது ஒன்றிற்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதை இலக்கியங்களும் உணர்த்துகின்றன. அப்பொழுது தலைவனைப் பிரிந்து இருக்கும் தலைவி, பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் துன்பப்படுவாள். உறவினர்களும் தோழியும் இல்லாத தனிமையில் துணையாய் நின்றவன் தலைவன். இப்பொழுது அவனும் அவளை விட்டுப் பிரிந்து செல்கிறான். அவளால் அந்தப் பிரிவைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. எனவே, தனக்கு மிகவும் இனியவராய் இருக்கின்ற தலைவனின் பிரிவு எல்லாவற்றையும் விடக் கொடியது என உணருகிறாள். கணவனும் மனைவியும் உயிரும் உடலும் போல் இணைபிரியாது கூடி மகிழ்ந்து வாழும் இல்லற வாழ்க்கையில் பொழுது போதாது. ஆனால் தலைவனைப் பிரிந்து தனிமையில் வாழும் வேளையில் வரும் பொழுதானது துன்பம் தருகிறது. தலைவனோடு இனிமையாக வாழ்ந்த இரவு நேரம் பிரிவின் பொழுது துன்பமாகத் தோன்றும். காதலன் எப்பொழுது வருவான், அவனைக் கண்டு எப்பொழுது மகிழலாம் எனத் துடித்துக் கொண்டிருக்கிறாள் தலைவி. அவன் தன்னோடு இல்லாத சூழலில் ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாகக் கழிகிறது.

*வருவார் வருவாரென்று வழிபார்த்து விழிநோக*
*உருகிப் போகின்றேன் ஓர் துரும்பாய் ஆகின்றேன்*
*தாமரை மலரில்லாத் தடாகம்போல் அழகிழந்து*
*காமரை எண்ணியெண்ணிக் கவலையிலே ஆழ்ந்தேனே*

*நல்லறிஞர் இல்லாத நாடாட்சி சபைபோல*
*பொல்லார் பழிக்கின்ற பொம்மையைப்போல் ஆனேனே*
*நாற்றை உண்டாக்கும் நற்றண்ணீர் ஓடாத*
*ஆற்றைப்போல் யானும் அழகை இழந்தேனே*

*வளரும் வெண்ணிலவின் வண்ணமிலா வான்போல*
*தளரும் கலையிழந்த தன்மைமுகம் பெற்றேனே*
*நல்ல மணமில்லா நாணற்பூப் போலவேநான்*
*மெல்லமெல்ல மாறி மேலழகை இழந்தேனே*

*உழவிற் குதவாத உவர்நிலத்தைப் போலவேநான்*
*அழகுப் பொலிவெல்லாம் அவிந்து போனேனே!*
*சோறில்லாப் பானையைப்போல் சோர்ந்தே கிடக்கின்றேன்*
*ஊறில்லா நிலையொழிக்க உகந்தநன் நாளெதுவோ*
*பசும்பொற்கிழார், தமிழ் முரசு,19-09-1965*

எனக் கணவனைப் பிரிந்து வாழும் மனைவியின் ஏக்கத்தைக் கவிஞர் பசும்பொற்கிழார் பாடியுள்ளார். இப்பாடல் சங்க இலக்கியங்களில் வரும் தலைவியின் ஏக்கத்தைக் காட்டுகிறது.

பிரிவு கடுமையான ஒன்றாகும் என்பதைச் சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை எடுத்து உரைக்கின்றன. இல்லற வாழ்வில் ஈடுபடும் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்வதையே விரும்புவர். வாழ்வதற்குப் பொருளாதாரம் தேவை. இதனால் கணவன் பொருளீட்டும் பொருட்டு மனைவியைப் பிரிந்து சிங்கப்பூர் செல்கிறான். மனைவி தாயகத்திலும் கணவன் சிங்கப்பூரிலும் வாழும் சூழல் ஏற்படுகிறது. பல ஆண்டுகள் கழிந்தும் கணவன் தாயகம் சென்று மனைவியைப் பார்க்கவில்லை. இதனால் மனப்பாதிப்படைந்த மனைவி கணவன் வருகைக்காக ஏக்கித் தவித்தாள். கணவன் தன்னை நாடி வருவதாகத் தெரியவில்லை. இச்மசூழலில் மனைவி தனது உள்ளக் குமுறலைப் பாக்களாக வடிக்கிறாள். அப்பாக்களில் பெண்களின் ஆற்றாமை வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

*எப்போது தமிழ்நாடு வருவீ ரத்தான்*
*இளமைக்கு எப்போது விருந்து வைப்பீர்*
*இப்போதே என்னிளமை விழலுக்கி றைத்த*
*நீர்போலும் வீணாகிப் போன தத்தான்*
*எப்படிதான் உங்கட்கு எடுத்து ரைப்பேன்*
*என்மேனி வாடுவதும் முறையோ சொல்வீர்*
*ஏனிங்கே வருவதற்குத் தடைகள் ஏனே*
*எவள்விரித்த வலை தன்னில் விழுந்தீர் இன்றேல்*
*நானிங்கே தவித்திடவே நீங்கள் மட்டும்*
*நெடுநாளாய் வாழ்கின்ற கமுக்கம் என்ன*
*தேனிருக்கும் இடம்தேடி வண்டு போகும்*
*தேன்மொழியாள் நானிருக்க மறந்தா விட்டார்*
*ஏனின்னும் தடுமாற்றம் சிங்கை வாழ்வு*
*இனிவேண்டாம் புறப்படுவீர் நம் நாட்டிற்கே*
*நன்முல்லை, தமிழ் முரசு, 08-02-1976*

எனக் கவிஞர் மனைவியின் துயரங்களைப் பாடியுள்ளார். மனைவியைவிட பொருள் அவசியமா என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். வளமான வாழ்க்கைக்குப் பொருளாதாரம் தேவை என்பதை மறுக்கமுடியாது. இளமை ததும்பும் மனைவியைப் பிரிந்து, குடும்பத்தைப் பிரிந்து பொருள் ஈட்ட வேண்டுமா என்பது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். இல்லையேல் மாற்று வழிகளைக் காண வேண்டும். இவைகளைத் தவிர மேற்கண்ட கவிதையில் வேறு பல செய்திகளும் மறைந்துள்ளன.

இல்லற வாழ்க்கை ஒரு நெடிய பயணம். இந்நெடிய பயணத்தைத் தனியே நடத்த முடியாது. இதற்கு ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் அவசியம். மனித வாழ்க்கைப் பயணத்திற்குத் துணையாக இன்றி துணை நலமாகவே பெண்ணை வள்ளுவம் கூறுகிறது. இவர்கள் இணைந்து நடத்தும் வாழ்க்கை இல்லற வாழ்க்கையாகும். குடும்பத் தலைவியான ஒரு பெண் தன் துணைவருக்குப் பரிவிலும் உணவளிப்பதிலும் தாயாகவும் தக்க ஆலோசனைகள் கூறி வழி நடத்துவதில் தமக்கையாகவும் குறை குணங்களைக் கடந்த நிலையில் அன்பு பாராட்டி எடுக்கும் காரியம் யாவினும் கை கொடுத்து நிற்பதால் தோழியாகவும் உடல் நலம் கருதிப் பேணுவதில் மருத்துவச்சியாகவும் காதலின்பத்தை அளிப்பதில் மனைவியாகவும் இடையூறு உண்டான நேரத்தில் தக்க நெறிமுறைகள் காட்டுவதில் அமைச்சராகவும் விளங்க வேண்டும் என்று ஆன்றோர் கூறியுள்ளனர். இத்தகு நலன்களுடைய வாழ்க்கைத்துணை அமையின் இன்புற்று வாழலாம். இத்தகு நலன்கள் பெண்ணினத்திற்கு அமைய வேண்டுமாயின் அவர்கள் கல்வி நலத்தில் சிறந்து விளங்க வேண்டும். உறுதியும் உத்தரவாதமும் உடைய வாழ்நிலை அவர்களுக்கு வழங்கப் பெறுதல் வேண்டும்.

***அழிவான செயல்களினை அறிந்தொதுக்கி***
***மனைமாண்பு கட்டிக் காக்கும்***
***விழிநிகராய்த் திகழ்மனையாள் புறப்பட்டார்***
***எய்துவதே பெருமை இன்பம்***
***பொலிவான மனைக்கின்பம் பூவையரால்***
***வராவிட்டால் பெருமை குன்றிப்***
***புலிவாழும் குகைபோல பொறுப்பற்ற***
***நிலைவளரச் சிறுமை சேரும்***

***பெண்பெருமை கற்புநெறி! பிள்ளைகளின்***
***நற்பெருமை எதனால் சேரும்***
***விண்பரவி மேலோங்கும் விரிகல்வி***
***தனைத்தேடிக் கொள்வ தாகும்***
***தண்புனலாய் ஊர்நலத்தில் தனியன்புப்***
***பெருக்கோடு வினைக ளாற்றும்***
***அன்புநெறிப் பயிர்வளர்க்கும் அருள்பெருகு***
***மனவளமே பெருமைக் குன்றம்***

*முத்தமிழன், தமிழ் முரசு, 08-07-1981*

எனக் குடும்பப் பெண்களின் சிறப்புகளைக் கவிஞர் முத்தமிழன் பாடியுள்ளார். இத்தகு பெண்களைக் கொண்டுள்ள குடும்பம் என்றும் புகழ் உச்சியை அடையும் என்பது உண்மையன்றோ. கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் வாழ்க்கையே இல்லற வாழ்வாகும். கணவன் ஒரு புறமும் மனைவி மறுபுறமும் வாழும் வாழ்க்கை இல்லற வாழ்வாகாது. மணமுடித்து, மனைவியுடன் சேர்ந்து வாழாது மனைவியைப் பிரிந்து சிங்கப்பூரில் வாழ்பவர்களும் உண்டு. அவர்கள் வரும்போது வட்டிக்குப் பணம் வாங்கி முகவருக்குக் கொடுத்துவிட்டு வருகின்றனர். அக்கரையில் இருக்கும் மனைவிக்கு வாழ்க்கை போராட்டமாக அமைகிறது. இக்கரையில் வாழும் இவனுக்கோ வேலையோடு பிரிவும் வாட்டுகிறது. இத்தகு சூழலில் தாயகப் பணியாளர்கள் படைக்கும் கவிதைகளில் அவர்களது உணர்வுகளைக் காணமுடிகிறது. காலம் கழிந்து கொண்டே இருக்கிறது. என் வயதும் கூடிக் கொண்டே இருக்கிறது. சேர்ந்திருந்து இன்பம் காணவேண்டிய வயதில் என்னைப் பிரிந்திருப்பது நியாயமா என்பன போன்ற வினாக்களை நயமாக அமைத்துப் பெண்ணின் உணர்வுகளைப் பாடியுள்ளனர்.

***சம்பாதிச்சு வந்தபின்னே / சேர்ந்திருப்போம் என்றீக***
***அஞ்சு பொங்கல் போயிடுச்சு / பூத்தகொடி வாடுதய்யா***
***வெல்லமாய் இனிப்பவரே / பொங்குமுன்னே வாருமய்யா***
***பொங்கலோ பொங்கலுன்னு / ஊருசனம் சொல்லுமுன்னே***

*அனுபமா, தமிழ் முரசு, 14-01-2001*

என பெண்ணின் மனநிலையை அனுபமா பாடியுள்ளார். இக்கவிதையில் பூத்தகொடி வாடுதய்யா என்னும் அடி படிப்பவரைச் சோகத்தில் ஆழ்த்தி விடுகிறது என்பது உண்மை. உலகமயமாகிவரும் இச்சூழலில் பெண்ணியச் சிந்தனைகள் அடங்கிய படைப்புகளும் வரத் தொடங்கியுள்ளன. கல்வி, சிந்தனை, பொருளாதாரம், வாழ்க்கைத்தரம், பழக்க வழக்கங்கள், பெருகி வரும் தகவல் சாதனங்கள் முதலிய காரணங்களால் பெண்ணியச் சிந்தனைகளும் மாற்றம் கண்டுள்ளன. கடந்த காலங்களைக் காட்டிலும் இன்றைய சூழலில் பெண் கல்வி முக்கியத்துவம் பெற்று மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. பண்டைக் காலம் முதல் பெண்களைக் குடும்பத்திற்கேற்றவள் என்று தமிழினம் கூறுகிறது. ஆண்கள் உழைத்துச் சம்பாதிப்பதும் பெண்கள் இல்லக் கடமைகளை ஆற்றுவதுமே இதற்குக் காரணமாகும். காலத்திற்கேற்ப சிந்தனை மாற்றம் ஏற்பட்டுப் பெண்களும் காலத்திற்குக் காலம் தங்களை மாற்றிக்கொண்டு வாழவேண்டும். பெண்கள் விடுதலை அடைந்ததாகச் சமுதாயம் நினைக்கிறது. ஆனால் இன்னும் பெண்ணினம் இருட்டில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஒருவேளை வளர்ந்த நாடுகளில் வேண்டுமானால் பெண்கள் நிலை உயர்ந்திருக்கலாம். அதுவும் நூறு விழுக்காடு உயர்ந்திருக்கும் எனக் கூற முடியாது.

பெண்கள் வீட்டின், நாட்டின் கண்களாவர். எனவே அவர்களை அடிமைகளாக எண்ணாது அவர்களுக்கு உரிமை தர வேண்டும். பெண்ணடிமை கூடாது எனச் சொன்னால் மட்டும் போதாது, அதைச் செயலிலும் காட்ட வேண்டும். பால்ய விவாகங்களைச் செய்யக்கூடாது எனச் சொல்வதை விடுத்துச் செயலில் காட்டவேண்டும். கலப்புத் திருமணங்கள் மூலம் சாதி, மத பேதங்களை மக்கள் மனதிலிருந்து அகற்ற முடியும். விதவைகளின் மறுமணத்தை ஆதரிக்க வேண்டும். பெண்களுக்குச் சொத்துரிமை வழங்க வேண்டும். ஆணும் பெண்ணும் எச்செயலையும் செய்யலாம் என்ற நிலை சமுதா

யத்தில் நிலவ வேண்டும்.

*பெண்களை யடிமையாக்கிப் பிறவியில் இழிவு செய்யும்*
*வன்கொடுமை நீங்கும்வரை-தமிழா வாழ்வுயரப் போவதில்லை*

*கல்விச் சுதந்திரங்கள் கைத்தொழில் வளர்ச்சியெல்லாம்*
*சொல்லிக் கொடுக்கும்வரை-தமிழா சுகம் வரப் போவதில்லை*

*பொம்மைக் கல்யாணம் செய்து பெண்களை விதவையாக்கும்*
*திண்மைதனை நீக்கும் வரை-தமிழா ஜெயம் வரப் போவதில்லை*
*கலப்புத் திருமணங்கள் காதலுடன் செய்து பல*
*வளப்பங்கள் பெருகும் வரை-தமிழா வண்மை வரப் போவதில்லை*

*கைம்பெண் துயர்கள் நீக்கிக் கல்யாணம் செய்து வைத்து*
*மெய்மகிழ செய்யும் வரை-தமிழா மேன்மையுறப் போவதில்லை*

*பெண்களுக்குச் சொத்துரிமை பெரிதும் கொடுத்தவற்கு*
*நன்மணம் செய்யும் வரை-தமிழா நன்மை வரப் போவதில்லை*

*ஆண் பெண் பேதமின்றி ஆர்வம் கொண்டெத் தொழிலும்*
*தான் செய்து காட்டும் வரை-தமிழா சமம் வரப் போவதில்லை*
*வி.பி.பி. லிங்கம், தமிழ் முரசு, 02-11-1935*

என பெண்களுக்கு உரிமை கொடுக்க வேண்டியதைக் குறித்து கவிஞர் லிங்கம் பாடியுள்ளார். சிங்கப்பூர்ப் பெண்களுக்குக் குரல் கொடுத்த கவிஞராக இவரைக் கருதலாம். இவ்வாறு பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள கவிதையை வெளியிட்டுள்ளதன் மூலம் தமிழ் முரசின் சமூக அக்கறை தெரிகிறது.

பெண் விடுதலை குறித்த விழிப்புணர்ச்சிக் கவிதை தமிழ்க் கவிதையுலகில் உள்ளதைப் போல தமிழ் முரசுக் கவிதைகளிலும் உள்ளன. பெண்கள் தங்களுக்கான உரிமைகளைக் கேட்டுப்பெறும் அளவிற்கு வளர்ந்துள்ளனர். பேசா மடந்தைகளாக இருந்த காலம் மலையேறிவிட்டது. குடும்பத்தைக் காக்கும் பொறுப்பு மட்டும் எங்களுக்குரியதல்ல. நாங்கள் பிள்ளை பெறும் இயந்திரங்களா எனப் பல கேள்விகளைக் கேட்கும் அளவிற்குப் பெண்களிடம் பெண்ணியச் சிந்தனைகள் வளர்ந்துள்ளன. இத்தகைய கருத்துகளையும் கவிஞர்கள் படைத்துள்ளதைத் தமிழ் முரசு கவிதைகள் காட்டுகின்றன.

*உள்ளத்தின் உட்புறத்தே குமுறல் தாக்க*
*ஊக்கமுற்ற மாந்தரெலாம் உதிரம் சிந்த*
*உண்மையதாம் செந்தமிழர் தொன்மை எண்ணி*
*உரிமையுடன் எழுந்துவிட்டார் உரிமை வேண்டி*
*தாதி என்ற வார்த்தையினை வாழவிடோம்*
*வீம்புபேசித் தாழ்த்துவோரை வீழ்த்திவிடுவோம்*
*விடுதலையே எமது நோக்கம் விடோமென்றே*
*வீறிட்டெழுந்துவிட்டார் வியப்பில்லை*

*ஆணுக்குப் பெண்ணடிமையான நாடு*
*அந்த நாடு எந்த நாளும் முன்னேறாது*
*பேணும் பராசக்தி தெய்வமென்பீர்*
*நாணமிலை நுங்கள் பெண்கள் முகத்தை நோக்கின்*
*காணும் பிறநாட்டுப் பெண்களெல்லாம்*
*கல்விகற்று கஷ்டமின்றி கலையில் தேற*
*வாணாளை வீணாளாய்க் கழித்து வாடி*
*பூணாம் பூணமட்டும் சிலையா நாங்கள்?*

*பிள்ளைகளைப் புலவர்களாய் வீரர்களாய்*
*பெற்றெடுத்து வளர்த்துவிட்டுப் பேதைகளாய்*
*தொல்லைபல எல்லையின்றி யாமடைய*
*கல்லைக்காட்டி கதைத்திடுவீர் கல்லோ நெஞ்சம்*
*சொற்றிறம்பாள் தொழுதெழுவாள் மனைவி என்று*
*தற்குறித்தனம் வளர்க்கும் தமிழா நீதான்*
*பெற்றியுடன் வாழ உன் தாய் பிள்ளை பெற*
*சிற்றின்ப யந்திரமோ நாங்களெல்லாம்?*

*காலத்திற்கேற்றவாறு கருத்தை மாற்ற ஊன்று*
*கோலோத்த எம்மினத்திற்கு உரிமை தேவை*
*ஞாலத்தில் பெண்கள் வாழ்வே நலம்பயக்கும்*
*ஞாயமிது வேயாகும் நன்னெறி யாம்*
*கனிவு இல்லை என்பாரவர் களிப்பு எய்தி*
*கஷ்டமின்றி வாழ்வதற்கு இடமேயில்லை*
*தணிவு இல்லை எங்கள் உள்ளக் கொதிப்பினிலே*
*பணிய மாட்டோம் உரிமை வேண்டும்*
*இராசு இராமலிங்கம், தமிழ் முரசு, 28-12-1951*

என இராமலிங்கம் பெண்களுக்குக் குரல்கொடுத்துள்ளார். பண்டைக் காலத்தில் ஆணும் பெண்ணும் சமமாக வாழ்ந்ததை இலக்கியங்கள் காட்டுகின்றன. இடைக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் பெண் அடிமை தமிழ்ச் சமுதாயத்தை ஆட்டிப் படைக்கத் தொடங்கியது. இதில் கடல் கடந்த தமிழர்களும் சிக்கி அல்லல் உறுகின்றனர். எனவே பெண்களுக்குரிய உரிமையைச் சமுதாயம் வழங்க வேண்டும், அவர்களும் மதிப்புடன் வாழவேண்டும் எனப் பெண்களின் உரிமைக்குக் கவிஞர் குரல் கொடுத்து உள்ளார். இதனால் சிங்கப்பூர்ப் பெண்கள் தாம் பெற்ற உரிமைகளை முறையாகப் பயன்படுத்த வேண்டும். அதற்காக ஆண்களுக்குச் சமமாக எல்லாச் செயல்களையும் செய்யலாமா என யோசிக்கவும் வேண்டும்.

ஒருமித்து காதலித்த காதலர்கள் திருமணம் புரிந்து கொள்வோம் என நினைத்து இன்பத்தில் மூழ்கித் திளைத்தனர். இந்நேரத்தில் காதலியைக் காதலன் பலவாறு வருணித்துள்ளான். காதலில் உறுதியாக இருந்த காரணத்தால் இருவரும் உணர்ச்சி வயப்பட்டு கலவியில் ஒன்றாய் கலந்தனர். பின் ஏதோ காரணத்தால் காதலியை ஏமாற்றி விட்டு காதலன் சென்று விட்டான். இச்சூழலில் அப்பெண் அடையும் மனவருத்தங்களைக் கவிஞர்கள் பாடி பிற பெண்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அறிவுரை கூறுகின்றனர்.

*மாலை முழுதும் காத்திருந்தேன்-என்*
*மன்னவன் வரவில்லை-தினம்*
*வேளை தோறும் காத்திருந்தேன்-என்*
*தென்னவன் வரவில்லை*

*பிறையும் நாணும் நுதலென்றான்-அந்தப்*
*பேச்சில் மயங்கிவிட்டேன்-இந்தத்*

***தரையும் நானும் குணமென்றான்-அந்த***
***தவிப்பில் மயங்கிவிட்டேன்***

***கடலலை நாணும் குழலென்றான்-அந்தக்***
***களிப்பில் மயங்கிவிட்டேன்-வான்***
***சுடரொளி நாணும் குழலென்றான்-அந்தக்***
***சொகுசில் மயங்கிவிட்டேன்***

***மழலையும் நாணும் மொழியென்றான் அந்த***
***மாயையில் மயங்கிவிட்டேன்-இசைக்***
***குழலும் நாணும் மொழியென்றான் அந்த***
***குளுமையில் மயங்கிவிட்டேன்***
***நாணம் நாணும் என்றவனே-என்***
***கற்பையும் நாணச் செய்துவிட்டான்-நான்***
***ஏனோ இன்னும் வாழ்கின்றேன்-என்***
***இதயச் சுமையும் தீராதோ***

***என்னை நன்றாய் அறிந்துவிட்டால்-என்***
***இதயத்தை அளந்துவிட்டால்-அந்த***
***மன்னனை நானும் அறியவில்லை-அய்யோ***
***மாற அவமானம்! செய்தாரே***

*வெ. இளங்கோ, தமிழ் முரசு, 03-11-1968*

எனக் கவிஞர் பெண்மையின் வேதனையைச் சுட்டிக்காட்டி இன்றைய பெண்கள் கவனமாக இருக்க வேண்டும் என்கிறார். தமிழ்ப் பண்பாட்டில் கற்பு முக்கியமாகும். ஆனால் இன்றைய நிலையில் அதைப்பற்றி பெண்கள் அதிகம் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. மேலைநாட்டுத் தாக்கம், பெண்ணியம், மக்களின் சிந்தனைப் போக்கு, எதையும் இயல்பாக எடுத்துக் கொள்ளுதல் என காரணங்கள் பலவற்றைச் சொன்னாலும் கற்பைக் காத்தல் கடமை என்ற பண்பாட்டை ஒவ்வொரு பெண்ணும் மதித்துப் போற்ற வேண்டும். இக்காலத்தில் பெண்கள் எப்படி வாழவேண்டும் எனவும் எப்படி வாழக் கூடாது எனவும் பாடல்கள் பலவற்றைச் சிங்கப்பூர்க் கவிஞர்கள் படைத்துள்ளனர்.

***படுக்கையறைப் பதுமையாகவும்***
***அடுப்பங்கரைக் கன்னியாகவும்***
***இருந்தது போதும்***
***பெண்ணினம் படும் / வேதனைகளுக்கு***
***வெளிச்சம் தேடிப் புறப்படு***

*மும்தாஜ், தமிழ் முரசு, 08-09-1991*

என பெண்கள் வாழவேண்டிய விதத்தை மும்தாஜ் காட்டியுள்ளார். ஒரு பெண் திருமணம் புரிந்து குழந்தைகளைப் பெற்றெடுத்து வாழ்வதே வாழ்க்கை எனப் பண்டைக் காலம் முதல் சொல்லப்பட்டு வருகிறது. இவைகளைப் பெண்ணினம் அறிந்தும் அறியாதது போல இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. வாழ்வில் சாதிக்க முடியும் என்பதைக் காட்ட வேண்டும். ஆகவே பெண்ணினம் வாழ்வில் உயர்ந்து சாதனைகள் புரிய வேண்டும் எனக் கவிஞர்கள் நினைப்பதில் தவறில்லை.

சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதைகளில் பெண்கல்வி குறித்த சிந்தனைகள் மிகக் குறைவாகவே உள்ளன. சிங்கப்பூரில் இரு பாலர்க்கும் கல்வி வழங்கப்படுகிறது. மேலும் தொடக்கநிலை ஆறாம் வகுப்பு வரையில் சிங்கப்பூரிலுள்ள குழந்தைகள் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டும் என்ற அரசாணை உள்ளது. அதனால் சிங்கப்பூரில் பெண்கல்வி குறித்த பாடல்கள் குறைவாக உள்ளதெனக் கருதலாம். பெண்கல்வி குறித்த பாடல்கள் சிங்கப்பூருக்குப் பொருந்தவில்லை என்றால் பிற நாடுகளில் வாழும் தமிழர்களுக்குப் பொருந்துவதால் கவிஞனின் இனப்பற்றையும் பெண்கல்வி மீது கொண்டுள்ள பற்றையும் அறியமுடிகிறது.

***அச்சமின்றி இரவு பகல் ஆழ்ந்துபடி கண்ணே***
***துச்சமின்றி துரிதமுடன் தூள்பரப்பு பெண்ணே***
***காலநேரம் உமக்கில்லை கல்வியொன்றே குறிக்கோள்***
***கோலமுழுதும் உம்புகழை குவித்திடுவாய் பெண்ணே***

*இராமசாமி, தமிழ் முரசு, 23-01-1993*

என்று இராமசாமி பாடியுள்ளார். சிங்கப்பூரில் இன்று பெண்கள் அதிகளவில் படித்து நல்ல வேலைகளில் அமர்ந்துள்ளனர். பிற இனப் பெண்களைப் போல தமிழ்ப் பெண்கள் எல்லா நிலைகளிலும் வளர்ந்துள்ளார்களா என்பது கேள்விக் குறியாக உள்ளது.


உலகமயமாகி வரும் சூழலில் பெண்கள் இன்னும் வெளிச்சத்திற்கு வராமல் இருட்டில் இருக்கின்றனர். ஆண்களின் அடக்குமுறை, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்காமை, அறியாமை, வாழ்வில் நோக்கமின்மை, அலட்சியப்போக்கு, வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வி முதலியன இதற்குரிய காரணங்களாகும். சில நேரங்களில் வளர்ப்பு முறையும் காரணமாகிறது. சமுதாயம் என்ன நினைக்குமோ என்ற சமுதாய அச்சமும் மகளிர் முன்னேற்றத்திற்குத் தடையாகிறது. வாழ்வின் சிறுதோல்விகளைக் கண்டு துவளாமல் வாழ்வின் வெற்றிப்படிகளை மிதிக்கவேண்டும் எனக் கவிஞர்கள் பெண்களுக்கு விழுப்புணர்வு ஊட்டுகின்றனர்.

***நீ சீறியெழுந்தால் / சீனச் சுவரும் சற்றுச் சிறிதுதான்***
***நீ விழித்துக் கொள்ளாதவரை / விடியலும்கூட இருட்டுதான்***
***லட்சங்கள் தேவையில்லை / லட்சியம் ஒன்றே போதும்***
***புயலெனப் புறப்படு பெண்ணே***

*புவனேஸ்வரி மகேஷ்வரன், தமிழ் முரசு, 28-11-2010*

எனக் கவிஞர் புவனேஸ்வரி மகேஷ்வரன், பெண்கள் வீட்டிலே அடங்கிக் கிடக்காமல் குறிக்கோளுடன் இயங்கவேண்டியதைக் காட்டியுள்ளார். பெண்கள் வளர்ந்த பிறகும் இத்தகவல்களைக் கூறவேண்டியது அவசியமாகிறது. சமுதாய மாற்றம் பெண்களின் மாற்றத்திலும் ஒரு பெரிய பங்கு வகிக்கிறதென்பதைக் கூறவேண்டியதில்லை.

சிங்கப்பூரில் வாழும் பல இன மக்களில் தமிழர்களும் அடங்குவர். இவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் முதல் வாழ்ந்து வருகின்றனர். இங்கு வாழும் பிற இனப் பெண்களைப் போலத் தமிழ்ப் பெண்களும் வளர்ந்துள்ளனர். ஆனால் இவர்களின் வளர்ச்சி அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் மரபார்ந்த பண்புகளைப் போற்றி வாழவேண்டும், மரபுகளைத் தங்கள் பிள்ளைகளிடம் வளர்க்க வேண்டும் எனக் கவிஞர்கள் விரும்புவதைத் தமிழ் முரசுக் கவிதைகள் காட்டுகின்றன.




kotti.thirumuruganadam@thaiveedu.com

# மார்க்சியமும் சமூக விஞ்ஞான முறையியலும்

ஆங்கில மூலம் : ஜயதேவ உயன்கொட

தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்



மார்க்சியம் சமூகவிடுதலை அரசியலை இலக்காகக் கொண்ட தத்துவமாகும். இக்காரணத்தினால், மார்க்சிய முறையியல் மதிப்பீடுகள் சாராத விஞ்ஞானம் (Value-Neutral Science) எனக் கருதப்படுவதில்லை. நேர்க்காட்சி வாதம் இதற்கு நேர்மாறானது. அது மதிப்பீடுகள் சாராத விஞ்ஞானம் என்று கருதப்படுகிறது. மார்க்சியத்திற்கும் நேர்க்காட்சி வாதத்திற்கும் இடையிலான இந்த வேறுபாடு முக்கியமானது. தத்துவம் பற்றி மார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்: தத்துவ வாதிகள் இதுவரை காலமும் உலகத்தைப் பற்றி விளக்கிக் கூறிவந்தனர். ஆனால் எமது வேலை உலகை மாற்றுவதாகும். 1845-ல் மார்க்ஸ் எழுதிய 'பெயர்பாக் குறித்த கருத்துரையில்' குறிப்பிடப்பட்ட இக்கூற்றை மார்க்சிய சமூகக் கோட்பாட்டுக்கும் பிரயோகிக்கலாம், 'இதுவரை காலமும் சமூகக் கோட்பாடு (Social Theory) சமூகத்தை விபரித்துக் கூறிவந்தது. ஆனால் சமூகக் கோட்பாட்டின் வேலை, சமூகத்தை மாற்றுவதாகும்' என நாம் மார்க்ஸின் கூற்றை சமூகக் கோட்பாட்டிற்கு ஏற்றதாக திருத்தம் செய்து கூறலாம். மார்க்சிய சமூகக் கோட்பாடு தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிக்கான அரசியல் நடவடிக்கைக்குரிய வழிகாட்டியாக அமைகிறது. ஆகையால் மார்க்சியம் சமூக விடுதலைக்கான அரசியல் (Social Emancipatory Politics) கோட்பாடு என்ற வகையில் நேர்க்காட்சி வாதத்தில் இருந்து வேறுபடுகிறது.

## புறநிலை யதார்த்தம்:

புறநிலை யதார்த்தமான உலகு மனித மனத்தில் இருந்து சுதந்திரமான புறநிலை இருப்பை உடையது என்பதில் மார்க்சியத்திற்கும் நேர்க்காட்சி வாதத்திற்கும் ஒத்த கருத்து உள்ளது. புறநிலை யதார்த்தம், பொருண்மை சார்ந்தது, புறத்தே இருப்பது, அதன் இருப்பு உண்மையானது (Material, Objective and Real) என நேர்க்காட்சி வாதம் கூறுகிறது. அத்தோடு புறநிலை மனித உணர்வுநிலையில் (Human Consciousness) இருந்து வேறாகச் சுதந்திரமாக உள்ளது எனவும் நேர்க்காட்சி வாதம் கூறுகிறது. மார்க்சியமும் இவ்விடயத்தில் ஒத்த கருத்துடையது. நேர்க்காட்சிவாதம், மார்க்சியம் என்ற இரண்டிற்கிடையிலுமான ஒற்றுமை இந்த அளவோடு முடிவடைகிறது. அறிபவர் (Subject), அறிபொருள் (Object) என்ற இரண்டுக்கும் இடையிலான தொடர்பு அறிவாராச்சியியல் சார்ந்த பிரச்சினையாகும். இவ்விடயத்தில் மார்க்சியமும் நேர்க்காட்சிவாதமும் முற்றிலும் மாறுபட்ட கருத்துடையன. மார்க்சியம் அறிபவர் அறிபொருள் என்ற இரண்டையும் ஒன்றில் இருந்து மற்றது வேறுபட்டதாக நோக்குவதில்லை. அறிபவர் - அறியப்படுபொருள் என்ற இரண்டும் இயங்கியல் முறையில் பிணைப்புடையவை, தொடர்புபட்டவை (Dialectically Inter-connected) எனக் கருதுகிறது. நேர்க்காட்சிவாத அறிவாராய்ச்சியல் (Positivist Epistemology) அறிபவர் - அறிபொருள் இரண்டும் வேறுபட்டவை என்றும், அவையிரண்டிற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் கூறுவது. நேர்க்காட்சி வாதத்தின் இக்கருத்தை மார்க்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. மனித மனத்திற்குப் புறத்தே சுதந்திரமாகப் புற உலகம் இருப்புக் கொண்டுள்ளது என மார்க்ஸ் குறிப்பிட்டார் என்பது உண்மையே. ஆயினும் அறிபவர் (Subject) ஆகிய மனிதரும் அறிபொருள் (Object) ஆகிய புற உலகும் பரஸ்பரம் தொடர்புகொண்டு எதிர்வினையாற்றுவதை எடுத்துக் காட்டினார். சமூகத்தில் வாழும் மனிதர் புறஉலகை மாற்றும் செயற்பாட்டில் ஈடுபடும் செயலியாக (Active Agency) விளங்குவதால் புறஉலகம் மனிதச் செயல்களால் மாற்ற முறுகிறது. உற்பத்தி முறைகள் (Modes of Production), சமூகக் கட்டமைப்புகள் (Social Structures), சமூகத்தில் உற்பத்தியின் போது மனிதர்களிடையே எழும் உறவுகள் என்பன இப்புற உலகத்தின் பகுதியாக உள்ளன. இப்புற நிலையின் மீது மனிதரின் செயல்கள் மூலம் ஏற்படும் மாற்றம் சமூக மாற்றம் (Social Change) ஆகும். மனிதர்களின் செயல்கள் மாற்றங்களை நிகழ்த்தும் சக்தியாக அமைகின்றன. ஆயினும், மனிதர் சுயாதீனம் (Autonomy) உடையவர்கள் அல்லர். லூயி பொனபார்ட்டின் பதினெட்டாவது புருமயர் (1852) (The Eighteenth Brumaire of Louis Bonaparte) என்னும் மார்க்ஸின் நூலில் இருந்து புகழ்பெற்ற கூற்று ஒன்றை இவ்விடத்து மேற்கோளாகத் தருதல் பொருத்தமானது.

*'Men make their own history, but they do not make it just as they please; they do not make it under circumstances chosen by themselves, but under circumstances directly encountered, given and transmitted from the past'. (MARX 1977:96) இதன் பொருள் வருமாறு: 'மனிர்களே வரலாற்றைப் படைக்கிறார்கள் ஆயினும் அவர்கள் தமது சுயசித்தப்படி செயற்படுகிறார்கள் என்று கூறமுடியாது. மனிதர் செயற்படும் வரலாற்றுச் சூழ்நிலைகள் அவர்களின் தெரிவும் அன்று. அவை கடந்த காலத்தின் தொடர்ச்சியாக அமைவன. அச்சூழ்நிலைகள் புறநிலையானவை. அப்புறநிலை மனிதர்களைக் கட்டுப்படுத்துகின்றது.'*

மார்க்சின் மேற்குறிப்பிட்ட கூற்று புறநிலை, மனிதச்சித்தம் அல்லது அகநிலை என்னும் இரண்டினதும் இயங்கியல் தொடர்பை எடுத்துக் காட்டுகிறது. முக்கியமாக மனிதர் இவ்

வியங்கியலின் இணைப்புச் செயலியாக விளங்குவதை மார்க்சியம் எடுத்துக்காட்டுகிறது.

மேற்குறித்த மனிதரின் செயலி என்னும் வகிபாகம் (Human Agency) மார்க்சியப் பொருள் முதல்வாத சமூகக் கோட்பாட்டின் (Materialist Social Theory) அடிப்படையான கருத்தாக்கமாக விளங்குவதைக் காணலாம். இவ்வடிப்படைக் கருத்து மார்க்சின் மிகமுக்கியமான நூலான 'மூலதனம்' என்றும் ஆக்கத்தில் பகுப்பாய்வுக்குரிய கருத்தாக்கமாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது. டானியல் லிட்டில் (Daniel Little) என்னும் அறிஞர் எழுதிய 'மார்க்சியமும் ஆய்வுமுறையும்' (Marxism and Method) என்னும் கட்டுரையில் மார்க்ஸ் மூலதனத்தில் கையாண்ட முறையியல் பற்றிச் சில நுட்பமான கருத்துக்களைக் கூறியுள்ளார். லிட்டில் அவர்களின் கருத்துப்படி மார்க்சின் விஞ்ஞான நோக்கில் மூன்று இலக்குகள் உள்ளடங்கியிருந்தன.

- சந்தைமுறையின் அடிப்படையில் அமைந்த (Market Based) தனிச்சொத்துடமை நிறுவனத்தின் பண்புகளை புறநிலை அவதானிப்பு என்றும் அனுபவத் தரவுகளின்படி கட்டமைப்பது.
- சந்தைமுறையின் அடிப்படையில் அமைந்த முதலாளித்துவம் தனிச்சொத்துடமை சார்ந்த நிறுவனமாக இருப்பதன் பின்விளைவுகளை எடுத்துக்காட்டுதல்.
- முதலாளித்து சமூக பொருளாதார முறை (Capitalist Socio-Economic System) வெவ்வேறு சமூகங்களில் வளர்ச்சியுற்ற வரலாற்றுச் செயல்முறையை (Historical Process) எடுத்துக் காட்டுதல்.

மேற்குறித்த மூன்று இலக்குகளை முன்வைத்து ஆராய்ச்சி செய்த மார்க்சின் மூலதனம் என்னும் பெரும்படைப்பு, கீழ்க்குறிப்பிட்ட விடயங்கள் குறித்த ஏராளமான தகவல்களைக் கொண்டதாய் விளங்குகின்றது என லிட்டில் குறிப்பிட்டார்.

- பல நாடுகளில் முதலாளித்துவம் வளர்ச்சியுற்றமை பற்றிய வரலாற்று விபரிப்புகள்.
- முதலாளித்துவ நிறுவனங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றிய விபரிப்புகள்.
- முதலாளித்துவ நிறுவனங்களின் செயற்படுகள் பற்றிய ஏராளமான நுண்நிலைச் சமூகத் தரவுகள் (Micro -Social Information).
- முதலாளித்துவ நிறுவனர்கள் எவ்விதம் செயற்படுகின்றன என்ற விபரங்கள்.
- கணிதமுறை அரசியல் பொருளாதார (Mathematical Political Economy) விளக்கங்கள்.

மார்க்ஸ் எழுதிய மூலதனம் நூலிலும் ஏனைய அரசியல் எழுத்துக்களிலும் வரலாற்று விளக்கங்களும், கோட்பாட்டு வரைவுகளும் (Theoretical Formulation), வரலாறும், சமூக மாற்றங்களும் எதிர்காலத்தில் எத்திசையில் பயணிக்கவுள்ளன என்பன பற்றிய அவரது கருத்துக்களும் காணப்படுகின்றன. இதனைவிட மார்க்ஸ் (தமக்கு முன்னரும், தமது சமகாலத்திலும் வாழ்ந்த) பிறகோட்பாட்டாளர்களுடைய கோட்பாடுகளையும் விமர்சன ரீதியிலான பகுப்பாய்வுக்கு உட்படுத்தினார். இக்காரணங்களால் அவரின் மூலதனம் நூலின் சாராம்சம் இதுதான், முதலாளித்துவத்தினைப் பற்றிய மார்க்ஸின் கருத்துக்கள் இவைதாம் என எளிமைப்படுத்திக் கூறிவிடமுடியாது என லிட்டில் குறிப்பிடுகிறார்.

*ஆய்வாளர் டானியல் லிட்டில் குறிப்பிடும் இன்னொரு முக்கிய அவதானிப்பையும் கவனித்தல் வேண்டும். மார்க்ஸ் தனது ஆய்வுக்குரிய விடயங்களை (Objects of Inquiry) எப்பொழுதுமே அவற்றின் பொருண்மிய அடித்தளத்துடன் (Material Foundations) தொடர்புபடுத்தி ஆராய்ந்தார். இது அவரது தனித்துவம் மிக்க ஆய்வுப்பாணி எனலாம்.* குறிப்பாகச் சில உதாரணங்களைச் சுட்டிக் காட்டலாம். உற்பத்தி உறவுகள், உற்பத்தி சக்திகள், சமூக உருவாக்கங்கள், அரசியல் வடிவங்கள், கருத்தியல்கள் என்பனவற்றை அவர் அவற்றின் பொருண்மிய அடித்தளத்துடன் தொடர்புபடுத்திக் காட்டுவதோடு அவற்றின் தோற்றம், இருப்பு, நிலைமாற்றம் என்பனவற்றை பொருண்மிய அடித்தளத்தோடு தொடர்புபடுத்தி விளக்கம் கொடுத்தார். மேலும் அவரது ஆய்வுகள் எப்போதுமே அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள சமூக வர்க்கங்களின் விடுதலை என்ற நோக்குநிலை நின்று எழுதப்பட்டன. சுருங்கக் கூறின் அவரது ஆய்வு மதிப்பீடு சார்ந்ததாகவும், சமூக நடைமுறைச் செயற்பாடு சார்ந்ததாகவும் இருந்தது. (In short, it is both Value-Oriented and Praxis oriented.)

மார்க்சின் முறையியல் அவரது சமூக உள்ளதன் இயலுடன் தொடர்புடையது என்றும் ('Marx's Methodology is Related to his 'Social Ontology') லிட்டில் குறிப்பிடுகிறார். அவரது இக்கூற்று உற்று நோக்கத்தக்கது. மார்க்சின் ஆராய்ச்சி முறையியல் வெறும் அனுபவவாதம் (Empiricism) அன்று. அனுபவவாதம் மனிதரின் புலன்களுக்குத் தெரியும் புறநிலையை விபரிப்பது. ஆனால், மார்க்ஸ் அனுபவத்திற்கு அப்பால் சென்று கோட்பாட்டின் (Theory) உதவியுடன் புலன்களுக்கு அகப்படாது இருக்கும் யதார்த்தத்தை எடுத்துக் காட்டினார். இதனால் அவரது ஆராய்ச்சி முறையியல் இன்றைய காலத்து யதார்த்த அனுபவாதம் (Realist Empiricism) என்பதற்கு ஒப்பானது என்றும் லிட்டில் குறிப்பிடுகிறார். லிட்டிலின் கருத்தை ஜயதேவ உயன்கொட பின்வருமாறு விளக்கிக் கூறுகிறார்.

*'The Basic idea of Realist Empiricism is as follows: Scientific knowledge can make statements about structures that are not observable. Such statements come closer to the Truth. Hypotheses about them can be examined by means of observation, experimentation, and Historical inquiry. Marx used empirical method and in-depth theoretical reasoning. Marx's Empiricism was, however not the Narrow empiricism that was developed in positivist social sciences as well as logical positivism of Vienna circle'.* (பக் 251-252).

உயன்கொட அவர்களின் விளக்கத்தை தமிழில் கூறுவோம். *'யதார்த்த அனுபவவாதம் என்பதன் அடிப்படைக் கருத்தை பின்வருமாறு விளக்கலாம். புலன்களால் நேரடியாக அவதானிக்க முடியாத கட்டமைப்புகள் பற்றிய கூற்றுக்களை விஞ்ஞான அறிவால் எடுத்துக் கூறமுடியும். அவ்வாறான கூற்றுகள் உண்மைக்குக் கிட்டியனவாக அமையமுடியும். அவை பற்றிய கருத்தேற்றங்கள் (Hypotheses) அவதானத்தால் (Observation) பரிசீலனை செய்யப்பட முடியும். பரிசோதனை (Experimentation), வரலாற்று ஆராய்வு என்பன மூலமும் அவற்றை நிறுவமுடியும். மார்க்ஸ் அனுபவவாதமுறை, கோட்பாட்டு முறைப்பகுப்பாய்வு என்ற இரண்டையும் கையாண்டார். ஆனால் அவரின் அனுபவவாதம் நேர்க்காட்சிவாத சமூக விஞ்ஞானங்களினதும், வியன்னா வட்டத்தினரதும் தருக்கவி*

*யல் நேர்க்காட்சிவாதமும் போன்று குறுகிய நோக்குடையது அன்று'.*

மார்க்சின் அனுபவவாதம் நேர்க்காட்சிவாதத்தில் இருந்து வேறுபட்டது. அது குறுகலான அனுபவவாதம் (Narrow Empiricism) அன்று எனக் கூறும் உயன்கொட, மார்க்சியத்தின் சமூக உள்ளதன் இயல் (Social Ontology) வேறுபட்டது என்ற டானியல் லிட்டில் அவர்களின் கருத்தை விளக்கிக் கூறுகிறார். 'மார்க்சின் அனுபவவாதம் வரலாறு, சமூகவியல், அரசியல், பொருளாதாரம் ஆகியன பற்றிய விவரணை மூலம் செழுமை பெற்றது. அவரது ஆய்வு முறையியலும், விவரணையும் கருத்தேற்றங்களை முன்வைத்து அவற்றைப் பரிசோதித்தல் (Testing), சரிபார்த்தல் (Verifying) என்றும் முறையில் அமையவில்லை. அவரது அனுபவாத விசாரணை கோட்பாட்டின் துணையுடன் செய்யப்பட்டது. மார்க்சின் எழுத்துகளை படித்துப் பார்த்தால் அவற்றில் கோட்பாடு, புறநிலை பற்றிய தரவுகள் என்ற இரண்டிற்கும் இடையிலான உரையாடல் இடம் பெறுவதைக் காணலாம் (In Marx's Writings, there is always a dialogue between theory and facts.)

மார்க்சின் சமூக உள்ளதன் இயல் (Social ontology) சமூக உலகம் பற்றிய விமர்சன நோக்கிலான மதிப்பீடுகளால் வளம் பெற்றது. சமூக உலகத்தின் இயக்கத்தில் ஒரு தர்க்கம் உள்ளது என மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். சமூகக் கட்டமைப்புகளை காரணகாரியத் தர்க்க முறையில் (Logic of Casuality) விளக்கலாம் என மார்க்ஸ் கருதினார். மனிதர்கள் தமது தலையீடுகள் அல்லது சமூக நடவடிக்கைகள் மூலம் சமூகக் கட்டமைப்புகளை உருவாக்குகிறார்கள். பின்னர் அக்கட்டமைப்புகளை மாற்றவும் செய்கிறார்கள். நேர்க்காட்சிவாத சமூகவியல் கூறுவதுபோல் அருவமான சமூகம் (Abstract Society) என ஒன்று இல்லை. யதார்த்தத்தில் நாம் காண்பவை 'சமூக உருவாக்கங்கள்' (Social Formations) ஆகும். இச்சமூக உருவாக்கங்கள் குறிப்பிட்ட சில வகையான உற்பத்தி முறைகளின்படி (Modes of Produetion) உருவாக்கம் பெறுவன. உற்பத்திமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியனவாக உள்ளன.

- உற்பத்திச் சக்திகள் (Forces of Production).
- உற்பத்தி உறவுகள் (Relations of Production).
- வர்க்க உறவுகள் (Class Relations).
- அரசியல் - சட்ட நிறுவனங்கள் (Politicall-Legal Institutions).

## மார்க்சியமும் நேர்க்காட்சி வாதமும்:


மார்க்சிய முறையியல் பற்றிய முக்கியமான விடயங்களை மேலே விளக்கிக் கூறினோம். அடுத்து, மார்க்சிய சமூகவிஞ்ஞானத்தின் முறையியல், நேர்க்காட்சி வாத சமூக விஞ்ஞான முறையியலில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விளக்கிக் கூறுவோம். 20-ம் நூற்றாண்டு மார்க்சிஸ்டுகள் பொருளியல், அரசியல், வரலாறு, போன்ற சமூக விஞ்ஞானங்களின் ஆய்வு முறையியலை, நேர்க்காட்சிவாத சமூக விஞ்ஞானங்களில் இருந்து தெளிவான வேறுபாடு உடையதாக வளர்த்துள்ளனர். இவ்வகையில் மார்க்சியமும் நேர்க்காட்சிவாதமும் கோட்பாடு, முறையியல் என்ற இரு விடயங்களிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட 'மாதிரிகளாக' (Paradigms) விளங்குகின்றன. அதாவது இரண்டும் வெவ்வேறுபட்ட அனுமானங்களையுடைய 'பரடைம்'களாக உள்ளன. இங்கே 'மாதிரிகள்' என்ற தமிழ்ச்சொல் தோமஸ் கூன் (Thomas Kuhn) என்பவர் முன்வைத்த 'பரடைம்கள்' என்ற அர்த்தத்தில் உபயோகிக்கப்படுகிறது. இவ்விரு மாதிரிகளுக்கும் இடையில் உரையாடலுக்கான கோட்பாட்டுப் பொதுமொழியும், வகைமைகளும் (Theoretically Shared Language and Categories) கிடையாது. அதனைவிட மார்க்சியமும், நேர்க்காட்சிவாதமும் ஒன்றிற்கு ஒன்று முரண்பாடுடைய அரசியல் நிகழ்ச்சி நிரல்களை (Political Agenda) உடையனவாய்க் காணப்படுகின்றன.

அனுபவவாத/ நேர்க்காட்சிவாத சமூக விஞ்ஞானத்திற்கு எதிராக மார்க்சியம் பின்வரும் விமர்சனத்தை முன்வைக்கிறது.

- புலக்காட்சி (Sensory Perception) அவதானிப்பு, பரிசோதனை என்பன மட்டுமே உண்மையான நம்பத்தகுந்த (Reliable) அறிவைப் பெறுவதற்கான வழி என நேர்க்காட்சிவாதம் கூறகிறது. இதனை ஏற்கமுடியாது.
- மேற்கண்டவாறு கூறுவதன் மூலம் நேர்க்காட்சிவாத சமூகவியல் சமூக உலகம் (Social World) பற்றிய அறிதல் முறையை தீவிர எதிர் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. இது ஒருவகையான குறுக்கல் வாதமாகும் (Reductionism).
- வேறு வகையில் கூறுவதாயின் அறிபவர் (Knower) அறியப்படு பொருளான (Subject) சமூக உலகம் என்ற இரண்டையும் நேர்க்காட்சிவாத சமூகவியல் பிரித்துத் தனிமைப்படுத்தி விடுகிறது. இது புறநிலைத்தன்மையை (Objectivity) ஒரு குறுகிய வரை சட்டத்திற்குள் வைப்பதனால் நேர்க்காட்சிவாத அறிபவர் (Positivist Knower) மனித உணர்வுகள், மனிதரின் அபிப்பிராயங்கள் என்பனவற்றைக் கண்டு கொள்ளாத ஒருவராகிறார். அவரது அறிவில் ஆய்வுக்குட்படுத்த வேண்டிய மனிதர்கள் பற்றிய புரிதல் (Human Understanding) இல்லாமல் போய்விடுகிறது.
- இவ்வாறு அறிபவர், அறியப்படு பொருளான சமூகம் என்பன வேறுபடுத்தப்படுதல், தரவுகளுக்கும் எண்ணக்கருக்களுக்கும் இடையிலான இருமைநிலை (Dualism of Facts and Concepts), அறிபவர் - அறியப்படு பொருள் இடையிலான இருமைநிலை என்பனவற்றை வேறுபடுத்துவதாக அமைகிறது. இது, டேக்காட் என்ற தத்துவஞானியின் மரபில் வரும் 'கார்ட்டீசியன் இருமை நிலை' (Cartesian Dualism) ஆகும்.
- இவ்விருமை நிலை ஆய்வாளரை புறநிலையான தரவுகளை (Objective Facts) தொகுப்பவராக மாற்றி விடுகிறது. சமூக உறவுகள், வரலாற்றுப்பின்புலம் என்பனவற்றைக் கருத்தில் கொள்ளாத அருவமான தரவுகளைத் தரும் நிலைக்கு ஆய்வாளர் மாறிவிடுகிறார்.
- புறத்தேயுள்ள சமூக உலகை புள்ளிவிபரமாக, அளவை முறைத்தரவுகளாக (Quantifiable data) தொகுத்துத்தரும் ஆய்வாளர் புற உலகு பற்றிய முழுமையற்ற அறிவையே தருகின்றார்.

நேர்க்காட்சிவாத சமூக விஞ்ஞானங்கள் பற்றிய விமர்சனம், சமூகம் பற்றிய நேர்க்காட்சிவாத அறிவின் முக்கியமான குறைபாடுகளை எடுத்துக்காட்டுகிறது. நேர்க்காட்சிவாத சமூகவிஞ்ஞானம் பழமைவாத நோக்குடைய பிற்போக்குவாத அரசியலுக்கு துணைபோவதாகவும் உள்ளது.

(தொடரும்...)



shanmugalingam@thaiveedu.com




சுட்டெரிக்கும் மதியநேரம் என்ற பொழுதிலும் நெடிதுயர்ந்த மரங்கள் நின்றணி செய்கின்ற மலைப்பாதை வழியே அவர்கள் நடந்து சென்ற பொழுது சூரியனின் வெப்பத்தை மிகக் குறைந்த அளவிலேயே உணர்ந்து கொண்டார்கள். பாபநா-சம் அமைந்திருந்த சமதரைப் பிரதேசத்தில் இருந்து செங்குத்தான பாதை வழியே அவர்கள் நடக்க வேண்டியதாக இருந்தது. கொஞ்சம் கவனக் குறைவாக நடந்தாலும், கணநேரத்தில் உருண்டோடி நடக்கத் தொடங்கிய இடத்திற்கே வந்து விட வேண்டி வரும் என்று உணர்ந்ததால், பேச்சு எதுவும் கொடுக்காமல் மூச்சு வாங்கியபடி நால்வரும் ஒருவர் பின் ஒருவராக படிகள் இல்லாத சரிவான மலைப் பாதையை ஏறி முடித்தார்கள்.

கோணமாமலை அடிவாரத்திற்கும், கடலுக்குள் நீண்டிருக்கும் அந்த மலையின் உச்சிப் பிரதேசத்திற்கும் நடுவில் அமைந்திருக்கும் சிறிய குன்றுப் பகுதி அது. அதனுடைய இடது பக்கத்தில் விஷ்ணு ஆலயத்திற்கு செல்வதற்கான வழி இருந்தது. மலை உச்சியில் அமர்ந்தருள்பாலிக்கும் கோணநாய-கரை வணங்கியபின் பரவசமூட்டும் ஆண்டாள் பாடிய திருப்பாவை பாடல்களைப் பாடியபடி சிறு பத்தர் கூட்டம் அந்த வழியே விஷ்ணு ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. மரங்களுக்கு நடுவில் தெரியும் மிக அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கோபுரத்தை நோக்கி கைகூப்பி வணங்கிய நால்வரும் வழமைப் பிரகாரம் மலை உச்சியை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

நினைவு தெரிந்த நாளிலிருந்து உள்ளத்தில் வைத்துப் பூஜித்த உலகளந்த பெருமாளை விட்டிட்டுப் போறனோ என்று தோணுது பாட்டி என்றாள் ஆதினி.

சிறுவயதில் இருந்து மகாவிஷ்ணுவின் பாதங்களைப் பணிந்து நடனம் பயின்று வளர்ந்த ஆதினி ஆளப்பிறந்தாள் பொறித்த இலட்சணையின் காரணமாக சிவாலயத்திற்குத் தன்னை அர்ப்பணிக்க நேர்ந்ததைக் குறிப்பிடுகிறாள் என்பதை அறிவாட்டிப் பாட்டி புரிந்து கொண்டார்.

ஓடிக்கொண்டிருக்க வேண்டியது தண்ணீரின் பணி. வாய்க்கால் எந்தப் பக்கம் வெட்டப்பட்டிருந்தாலும் அது உரிய இடத்துக்கு கொண்டு சேர்க்கும். நம்மட தோட்டத்தில அதைத் தானே நாங்க தினமும் பார்க்கிறம் என்றாள் அறிவாட்டிப் பாட்டி. குறிப்பறிந்து கொடுப்புக்குள் சிரித்தாள் கோதை. புரிந்தும் புரியாததுமாய் மூவரின் முகங்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நடந்தாள் கோதையின் தாய்.

சோழப்பெருமன்னர் காலத்தில கோணேச்சரத்துக்கு என்ன பெயர் தெரியுமா ? என்று கேட்டார் அறிவாட்டிப் பாட்டி.

மச்சகேஸ்வரம் என்று தாமதிக்காமல் கூறினாள் கோதை.

மச்சகேஸ்வரமா ? என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் கோதையின் தாய்.

ஆம் அம்மா, திருமால் மீனாக அவதாரம் எடுத்து பிறகு கோணமாமலையைச் சுற்றி இருக்கிற பாற்கடலில் மீண்டும் திருமா லாக உருமாறி கோணநாயகரை வணங்கியதால் இந்தப் பெயர் வந்தது. மீன் உருவம் நீங்கிய தலம் என்பதால் கோணேச்சரத்தை மச்சகேஸ்வரம் என்று அழைப்பது வழக்கம் என்றாள் ஆதினி.

உங்களோட வாறதால நிறைய விசயம் தெரிஞ்சுக்கிட்டன் என்றாள் ஆச்சரியம் மாறாத குரலோடு கோதையில் தாய்.

இதெல்லாம் ஆளப்பிறந்தாள் பாட்டி கந்தளாயில இருந்து எங்கள துரத்தினதால கிடைச்ச அனுபவம் என்றாள் கோதை.

வாழ்க்கையில எல்லாம் நாம நினைச்ச மாதிரி நடக்காது. கிடைச்சதை வைச்சுக் கொண்டு நினைச்சத சாதிக்கத் தெரியணும் என்றபடி கண்ணுக்குத் தெரியத் தொடங்கிய திருக்கோணேச்சர ஆலயக் கோபுரத்தைப் பார்த்தபடி மலைப்பாதையில் ஏறிக்கொண்டிருந்தாள் அறிவாட்டிப் பாட்டி.

கோணமாமலையின் உச்சிப் பகுதியை அடைந்ததும் மூவரும் பிரமித்துப் போனார்கள். வாழ்நாளில் அவர்கள் அப்படி ஒரு காட்சியைக் கண்டதே இல்லை. கடலுக்குள் நீண்டிருக்கும் அந்த மலையின் உச்சியில் இருந்து பார்க்கும் போது திருகோணமலை நகரப் பகுதி ஒரு விரல் அளவு நிலம் கடலுக்குள் நீண்டிருப்பதுபோல் தென்பட்டது. மலைகளையும், காடுகளையும், குளங்களையும், ஆறுகளையும் மட்டுமே கண்டு வளர்ந்தவர்களுக்கு தாங்கள் கடந்து வந்த திருகோணமலை நகரப் பகுதியை கடலிற்குள் நீண்டிருக்கும் நிலமாக கோணமாமலையில் இருந்து பார்ப்பது வாழ்வில் அதுவரை அடைய

முடியாத சந்தோஷத்தைத் தந்தது. இவை அனைத்தையும் பல வருடங்களுக்கு முன்னமே அனுபவமாக கண்டுகொண்ட அறிவாட்டிப் பாட்டி மட்டும் ஆரவாரம் இல்லாமல் ஆலயத்திற்குச் செல்லும் வழியில் இருந்த ஒரு பெரிய கல்லின் ஓரத்தில் இருந்தபடி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தாள். ஒரு பக்கம் கடல் கடந்து பக்தர்கள் தேடித் தரிசிக்க வரும் கோணேச்சரத்தின் அழகிய கோபுரம், மறுபக்கம் கடலுக்குள் காடு போர்த்து நீண்டிருக்கும் திருமலை நகரின் அழகிய காட்சி. இரண்டையும் வியப்புடன் மாறிமாறிப் பார்த்த வண்ணம் நிற்கும் மூவரையும் மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தாள் அறிவாட்டிப் பாட்டி.



முதன் முதலாக நான் வந்தபோதும் இப்படித்தான் பார்த்துக் கொண்டிருந்தேன். எத்தனை முறை பார்த்தாலும் திகட்டாத அழகிய காட்சிகள் இவை என்றாள் அறிவாட்டிப் பாட்டி. கடல் வழியாக தவழ்ந்து வந்த குளிர் காற்று களைப்போடு மலை ஏறி வந்த நால்வரையும் குளிர்வித்து அவர்களுக்குப் புத்துணர்ச்சி கொடுத்தது.

வாழ்வின் முதல் முறையாக கடலைப் பார்க்கும் ஆதினி அந்தப் பாற்கடலை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆதினியின் மனது, தாங்கள் கந்தளாயில் வாழ்ந்து வருகிற வாழ்க்கைக்கும் கடந்த சில நாட்களில் தான் கண்ட மனிதர்களின் வாழ்க்கை முறைக்கும் இடையிலான இடைவெளியை நினைத்து ஆதங்கம் கொண்டபடி இருந்தது. ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அணிந்திருக்கும் உடை அலங்காரங்களும், அவர்களது பழக்க வழக்கங்களும், அவர்களது வாழ்க்கை முறையும் கோணமாமலை உச்சிக்கும் கந்தளாய் மடுவிற்குமான வித்தியாசத்தை உணர்த்துவதாக இருந்தது.

முதன் முதலாக இந்த மலை உச்சிப் பகுதிக்கு வந்த போது தம்பலகாமந்தான் என் நினைவுக்கு வந்தது. எப்படியாவது என் சொந்தங்களின் வாழ்க்கை முறையை கொஞ்சமாவது மாற்ற வேண்டும் என்ற வைராக்கியம் அப்போதுதான் பிறந்தது. சொந்த ஊருக்கு போவதில் இருந்த சிக்கல் நிலை காரணமாகத்தான் நான் கந்தளாய்க்கு வந்து சேர்ந்தேன். அங்கு இருக்கும் பெண்களை முன்னேற்ற பாடுபடுவதும் அதற்காகத்தான் என்றாள் பெருமூச்சு விட்டபடி அறிவாட்டிப் பாட்டி. ஆதினியும், கோதையும் அறிவாட்டிப் பாட்டியின் காலடியில் போய் அமர்ந்து கொண்டார்கள்.

விதி வலியது. தேவரடியார் என்ற பட்டம் இந்த மலை உச்சிக்கு எங்களை கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. இங்க நாம கற்றுக் கொள்கிற விசயங்களை வைச்சுக் கொண்டு நம்மட ஊர்ல சேத்திலையும் காட்டிலையும், கால்நடைகளோடும் வாழ்க்கைக்காக போராடிச் சாகிற ஒரு சில பேரிட வாழ்க்கை முறையையாவது முன்னேற்றி மேல கொண்டு வர முயற்சி செய்யணும் எண்டு அப்பத்தான் முடிவெடுத்தன். வெளியில இப்படி ஒரு உலகம் இருக்கிறது என்றே தெரியாத குடும்பத்தில் இருந்து வந்தவளால வேறு என்னதான் யோசிக்க முடியும் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

அறிவாட்டிப் பாட்டி எப்போதும் தன்னுடைய ஆசைகளை அறிவுரையாகவோ அல்லது வேண்டுகோளாகவோ சொன்னதில்லை என்பதை ஆதினியும், கோதையும் அறிவார்கள். அதனால் அறிவாட்டிப் பாட்டி என்ன சொல்ல வருகிறார் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டார்கள். ஆதினியும், கோதையும் ஏதோ பேச முயன்ற போது மதிய நேரப் பூசை தொடங்குவதற்கான மணி ஒலித்தது. நால்வரும் எழுந்து நடந்தார்கள். அவர்கள் ஆலய வளாகத்தை அடையும்போது அங்கே வரவேற்பு நடனம் ஆரம்பித்திருந்தது. விசேட பூசைக்காகப் பாவநாசத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்த நீரை வரவேற்பதற்கான நடனத்தை ஆலயத் தேவரடியார் ஆடத்தொடங்கி இருந்தார். பக்திப் பரவசமூட்டும் திருஞானசம்பந்தரின் தேவாரத்தை நான்கு தேவரடியார்கள் பண்ணிசைத்துப் பாடிக் கொண்டிருந்தார்கள். அந்த மலை உச்சி முழுவதும் இசையால் நிறைந்திருந்தது.

*தாயினு நல்ல தலைவரென் றடியார்*
*தம்மடி போற்றிசைப் பார்கள்*
*வாயினும் மனத்தும் மருவிநின் றகலா*
*மாண்பினர் காண்பல வேடர்*
*நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி*
*நுழைதரு நூலினர் ஞாலம்*
*கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த*
*கோணமா மலையமர்ந் தாரே.*

திருக்கோயிலும், சுனையும் கடலுடன் சூழ விளங்கும் திருக்கோணமாமலையில் வீற்றிருக்கும் தாயை விட நல்ல தலைவரான சிவபெருமானின் புகழினைப் பாடும் தேவாரப் பாடலுக்கு ஏற்றபடி தேவரடியார் வெளிப்படுத்தும் நடனத்தை கண்ணிமைக்காமல் நால்வரும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

தொடரும் ...



jeevarajah@thaiveedu.com

# இனப்படுகொலையின் அரசியல் - 8

# இலங்கையின் இறுதிப்போரும் காக்கும் கடப்பாடும்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ



### அறிமுகக் குறிப்புகள்:

1983 முதல் 2009 வரை 26 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த இலங்கையின் உள்நாட்டுப் போர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தீர்க்கமான இராணுவத் தோல்வியுடன் 2009 மே மாதம் முடிவுக்கு வந்தது. சிங்கள மேலாதிக்க அரசாங்கத்திற்கும் தமிழ் சிறுபான்மையினருக்கும் இடையிலான இனப் பதட்டங்களில் (Ethnic Tensions) வேரூன்றிய இந்த மோதல், குறிப்பாக அதன் இறுதிக் கட்டத்தில் மனிதாபிமானப் பேரழிவை ஏற்படுத்தியது. போரின் கடைசி மாதங்களில் 40,000க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டுள்ளது. இந்த கடுமையான மனித உரிமை மீறல்கள் இருந்தபோதிலும், காக்கும் கடப்பாடு (Responsbiltiy to Protect - R2P) என்ற சர்வதேசக் கொள்கை செயற்படுத்தப்படவில்லை, இது உலகளாவிய ஆளுகையின் பங்கு, சர்வதேச சமூகம் மற்றும் மனிதாபிமான தலையீட்டின் வரம்புகள் பற்றிய ஆழமான கேள்விகளை எழுப்புகிறது.

இந்தக் கட்டுரை, இலங்கையின் விஷயத்தில்-காக்கும் கடப்பாடு ஏன் பயன்படுத்தப்படவில்லை என்பதை ஆராய்கிறது. இந்த முடிவைப் பாதித்த உள்ளூர், உலகளாவிய மற்றும் புவிசார் அரசியல் காரணிகளை ஆராய்கிறது, மேலும் சர்வதேச தலையீடு தடைசெய்யப்பட்ட இதுபோன்ற நிகழ்வுகளைக் கருத்தில் கொள்கிறது. இறுதியாக, இலங்கையில் நடந்த பாரிய அட்டூழியங்களுக்கு யார் பொறுப்பேற்பது மற்றும் சர்வதேச சமூகம் தான் உயர்த்திப் பிடிக்கின்ற விழுமியங்களை இலங்கை விடயத்தில் கண்டும் காணாமல் விட்டதன் மூலம் தோல்வியுற்றதா, என்பதையும் ஆராய்கின்றது.

காக்கும் கடப்பாடு என்பது 2005 உலக உச்சிமாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகளாவிய விதிமுறையாகும், இது இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், இன அழிப்பு மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பது அரசாங்கங்களின் கடமை என்பதை உறுதி செய்கிறது. இக்காக்கும் கடப்பாடு கீழ்க்காணும் விடயங்களை மூன்று தூண்களாகக் கொண்டது.

- அதன் மக்கள்தொகையைப் பாதுகாப்பதற்கான அரசின் பொறுப்பு
- இந்தப் பொறுப்பை நிறைவேற்ற அரசுகளுக்கு உதவுவதில் சர்வதேச சமூகத்தின் பங்கு
- ஓர் அரசு தனது மக்களைப் பாதுகாக்கத் தவறினால் தலையிட வேண்டிய சர்வதேச சமூகத்தின் கடமை

நெறிமுறைகளின் படி இலங்கையின் உள்நாட்டுப் போர் 'காக்கும் கடப்பாட்டை' அமுல்படுத்துவதற்கான விதிகளையும் வழக்கினையும் பிரயோகிப்பதற்கான சரியான சந்தர்ப்பமாக இருந்திருக்கவேண்டும். குறிப்பாக அதன் இறுதிக் கட்டத்தில் பொதுமக்கள் இறப்பு எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்த போதும் அரசாங்கம் கண்மூடித்தனமாக போர் வலயத்தில் தமிழ் மக்களை குறிவைத்ததாக குற்றம் சாட்டப்பட்டபோதும் கூட காக்கும் கடப்பாடு பயன்படுத்தப்படவில்லை, மேலும் சர்வதேச சமூகம் கண்டனங்கள் மற்றும் 7 போர்நிறுத்தத்திற்கான அழைப்புகளுக்கு அப்பால் தலையிடுவதைத் தவிர்த்தது. பல காரணிகள் இலங்கையில் இக்காக்கும் கடப்பாட்டைச் செயல்படுத்துவதில் இந்த தோல்வியை விளக்குகின்றன.

### அகப் புறக் காரணிகள்:

இலங்கையில் காக்கும் கடப்பாடு பயன்படுத்தப்படாமைக்கான முக்கியமான உள்ளூர் காரணங்களில் ஒன்று, போரை உள்விவகாரமாக வடிவமைக்கும் அரசாங்கத்தின் உறுதிப்பாடு ஆகும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான இலங்கை அரசாங்கம், பயங்கரவாதத்திற்கு எதிரான தனது போராட்டத்தை வலியுறுத்தி, மோதலை இறையாண்மை பிரச்சினையாக சித்தரித்தது. இரண்டு உலகத் தலைவர்கள் (இந்தியாவின் ராஜீவ் காந்தி மற்றும் இலங்கையின் ரணசிங்க பிரேமதாசா) கொல்லப்பட்டது உட்பட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையும் படுகொலைகளையும் முன்னெடுத்த விடுதலைப் புலிகளை அமெரிக்கா, இந்தியா உட்பட பல நாடுகள் பயங்கரவாத அமைப்பாக பரவலாக அங்கீகரித்திருந்தன. இதை அரசாங்கம் வெளிப்புறத் தலையீட்டிலிருந்து தன்னைப் பாதுகாக்கப் பயன்படுத்தியது. அதன் இராணுவ பிரச்சாரம் இந்தப் போரை ஒரு சட்டபூர்வமான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்று வாதிட்டது.

எதிர்காலத்தில் சர்வதேச விசாரணையைத் தடுக்க இலங்கை அரசாங்கம் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்தது. இது வெளிநாட்டு ஊடகவியலாளர்களை வெளியேற்றியது மற்றும் மனிதாபிமான அமைப்புக்கள் மற்றும் ஊடகங்களுக்கு மோதல் பகுதிகளுக்கான அணுகலை கட்டுப்படுத்தியது. இந்த வெளிப்படைத்தன்மை இல்லாததால், பொதுமக்களின் உயிரிழப்புகளின் அளவு மற்றும் மோதலின் தன்மை பற்றிய துல்லியமான தகவல்களை நிகழ்நேரத்தில் சேகரிப்பது சர்வதேச சமூகத்திற்கு கடினமாக இருந்தது, இதனால் காக்கும் கடப்பாடு அடிப்படையிலான தலையீட்டிற்கான எந்த சாத்தியமும் இல்லாமல் போனது. இறுதிக் கட்டப் போரின் போது என்ன நடக்கிறது என்பதை ஆதாரபூர்வமாக வெளிக்கொணருவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருந்தன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து வருகின்ற தகவல்களை 'புலிகளின் பொய்ப் பிரச்சாரம்' என்று அரசாங்கத்தால் தட்டிக்கழிக்கவும் அத்தகவல்களை அவமதிப்புச் செய்யவும் இயலுமாயிற்று.

உலகளாவிய அரங்கில், ஈராக் போருக்குப் பிந்தைய சோர்வு சர்வதேச சமூகத்தின் இராணுவத் தலையீட்டின் விருப்பத்தை மட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தது. 2003-ல் ஈராக் மீதான சர்ச்சைக்குரிய அமெரிக்கத் தலைமையிலான படையெடுப்பு, வெகுஜன அட்டூழியங்களைத் தடுப்பது என்ற போர்வையில் நியாயப்படுத்தப்பட்டது. அது மனிதாபிமானத் தலையீட்டின் நம்பகத்தன்மையை கடுமையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியது. மற்றொரு வெளிநாட்டு மோதலில் சிக்கிக்கொள்வதில் நாடுகள் எச்சரிக்கையாக இருந்தன. குறிப்பாக இனங்களுக்கிடையிலான சிக்கலான முரண்களாலும் இந்தப் போரினை பயங்கரவாதத்துக்கு எதிரான போரென்று அரசு செய்த பிரசாரமும் இவற்றுக்கான முக்கியமான காரணிகளில் அடங்கும். இந்த தயக்கம் 2008-ஆம் ஆண்டின் உலகளாவிய நிதி நெருக்கடியால் சர்வதேச நாடுகளின் கவனம் உள்நாட்டுப் பொருளாதாரம் நோக்கிக் குவிந்தமையால் இன்னும் அதிகரித்தது.

அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே உள்ளிட்ட பிரதான மேற்குலக அரங்காடிகள் இலங்கை விடயத்தில் மிகவும் ஏமாற்றமடைந்திருந்தனர். குறிப்பான 2002-இல் தொடங்கப்பட்ட அமைதிப் பேச்சுகள் தொடர்பில் மிகுந்த சக்தியை இந்நாடுகள் செலவிட்டன. ஆனால் பேச்சுவார்த்தைகளில் இருந்து விடுதலைப்புலிகளின் விலகலும் அவர்களின் இராணுவவாதக் கண்ணோட்டமும் போரும் அதன் அவலமான முடிவும் தடுக்க முடியாதவை என்பதை அவர்களுக்கு உணர்த்தியிருக்க வேண்டும். அனைத்து மேற்குலக நாடுகளும் இராணுவரீதியாக இறுதிப் போரின் போது இலங்கை அரசாங்கத்திற்கு உதவின. இது இலங்கை மீது காக்கும் கடப்பாடு என்ற கோட்பாடு திணிக்கப்படாது என்ற உறுதிப்பாட்டினை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கியது.

அமெரிக்காவில் ஒபாமா நிர்வாகம் இலங்கை நெருக்கடி குறித்து மிகக்குறைந்தளவான அக்கறையே செலுத்தியது. போரிடும் இரு தரப்புகளும் நிதானமாக இருக்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிட்டதுடன், பெருமளவிலான பொது மக்கள் வசிக்கும் பகுதிகளில் கனரக பீரங்கிகளைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு இலங்கை அரசைக் கேட்டுக் கொண்டது. அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளிண்டன், ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடியதாகவும், இலங்கை 'பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் விளிம்பில்' இருப்பதாகவும், நாட்டில் அமைதியை மீட்டெடுக்க முடியும் என்றும் தெரிவித்தாக வெளியான செய்திகள் அமெரிக்க நிலைப்பாட்டை அடிக்கோடிட்டன. இலங்கையின் நடவடிக்கைகளுக்கான அமெரிக்க நிர்வாகத்தின் மறைமுகமான ஆதரவு ஒபாமாவின் வெளியுறவுக் கொள்கைத் தளத்தில் இருந்த மனித உரிமைகள் மீதான அதன் கவனத்துடன் முரண்பட்டது. அமெரிக்கா இதில் ஈடுபடத் தயங்குவது, புவிசார் மூலோபாயக் கூட்டணிகள், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான தற்போதைய கொள்கை ஆகியவற்றில் புதுப்பிக்கப்பட்ட கவனம் செலுத்துவதைக் குறித்தது. இது அயல் உறவுகளுக்கான அமெரிக்க செனட் குழுவின் அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டது. பயங்கரவாத அச்சுறுத்தலை மையமாகக் கொண்ட இந்த நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒருமித்தப் புள்ளியை சமிக்ஞை



செய்வதன் மூலம், 'அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதில் ஆர்வமாக உள்ளன' என்று இவ்வறிக்கை குறிப்பிட்டது.

புவிசார் அரசியல் ரீதியாக, வெளித் தலையீடுகளைத் தடுப்பதற்காக முக்கிய சர்வதேச செயற்பாட்டாளர்களுடனான தனது உறவுகளைப் பயன்படுத்திக் கொள்ள இலங்கையால் முடிந்தது. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களான சீனாவும் ரஷ்யாவும் இலங்கைக்கு அரசியல் ஆதரவை வழங்கியதுடன், ஐ.நா-வினால் கட்டளையிடப்பட்ட எந்த வொரு சாத்தியமான நடவடிக்கையிலிருந்தும் இலங்கையை பாதுகாத்தன.

இலங்கையின் சக்திவாய்ந்த அண்டை நாடான இந்தியாவும், தமிழ்நாட்டில் உள்ள தமிழ் மக்களிடமிருந்து உள்நாட்டு அழுத்தம் இருந்தபோதிலும், தலையீட்டிற்கு அழுத்தம் கொடுப்பதைத் தவிர்த்தது. பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான இந்திய அரசாங்கம், இலங்கையில் 1987-1990 இந்திய அமைதி காக்கும் படையின் அனுபவங்களின் வழி (அது தோல்வியிலும் குறிப்பிடத்தக்க உயிர் சேதத்திலும் முடிந்தது) இலங்கையில் தலையிடுவதில் எச்சரிக்கையாக இருந்தது. கூடுதலாக, இந்தியா பிராந்திய ஸ்திரத்தன்மை

யைப் பேணுவதற்கு முன்னுரிமை அளித்தது. வலுவான இரு தரப்பு உறவுகளைப் பேண முயன்ற இலங்கை அரசாங்கத்தை அந்நியப்படுத்தத் தயங்கியது.

## யார் பொறுப்பு?

இலங்கையின் போரில் நடந்த பாரிய அட்டூழியங்களுக்கு யார் பொறுப்பு என்ற கேள்வி பல நிலைகளில் உள்ளது. உள்ளூர் மட்டத்தில், இறுதிக்கட்டப் போரின் போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். பொதுமக்கள் வாழ்ந்த பகுதிகளில் கண்மூடித்தனமாக ஷெல் தாக்குதல் நடத்திய அரசாங்கத்தின் இராணுவ மூலோபாயம், போர்நிறுத்தத்திற்கான சர்வதேச அழைப்புகளுக்கு செவிசாய்க்க மறுத்தமை, பொதுமக்களின் உயிரிழப்புகள் பற்றிய அக்கறையின்மை ஆகியவை மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைகளில் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

மறுபுறம், பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை, குழந்தைகளை வலுக்கட்டாயமாக படைகளில் சேர்த்தமை, இராணுவ நிலையின் நம்பிக்கையற்ற நிலையிலும் தொடர்ந்து போராடியமை போன்றவற்றுக்குப் புலிகள் பொறுப்பேற்க வேண்டும். உலக அளவில் சர்வதேச சமூகம், குறிப்பாக ஐ.நா. இலங்கையில் பொதுமக்களைப் பாதுகாப்பதில் தீர்க்கமாகச் செயற்படத் தவறிவிட்டது என்பதை ஐ.நாவே ஏற்றுக் கொண்டுள்ளது. ஐ.நா விசாரணைகளை ஆரம்பித்து, உண்மையை ஏற்று அறிக்கைகளை வெளியிட்டாலும், அது மிகவும் தேவைப்படும் நேரத்தில் தலையிடும் அரசியல் விருப்பமோ திறனோ அதற்கு இல்லை என்பது இலங்கை விடயத்திலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காக்கும் கடப்பாட்டைப் பயன்படுத்துவதில் சர்வதேச சமூகம் தவறியது பாரிய அட்டூழியங்களைத் தடுப்பதற்கான உலகளாவிய அர்ப்பணிப்பில் குறிப்பிடத்தக்க குறைபாட்டைப் பிரதிபலிக்கிறது. புவிசார் அரசியல் பரிசீலனைகள் மற்றும் மோதலின் சிக்கல்கள் தலையீட்டிற்கு சவால்களை அளித்தாலும், வலுவான பதில் இல்லாதது காக்கும் கடப்பாடு போன்ற சர்வதேச விதிமுறைகளின் நம்பகத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியது.

பின்னோக்கிப் பார்த்தால், இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது, குறிப்பாக அதன் இறுதிக் கட்டங்களில் பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறியது, மனிதாபிமான அக்கறைகளை விட அரச இறையாண்மை மற்றும் புவிசார் அரசியல் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்போது, பாரிய அட்டூழியங்களைத் தடுப்பதில் சர்வதேச நிர்வாகத்தின் வரம்புகளை அப்பட்டமாக நினைவூட்டுகிறது. ருவாண்டா மற்றும் டார்ஃபூரில் ஏற்பட்ட தோல்விகளைப் போலவே, மனித துன்பங்களுக்குப் பெரும் சாட்சியங்களை எதிர்கொண்டு சர்வதேச சமூகம் எவ்வாறு செயற்படத் தவறுகிறது என்பதற்கு இலங்கையும் வலிமிகுந்த உதாரணமாக நிற்கிறது.

2009-ல் இலங்கையின் உள்நாட்டுப் போரின் முடிவு, நாட்டின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க தருணத்தைக் குறித்தது, ஆனால் உள்ளூர், உலகளாவிய மற்றும் புவிசார் அரசியல் காரணிகள் சர்வதேச மனிதாபிமான விதிமுறைகளின் பயன்பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடிய உலகில் பாதுகாப்பதற்கான பொறுப்பின் வரம்புகளையும் இது அம்பலப்படுத்தியது. இலங்கையின் உதாரணமானது, காக்கும் கடப்பாடு என்பது உலகளவில் பயன்படுத்தப்படும் கொள்கையிலிருந்து வெகு தொலைவில் உள்ளது என்பதையும், புவிசார் அரசியல் யதார்த்தங்கள் குடிமக்களைப் பாதுகாப்பதற்கான தார்மீகத் தேவையை பெரும்பாலும் மறைக்கின்றன என்பதையும் நிரூபிக்கிறது. நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அழைப்புகள் உட்பட, உள்நாட்டுப் போருக்குப் பின்னரான விளைவுகளை இலங்கை தொடர்ந்து கையாளும் நிலையில், சர்வதேச சமூகம் அதன் தோல்விகளைப் பற்றி சிந்தித்து, எதிர்காலத்தில் இதுபோன்ற அட்டூழியங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. ஆனால் அவ்வாறு நிகழாது என்பதை இலங்கைப் போரின் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டுகால சர்வதேச அரசியல் வரலாறு பல தடவைகள் நிரூபித்துள்ளது.

இலங்கையின் இறுதிப் போர் குறித்த சர்வதேச சமூகத்தின் பிரதிபலிப்பு இலங்கை அரசாங்கம் மக்களைப் பாதுகாப்பதற்கான தனது பொறுப்பை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதில் தோல்வி கண்டது. அந்த நேரத்தில் (2009) காக்கும் கடப்பாடு என்பது ஒப்பீட்டளவில் புதிய கருத்தாக இருந்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பே அக்கருத்தாக்கம் மாநாட்டு ஆவணத்தில் வெளிப்படுத்தப்பட்டது. இலங்கைப் போர் முடிவடையும் வரை  ஐ.நா. பொதுச் சபையில் விவாதிக்கப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள் தொடர்பான செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக் குழுவின் அறிக்கையின்படி, மோதலின் முடிவில் பாதுகாப்புச் சபையில் காக்கும் கடப்பாடு பற்றி சில குறிப்புகள் இருந்தபோது, ‘உறுப்பினர் நாடுகள் மற்றும் செயலகத்தின் குழப்பம் காரணமாக குறித்த கருத்தின் பொருள் பற்றிய தெளிவிருக்கவில்லை’. அதேவேளை இக்கருத்தாக்கம் இலங்கை நெருக்கடிக்கான பொருத்தமான தீர்வா என்பது குறித்த ஒருமித்த கருத்து இருக்கவில்லை. ஏனெனில் காக்கும் கடப்பாடு என்பது மிகவும் சர்ச்சைக்குரியதாகவும், எதிர்விளைவாகவும் கருதப்பட்டது. ஆயினும்கூட, பல முக்கிய அரசுகள் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரித்தன, பொதுவாகக் காக்கும் கடப்பாட்டுக்கு ஆதரவாக இருக்கும் மற்றவை எச்சரிக்கையுடன் பதிலளித்தன அல்லது இலங்கை அரசாங்கத்தாலும் அவர்களின் ஆதரவாளர்களாலும் ஓரங்கட்டப்பட்டன. ஐ.நா. நடவடிக்கைகளில், காக்கும் கடப்பாடு ஆதரவாளர்களின் இருதரப்புத் தன்மையுடன் இணைந்த இந்த ஆதரவு, ஐ.நா அல்லது அதன் உறுப்பு நாடுகளின் பயனுள்ள தலையீடு இல்லாமல் மோதலை முடிவுக்குக் கொண்டுவர இலங்கை அரசாங்கத்திற்கு உதவியது.

இவ்விடத்தில் இலங்கை இறுதிப்போருக்கான கதையாடலை எவ்வாறு வெற்றிகரமாகக் கட்டமைத்தது. அதை எதிர்த்த கதையாடலில் தமிழர்கள் எவ்வாறு தோல்வியடைந்தார்கள், குறிப்பாக புலம்பெயர் வாழ் தமிழர்கள் எவ்வாறு அரசியல் ரீதியாகத் தோல்வி கண்டனர் என்பதையும் நோக்க வேண்டியுள்ளது

## இறுதிப்போரும் எதிர்க்கதையாடல்களும்:

இலங்கையின் இறுதிப் போரின் தொடக்கம் மாவிலாறில் தொடங்கியது. ‘புலிகள் மக்களுக்கான குடிநீரை தடைசெய்கி

றார்கள். இது மனிதாபிமானப் பிரச்சனை' என்ற பிரச்சாரத்தை இலங்கை அரசாங்கம் தொடங்கியது. மாவிலாறு மீதான தனது இராணுவத் தாக்குதலுக்கும் போரின் மீள்தொடக்கத்திற்கும் மாவிலாறில் மதகை விடுதலைப் புலிகள் மூடியதை நல்லதொரு சாட்டாக இலங்கை அரசாங்கம் பயன்படுத்தியது. இது போரை மீண்டும் தொடங்குவதற்கு அரசாங்கத்திற்கு நியாயப்பாட்டை வழங்கியது. இதன் மூலம் அரசாங்கம் மூன்று விடயங்களைச் செய்தது.

- சிங்கள மக்களின் முழுமையான ஆதரவைப் பெற்றது.
- இதைப் போராக அன்றி 'மனிதாபிமான நடவடிக்கை' ஆகச் சித்தரிப்பதன் மூலம் புதிய கதையாடலை உருவாக்கியது.
- மாவிலாறு ஏற்படுத்திய மனிதாபிமான நெருக்கடியின் விளைவால் சர்வதேச சமூகம் 'தனது கவலைகளை வெளிப்படுத்த இயலாதபடி' கட்டுண்ணச் செய்தது.

இந்தப் பின்புலத்திலேயே இலங்கையின் இறுதிப் போர் குறித்த இராணுவ பிரச்சாரத்தை இலங்கை அரசாங்கம் 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்றும் 'மனிதாபிமான நடவடிக்கை' என வடிவமைத்தது. உலகளாவிய 'பயங்கரவாதத்திற்கு எதிரான போரின்' ஒரு பகுதியாகப் போரை வெற்றிகரமாக கட்டமைக்கும் அரசாங்கத்தின் திறன் இலங்கையில் காக்கும் கடப்பாடு பயன்படுத்தப்படாததற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். அமெரிக்காவில் 9/11 தாக்குதலுக்குப் பிறகு, சர்வதேச சமூகம் பயங்கரவாதத்திற்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டது. தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், படுகொலைகள், சிறுவர் போராளிகள் உட்பட தந்திரோபாயங்களுக்கு பெயர் பெற்ற விடுதலைப் புலிகள், அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல நாடுகளால் பயங்கரவாத அமைப்பாக பரவலாக அறிவிக்கப்பட்டனர்.

பயங்கரவாத எதிர்ப்புக் கதைகளுடன் உலகளாவிய ஒருங்கிணைப்பை இலங்கையால் மேற்கொள்ள முடிந்தது. இலங்கை அரசாங்கம் தன்னைப் பயங்கரவாதத்தின் பலியாகக் காட்டிக் கொண்டதுடன், விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது இராணுவ நடவடிக்கை ஒரு சட்டபூர்வமான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்று வாதிட்டது. உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்புக் கதைகளுடன் தன்னை இணைத்துக் கொள்வதன் மூலம், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் சர்வதேச அரங்காடிகளிடமிருந்து இலங்கை அரசாங்கம் அரசியல் மற்றும் தார்மீக ஆதரவைப் பெற்றது. இந்த விவரிப்பு மனித உரிமை மீறல்களில் இருந்து பயங்கரவாதத்தை ஒழிப்பதில் கவனம் செலுத்தியது. இது காக்கும் கடப்பாடு அடிப்படையிலான தலையீட்டிற்கான சர்வதேச அழுத்தத்தை குறைக்கிறது.

அரசின் இறையாண்மை மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய இரண்டையும் இலங்கை அரசாங்கம் வெற்றிகரமாக இணைத்தது. காக்கும் கடப்பாட்டின் கருத்தாக்கமானது, ஓர் அரசு தனது மக்களை அட்டூழியங்களில் இருந்து பாதுகாக்க விரும்பாத அல்லது இயலாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில் வெளிப்புறத் தலையீட்டை ஊக்குவிப்பதன் மூலம் அரசின் இறையாண்மைக்கு இயல்பாகவே சவாலிடுகிறது. எவ்வாறாயினும், இலங்கை தனது இராணுவ பிரச்சாரத்தை ஒரு பயங்கரவாத கிளர்ச்சியிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான இறையாண்மை உரிமையாக வடிவமைத்தது. அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் அரசாங்கங்கள், பொதுமக்கள் உயிரிழப்புகளை உள்ளடக்கிய பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது, காக்கும் கடப்பாட்டின் கீழ் தலையீட்டிற்கு வாதிடுவது குறைவு. எனவே, இலங்கை விடயத்தில் காக்கும் கடப்பாட்டைக் கோருவது 'பயங்கரவாதம்' என்று பெயரிடப்பட்ட வழக்குகளில் சர்வதேசத் தலையீட்டிற்கு ஒரு சிக்கலான முன்னுதாரணத்தை அமைத்திருக்கும்.

குறிப்பாக இந்தியா இக்காலகட்டத்தில் மாவோவிய அமைப்புகளுக்கு எதிரான தனது நடவடிக்கைகளை பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் மேற்கொண்டிருந்தது. இதுவே பின்னர் பச்சை வேட்டையாக 2009 செப்டெம்பரில் உருவெடுத்து பல ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொடுமைப்படுத்தியது. எனவே இலங்கையில் 'காக்கும் கடப்பாட்டை' அனுமதிப்பதை இந்தியா ஒருபோதும் விரும்பாது என்பது மட்டுமல்ல, அதை அனுமதிக்கவும் மாட்டாது.

இலங்கை அரசாங்கம் போரின் இறுதிக்கட்டத்தில் மேற்கொண்ட இராணுவத் தாக்குதலை 'மனிதாபிமான நடவடிக்கை' என்றும் குறிப்பிட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து தமிழ் மக்களை விடுவிக்கும் முயற்சியாக தமிழர்கள் ஆதிக்கம் செலுத்தும் வடக்குப் பிராந்தியத்தில் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்த இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளை அப்பாவித் தமிழ் மக்களை ஒடுக்குபவர்களாக சித்தரிப்பதில் அரசாங்கம் வெற்றிகண்டது. விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு மட்டுமல்ல, பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பாவித்து, சிறுவர் படையினரை ஆட்சேர்ப்பு செய்து, தமிழ்ப் பொதுமக்களின் உரிமைகளை நசுக்கும் ஓர் அடக்குமுறைப் படை என்றும் அரசாங்கம் வாதிட்டது. இராணுவத் தாக்குதலை புலிகளின் பிடியில் இருந்து தமிழ் மக்களை விடுவிப்பதை இலக்காகக் கொண்ட ஒரு நடவடிக்கையாக நிலைநிறுத்துவதன் மூலம், அரசாங்கம் தனது நடவடிக்கைகளை தனது சொந்த மக்களுக்கு எதிரான பிரச்சாரமாக இல்லாமல் மனிதாபிமான இயல்புடையதாக காட்ட முனைந்து அதில் வெற்றியும் கண்டது. இந்த விவரிப்பு இலங்கை இராணுவத்தை தமிழ்ப் பொதுமக்களின் பாதுகாவலர்களாக சித்தரித்தது. இது காக்கும் கடப்பாட்டின் கீழ் அயலார் தலையீட்டிற்கான நியாயத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தியது.

இராணுவம் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும், புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியதால் ஏற்படும் உயிரிழப்புகள் தற்செயலானவையாகவோ தவிர்க்கமுடியாமலோ நிகழ்ந்த சேதங்கள் என்றும் அரசாங்கம் கூறியது. மனித உரிமை அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றின் அறிக்கைகள் உட்பட இலங்கை அரசாங்கத்தின் விளக்கத்திற்கு மாறான பரவலான ஆதாரங்கள் இருந்தபோதிலும், அரசாங்கம் தொடர்ந்தும் பொதுமக்களை குறிவைப்பதை மறுத்தேவந்ததுடன் அதன் நடவடிக்கைகள் சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்குட்பட்டதாகவே இருந்தது என்று வாதிட்டது.

'மனிதாபிமான நடவடிக்கை' என்ற கதையாடலின் மற்றொரு அம்சம், பொதுமக்கள் தஞ்சம் புகுவதற்கு 'பாதுகாப்பு வல

யங்களை' உருவாக்குவதாகும். அரசாங்கம் இந்த வலயங்களை மோதலில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் முயற்சியாகவே அமைத்தது. இந்த வலயங்கள் இராணுவ ஷெல் தாக்குதலால் குறிவைக்கப்பட்டதாக பின்னர் செய்திகள் வந்தன. எவ்வாறாயினும், இதை அரசாங்கம் மறுத்தது. இவ்வலயங்களுக்குள் இருந்து புலிகள் மக்களோடு மக்களாக இருந்து தாக்குதல் தொடுக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டியது. செயற்கைக்கோள் படங்களின் உதவியுடன் இதை அரசாங்கம் உறுதி செய்தது. இது புலிகளின் இராணுவத் தந்திரோபாயங்களினால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு புலிகளே பொறுப்பு என்ற அரசாங்கத்தின் கதையாடலை வலுப்படுத்தியது.

அரசாங்கத்தின் கதையாடல்கள் இவ்வாறானதாக இருக்க இதன் மறுபுறம் புலம்பெயர்ந்த தமிழர்கள் மேற்கத்தேய தலைநகரங்களில் போரை நிறுத்தக் கோரியும் சர்வதேச சமூகத்தைத் தலையிடக் கோரியும் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தனர். ஆனால் எதுவும் வெற்றியளிக்கவில்லை. ஏன் இவை தோல்வியடைந்தன என்ற வினாவை இன்றுவரைப் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தமக்குள் கேட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. இங்கு மூன்று அடிப்படையான விடயங்களை நோக்க வேண்டும். முதலாவது புலம்பெயர் தமிழர்களின் ஒருங்கிணைந்த போராட்டமாக 'போரை நிறுத்தும்' கோரிக்கை இடம்பெறவில்லை. புலம்பெயர் மக்களிடையே இருந்த பிளவுகள் இதற்கான முக்கிய காரணம்.

இரண்டாவது, விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரதிநிதிகளும் ஆதரவாளர்களும் இந்தப் போராட்டங்களில் முக்கிய பங்காற்றினர். அவர்களைப் பொறுத்தவரையில் புலிகளும் தமிழ்மக்களும் ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்கவொண்ணா அம்சங்கள். இதனால் புலிகளின் கொடிகள், சின்னங்கள், படங்கள் என்பன போராட்டத்தின் பகுதியாக இருந்தன. இதனால் புலி எதிர்பாளர்கள், மாற்றுக் கருத்தினர் ஆகியோர் இப்போராட்டங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்தனர். இது 'புலிகளை அழிவிலிருந்து காக்கவே இவர்கள் போராடுகிறார்கள்' என்ற தோற்றப்பாட்டைக் கொடுத்தது.

மூன்றாவது, இப்போராட்டங்களில் விடுதலைப்புலிகளின் படங்களும் கொடிகளும் இடம்பெற்றிருப்பதானது, பிற சமூகங்களின் ஆதரவைத் திரட்டுவதற்குத் தடையானது. குறிப்பாக பிற குடியேறிய சமூகங்கள், குறித்த நாடுகளின் மக்கள் ஆகியோர் இப்போராட்டங்களில் இருந்து ஒதுங்கியிருந்தனர். விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியாகத் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக இருந்தமை இதற்கான முக்கிய காரணம். இவ்வகைப்பட்ட நுண்ணரசியல் நெருக்கடிகளை இப்போராட்டங்களை ஒழுங்குபடுத்தியோர் கவனத்தில் கொள்ளவில்லை. பல நாடுகளில் பொது அமைப்புகள் 'தமிழர்களின் நலன் நோக்கி போரை நிறுத்தக் கோரி' ஏற்பாடு செய்த போராட்டங்களில் கூட விடுதலைப்புலிகளின் கொடிகளோடு விடாப்பிடியாகக் கலந்துகொண்டு அப்போராட்டங்களை கையகப்படுத்த முனைந்ததோடு பொது அமைப்புகளின் ஆதரவையும் இழந்தன.

மேற்குலக அரசாங்கங்களுக்கு புலம்பெயர் தமிழர்களின் போராட்டங்களில் விடுதலைப்புலிகளின் சின்னங்கள், கொடிகள், படங்கள் இடம்பெற்றமை வாய்ப்பாகப் போனது. இப்போராட்டங்களை மக்கள் போராட்டங்களாகவன்றி ஓர் அமைப்பைப் பாதுகாப்பதற்கான போராட்டங்களாக அவை இனங்கண்டன. அதேவேளை இப்போராட்டங்களின் வன்முறையான நடத்தை (உதாரணமாக நோர்வேஜியத் தலைநகர் ஒஸ்லோவில் இலங்கைத் தூதராலயம் தாக்கப்பட்டமை) அவ்வவ் நாடுகளில் உள்நாட்டுப் தீவிரவாதம் குறித்த கவலைகளைத் தூண்டியது. இந்நிகழ்வுகள், ஒரு பயங்கரவாத அமைப்பைப் பாதுகாப்பதற்கான போராட்டங்கள் என்ற எண்ணப்பாட்டை அரசுகளுக்கு ஏற்படுத்தியது.

இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையானது யாதெனில் சர்வதேச அரசியலின் இயங்கியல் குறித்த புலம்பெயர் தமிழர்களின் புரிதலின்மையாகும். 2002-ம் ஆண்டு முதலான சமாதான முயற்சிகள் நடைபெற்ற காலப்பகுதியில் தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவான நிலைப்பாடுகளை அனைத்து மேற்குலக நாடுகளும் எடுத்தன. இதை 'மிகத் தவறாக' தமிழர்களும் விடுதலைப் புலிகளும் அவர்தம் ஆதரவாளர்களும் புரிந்து கொண்டார்கள். ஒருபுறம் விடுதலைப் புலி ஆதரவாளர்கள், புலிகளின் இராணுவ வலிமைக்குக் கிடைத்த அங்கீகாரம் என்றும், மறுபுறம் தமிழ்மக்கள் 'மேற்குலகம் எம்மோடு இருக்கிறது' என்றும் புரிந்து கொண்டார்கள். ஆனால் உண்மையில் பேச்சுமேசைக்குப் புலிகளை அழைக்கவும் பேசவும் வசதிப்படுத்தவும் வாய்ப்பான ஒரு சூழலை உருவாக்க மட்டுமே மேற்குலகம் அவ்வாறு நடந்தது. இந்த யதார்த்த அரசியல் பற்றிய புரிதல் குறைபாடுகள் முக்கியமானவை. இந்தக் குறைபாடுகள் இன்றுவரை தொடர்கின்றன.

ஒருபுறம் இலங்கை அரசின் 'மனிதாபிமான நடவடிக்கை' என்ற கதையாடல் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அங்கீகாரத்தைப் பெற்றது. அதற்கு ஏதுவாக விடுதலைப் புலிகளின் நடத்தையும் இருந்தது. மறுபுறம் 'தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள்' என்ற பிரச்சாரத்தோடு விடுதலைப்புலிகளும் தமிழரும் ஒன்று என்ற விடாப்பிடியான நிலைப்பாடுகள் இலங்கை நிலவரம் தொடர்பாக கிடைத்திருக்கவேண்டிய சர்வதேச கவனத்தை நீர்த்துப் போகச் செய்தன.

## தொடரும் குறிப்புகள்:

இலங்கையில் காக்கும் கடப்பாடு பயன்படுத்தப்படாதது உள்ளூர், உலகளாவிய மற்றும் புவிசார் அரசியல் காரணிகளின் சிக்கலான கலவையின் விளைவாகும். இந்த மோதலை 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' மற்றும் 'மனிதாபிமான நடவடிக்கை' என்று கட்டமைக்கும் இலங்கை அரசாங்கத்தின் திறன், வெளித் தலையீட்டிற்கான அழைப்புகளை நடுநிலையாக்க உதவியது. புவிசார் அரசியல் இயக்கவியல், சர்வதேச சமூகத்தின் அரசியல் விருப்பமின்மை ஆகியவற்றுடன் இணைந்து, காக்கும் கடப்பாடு என்பது செயல்படுத்தப்படாது என்பதை உறுதி செய்தது. இறுதியில், போர் இலங்கையை சர்வதேச கண்காணிப்பில் இருந்து பாதுகாக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டது. அயல் தலையீடுகளுடன் அரசாங்கம் தனது இராணுவ நோக்கங்களை தொடர அனுமதித்தது. இதற்கு 'நியாயமான போர்' (Just War) என்ற இன்னொரு பரிமாணமும் இருந்தது. இதை அடுத்த கட்டுரையில் பார்க்கலாம்.



meenilankco@thaiveedu.com

# வண்ணதாசன் கதைகளுக்குக்கீழ் எழுதிய குறிப்புகள்



–சு. வேணுகோபால்

வண்ணதாசன் கதைகளை என் சிறுவயது முதல் படித்து வந்திருந்தாலும் முழு தொகுப்புகளையும் கையில் வைத்துக் கொண்டு வாசிக்கும்படியான சந்தர்ப்பம் அமையவில்லை. அப்படி முழுத்தொகுப்புகளையும் படித்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் 2011 வருடம் ஒக்ரோபர் மாதம் முழுக்கப் படித்தேன். அப்போது கட்டுரையாக எழுதவில்லை. படிக்க படிக்க சில கதைகளின் கீழ் சீறிய குறிப்புகளைப் பென்சிலில் எழுதினேன். அந்த பென்சில் எழுத்துகளும் மங்கிக்கொண்டு வருகின்றனவா ? என் கண்பார்வை மங்குகிறதா ? என்று தெரியவில்லை. அந்த குறிப்புகளை இங்கு பெயர்த்து எழுதுகிறேன். கதை பத்திகளின் பக்கவாட்டில் எழுதியிருக்கும் 'கமண்ட்ஸ்'களை எடுத்து எழுதவில்லை. இரண்டு வார்த்தைகளோ, சின்னதாக ஒரு வரியிலோ இருக்கிறது. முழுகதையைப் படித்து முடித்தபின் எழுதிய குறிப்புகள் மட்டும் இவை. எல்லா கதைகளுக்கும் குறிப்புகள் எழுதவில்லை.

இக்குறிப்புகள், வண்ணதாசன் கதைகளைப் படிக்க உங்களைத் தூண்டும் என் சிறு முயற்சி இது.

### நொண்டிக்கிளிகள்:
வாழ்வியக்கங்களை விவரணைப்படுத்திய விவரணையின் தலைமகன் வண்ணதாசன். துயரங்களை, வாதைகளை, நெருக்கடிகளை விவரணையில் வடித்தெடுத்த மகத்தான கலைஞன்.

### வடிகால்:
ஒரு சாவைக்கொண்டு மற்றவர் சாவின் துயரை விளங்க வைக்காமல் எழுதியிருந்தால் மிக நன்றாக இருக்கும். இருந்தாலும் நல்ல கதை. நந்தவனத்தில் ஒரு ஆண்டி கதைபோல.

### சில நிமிர்வுகள் சில குனிவுகள்:
கறிவேப்பிலை கதைபோல

### பாம்பின் கால்:
இன்று நாவிதத்தொழிலில் நல்ல வருவாய் உண்டு. காலத்தின் முன் பொருளை இழக்கிறது இக்கதை.

### ஓர் உல்லாச பயணம்:
விவரணையில் வாழ்க்கை நுட்பம் நம் பெண்களின் அசலான குணம் நிகழ்வின் இயக்கம் பேச்சு வழக்கு நன்றாக வந்திருக்கிறது. உளவியல் சரியாக பார்க்கப்படவில்லை. தவறான உளவியல் கதைக்காக வளைக்கப்படுகிறது. முடிவிற்காகத் திட்டமிட்ட எழுத்து. உல்லாச உளவியல் தவறாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

### சபலம்:
சுந்தரராமசாமி சொன்னது போல இறகை கோதிக் கொண்டே இருக்கிறார். விசயத்திற்கு வர நேரமாகிறது. விதவிதமான மனிதர்களின் அங்க அடையாளங்கள் துல்லியம் பெறுகின்றன. சாக்லைட்டுக்காக இவ்வளவு நீண்ட கதை. இந்தச் சாக்லெட் விசயத்தை 4 வரிகளில் எழுதி கடந்துவிடலாம். இன்று இம்மாதிரி ஆசிரியர் ஒரு சாக்லைட்டுக்காக ஏங்கியதை ஒரு நீண்ட கதையாக எழுதமுடியாது. காலம் மாறிவிட்டது. சாத்தியமில்லை. காலத்தின் முன் இக்கதைக்கும் பொருள் இல்லை.

### தோட்டத்திற்கு வெளியிலும் சில பூக்கள்:
மிக நல்ல கதை. குடும்ப உறவினர்களைப் போல வெளியிலும் நல்ல மனிதர்கள். பிரியமிக்க, பங்கெடுத்துக்கொள்கிற மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதை பேருந்தில் அழும் குழந்தையை மற்றவர்கள் தூக்கி ஆற்றுப்படுத்தும் அற்புத கணத்தைச் சொல்கிறது. ஆனால் இந்த அற்புதகணத்தைச் சொல்லவே அவன், குழந்தையை மாமா வீட்டிற்குத் தூக்கிக் கொண்டு போய் காட்டிவிட்டு வருவதாக இருக்கிறது.

### போர்த்திக் கொள்ளுதல்:
கணவன் மனைவியின் இடையே சதா நிகழும் உரசலை மிக நுட்பமாக வெளிப்படுத்துகிறது கதை. Best. ஓ ஹன்றியின் தங்கக்கூந்தல் கதை சாயலில் இருக்கிறது. இது ஒரு போர்வை சம்பந்தப்பட்ட விசயம் அல்ல. போர்வை என்பது சாக்கு. அதில் சொல்லப்பட்ட விசயம் உதாசினப்படுத்தி காயம் உண்டாக்கும் பிரச்சனை. 'சங்கிலி' கதையில் சங்கிலி ஒரு சாக்கு. சங்கிலியைப் போடுவதா, பத்திரமாகக் கழற்றிக் கொள்வதோ அல்ல விசயம். குழந்தையின் சுதந்திரம் குறித்த

பார்வை. 'நிறை' கதையில் இதழ்கள் ஒரு பின்னணி. பேப்பரைப் போட்டு பொடி வாங்குவதல்ல விசயம். அவருள் பொங்கிய காருண்யம் வற்றிப்போனதற்கானக் காரணங்களைக் காணச்சொல்கிறது. 'சில நிமிர்வுகள் சில குனிவுகள்' கதையில் சிந்திய கடலையை எடுத்து சாப்பிட முடியாத சுயகௌரவம் சார்ந்த விசயம் மட்டும் அல்ல. எளியவர்களின் சவலான வாழ்க்கை விரிக்கப்பட்டிருக்கிறது.

### ஞாபகம்:

இதுவரை பார்த்தும் பார்க்காத கண்கள் விழிப்புற்று பார்ப்பது போன்ற ஒரு கணத்தை சொல்லும் கதை.

### சுவர்:

வீட்டையே விதவிதமான கதைச் சூழலில் வைத்து எழுத முடியும் என்பதை சாதித்திருப்பவர்.

### நகரத்திற்கு வெளியே கொஞ்சம் சொர்க்கம்:

தாஸ் நண்பர்களை வீட்டிற்கு அழைப்பதில்லை என்ற குறிப்பு வருகிறது. அதற்கான காரணங்களைப் ஃபேன் அற்ற, எருமைகள் ஆடுகள் நிறைந்த அடைந்த வீடு. சேறும் சாணியும் நொச நொசக்கிற இடத்தில் வாழ்வதால் நண்பர்களை அவர் அழைப்பதில்லை என்பதில் ஒரு தாழ்வுணர்வு வெளிப்படுகிறது. தாஸின் காவல்கார மிடுக்கிற்கு நேர்மாறாக வீடும் கொட்டமும் கிடக்கிறது. அத்தோடு அவரும் வந்தவுடன் அமிழ்ந்து விடுகிறார்.

### பறப்பதற்கு முன் கொஞ்சம் புழுக்களாக...

தி.க.சி. எழுத்து முறைக்கு சம்பந்தமற்ற மாற்றான எழுத்து முறை - சடங்கு சம்பிரதாயங்கள் உயிரோட்டத்துடன் கதைக்குள் இயைந்து வருகின்றன. பண்பாட்டு தளத்தில் வைத்து எழுதப்பட்ட கதை. அம்மன் வழிபாட்டின் வழி திருமணம் தள்ளிப்போகும் அக்காள். வேலைகிடைக்காத தம்பி, வறுமை நோக்கி நகரும் குடும்பம். சு.ரா.சொன்னதுபோல கோதிக் கொண்டே இருக்கிறார்.

### ஊமைப்படங்கள்:

இளம்பிராயத்து வாழ்க்கையின் அற்புதமானத் தருணங்களைக் கொட்டி வைத்திருக்கிறார். ஒருவகையில் ஆவணம். பல செய்கைகள் இன்று மறைத்துவிட்டன. வண்தணாசன் கதைகள் பண்பாட்டின் கருவூலம். வங்கிக்கு வாச்மேனாகப் போகிற, வெள்ளையடிக்கிற, பிலிம் காட்டுகிற, சரஸ்வதி பூசை செய்கிற என்று கதைக்கானச் சூழலில் அது தொடர்பான நுட்பங்களை, அனுபவங்களை நம்பும்படி விரித்து அதற்குள் ஒரு வாழ்க்கையை வைக்கிறார். அந்த வாழ்க்கை வறுமையின் பிடியில் தவிக்கும் மக்களாக இருக்கிறார்கள். நம்மை விவரணையில் லகிக்கவிட்டபடி கஷ்ட வாழ்க்கையை மறைவாகச் சொல்கிறார்.

### நடப்பு:

கொடைக்கானல் பின்னணி? ஊரில் வாழும் தெரு எப்படிப் பட்டது என விலாவாரியாக விவரிப்பு. ஞாபகம் கதையில் வேலை பார்த்த அலுவலகம் விலாவரியாக விவரிக்கப்படுகிறது. விவரிப்பில் வெளிப்படும் ஆற்றலுக்கு நிகராக இருப்பதில்லை விசயம். கதை நடைசித்திரமா?

### ஜன்னல் 1975:

வண்ணநிலவனின் விமோச்சனம் சுந்தரராமசாமியின் 'ரத்னாபாயின் ஆங்கிலம்' கதைகள் வரிசையில் ஒன்று. கடுமையான வாழ்க்கையைச் சொல்லும் கதை. நல்ல கதை. ரத்தினாபாயின் ஆங்கிலம் வந்த ஆண்டு 1976.

### தாகமாய் இருக்கிறவர்கள்

பொன்னம்மை கிளைக்கதை ஸ்ட்ராங்:

வண்ணதாசன் எழுதுவது எதுவும் வேஸ்ட் ஆகிவிடவில்லை. மாரிமுத்து என் நண்பர். அவர் நண்பரின் மனம் மாற்றிய காட்சிகள் இவரது கதைகள். வண்ணதாசன் கதைகள் சுயபரிசீலனை செய்து கொள்ளத் தூண்டுபவை. ஜெயகாந்தன் சமூகத்தை மாற்ற எண்ணங்கொண்டு எழுதினார்.

### நிலை:

புரட்சிகரமான கதைக்கு ஒரு கரு கிடைத்து அதை எழுதுவதற்குள் வண்ணதாசனின் இம்மாதிரி சில கதைகளைப் படித்துவிட்டு எழுதத் தொடங்கவேண்டும். நானும்கூட அப்படி நினைத்ததுண்டு. கதையின் ஆற்றல் எல்லாம் சாராக இறங்கி நிற்க கதைக்குள் புரட்சி துடிக்கவேண்டும். உலகத்தரமான கதைகள் என்று எந்த அளவுகோலின் படி நிறுத்துவது? பண்பாட்டின் அத்தனை இழைகளோடும் சொந்த மண்ணின் மக்களைப் பாதிக்கிற கதைதான் உலகத்தரமானதாக இருக்க முடியும். இந்த 'நிலை' கதையை ஒரு அமெரிக்கன் புரிந்து கொள்வானா? அவனுக்கு இது சாதாரணமாகத் தோன்றிவிட்டால் எது உலகத்தரம் என்ற அளவுகோலே பொய்த்துவிடும். ஒடுக்கப்பட்ட குழந்தையின் உலகம் அதி அற்புதமாகப் படைக்கப்பட்டிருக்கிறது.

### சமவெளி:

கலை மனிதனை மிக உயரத்திற்குக்கொண்டு செல்ல எத்தனிக்கிறதும் யதார்த்தம் அவனை சமதளத்திற்கு இழுத்து நிறுத்துகிறதுமான பயணம் இக்கதை. ஒரு ஓவியம் ஒருவனை மிக உயரத்திற்குச் செல்லத்தூண்டும் ஊக்கியாக நின்று துரிதப்படுத்தலாம். அதே விசயம் மற்றொருவருக்குக் கவர்ச்சியான அரைநிர்வாண கோணமாகப்படலாம். இந்த இரண்டிற்கும் அப்பாற்பட்டு ஒரு வாழ்க்கை இருக்கிறது. சந்தோசமும் துயரமும் கொண்ட வாழ்க்கையை ஏற்று வாழவேண்டியதிருக்கிறது.

### கூறல்:

உலகச் சிறுகதைகளில் இப்படியொரு கதை இருக்குமா என்று தெரியவில்லை. சாதாரண பரிபாசைகளுக்கு அப்பாற்பட்டு உடலும் உடலும் பேசிக்கொள்கிற - மனமும் மனமும் பேசிக்கொள்கிற - தொடுதலும் தொடுகின்ற விதத்திலும் பேசிக்கொள்கிற ஒரு கதை. நம் யதார்த்த நியதிக்கு அப்பாற்பட்ட ஒரு நியதியின் உலகினைச் சொல்லும் கதை. இதுவரை தமிழில் எழுதப்படாத கோணத்தில் எழுதப்பட்டிருப்பதால் பட்டென ஈர்க்கிறது. கதைகள்கூட இப்படித் தேர்ந்துதான் எழுத வேண்டுமோ? இவ்விதமான கதைகள்தான் எஸ். ராமகிருஷ்-

ணனை வசீகரம் செய்கிறது.

### விசாலம்:

கல்யாணமாகாத கவலையும் ஏக்கமும் முறுக்கேறி மனநோயாக மாற்றி சாலாவைப் படுக்கையில் கிடத்துகிறது. சாலா-விற்கு இஷ்டம் இருந்தும் தங்கை மகனுக்குக் கொடுக்காமல் அதைவிட நல்ல இடத்தில் தர நினைக்கிறார் அப்பா. பொருளாதார சரிவு கண்ணுக்குத் தெரியாமல் நுழைந்து குடும்பத்தைத் தலைகீழாகப் புரட்டிப்போடுகிறது. வரும் மாப்பிள்ளைகள் எல்லாம் இஞ்சி ஒதுங்கிவிடுகின்றனர். சாலா கல்யாணமே ஆகாமல் நோய்வாய்பட்டு இறக்கும் தருவாயில் கிடக்கிறாள். தான் விரும்பிய அத்தை மகன் பார்க்க வருகிறான். ஞாபகம் இல்லாத நிலையில் கிடக்கிறாள். வரட்டு கௌரவம், வரட்டு ஆணவத்தால் சொந்தங்களில் மணஉறவு ஏற்படாமல் காதல் நாசமுறுவதை உள்ளம் விம்மச் சொல்கிறது. அந்தந்த காலத்தில் மனவிசாலம் ஏற்பட்டிருந்தால் உறவுகள் மலர்ந்து மணம் வீசியிருக்கும். மனஇசைவு ஏற்படாததினால் உறவு சுருங்கி சிதைவுறுவதைச் சொல்கிறது. சின்னாபின்னப் பட்டப் பின்புதான் ஞானம் வருகிறது. வந்து என்ன செய்ய காலம் அவர்களை வயசாயிகளாக்கி விட்டுவிடுகிறதே. இம்மாதிரியான நல்ல கதைக்குள் கூடுதல் அழுத்தத்தையும் இன்னுமான பரிமாணத்தையும் ஏற்படுத்த இதில் சொல்லப்படாத ஒரு முரண் மோதல் கசப்பு தேவைப்படுகிறது. இப்படி எழுதப்பட்ட கதைக்குள் கூடுதல் அம்சம் இருந்தால் இன்னும் சிறப்பைப் பெறும்.

### பெயர் தெரியாமல் ஒரு பறவை:

இறந்துபோன ஒரு பெயர் தெரியாத பறவையின் நிமித்தமாக நிகழும் நிகழ்வுகளைச் சொல்கிற கதை என்றாலும் மழையில் நனைந்தபடி சைக்கிளை உருட்டிக்கொண்டு கேட்டிற்குள் நுழைந்த ரொட்டி வியாபாரி ஒரு பெயர் தெரியாத பறவையாக நீர்ச்சொட்டச் சொட்ட பெட்டியிலிருந்து நனைந்த - நனையாத ரொட்டிகளை எடுத்துத் துடைத்து பிரிக்கிறான். அவனுக்கு நல்ல துண்டை கொடுக்கிறான் கதைசொல்லி. பழைய துணி இருந்தா கொடுங்களேன் என்கிறான். பரவாயில்லை அதிலேயே துவட்டு என்கிறான். 1983-ல் இலங்கையில் நடந்த இனக் கலவரத்தில் மனிதர்கள் சிதைந்து கிடந்த காட்சியும், பெயர் தெரியாத பறவை இங்கு இறந்து கிடந்த காட்சியும் சொல்லப்படுகிறது. வாழ்க்கை இப்படியா முடிய வேண்டும். இந்தத் தருணத்தில் மழையில் நனைந்து வந்த ரொட்டிவியாபாரி மீது பரிவு ஏற்படுகிறது. இந்தப் பறவை துடைத்துக்கொண்டு நகர்ந்துவிடும். மீண்டும் பார்ப்பது அபூர்வம் அறிந்திராத பறவையைக் கனிவுடன் பார்ப்பதுபோல இந்த மனிதன் மீது ஒரு ஒட்டுதல்.

### ஆறுதல்:

பழகியவர்கள், கூடப்படித்தவர்கள், தெருக்காரர்கள், பழகியவர்கள், ஒருவருக்கொருவர் நின்று பார்த்து பேசக்கூட முடியாத தலைமுறை தோன்றிவிட்ட நவீனகாலத்து மனிதர்களின் போக்கு சொல்லப்படுகிறது. அழகான அம்சம் ஒன்று இக்கால மனிதர்களிடம் கழன்றுபோன வாதனை தைக்கிறது. இன்னும் பழைய மனிதர்களிடம் உறவின் உருத்தான பந்தம் ததும்புகிறது. புதிய தலைமுறை மனிதர்களிடம் இருந்திருக்க வேண்டிய ஒன்று பண்பாட்டின் செழுமையான பகுதி இல்லாது மறைந்துபோன விசயத்தைத் தொடுகிறது. வண்ணதாசனின் படைப்புலகின் செழுமையான பகுதி எது என்று கேட்டுக் கொண்டால் உறவின் இழைகள் என்று சொல்ல முடியும். பன்னெடுங்காலமாக நம் பண்பாட்டில் தொடர்ந்து வந்த உறவின் மகத்துவங்கள், எங்கெல்லாம் மலர்ந்து மணம் வீசிற்று என்பதை அள்ளிவந்து கொட்டுகின்றன. அதே போல இருந்திருக்க வேண்டிய மேன்மைகள் இல்லாதுபோன இடங்களில் எல்லாம் பாழ்பட்டு வறண்டு ஈரம் வற்றி சுருங்கிப்போன மானுடத்தைச் சொல்கிற பகுதி அவரின் அக்கறை சம்பந்தப்பட்டது. இந்த நவீனத்துவ மனிதர்களிடம் மகத்துவம் வற்றித்தான் போகவேண்டுமா என சதா குரல் எழுப்புகிறது.

### அந்தந்த தினங்கள்:

வண்ணதாசன் கதைகள் எல்லாமே போதாமையின் சுழலில் பட்டழுந்தும் பாடுகளைச் சொல்கின்றன. அதனால் அவை வாசகனை ஈர்த்துவிடுகின்றன. நம்மோடு நம் வாழ்க்கையைப் பகிர்ந்து கொளளவும் செய்கின்றன. இவரின் கைவண்ணமும் மனவார்ப்பும் கதைகளைச் சோடைபோகாதபடிக் காப்பாற்றி விடுகின்றன. கனவுகளில் சல்லாத்துணி நெய்யாத உக்கிரமான கதைகள் நிறைய நிறைய. ('அந்தந்த தினங்கள் மிதிபட'...) வாசகனாக இவரின் ஆகச்சிறந்த கதைகள், சிறந்த கதைகள் நல்ல கதைகள் என பிரிந்து இணைவதை சிறிதும் பெரிதுமான பாடுகளின் வழியாகவோ மெலிதான அல்லது அடர்த்தியான சிடுக்குகளால் திக்குமுக்காடுவதைக் கொண்டோ பிரித்து உணரலாம். சில சமயம் அடைந்திருக்கும் கவித்துவ உச்சங்களாலும் ஆகச்சிறந்த கதைகளாக மாறிவிடுகின்றன.

### சிறுகச் சிறுக...

மகத்தான மனிதனின் படுமோசமான சரிவை மலையைப்பனைக் கொண்டு சொல்கிறார். வறுமை என்ற கொடூரன், பெருந்தன்மையற்ற முதலாளிமார்கள், காலம் என்ற சூழ்ச்சிக்காரன் எல்லாம் சேர்ந்து மலையப்பன் என்ற மகத்தான மனிதனைச் சிறுகச் சிறுக கீழ்மையைப் பற்றிக்கொள் என்று சதா சுற்றிநின்று கூத்தாட அப்படியே ஆகிப்போனவனின் கதை இது. மகத்தான மனிதர்கள் ஏன் இப்படிச் சரிந்து போகிறார்கள் என்பதைப் பரிவுடன் பார்த்தக் கதை 'சிறுகச்சிறுக'. நிலவுடைமை பண்பாட்டில் வைத்து காலமாற்றத்தை மலையப்பன் வழி அழிக்கமுடியாத சிற்பமாக வடித்தெடுத்திருக்கிறார். நிலவுடைமையின் சிதை வினால் உறவுகள் சிதைந்து அலுவலக நாற்காலிகளில் எங்கெங்கோ ஒடுங்கியதோடல்லாமல் குழந்தைகளின் உள்ளங்களும் சிறுத்துப்போன அவலத்தை ரத்தம் கசிய கசியச் சொல்கிறது. மகத்தான படைப்பு, தமிழ்ச் சிறுகதைகளில் வடிக்கப்பட்ட பார்த்திரவார்ப்புகளில் மலையப்பன் பாத்திரம் ஆகச்சிறந்த ஒன்று. கி.ரா.வின் 'நிலைநிறுத்தல்' போல தனித்துவமான பாத்திரவார்ப்பு.

கீழ்மையிலிருந்து ஒருவன் சிறுகச்சிறுக விடுபட்டு மேல்நிலைக்குப் போகிற பயணம். அனுபவமும் அறிவும் அன்பை மீட்டிக்கொள்கிறதால் விளையக்கூடிய ஒன்று. ஆனால் மகத்தான ஒரு மனிதன் மெல்ல மெல்ல கீழ்மைக்குள் சரிந்து விழுவதென்பது ஒரு காவியசோகம். காலம் இட்ட சாபம். கடவுளின் குரூர விளையாட்டு. சரிந்துவிட்டபோதும் மலையப்பன்



மகத்தானவன்.

### சொல்லமுடிந்த கதை:

உன்னதமான கவிதையை எழுதுகிற கவிஞன், மகத்தான நாவலை எழுதுகிற எழுத்தாளன், உலகைக் காவியமாக்குகிற ஒரு ஓவியன் எல்லாம் மிக உயர்ந்தவர்களாகக் கொண்டாடு கிறோம். கூடி பாராட்டி மகிழ்கிறோம். உண்மையில் மகத் தான கவிஞன், மகத்தான புனைகதையாளன், மகத்தான ஓவி யன் இந்த மண்ணை நம்பி கொத்திக் கிளறி கடுமையாக உழைத்து வாழ்கிற கிழவன்தான் என்று காட்டுகிறது. தன் எழுத்தின் குறுகலை தைரியமாக பரிசீலனைக்கு வைக்கிற தன் எழுத்தின் சாதனைகளை சிதறடித்துக் காட்டுகிற தைரி யம் வண்ணதாசனுக்கு உண்டு. சிறந்த படைப்பு என்பது புத்த கத்தில் அல்ல. உயிர் கூட்டத்திடையே உலவுகிறது என்பதை யும் எழுத்தில் வைக்கிற கலைஞன் வண்ணதாசன். ‘சொல்ல முடிந்த கதை’ எழுத்தாளனுக்குத் தனித்துவமான பார்வை இருக்கவேண்டும் என்று அடிக்கடி கூறுகிறோமே அந்தப் பார்வை அமைதியுடன் வண்ணதாசனிடம் துலங்குகிறது. தன் முனைப்பு அற்றவர்களிடம்தான் இயற்கையின் மனிதனின் காருண்யத்தை வெளிப்படுத்தமுடியும்.

### சிறிது வெளிச்சம்:

தமிழ்ப்பண்பாட்டிற்கு மட்டுமே உரித்தான தமிழ்க்கதைகள் என்று படிக்கும்போது நான் குறித்து வைத்ததுண்டு. வேல.ராமமூர்த்தியின் கதைகளைப் படித்தபோது 'அன்னமயில்' என்ற கதைமீது பென்சிலால் அப்படி எழுதிவைத்தேன். கி.ரா.வின் 'பேதை', புதுமைப்பித்தனின் 'செல்லம்மாள்' கதைகள்மீதும் எழுதிவைத்தேன். வண்ணதாசனின் 'சிறிது வெளிச்சம்' கதை மீதும் அவ்விதம் எழுதுகிறேன். 'மழை வெயில்' படித்த இந்தக் கணம் எழுதுகிறேன். வண்ணதாசன் (சு.ரா.) தேங்கும் இடத்தைச் சொன்ன இந்தத் தமிழ் உலகம் அவர் பின் எழுதி வென்ற இடங்களைச் சொல்லவில்லை. இதுதான் மதிப்பீடா? மதிப்பீடுகளை மாற்றி எழுதவேண்டிய காலம் வந்தால் அதைச் செய்திருக்கவேண்டும். செய்தது நன்மை என்றால் செய்யாமல் போனது துரோகம்.

### அப்பால் ஆன...

கணவனை இழந்து சிறு மகளுடன் வாழும் ராஜியின் துயரம், நெருங்கிய உறவுடைய ஆண்களுக்குத் தெரிகிறது. பகிரமுடியாமல், பசுமையான புதிய பாதையைக் காட்டாமல், மௌனமாக இருந்துகொண்டு வேறுவகையில் சிறிய அளவில் விசாரித்துக்கொள்ள மட்டுமே முடிகிற தருணங்கள் எவ்வளவு கொடுமையானது. பல்வேறு சமூகக்கட்டுகளுக்கு அப்பால் துடிக்கும் உள்ளம் பற்றிப் பேசப்படாத ஒரு உலகம் நமக்குள் விரிகிறது. இப்படித் தெரிந்தும் மௌனமாக இருப்பதற்கு இந்தச் சமூகவளமையும் ஒரு காரணம்.

### அவனுடைய நரி அவளுடைய ஓடை:

அரசு வேலைக்குச் செல்லும் கணவன்மார்களின் மனைவிகள் ஒரே தெருவில் இருக்க நேருகிறபோதெல்லாம் அவர்கள் கூடி சிரித்துப்பேசும் மாலைப்பொழுதும் அவர்களின் கணவர் ஒருவர் வந்தவுடன் கலைந்து அவரவர் கைஜோலி பார்க்கப் போவதுமான ஒரு நிகழ்வு நடக்கும். இந்தச் சூழலைப் பார்த்திருக்கிறோம். யாரும் கதையுலகிற்குள் அந்த இனிய உலகத்தைக் கொண்டு வந்ததில்லை. வண்ணதாசன் அச்சூழலை அப்படியே கதையுலகில் அள்ளிவிடுகிறார். யாரும் எழுதாத இந்த கோணத்தைக் கண்டு எழுதுவதுதான் இவரது தனித்துவம். இதைத்தான் ஒரிஜினாலிட்டி என்று எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

### நீச்சல்:

தி.க.சி.-யின் பேட்டிகள், கடிதங்கள், கட்டுரைகளைப் படிக்கும்போது எனக்கு உடனடியாகத் தோன்றுவது இவர் சொல்லும் விசயங்களுக்கு வண்ணதாசனின் எழுத்து சம்பந்தமில்லாது இருக்கிறதே என்று நினைத்ததுண்டு. இன்னும் வெளிப்படையாகச் சொல்லவேண்டும் என்றால் தி.க.சி. விரும்பும் இலக்கிய அழகியல் வண்ணதாசன் எழுத்தில் இல்லை எனலாம். மார்க்சிய முற்போக்கு யதார்த்தவாதம் குறித்துப் பேசியவர் தி.க.சி. அங்கு பண்பாட்டுக் கூறுகளுக்கு இடம் கிடையாது. நம்பிக்கைகளுக்கு இடம் கிடையாது. வண்ணதாசன் படைப்புகளில் அவை இல்லாமல் கிடையாது. அப்பாவை நேசிக்கிற மகன்தான் வண்ணதாசன். ஆனால் அப்பாவின் இலக்கிய அழகில் வண்ணதாசனின் அந்தராத்மாவில் இல்லை. அவரின் அந்தராத்மாவில் மின்னும் ஒளி தி.ஜானகிராமனிடமிருந்து பெற்றுக்கொண்டது. இலக்கியத்தைப் பொறுத்தளவில் நான் வேறு அப்பா வேறு என்பதைக் கிட்டத்தட்ட ஒரு வாக்குமூலம் போல ஒரு கதையை முன்வைத்திருக்கிறார். கதையின் தலைப்பு 'நீச்சல்'.

### சூரியன் அருகில் பறக்கிறவர்கள்:

வண்ணதாசனின் சொந்த அனுபவங்கள். அவரின் மன உலகங்கள், கனவுகள், ஏமாற்றங்கள் சில கதைகளில் வருகின்றன. அவற்றை அறிந்தும் அறியாமலும் விடுவதுகூட அழகுதான். ஞாபகம், பறப்பதற்கு முன் கொஞ்சம் புழுக்களாக, சமவெளி, வரும்போகும், சங்கிலி, சொல்ல முடிந்த கதை. இக்கதைகளில் வண்ணதாசன் துல்லியமாகவே தெரிவது போல் இருக்கிறது. அவர் தலைகாட்டியும் காட்டாமலும் இருக்கிற கதைகள்தான் மிகச்சிறப்பாக அமைந்திருக்கின்றன. கூறல், சிறுகச்சிறுக, தோட்டத்திற்கு வெளியிலும் சில பூக்கள், அவனுடைய நதி அவளுடைய ஓடை, நிறை. சொந்த வாழ்க்கையைச் சொல்லும்போது கண்ணியம் காக்கவேண்டும் என்று மனசுக்குத் தோன்றிவிடுகிறது. அதனாலே காத்திரம் கொள்ளாதும் போய்விடுகின்றன படைப்புகள். தன்னை உடைத்துக் கொள்வது என்பது பெரிய சவால். வண்ணதாசனிடம் கேட்டால் போதும் இந்தளவு என்று சொல்லக்கூடும். உறவுகளுக்கு மதிப்பளிக்கவேண்டும் என்ற விதம் சரிதான். உறவுகளைப் பொருட்படுத்தாது எழுதும்போது படைப்பு உயர்ந்துவிடும். படைப்பிற்கான நேர்மை என்பது அதுதான். ஜி.நாகராஜன் சில கதைகளை அவ்விதம் எழுதியிருக்கிறார்.

### சொன்னவிதமும் கேட்டவிதமும்:

நமக்கான கதைவடிவங்களின் உத்தியை வண்ணதாசன் கையாண்ட விதத்தைச் சொல்லவேண்டும். அந்தச் சொல்முறையின் ஒரிஜினாலிட்டி புதுசாகவும் ஈர்ப்பாகவும் இருக்கின்றன. 'சொன்னவிதமும் கேட்டவிதமும்', 'என்றைக்கும் உள்ள வெயில்' கதைகளில் நடத்தைகளுக்கு அப்பாற்பட்டு பெண்களை மதிப்புடனும் பிரியத்துடனும் பார்ப்பதற்கு ஒரு பக்குவம் வேண்டும். அந்தப் பக்குவத்தை இக்கதைகள் வற்புறுத்துகின்றன.

### ஆலங்கட்டி மழை:

வண்ணதாசனின் படைப்புலகம் இரண்டுதளங்களில் இயங்குகின்றன. ஒன்று சாதாரண நடுத்தரவர்க்கத்து அரசு ஊழியனின் வாழ்க்கைக்கோலம். இன்னொன்று அந்த மனிதனின் தொடர்பில் கிளைகளாக விளியும் ஏழை எளியவர்களின் உலகம். இந்த ஏழை எளியவர்களின் உலகம் உக்கிரமாக இருக்கிறது. நடுத்தர வர்க்கத்து உலகின் உரசல்கள் இருந்தாலும் சாந்தம் தவழ்கிறது. பெரும்பாலும் 'நான்' பாத்திரத்தின் கண்ணோட்டத்தில் சொல்லப்பட்டாலும் கதையினுள் நிகழும் முரண், உரசல் வண்ணதாசனின் நான் மட்டுமே அல்ல. ஆனால் வண்ணதாசனின் வேறுபல கிரகிப்பின் அம்சங்கள் கதையில் சிலந்திவலைபோல பின்னப்பட்டிருக்கின்றன. அது அவருள் நினைவுச்சுழிகளாகப் பெருக்கெடுத்து பெருக்கெடுத்து ஒரு கடலாக மாறி இருக்கிறது. நினைவுகளின் பெருங்கடல்தான் இவரின் ஒட்டுமொத்தப் படைப்புகள்.

### கனிவு:

வண்ணதாசன், தாத்தாக்களைப் பற்றி அற்புதமான கதைகள் எழுதியிருக்கிறார். 80 வயதைத் தாண்டிய தாத்தாக்களின் பல குணரூபங்களை வரிவரியாக வடித்திருக்கிறார். கு.அழகிரிசாமி, தி.ஜானகிராமன் குழந்தைகளின் சித்திரங்களை எழுத்தில் அற்புதமாகத் தீட்டியதுபோல வண்ணதாசன் தாத்தாக்களை அப்படியே எழுத்தில் பெயர்த்து நம் கைகளில் தொட வைத்திருக்கிறார். கூறல், சிறுகச்சிறுக, கனவு, நிறை கதைகள் தாத்தாக்களை சிறப்பாகச் சித்திரித்தவை. 'கனிவு' கதையில் வரும் பெரிய ஆயான் போல ஒரு தாத்தாவை இன்னொரு தமிழ் எழுத்தாளன் இதுவரை வடித்தெடுக்கவில்லை. உலக கதைகளில் கூட நான் படித்தவரை இப்படி ஒரு சித்திரம் தீட்டப்பட்டதில்லை. அவரில் உள்ளார்ந்த இச்சையை தவிட்டு ஒத்தடம் கொடுக்க ஒத்தடம் கொடுக்கும் போது 'யம்மா' என்று வெளிப்படுத்தும் இடம் வெகுநுட்பம். மானிட விசித்திரங்களை அவ்விதம் எழுதும்போதுதான் வண்ணதாசன் ஜொலிக்கிறார். அதேபோல ஆம்பூர் அய்யர் பேத்தியிடம் மருமகளை அறிமுகப்படுத்துகிற 'மரியாதை குறித்து ஒரு தூரத்தில் இருக்கிறாளே தவிர, இவளைவிட சிநேகம் என்ன உண்டு' என அணைத்தபடி சொல்கிற இடம். நல்லத்தனமும் கெட்டத்தனமுமான தாத்தாக்களை வண்ணதாசன் சிறப்பாக கதைகளில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார். வண்ணதாசன் அப்பாவிடம் விட தாத்தாவிடமே வாழ்கிறார்.

### அந்தப் பையனும் ஜோதியும் நானும்:

விக்கிரமாதித்தன் கொலுசு கதைக்கு ஒரு கதை உருவம் கொடுத்ததுபோல.

### ஒரு அமர ஊர்தியை முன்வைத்து:

அமர ஊர்திக்குள் இருப்பவருக்கும் நெரிசலில் விலகமுடியாது இருசக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து வந்த நபருக்கும் மெல்லமெல்ல ஏற்படும் தோழமை அகால மரணமடைந்த நண்பர்கள் அந்த மரணத்தின் வேதனைகள் சாவு என்ற கரிய குகைக்குள் தானும் புகுந்துவிடப் போவதாகத் தோன்றும் கற்பனைகள் ஒரு திருப்பத்தில் அமர ஊர்தி விலகியதும் சாவு பற்றிய நினைவிலிருந்து விடுபட்டு இவனும் வேறு கிளையில் செல்வது வாழ்க்கைப் பற்றிய முக்கியமான இடம். சாவு என்பது சிலருக்குச் சந்திப்பு. சிலர் சந்திக்க நாட்கள் இருப்பதாக, நாம் விரும்பினாலும் தள்ளிப்போகும் சம்பத்து. அமர ஊர்தியைப் பின்தொடரும் எத்தனையோ வண்டிகள். அந்தச் சாவு எந்த நேரத்தில் எப்படி வரும் என்று சொல்ல முடியாது. நண்பனைப்போல விபத்தில்தான் சாவு வரும் என்று சொல்லமுடியாது என்பதைத் தத்துவார்த்த சாயலுடன் எளியவிதத்தில் சொல்லப்பட்ட கதை.

### அடி:

ஏழு அல்லது எட்டு வயது பையன் பேசுவது நம்பும்படியாக இல்லை. உண்மையில் வண்ணதாசன் இப்படியான பையன்களைப் பார்த்திருந்தால்கூட 11, 12 வயது என்று எழுதும்போதுதான் நம்பகத்தன்மை ஏற்படும்.

### வாழையடிகள்:

நாவிதர், நாதசுரக்காரர், மிட்டாய்காரன், விபச்சாரம் செய்பவள், பிரம்புக்கூடை சரிசெய்பவர், லாண்டரிக்காரன் - காரி. என விளிம்புநிலை மனிதர்களின் உலகம் பற்றி சிரத்தையுடன் எழுதியிருப்பவர்.

### நடேசக்கம்பர் மகனும், அகிலாண்டத்து அத்தானும்:

நீண்ட நாட்களுக்குப் பின் சம்பந்தப்பட்ட ஒருவரை சந்தித்தபோது ஏற்படும் மனஉணர்வு அபூர்வமானது. அந்த ஒருவரை சந்தித்ததும் சந்திக்க வேண்டியவர்கள் எல்லாம் தொடர்ந்து வரத் தொடங்குவர். ஒரு பெரும் பட்டியல் தோன்றும். இப்படியான ஒரு வகையில் வருபவர்களாகிய நடேசக்கம்பர் மகனும் அகிலாண்டத்து அத்தான்' கதை சொல்கிறது. நல்ல கதை.

### மாறுதல்:

மிகச் சாதாரணமான கதையில் அபூர்வமான உணர்வெழுச்சி மிக்கத் தருணத்தை மீட்டிக்கொண்டுவந்து விடுவதினாலேயே வண்ணதாசனின் அனைத்துக் கதைகளையும் வாசகன் படிக்க வேண்டியவனாகிறான். எந்தக் கதையில் எந்த விதத்தில் வெளிப்படும் என்று நிர்ணயிக்க முடியாத விதத்தில் வெளிப்பட்டு விடுகின்றன வாழ்வின் கவித்துவம் மிக்கத் தருணங்கள்.

### அமுக்குப்படுகிற இடம்:

இந்தக் கதையை லயித்து எழுதவில்லை. கிட்டு மாந்தனை (நான் பாத்திரம்) ரொம்ப ரொம்ப கவனமாக எழுதிவிட்டார். அவனது மனவியல்போடு எழுதியிருந்தால் கதை மிகச்சிறப்பாக வந்திருக்கும். அண்ணனின் பேச்சு விமர்சனத்தன மானது என்பதாக மட்டும் நின்றுவிட்டது. பல முடிச்சுக்களை அவிழ்ப்பதற்குப் பதிலாக தன் மன அவஸ்தையை வெளியிடும் குரூபியமாகக் காட்டுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு முடிந்துவிட்டது. சா.கந்தசாமியின் 'அவன் ஆனது' நாவலின் பாதிப்பில் எழுதப்பட்டதுபோல இருக்கிறது.

### சில வாழைமரங்கள்:

அங்கீகரிக்கப்படாத உறவுகளில் சிக்கிக்கொண்ட எளிய பெண்களின் கதைகளை எழுதுகிறார். அப்பெண்களின் மீதான வாஞ்சையை எழுதுவதையே நோக்கமாக வைத்துப் படைத்திருப்பதுபோல இருக்கிறது. வித்தியாசமான வாழ்க்கை முறை கண்ணில் பட்டால் அதனை படைப்பிற்குள் கொண்டு வர எழுத்தாளனின் மனம் துடிப்பது இயல்புதான். வண்ணதாசன் அந்த வாழ்க்கைக்குள், ஊடறுத்து பயணிக்காமல் பச்சாதாபத்துடன் கருணையைக்காட்ட முற்படுகிறார்.

### யாளிகள்:

பசுவை மேய்த்துக்கொண்டு வீடுகளில் சிறு பூந்தோட்டம் அமைத்துத் தரும் தாத்தா (நடுகை) உழைத்து முன்னேறி இரண்டாம் திருமணம் செய்துகொள்கிற விதவைப்பெண் (ஒருத்தருக்கு ஒருத்தர்) குடும்ப வாழ்க்கையில் கணவனோடு முரண்பட்டு காதலனின் மூலம் குழந்தை பெற்றுக்கொள்கிற பெண் (அருளிச் செய்தது) மூளை வளர்ச்சி இல்லாத குழந்தை (சில சமயங்கள்) மேஜிக்மேனின் நிராவதாரன நிலைபற்றி (முழுக்கைச் சட்டை போட்ட வரும் ...) குழந்தைப் பேறு இல்லாத தம்பதிகள் (ஈரம்) பழைய காதலியுடனான தொடர்பை விட முடியாத கணவன் (சூரிய நமஸ்காரம்) மகன் வீட்டிற்கும் மகள் வீட்டிற்கும் அல்லாடும் பெரியவர் (அரசமரம்) வைப்பாட்டியாகவே வாழநேர்கிற பெண் (சில வாழை மரங்கள்) அநாதை ஆசிரமத்தில் வாழ்கிற பெரியவர் (யாளிகள்) அப்பாவைக் கொன்றவன் (அதே தலைப்பு) என பல்வேறுபட்ட மனிதர்களின் வாழ்க்கையைத் தனது கருணையின்

கண்கொண்டு எழுதுகிறார். பல்வேறுபட்ட மனிதர்களின் தடங்களைபிடித்துச் செல்லும்போது அறியப்படாத உலகங்களை திரைவிளக்கிக் காட்டமுடியும். மாறாக அவர்களை அன்பு ததும்ப காட்டுவது உண்மையின் ஒரு சிறு பகுதி மட்டுமே. மனிதர்களின் சாகசங்களை, போட்டிகளை, பாய்ச்சல்களை சுயநலங்களைத் தான் என்கிற இச்சையை மறைக்கிற எழுத்தாகவும் மாறிவிடுகிறது. மனிதர்களைப் புரிந்துகொள்வதற்குப் பதிலாகப் பரிவுகொள்ளச் செய்கிறது. எது முக்கியம் என்பது படைப்பாளிகளிடம் வேறுபடுகிறது. மேலான கலைஞர்கள் புரிந்து கொள்வதையே முதன்மைப்படுத்துகின்றனர்.

### சைகைகள் மூலம் செய்தி:

இன்றைய அமைதியானத் தருணத்தில் ஆரம்பித்து வாழ்க்கை நெருக்கடிக்குள் சிக்கி உழன்ற பழைய காலத்திற்குச் சென்று மீண்டும் நிதானமுடனும் பிரியமுடனும் நகரும் உலகிற்கு வந்துவிடுகிறது.

### மிகவும் முக்கியமான பார்வையாளர்கள்:

ஒரு சூழலில் கிடக்கிறபோது என்னென்ன பேசப்படும் பார்க்கப்படும், நினைக்கப்படும் என்றான விசயங்களைத் திரட்டிக் கொண்டுவந்து உயிராக சமைத்துவிடுகிறார்.

### யாரும் இழுக்காமல், தானாக,

கணவன் எங்கோ தொலைந்துபோனபின் நீலாவின் அம்மா, அவர் வீட்டுக்கு வந்து போய்க்கொண்டிருந்த கணவரின் ஒன்றுவிட்ட சகோதரனை இனி வீட்டிற்கு வரவேண்டாம் என்கிறாள். காலம் ஓடுகிறது. நீலா வளர்ந்து ஒரு பையனை அவளும் காதலிக்கிற வயசுக்கு வருகிறபோது அந்த பாஸ்கர பெரியப்பா அம்மாவோடு பேசிக்கொண்டு வீட்டுக்கு வருவது கதையில் சொல்லப்படுகிறது. தவறு நடந்துவிடாமல் தன்னை பாதுகாத்துக்கொள்ள நீலாவின் அம்மா தடுத்திருக்கக்கூடும். இப்போது காலம் மாறிவிட்டது. அனுபவம் வேறொரு முடிவைக்கூட எடுக்கும். இப்போது மகளுக்கு ஒரு அப்பாபோல முன்நின்று செய்ய ஒருவர் தேவை. இளமையும் போய்விட்டது. ஊரும் தவறாகப் பேசாது. எனவே அவரின் வருகை இந்த கணத்திலிருந்து இனி தொடரும் என்பதாக நாம் நினைக்கலாம். ஒரு சுழற்சி. விலகி வந்துகூடும் இடம். எத்தனையோ தமிழ்க் குடும்பங்களின் கதையல்லவா இது.

### ஒரு கூழாங்கல்:

அக்காவிற்குத் திருமணமாகாமல், கல்யாணம் செய்து கொள்ளமாட்டேன் என்று கூறிய தங்கை செம்பாவிற்கும திருமணம் ஆகாமலே போகிறது. இந்த காந்திமதியும் செண்பகமும் அரசுவேலையில் வசதியாக வாழக்கூடிய பெண்கள். இவர்கள் மீது மனதளவில் இச்சைகொண்டு திரிகிற சுந்தரம், பூர்ணலிங்கம் இளசுகள், பூர்ணலிங்கம் காந்திமதியோடு உறவுகொண்டதுபோல பேசுகிறான் பின்னாளில். அது எந்தளவு உண்மை என்பது யூகத்திற்கு விடப்படுகிறது. பாலிய காலத்து இச்சை ஒன்றும் அழிந்துவிடவில்லை. சுந்தரம் தன் மகளின் திருமண பத்திரிக்கை வைக்கும் சாக்கில் காந்திமதி வீட்டிற்குச் செல்கிறான். காந்திமதியின் அழகிய கோலம் சிதைந்துபோய்விட்டது. அவளின் சிரிப்பு வரவேற்பதிலிருந்து அவள் இழந்து போன கனவு அசைகிறது. சுந்தரத்துள் ஒளிந்திருந்த இச்சை முற்றாகத் தீய்ந்து ஒரு பெண்ணின் வாழ்க்கையில் குழந்தை குட்டி என்றில்லாது இப்படி ஆகிவிட்டதே என்று பரிவு தோன்ற கண்ணீர் துளிர்க்கிறது. நம்முன் உள்ள பெண்களின் இன்னொரு பக்கத்தை அறிகிறபோது துக்கம்மேலிடச் செய்கிற அந்த விசயத்தைக் காட்டுகிறார்.

### சுலோச்சனா அத்தை, ஜெகதா மற்றும் ஒரு சுடு மண் காமதேனு:

வரிக்கு வரி நம் அன்றாடச் செயல்களை அங்க அசைவுகளை இழைத்து இழைத்து எழுதிக்கொண்டே வந்து மானிடர்களினுள் பதுங்கி இருக்க இச்சையை வெளிப்படுத்தும் கதை. லட்சுமண மாமாவின் மனைவிக்கும் ஜெகதாவின் கணவனுக்கும் உண்டாகும் இச்சை, ஒரு இழையென்றால் அதனை ஒரு நொடியில் கண்டு கணவனைத் தடுத்து பாதுகாத்துவிட வேண்டும் என்று வேகவேகமாக முடிவெடுக்கிற ஜெகதாவின் இழை மற்றொரு பக்கமாக மிகச்சிறப்பாகக் கூடிவந்த கதை இது. இந்த கதைக்குள் குளித்துவிட்டு ஜெகதா ஓரிடத்தில் தலையைத் துவட்டிக் கொண்டே ‘நீ தானே என் பொன் வசந்தம்’ என்ற பாடலைத் திரும்பத் திரும்ப முணுமுணுக்கிறாள். இந்தப் பாடலின் கற்பனை வீச்சு கதை முழுக்க வியாபித்திருக்கிறதை வாசகன் உணர முடியும். இந்த வரியிலிருந்து ஜெகதாவையும் காயப்போட்ட துணிகளைப் பிரிக்கிறபோது மடியில் அவனுடைய ஜட்டியை வைத்திருக்கிற சுலோச்சனாவையும் நாம் புரிந்து கொள்ளமுடியும். அதை ஜெகதா கண்டு முடிவெடுக்கிற வேகம்தான் கதை. இயல்பான விசயங்கள் எல்லாம் வண்ணதாசன் படைப்புகளில் அழகாகவும் மனதை வருடும் விசயங்களாகவும் மாறிவிடுகின்றன. வாழ்க்கைக்குள் இனிமை தரும் நிகழ்விற்கு ஒளியேற்றி விடுகின்றன. நீங்களும் இப்படி இருந்தவர்கள்தானே கசப்புகளைக் கொஞ்சம் தள்ளிவைத்துவிட்டு மறுபடியும் அந்த ஒளியில் திரியை ஏற்றுங்களேன் வெளிச்சம் வராது போகாது என்று அன்புடன் சொல்கின்றன.

### இன்னொன்றும்:

‘சிறிது வெளிச்சம்’ கதைக்கு அருகில்வைத்து ‘இன்னொன்றும்’ கதையை வாசித்தால் கூடுதல் பரிமாணம் பெறும். சுந்தரத்துச் சின்னம்மையின் இரண்டு காலகட்டத்து வெவ்வேறு வாழ்வின் நிகழ்வுகளாகக் காணமுடியும். இந்தக் கதையைத் தனித்து வாசிக்கும்போது நிகழ்வுகளாகக் காணமுடியும். அப்பா இறுதிவரை பேசாமலே இருந்ததற்கான சிறிய குறிப்பைத் தந்திருக்கவேண்டும். அப்போதுதான் இக்கதை தனித்து வலுவாக நிற்கும். ‘சிறிது வெளிச்சம்’ கதையில் காதலனிடமிருந்து பிரித்து சொந்தத்தில் ஒரு எளியவனுக்கு கட்டி வைக்கப்பட்டவள் என்ற செய்தியைக்கொண்டு வண்ணதாசனின் வாசகர்கள் இக்கதைக்கு ஆழத்தைக் கூட்டிக் கொள்ள முடியும். வேறுவேறு கதையாகப் பார்க்கிறபோது அத்தான் மீது மரியாதை வைத்திருக்கும் சுந்தரத்து சின்னமையுடன் பேசாமல் இருப்பதற்கு ஒரு குறிப்பு சிறு சிக்கலைக்காட்டியிருக்கவேண்டும். ஆனால் அவ்விதமான சிக்கல் சொல்லப்படாமலே சுந்தரத்து சின்னம்மையின் பாத்திரவார்ப்பு சிறப்பாக அமைந்துவிட்டது. பாத்திர வார்ப்பினால் குறிப்பு இல்லாமலே ஈர்க்கும் விதமாக இருக்கிறது.



venugopal@thaiveedu.com




**சென்ற இதழில்...**

- அசோகச் சக்கரவர்த்தியின் (பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டு) கிர்னார் (Girnar) கல்வெட்டு, தம்பபர்ணி (தாமரபரணி) என்று அழைக்கப்பட்ட ஈழத்தில் பௌத்தம் பரப்பும் முயற்சி முன்னெடுக்கப்பட்டிருப்பதை உறுதி செய்கிறது. இதனையே வரலாறு, மகிந்தனும் சங்கமித்தையும் வெள்ள ரசுக் கிளையுடன் இலங்கை வந்து பௌத்த மதத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டார்கள் என்று கூறுகிறது.
- எனவே, பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டளவில் பௌத்தம் ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.
- 1958ம் ஆண்டுக் கலவரத்துக்கு முன், அனுராதபுரி முதலிய தென் இலங்கைப் பகுதிகளில் தமிழ் மக்கள் வாழ்ந்திருந்த வாழ்க்கை பற்றிய சிறு குறிப்பு.
- சங்க காலத்தில் ஈழம், தென் இந்தியா ஆகிய இரு நாடுகளிடையேயான தொடர்பு. ஈழம் அனைத்து வகைகளிலும் தென் இந்தியாவின் தாக்கத்தில் இருந்துவந்திருக்கிறது. தமிழ் கல்வி, விவசாயம், அரசியல் அனைத்துமே தென்னிந்தியாவைத் தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது.
- தமிழ் நாட்டின் ஊடாகவே பௌத்தம் கொண்டுவரப்பட்டது என்பதற்கான சான்றுகள் தமிழ் நாட்டில் காணப்படுகின்றன.
- ஈழத்தில் பௌத்த மடாலயங்கள் அமைக்கப்பட்டு, பொது மக்களின் முக்கிய தேவைகளான. மருத்துவ வசதி, கல்வி முதலியவை இலவசமாக வழங்கி மக்கள் மனத்தில் இடம் பிடித்துக் கொண்டார்கள்.
- வல்லிபுரக் கோவிலில் புத்தர் சிலை.

**இந்த இதழில்:...**

## பௌத்தம் பிறந்தது, வளர்ந்தது, பரப்பப்பட்டது ஆராயப்படுகிறது:

இந்தியாவின் வடமேற்கு எல்லையில் இயற்கையாக அமைந்துள்ள ஹைபர் கணவாய் வரலாற்றில் இந்தியாவுக்குத் தொடர்ந்து பிரச்சினைகளின் தொடக்க வாயிலாக அமைந்திதுந்தது. ஆரியர்கள் இந்தக் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தபோது அவர்களுக்கு என்று ஒரு மதமோ, எழுத்து மொழியோ இருக்கவில்லை என்றும் அவர்கள் இயற்கையையே வழிபட்டார்கள் என்றும் இன்று அறிஞர்கள் நிறுவுகிறார்கள். அவர்கள், சமஸ்கிருத எழுத்து முறையை உருவாக்குவதற்கு முன் பிராகிருத எழுத்து முறையையே பின்பற்றினர். பிராகிருதம் பொது மக்களால் பின்பற்றப்பட்ட மொழி.

**ஆரியர்களின் மதம், வைதீகம்:**

ஆரியர்கள் இந்தியாவில் நுழைந்தபோது சிந்து வெளியில் வாழ்ந்த மக்களின் வழிபாட்டு முறையைப் பின்பற்றத் தொடங்கினார்கள். அவர்கள் உருவாக்கிக்கொண்ட மதம், வைதீக மதமாக உருப்பெற்றது. வைதீகர்களது, வேள்வித் தீயில் ஆடு, மாடு முதலிய உயிரினங்களைப் பலியிடுதல், வைதீகச் சடங்குகள், சாதீயம் முதலிய வைதீகக் கொள்கைகளுக்கு எதிராகச் சில மக்கள் பிரிவுகளும் கொள்கைகளும் உருவாயின. அப்பிரிவுகள், தத்துவ சிந்தனை மரபாகவும், மதங்களாகவும் உருமாறின. இத்தகைய எதிர்ப்புக் கொள்கைகள் எழுந்ததன் மேல் வைதீகர்கள் தமது இனங்களை எச்சரிக்கையுடன் ஒருங்கிணைத்து மதமாக உருவாக்கினார்கள். பொ.ஆ.பி. 5-ம் நூற்றாண்டளவில் வேதங்கள் முறையாக உருவாக்கித் தொகுக்கப்பட்டதாகவும் நூல்களாக மாற்றப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. ‘கர்மா’ என்னும் கொள்கையைப் புகுத்தியவர்களே வைதீகமதத்தவர் தான். அதுவரையிலும் வேதங்கள் தொகுக்கப்படாது வாய்மொழியாகவே கடத்தப்பட்டு வந்தன. ஆரியர்களுக்கு எழுத்து முறை இருக்கவில்லை.

வாய்மொழியாக இருந்த புராணக் கதைகள், புனைகதைகள் முதலியவற்றில் இயற்கைக்கு முரணாண கதைகள் காணப்பட்ட அதே வேளையில் பல வரலாற்றுத் தகவல்களும் காணப்பட்டன. ஆரியர் என்னும் பதம் உயர்ந்தவர்கள், மேலானவர்கள் என்னும் பொருள்பட அமைந்திருந்தது. அதாவது, ஆரியர், ஏனைய சமூகத்தினரைவிட உயர்ந்தவர்கள் என்னும் கருத்து உருவாகியது. வேத மரபைப் பின்பற்றியவர்கள் வைதீகர் என்று அழைக்கப்பட்டனர்.

வைதீகம்: 1. சாங்கியம், 2. யோகம், 3. நியாயம், 4. வைசேடிகம், 5. மீமாம்சம், 6. வேதாந்தம் ஆகிய ஆறு தரிசனங்களைக் கொண்டது.

**அவைதீகம்:**
வைதீகத்திற்கு மாறாக இயற்கைச் சிந்தனை மரபுகளைக கொண்ட சில சிந்தனையாளர்கள் தோன்றினார்கள். தொடக்க காலத்தில் ஒன்றாக இணைந்து வைதீக மதத்தை எதிர்த்த இவர்கள் 'அவைதீகர்கள் என்றும் அவர்கள் பின்பற்றிய கொள்கைகள் 'அவைதீகம்' என்றும் அழைக்கப்பட்டன. காலக்கிரமத்தில் தம்முள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரண மாக, இவர்கள் பல பிரிவுகளாகப் பிரிந்தனர்.

அவைதீகத்தைப் பின்பற்றியவர்கள் நாத்திகர்கள் என்றும் அவர்கள் உருவாக்கிய கொள்கைகளைப் பின்பற்றிய மதங் கள் நாத்திக மதங்கள் அல்லது மெய்யியல் மரபுகள் அல் லது சிந்தனை மரபுகள் என்றும் அழைக்கப்பட்டன. இந்த வகையில் தோன்றிய மதங்கள் 1. உலகாயதம் 2. ஆசீவகம் 3. பௌத்தம் 4. ஜைனம் ஆகும். இவ்வாறு தோன்றிய கொள்கை கள் நாளாவட்டத்தில் ஜைனம், ஆசீவகம், பௌத்தம் முதலிய மதக் கொள்கைகளாக வளர்ந்தன. ஆரியரது கொள்கைக ளுக்கு எதிர்ப்பாய் உதித்த சிந்தனை மரபுகளே உலகா யுதம், ஆசீவகம், ஜைனம், பௌத்தம் ஆகிய மதக் கொள் கைகளாகயின.

**அவைதீகம்:** காலக்கிரமத்தில், இச்சிந்தனை மரபுகள், உல காயதம், ஆசீவகம், பௌத்தம், ஜைனம் என மதங்களாக வளர்த்தெடுக்கப்பட்டன.

- உலகாயதம்: இது சாவகம் என்றும் அழைக்கப்படும். இம்ம ரபு பன்னெடும் காலமாகப் பலரால் உருவாக்கப்பட்டது. இதன் முன்னோடி புத்தகோசர் ஆவார். இது பொருள் முதல்வாதம் என்றும் பொருள் முதல் அனுபவ வாதம் என் றும் அழைக்கப்பட்டது. இது, கடவுள், பிறவிகள், ஆன்மா முதலியவற்றை மறுக்கும் சிந்தனை மரபாகும்.
- ஆசீவகம்: கொள்கையளவில் பல ஆசிரியர்களால் வளர்த் தெடுக்கப்பட்டு ஈற்றில் மற்கலியால் மதமாக நிறுவனமய மாக்கப்பட்டது. ஆசீவகத்தில் ஊழகம் என்னும் நியதிக் கொள்கை முக்கியமானது.
- பௌத்தம்: இது சித்தார்த்தரால் உருவாக்கப்பட்டு வளர்க் கப்பட்டது. ஏறக்குறைய பொ.ஆ.மு. 6 ம் நூற்றாண்டில் வட நாட்டில் உருவாக்கப்பட்டு ஏறக்குறைய 3 நூற்றாண்டு காலம் வளர்க்கப்பட்டு, பிற்காலத்தல், அசோகச் சக்கர வர்த்தி காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தைச் சூழ வுள்ள நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இன்று உல கின் பல நாடுகளில் நாட்டு மதமாக் கொண்டாடப்படுகி றது.
- ஜைனம்: இது, ஆதிநாதரால் உருவாக்கப்பட்டு மகாவீர ரால் நிறுவன மயமாக்கப்பட்டது. இம் மதமும் கொல் லாமை, புலால் உண்ணாமை முதலிய கொள்கைகளை வலியுறுத்தியது. 'நிறுவனமயம்' என்னும் பதத்தின் பொருள் 'ஒரு மதத்திற்கான கொள்கைகளை முறைப்படுத்தி அம் மதத்திற்கான புனித நூல்களை இயற்றி அல்லது தொகுத்து, அம்மதத்தை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவருவதாகும்.

தொல்காப்பியர் (காலம் பொ.ஆ.மு. 711) கால மதக் கொள் கைகள் தொல்காப்பியம், சிறப்புப் பாயிரத்தில், தொல்காப் பியர்,
'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று போற்றப்படுகி றார். 'ஐந்திரம்' என்னும் நூல் பற்றிவேறுபட்ட கருத்துக்கள் உள, அவை, இக் கட்டுரையின் தேவைக்கு அப்பாற்பட்டவை. ஐந்திரம் என்பது தமிழில் எழுதப்பட்ட இலக்கண நூல். தொல் காப்பியத்திற்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த தமிழரின் வாழ் வியலைச் சொல்லும் நூலாகும். 'ஐந்திரம்' என்பது தொல்காப் பியர் காலத்திற்கு முன் வாழ்ந்த தமிழர் வாழ்வியல் மரபு பற் றிக் கூறும் இலக்கண நூலாகும். ஐந்திரம் என்பது பற்றிய ஒரு



சிறு விளக்கம் - அது ஒரு கலை, நுணுக்கவியல், அறிவியல், பண்பாட்டியல் என்று வைத்துக் கொள்ளலாம். குறியீடுகள் நிறைந்த நூல்.

தொல்காப்பியம் - இது, வாழ்வியலுக்கும் இலக்கணம் கூறும் இலக்கணநூல். அப்படிப்பட்ட இலக்கணத்தை இயற்றுகின்ற ஒருவர் இந்த இலக்கணத்தில் மிக்க தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஐம்பூதங்களின் மயக்கம் இவ்வுலகம். இவ்வுலகில் வாழும் அனைத்துப் பொருட்களும் ஐம்பூதங்களின் புணர்ச்சியால் உருவானவை தான். இவ்வுலகில் உள்ள ஓரறிவு உயிர்களிலி ருந்து ஆறறிவுள்ள உயிர்கள் வரை உள்ள உயிர்களின் இலக்கணத்தைத் தொகுக்கவேண்டிய ஒருவருக்கு, ஐம்பூதங் களின் புணர்ச்சி குறித்தும் அவற்றின் புணர்ச்சியின் நீட்சியாக விளையக் கூடிய திறமை குறித்தும் சிறந்த ஞானம் இருக்க வேண்டும். இத் திறமையைத் தான் இறைவன் மயன்மாமுனிக் குக் கற்றுத் தந்தார். இது மயன் மாமுனி வழியாக அவரது வாரிசுகளுக்குக் கடத்தப்பட்டது. இவ்வாறு கடத்தப்பட்ட அறிவு பற்றிய இலக்கணம் தான் ஐந்திரம். கதையேயானா லும் பொருள் பொதிந்தது. இதனால், இயற்கை சார்ந்த நுண் ணறிவு குறித்த தெளிவு தான் ஐந்திரம். திறம், திரம் என்பது திறமையைக் குறிக்கும் ஒரு சொல்லாடல். ஐந்திரம் அல்லது ஐந்திறம், இங்கு றகரம் மாறி வந்திருக்க வேண்டும்.

இந்தப் பிரபஞ்சமும் அனைத்து சீவராசிகளும் பஞ்சபூதங்கள் அல்லது ஐம்பூதங்கள் ஆகியவைகளின் சேர்க்கையினால் ஆனது ஆகும். வானம், காற்று, நெருப்பு, நீர் மற்றும் நிலம் ஆகியவை ஐம்பூதங்களாகும். இந்தக் கூட்டுப் பொருட்களின் பகுதிகள் பஞ்சீகரணத்தினால், இப்பிரபஞ்சம் மற்றும் ஜீவராசிகள் தோன்றின. இங்கு சொல்லப்பட்ட 'ஐந்திரம்' என்பது பிற்காலத்தில் ஆரியர்களால் 'வியாகரணமாக" மாற்றப்பட்டிருக்கிறது. தொல்காப்பியர் இயற்றியது தமிழ் இலக்கண நூலாகும். தொல்காப்பியரது புலமை அவர் எழுதிய நூல் குறித்ததாகத்தான் இருக்கவேண்டும். இவ்வழியில் பார்க்கும் போது தொல்காப்பியர் பயின்று பாண்டித்தியம் பெற்றது ஐந்திரம் என்னும் இலக்கண நூலாகும். தொல்காப்பியருக்குச் சமகாலத்தில் வாழ்ந்த, ஒரு சாலை மாணாக்கனான பனம்பாரணரால் இயற்றப்பட்டதே தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம். இச் சிறப்புப் பாயிரத்தின்படி தொல்காப்பியர்,

***'புலம் தொகுத்தோன் ...***
***ஐந்திரம் நிறைந்த***
***தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிப்***
***பல்புகழ் நிறுத்த படிமையோன்'***

என்று கூறுகிறது. இங்கு தொல்காப்பியன் 'புலம்' (இலக்கணம்) தொகுத்தான் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. மேலே கொடுக்கப்பட்ட ஐந்திரம் பற்றிய விளக்கத்தின் பிரகாரம், தொல்காப்பியர் காலத்தில் மதம் என்பது சரியாக உருப் பெறவில்லை. பல தெய்வங்களின் தொடக்க நிலையைக் காணக்கூடியதாக உள்ளது. பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டளவில் ஆசீவகம், பௌத்தம், சமணம் முதலிய சமயங்கள் வடக்கே இருந்து தெற்கே பல்வேறு காரணங்களால் பரவத் தொடங்கின. இது, அசோகர் காலத்தில் பௌத்தம் தென்னகத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் அசோகச் சக்கரவர்த்தியின் இரண்டாம் பாறைக் கல்வெட்டுத் தகவலுடன் ஒத்துப்போகின்றது.

அசோகச் சக்கரவர்த்தியின் மதமாற்றமும் பௌத்தமதப் பிரச்சாரமும் - அசோகரது மதமாற்றம் பற்றியும் அவர் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பௌத்த மத்தைப் பரப்ப மேற்கொண்ட முயற்சி பற்றியும் சிறிது விரிவாக ஆராயவேண்டியது இந்நிலையில் அவசியமாகிறது. இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றில் பெருமையாகப் பேசப்படும் பேரரசுகளில் ஒன்றான மௌரியப் பேரரசின் மூன்றாம் பேரரசன். காலம், பொ.ஆ.மு. 268 முதல் 232 என்று அறியப்படுகிறது. பாடலிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட மௌரியப் பேரரசு, இவனது ஆட்சிக்காலத்தில், மேற்கே தற்போதைய ஆப்கானிஸ்தான் முதலாக கிழக்கே தற்போதைய வங்காளதேசம் வரை பரவியிருந்தது. தமிழ்நாடு, கேரளா தவிர்ந்த, பாக்கிஸ்தான் உள்ளிட்ட இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியும் அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சிக் கீழ் இருந்ததாக அறியப்படுகிறது.



(தொடரும் ...)

selvanayaki.s@thaiveedu.com



# குருக்கள் ஸ்வாமியான குள்ளச்சாமி

– கிருங்கை சேதுபதி

மகாகவி பாரதியின் வாழ்வு மகத்தான வாழ்வாக மலர்ந்ததற்குக் காரணம், எள்ளத்தனைப் பொழுதும் வீணாகாமல், இமைப்பொழுதும் சோர்வில்லாமல், எடுத்த பிறவியைப் பயனாக்கியமைதான். 39 ஆண்டுகளுக்குள் முழுமையாகிய அவர்தம் வாழ்வு அமரவாழ்வு. மரணத்தை வென்று நிலைநிற்கும் சிறப்பான வாழ்வு.அகமென்றும், புறமென்றும், அகப்புறம் என்றும் வகைப்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கும் வாழ்வை, வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி,இகமென்றும் பரமென்றும் பிரிக்கவழியின்றி, இந்த இப்பிறவியிலேயே, சொந்த மண்ணிலேயே சொர்க்கத்தைக் கொண்டுவந்து நிலைநிறுத்தி, என்றும் இருக்க முடியும் என்பதைச் செய்து காட்டிய சிறப்பு, பாரதிக்கு உண்டு. அதற்கான படிநிலைகளைத் தன் பாடல்களில் நிறைத்தவர் பாரதி.

அது, சங்கப்புலவர்கள் தொடங்கி, வள்ளலார் வரைக்கும் வளர்த்துத் தந்த பாதை. அதில், கம்பருக்கும் இடம் உண்டு. கார்ல் மார்க்சுக்கும் இடம் உண்டு. வங்கம் தந்த அரவிந்தருக்கும், ஜகதீச சந்திரவசுவுக்கும் பங்கு உண்டு. ஔவையாருக்கும் சகோதரி நிவேதிதா தேவிக்கும் சரிநிகர் இடம் உண்டு. கோவிந்தசாமி முதலாக, குவளைக்கண்ணன் வரைக்கும் தன் வாழ்வில் தக்க இடம் தந்த பாரதி, தான் சந்தித்த மனிதர்களுக்கு மட்டுமன்றி, சிந்திக்கத் தூண்டிய குயிலுக்கும் காக்கைக்கும், கடலுக்கும் மலைகளுக்கும் உரிய இடம் தந்து கொண்டாடி மகிழ்ந்த பாங்கில், பல்லாயிரம் ஆண்டு வாழ்ந்த பயனைத் துய்க்க முடிந்தது. அருணகிரிநாதர், தாயுமானவர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் என அனைவரையும் உள்வாங்கி, தான் உணர்ந்த உலகஞானியர்தம் உணர்வலைகளையும் தனதாக்கி நிமிர்ந்த வானம் அவருடையதாய் இருக்கிறது. இந்த வரிசையில் குருக்கள் என்ற சிறப்புக்கு உரியவராக, குள்ளச்சாமி நிலைக்கிறார். தன் வாழ்வில் மூன்றில் ஒரு பங்கை முழுமையாக, பாரதியார் கழித்த இடம் புதுச்சேரி. அதில், மூன்றில் ஒரு பங்குக் காலத்தைக் குள்ளச்சாமி தனக்குரியதாக்கியிருக்கிறார். எனவே, பாரதிக்கு முன்னோடியானவர்கள் வரிசையில் முதலானவராகக் குள்ளச்சாமியை நாம் குறிப்பிட வேண்டியதாய் இருக்கிறது. அது கருதியே, பாரதியும் தன் ஞானகுருவாகிய குள்ளச்சாமியை, ஞாயிறுக்கு நிகராகப் பாட்டினில் நிறுத்துகிறார்.

தன்னைப் புதுமை தேடும் பித்தனாகவும், பொதுமை தேடும் தேசபக்தனாகவும் இயக்கிவிட்ட குருநாதர்களுக்கு மத்தியில், அமரவாழ்வு எய்தும் அரியவழி புகட்டும் சித்தனாக மாற்றிய குருக்கள் குள்ளச்சாமி என்பதில் பாரதியின் உறுதிப்பாடு, அவர்தம் பாரதி அறுபத்தாறு நூலில் துலக்கமாகிறது. கோவிந்தஸ்வாமியையும், யாழ்ப்பாணத்துச் சுவாமியையும், அவரைத் தன் வசம் கொண்டுவந்து சேர்த்த குவளைக்கண்ணனையும் புகழ்ந்து பாடிய பாரதி, குள்ளச்சாமியைப் புகழ்ந்து பாடியதோடன்றி, குருக்கள் என்று துதிக்கிறார். அது குருக்கள் ஸ்துதி என்று நான்கு பாடல்களாய் வளர்கிறது. அதற்கு முன்னும் பின்னும் தான் கற்ற, பெற்ற அனுபவப்பாடங்களை உபதேசங்களாகவும் உணர்வுக் குறிப்புகளாகவும் பதிவுசெய்கிறார் பாரதி. அவை மரணத்தை வெல்லும் மார்க்கத்தைக் காட்டுகின்றன.

## மரணத்தை வெல்லும் மார்க்கம்:

நாணம், கவலை, சினம், அச்சம், வேட்கை ஆகிய ஐந்தினையும் அழித்துவிட்டால் அப்போது சாவும் அங்கே அழிந்து போகும். இவற்றுள் சினமே மரணத்தின் மையம். வேட்கையாகிய விருப்பம் உட்கிடக்கையாகித் தூண்டுகிறது. நாணம் தடுக்கிறது. பெறமுடியாக் கவலை சூழ்கிறது. பெற்றவர்கள் மீதும், பெறவிடாமல் வைத்துக்கொண்டிருப்பவர்கள்மீதும் சினத்தை உண்டு பண்ணுகிறது. அது அச்சமாக உருவெடுக்கிறது. அச்சமே மரணமாகிறது. மிச்சத்தைச் சொல்ல வேண்டியதில்லை, இவற்றுள் ‘முதலில் வெல்ல வேண்டியது சினத்தை’ என்கிறது பாரதியின் ஞானம். ஞானத்தை மறந்தார்க்குச் சினம் வருகிறது. ‘சினம் கொள்வார் தம்மைத் தாமே தீயால் சுட்டுக்கொண்டு செத்திடுவார்தம்மை ஒப்பார். சினம் கொள்வார், தம் கழுத்தைத் தாமே வாள்கொண்டு அறுத்தவர் ஆவார்.’ சினம், கவலையைத் தருகிறது. கவல்கிற நெஞ்சம், மனித வாழ்வைத் துயர்க்கடலில் வீழ்த்திவிடுகிறது. இதற்கு மருந்து, சக்தியின் துணை. அவள் துணையால், கைக்கொள்ள வேண்டிய கடப்பாடு, இரண்டு. ஒன்று, தேம்பாமை. மற்றொன்று பொறுமை. இரண்டும் ஒன்றுபோல் தோன்றினாலும் அடிப்படையில் வெவ்வேறு.

தேம்பித் தேம்பி இடருற்று மடிந்தவர்கள் கோடிகோடிப்பேர். இந்த எண்ணிக்கை இரு கோடி அல்ல. கோடியே கோடி. அதாவது, (கோடி X கோடி) தேம்புதல் அச்சத்தைத் தருகிறது. தன்னளவில் தேம்பியழிவாரின் நிலை தற்கொலை. பொறுமை இழந்தவர்களால் எழும் சினத்தால் நிகழ்வது கொலை. பொறுமை இழப்பதால் முதலில் நிகழ்வது அகப்போர். அதுவே புறப்போராகி, பூமியில் வாழ்கிற அனைத்து உயிர்களையும் அழிக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டு, பாரதப்போர். அறக்கடவுளின் புதல்வனாகிய யுதிட்டிரன் என்னும் தருமன் பொறுமையின் சிகரமாகத் திகழ்ந்தவன். அவன் இறுதியில் பொறுமை நெறி தவறியதால் விளைந்தது போர்.

***‘பொறுமையின்றிப் போர்செய்து பரத நாட்டைப்***
***போர்க்களத்தே அழித்துவிட்டுப் புவியின் மீது***
***வறுமையையும் கலியினையும் நிறுத்தி விட்டு***
***மலைமீது சென்றான் பின் வானஞ் சென்றான்’.***

*- பாரதி அறுபத்தாறு - 13*

‘ஆனாலும், புவியின்மிசை உயிர்களெல்லாம் அநியாய மரணம் எய்தல் கொடுமையன்றோ? தேனான உயிரை விட்டுச் சாகலாமோ?’ என்று மெல்லிய சினம் பாரதிக்கு வந்துவிடுகிறது. உடனே, ‘செத்திடுதற்குக் காரணம் யாது?’ எனத் தேடும் ஞானம் அவருக்குள் வந்துவிடுகிறது. ஞான அனுபவத்தின் முடிவைக் கண்டு, உலகறிய உரைத்த விஞ்ஞானி ஜகதீச சந்திர வஸுவின் உபதேசம் நினைவுக்கு வருகிறது.‘நாடியிலே அதிர்ச்சியினால் மரணம்’ எய்தும் என்கிற ஞானத்தைப் பாடலாய் விரிக்கிறது பாரதியின் கவியுளம்.

***‘கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி உண்டாம்***
***கொடுங் கோபம் பேரதிர்ச்சி சிறியகோபம்***
***ஆபத்தாம் அதிர்ச்சியிலே சிறிய தாகும்***
***அச்சத்தால் நாடியெலாம் அவிந்து போகும்***
***தாபத்தால் நாடியெலாம் சிதைந்து போகும்***
***கவலையினால் நாடியெலாம் தழலாய் வேகும்***
***கோபத்தை வென்றிடலே பிறவற் றைத்தான்***
***கொல்வதற்கு வழியெனநான் குறித்திட் டேனே.’***

*மேலது - 14*

கோபத்தால் நாடியில் அதிர்ச்சி உண்டாகிறது. அச்சத்தால் நாடி அவிந்து போகிறது. தாபத்தால் (வேட்கையினால்) நாடி சிதைகிறது. கவலையினால் நாடி நெருப்பாய் வேகிறது. இப்படி, மரணத்தின் நாடி பிடித்துப் பார்த்த பாரதி, நோய் நாடி, நோய் முதல் நாடி, அதுதணிக்கும் வாய் நாடி, வாய்ப்பச் செய்யச் சொல்கிற வைத்தியம், ‘கோபத்தை வெல்ல வேண்டும். கோபத்தை வெல்பவனால்தான் ஏனையவற்றைக் கொல்ல முடியும்’ என்பது அவர்தம் உறுதிப்பாடு.

## பாரதியின் வாழ்வியல் கோட்பாடு:

தோற்றம்- மறைவு ஆகிய எல்லைகளுக்கு இடைப்பட்ட வாழ்வு என்பது தொடர் இயக்கம். அது பிறப்புக்கும் முந்தையது. இறப்புக்கும் பிந்தையது. ஆதியந்தம் காண முடியாத அனந்தப் பெரும்பயணம் வாழ்க்கை. இதனை அறியவும், இயக்கவும் பாரதி, அறிவியலையும் ஆன்மிகத்தையும் துணைக் கொள்கிறார். அறிவியலால் இன்னும் கண்டறியமுடியாத பல அனுபவ உண்மைகளைக் கருதுகோள்களாய், தொன்மங்களாய் வைத்து ஆன்மிகம் விளக்குகிறது. ஆன்மிகம் முன்னர் முன்வைத்த கருத்துருக்களை, அறிவியல் மேல்விளக்கம் செய்திருக்கிறது. இவ்விரண்டையும் கரைகளாய் அமைத்து முன்னோடும் ஆறாக, பாரதியின் தேடல் இயக்கம் தொடர்கிறது. அது பல புதிய உண்மைகளையும் புதிர்களையும் விடுவிக்கின்றது. அந்த வகையில் பாரதி முன்வைக்கும் தொன்மங்களில் பாரதமும், பாகவதமும் அமைகின்றன. பாஞ்சாலி சபதத்தில் சொல்லி முடியாத சில உண்மைகளைத் தன் கதைகளில், கட்டுரைகளில், சில கவிதைகளில் பாரதி அமைத்திருக்கிறார். அதுபோல், அவரை ஈர்த்த மற்றொரு தொன்மம், இரணியன்-பிரகலாதன் கதை. அது அவர்தம் இறுதிக்காலத்தில் எழுத நினைத்து முடியாதுபோன நாடகம். இன்னும் சில தொன்மங்களையும் அவர் வாழ்வியல் கோட்பாட்டினை விளக்கத் தொட்டுக் காட்டிய இடங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் எதற்கு? அமரவாழ்வு எய்துதற்கு வழி காண்பதற்கு. இறப்பின்றித் துலங்குகிற நிலைப்பாட்டை, தன் காலத்துத் தமிழறிஞர் உ.வே.சா. பெற்றுவிட்டார் என்று வாழ்த்திய பாரதி, ஏனையவர்களும் அந்நிலை எய்துதற்கான நெறிமுறைகளைச் சித்தர் மனோநிலையில் நின்று உபதேசிக்கிறார். அதற்கான உந்தாற்றலை, இரணியன்-பிரகலாதன் கதையில் இருந்து பெறுகிறார்.

தானே பிரகலாதன் ஆகி சினத்திற்குக் காரணமான பொறுமை இழப்பிற்குத் தருமனை முன்னிறுத்தி, பாரதி அறுபத்தாறில் முன் விளக்கம் அளித்த பாரதி, கோபத்தைக் கொல்ல, இரணியன்-பிரகலாதன் கதையினை முன்னிறுத்துகிறார். அதில் கோபத்தின் கொடுமுடியில் நின்று இரணியன் உறுமுகிறான். ‘சொல்லடா ஹரி என்ற கடவுள் எங்கே? சொல்.’ கோபத்தின் கொடுமுடி என்று இந்த இடத்தைக் குறிப்பதற்குக் காரணம், இதற்கு முன்னர், எந்தெந்த வழிகளில் எல்லாம் மரணம் வருமோ, அந்தந்த வழிகளில் எல்லாம் தன் மகனை இருத்திப் பார்த்துத் தோற்றுப்போனதன் காரணமாக விளைந்த உச்ச பட்சக் கோபம் இது. அப்போதும் கூட, பொறுமையின் சிகரமாக, பிரகலாதன் திகழ்ந்து அருமையாய்ப் பதில் அளிக்கிறான் ‘தூணில் உள்ளான். நாராயணன் துரும்பில் உள்ளான்’.

இந்த இடத்தில் இருந்து பாரதியே, நவீன பிரகலாதன் ஆகிப் பேசுகிறார் இல்லையில்லை. கேட்கிறார்

***‘வல்லபெருங் கடவுள் இலா அணுஒன்று இல்லை***
***மஹாசக்தி இல்லாத வஸ்து இல்லை***
***அல்லல் இல்லை, அல்லல் இல்லை, அல்லல் இல்லை***
***அனைத்துமே தெய்வமென்றால் அல்லல் உண்டோ?’***

*மேலது - 15*

அறிவியலும் அருளியலும் (ஆன்மிகமும்) ஒத்துப் போகிற இடம் இது.  இங்கே இருந்துதான், பாரதிச்சித்தர் உபதேசிக்கத் தொடங்குகிறார்.

***‘கேளப்பா சீடனே, கழுதை ஒன்றைக்***
***கீழான பன்றியினைத் தேளைக் கண்டு***
***தாளைப்பார்த்து இருகரமும் சிரம்மேல் கூப்பிச்***
***‘சங்கர,சங் கர’என்று பணிதல் வேண்டும்***
***கூளத்தை மலத்தினையும் வணங்கல் வேண்டும்***
***கூடிநின்ற பொருள் அனைத்தின் கூட்டம் தெய்வம்.***
***மீளத்தான் இதைத்தெளிவாய் விரித்துச் சொல்வேன்***
***விண்மட்டும் கடவுளன்று மண்ணும் அஃதே.***

*மேலது - 16*



**சுத்தஅறி வேசிவம் என்று உரைத்தார் மேலோர்;**
**சுத்தமண்ணும் சிவமென்றே உரைக்கும் வேதம்;**
**வித்தகனாம் குருசிவம் என்று உரைத்தார் மேலோர்;**
**வித்தையிலாப் புலையனும் அஃது என்னும் வேதம்.**
**பித்தரே அனைத்துஉயிரும் கடவுள் என்று**
**பேசுவது மெய்யானால் பெண்டிர் என்றும்**
**நித்தம் நுமது அருகினிலே குழந்தை என்றும்**
**நிற்பனவும் தெய்வமன்றோ, நிகழ்த்து வீரே.'**

*மேலது - 17*

**'உயிர்கள் எல்லாம் தெய்வம் அன்றிப் பிறவொன் றில்லை**
**ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்**
**பயிலும் உயிர் வகைமட்டும் அன்றி இங்குப்**
**பார்க்கின்ற பொருள் எல்லாம் தெய்வம் கண்டீர்**
**வெயில் அளிக்கும் இரவி, மதி, விண்மீன், மேகம்,**
**மேலும் இங்குப் பலபலவாம் தோற்றம் கொண்டே**
**இயலுகின்ற ஜடப்பொருள்கள் அனைத்தும் தெய்வம்;**
**எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்.'**

*மேலது- 18*

என்கிறார். இந்த இடத்தில், மாயாவாதத்தைப் பொடிப்பொடியாக்கும் பாரதியின், 'நிற்பதுவே நடப்பதுவே' என்னும் பாடலையும், அதற்கு முன்னும் பின்னும் பாரதி எழுதிய குறிப்புரைகளையும் இணைத்துச் சிந்திப்பது நல்லது.

இதனை எழுதுவது பாரதி என்று நினைத்துவிடக்கூடாது. பாரதியைக் கொண்டு பராசக்தி எழுதுகிறாள். பாரதி வண்டாக, பராசக்தி மலராகத் தோற்றம் கொள்கிறார்கள். அப்போது, பாரதி, சித்தராகப் பிறப்பெடுக்கிறார்.

***‘எனக்கு முன்னே சித்தர்பலர் இருந்தார் அப்பா,***
***யானும் வந்தேன் ஒருசித்தன் இந்த நாட்டில்***
***மனத்தினிலே நின்று இதனை எழுது கின்றாள்,***
***மனோன்மணிஎன் மாசக்தி வையத் தேவி***
***தினத்தினிலே புதிதாகப் பூத்து நிற்கும்***
***செய்யமணித் தாமரைநேர் முகத்தாள் காதல்***
***வனத்தினிலே தன்னைஒரு மலரைப் போலும்***
***வண்டினைப்போல் எனையும் உரு மாற்றி விட்டாள்!’***

*மேலது- 1*

என்கிறார். மேலும்,

***‘தீராத காலமெலாம் தானும் நிற்பாள்,***
***தெவிட்டாத இன்னமுதின் செவ்வி தழ்ச்சி,***
***நீராகக் கனலாக வானாக் காற்றா(ய்)***
***நிலமாக வடிவெடுத்தாள், நிலத்தின் மீது***
***போராக நோயாக மரணம் ஆகப்***
***போந்துஇதனை அழித்திடுவாள் புணர்ச்சி கொண்டால்***
***நேராக மோனமகா ஆனந்த வாழ்வை***
***நிலத்தின்மிசை அளித்து அமரத் தன்மை ஈவாள்.’***

*மேலது- 1*

என்று உறுதி பயக்கிறார். ஆக்கல், காத்தல். அழித்தல் என்னும் பணிகளை ஆற்றும் பராசக்தியின்மீது அழியாக் காதல் கொண்ட பாரதி, அவளை அனைத்துமாகப் பார்க்கிறார். அதில் தன்னையும் இணைக்கிறார். அந்த, ‘தான்’- தெய்வமாகிறது. அது, பாரதியின் வசனகவிதையில் விளக்கமாகிறது. இந்தத் தெளிவையும் தரிசனப் பார்வையையும் பாரதிக்குத் தந்தவர் குள்ளச்சாமி. அந்த நன்றியுணர்வை,

***‘தேன் அனைய பராசக்தி திறத்தைக் காட்டிச்***
***சித்தின் இயல் காட்டிமனத் தெளிவு தந்தான்.***
***வானகத்தை இவ்வுலகி லிருந்து தீண்டும்***
***வகை உணர்த்திக் காத்தபிரான் பதங்கள் போற்றி!’***

*மேலது - 19*

என்று போற்றி மகிழ்கிறார் பாரதி.குருக்கள் ஸ்வாமியான குள்ளச்சாமி குள்ளச்சாமியின் சந்திப்புக்குப் பின்னர் தனக்குள் நிகழ்ந்த மாற்றங்களை, வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் எழுதியும், சொல்லியும் காட்டியிருக்கிற பாரதி, அவர் தமக்குக் குருவான தன்மையையும் பலபட எடுத்துரைத்திருக்கிறார். அதன்வழி தனக்குள் நிகழ்ந்த சித்தமனோபாவமும் பாரதி அறுபத்தாறில் நுட்பமாகப் பதிவாகியிருக்கிறது. ஏனைய சித்தர்களில் இருந்து மாறுபட்ட சித்தராகக் குள்ளச்-சாமி, பாரதிக்குத் தோன்றுகிறார். வழக்கமாக, காமத்தைக் கடியுமுகமாகப் பெண்களைச் சிறுமைப்படுத்தும் வாசகங்கள் சித்தர்களின் வாக்கில் புலப்படுவதுண்டு. முடிந்தவரையில் துறவை வலியுறுத்தும் போக்கும், இறைநெறி பற்றும் தீவிரப் போக்கும் உறுதியாய் நிற்கும். ஆனால், குள்ளச்சாமியோ, உலகியல் இன்பங்களைத் துறக்காமல், கொண்ட இல்லறக் கடமைகளைத் தவிர்க்காமல், தெய்வ பக்தியால் தேசப் பெருமையைக் காக்க முனைகிற சித்தராக விளங்குகிறார்.

ஆங்கில அரசு ஏற்படுத்திய நெருக்கடி காரணமாக, வறுமை, வாழ்வில் ஏற்பட்ட வெறுமை, பிறவி நோக்கம் தெரியத் தனக்குள் மூழ்கிய தவச்சிந்தனை எல்லாம் கூடி, இல்லறத்தில் பிடிப்பின்மையை பாரதிக்குள் ஏற்படுத்திவிடவே செய்தன. அதனால் நேர்ந்த ஊடல், பிணக்கு, எல்லாம் கூடி, செல்லம்மாவுக்கும் பாரதிக்கும் இடையே பிளவை அதிகரித்துக் கொண்டிருந்த நேரத்தில் குள்ளச்சாமி குருவாக வருகிறார். அவர் பாரதிக்கு மனத்தெளிவு தருகிறார். தப்பாத சாந்த நிலையினை அளிக்கிறார். மரணம் என்ற குளிர் நீக்கும் கதிரவனாய் முன்னிற்கிறார். பாசத்தை அறுத்து, பயத்தைச் சுட்டு, நாசத்தை அழித்து, யமனைக் கொன்று, ஞான கங்கையை முடிமேல் அணிந்து, ஆசை எனும் கொடிக்கு ஒரு தாழ் மரமே போல, ஆதியாகி நிற்கிறார்.

இந்தக் காலக்கட்டத்தில் பாரதிக்குள் நேர்ந்த அகப் புறத் தாக்கங்கள் பல புதிய விளைச்சல்களைத் தமிழுக்குத் தந்தன. அதுவரையில், ஆவேசமிக்க அரசியல் கவிதைகளும், புதிய அறம்போதிக்கும் யதார்த்தக் கவிதைகளும் புனைந்து வந்த பாரதிக்குள், புதுச்சேரி வாழ்க்கை பல புதிய போக்குகளைப் புகுத்திவிட்டது. விதியின் விளையாட்டை, வேதங்களின் சாரத்தை, இலக்கியங்களின் நுண்பொருளை ஆழத் தேட வேண்டிய அவசியத்தைக் கொண்டு வந்து சேர்த்தது.

தன்னை நோக்கிய தரிசனத் தேடலில், மனத்தின் போக்குகளை ஆராய்ந்து, எழுதத் தொடங்கியபோது நிகழ்ந்த மாற்றங்கள், அவர்தம் புறவாழ்வைப் பாதிக்கத் தொடங்கின. ஆனபோதிலும், ஆட்டிப்படைத்த கவிதாசக்திக்கு இசைந்து கொடுத்தமையால் புதிய ஆக்கங்கள் விளைந்தன. தன் வரலாறாக, இளம்பருவநினைவுகளால், கனவு(ஸ்வயசரிதையு)ம், நுண்வரலாறாக, சித்தர்களின் தரிசனத்தால், பாரதி அறுபத்தாறும் பாரதியிடமிருந்து பிறந்தன. தன் காலத்து அறிவியல் முன்னேற்றங்களையும் தொல் பழமைக்காலத்து ஆன்மிக விழுமியங்களையும் ஒருசேர இணைத்து, பிரபஞ்சம் தழுவிய பேருணர்வை, சக்தியெனும் சித்திரத்தில் புலப்படுத்தி, பக்தி மரபில் பாரதி தந்த படைப்புகள் நிலைப்படுத்தின.

இதிகாசத் தொன்மத்திலிருந்து பாஞ்சாலி சபதத்தையும், ஆழ்வார்கள் மரபிலிருந்து கண்ணன் பாட்டையும், ஆவேசக் கவியுணர்வில், அடிமனத்து உணர்விலிருந்து குயில் பாட்டையும் எழுதிய பாரதிக்குள் கவிந்த பக்தியொருமை விநாயகர் நான்மணிமாலையாய் வெளிப்பட்டது. அவ்வப்போது தேவை கருதிப் புனையப்பெற்ற இறை வணக்கப்பாடல்களில், தேச பக்தியும், தெய்வ பக்தியும் கனிந்து, ஆன்ம வளர்ச்சிக்கு அடித்தளமிட்டன. தனித்தனியே கிடக்கும் புள்ளிகளை இணைக்கக் கிடைக்கும் அழகிய கோலம்போல், அன்றாட வாழ்வின் வெவ்வேறான நிகழ்வுகளில், சின்னஞ்சிறு காட்சிகளில் வாழ்வின் உன்னதத்தைக் கண்டு தரிசனப்படுத்தும் தத்துவப்பாங்கில் பிறந்த பாரதியின் குறுங்கவிதைகள், எளிய சொற்களிலும் செயல்களிலும், சில அரிய செய்திகளை உணர்த்திக்காட்டும் சித்த பாவனையைக் கொண்டு அமைந்தன. அவை பாரதியை, புதிய சித்தராகத் தரிசனப்படுத்தின. அதற்குக் கணிசமான பங்களிப்புச் செய்த குருநாதராக, குள்-ளச்சாமி திகழ்வதைப் பார்க்க முடிகிறது. அதன் நுண்ணிய வெளிப்பாடாக நன்றிக்கடப்பாடாக, குள்ளச்சாமியைக் குருக்கள் ஸ்வாமியாக்கி, பாரதி அறுபத்தாறில் பாடித் துதிக்கிறார், மகாகவி பாரதி.



sethupathi@thaiveedu.com




சென்ற இதழில் கம்பராமாயணம், அயோத்தியா காண்டத்தின் ஒன்பதாவது படலமாகிய பள்ளி படைப்படலத்தில் கம்பரின் கவிவண்ணம் காட்டும் செய்யுள்கள் சிலவற்றை எடுத்துச் சுவைத்து மகிழ்ந்தோம். கேகய நாட்டிலிருந்து அயோத்திக்குத் திரும்பிய பரதன் தந்தை இறந்த செய்தியையும், இராமன், சீதை, இலக்குவன் மூவரும் காடேகிய செய்தியையும் அறிந்தபோது அடைந்த துயரினைக் கம்பரின் செய்யுள்கள் வாயிலாக அறிந்தோம். தயரதனின் வாய்மையினால் வரத்தைப் பெற்று இராம னைக் காட்டுக்குப் போக்கினேன், பாரை உனக்கு ஆக்கினேன், அதனைப் பொறுக்க முடியாமல் தயரதன் உயிரைப் போக் கினான் என்று கைகேயி கூறக்கேட்டவுடன் பரதன் கொண்ட பெருஞ்சினத்தைக் கம்பர் பல செய்யுள்களில் காட்சிப்படுத்துகின்றார்.

***சூடிய மலர்க்கரம் சொல்லின் முன்செவி***
***கூடின புருவங்கள் குனித்துக் கூத்துநின்று***
***ஆடின வுயிர்ப்பிடை அனற்கொ ழுந்துகள்***
***ஓடின உமிழ்ந்தன உதிரங் கண்களே***

*- கம்ப. அயோத்தி. 872*

கைகேயியை வணங்கியபோது தலைமேல் குவிந்திருந்த தாமரை மலர்போன்ற பரதனது கைகள், அவளது கடுஞ் சொற்கள் அவனின் செவியில் சேர்வதற்குமுன் அவனது காதுகளை மூடிக்கொண்டன. அவனது புருவங்கள் சினத்தினால் நெரிவுண்டு மேலும் கீழும் சென்றன. அவனது மூச்சிலிருந்து நெருப்புச் சுவாலைகள் விரைந்து வெளிப்பட்டன. கண்கள் நெருப்பை உமிழ்ந்தன என்று பரதனிடம் ஏற்பட்ட சினத்தின் வெளிப்பாடுகளாக அவனிடம் தோன்றிய மெய்ப்பாடுகளை இதனைப் போன்ற நான்கு செய்யுள்களால் சிறப்பாகக் கூறுகிறார் கம்பர். தொடர்ந்து பரதன் தன்னையும் தன்தாய் கைகேயியையும் பழித்துக் கூறுவதை எட்டுச் செய்யுள்களால் எடுத்துக் கூறுகின்றார். அவற்றுள் சில.

***நீயினும் இருந்தனை யானும் நின்றனன்***
***ஏயெனும் மாத்திரத் தெற்று கின்றிலேன்***
***ஆயவன் முனியுமென் றஞ்சி னேனலால்***
***தாயெனும் பெயரெனைத் தடுக்கற் பாலதோ***

*- கம்ப. அயோத்தி. 878*

இத்தனை கொடுமைகளையும் செய்து விட்டு இன்னமும் நீ இங்கு நிற்கிறாய். இவ்வாறு நீ செய்த செய்கையையெல்லாம் கண்டுகொண்டு நானும் இங்கே நின்றுகொண்டிருக்கின்றேன். நொடிப்பொழுதில் உன்னை அடித்து வீழ்த்தி விட்டு நானும் எனது உயிரைப் போக்காதிருக்கிறேன். இதற்குக் காரணம் தாயென்ற பெயரை நீ தாங்கியிருந்து என்னைத் தடுப்பதனால் அன்று. உலகுக்கெல்லாம் தாயைப் போன்றவனான இராமன் இவற்றை ஏற்றுக்கொள்ள மாட்டான் என்பதனால் தான் அவ்வாறு செய்யாமல் இருக்கின்றேன்| என்கிறான் பரதன். கைகேயி பெயரால் மட்டுமே தாய் என்னும் தகைமையைக் கொண்டிருக்கின்றாளே அன்றி அவள்தன் செயலிலே ஒரு தாயாக இல்லை என்பதை, 'தாயெனும் பெயரெனைத் தடுக்கற்பாலதோ' என்னும் வரிகளில் கம்பர் சிறப்பாக எடுத்துக் காட்டுவதைக் காணலாம். மேலும் ஒரு செய்யுள்

***கொன்றேன் நானென் தந்தையை மற்றுன் கொலை வாயால்***
***ஒன்றோ கானத் தண்ணலை உய்த்தேன் உலகாள்வான்***
***நின்றேன் என்றால் நின்பிழை யுண்டோ பழியுண்டோ***
***என்றே னும்தான் என்பழி மாயு மிடமுண்டோ***

*- கம்ப. அயோத்தி. 890*

கொலை செய்யும் தன்மையுள்ள உன்னுடைய வாயால் என் தந்தையைக் கொன்றேன். அதுமாத்திரமல்ல, பெருமையிற் சிறந்தவனாகிய இராமனைக் காட்டிற்கு அனுப்பினேன். இவற்றையெல்லாம் எங்கிருந்தோ செய்துவிட்டு இப்போது இவ்வுலகை ஆள்வதற்காக இங்கு வந்து நிற்கிறேன் என்று உலகம் தூற்றுவதற்குரிய இத்தகைய பிழையும் பழியும் உனக்கு உண்டாகுமா? இது எனக்கு ஏற்பட்ட பழி. என்றாவது இப்பழி நீங்கக்கூடிய வழி எனக்கு உண்டா? என்று பரதன் வருந்துகின்றான். நான் மறைவாக இருந்து கொண்டு எனது தாயைக் கொண்டு அரசாட்சியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, தயரதன் இறப்பதற்கும் இராமன் காடு செல்லவும் காரணமாக இருந்துவிட்டேன் என்று உலகம் என்னைப் பழி தூற்றும். இப்பழியைப் போக்கிக்கொள்ள வழியில்லையே| என அவன் வருந்துவதாகக் கூறுகிறார் கம்பர். வாய்ச்சொல் கூடக் கொல்லும் தன்மை கொண்டது என்பதைக் கம்பர் மிக அழுத்தமாக, கொன்றேன் நானென் தந்தையை மற்றுன் கொலை வாயால்| என்னும் சொற்றொடரால் எடுத்துணர்த்து

கிறார். இப்படிப் பலவாறாகத் தன் தாயையும் தன்னையும் பழித்துக் கூறியவன் கைகேயியின் அருகில் இருக்க விருப்ப மற்றவனாகக் கோசலை இருக்கும் இடத்திற்குச் சென்று அவ ளிடம் தனது நிலையை எடுத்துரைக்கின்றான்.

***கொடியவர் யாவரும் குலங்கள் வேரற***
***நொடிகிலர் யானது நுவல்வ தெங்ஙனம்***
***கொடியவள் வயிற்றினிற் பிறந்த கள்வனேன்***
***முடிகுவன் அருந்துயர் முடிய வென்னுமால்***

*- கம்ப. அயோத்தி. 898*

தந்தை இறப்பதற்கும், இராமன் காடுசெல்வதற்கும் காரண மாக இருந்த கொடியவர்கள் தம்குலத்தோடு வேரறும்படி அழிந்து போனாரில்லை என்றால் நான் என்ன சொல்வது. கொடியவளாகிய கைகேயியின் வயிற்றில் பிறந்ததால் வஞ்ச னைக்குரியவனான எனது உயிரை நீக்கினால்தான் எனது

**வாய்ச்சொல் கூடக்**
**கொல்லும் தன்மை**
**கொண்டது என்பதைக்**
**கம்பர் மிக அழுத்தமாக,**
**கொன்றேன் நானென் தந்தையை**
**மற்றுன் கொலை வாயால்**
**என்னும் சொற்றொடரால்**
**எடுத்துணர்த்துகிறார்.**

பெருந்துயர் நீங்குமானால் அதனைச் செய்வேன்| என்று கோசலையிடம் பரதன் புலம்புகின்றான். ‘கொடிய செயல்க ளைச் செய்தவர்களையும் அழிக்காமல் விட்டு வைத்துள் ளேன். என்னுயிரையும் போக் காமல் வைத்திருக்கின்றேன். இவ்விரண்டையும் செய்யாதவன் எப்படி இராமனிடம் அன்புள் ளவனாவேன்’ என்று கோசலையிடம் கூறி வருந்துவதாகக் கம்பர் காட்சிப்படுத்துகிறார். கைகேயியின் வஞ்சனை உனக் குத் தெரியாதோ எனக் கோசலை கேட்கப் பெருவருத்தமுற்ற பரதன் தான் ஒன்றையும் அறியாதிருந்தான் என்பதைக் கூறும் வகையில் பலவாறு சபதம் செய்கிறான்.

***பொய்க்கரி கூறினோன் போருக் கஞ்சினோன்***
***கைக்கொளும் அடைக்கலம் கரந்து வவ்வினோன்***
***எய்திடத் திடர்செய்தோன் என்றின் னோர்புகும்***
***மெய்க்கொடு நரகிடை விரைவின் வீழ்கயான்***

*- கம்ப. அயோத்தி. 909*

‘இராமனைக் காட்டுக்கு அனுப்புவதற்கு நானும் உடந்தை யாக இருந்தேன் என்றால், நீதிமன்றிற் சென்று பொய்ச்சாட்சி சொன்னவனும், போர்முனைக்குச் சென்று போர்புரிவதற்கு மனத்திட்பமின்றிப் புறமுதுகிட்டு அஞ்சி நின்றவனும், கையிற் கொண்டுள்ள அடைக்கலப் பொருளை மறைந்து நின்று பறித் துக்கொண்டு சென்றவனும், ஒருவர் தமக்கு நேரிட்ட ஆபத் தில் வருந்திக்கொண்டிருக்கையில் மேலும் அவர்க்குத் துன் பத்தை விளைவித்தவனும், என்று பெரும்பிழை இழைத்தோர் அடைகின்ற கொடிய நரகத்தில் நான் வீழக்கடவேன்| என்கி றான் பரதன். இவ்வாறு நரகம் புகுதல் என்ற நம்பிக்கையை யும், யாரெல்லாம் நரகம் எய்துவார்கள் என்ற தனது கருத்தி னையும் பரதன் வாயிலாகக் கம்பர் பல செய்யுள்களிலே வெளிப்படுத்துவதை இங்கே காண்கின்றோம்.

பரதன் சொல்லியவற்றைக் கேட்டபின்பு, அவன்மீது எந்தத் தவறும் இல்லை எனத்தெளிவுற்ற கோசலை அழுத வண்ணம் அவனைத் தேற்றுகிறாள். பின்னர் பரதன் வசிட்ட முனிவனை அணுகித் தந்தையின் உடல் வைக்கப்பட்டிருக்குமிடம் சென்று அவ்வுடலைக் காண்கிறான். கண்டு கண்ணீர் வடிக்கின்றான்.

***மண்ணின் மேல்விழுந் தலறி மாழ்குவான்***
***அண்ணல் ஆழியான் அவனி காவலான்***
***எண்ணை உண்டபொன் எழில்கொள் மேனியைக்***
***கண்ண நீரினாற் கழுவி யாட்டினான்***

*- கம்ப. அயோத்தி. 931*

தந்தையின் உடலைக் கண்ட பரதன் தரையில் வீழ்ந்து அலறி மனங்கலங்கியவனாகி, பெருமையிற் சிறந்த ஆழிச்சக்கரத் தைக் கொண்டு இந்த அவனியை ஆண்ட தயரத மன்னவனது உடல் எண்ணைக் கடாரத்தில் இடப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட தால் பொன்னிறம் படைத்திருந்தது. அந்த மேனியைப் பரதன் தன் கண்களிலிருந்து பெருகிய நீரினாலே கழுவி மூழ்குவித் தான் என்பது பொருள். இதுவரை எண்ணையால் ஆட்டப்பட் டிருந்த தன்தந்தையின் உடலைக் கண்ணீரினால் ஆட்டினான் எனக் கூறும் கம்பரின் கவிநயம் மிகச் சிறப்பானது.

தயரத மன்னனுடைய உடலைப் பொன்னாலியற்றிய விமானத் தில் வைத்து அதனை யானையில் ஏற்றி, சாப்பறை முதலி யன ஒலிக்க, இறுதிக் கடன் முடிப்பதற்காகச் சரயு நதிக் க ரைக்கு எடுத்துச் செல்கிறார்கள். தந்தைக்குரிய இறுதிக் கடன்களை நிறைவேற்றுவதற்காகப் பரதனும், சத்துருக்கனும் உடன் செல்கிறார்கள். இறுதிக் கடன்களைச் செய்வதற்காகப் பரதன் முன்னே செல்ல வசிட்டமுனிவன் அவனைத் தடுக்கின் றான்.

***என்னும் வேலையில் எழுந்த வீரனை***
***அன்னை தீமையால் அரச னின்மையும்***
***துன்னு துன்பத்தால் துறந்து போயினான்***
***முன்ன ரேயெனா முனிவன் கூறினான்.***

*- கம்ப. அயோத்தி. 938*

இறுதிக் கடன்களைச் செய்ய வேண்டுமெனச் சொன்னபோது எழுந்து வந்த பரதனைத் தடுத்து வசிட்டன் இவ்வாறு கூறு வான். ‘உன் தாயின் தீயகுணத்தினால் உண்டான பெருந்துன் பத்தால் உன்தாயையும், உன்னையும் தயரதன் துறந்து போயினான். நீ அவனுக்கு மகன் என்ற உரிமையைத் துறந்த பின் உயிர் நீத்த மன்னனுக்குக் கடன் செய்யும் உரிமை

உனக்கு இல்லை. என்று கூறி வசிட்ட முனிவன் அவனைத் தடுக்கிறான். இன்னே பலவும் இரங்கா தாளை நோக்கிச், சொன்னேன் இன்றே இவளென் தாரமல்லள் துறந்தேன், மன்னேயாவான் வருமப் பரதன் தனையும் மகனென்று, உன்னேன் முனிவா அவனும் ஆகான் உரிமைக் கென்று என வசிட்டனைச் சாட்சியாகக் கொண்டு தயரதன் அவர்களைத் துறந்ததை நகர்நீங்கு படலத்தில் முன்னர் சொல்லப்பட்டுள்ளதையும் நினைவில் கொள்ளலாம். வசிட்டன் இவ்வாறு கூறக் கேட்டுத் திடுக்குற்ற பரதனின் நிலையைக் கம்பர் இவ்வாறு வருணிக்கிறார்.

***துறந்து போயினான் எனவே தோன்றல்நீ***
***பிறந்து பேறம் பிழைத்தது என்றல்போல்***
***இறந்து போயினான் இருந்த தாண்டது***
***மறந்து வேறெரு மைந்த னாங்கொலாம்***

*- கம்ப. அயோத்தி. 939*

வசிட்டன், பரதனை மகனே என அழைத்து, நீ பிறந்ததனால் தொன்றுதொட்டு வந்த மரபுகள் மாறிப்போயின என்று தெரிவிப்பது போல உன் தந்தை உன்னைத் துறந்து விட்டுச் சென்றார் என்று தெரிவிக்கவே, அச்சொல்லைக் கேட்டு மனம் பொறுக்க மாட்டாதவனாகப் பரதன் இறந்து போனவன் போலாகிவிட்டான். ஆனால் அவன் அங்கே இருந்தது என்பது அவனது இயற்கை நிலைமாறி வேறொரு மைந்தனைப்போல என்கிறார் கம்பர். நீ பிறந்ததால் பேரறம் பிழைத்தது என்ற முனிவனது சொல்லைக் கேட்டவுடனே பரதன் தன் உயிரொடுங்கி மூர்ச்சித்துத் தெளிந்தபோது இவன் முன்னைய பரதன் அன்று வேறொருவன் போலும் என்று கண்டோர் கருதுமாறு நிலைமாறிக் கிடந்தான் என்பது கம்பரின் வருணனை. இருந்தது ஆண்டு அது மறந்து வேறெரு மைந்த னாங்கொலாம் என்பதற்கு அங்கு இறுதிக் கடனைச் செய்வதை மனதிற் கொள்ளாமல் மறந்திருக்க, வேறொரு மைந்தனாகிய சத்துருக்கன் இறுதிக் கடன்களைச் செய்வான் என வசிட்டர் கூறுவதாகப் பொருள் கொள்வாரும் உண்டு. மேலும், பரதன் தனக்கு நேர்ந்துள்ள இழிதகைக்கு வருந்தி, நெஞ்சு பதைக்க விம்மியழுவதையும் அவன் படும் துயரத்தையும் கம்பர் பல செய்யுள்களில் எடுத்து வருகிறார்.

***துன்னு தாள்வளஞ் சுமந்த தாழையின்***
***பன்னு வான்குலைப் பதடி யாயினேன்***
***என்னை என்னையே ஈன்று காத்தவென்***
***அன்னை யாரெனக் கழகு செய்தவா***

*- கம்ப. அயோத்தி. 944*

நெருக்கமான தாள்வளத்தைக் கொண்ட தாழை மரத்தின் சிறந்த பூக்குலையிடையேயுள்ள சாரமற்ற பொருள்போலாயினேன். என்னை ஈன்று காத்த என் அன்னையார் எனக்கு நன்மை செய்த வகை இதுதானா? என் தாயார் என்னைப் பெற்றுப் பாதுகாக்காமல் போயிருந்தால் எனக்கு நன்மையுண்டாகியிருக்கும் என்பது இதன் மறைபொருள். தாழம் பூக்குலை போன்ற பெருமை மிக்க சூரிய குலத்தில், அப்பூக்குலையிடையேயுள்ள பதர்போல நான் தோன்றியிருக்கின்றேன் என்னும் வருத்தத்தினால் என்னை என்னையே என்று அடுக்கிச் சொல்லி வெளிப்படுத்துவதாகக் கம்பர் இச்செய்யுளை அமைத்திருப்பது சிறப்பாகவுள்ளது. தாழை என்பது தென்னை மரத்தைக் குறிப்பதாகவும் கொள்ளப்படுகிறது.

வசிட்ட முனிவன் சத்துருக்கனைக் கொண்டு இறுதிக்கடன்களை நிறைவேற்றுகின்றான். பட்டத்து அரசிகளைத் தவிர தயரத மன்னனின் தேவிமார் உடன் கட்டை ஏறியதாகவும் தீக்குளித்த மங்கையர் நற்கதி அடைந்ததாகவும் வான்மீகத்தை ஒட்டிய செய்திகளையும் கம்பர் இப்படலத்தில் குறிப்பிடுகிறார். தயரத மன்னனது இறுதிக் கடன்கள் யாவும் முடிந்தபின் அரசாட்சியை நடப்பிப்பதற்கான ஆலோசனை வசிட்டன் தலைமையில் நடைபெறுவதுடன் பள்ளி படைப்படலம் முற்றுப் பெறுகிறது. பரதனுக்கு முடிசூட்டுவதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுவதையும், பரதன் அதனை மறுத்து இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வருவேன் என்று சொல்லிப் புறப்படுவதையும் கூறும் ஆறுசெல் படலத்தை அடுத்த இதழில் எடுத்து வருகிறேன். அப்படலத்திலுள்ள செய்யுள்கள் சிலவற்றில் கம்பரின் கவிவண்ணத்தைச் சுவைத்து மகிழ்வோம்.

வளரும் ...



shanmugarajah@thaiveedu.com



# தமிழ்வலை - 109


‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-109 வினா

### இடமிருந்து வலம்

1 முன்னுக்கிருந்தும் பின்னுக்கிருந்தும் வாசிக்கக்கூடிய ஒரு சொல்
5 இலங்கை மத்திய புலம்
6 இறுமாப்பு
7 அருச்சுனனின் மகன்
10 துப்பாக்கி
11 ஐயர்
13 மூங்கில்
14 காடு
16 உண்
17 சிங்கம்

### மேலிருந்து கீழ்

1 விரும்பு
2 உத்தரவு
3 யேசுநாதரின் பேர்போன உரை (3-6)
4 தேவன்
6 ஈகை
8 விற்பனைப் பொருட்களை ஒளித்து வைத்தல்
9 அகப்படு
12 முகமது நபியின் மகள்
14 வளையல்
15 கண்டி


விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**


## தமிழ்வலை - 108-க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 ப | ரா | க் | ஒ | 2 பா | மா | | | 3 த |
| | ரா | | | | லா | | 4 அ | | மி |
| | க் | | 5 அ | ட | வி | | று | | ழ் |
| 6 அ | கி | ல் | | | | | கு | | பு |
| | ர | | | 7 அ | ண் | ணா | | | ணு |
| | 8 ம | று | வ | ர் | | | 9 ஆ | | ட் |
| 10 நா | பா | | | ச் | | 11 க | லா | ட் | டா |
| 12 வி | கு | தி | | 13 சி | த் | தி | | | க் |
| | | | 14 சா | | | | 15 மா | | |
| 16 யா | ரு | க் | கா | க | அ | ழு | தா | ன் | |

## தமிழ்வலை-108 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

ஏ.எஸ். மகாலிங்கம், ரொறன்ரோ
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்
உமா கதிர், ஏஜக்ஸ்.
சபா குகநாதன், பாரிஸ்,
த.செ. நடராசா, ரொறன்ரோ.
விசுவநாதன் தாமரை, ரொறன்ரோ

### பரிசுபெறும் போட்டியாளர்

**கனகராஜா சிவகுரு,**
**வவுனியா.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.






# தங்கப் பல்

- சஞ்சயன்

மழை தூறிக்கொண்டிருந்த கருக்கல் மாலைப் பொழுதிதொன்றில் ஒஸ்லோவின் வெளிநாட்டவர் அதிகம் வாழும் புறநகர் ஒன்றின் நிலக்கீழ் தொடருந்து நிலையத்திலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தேன். ஒருவர் அருகே வந்து நின்று எதையோ கேட்டார். அவர் என்ன சொன்னார் என்பது புரியவில்லை.

'என்ன ?' என்று கேட்டபோது 'கஞ்சா வேண்டுமா ?' என்ற கேள்விக்குப் பதிலளிப்பதற்கிடையில் மேலும் இருவர் வந்து சூழ்ந்துகொண்டனர். 'இல்லை, வேண்டாம்' என்றுவிட்டு நகர்ந்தபோது வழியை மறித்தான் ஒருவன். இன்னொருவன் நெருங்கி வந்தான். மற்றவன் தொலைபேசியைப் பறிக்க முற்பட்டான்.

ஆபத்தைப் புரிந்து, நிதானிப்பதற்கிடையில் அதிகாரம் நிறைந்த சீட்கை ஒலியொன்று கேட்டது. எதிரேயிருந்த சுவரில் சாய்ந்திருந்த ஒரு மனிதன் என்னை விட்டுவிடுமாறு அவர்களுக்கு விரலால் சமிக்ஞை செய்தான். தளபதியின் கட்டளையைக் கேட்ட சிப்பாய்கள் போன்று அவர்கள் விலகி வழிவிட்டார்கள்.

சுவரில் சாய்ந்திருந்த மனிதன் என்னை அழைத்துக் கைலாகு தந்து 'மை பிரென்ட், நோ ப்ராப்பளம். கோ ஹோம்' என்று கூறிவிட்டுச் சிரித்தான். அவனது சிரிப்பில் சினேகம் குடியிருந்தபோது, தங்கத்தாலான அவனது கொடுப்புப் பல் வெளிச்சத்தில் மினுங்கி மறைந்தது. அதிர்ச்சியில் நன்றி சொல்வதையும் மறந்து புறப்பட்டேன்.

ஒஸ்லோவுக்கு இடம்பெயர்ந்த 2008 காலப்பகுதியில் பகுதி நேர வேலையாகக் கணினி திருத்திக்கொண்டிருந்தேன். குடிப்பழக்கத்திற்கு அடிமையான ஐஸ்லாந்தின் தேசியச் சதுரங்க வெற்றியாளராக இரு தடவைகள் முடிசூடிய ஒருவருக்கும், அதேபோல் இலங்கைக்கு நோர்வேயின் தூதுவராக இருந்த ஒருவரின் பெற்றோருக்கும், பெரும் அரசியல்வாதியொருவருக்கும், பாலஸ்தீனத்தின் காசாவில் திரைப்படம் எடுத்த ஒரு இயக்குநருக்கும், இன்னும் பலருக்கும் கணினி திருத்திக் கொடுத்திருக்கிறேன். இன்றைய காலத்தில் அரசனானாலென்ன ஆண்டியானாலென்ன அனைவருக்கும் கணினி அவசியமல்லவா ?

நாயகன் திரைப்படத்தில், பம்பாயின் சேரிப்புறமான தாராவியில் இருந்த வேலு நாயக்கரின் வீட்டை உங்களுக்குத் தெரியுமல்லவா ? அது போன்று வருடத்தின் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் காலையிருந்து நள்ளிரவுவரை பிரச்சினைகளால் மட்டுமே நிரம்பியிருக்கும் ஒரு வீட்டை எனக்குத் தெரியும்.

ஒஸ்லோவின் புறநகர்ப் பகுதியில் உள்ள தொடர் மாடிக் கட்டடத்தில் உள்ள பழைய வீடு அது. குப்பையும் இருளும் கலந்த படிகளைக் கடந்து வந்தால், பழங்காலத்து வண்ணப்பூச்சு, மங்கி, வெடித்த கண்ணாடிகள், கூடுகளின்றிப் பரிதாபமாகத் தொங்கும் மின்விளக்குகள், பழைய நலிந்த தளபாடங்கள், கிழிந்த மென்னிருக்கைகள், உடைந்து திருத்திய நாற்காலிகள் என்று ஒரு மகிழ்ச்சியான வீட்டுக்குரிய ஒருவிதச் சமிக்ஞைகளும் அங்கு இருப்பதில்லை.

அந்த வீட்டில் ஆறுதலைத் தரும் விடயமாகத் தெரிவது அரசனின் சிம்மாசனம் போன்று அலங்காரங்களுடன் இருக்கும் ஒரு சொகுசு இருக்கையும் அதன் பின்னால் தொங்கும் ஒரு நாட்டின் கொடியும்தான்.

விருந்தினர் அறையில் அந்தச் சிம்மாசனத்திற்கு எதிரே நாலைந்து நாற்காலிகள் இருக்கும். அரசவையில் மந்திரிகளுக்கான இருக்கைகள் போன்று. ஒரு மூலையில் பழைய தொலைக்காட்சியொன்று. அது இயங்க மறுக்கும்போது அதன் தலையில் இரு தடவைகள் தட்டினால் போதும். அது உயிர்த்தெழும்.

அந்த வீட்டின் நாயகன் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. அவர் ஆபிரிக்கக் கண்டத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள பெனின் நாட்டின் கிழக்கு எல்லை நாட்டைச் சேர்ந்தவர்.

தலையில் பல குட்டிப் பாம்புகளை விட்டது போன்று நெளிந்து தொங்கும் நீண்ட சுருண்ட மயிர்க் கற்றைகள். சுருட்டும் கஞ்சாவும் புகைத்ததால் பழுப்பாகி மயக்கத்தில் கிடக்கும் கண்கள், ஒரு வீதமென்றாலும் கொழுப்பு அற்ற உருண்டு திரண்ட தசைகளைக் கொண்ட நீண்டு, அகன்ற உயர்ந்த உடல்.

2010-ம் ஆண்டு ஜுன் மாதம் 17-ம் திகதி விதி என்னை அந்த வீட்டிற்குள் அழைத்துச் சென்றபோது, அவர் தனது சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். வாயில் அந்தச் சுருட்டுடன் கண்களை மூடி ஆனந்தித்துக்கொண்டிருந்தார். அறைக்குள் கஞ்சாவின் புகையும் வாசனையும் பரவியிருந்தது.



நேரம் மாலை ஆறு மணியை நெருங்கிக்கொண்டிருக்க, தென்னாபிரிக்காவில் நடந்துகொண்டிருந்த உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் அவர்களது நாடு கிரேக்கத்திடம் 2:1 என்ற ரீதியில் தோல்வியுற்றிருந்தது என்பதைச் சற்று நேரத்தில் அறிந்துகொண்டேன். கஞ்சாப் புகைக்கு அதுவும் காரணமாக இருக்கலாம் என்பதை அக்கணம் உணர்ந்தேன். உதைபந்தைப் போன்று போதை தரும் ஏதேனும் ஆபிரிக்காவில் உண்டா என்ன?

என்னை அழைத்துச் சென்றவர் புரியாத மொழியில் அரசனின் காதுக்குள் நான் வந்திருப்பதைச் சொல்லியிருக்க வேண்டும். அருள் புரியும் கடவுள் கண்ணைத் திறந்து என்னை அளவிட்டபின், அங்கிருந்த நாற்காலி ஒன்றை எனக்குக் காண்பித்து உட்கார் என்பது போன்று கண்களை அசைத்தார்.

அவருக்கு நோர்வேஜிய மொழி தெரிந்திருக்கவில்லை. எனக்கு அவரது மொழி தெரிந்திருக்கவில்லை. ஆங்கிலத்தில் வசனங்கள் அற்ற சொற்களால் நாம் பேசிக்கொண்டோம்.

அதன் சாரம் இதுதான்.

தன்னிடம் 8 கணினிகள் உண்டு. அவை அனைத்தினதும் இரகசிய கடவுச்சொல் மறந்துவிட்டது. நீ அதனைச் சரிசெய்ய வேண்டும்.

ஒரு மனிதரிடம் ஒரே நேரத்தில் எட்டு இரகசிய கடவுச் சொற்களை மறந்த கணினிகள் உண்டு என்றால், அவை திருட்டுப் பொருட்களாக இல்லாது வேறு எதுவாக இருக்கும் என்பது, எனக்குத் தெரிந்திருக்கும் என்று அவர் நினைத்திருக்கச் சந்தர்ப்பமில்லை.

‘ஹௌ மச் மணி’ என்று அவர் கேட்டதும் சேவைக்கான கட்டணத்தைக் கேட்கிறார் என்று புரிந்துகொண்டேன். என்னிடம் இரகசியக் கடவுச்சொல்லைக் கண்டுபிடிக்கும் ஒரு மென்பொருள் இருந்தது. ஒரு கணினிக்கு ஏறத்தாழ முப்பது நிமிடங்கள் எடுக்கும். எட்டுக் கணினிக்கும் நான்கு மணிநேரங்கள். ஒரு மணிநேரத்திற்கு 200 குறோணர்கள்படி 800 குறோணர்கள் தாருங்கள் என்றேன்.

எட்டுக் கணினிகள் வந்தன. மூன்று உண்மையான கால்களுடனும் ஒரு பொய்க் காலுடனும் இருந்தவொரு நாற்காலியில் அமர்ந்தபடி வேலையை ஆரம்பித்தேன். அந்தக் கணினிகள் அனைத்தும் ஒரு நிறுவனத்திலிருந்து திருடப்பட்டிருக்க வேண்டும் என்று அவற்றின்மேல் ஒட்டியிருந்த இலட்சனை காண்பித்தது.

இரண்டு கணினிகளுக்கான இரகசிய கடவுச்சொல்லைக் கண்டுபிடித்தபோது இரண்டு பெண்களையும் ஓர் ஆணையும் உள்ளே அழைத்து வந்தார்கள். அரசன், சிம்மாசனத்தில் மயக்கம் தரும் புகையின் தியானத்தில் உட்கார்ந்திருந்தார்.

அவர்கள் மூவரையும் அவர் முன் நிறுத்தினார்கள். வயிறு பெருத்திருந்த ஒருத்தி வயிற்றைத் தடவிக் காண்பித்து அழுதாள். மற்றைய பெண் ஆணின் அருகில் நின்றுகொண்டாள். வந்திருந்த ஆணுடனான அரசனின் உரையாடல் சூடான குரலாக மாறியபோது நிலமை சிக்கலாகிறது என்றது உள்மனது.

நான் எதிர்பாராத கணத்தில் சிம்மாசனத்திலிருந்தபடியே அம்மனிதனை எட்டி உதைத்தார். தமிழ்த் திரைப்படங்களில் கதாநாயகனிடத்தில் உதை வாங்கும் வில்லன் சுருண்டு விழுவது போல் விழுந்தார் அம்மனிதர். அவரருகே நின்றிருந்த பெண் அவரிடம் செல்ல முயற்சித்துபோது, சிம்மாசனத்திலிருந்து எழுந்த அரசன், இரண்டடி முன்னே வந்து மேலும் இரண்டு உதைவிட்டார். மனிதனின் வாயிலிருந்து சிவப்பு நிறமாக வழிந்தது. அப்பெண் குளறத்தொடங்கினாள். அப்பெண்ணின் கன்னத்திலும் ஒரு அறை விழுந்தவுடன், அவளது குளறல் நின்றுபோயிற்று. அரசவை நிசப்தத்தில் உறைந்து கிடக்க, நான் பயத்தில் எழுந்து கதவுக்கு ஓடினேன். ‘மை பிரெண்ட், நோ ரன். வெயிட்’ என்றுவிட்டுப் புரியாத மொழியில் ஏதோ கத்தினார்.

கதவைத் திறந்துகொண்டு நால்வர் வந்தனர். அரசர் கட்டளைகளிட்டார். அடிபட்டு விழுந்திருந்த மனிதனின் சட்டைப்பையினுள் இருந்த கடவுச்சீட்டு, கற்றை கற்றையாக இருந்த பணம், வாகனத்தின் திறப்பு, வங்கியட்டைகள், சில்லறைகள் அனைத்தையும் எடுத்து ஒரு பையில் இட்டுச் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தவரிடம் கொடுத்தார்கள். அதிலிருந்த கடவுச்சீட்டைத் தவிர்த்து அனைத்தையும் வயிற்றைக் காண்பித்து அழுத பெண்ணிடம் கொடுத்தார். ஆட்காட்டி விரலைக் காண்பித்து அடிபட்ட மனிதனுக்கு எதையோ சொன்னார். அதன் பின் கதவைக் காண்பித்தார் அனைவரும் வெளியேறினர்.

நான் காட்பாதர் படப்பிடிப்பின் மத்தியில் நிற்பது போன்று பயந்துபோய் நின்றிருந்தேன். வேர்த்துப் படபடத்தது. எனது அந்தரிப்பைக் கண்ட அரசன் என்னைப் பார்த்து ‘தட் மான் வெரி பாட். கிவ் லேடி பேபி அன்ட் ரண். என்றார். எனக்கு முழுத் திரைக் கதையும் புரிவதற்கு சில கணங்களெடுத்தது, அரசனிலும் நம்பிக்கை துளித்தது.

குளிர்பானம் தருவித்து ‘ட்ரிங்க் மை பிரெண்ட், நோ எப்ரெயிட்’ என்று என்னை ஆற்றுப்படுத்திவிட்டு ஒரு சுருட்டைப் பற்ற வைத்தார். மயக்கும் புகையின் வாசனை பரவ ஆரம்பித்தது.

எட்டுக் கணினிகளையும் திருத்தி முடிந்தபோது, இறைச்சியும் கடலையும் சோறும் தந்தார்கள். பியர் குடிப்பாயா? என்ற கேள்விக்குப் பயத்தில் இல்லை என்று தலையாட்டினேன்.

நான் அங்கு நின்றிருந்த நான்கு மணிநேரமும் ஐந்தாறு பிரச்சினைகளுக்கு அவர் தீர்ப்பளித்தார். எவரும் எதிர்த்துப் பேசவில்லை. இருவருக்கு அடி விழுந்தது. ஒரு பெண்ணின் கையை முறுக்கி முகத்தில் அறைந்தார்.

நான் புறப்பட்டபோது நோர்வேஜிய மொழி பேசும் இளைஞன் ஒருவன் வந்திருந்தான். சிம்மாசனத்திலிருந்தவர் மொழிபெயர்ப்பாளர் ஊடாக என்னுடன் உரையாடினார்.

கணினிகளைத் திருத்த ஒருவர் 2500 குறோணர்கள் கேட்டதாகவும் எனது விலை நியாயமாக இருந்ததாகவும் ‘யூ குட் மான்’ என்று விட்டு பணத்தைத் தந்தார்.

புறப்பட்டபோது ‘யூ எனி ப்ராப்ளம்... கம் டு மீ’ என்ற அவரின் கருத்தை நான் ‘ஏதும் பிரச்சினையென்றால் என்னிடம் வா’ என்று புரிந்துகொண்டேன்.

அவருக்குக் கைலாகு கொடுத்துவிட்டுப் புறப்பட்டேன். ஒரு சுருட்டைப் பற்றவைத்துக்கொண்டு என்னைப் பார்த்துச் சிரித்தார் அவர் வாயிலிருந்த தங்கத்திலான கொடுப்புப் பல் மின்னியது.

நோர்வேயில் மூன்று தசாப்தங்களுக்கு அதிகமாக வாழ்ந்திருக்கிறேன். இன்று மாலை நடந்தது போன்று என்னிடம் கொள்ளையிட முயன்ற நிகழ்வு ஏதும் நடந்திருக்கவில்லை. மனது அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. வீடு வந்து நெடுநேரம் என்னைக் காப்பாற்றிய மனிதனைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன்.

அடியாட்கள் திருடும் பொருட்களைத் தலைவனுக்குத்தானே கொடுக்க வேண்டும். அப்படியிருக்க அவன் என்னை எதுவும் செய்யாது விடும்படி அவர்களுக்குக் கட்டளையிட என்ன காரணம் என்று சிந்தித்தபடியே உறங்க முயற்சித்துக்கொண்டிருந்தேன். உறக்கம் என்னை மயக்கியபொழுதில் அந்தத் தங்கத்தாலான அந்தக் கொடுப்புப்பல்
நினைவில் மின்னியது.



Sanjayan@thaiveedu.com



# வாழ்வுரிமை

## மா. சித்திவிநாயகம்

விலங்குப் பண்ணை விடிந்ததிலிருந்து மிகப் பரபரப்பாக இருந்தது. பண்ணை வாசலைத் திறந்தவுடன் திக்குக்கொன்றாய் பச்சை வயலுள் பாய்ந்தோடும் பண்ணை விலங்குகளும், பறவைகளும் இன்று தங்கள் பசித்தவயிற்றையும் மறந்து பண்ணையுட் கிடந்தன. வானத்தில் வட்டமிட்டபடி பண்ணையின் கோழிக்குஞ்சிற்கு இலக்கு வைத்தது பருந்து. பருந்துகள் என்றும் இந்த விலங்குப் பண்ணையின் சட்டதிட்டங்களை மதிப்பனவல்ல. புலிகள், சிங்கங்கள், யானைகள் என்றென்றும் இந்த விலங்குப் பண்ணை விலங்குகளோடு ஒத்துப் போவனவல்ல. ஆனாலும் எல்லா விலங்குகள், பறவைகள் உரிமைக்காகப் போராடுவதாகவே எப்போதும் சொல்லிக் கொண்டேயிருந்தன இந்தப் போராடும் விலங்குகள்.

எருமைகள் கொம்பைச் சுழற்றிய படியே பன்றித்தேவனைப் பார்த்தன. பன்றித்தேவனும் கம்யூனிசக் கொம்பாடும் பண்ணையின் தூண் இரண்டிலும் உட்புறமாக ‘பண்ணை விலங்குகளின் வேட்பாளர் அறிமுக மாநாடு’ என்ற பெரும் பதாகையைத் தொங்க விட்டுக்கொண்டிருந்தன. கம்யூனிசமறிந்த கொம்பாடு, விலங்குப் பண்ணைக்கு புதிய ஒளி கொண்டுவரப் போவதாக பண்ணை விலங்குகள் முணுமுணுத்தன. என்றுமில்லாதவாறு எழுதப்பேசக் கற்றுக்கொண்டிருந்த பண்ணை விலங்குகள் போராட்டத்தைக் கைவிட்டு தமக்குள் ஓர் ஜனநாயகத் தேர்தலை சந்திக்க சம்மதித்ததேன்? என்று புரியாப்புதிராக இருந்தது செக்குக்கணபதியின் எருதுக்கு.

பண்ணை விலங்குகள் அனைத்தும் தாம் செய்வது மனிதர்களுக்கு வெளியே தெரியாமல் இருக்க ஒன்றோடு ஒன்று உரசிய படியே மூலை முடுக்கெங்கும் மெல்ல மெல்லச் சத்தமில்லாமல் குவியத் தொடங்கின. ஏற்கனவே தலைவராக இருந்து ஒருங்கிணைக்கும் பன்றித்தேவன் இப்போதைய தேர்தலுக்கு நல்ல வேட்பாளர்களையும், அதற்கு ஓர் புதிய தலைவரையும் தெரிவு செய்ய வேண்டுமென சபையைக் கேட்டுக்கொண்டது. இதன்பிரகாரம் ஒவ்வொரு விலங்கும் தத்தமக்குள் கட்சிகட்டி பெரிய அடிபிடிகளையும், வாக்குவாதங்களையும், மோதல்களையும் நிகழ்த்தின. அனைத்து விலங்குகளினதும், பறவைகளினதும் தூய விடுதலைக்காகப் போராடுவதாகச் சொன்னாலும் ஒன்றையொன்று இழுத்தி விழுத்தி தமக்குள் போராடி, தலைமையைக் கைப்பற்றக் கண்ணும் கருத்துமாக நின்றன.

இதென்னடா சனிப்பிடித்த தேர்தல்? மனிதர்கள் எழுதுவதைப்போல பாராளுமன்றத் தேர்தல் என்று எழுதாத ஓர்தேர்தல் தேர்தலா? அப்படி ஏன் எழுதவில்லை என்றது கிறுக்கனான கழுதை. பார் என்பது உலகம். உலகை ஆளுகிற பாராளுமன்றத்தையா இந்த கிறுக்கு மனிதர்கள் கூட்டுகின்றார்கள்? அவர்கள் சொல்வதொன்று, செய்வதொன்று என்றிருக்கிற கேவலமானவர்கள். அவர்கள் மாதிரி நாம் ஏன் எழுத வேண்டும், அவர்களையேன் பின்தொடர வேண்டும்? இது எம்மெல்லோர் நல்வாழ்விற்குமான தேர்தல் எம்மை ஒடுக்குகிற மானிட குலத்திற்கெதிரான ஒன்றுபட்ட குரலாக எம் குரல் ஒலிப்பதற்கே இந்த தேர்தல் என்றது பன்றித் தேவன்.

ஒன்றிற்கொன்று முரணாக வாழ்ந்து பழகிய நம்மால் ஒன்றுபட முடியுமா என்றது சுடலையாகிய காகம். பொது எதிரியான மனிதருக்கெதிராக நாமெல்லோரும் ஏன் ஒன்றிணைய முடியாது என்றபடி எல்லா விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் இந்த கூட்டம் பற்றிய செய்தியை சொல்லிவிட்டீர்களா? என்றது கனடாவிலிருந்த வந்த அமாயா நாய். எல்லோரும் வந்து விட்டார்கள் என்றது ஆடு. வெளிநாட்டில் இருந்து வந்த உனக்கென்ன இந்த தேர்தலில் இத்துணை அக்கறை. நீ தான் உன் எஜமானர்களான மனிதக்காலடி நக்கி வாழ்கிற ஈனப் பிறவியாச்சே. நீங்கள் தான் அனைத்துப்போராட்டங்களையும் மனிதர்க்கு காட்டிக் கொடுத்து எம்மினத்தைக் கொல்கிற பேய்கள். வந்து எங்களின் ஊர்பார்த்துப் போகிற வெளிநாட்டுக்கார நாய் நீ. உனக்கு இங்குள்ள எங்கள் உரிமை பற்றிப் பேச என்ன அதிகாரமுண்டு என்றது முகட்டில் தொங்கிய படி குரங்கு.

குரங்கிற்கு என்றும் நாய்களைப் பிடிப்பதில்லை. அறிவில்லாக் குரங்கோடு கதைத்துப் பிரயோசனமில்லை. இந்த கேடுகெட்ட அறிவற்ற மனிதர்களின் மூதாதைகளே இந்தக் குரங்குகள்தானே. அது அப்படித்தான் பேசும் என்று மனதிற்குள் நினைத்தபடி எட்டததில் போய் நின்றது நாயான அமாயா. ‘எல்லோரும் இரை கூடத் தேடாமல் இங்கு உட்கார்ந்திருக்கின்றோம். உங்கள் தனிப்பட்ட கோபதாபங்களையும், வெட்டி வீரதீரப் பேச்சுகளையும் விட்டு விட்டுவிலங்கினத்திற்கான விடியலிற்காக எல்லோரும் ஒன்று சேருங்கள்’ என்றது, குரங்கைப் பார்த்துக் கோபத்தோடு, கம்யூனிசக் கொம்பனாடு.

போர் தேவையில்லை என்றபடியே, தாங்கள் போருக்கு எதிரானவர்கள் என்று பாசாங்கு செய்து கொண்டே ஒருவரோடு ஒருவர் போர் புரிந்து கொண்டிருப்பவர்கள் இந்த கேடுகெட்ட மனிதர்கள். இஸ்ரேலிய அரசாங்கம் லெபனானில் உள்ள சமாதானத்திற்கான ஐ.நா சபைத் தலைமையகத்தை குண்டு

வீசித் தகர்த்த போதும், அது சரியென்றே பல மேற்கு நாடுகளும் அமெரிக்காவும் இஸ்ரேலுக்கே ஆயுதமும் உதவியும் வழங்கி அப்பாவிகளைக் கொல்லுவதே மானிட நேயம் என்கிறது. அதைச் சமாதானத் தூதுவனான ஐ.நாவும் ஏனென்றும் கேட்பதில்லை. இந்த மூளையற்ற மனிதர்களைப் போலவே நாமும் எம் அப்பாவிகளோடு சண்டையிட்டு அழியப் போகின்றோமா ? என்றது வருத்தத்தோடு பன்றியாகிய தேவன்.

ஒரே தகப்பனுக்கு பிறந்தவர்கள் தான் இஸ்ரேலராய், பலஸ்தீனராய் மாறிமாறித் தம் சகோதரர்களையே கொன்றுதின்று கொண்டிருக்கிற கொடுங்கோலர்கள். அவர்கள் ஒருவரையொருவர் மாறிமாறிக் கொல்வார்கள். பெரும்போர் செய்வார்கள். பிறகு அன்பே உலகம் என்று எழுதிவைப்பார்கள்... கொன்றதற்கு நீதி கேட்பார்கள். மீண்டும், நீதிக்காய்ப் போரிடுகின்றோமென மீளவும் ஓர் போர் செய்வார்கள். உக்ரேனுக்கும் ரஷ்யாவிற்கும் நடந்துகொண்டிருப்பது அதுதான் தோழர்களே. யார் இங்கு வல்லவன். என்பதுதான் போட்டி. தனியொருவனிலிருந்து ஊர், தேசம், உலகம் என இந்த வல்லமைப் போட்டியே இந்தப் பூமியைத் தின்கிறது என்றது முற்போக்குக் கொம்பனாடு.

இந்த மனிதர்கள் பலரும், போருக்கு எதிரானவர்கள் என்றல்லவோ நான் நினைத்தேன் என்றது வெள்ளேந்தியான பூனை. மனிதர் காலடியே சுகம் என்றெண்ணிய பூனையது. ஈழ மக்கள் போரால் அழிந்து போனதால் இப்போ தமிழர்கள் எவரும் பெரிதாக போரை விரும்பாத சூழலை அவதானித்த பூனையின் அனுமானம் அது. மனிதர்கள் அனைவரும் போர் கொழுந்து விட்டெரிகிற மனதோட பயணிக்கின்ற மனநோயாளிகள். சிலர் இனவாதம் பேசுகின்றார்கள், சிலர் சமத்துவம் பேசுகின்றார்கள், ஜனநாயகமென்கின்றார்கள் சிலர், ஆன்மீகம் பேசுகின்றார்கள் சிலர். ஆனால், அனைவரும் முதலாளித்துவ சிந்தையுடையவர்கள். அனைவரும் மனத்தால் பெரும் கேடானவர்கள். போரை விரும்புபவர்கள் என்றது பலஸ்தீனத்திற்கு ஆதரவான கொம்பனாடு.

இந்த உலகம் என்பது, வேற்றுக் கிரகத்தவர் தம் கெட்டவர்களையனுப்புகிற அவர்களிற்கான நரகுலகு என்றது ஆடு. இவர்களுக்கு அப்பாவிகள் மேல் போர் செய்வதற்குப் பணமிருக்கிறது. ஆனால், அப்பாவி ஏழைகள் பஞ்சம் தீர்த்து உணவிட, உதவிடப் பணமில்லையாம். ஒரு துண்டு தேங்காய் திருடிய எம் எலிகளை விசம் வைத்துக் கொல்கிற இந்த கேடுகெட்டவர்கள் ஊரை, உறவை, உலகத்தை திருடிப் பல பில்லியன் பணம் கொள்ளையடிப்பவனை கண்டு கொள்வதில்லை. அப்பேற்பட்ட திருடர்களை, கேடானவர்களைத்தான் பணக்காரன் என்பதால் வாக்குப் போட்டுத் தலைவராக்குகிறார்கள் இந்த மனிதர்கள்.

அவர்கள்தான் இந்த உலகின் மீட்பர், தொண்டர், சமூகப் பெருமக்கள். உறவுகளே! நாம் சும்மா சும்மா தேர்தலும், வேட்பாளரும் தெரிந்து ஒரு மயிரும் இங்கு பிடுங்க முடியாது. காசுள்ள மனிதரே இந்த உலகில் அனைவரையும் தன் கட்டுப் பாட்டினுள் வைத்திருக்கின்றார்கள். அதற்காகச் சட்ட திட்டங்களை தனக்கெனவே எழுதியுள்ளார்கள். குரங்குலிருந்து வந்த இந்த மனிதர்களோ, கடவுளே தங்களைப் படைத்ததாகவும், மிருகங்களையும், பறவைகளையும் தங்களுக்காகவே கடவுள் படைத்ததாகவும் வேண்டுமென்றே காலங்காலமாக பொய் சொல்லி வருகிற மூடர்கள்.

அதையே அவர்கள் மதமாகப் போற்றி வாழ்கின்றார்கள். இது நல்லதல்ல. அமைதியை விரும்புவதாக சொல்லிக்கொண்டே அனைத்து அனியாயங்களையும் புரிபவர்கள் அவர்கள். கொன்றவனோடு கூட்டாளியாக இருந்து கொண்டே ஒடுக்கப்பட்டோரின் பிரதிநிதியென்று கொல்லப்படுபவர்களுக்கும் தலைவராய்த் திகழ்கிற திருடர்கள் இந்த மனிதர்கள். அமைதி நிறைந்த உலகையும், நம் அழகிய வாழ்வையும் தம் சுய நலத்திற்காகச் சிதறடிக்கிற சாத்தான்கள் இந்த மனிதர்கள் தான். அவர்கள் தமக்குள் அடிபட்டிறப்பது எமக்கு மகிழ்ச்சி தான். ஆனால், அவர்கள் கண்ட தொழில்நுட்பங்களை, அணுப் பரிசோதனைகளை எம்முள் பரிசோதித்து எம்மினங்களை அழிக்கின்றர்கள். அவர்களின் போருள் அப்பாவிகளான எம்மினம் அனியாயமாக அழிகிறது. ஒரு புறத்தில் இனம், மொழி, மதம் என அடையாளம் பேணுவதாகச் சொல்லிக்கொண்டு, மறுபுறத்தில் இனங்களை கடந்து தாம் ஆயிரம் ஆண்டு வாழ எத்தகைய வழிமுறையுண்டு என ஒன்றையொன்று வெட்டிப் பொருத்தி ஹைப்பிரட் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பவர்கள் அவர்கள். இதற்கு முதன் முதலில் இலக்கானது எம் யானை தான். மனிதரின் தலையை சீவி விட்டு யானைத் தலையை ஒட்டி, அதுதான் தம் அடையாளம், கடவுள் என்பவர்கள் அவர்கள். இந்த மனிதர்கள் இயற்கையை அழித்து அனைத்தையும் பாழாக்கி தாம் அழிந்து போவது மட்டுமல்ல எம்மையும் அழிக்கின்றார்கள் என்பதற்கு அது நல்ல உதாரணம் தோழர்களே.

பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், கொரோனா எனப் பாரிய நோய் வைரஸ்களை எம் பறவைகள், விலங்குகளுள் செலுத்தி எம்மை அழித்து தாமும் அழிகின்றார்கள். இந்தக் கொடியோர் செயலை நாம் முடிவிற்கு கொண்டு வந்தேயாக வேண்டும். யாரும் இங்கு பெரியார் என்றும், சிறியார் என்றும் இல்லை. அனைத்தும் சமமென்கிற தேசத்தைப், பொதுவுடமைச் சமூகத்தை நாம் ஆக்கியே ஆக வேண்டும் என்றது கம்யூனிசம் அறிந்த கொம்பனாடு.

அது பேசிக் கொண்டிருந்த போது வெளியே பெரும் பரபரப்பாக மக்கள் ஓடிச் சென்று தம் தொலைக்காட்சிச் சத்தத்தை கூட்டி வைத்துச் செய்திட கேட்டார்கள். விலங்குகள் திரும்பிப் பார்த்தவாறு அந்த செய்தியைக் கேட்டன. உலகின் அனைத்து இளையோரையும் தம் இசையால் மயக்கிய one direction இசைக்குழுக் கலைஞன் Liam Payne தற்கொலை என்றது அந்த செய்தி. 31 வயதுடைய இங்கிலாந்து தேசத்தவனான அவன் கடந்த பலவருடங்களாக உலக இளையோரை தன் இசையால் வசமாக்கி வைத்திருந்தவன். ஆர்ஜென்டீனா நாட்டின் நட்சத்திர விடுதியொன்றில் போதை மருந்தின் உச்சத்தில் திளைத்து மூன்றாம் மாடியிலிருந்து குதித்து இறந்திருந்தான். உலகின் பில்லியன் கணக்கான இளையோரின் மனங்கவர்ந்த கதாநாயகன் அவன். உலகில் பலரும் அவன் படத்தை தம் நெஞ்சிலே பச்சை குத்தி, குருவாக ஏற்றுக் கொண்டிருந்தனர். இப்படித்தான் இன்றைய இளையோர் போதையடிமைகளான பிழையான உதாரணமானவர்களைத்தான் தம் வழிகாட்டிகளாக கொண்டு இச்சமூகத்தை உருப்படாதழிக்கிறார்கள், என்றார்கள் அதைப் பார்த்துக்கொண்டிருந்த மனிதர்கள்.

இதே போன்றுதான் அமெரிக்க தேசத்தை முன்னர் கேவலமாக்கிய முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப்பை மறுமுறையும் ஆதரிக்க ஓர் கூட்டம் அலைகின்றது என்றார்கள் அவர்கள். அவர்கள் கூட்டத்திலிருந்த ஒல்லியான ஒருவன் கேட்டான், இங்கு

என்ன வாழுதாம். காலங்காலமாக ஏமாற்றுகிறவர்களைத் தானே நாமும் நெடு நாட்களாக தேர்ந்து பாராளுமன்றம் அனுப்புகின்றோம். மனிதர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

துன்பமும் துயரமும் நமக்கு வந்தால் அது அடுக்கடுக்காக தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறது. நேற்றுத்தான் மர நாய் வாயிலிருந்து தப்பினேன். இன்றைக்கு நரி துரத்திய வேளை சேற்றுள் புதையுண்டு போன என்னை முற்போக்காடு செவியில் கவ்வி நல்லவேளை மீட்டெடுத்தது என்று அழாக்குறையாக சொன்னது முயல். துரத்துகிற மிருகங்களை நம்பினாலும் இந்த மனிதரை மட்டும் கொஞ்சமும் நம்ப முடியாது. நல்லாக் கொஞ்சி மகிழ்ந்தபின் பஞ்சுப் பெட்டி மாதிரியிருக்கிறாய் என்றவாறு என் சோடி முயலை அறுத்துக் கறியாக்கிய கொடூரத்தை என் கண்ணால் கண்டவன் நான் என்றது முயல். யாரை நம்புவது யாரை நோவது? என்று முயல் பெருமூச்சு விட்ட வேளை.

***ஆவீன மழைபொழிய இல்லம் வீழ***
***அகத்தடியாள் மெய்நோக அடிமை சாக***
***மாவீரம் போகுதென்று விதைகொண் டோட***
***வழியினிலே கடன்காரன் மறித்துக் கொள்ள***
***சாவோலை கொண்டொருவன் எதிரே தோன்ற***
***தள்ளவொணா விருந்துவர சர்ப்பந் தீண்ட***
***இந்தப் பாவிமகன் படுந்துயரைப் பார்க்கொணாதே***

என்று மானிடப் பதர் ஒருவன் வெளியே தன் துயரைப் பெருங் குரலில் பாடிக்கொண்டிருந்தான். தம் இனத்தையே வருத்தும் ஈனர்கள் மத்தியில் எந்த நம்பிக்கையில் நாம் அன்றாட வாழ்க்கையை வாழ்கிறோம் என்பதை நானறியேன். ஆனால், இந்த மனிதர்கள் எம்மை ஓர் நாள் கொன்றே போடுவார்கள் என்றது எருது தீர்மானமாக. கடந்த வாரம் விலங்குப் பண்ணையுள் மானிடரின் கேவலமான மானிடச் சடங்குகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த எருதின் வாயை அடைத்தோம் நாம். இன்றைக்கு நடக்கிற விசித்திரத்தைப் பாருங்கள் என்றது வெளிப்புறத்தைக் காட்டியபடியே தாடிவளர்த்திருந்த முற்போக்காடு.

வெளியே யானையில் வைத்து சுற்றுஞ் சூழ ஊர்வலமாகப் பவனி வந்த பின், ஹெலிக்கொப்டரில் ஏற்றி சுற்றிப் பறக்க விட்டுக் கொண்டிருந்தான் தன்மகளைப் பெரும் பணக்காரன் ஒருவன். பூப்புனிதம் என்கிற பெயரில், தெருவில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தவர்களை அந்த ஊர்வலம் தடையற்றுச் செல்ல நகர்காவலர் புறந்தள்ளி ஒதுக்கினார்கள். ஒருவன் பட்டினி கிடக்க அவன் மேலேறி உழக்குகின்ற இவர்கள்தான், தங்களுக்குத் தேசியம் தேவை என்கின்றார்கள். தனித் தேசம் கேட்கின்றார்கள். பொலிஸ் பாதுகாப்பு தனியாக வேண்டுமென்கின்றார்கள்.

தங்கள் அடையாளத்தையும், கண்ணியத்தையும் மீட்டெடுக்க இதுவல்ல வழி என்றது கொம்பனாடு. இலக்கியங்களும், மரபுகளும், கூட்டு வாழ்க்கையும், இயற்கையும் கொண்டாடப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும். கலாச்சார மேன்மையை நாம் நிராகரிக்க முடியாது. ஆனால், இவர்கள் தங்கள் கலாச்சாரம் எதுவென்று அறியாதிருக்கின்றார்கள். அறிவியலற்ற, புரிதலற்ற கல்வித்திட்டம் எம் பன்னெடுங்காலத்தைப் பாழாக்கிப் போட்டிருக்கிறது. உற்பத்தியாளர் மீது சவாரி விடக் கற்றுக்கொடுக்கிற பல்கலைக்கழகங்களும் அதன் கோணங்கிப் பேராசான்களும் அவர்கள் உருவாக்குகிற மாணவர்களும் தன் முனைப்புச் சிந்தனையாளர்களல்ல. அவர்கள் யார் யாரோ ஆட்டுவிக்கும் பொம்மைகள். கழுதை கத்தினால் அதிஷ்டமாம். அது கத்துவதற்காக காத்துக்கிடக்கின்றார்கள் இந்த அற்ப மனிதர்கள். பாம்புகள் புணரும் போது அதற்கு மேல் துணிவிரித்து அந்த துணியை வீட்டில் வைத்துக் கும்பிட்டால் விடிவு வரும் என்கின்றார்கள் இந்த மூடர்கள். கல்விக்கும், செல்வத்திற்கும் தனித்தனிக் கடவுள் இருக்கும் நாட்டில் கையெழுத்து வைக்கத் தெரியாத, சிந்திக்கத் தெரியாத முட்டாள்கள் எப்படிப் பெருகினார்கள் என்றும், பஞ்சமும், பட்டினியும் எப்படிப் பெருகியதென்றும் கேட்கத் தெரியவில்லை இங்கு எவருக்கும். முறிந்த கிளையென விழுந்து கிடக்கிறது இவர்கள் பேசுகிற தேசியம் என்ற கொம்பனாட்டின் குரலிற்கு எவரிடமும் பதிலில்லை. ஒருவன் அயோக்கியன் என்று தெரிந்த பின்பும், தன் சுயநலத்திற்காக அவனைப் புனிதப்படுத்தி, அவனை வெல்லவைக்க நினைப்பவர்கள் தான் இங்கே அதி உச்ச அயோக்கியர்கள். அப்படித்தான் இந்த மனிதர்கள் அனைவரும் இருக்கின்றார்கள்.

பல்லாண்டுகால ஈழ விடுதலைப் போராட்டத்தினையும், அதற்காக மரணித்த லட்சோப லட்சம் போராளித் தமிழர்களையும் மிகவும் கேவலமாக்கி, மலினமாக்கி வைத்துவிட்டு, இனறைக்குப் போலித் தேசியம் பேசுகிற தமிழ்க் கட்சியினர் பலரும் ஒற்றுமையாக போராட வேண்டிய நேரத்தில் சின்னங்களுக்காகவும், பதவிகளுக்காகவும் அடிபட்டு இனமானத்தை குழி தோண்டிப் புதைக்கிற ஈனச்செயலுள் மாய்வது ஒற்றுமையான தேசியவாதிகள் செய்கிற வேலையல்ல.

போராளிகள் தமிழீழ விடுதலைக்காகப் போராடினார்கள். அவர்களை மீட்கப் போகிறோம் என்கிற எந்தக் கட்சிகளிலும் ஈழத்திற்காய் போராடி நிர்க்கதியாய் நிற்கிற போராளிகள் வேட்பாளர்களாகவில்லை. அதைக் கேட்பாருமில்லை. தமிழீழத்திற்கான விடுதலைப் போராட்டமென ஆரம்பித்து தமிழ்த் தேசியவாதிகள் தம்மிடையே முட்டி மோதி 'தமிழீழத்தின்' பெயரால் தம்மையே கொன்றழித்த ஈழவர்கள் பல இலட்சம் பேர். இது போன்ற இழிநிலை இந்த விலங்குப் பண்ணையுள்ளும் ஏற்படக்கூடாது தோழர்களே. இப்படியான மனிதர்களின் அடாவடித்தனம் அனைத்தையும் நாம் மாற்ற வேண்டும் என்றது கொம்பனாடு.

விலங்குகள் சரியெனத் தலையாட்டின சுயலாபத்திற்காகவும், தம் குடும்ப நலத்திற்காகவும் ஓர் போராடும் சமூகத்தை காட்டிக்கொடுத்து, ஆள்பவர்கள் காலில் கும்புடு பூச்சிகளாக விழுபவர்கள் தலைவர்களல்ல. மனித சாதியின் இத்தகு கொடூரங்களை விலங்குகளாகிய நாம் உதாரணமாக கொள்ள வேண்டும். அனைத்து மனிதர்களும், மதங்களும், இனங்களும் சமமென கருதுகிற முற்போக்குச் சிந்தனையை இந்த மனிதர்கள் ஏற்கனவே வளர்த்திருந்தால் இலங்கையில் இனப் பிரச்சினையே இருந்திருக்காது. ஒருவரை ஒருவர் கொன்றழித்திருக்க மாட்டார்கள்.

விலங்குகளாகிய நாம் எதிர்காலத்தில் நிம்மதியாக மூச்சுவிட பொதுவுடமைக் கோட்பாட்டை விட்டால் வேறுவழியில்லை. இன்று எம்மைப் போலவே இலங்கையடங்கிலும் மனிதர்களுக்குப் பொதுத்தேர்தலை அறிவித்திருக்கின்றார்கள். அதற்காக வேட்பாளராக மழைக்காலப் புற்றீசல்களைப் போல புறப்




பட்டு பெருவாரியாக எங்கும் பறக்கத் தொடங்கியிருக்கின்றார்கள் அவர்கள். ஒவ்வொருவரும் வேட்பாளராகி மற்றவரை நசிக்கி தன் பலத்தையும், பணத்திமிரையும் காட்டி வாக்குத் திரட்டப் புறப்பட்டிருக்கின்றார்கள்.

அதற்காக அவர்கள் எந்த எல்லைக்கும் போகத் துணிந்தவர்கள். தங்கள் பெயர்களின் முன் காலவதியாகிப்போன அல்லது களவிலே பெற்ற வேண்டாத பட்டங்களையெல்லாம் நீண்ட வரிசைகளிலே பொறித்து வைத்துள்ளார்கள். கோமாளிச் சின்னங்களில் தங்களுக்கே புள்ளடியிட வேண்டுமென மேடை போட்டுப் புலம்பித் திரிகின்றார்கள். ஒற்றுமையாக தம் சமூகத்திற்காகப் போராடுபவர் யாராவது இப்படிப் போட்டி போட்டு தானேயழிந்து தலைசாய்வார்களா தோழர்களே? இயற்கையை அழிக்கிற மனிதரிடமிருந்து விலகி நிற்பதே விங்குகளாகிய எமக்கான வாழ்வு என்று கொம்பனாடு சொல்லி முடிப்பதற்கிடையே, பண்ணை வாசலில் வேகமாக ஓர் விலையுயர்ந்த BMW வந்து நின்றது.

மூன்று தேசியவாதிகள் வெள்ளை வேட்டியோடு இறங்கினார்கள். ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களா அல்லது வேறுவேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களா என்பதை அறிய முடியவில்லை. பண்ணை முன்றலின் மாமரக்கிளையில் கைகளைப் பற்றி நெளிவெடுத்தபடியே இரகசியம் பேசினார்கள். அதில் ஒருவன் தள்ளாடினான். கரடிப் போக்குச் சந்தியில் மாபெரும் கடையடைப்பும், உண்ணாவிரதமும் போரில் இறந்த தமிழர்க்காகவும், போரில் காணாமலாக்கப் பட்டவர்களுக்காகவும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதை ஏற்படுத்திய முக்கிய புள்ளிகள் தாங்கள் தானாம். என்றாலும், அவர்கள் நண்டுக்கறி, ஆமைக்கறி, மட்டனோடு சாப்பிட்டசாப்பாடும், விஸ்கியும் வயிற்றினுள் கடாமுடா என்றிருப்பதாக ஒருவருக்கொருவர் சொல்லியபடியே அந்த முக்கிய பேச்சாளர்கள் மேடைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சிற்கு கை தட்டவென காலையிலிருந்து உணவின்றிக் காத்துக் கொண்டிருந்தது அப்பாவிச் சனம்!

(தொடரும் ...)



sithivinayagam@thaiveedu.com



# இன்னிசைப் பறவை

– ஹன்ஸ் கிரிஸ்ரியன் அன்டர்சன்

தமிழில் : என்.கே. மகாலிங்கம்

சீனாவின் பேரரசன் ஒரு சீனாக்காரன். அவனைச் சுற்றி இருந்தவர்களும் சீனர்களே. நான் சொல்லப்போகும் இந்தக் கதை பல ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. ஆகவே அதை மறப்பதற்கு முன் அதைக் கேட்டு வைப்பது நல்லது. பேரரசின் அரண்மனை உலகிலேயே மிகவும் அழகானது. அது வெண்களியால் மட்டுமே கட்டப்பட்டது. அத்துடன் அது மிகவும் விலை உயர்ந்த ஒன்று. ஆனால் அது உடையக்கூடியது, மென்மையானது. அதைத் தொடுபவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அங்கேயுள்ள தோட்டத்தில் தனித்தன்மை வாய்ந்த அழகான மலர்கள் இருந்தன. அவற்றில் அழகான வெள்ளி மணிகள் கட்டப்பட்டிருந்தன. அவை எப்பொழுதும் கிணுகிணுத்துக் கொண்டிருக்கும். அதனால் அவ்விடத்தால் செல்லும் அனைவரும் அந்த மலர்களைப் பார்க்காமல் செல்ல முடியாது. உண்மையில் அந்தப் பேரரசனின் தோட்டத்தில் இருந்தவை அனைத்தும் தனிச் சிறப்புடையவை.

அந்தத் தோட்டம் வெகுநீளமாகப் பரந்திருந்தது. அந்தத் தோட்டத்தைப் பராமரிப்பவனுக்கே அது எங்கே முடிகிறது என்பது தெரியாது. அதன் எல்லைக்கு அப்பால் பயணம் செய்தவர்களுக்கு அங்கேயொரு உன்னதமான காடொன்று இருப்பதாகத் தெரியும். அதற்கப்பால் உயரமான மரங்கள் ஆழமான நீல நிறக் கடலில் சரிந்து கீழே இறங்குவதையும், மரக்கிளைகளது நிழல்களின் அடியில் பெரும் கப்பல்கள் செல்வதையும் காண முடியும். அந்த மரங்களில் ஒன்றில் ஓர் இன்னிசைப் பறவை வாழ்ந்து வந்தது. அது இனிமையாகப் பாடும். அந்தப் பாடலை ஏழை மீனவன் தனக்குப் பல வேலைகள் இருந்தபோதிலும் அங்கே நின்று கேட்பான். சில வேளைகளில் மீனவர்கள் இரவில் வலையை விரிக்கக் கடலுக்குச் செல்லும்போது அதைப் பாடுவதைக் கேட்டு, ‘ஓ, அது அழகல்லவா?’ என்பார்கள். ஆனால் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டு திரும்பும்போதும், மறுநாள் இரவுவரை அந்தப் பறவையை மறந்து விடுவார்கள். பின் திரும்பவும் பாடுவதைக் கேட்டு, ‘ஓ, இன்னிசைப் பறவையின் பாடல் எத்துணை அழகானது!’ என்று வியந்து போவார்கள்.

உலகத்திலுள்ள பயணிகள் பலரும் பேரரசரின் நகரத்திற்கு வந்து அரண்மனையையும் தோட்டங்களையும் பார்த்து வியந்து போற்றினார்கள். ஆனால் அவர்கள் இன்னிசைப் பறவையின் பாடலைக் கேட்டபோது அவற்றில் எல்லாம் சிறந்தது அதுவே என்றார்கள். பயணிகள் தங்கள் வீடுகளுக்குச் சென்றபோது தாம் கண்டதைப் பலருக்கும் சொன்னார்கள். படித்தவர்கள் அதைப்பற்றி நூல்கள் பலவற்றை எழுதினார்கள். அவற்றில் நகரத்தையும் அரண்மனையையும் தோட்டங்களையும் பற்றி விபரித்தார்கள். அதில் இன்னிசைப் பறவையைப் பற்றியும் மறக்காமல் எழுதினார்கள். அதுவே அவர்கள் பார்த்ததில் உண்மையில் மிகப் பெரும் அதிசயம். கவிதைகள் எழுதக்கூடியவர்கள் ஆழமான கடலுக்கு அண்மையில் உள்ள காட்டில் வாழ்ந்த இன்னிசைப் பறவையைப் பற்றி அழகான செய்யுள்களை யாத்தார்கள். அந்நூல்கள் உலகம் முழுவதும் பயணம் செய்தன. அவற்றில் சில பேரரசனின் கைகளுக்கும் கிடைத்தன. அவர் தன் தங்க சிம்மாசனத்தில் இருந்து வாசித்தபோது ஒவ்வொரு கணமும் அதில் சொல்லப்பட்டவற்றை ஆமோதித்துத் தலையை அசைத்தார். அவரின் அழகான நகரம், அரண்மனை, தோட்டங்கள் பற்றிய அழகான விபரிப்புக்களைக் கண்டுதான் அப்படித் தலையசைத்தார். ஆனால் ‘உள்ளவற்றிலேயே இன்னிசைப்பறவைதான் மிகவும் அழகானது,’ என்று சொல்லியிருக்கும் இடத்திற்கு வந்தபோது, ‘என்ன இது? எனக்கு இந்த இன்னிசைப் பறவையைப் பற்றி ஒன்றும் தெரியாதே. அப்படியான பறவை ஒன்று என் பேரரசில் இருக்கிறதா? அதுவும் என் தோட்டத்தில்? நான் கேள்விப்படவில்லையே? சிலவேளை அதைப்பற்றி அவர்கள் புத்தகங்களில் அறிந்திருக்கலாம்,’ என்று சொன்னார்.

அதன் பின் தன்னருகில் நின்று சேவிக்கும் பிரபுவை அழைத்தார். உயர் வர்க்கத்தைச் சேர்ந்த அந்தப் பிரபு தன்னிலும் பார்க்க தரம் குறைந்த ஒருத்தன் தன்னிடம் பேசினால் அல்லது ஒரு கேள்வி கேட்டால் அதற்கு அவன் ‘பூ... இதுதானா’ என்று இளக்காரமாகப் பதிலளிப்பான். ஆனால் இவர் பேரரசர். அப்படிச் சொல்ல முடியவில்லை.

‘இங்கே அதிசயமான ஒரு பறவையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பெயர் இன்னிசைப் பறவையாம். அதுவே என் பேரரசில் மிகவும் அழகான ஓர் உயிராம். அதைப்பற்றி ஏன் எவரும் என்னிடம் சொல்லவில்லை,’ என்று கேட்டார் பேரரசர்.

‘அந்தப் பெயரை நான் கேள்விப்பட்டதே இல்லை,’ என்றான் அந்தப் பிரபு. ‘அதை இந்த அரண்மனையில் எவரும் காட்சிப்படுத்தவே இல்லை.’

‘இன்று மாலை அதை என் முன்னிலையில் காட்சிப்படுத்த வேண்டும்.’ என்றார் பேரரசர். ‘என்னிடம் எத்தனை அழகான பொருள்கள் இருக்கின்றன என்பதை முழு உலகமும் அறியும். நான் அறியவில்லை.’

‘நான் அதைக் கேள்விப்பட்டதே இல்லை,’ என்றான் அந்தப் பிரபு. ‘இருந்தும் நான் அதைக் கண்டு பிடிப்பேன்.’

அந்த இன்னிசைப் பறவையை எங்கே பார்க்க முடியும் ? பிரபு மேல்மாடிக்கும் கீழ்மாடிக்கும் மண்டபங்கள் ஊடாகவும் நடை பாதை ஊடாகவும் நடந்தான். இருந்தும் அந்தப் பறவையைப் பற்றி அவனைச் சந்தித்த எவரும் கேள்விப்பட்டதே இல்லை என்றார்கள். பின் அவன் பேரரசரிடம் திரும்பி வந்து அது கற்பனைக் கதையாக இருக்க வேண்டும் என்றும் புத்தகங்களை எழுதியவர்கள் அதைத் தங்கள் கற்பனையில் கண்டு எழுதியிருக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். ‘எங்கள் மாட்சிமை மிக்கவரே, புத்தகங்களில் உள்ள எல்லாவற்றையும் நம்ப முடியாது. சிலவேளை அவை புனைவுகள் மட்டுந்தான். அல்லது அது மந்திரக் கலை என்று நாம் அழைக்கும் கலையாகவும் இருக்கலாம்.

‘ஆனால், அந்த நூலை யப்பானின் வலிமையான பெரும் பேரரசன் எனக்கு அனுப்பியிருக்கிறார். அதில் தான் இது சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அதில் பொய்கள் இருக்க முடியாது. அந்த இன்னிசைப் பறவையின் பாடலை இன்று நான் கேட்க வேண்டும். இன்று மாலை அது இங்கே இருக்க வேண்டும். அதுவே என் மேலான விருப்பம். அது எனக்கு வராவிட்டால் இரவுணவின் பின் முழு அரசவையும் மிதித்து ஒடுக்கப்படும்.’

பிரபு திரும்பவும் எல்லாவிடமும் ஓடினான். படிக்கட்டுகளில் மேலேயும் கீழேயும் ஓடினான். மண்டபங்கள், நடைகூடங்கள், எல்லாவற்றுக்கும் ஓடினான். அரண்மனையிலிருந்த அரைவாசிப்பேர் அவனுடன் ஓடினார்கள். அவர்கள் தாங்கள் மிதிக்கப்படுவார்கள் என்ற எண்ணத்தை விரும்பவில்லை. இந்த உலகத்திற்கே இந்த அதிசயமான இன்னிசைப் பறவையைத் தெரியும். ஆனால் எனக்கும் இந்த அரண்மனைக்கும் இது தெரியாது.’

இறுதியில் அவர்கள் ஓர் ஏழைச் சிறுமியைச் சமையலறையில் சந்தித்தார்கள். அவள் சொன்னாள். ‘ஓம், அது உண்மையில் இருக்கிறது. அந்த இன்னிசைப் பறவையை எனக்கு நன்றாகத் தெரியும். உண்மையில் அது பாடும். ஒவ்வொரு மாலையும் மேசையில் விழுந்து கிடக்கும் மீதி உணவைக் கொண்டு போவதற்கு எனக்கு அனுமதி இருக்கிறது, நோயுற்ற என் அம்மாவுக்குக் கொடுப்பதற்கு. அவர் கடற்கரைப் பக்கத்தில் வசிக்கிறார். திரும்பி வரும்போது நான் களைத்துப்போய் காட்டில் மரங்களின் அடியில் இளைப்பாற இருந்து விடுவேன். அப்பொழுது இந்த இன்னிசைப் பறவையின் பாடலைக் கேட்பேன். அப்போது என் கண்களில் கண்ணீர் வரும். அது என் அம்மா தந்த முத்தம் போல இருக்கும்.’

‘என் சின்னஞ்சிறிய சிறுமியே,’ என்றான் பிரபு. ‘நீ அந்த இன்னிசைப் பறவை இருக்கும் இடத்துக்கு எங்களை அழைத்துச் சென்றால், உனக்குச் சமையலறையில் நிரந்தரமான வேலை எடுத்துத் தருவேன். பேரரசர் உணவுண்ணுவதையும் பார்க்க உனக்கு அனுமதி கிடைக்கும்.’ அன்று மாலை அரண்மனைக்கு அழைத்துச் செல்ல அனுமதி கிடைத்தது. காட்டுக்குள் இன்னிசைப் பறவை பாடிய இடத்திற்கு அவள் அவர்களை அழைத்துச் சென்றாள். அவள் பின்னால் அரசவையிலுள்ள அரைவாசிப் பேர் சென்றார்கள். அப்படிப் போகும் போது ஒரு பசுமாடு கத்தத் துவங்கியது.



ஹன்ஸ் அன்டேசன் 1805-1875. டென்மார்க் தேச எழுத்தாளர். நாடகங்கள், பயணக் குறிப்புகள், நாவல்கள், கவிதைகள் என்று ஏராளமாக எழுதியவர். ஆனால் அவர் நீதிக் கதைகளுக்காகவே இலக்கிய உலகில் மிகவும் அறியப்படுகிறார். அவருடைய 156 கதைகள் ஒன்பது தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. 125 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டும் உள்ளன. The Emperor’s New Clothes, The Little Mermaid, The Nightingale, The Steadfast Tin Soldier, The Red Shoes, The Princess and the Pea, The Snow Queen, The Ugly Duckling, The Little Match Girl, Thembelina ஆகியவை உலக இலக்கியத்தில் அழியாப் புகழ்பெற்றவை. நீதிக் கதைகளாக இவை மக்களின் மனதில் பதிந்தவை. அவை நாட்டிய நாடகங்களாகவும், குழந்தைகளுக்கான திரைப் படங்களாகவும் வெளிவந்துள்ளன. பேச்சு மொழியில் ஹன்ஸ் அன்டேசன் தன் கதைகளை எழுதினார் என்ற குற்றச்சாட்டு அவர் வாழ்ந்த காலத்தில் அவர்மீது முன்வைக்கப்பட்டது.

‘ஓ, இப்போது அதைக் கண்டு கொண்டோம். இந்த ஒரு சிறிய உயிருக்கு எத்துணை அதிசயமான ஆற்றல் இருக்கிறது. இதை நான் முன்னரே கேட்டிருக்கிறேன்,’ என்றான் ஓர் இளம் அரசவையாளன்.

‘இல்லை, அதுவொரு பசு. அது கத்துகிறது. இன்னிசைப் பறவை இருக்கும் இடத்திலிருந்து நாங்கள் மிகவும் தூரத்தில் இருக்கிறோம்,’ என்றாள் அந்தச் சிறுமி.

அதன் பின் சதுப்பு நிலத்தில் கிடந்த சில தவளைகள் கத்தத் துவங்கின.

‘இனிமை,’ என்றான் திரும்பவும் அந்த இளம் அரசவையாளன். ‘சிறிய தேவாலயத்தின் மணிகளைப் போல கிணுகிணுக்கின்றதை என்னால் கேட்க முடிகிறது.’

‘இல்லை, அவை தவளைகள். ஆனால் மிக விரைவில் நாம் அந்தப் பறவையின் இன்னிசையைக் கேட்கப் போகிறோம்,’ என்றாள் சிறுமி.

‘இப்போது கேளுங்கள், கேளுங்கள்! அதோ அது,’ என்றாள் சிறுமி. ‘அங்கே அது குந்திக் கொண்டிருக்கிறது.’ கிளை ஒன்றில் குந்தி இருக்கும் ஒரு சிறிய சாம்பல் நிறப் பறவையைக் காட்டிச் சொன்னாள்.

‘அப்படிச் சிறிய ஒன்றாக இருக்குமா ?’ என்றான் பிரபு. ‘அதுவொரு சின்னஞ்சிறிய எளிய சாதாரணமான பறவையாக இருக்க முடியும் என்று என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. தன்னைச் சுற்றி மகத்தான மனிதர்களைக் கண்டதால் அது தன் நிறத்தை நிச்சயமாக மாற்றி இருக்க வேண்டும்,’ என்றான்.

‘சின்னஞ்சிறிய இன்னிசைப் பறவை. எங்கள் அதி உயர்வான கருணையுள்ள பேரரசர் உன்னைப் பாடச் சொல்லிக் கேட்கிறார், பாடு,’ என்றாள் அந்தச் சிறுமி தன் குரலை உயர்த்தி.

‘அது எனக்குக் கிடைத்த உயர்ந்த இன்பம்,’ என்று இன்னிசைப் பறவை சொல்லிவிட்டு மிகவும் மகிழ்ச்சியுடன் பாடத்



துவங்கியது.

‘சின்னச் சின்ன கண்ணாடி மணிகளைப் போல ஒலிக்கின்றது. பாருங்கள் சிறிய குரல் எப்படி செயற்படுகின்றது என்று. இதை நாங்கள் ஏற்கனவே கேட்கவில்லை என்பது எத்தனை ஆச்சரியம். இது அரசவையில் பெரும் வெற்றி பெறும்,’ என்றான் பிரபு.

‘நான் இன்னொரு தரம் பேரரசனின் முன்னால் பாடட்டுமா?’ என்றது இன்னிசைப் பறவை. அரசன் அங்கே இருக்கிறார் என்று அது நினைத்தது.

‘என் மிகச் சிறந்த சின்னஞ்சிறிய பறவையே. இன்று மாலை நடைபெறும் அரசவை விழாவிற்கு உன்னை அழைப்பதில் நாங்கள் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். அங்கே நீ உன் வசீகரமான பாட்டால் பேரரசரின் தயவைப் பெற்றுக் கொள்வாய்,’ என்றான் அரசவையாளன்.

‘என் பாடல் பசுமையான மரங்கள் அடர்ந்த காட்டில்தான் மிகவும் அற்புதமாக இருக்கும்,’ என்று சொன்னது பறவை. இருந்தும் பேரரசனின் விருப்பத்தை அறிந்து விருப்புடன் அரண்மனைக்குச் சென்றது.

அரண்மனை அந்த நிகழ்ச்சிக்காக நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுவர்களும் வெண்களியால் அமைக்கப்பட்ட தரைத்தளங்களும் ஆயிரம் விளக்குகள் வெளிச்சத்தில் பளபளத்தன. நடைக்கூட வழித்தடங்களில் அழகான மலர்களைச் சுற்றி சின்னஞ்சிறிய மணிகள் கட்டப்பட்டிருந்தன. மேலும் கீழும் வீசும் காற்றில் அந்த மணிகள் பெரிதாக அடித்துக் கொண்டிருந்தன. அதனால் எவர் பேசுவதையும் அங்கே கேட்க முடியவில்லை. பெரும் மண்டபத்தின் மையத்தில் இன்னிசைப் பறவை இருப்பதற்காகத் தங்கத்தால் செய்யப்பட்ட ஓர் இருக்கை போடப்பட்டிருந்தது. முழு அரசவையும் அங்கே குழுமி இருந்தது. சமையலறைச் சிறுமிக்கும் கதவடியில் நிற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இப்பொழுது அவளை உண்மையான அரண்மனைச் சமையல்காரியாக ஆக்கி இருந்தார்கள். அனைவரும் தங்கள் ஆடம்பரமான ஆடைகளில் வீற்றிருந்தார்கள். பேரரசர் அந்தப் பழுப்பு நிறச்

சின்னஞ்சிறிய பறவையைப் பாடச் சொல்லித் தன் தலையை அசைத்தபோது எல்லாக் கண்களும் அதையே பார்த்துக் கொண்டிருந்தன. இன்னிசைப்பறவை இனிமையாகப் பாடிய போது பேரரசரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அதன் பாடல் மேலும் இனிமையாகி அனைவரின் இதயத்தையும் தொட்டது. பேரரசர் மிகவும் மகிழ்ந்து இன்னிசைப் பறவைக்கு தன் தங்கக் காலணியை பரிசாக அளித்து அதன் கழுத்தில் மாலையாக கட்டச் சொன்னார். ஆனால் பறவை அதை நன்றியுடன் மறுத்தது. அதற்கு ஏற்கனவே போதுமான அளவு வெகுமதி அளித்து விட்டார்கள். ‘பேரரசரின் கண்களில் அதிசயமான ஆற்றல் இருந்தது. அதுதான் மிக உயர்வான பெறுமதி. பேரரசரின் கண்ணீரில் அற்புதமான ஆற்றல் இருக்கின்றது. அதுவே எனக்கு போதுமான மேன்மையாகும்,’ என்றது அந்தப் பறவை. அதன் பின் முன்னெப்போதையும் விட வசீகரமாகத் திரும்பவும் பாடியது.

‘அதன் பாடும் திறன் அதற்குக் கிடைத்த அருமையான கொடை,’ என்று அரண்மனையில் கூடியிருந்த சீமாட்டிகள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள். அதன் பின் தங்கள் வாய்க்குள் தண்ணீரை விட்டு, இன்னிசைப் பறவையின் கலகல ஓசையை அவர்களுடன் பேசும் மற்றவர்களுடன் இசைக்க முயன்றார்கள். அந்தப் பறவையைப் போல தாங்களும் பாடலாம் என நினைத்தார்கள். அரசவைச் சேவகர்களும் பணிப்பெண்களும் தங்கள் திருப்தியைத் தெரிவித்தார்கள். அதுவே பெரும் விசயம். ஏனெனில் அவர்களைத் திருப்திப்படுத்துவது என்பது மிகவும் சிரமமான காரியம். உண்மையில் இன்னிசைப் பறவையின் வருகை மிகப்பெரிய வெற்றி. அது அரசவையில் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்கான ஒரு கூடும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு நாளைக்கு பகலில் இரண்டு முறை வெளியே பறந்து போய் வரவும் அதற்குச் சுதந்திரம் இருந்தது. இரவில் ஒரு முறை போய் வரலாம். பன்னிரண்டு சேவகர்கள் இந்தச் சந்தர்ப்பங்களில் அதைப் பார்த்துக் கொள்வதற்காக நியமிக்கப்பட்டார்கள். அதன் கால்களை அவர்கள் ஒவ்வொருவரும் பட்டுக் கயிற்றால் கட்டிப் பிடித்திருப்பார்கள். அப்படிப் பறப்பதில் அதற்கு மகிழ்ச்சி இல்லை.

முழு நகரமே அந்த அதிசயமான பறவையைப் பற்றி பேசியது. இரண்டு பேர் சந்திக்கும்போதெல்லாம் ஒருவன் இன்னிசை என்று சொல்ல மற்றவன் பறவை என்று அதை முடித்து வைப்பான். அவர்களுக்குத் தெரியும் அதன் அர்த்தம் என்னவென்று. அக்காலத்தில் அவர்கள் வேறு எதைப்பற்றியும் பேசியதில்லை. நடைபாதை வியாபாரிகள் பதினொரு குழந்தைகளுக்கு இன்னிசைப் பறவையின் பெயரை வைத்தார்கள். ஆனால் அவர்கள் எவருக்கும் ஒரு ஸ்வரம் கூடப் பாடத் தெரியாது.

ஒருநாள் பேரரசருக்கு பெரிய பொதி ஒன்று கிடைத்தது. அந்தப் பொதியின்மேல் ‘இன்னிசைப் பறவை’ என்று எழுதப்பட்டிருந்தது. ‘இதில் புதிய நூல் ஒன்று இருக்கும். இதில் புகழ்பெற்ற இந்தப் பறவையைப் பற்றி எழுதப்பட்டிருக்கும்,’ என்று பேரரசர் சொன்னார். ஆனால் அதற்குள் புத்தகத்திற்குப் பதிலாக ஒரு பேழையில் ஒரு புதிய கலைப் படைப்பொன்று இருந்தது. அது செயற்கையான இன்னிசைப் பறவை. உண்மையான உயிருள்ள பறவையைப் போலவே செய்யப்பட்டிருந்தது. அதைச் சுற்றி வைரங்கள், மாணிக்கங்கள், நீலக் கற்கள் என்று சோடிக்கப்பட்டிருந்தது. அந்தச் செயற்கையான பறவைக்குச் சாவி கொடுத்தவுடன் அது உண்மையான பறவையைப்போல பாடும், வாலை மேலும் கீழும் ஆட்டும். வெள்ளியிலும் தங்கத்திலும் ஒளிர்விடும். அதன் கழுத்தில் ஒரு துண்டு றிபன் கட்டப்பட்டிருந்தது. ‘யப்பான் பேரரசரின் இன்னிசைப் பறவையை, சீனப் பேரரசின் இன்னிசைப் பறவையுடன் ஒப்பிடுகையில் பின்னதன் தரம் மிகவும் குறைவானது,’ என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

‘இது மிகவும் அழகானது,’ என்று அதைப் பார்த்த எல்லோரும் வியந்தார்கள். அந்த செயற்கைப் பறவையைப் கொண்டு வந்தவருக்கு ‘பேரரசுக்கு இன்னிசைப் பறவையை கொண்டு வந்த தலைமைக்காரர்’ என்ற பட்டத்தை கொடுத்தார்கள்.

‘இப்பொழுது இரண்டு பறவைகளும் ஒன்றாகப் பாட வேண்டும். அது எப்படியான சேர்ந்திசையாக இருக்கும்,’ என்றார்கள் அரசவையினர். ஆனால் இரண்டின் இசையும் ஒத்துப் போகவில்லை. உண்மையான இன்னிசைப் பறவை இயல்பாகத் தனது முறையில் பாடியது. செயற்கைப் பறவை வோல்ற்ஸ் நடன இசைகளை மட்டுமே பாடியது.

‘அதில் தவறில்லை. என்னுடைய இரசனைக்குச் சரியானதாகவே இருக்கின்றது,’ என்றார் இசை ஆசிரியர். அதனால் அது தனியாகப் பாடியது. அது உண்மையான பறவையைப் போல வெற்றிகரமாகவே அமைந்தது. அத்துடன், அது பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் இருந்தது. கை வளையல்கள், மார்பு ஊசிகள் போல அதுவும் ஒளிர்ந்தது. ஒரே இசையை முப்பத்து மூன்று முறை சளைக்காமல் திரும்பத் திரும்பப் பாடியது. மக்கள் அதைச் சந்தோசமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் பேரரசர் உண்மையான இன்னிசைப் பறவையை வேறொரு பாட்டைப் பாடச் சொன்னார். ஆனால் அப்போது அதைக் காணவில்லை. அது எங்கே போனது? திறந்திருந்த யன்னலால் வெளியேறி தன் பசுமையான காட்டுக்குள் திரும்பவும் அது சென்று விட்டதை எவரும் கவனிக்கவில்லை.

அது பறந்து போனதைப் பின்னர் கண்டுபிடித்தனர். ‘எப்படியான விசித்திரமான நடத்தை இது!’ என்றார் பேரரசர். எல்லா அரசவையினரும் அதைக் குற்றம் சாட்டினார்கள். மிகவும் நன்றியில்லாத ஓர் உயிர் என்று சொன்னார்கள்.

‘இருந்தும் இப்போது எங்களிடம் மிக உயர்ந்ததொரு இன்னிசைப் பறவை இருக்கிறது,’ என்றான் அங்கே இருந்த ஒருவன். அதன் பின் அந்தப் பறவையைத் திரும்பவும் பாட வைத்தார்கள். அந்தப் பறவை அப்படி ஒரே பாட்டைப் பாடுவதை அவர்கள் கேட்பது அது முப்பத்து நான்காவது முறை. அப்படி இருந்தும் அந்தப் பாட்டை அவர்களால் நினைவில் வைத்திருக்க முடியவில்லை. அது அத்தனை கடினமானது. ஆனால் இசை ஆசிரியர் அந்தப் பறவையை உச்சத்தில் புகழ்ந்தார். அத்துடன் அந்தப் பறவை உண்மையான இன்னிசைப் பறவையிலும் பார்க்க ஆடைகளிலும் அழகான வைரங்களிலும் தன் இசை ஆற்றலிலும் சிறந்தது என்றும் சொன்னார். ‘எனது தலைமைப் பிரபுவும், பேரரசரும் ஆகிய நீங்கள் அதை உணர வேண்டும், உண்மையான இன்னிசைப் பறவைக்கு எதைப்பாட வேண்டும் என்று சொல்ல முடியாது. ஆனால் இப்புதியபறவை ஏலவே முடிவு செய்யபட்டவற்றைதான் பாடும். அவற்றை எங்களால் விளக்கவும் முடியும். எப்படி வோல்ற்ஸ் இசை உருவாக்கப்படுகிறது, ஏன் ஒரு இசை ஸ்வரம் அடுத்த ஸ்வரத்தைத் தொடர்கிறது என்று மக்களால்

புரிந்து கொள்ள முடியும்.' 'அதைத்தான் நாங்கள் எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தோம்,' என்று மற்றவர்களும் பதில ளித்தார்கள். அதன் பின் இசை ஆசிரியர் அடுத்த ஞாயிற்றுக் கிழமை அந்தப் பறவையை மக்களுக்கு காட்சிப்படுத்த அனு மதி பெற்றார். பேரரசரும் அது பாடுவதைக் கேட்க எல்லோ ரும் ஒன்றுகூட வேண்டும் என்று ஆணையிட்டார். அதன் இசையைப் கேட்டபோது அவர்கள் அனைவரும் மயங்கியவர் களாகத் தோன்றினார்கள். அவர்கள் தேநீர் அருந்தியவர்க ளைப் போலவே இருந்தனர். தேநீர் அருந்துவதும் சீன மக்க ளின் பழக்கமே. எல்லோரும் 'ஓ!' என்று சொல்லிச் சுட்டுவி ரலை உயர்த்தி நல்லது என்பது போல தலைகளை அசைத் தார்கள். ஆனால் உண்மையான இன்னிசைப் பறவையின் பாடலைக் கேட்ட ஓர் ஏழை மீனவன் சொன்னான். 'இது அழகா கத்தான் இருக்கிறது. ஆனால் மெல்லிசைகள் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கின்றன. அதில் ஏதோ குறை இருக்கிறதா கத் தெரிகிறது. அது எதுவென எனக்குச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை.'

இதன் பின்னர் உண்மையான இன்னிசைப் பறவை பேரரசில் தடை செய்யப்பட்டது. செயற்கையான பறவை பேரரசரின் கட் டிலுக்கருகில் பட்டுத் தலையணையில் வைக்கப்பட்டது. பற வையைச் சுற்றி அதற்குப் பரிசாகக் கிடைத்த தங்கமும் விலை உயர்ந்த மாணிக்கக் கற்களும் வைக்கப்பட்டன. இப் பொழுது அதற்கு புதியதொரு பட்டமும் அளிக்கப்பட்டது. 'பேரரசின் சின்னஞ்சிறிய பாடகர்.' முதலாம் தரம் என்று இடது பக்கம் எழுதப்பட்டிருந்தது. ஏனெனில் பேரரசரின் இதயம் இருக்கும் இடது பக்கம் மிகவும் மேன்மையானது என்று எண் ணினார்கள். அத்துடன் ஒரு பேரரசரின் இதயமும் மக்களின் இதயமும் ஒரே இடத்தில் தான் இருக்கிறது என்று எண்ணி னார்கள்.

இசை ஆசிரியர் செயற்கை இன்னிசைப் பறவையைப் பற்றி இருபத்தைந்து தொகுதிகளில் ஒரு நூல் எழுதினார். அது மிக வும் துறைபோன, மிகவும் நீளமான நூல். அதில் மிகவும் கடின மான சீனச் சொற்கள் இருந்தன. இருந்தும் தங்களை முட் டாள்கள் என்று நினைத்து விடுவார்கள் என்பதாலும் தங்க ளைக் காலடியில் போட்டு நசித்து விடுவார்கள் என்ற பயத்தி னாலும் எல்லாரும் அதைத் தாங்கள் வாசித்துப் புரிந்து கொண்டதாகச் சொன்னார்கள்.

அப்படி ஓராண்டு சென்றது. பேரரசன், அரசவையினர், ஏனைய சீனர்கள் அனைவருக்கும் இப்பொழுது செயற்கை யான அந்தப் பறவையின் பாட்டின் ஒவ்வொரு சின்னஞ்சிறிய திருப்பமும் தெரியும். ஆகையால் அப்பறவை அவர்களை மேலும் மகிழ்ச்சியானவர்களாகவும் ஆக்கியது. அந்தப் பற வையுடன் சேர்ந்து அவர்களாலும் பாட இயலும். அப்படி அவர்கள் அடிக்கடி பாடினார்கள். தெருச் சிறுவர்களும் பாடி னார்கள். 'சீ-சீ-சீ, சக், சக், சக்.' பேரரசராலும் அதைப் பாட முடியும். அவர் பாடினால் உண்மையில் மிகவும் வேடிக்கை யாக இருக்கும்.

ஒருநாள் மாலை செயற்கைப் பறவை அதன் மிகச்சிறந்த பாட லைப் பாடிக் கொண்டிருந்தது. அதை பேரரசர் தன் கட்டிலில் படுத்துக் கிடந்து கேட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது பற வைக்குள் ஏதோ 'விஷ்' என்ற சத்தம் கேட்டது. அதன் பின் சுருள்வில் உடைந்த சத்தம் கேட்டது. 'விர்..ர்..ர்.' எல்லா சில்லு களும் சுற்றின. பின் இசை நின்றது. பேரரசர் உடனே கட்டிலி லிருந்து எழுந்து தன் மருத்துவரை அழைத்தார். அவரால் என்ன செய்ய முடியும்? பின்னர் கடிகாரம் செய்பவருக்கு அழைப்பு விடுத்தார்கள். பலமணி நேரம் பேசியும் பரிசோ தித்த பின்பும் பறவையை ஓரளவு சரி செய்தார்கள். அதன் உருள்கலன்கள் தேய்ந்து உள்ளமையால் அதைக் கவனமா கக் கையாள வேண்டும் என்றும், புதிய உருள்கலன்களைப் போடுவதாயின் அதன் இசையில் பாதிப்பு ஏற்படக்கூடும் என் றும் அவர் சொன்னார். இப்பொழுது அங்கே பெரும் துயர் சூழ்ந்தது. ஆண்டிற்கு ஒருமுறைதான் அது பாட அனுமதிக் கப்பட்டது. அதுகூட, அதன் உள்ளே இருக்கும் பொறிக ளுக்கு ஆபத்தாக இருக்கும் என்றார் இசையாசிரியர். அதன் பின் சிறியதொரு பேச்சையும் நிகழ்த்தினார். அவர் பேசிய சொற்கள் முழுவதும் கடினமாக இருந்தன. அதன் பின் பறவை முன்னர் போல சிறப்பாகவே இயங்கும் என்றார். அவரை எவரும் மறுத்துச் சொல்லத் துணியவில்லை.

ஐந்து ஆண்டுகள் கடந்தன. அதன்பின் அந்த நாட்டிற்கு உண்மையாகவே துயரம் ஒன்று நிகழ்ந்தது. சீனர் தங்கள் பேரரசரில் பெருவிருப்பம் கொண்டவர்கள். இப்பொழுது அவர் கடும் நோயுற்று படுக்கையில் கிடந்தார். அவர் உயிர் பிழைப்பார் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. ஏற்கனவே புதிய பேரரசர் ஒருவரைத் தேர்வு செய்துவிட்டார்கள். வீதியில் நின்ற மக்கள் பழைய பேரரசர் எப்படி இருக்கிறார் என்று அங் கிருந்த பிரபுவைக் கேட்டார். அவர் 'பூ' என்று சொல்லி விட்டு தலையை ஆட்டினார்.

பேரரசர் தன் அரச கட்டிலில் குளிரில் வெளிறிப் போய் கிடந் தார். முழு அரசவையும் அவர் இறந்து போனார் என்று நினைத்தது. ஒவ்வொருவரும் அவருடைய வாரிசான பேரரச ருக்கு வணக்கம் செலுத்த ஓடினார்கள். அரண்மனை அதிகா ரிகள் அதைப்பற்றிப் பேசச் சென்றார்கள். சீமாட்டிகள் அவ ரைத் தேநீர் அருந்த அழைத்துச் சென்றார்கள். காலடிச் சத் தம் கேட்காமல் இருப்பதற்காக மண்டபங்களிலும் நடைபா தைகளிலும் துணிகளை விரித்து வைத்தார்கள். அதனால் எல்லாவிடமும் ஓசையற்று அமைதியாக இருந்தது. பேரரசர் வெளிறி, விறைத்துப் போய், நீளமான வெல்வெற் பட்டுத் திரை போடப்பட்ட, கனமான தங்கக் குஞ்சங்கள் கட்டிய, பகட் டான கட்டிலில் படுத்திருந்தார். அவர் இன்னும் இறக்க வில்லை. ஒரு யன்னல் திறந்து வைக்கப்பட்டிருந்தது. சந்திர- னின் ஒளி உள்ளே புகுந்து பேரரசரிலும் செயற்கைப் பறவை யிலும் அது ஒளிர்ந்தது. அப்போது பரிதாபத்திற்குரிய பேரர சர் தன் நெஞ்சில் விசித்திரமான பாரம் ஒன்று அழுத்துவதை உணர்ந்தார். அவரால் மூச்சு விட இயலாமல் இருந்தது. கண் களைத் திறந்து பார்த்தபோது அதில் மரண தேவதை உட் கார்ந்திருந்தது. அது பேரரசரின் தங்க கிரீடத்தைச் சூடி, ஒரு கையில் அரச வாளையும், மறு கையில் அழகான பதாகை யும் ஏந்தியிருந்தது. கட்டிலைச் சுற்றி நீண்ட வெல்வெற் திரை கள் ஊடாக விசித்திரமான தலைகள் எட்டிப் பார்த்தன. அவற் றில் சில மிகவும் அழகற்றவையாகவும், சில அழகானவையா கவும் மென்மைப் பண்புள்ளவையாகவும் இருந்தன. அவை தான் பேரரசர் செய்த நல்லதும் கெட்டதுமான செயல்கள். அவை இப்பொழுது அவரின் முகத்தை உற்றுப் பார்த்தன. மரண தேவதை அவரின் இதயத்தின்மேல் அமர்ந்திருந்தாள்.

'இது உனக்கு நினைவிருக்கிறதா? அதை உன்னால் நினைவு படுத்த இயலுமா? அவை ஒவ்வொன்றாக அவரைக் கேட்டன. ஒவ்வொன்றையும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தன. அவர் நெற்றியில் இருந்து வியர்வை வழிந்தது.

‘அவை பற்றி எனக்கொன்றும் தெரியாது,’ என்றார். ‘இசை! இசை!’ என்று கத்தினார். ‘பெரிய சீன மேளம் அடிக்கட்டும்! அவர்கள் சொல்பவை ஒன்றும் எனக்குக் கேட்கக் கூடாது.’ ஆனால் அவர்கள் இன்னும் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். மரண தேவதை அவர்கள் சொல்வது எல்லாவற்றுக்கும் சீனக்காரன் மாதிரி தலையாட்டியது. ‘இசை! இசை!’ என்று பேரரசர் கத்தினார். ‘சின்னஞ்சிறிய மதிப்புமிக்க தங்கப் பறவையே பாடு, நான் கேட்கிறேன், பாடு! நான் உனக்குத் தங்கமும் பெறுமதிமிக்க பரிசுகளும் தந்திருக்கிறேன். நான் தங்கப் பாதணியால் மாலை கட்டி உன் கழுத்தில் போட்டேன். பாடு! பாடு! ஆனால் அந்தப் பறவை பாடாமல் அமைதியாக இருந்தது. அதை இயக்குவதற்கு ஒருவரும் இல்லை. அதனால் ஒரு ஸ்வரம் கூடப்பாட முடியவில்லை.

மரண தேவதை உணர்ச்சியற்ற வெறித்த கண்களால் பேரரசரைத் தொடர்ந்து உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. அறை பயங்கரமான அமைதியில் இருந்தது. சடுதியாக திறந்திருந்த யன்னல் ஊடாக இனிமையான ஓர் இசை வந்தது. வெளியே ஒரு மரத்தின் கிளையில் உயிருள்ள இன்னிசைப் பறவை இருந்து பாடிக் கொண்டிருந்தது. அது பேரரசர் நோயுற்றிருப்பதைக் கேள்விப்பட்டு நம்பிக்கையையும் உறுதியையும் கொடுப்பதற்காகப் பாட வந்திருந்தது. அது பாடப்பாட நிழல்கள் வெளிறிக் கொண்டு வந்தன. பேரரசரின் நரம்புகளில் குருதி வேகமாகப் பாயத் தொடங்கியது. பலவீனமான கை கால்களில் உயிரோட்டம் வந்தது. இன்னிசைப் பறவையின் பாடலைக் கேட்டுக்கொண்டிருந்த மரண தேவதை கூட, ‘பாடு, பாடு சின்னஞ்சிறிய இன்னிசைப் பறவையே, பாடு. பாடிக் கொண்டே இரு,’ என்றது.

‘அப்படியென்றால் உன் அழகான தங்க வாளையும், அந்த உயர்ந்த பதாகையையும் தருவாயா? அத்துடன் பேரரசரின் கிரீடத்தையும் தா?’ என்றது பறவை.

மரண தேவதை ஒரு பாட்டுக்காக எல்லாச் செல்வங்களையும் ஒவ்வொன்றாகக் கொடுத்தது. இன்னிசைப் பறவை தன் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தது. வெண்ணிற ரோஸ் மலர்கள் வளரும் அமைதியான தேவாலய முன்றிலைப் பாடியது. அந்த முன்றிலில்தான் இலையுதிர் கால எல்டர் மரம் தன் நறுமணத்தைத் தென்றலில் கலந்து வீசுகிறது. புத்தம் புதிய இனிமையான புல், துக்கம் அனுஷ்டிப்பவர்களின் கண்ணீரால் நனைகிறது. அதன் பிறகு மரண தேவதை தன் தோட்டத்தைப் போய்ப் பார்ப்பதற்கு விரும்பியது. அதன் பின் குளிர்ச்சியான, வெண்ணிற மூடுபனி உருவத்தில் அது மிதந்து சென்றது.

‘நன்றி, நன்றி, பரலோகத்தின் சின்னஞ்சிறிய பறவையே. உன்னை எனக்கு நன்றாகத் தெரியும். நான் உன்னை என் இராச்சியத்திலிருந்து நாடு கடத்தினேன். இருந்தும் உன் இனிமையான பாட்டின் மாய சக்தியால் என் கட்டிலிலிருந்து தீய முகங்களை அனுப்பிவிட்டாய். மரண தேவதையை என் இதயத்திலிருந்தும் இங்கிருந்தும் கலைத்துவிட்டாய். உனக்கு நான் என்ன வெகுமதி அளிப்பேன்?’

‘நீங்கள் ஏற்கனவே தகுந்த வெகுமதி அளித்துவிட்டீர்கள். நான் முதன் முதல் உங்கள் முன் பாடியபோது உங்கள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்ததைக் கண்டேன். அதை நான் என்றும் மறக்க மாட்டேன். அந்த விலைமதிப்பற்ற ஆபரணங்களே ஒரு பாடகரின் இதயத்தை மகிழ்விப்பவை. இப்பொழுது தூங்குங்கள், மீண்டும் பலம் பெற்று நலமுடன் இருங்கள். உங்களுக்காக நான் திரும்பவும் பாடுவேன்,’ என்றது இன்னிசைப் பறவை.

அது பாடிக் கொண்டிருந்தபோது பேரரசர் இனிமையான துயிலுக்குள் ஆழ்ந்து போனார். எத்துணை கனிவான புத்துணர்ச்சிமிக்க துயில் அது! அவர் பலம் பெற்று மீண்டும் விழித்தெழுந்தபோது கதிரவன் பிரகாசமாகச் சாளரம் ஊடாக ஒளிர்ந்தான். அப்போது எந்தவொரு சேவகரும் திரும்பவில்லை. பேரரசர் இறந்துவிட்டார் என்றே அவர்கள் அனைவரும் நினைத்தார்கள். இன்னிசைப் பறவை மட்டும் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்து பாடிக்கொண்டிருந்தது.

‘நீ என்னுடன் எப்பொழுதும் இருக்க வேண்டும். உனக்கு விருப்பமான நேரம் மட்டும் பாடு. செயற்கையான அந்தப் பறவையை நான் ஆயிரம் துண்டுகளாக உடைப்பேன்,’ என்றார் பேரரசர்.

‘இல்லை, அப்படிச் செய்ய வேண்டாம். அது இங்கே இருந்தபோது தன்னால் இயன்ற அளவு பாடியது. அதைத் திரும்பவும் நிறுத்தி வையுங்கள். என்னால் அரண்மனையில் வாழ்ந்து கூடு கட்ட முடியாது. நான் விரும்பியபோது என்னை வர விடுங்கள். மாலை வேளையில் யன்னலுக்கு வெளியே ஒரு மரக்கிளையில் இருந்து உங்களுக்காகப் பாடுவேன். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம். முழு இன்ப நினைவுகளில் திளைக்கலாம். நான் மகிழ்ச்சியானவர்களைப் பற்றியும் துயரத்தில் இருப்பவர்களைப் பற்றியும் பாடுவேன். உங்களைச் சுற்றி ஒளிந்திருக்கும் நல்லவர்களைப் பற்றியும் தீயவர்களைப் பற்றியும் பாடுவேன். சின்னஞ்சிறிய பாடும் பறவை உங்களிடமிருந்தும் அரண்மனையிலிருந்தும் தொலைதூரத்திற்கு அப்பால் இருக்கும் மீனவரின் வீட்டுக்கும் விவசாயியின் குடிசைக்கும் பறந்து போகும். உங்கள் கிரீடத்தைப் பார்க்கிலும் உங்கள் இதயத்தை நான் விரும்புகிறேன். இருந்தும் கிரீடத்தைச் சுற்றிலும் ஏதோவொரு புனிதம் இருக்கிறது. அது எனக்குத் தெரியும். நான் திரும்பவும் வருவேன். வந்து உங்களுக்காகப் பாடுவேன். ஆனால் நீங்கள் எனக்கொரு வாக்குறுதி தர வேண்டும்.’

‘எதுவும் தருவேன்,’ என்றார் பேரரசன். அவர் தன் பேரரசருக்குரிய ஆடைகளை அணிந்திருந்தார். தனது கனமான தங்க வாளை ஏந்திய கையை நெஞ்சுடன் அணைத்துக் கொண்டு நிமிர்ந்து நின்று கொண்டிருந்தார்.

‘நான் ஒன்றுதான் கேட்பேன். உங்களுக்கு சிறிய பறவை ஒன்று எல்லாவற்றையும் சொல்கிறது என்று எவருக்கும் சொல்ல வேண்டாம். அதை இரகசியமாக வைத்திருங்கள்,’ என்று சொல்லிவிட்டு இன்னிசைப் பறவை பறந்து சென்று விட்டது.

அதன் பின் இறந்த பேரரசரைப் பார்ப்பதற்காக சேவகர்கள் வந்தார்கள். அவர்கள் ஆச்சரியப்படும் வகையில் அவர் அங்கே நின்று, ‘காலை வணக்கம்,’ என்றார்.



mahalingam.k@thaiveedu.com





# தெளிவத்தையில்... தெளிவத்தை ஜோசப் நினைவேந்தல்

– கனிஷ்கர்









மறைந்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நிகழ்வும் தெளிவத்தை ஜோசப் நினைவு விருது வழங்கலும் கடந்த சனிக்கிழமை பதுளை தெளிவத்தை தோட்டத்தில் நடைபெற்றது.

பதுளை மாவட்டக் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் வை. தேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையைப் பதுளை மாவட்ட கலை இலக்கிய வட்டச் செயலாளர் ஆ. புவியரசன் வழங்க, தெளிவத்தை ஜோசப் அவர்கள் குறித்த உரைகளை, நிகழ்வின் ஏற்பாட்டாளர் - எழுத்தாளர் மல்லியப்புசந்தி திலகர், பதுளை சரஸ்வதி தேசியக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருலோகசங்கர், தெளிவத்தையாரின் இலக்கிய மாணவரும் எழுத்தாளருமான கவிஞர் அல்-அஸுமத், தெளிவத்தை பாடசாலை அதிபர் விஜயகாந்த் ஆகியோர் வழங்கி வைத்தனர். குறிஞ்சிப் பேரவை இலக்கியச் செயற்பாட்டாளர் ந. மனோகரன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து அளித்தார்.

'தெளிவத்தை மண்ணில் தெளிவத்தையாரை நினைவுகூர்தல் என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு' என்பதனை அதில் கலந்து கொண்ட எழுத்தாளர் அல்-அஸுமத் தெரிவித்தார். அதேபோல 'தனது நண்பரான தெளிவத்தை ஜோசப் எவ்வாறு இலக்கியப் பரப்பில் செயற்பட்டார்' என்பது குறித்து வை.தேவராஜா தனது கருத்துகளைப் பரிமாறிக்கொண்டார். 'தெளிவத்தை ஜோசப் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய தெளிவத்தை தமிழ் வித்தியாலயத்திற்குத்தான் முதன் முதல் நியமனம் கிடைத்து வந்ததாக' முன்னாள் அதிபர் திருலோகசங்கர் தனது நினைவலைகளைப் பகிர்ந்து கொண்டார் .

'தனது வாழ்நாளில் பல பிரமாண்டமான இலக்கிய விழாக்களைச் சந்தித்த தெளிவத்தை ஜோசப் அவர்களின் மறைவின் பின்னர் அவரை நினைவு கூரும் நிகழ்வுகள் பிரமாண்டமாக இருக்க வேண்டும் என்பதற்கப்பால், அவை அவரது பெயரை, அவரது இலக்கியச் செயற்பாடுகளை, ஆய்வு முயற்சிகளை, ஆவணக்காப்பு விடயங்களை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதாகவும் இருக்க வேண்டும்' எனக் கூறிய மல்லியப்புசந்தி திலகர் அவர்கள் 'தெளிவத்தை ஜோசப் ஆவணவகம், ஆய்வகம்' ஊடாக இந்த நினைவேந்தல் பணியைப் பாக்கியா முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார். இத்தருணத்தில் இதனைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் பொறுப்பினைத் தெளிவத்தை மண் ஏற்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் அவர் விடுத்தார்.

பதுளை மாவட்டக் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் வை. தேவராஜா, உபதலைவர் திருலோகச்சங்கர், மூத்த



எழுத்தாளர் அல்-அஸூமத், பாக்யா பதிப்பக நிறுவுநர் மல்லியப்புசந்தி திலகர் ஆகியோர், ஆவணக்காப்புக்கான ‘தெளிவத்தை ஜோசப்’ விருதினை, ஆவணக்காப்பாளர் வட்டகொட சுப்பையா ராஜசேகரன் அவர்களுக்கு வழங்கி வைத்தனர்.











பதுளை ஊவாக்கட்டவளைப் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தெளிவத்தை ஜோசப் தொழில் நிமித்தமாக வந்து சேர்ந்த தெளிவத்தை தோட்டத்தில் ஆசிரியராகவும் பகுதி நேர எழுதுவினைஞராகவும் தொழில் புரிந்து கொண்டே எழுத்தாளராகிச் சர்வதேசப் புகழ் பெற்றார். இவர் தமிழ் எழுத்தாளராகவும் ஆய்வாளராகவும் ஆவணக்காப்பபாளராகவும் வாழ்ந்தார். அவரது இந்தப் பணியைத் தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில் தெளிவத்தை ஜோசப் ஆய்வகம் மற்றும் ஆவணவகம் இயங்கி வருகிறது.

இருந்த போதிலும் தெளித்தை ஜோசப் அவர்களின் மரபுரிமையை அவரது நினைவு நாளில் நினைவு கூர்ந்து தொடர்ச்சியாக நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தும் பொறுப்பை தெளிவத்தை மண்ணுக்கே வழங்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் பதுளை தெளிவத்தைத் தோட்டத்தில் நடத்துவதாகவும் திலகர் தெரிவிக்க, ஆ. புவியரசன் மற்றும் அதிபர் விஜயகாந்த் ஆகியோர் தொடர்ச்சியாக இந்த பணிகளைத் தாங்கள் முன்னெடுப்பதாகக் கூறி அந்த நினைவேந்தலில் திடசங்கற்பம் எடுத்துக் கொண்டார்.

இந்த நிகழ்வில் தெளிவத்தை ஜோசப் அவர்கள் இறுதியாக எழுதி அண்மையில் வெளிவந்த ‘மாறுதல்கள்’ நாவலின் அறிமுகமும் இடம்பெற்றது. அதனோடு இணைந்து மாதாந்தம் கனடாவில் இருந்து வெளிவரும் ‘தாய்வீடு’ இலக்கிய இதழும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. வருகை தந்திருந்த இலக்கிய ஆர்வலர்கள் சமூக ஆர்வலர்களுக்கு ‘மாறுதல்கள்’ நாவலோடு, ‘தாய்வீடு’ இதழ்களும் சிறப்புப் பிரதிகளாக வழங்கி வைக்கப்பட்டன. எழுத்தாளர் ஏ.எஸ். பாலச்சந்திரனின் நன்றி உரையோடு நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றன.



kanishka.l@thaiveedu.com



உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You



33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
EFILE
Canada
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Independantly Owned And Operated
Office: 905-201-9977




HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090
kathirhomes@gmail.com




With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
Family Portraits
Children Portraits
Business Portraits
Passport & Citizenship Photos
Classic Weddings
Arangetram
Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined




BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272


- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாலத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474


கடன் தொல்லையா?
CREDIT CARD
BANK
ROBERT JONES
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை
• கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
• நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
• வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
• Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
• உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?
✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்
Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்
அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com


BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS
REAL 4 ESTATE
UTHAYAN SIVARAJAH
416.301.5555
RAJ SIVARAJAH
416.843.3333
KUMAR SIVARAJAH
416.453.7777
@uthayansivarajah
@uthayansivarajah
ROYAL LEPAGE
ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
RMG
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


முற்றிலும் இலவசமான சேவை!
உங்கள் Gas Furnace இருந்து CO அளவு
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician | ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280


Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani + Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090


SABONA



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC.



NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


RAMAN HOME COMFORT INC
HEATING
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989


15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544


AEREN Thiyagarajah
DILEEP Thangavel
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8


நீங்கள் வீடு வாங்கும்போது
$8475⁰⁰
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492


ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE* OFFICE: 905-305-1600


HomeLife Today Realty Ltd.,
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545


RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225


Ahilan
Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage


UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMIDGROUP


Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE


Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120


Sri Vallipuranathar
Credit Solution Centre


Suba Aynkharan
RE/MAX COMMUNITY REALTY INC.


Aazon
2468 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER


Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE


BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,


NOW HIRING
JOIN OUR
DYNAMIC TEAM
iNFORCE LIFE
Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN
RASALINGAM
President & CEO


Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
416 505 8532


DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
Smiles
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524


RE/MAX
LATHAN VARATHARAJAH
Broker Owner